முதற்பாகம்

பஞ்சாப் துயரம்

காங்கிரஸ் பஞ்சாப் சப்-கமிட்டியார் விசாரணை
ரிபோர்ட்டின் தமிழ் மொழிபெயர்ப்பு

சுதேசமித்திரன் பத்திராதிபர்
Mr. A. ரங்கஸ்வாமி அய்யங்கார்
எழுதிய முகவுரையுடன் கூடியது

S. கணேசன் அண்டு கோ
திருவல்லிக்கேணி சென்னை
1920

முதற்பாகம்

பஞ்சாப் துயரம்

காங்கிரஸ் பஞ்சாப் சப்-கமிட்டியார் விசாரணை
ரிபோர்ட்டின்
தமிழ் மொழிபெயர்ப்பு

சுதேசமித்திரன் பத்திராதிபர்
Mr. A. ரங்கஸ்வாமி அய்யங்கார்
எழுதிய
முகவுரையுடன் கூடியது

விலை ரூ. 2—0—0

S. கணேசன் அண்டு கோ.
திருவல்லிக்கேணி,
சென்னை.
1920

காங்கிரஸ் மஹாஸபையாரின்

பஞ்சாப் விசாரணை

1919-1920

பெருமைதங்கிய பண்டிதர் மதன்மோஹன் மாளவியா அவர்கள்
இம்பீரியல் சட்டச்சபை மெம்பர், 1919-ம் வருஷத்து
இந்திய நாஷனல் காங்கிரஸினது பஞ்சாப் ஸப்-
கமிட்டியின் தலைமை ஸ்தானத்தை வகித்தவர்.

பெருமைதங்கிய பண்டிதர் மோதிலால் நேரு அவர்கள்
ஐக்கியமாகாண சட்டச்சபை மெம்பர், 1920-ம் வருஷத்து
இந்திய நாஷனல் காங்கிரஸினது பஞ்சாப் ஸப்-
கமிட்டியின் தலைமை ஸ்தானத்தை வகித்தவர்.

விசாரணை செய்த மெம்பர்கள்

மிஸ்டர் எம். கெ. காந்தி, பாரிஸ்ட்டர்-அட்-லா.

" ஸி. ஆர். தாஸ், பாரிஸ்ட்டர்-அட்-லா, கல்கத்தா.

" ஆப்பஸ் எஸ். டயாப்ஜி, பாரிஸ்டர்-அட்-லா,
பரோடா ஸுப்ரீம்கோர்ட் ரிடயர்ட்ஜட்ஜ்.

" எம். ஆர். ஜயகர், பாரிஸ்ட்டர்-அட்-லா, பம்பாய்.

காரியதரிசி

மிஸ்டர் கெ. சந்தானம், பாரிஸ்ட்டர்-அட்-லா, லாகூர்.

ரிபோர்ட்டின் அட்டவணை

அத்தியாயம்—V

படங்கள்

1. ஜாலியன் வாலாபாக்கின் தோற்றம்.

2 ஜாலியன் வாலாபாக்கின் மீட்டிங்கு நடந்தவிடம்.

3 சுடப்பட்ட குண்டுகளின் அடையாளங்களைத் தெரிவிக்கும் ஜாலியன் வாலாபாக்கின் கிழக்குச் சுவர்கள்.

4 குண்டுகளின் அடையாளங்களைத் தெரிவிக்கும் ஜாலியன் வாலாபாக்கின் மேற்குச் சுவர்கள்.

5 ஜாலியன் வாலா பாக்கில் மதனமோஹன் சுட்டுக் கொல்லப்பட்டது.

6 வயிற்றால் நகர்ந்து சென்ற சந்து.

7 அமிர்த சரஸில் பகிரங்கமாய்ச் சவுக்கடிகொடுக்கப் பட்ட விடம்.

8 லாகூரில் பகிரங்கமாய்ச் சவுக்கடி கொடுக்கப்பட்ட விடம்.

9 சண்டைபோட்டதாகக் காஸூர் பையன் குற்றஞ் சாட்டப்பட்டது.

10 குஜ்ரான்வாலா தலைவர்கள் விலங்கிடப்பட்டபடி.

11 ஆகாயவிமான குண்டால் குஜரான்வாலா பையன் காயப்படுத்தப் பட்டது.

12 ஆகாய விமான குண்டால், குஜரான் வாலா அல்லா டிட்டா காயப்படுத்தப்பட்டது.

13 ஆகாய விமான குண்டால் குஜரான் வாலா கோபால ஸிங் காயப்படுத்தப் பட்டது.

14 குஜரான்வாலாவில் சவுக்கடி கொடுக்கப்பட்ட பகிரங்க ஸ்தலம்.

15 யுத்தம் செய்ததற்காகப் பிரஷ்டம் செய்யப்பட்ட குஜராத் பையன்.

முகவுரை

பாஞ்சால நாட்டினர் பாரத மாதாவுக்கு, அநாதி காலமாய்ப் பிரதமசேவை செய்து பாரத வர்ஷத்தைப் புண்ணிய பூமியாய் ஆக்கியவர்கள் ஆவர் என்பது, வேதாகம புராணங்களிலும் சரித்திரங்களிலும் புகழப்பட்ட விஷயம். வீர, தீர, குணங்களாலும் அரிய ஆத்ம சக்தியாலும் அலங்கரிக்கப்பெற்று, கல்வி கேள்விகளிலும், நற்செயல்களிலும் பிரசித்தியடைந்திருக்கும் இப்பாரத மாதாவின் புதல்வர்கள், நமது புண்ணிய பூமியின் மேன்மையையும், பெருமையையும், நாகரீகங்களையும், மதங்களையும், தொன்று தொட்டுக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். சுத்தவீரர்களெனவும், பரிசுத்த ஆன்மாக்கள் எனவும்,கீர்த்தி பெற்ற நமது பாஞ்சால சகோதரர்கள், சத்தியாக்கிரக விரதத்தில், தீவிர குணங்காட்டி, அதனின்றும் விளைந்த, அளவிலாத் துன்பங்களை, நம் மெல்லோர் பொருட்டும் அநுபவித்தனர். நம்முள் ஆயிரக்கணக்கான உயிர்கள் மாய்ந்து விடவும், பல்லாயிரக்கணக்கான உயிர்கள், காயக்கிலேசம், மானபங்கம், இன்னும் சொல்லவொண்ணாத கஷ்டங்கள் இவைகளுக் குட்படவும், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வறுமையால் தவித்து, பிணி பசிக்குள்ளாகி வருந்தவும், அவை யனைத்தையும் சகித்து சத்தியாக்கிரகத்தையே கைக்கொண்டு, தர்மம் தலைகாக்கும், ஸத்தியமே ஜயமடையுமென்று உறுதியாக நம்பி, சாந்தத்தை வகித்துவரும் இப்பாஞ்சால நாட்டார், சென்ற வருஷம் செய்த அரிய தேச சேவையைப் போற்றாதார் இலர்.

அந்தத் தேசத்தொண்டு எத்தன்மைய தாகுமென்பதை யறிய, எந்த பாரதபுத்திரர்தான் ஆவலாயிருக்கமாட்டார்? அஃது நம்புண்ணிய சரித்திரங்களில் பெரிதும் மதிக்கத் தக்கதாகும். நம் இனத்தாரும், சந்ததியாரும், உண்மைப் புதல்வராக பாரத வர்ஷத்தில் உதித்து உலாவுவதற்கு அது ஒரு கருவியுமாகும்.

அந்த சரித்திரத்தை உண்மையில் நடந்தபடி விசாரித்து, ஆராய்ந்து எடுத்துரைக்க, தேச மகாசபையினிடம் கட்டளை பெற்ற மகாத்மா காந்தியும் மற்றும் நமது அரிய ஜனத்தலைவர்களும் அடங்கிய காங்கிரஸ் சப் கமிட்டியார், தாங்கள் மேற்கொண்ட கடமையைத் தீவிரமாயும் இனிமையாயும் நிரைவேற்றி, ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கும் கிரந்தத்தை நம் தமிழகத்தார் அனைவரும் உணரும் பொருட்டு, அதன் முழுவிபாத்தை இப்புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதன் பொருட்டு நாமனைவரும் அகமகிழ்ச்சி யடைய வேண்டும்.

நமது பாஞ்சால நாட்டு மகாஜனங்களுக்குப் பொறுக்கத்தகாத பெருங் கஷ்டங்களையும் விளைத்துக் கொடிய வதைகளையும் வாதனைகளையும் செய்து, ஆங்கில அரசாட்சிக்கு அளவிடக் கூடாத அபகீர்த்தியை உண்டுபண்ணி, தம் இனத்தாரே தம்மைப் பழித்து, இழிவு கூறச் செய்து கொண்ட அம் மாகாணத்தில், அப்போதிருந்த பல ஆங்கில அதிகாரிகளும், அவர்களுக்குத் துணை வேலை செய்த இந்தியரும், ஆங்கில ராணுவத் தலைவர்களும், தத்தம் செயல்களுக்குக் கடவுள் முன்னிலையில் எவ்வித நியாயத்திற் குள்ளாவார்க ளாயினும், உலகத்தார் முன்னிலையில் அடாத காரியஞ் செய்தவர்களென்றே நிச்சயிக்கப்படுவார்கள். அதையே இச்சரித்திரம் மெய்ப்பித் திருக்கிறது. 'அடாது செய்வோர் படாது படுவார்,' என்னும் ஆன்றோர்

மொழி, இவர்கள் விஷயத்தில், மறுமையில், எவ்வாறாயினும், இம்மையில் நிறைவேறாத வண்ணம், இந்திய சட்டச் சபையில் இயற்றப்பட்ட தொடரா மொழிச் சட்டம் காத்து விடும்போ லிருக்கிறது. ஆனால், அஹிம்சையைப் பரம தர்மமாகக் கொண்ட பாரத மக்கள் பலிக்கு, மறுபலி வாங்கி விடுவதென்ற முறையை வெறுக்கிறார் ஆயினும், நியாய ஸ்தலத்தில் அநியாயத்தை மெய்ப்பிக்கவும், தண்டனைகள் தயவினால் மாற்றப் படினும், மீண்டும் அக் கொடுமைகள் நடக்காத வண்ணம், தடுப்பதற்கானப் பிறப்புரிமைகளை நிலைநாட்டுவிக்கவும் கோருகின்றனர். ஆகவே, பொது ஜனங்கள், ஆத்திரத்தில் முறைமீறிச் செய்துவிட்ட கொடுஞ் செயல்களை இந்தியர்கள் எல்லோரும் கண்டிக்கிறார்க ளாயினும், அக் காரியத்தில் புகுமாறு, மனக் கொதிப்பை உண்டாக்கிய அதிகாரிகள் முறையை அவர்கள் மறப்பதற் கில்லை. ஜாலியன்வாலா தோட்டத்தில் ராணுவ அமுலை வியாஜமாக வைத்துக் கொண்டு அரக்கரும் செய்யத் தகாத காரியங்களைச் செய்து, அருமையான ஆன்மாக்களை ஆயிரக் கணக்காக உயிர் மாய்த்து விட்டது, நம் நாட்டினர் இருதயத்தில், ஆறாத துயரத்தை உண்டாக்கிய போதிலும், அந்தப் புண்ணிய பூமியில், நம் தாய் நாட்டின் நிமித்தம் தம் உயிரைத் துறந்து, முக்தி பெற்ற ஆரிய சகோதரர்களின் புண்ணிய கைங்கரியத்தினால் நம் பாரத நாடு பரிசுத்த மடைந்துவிட்ட தென்பதில் சந்தேக முண்டோ? இப்படிப்பட்ட மகா யக்ஞத்தினின் றும் வியவகார வழியில் நாம் முயற்சி எடுத்து நடத்திக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பலவாறாயினும், பரமார்த்தமான வழியில் இந்த புண்ணிய கதையைப்படித்து மகாஜனங்கள் ஒவ்வொருவரும் ஆத்ம பரிசுத்தி பெறவேண்டு மென்பதே எனது பிரார்த்தனை; இரண்டு அம்சங்கள் மட்டில்

நமது நாட்டின் இயக்கத்தின் நிமித்தம், இங்கு எடுத்துக் கூறுவது பொருந்தும்.

பாஞ்சாலத்தில் நடாத்திய கொடிய செயல்கள், ராணுவ அமுலுக் குட்பட்ட காரிய மாதலால் நீதி முறையால், ஆராய்ந் தறியத் தக்கதல்ல வென்பதே அதிகாரிகளின் ஒரு முக்கிய சமாதானமென்று எனக்கு ஒரு பொருப்பு வாய்ந்த ஆங்கில நண்பர் அறிவித்தார். அநீதி முறையே, ராணுவ அமுலுக்கு அடியென்று வைத்துக் கொண்டாலும், போர்க் களத்தில் நின்று போர் புரியாமலும், பொதுக் களத்தில் நின்று கலகம் செய்யாமலும் நிராயுத பாணிகளாய் இருந்த ஆண், பெண், குழந்தை, கிழவர் அடங்கலேயும், ரவைகுண்டுகள் தீரும் வரையில் சுட்டுவிடுவது, ராணுவ அமுலிலும் சூரத்தனமான காரியமாகாது. அது ராணுவ நீதிக்கே, மிக அவமானமான காரியம் என்பதை எவரும் மறுக்கக் கூடியதல்ல. ஆகவே, அக் காரியத்தை ராணுவ அமுல்படி நடத்தியதாகக் கூறிய போதிலும், அது அன்னிய நாட்டில் அரசாளும் சொற்ப ஜாதியாருக்குள் திடீரென்று அந்த விடத்தில், அந்த வேளேயில் உதித்த ஒரு பீதியினாலும், வெறியினாலும் நடத்தப் பட்ட காரியமேயாகும். ஆனது பற்றி, ஆங்கிலர் நம் முடன் இருக்கவேண்டிய அந்நியோந்நியத்தை பங்கப் படுத்தக் கூடிய, இவ்விதக் கேவலமான செயல்கள் இனி நேராமல் இருக்கும்படி, அவ்வதிகாரிகளேக் கட்டுப்படுத்தி விடுவது, நமது அரசாட்சியின் நன்மையையும், அந்த ஜாதியாருடைய நன்மையையுமே நாடுவதாகும். நமக்கு முடிவாயுள்ள நியாயஸ்தலமாகிய பிரிவி கவுன்ஸிலில், இந்தியா கவர்ன்மெண்டாருக்கு, கலகம், கலவா மில்லாதிருக்கும் நிலேமையிலும், எந்த மாகாணத்திலும், நியாய ஸ்தலங் களும், நியாய விசாரணேயும், இல்லாமல் செய்து, அரா

ஜகம் நிரம்பி யிருக்கும்போதும் நடத்தப்பட வேண்டிய ராணுவ அமுலை ஏற்படுத்த பூரணமான அதிகாரம் இருக்கிறதென்று, தீர்ப்புக் கூறிவிட்டார்கள். அப்படிப்பட்ட அதிகாரம், ஆளும் ஜாதியாருக் கிருப்பது, ஆளப்படும் ஜாதியாருக்கு எவ்வளவு அபாயம் என்பது நான் எடுத்துக் கூறத் தேவையில்லை; இனி இக்கொடுங் கேடுகள் விளையா திருப்பதற்கு, நமக்குப் பிறப்புரிமைச் சட்டம் இன்றியமையாதது. அதை யடையவே, காங்கிரஸ் தலைவர்கள் பாடுபடுகிறார்கள். பிறப்புரிமைகள் நிலைத்து, செங்கோன்மை சீராய் நடப்பதே சுயராஜ்யத்திற்குப் பூர்வாங்கமாகும். அவை நிலைக்காது, சுய ராஜ்யத்திற்கு ஏற்படுத்தும் படிகள், பொய்ப் படிகளாகும். சுதந்திரம், தன்மட்டில் நிலைக்காது, சமூகத்திற்கு எவ்வாறு நிலைக்கும்? ஆகவே, நம் முயற்சிகளையும், கிளர்ச்சிகளையும், நேர் வழியாய்ச் செலுத்தி, நம் நாடு, நீடித்த நன்மை அடையுமாறு நாம் நடந்தொழுகுவோமாக.

எ. ரெங்கஸ்வாமி ஐயங்கார்.



Madan Mohan, aged 13 years, shot at Jallianwalla Bagh and killed instantaneously.



A boy at Kasur, aged 11 years, charged with waging war against King.



Kundanlal of Gujrat, age 10, sentenced to transportation for life for 'waging war.'



Sardari Lal of Gujranwala wounded in arm by bomb from aeroplane.



Allah Ditta of Gujranwala wounded in leg by bomb from aeroplane.



Gopal Singh of Gujranwala—Thumb and lower jaw shattered by bomb from aeroplane.




Leaders of Gujranwala in handcuffs.

1. Diwan Mangal Sen. 2. Lala Amar Nath.
3. Lala Hakim Rai. 4. Lala Rallaya Ram.
5. Pandit Divan Chand.



Kucha Kaur'hianwala, Amritsar (Crawling lane).



Public flogging at Lahore.




Public flogging at Amritsar.




Public flogging at Gajranwala.



The Jalleanwala Bagh showing temple near which the meeting took place.



Eastern walls of Jalleanwala Bagh where the casualties were the heaviest as the crowd was the biggest and had no means for escape.



Western walls in Jalleanwala Bagh showing holes caused by bullets even 6 inches deep.



A bird's eye view of Jalleanwala Bagh. On the left will be seen the entrance from which firing was opened.

ஸர்வ இந்தியா காங்கிரஸ் கமிட்டியின்
லாகூர் ஸப்-கமிட்டித் தலைமை உத்தியோகத்தை
முதலில் வகித்த
பெருமை தங்கிய

பண்டிட் - மோதிலால் நேரு

அவர்களுக்கு

ஐயா,

1919-ம் வருஷம் நவம்பர் மாதம் 14-ம் தேதி, ஸர்வ-இந்தியா காங்கிரஸ் கமிட்டியின் பஞ்சாப் கிளைக் கமிட்டியார் (Sub-Committee), தங்கள் தரபில் (ஸப்-கமிட்டியார் தரபில்) பஞ்சாபில் சென்ற எப்ரல் மாதம் நடந்த ஸம்பவ ஆராய்ச்சி சம்பந்தமாய், வடிக்கட்டியும், ஒத்துப்பார்த்தும், பாகுபடுத்தியும் பரிசிலனை செய்ய, தங்களையும், பெருமை தங்கிய பாஸ்லல் ஹக், ஸி. ஆர். தாஸ், அப்பஸ் டயாப்ஜி, எம். கே. காந்தி முதலானவர்களைக் கமிஷனர்களாகவும், மிஸ்டர் கே. சந்தானம் என்பவரைக் காரியதரிசியாகவும் நியமித்தனர்.

தாங்கள் நாஷனல் காங்கிரஸ் அக்கிராசனாதிபதியாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டதும் இக்கமிஷனர் ஸ்தானத்தை ராஜீனாமா செய்யவேண்டியது அவசியமெனக் கொண்டீர்கள். அதற்கிணங்கத் தங்கள் ராஜீனாமாவையும் ஸப்-கமிட்டியார் அங்கீகரித்துக்கொண்டனர். ருஜுப்படுத்த வேண்டிய விவகாரங்கள் யாவும் அநேகமாய்த் தாங்கள் ராஜீனாமா கொடுக்குமுன் முடிந்திருந்தபடியால் வேறொரு

வரும் தங்கள் ஸ்தானத்தில் கமிஷனராக நியமிக்கப்படவில்லை.

பெருமை தங்கிய பாஸ்லல்ஹாக் அவர்களும் வந்து சேர்ந்த அதி சீக்கிரத்தில் வேறு முக்கியமான காரியத்தைக் கவனிக்கச் சென்றனர். ஆகவே பம்பாய் வக்கீல்களுள் ஒருவரான மிஸ்டர் எம். ஆர். ஜயகர் (ஜயகார்) அவர் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டார்.

நாங்கள் 1919-ம் நவ 17-ம் தேதி எங்கள் வேலையைத் துவக்கினோம்.

நாங்கள் 1700-க்கு மேலிட்ட சாக்ஷிகளை விசாரித்தோம். ஏறக்குறைய 650 வாக்கு மூலங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவைகள் யாவும் இத்துடன் வெளிவரும் ரிப்போர்ட்டு பாகங்களில் வெளிவரும். தள்ளப்பட்டிருக்கும் வாக்கு மூலங்கள் யாவும் ஒரே வகுப்புச் சட்டங்களால் கட்டுப்படுத்தப்பட்டு ருஜூப்படுத்தப்படக் கூடியவைகளாகும்.

அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு வாக்குமூலமும் எங்களுள் ஒருவரால் ருஜூப்படுத்தப்பட்டதாகும். சாக்ஷிகளின் வாக்குமூலங்கள் பிரமாணமானவையென்று நிதர்சனமாய்த் தெரிந்து நாங்கள் திருப்தி யடைந்த பின்னரே ஒப்புக்கொள்ளப்பட்டவையாகும். எங்களுடைய வேண்டுகோளின்மேல் மிஸ்டர் லாப்ஸிங், எம். ஏ. பார். அட்லா அவர்களால் மணியன் வாலா, அதைச்சுற்றிய பாகங்கள் முதலான விடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட வாக்கு மூலங்கள் இவற்றைச் சேராவாம். அவ்வித ஒவ்வொரு வாக்குமூலத்தின் அடியிலும் அவரது பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். போதுமானவளவு குறுக்கு விசாரணை செய்யப்படாத ஒரு சாக்ஷியினது வாக்கு மூலமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

பெரும்பான்மையான சாக்ஷிகள் அவர்கள் சொந்த ஜில்லா அல்லது கிராம க்ஷேமத்தைக் கவனிக்கும் தலைவர்களான மனிதர்களென்பதை வற்புறுத்துகின்றோம். சாக்ஷிகளிற் சிலர் உத்தியோகஸ்தர்கள்மீது பயங்கரமான பழி சுமத்துகிறார்கள் என்பதையும் குறிப்பிடுகின்றோம். இவ்விதம் பழி சுமத்துவதால் ஏற்படக்கூடிய இலாப நஷ்டங்களை எடுத்துச் சொல்லி சாக்ஷிகளை எச்சரிக்கையும் செய்தோம். அவர்கள், தாங்கள் சுயமாய் அடைந்த கஷ்டங்களையும் பின்னால் உண்மையல்லவென்று கண்டு பிடிக்கப்பட்டால் நேரக்கூடிய கெடுதல்களையும் நன்றாயறிந்த பின்னரே தங்கள் வாக்குமூலங்களைக் கொடுக்கச் சம்மதித்தால் மட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சிற்சில சாக்ஷிகளின் வாக்குமூலங்கள் எங்களுக்கு நம்பிக்கைக் கொடுக்கக் கூடியதாயிருந்தாலும் விவகாரத்தில் ருஜுப்படாதெனத் தெரிந்தால் நாங்கள் அவைகளைத் தள்ளியிருக்கிறோம். அதற்கு உதாரணமாக ஸ்திரீகளுக் கேற்பட்ட கொடுஞ் செயல்களை விவரிக்கும் வாக்குமூலங்களைக் கூறலாகும்.

எங்கள் விசாரணை, இராணுவச் சட்டம் விதிக்கப்பட்ட பிரதேசங்களையும் அவைகளைச் சார்ந்த ஜில்லாக்களையும் மட்டில் குறிக்கின்றதென்பதை நாங்கள் சொல்வது மிகையாகாது. எங்களுள் ஒருவரால் இதற்காக லாகூர், அமிர்தஸரஸ், டார்ன்டரன், காஸூர், குஜரான்வாலா, வாஜிராபாத், நிஜாமபாட், அகால்கிரகம், ராமநகரம், ஹாபிஸபாத், ஸாங்கிலாஹில், ஷீகுபுரம், சுஹர்க்கானு, லியால்பூர், குஜராத், மாலக்வால், ஸர்கோதா முதலிய விடங்கள் பார்வை யிடப்பட்டன. அநேக விடங்களில் பெரிய மீட்டிங்குகள் (கூட்டங்கள்) கூட்டி அதில் மஹா ஜனங்கள் எங்களுக்கு வாக்குமூலங்கள் கொடுக்கும்படி செய்தோம். ஏற்கனவே ருஜுவாக எடுத்துக்கொள்

ளப்பட்ட விஷயங்களின் தோரணையைக் கூட்டப்பட்ட சபையோர்முன் வைத்தோம். அவர்கள் கூறும் விஷயங்களை அந்தரங்கமாய் வைத்துக்கொள்ள விரும்பினாலும் இசைந்து, அவற்றுள்ளடங்கிய வாக்குமூலங்களின் உண்மையை ஆக்ஷேபிக்கத் தகுந்த வாக்குமூலங்களைக் கொடுப்பதற்கும் ஜனங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. ஒருவிதமான ஆக்ஷேபணையும் எங்களுக்குக் கிடைக்கவில்லை.

நாங்கள் கொண்டுள்ள முடிவான விஷயங்களைத் திருத்திக் கொள்ளவோ பலப்படுத்திக் கொள்ளவோ அநுகூலமாயிருக்கும்படி குழப்ப விசாரணை ஸபையார் (Disorders Inquiry Committee) முன் கொண்டுவரப்பட்ட ருஜுக்களையும் கவனிக்க சந்தர்ப்பம் கொண்டோம். சேர்க்கப்பட்டிருக்கும் பெரும்பான்மையான வாக்குமூலங்கள் ஹண்டர் பிரபுக் கமிட்டியார் (Lord Hunter's Committee) விசாரிக்கப்புகுமுன்பே எங்களுக்குக் கிடைத்தனவாகும்.

பெரும்பாலான வாக்குமூலங்கள் ஸ்வபாஷைகளில் கொடுக்கப்பட்டனவாகும். மிகவும் சரியான மொழி பெயர்ப்புகள் (தர்ஜமாக்கள்) கிடைக்கச் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் மொழி பெயர்ப்புகள் மூலமாய் சாக்ஷிகளை விசாரித்து, வேண்டிய விடங்களில் திருத்தியும், ஒழுங்கு படுத்தியும் வைத்திருப்பதால் எங்கள் ரிப்போர்ட்டில் சேர்க்கப்பட்டிருக்கும் வாக்குமூலங்களை அசலான வாக்குமூலங்களாகவே கொள்ளலாம்.

இராணுவச் சட்டக் கமிஷனர்களாலும் ஸம்மரி கோர்ட்ஸ் (Summary Courts) என்னும் நியாய சபையாலும் விசாரணை செய்யப்பட்ட தஸ்தாவேஜுக்களையும் எங்களுக்குக் கிடைத்த வரையில் படித்திருக்கின்றோம்.

படைசேர்த்த காலத்திலும் (recruiting period) படை சேர்த்தவழியாலும் ஏற்பட்ட வியாஜ்ஜியங்களின் நியாய விசாரணை தஸ்தாவேஜுகளையும் படித்திருக்கின்றோம்.

நாங்கள் பார்வையிட்ட ஒவ்வோரிடத்துப் பிரபலத் தலைவர்களும், லாகூரிலும் மற்றுமுள்ள விடங்களிலும் எங்களுக்குதவி செய்ய உழைத்த மகான்களும் நாங்கள் கைக்கொண்ட காரியங்கள், கிடைத்த காலத்திற்குள் முடிவு பெறும்வண்ணம் செய்த உபகாரத்தை, முடிவில் எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

இப்படிக்கு

தங்கள் நன்றியுள்ள,

காசி
20 பிப்ரவரி 1920

எம். கே. காந்தி
ஸி. ஆர். தாஸ்
அப்பஸ். எஸ். டயாப்ஜி
எம். ஆர். ஜயகர்

காங்ரஸ்

பஞ்சாப் விசாரணை சபை ரிபோர்ட்

அத்தியாயம் 1

பஞ்சாப்

(தேசசரித்திர சம்பந்தமான விஷயமும்
பூகோள சாஸ்திர சம்பந்தமான விஷயமும்)

தேச சரித்திரத்தை ஒட்டியவரையில் பஞ்சாப், இந்தியாவுக்குள் மிக்க முக்கியமான மாகாணமாகும். வேத காலத்து ஆரியர்கள் தங்கள் வாசஸ்தானமாகக் கொண்டவிடம் இவ்விடந்தான். ரிக்வேதமந்திரம் இவ்விடத்தில் தான் முதன்முதல் சொல்லப்பட்டதாகும். உலகங்களின் பற்பல விடங்களினின்றும் தக்ஷசீலா ஸர்வகலாசாலை நோக்கி ஆவலுடன் ஞானதனத்தைச் சம்பாதிக்க விரும்பியவர் குவிந்த மாகாணமும் இதுதான். மஹாபாரதப் பெருவீரர்களானப் பாண்டவர்களும் கௌரவர்களும் சண்டையிட்டவிடமும் இதுதான்.

எகிப்துதேச அரசரான ஆஸிரிஸ் முதன்முதல் இந்திய பூமியைத் தொட்டவிடமும், அஸ்ஸரியா நாட்டு இராணியான ஸெமிராமிஸ் இந்தியநாட்டைக் கைக்கொள்ளவேண்டுமென்று தனது பெருஞ்சைனியத்துடன் வந்து நன்றாய் முறியடிக்கப்பட்டுத் திரும்பியோடியவிடமும் இதுதான். ஸித்தியர்களும், தார்த்தாரியர்களும், பாரஸீகர்களும், இந்தியாவுக்குள் தலையிட யத்தனித்ததற்குமுன் வீரத்தனத்தில் பஞ்சாப் புத்திரர்களால்தான்

பரீக்ஷிக்கப்பட்டார்கள். ஜய மடைந்தபோதிலும், உலக முழுதையும் ஜயிக்கவேண்டுமென்ற கனவை சிதறியடித்த முதல் விரோதியாகிய போரஸ் இராஜனை மஹா அலெக்ஸாண்டர் சந்தித்தவிடமும் இம்மாகாணந்தான்.

ஸட்லிஜ், பியாஸ், ராவி, சினப், ஜீலம் முதலிய நதிகள் பாய்வதால் இம்மாகாணத்துக்குப் பஞ்சாபெனப் பெயர் கொடுக்கப்பட்டதாகும். இம்மாகாணம் வடக்கே ஹிமய மலையின் சிலபாகத்தையும் காஷ்மீரையும், கிழக்கே யமுனை நதியையும், தெற்கே ஸிந்துதேசத்தையும் இராஜபுதனத்தையும், மேற்கே ஸிந்துநதியையும் பெற்றிருக்கிறது.

இப்போதுள்ள பஞ்சாப்மாகாணத்தின் விஸ்தீரணம் 135,773-சதுரமைல்கள். இவற்றுள் இலக்ஷம் சதுரமைல்களுக்குக் கீழ்ப்பட்ட பூபாகத்தையே பிரிட்டிஷார் சொந்தத்தில் ஆக்ஷிசெய்கின்றார்கள். மிகுதியான பாகங்கள் இந்திய இராஜகுமாரர்களாலும், தலைவர்களாலும் ஆக்ஷி செய்யப்படுகின்றன.

1911-ம்வருஷ இம்மாகாண ஜனத்தொகை இரண்டு கோடிக்குச் சற்றுக் குறைவாக விருந்தது. இம்மாகாணம் இதற்கு முன்னர் பெரிதாயிருந்தது. ஆனால் 1901-ம்வருஷ இம்மாகாணத்தினின்றும் வடமேற்கு மாகாணம் என்று ஒரு மாகாணம் பிரிக்கப்பட்டது. 1912-ம்வருஷ பிரிட்டிஷ் இந்திய சாம்பிராஜ்ஜியத்தின் தலைமைப்பட்டணம் டில்லிக்கு மாற்றப்பட்டபோது மற்றோர்பாகம் இதனின்றும் எடுக்கப்பட்டது. டில்லிபட்டணமும் அதைச்சுற்றிய சில பூபாகங்களும் சேர்ந்து தனி மாகாணமாயிற்று.

பஞ்சாப் மாகாணத்தில் வசிக்கும் ஜனங்கள் பெரும்பாலும் ஹிந்துக்கள், மகம்மதியர்கள், சீக்கியர்கள் ஆகிய இவர்களாகும். சீக்கியர்கள் ஜனனபூமியே பஞ்சாபாகும். அவர்கள் தொகை 35-லக்ஷம். ஜனங்களின் முக்கிய

தொழில் விவசாயமாகும். ஆனால் இதர கைத்தொழில் களுடைய தலைக்கிளம்பி வருகின்றன. பஞ்சாபின் அநேக பட்டணங்களில் நீராவியந்திரங்களால் வேலை செய்யப்படும் அநேக கைத்தொழிற் சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

பஞ்சாப், பிரிட்டிஷ் இந்திய சைனியத்துக்கு வேண்டிய சிறந்த வீரர்களைக் கொடுத்துதவுகின்றது. சமீபத்தில் நடந்த யுத்தத்தில், பஞ்சாப், சைனியத்துக் கனுப்பிய ஜனங்களின்தொகை இதர எல்லா மாகாணங்களைக் காட்டிலும் அதிகமாகும்.

யுத்தவீரர்கள் வகுப்பில் சீக்கியர்கள் முதன்மை பெற்றவர்கள் ஆவர். இராஜபுத்திரர்களும் ஜட்டியர்களும் அதற்கடுத்தபடியானவர்களாகும். மேற்கு பாகத்திலும் தென்பாகத்திலுமுள்ள இராஜபுத்திரர்களும் ஜட்டர்களும் அநேகமாய் முகம்மதியர்கள் ஆவார்கள். கிழக்குபாகத்திலும் வடக்குபாகத்திலுமுள்ளவர்கள் ஹிந்துக்கள். மத்திய பஞ்சாபிலுள்ள ஜாட்டர்கள் அநேகமாய் சீக்கியர்கள் ஆவார்கள். யுத்த உதவியாக பஞ்சாப்கொடுத்த மனித உதவியைப்பற்றி ஸர் மைகேல் ஓடையரே சொன்னதைக் கீழ் குறிப்பிடுகின்றோம். சென்ற ஏப்ரல்மாதம் 7-ம் தேதி ஸர் மைகேல் ஓடையர் பேசும்போது சொன்னதாவது:—

"நான் பலதரம் சண்டையைப்பற்றியும் அதற்காகப் பஞ்சாப் பங்கிட்டுக்கொண்டதைப் பற்றியும் சென்ற வருஷம் பேசியிருக்கின்றேன். ஆகவே இன்றுதினம் நான் சொல்லப்போவது மிக அற்பம். சைனியத்தில் இலக்ஷம் ஜனங்களோடு சண்டையைத் துவக்கினோம்.

"சண்டை ஆரம்பமானதுமுதல் இரண்டரைவருஷங்களில் 1,24,000 வீரர்களைச் சேர்க்க முடிந்ததென்று 1917-ம்வரு நான் உங்களுக்குச் சொல்லமுடிந்தது. அதற்கடுத்த வருஷம் 1,27,000 ஜனங்களுக்குமேல் சேகரித்

தோம். ஒருவருஷத்துக்குமுந்தி இரண்டரை இலக்ஷத்துக்குமேல் சேகரமாயிற்று. அச்சமயத்தில் நாம் மிக்க ஆபத்தான யுத்த நிலைமையிலிருந்தோம். மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தி ஆகஸ்ட்மாதம் வெளியிட்ட அறிக்கைப் படியும் பிரதமமந்திரி (Premier) யினது வேண்டுகோளின் மேலும் நான், நம் மாகாணத்தில் ஒரு வருஷத்துக்குள் 1,80,000 யுத்தவீரர்களுள்பட 2,00,000 மனிதர்களைச் சேகரிக்கச் சொன்னேன். என்னை அநேக ஜனங்கள் இது அதிகமெனச் சொன்னார்கள். அம்மனிதர்கள் பஞ்சாப் ஜனங்களது ஊக்கத்தைச் சற்றும் உணர்ந்தவர்களல்ல. 1918 ஏப்ரல், மே மாதங்கள் அறுவடைகாலமாதலால் படைசேர்க்கும் காரியத்தில் புத்திசாலித்தனமாய் வெகு கவலை யெடுத்துக் கொள்ளவில்லை என்றாலும், 21,000 ஜனங்கள் பதிவு செய்யப்பட்டனர்.

" ஜூன்முதல் செப்டம்பர்வரையில் படைசேர்க்கும் பிரயத்தனம் வெகு உற்சாகத்துடன் எல்லாவிடங்களிலும் நடைபெற்றது. அந்த நான்கு மாதங்களுக்குள் 78,000 மனிதர்கள் பதிவுசெய்யப்பட்டனர். மாதத்துக்கு 19,500 ஜனங்களுக்குமேல் கப்புப்படைப் பிரிவினையிலமர்ந்தனர். " இன்பளுவன்ஸா (Influenza) கொள்ளைநோயால் அக்டோபர் மாதத்தில் 14,426 ஜனங்களே சேகரிக்கப்பட்டனர். நவம்பர் மாதத்தில் நாங்கள் புதுமுயற்சியுடன் வேலைசெய்யப் புகுமுன் நமது விரோதிகள் பலங்குன்றிப் போயினர். விரோதத்தன்மையும் முடிவுற்றது. சேகரிக்கப்பட்ட ஆள்தொகையும் 6,313-க்கு வந்தது. ஜூன் முதல் நவம்பர் வரையிலான ஆறுமாத காலத்திற்குள் 99,000 மனிதர்களை அல்லது வாக்களிக்கப்பட்ட பாதித் தொகையை நாங்கள் சேகரித்தோம். ஏப்ரல்முதல் நவம்பர் வரையிலான எட்டுமாதங்களுக்குள் எங்கள் தொகை

லக்ஷம் வீரர்களுள்பட 121,000-மனிதர்களாயிற்று. இன்னும் ஆள்தேவை நீடித்திருந்தால் நாம் வாக்களித்த 2,00,000 த்தையும் சேர்த்திருக்கவேண்டிவரும். இப்போதிருக்கும் ரீதியில் நமது நண்பரும், வீரத்தன்மை பொருந்திய அயலாருமாகிய நேபாள தேசத்தவர்கள் மிக்க தாராள மனதுடன் கொடுத்துதவிய தொகைபோக, மிகுதியாய் இந்தியசாம்பிராஜ்யத்தில் சம்பாதிக்கப்பட்ட பாதித் தொகைக்குமேல் அதாவது 360,000-வீரர்கள் சண்டை நடந்த நான்கு வருஷங்களுக்குள் நாம் சேர்த்ததாகக் கவுரவம் பாராட்டலாம்.

355,000 வீரர்களையும் மதப்பிரிவுகளாலும், இனங்களாலும் பின்வருமாறு உத்தேசமாய்ப் பகுத்துச் சொல்லலாம்:—

மகம்மதியர்கள்		170,000
பட்டாணிகள்	5,000	
பஞ்சாப் மகம்மதியர்களென்று சாதாரணமாய்வழங்கும் வடபாக மகம்மதியர்களும் தென்பாக மகம்மதியர்களுமாக	136000	
தென் பஞ்சாப் மகம்மதியர்கள்	25,000	
காஷ்மீரிகள்	1.500	
இதரமகம்மதியர்கள்	2,500	
ஸீக்கியர்கள்		90,000
ஹிந்துக்கள்		90,000
ஜட்டர்கள்	30,000	
டாக்ரஸ்	24,000	
இதரராஜபுத்ரர்கள்	10,000	
அஹிரர்கள்	10,000	
குஜரர்கள்	6,000	

கௌர பிராமணர்கள்	5000	
இதரர்கள்	5000	
பஞ்சாப் கிறிஸ்தவர்கள்		4,000

“மகம்மதியர்கள், ஜனத்தொகையில் $\frac{5}{9}$-கொண்டவர்களாகையால் சேர்க்கப்பட்ட ஜனத்தொகையில் 100-க்கு 48-கொண்டவர்களாவார்கள். ஹிந்துக்கள், ஜனத்தொகையில் $\frac{1}{3}$-கொண்டவர்களாகையால் மொத்தத்தில் $\frac{1}{4}$-பங்கு கொண்டார்கள். ஸீக்கியர்களோ, மொத்தத்தில் $\frac{1}{9}$-பாகமே கொண்டவர்களானபோதிலும் $\frac{1}{4}$-பாக மனிதர்களாகின்றனர்.

“சென்ற வருஷம் நான் சொன்னது போலவே அநேகமாய்ப் போர்வீரர்கள் நீங்கலாகவே சேகரிக்கப்பட்டனர். வீரர்களுக்கல்லாத ஜனங்கள் கிராமாந்தரங்களிலிருந்தே சேகரிக்கப்பட்டனர். பட்டண ஜனங்கள் யுத்தக் கடனுகைப் பணம் தாராளமாய்க் கொடுத்தபோதிலும் சைனியத்துக்கும் இந்திய பாதுகாப்புச்சேனை (Indian defence force) கும் மனித உதவி செய்யவில்லை. ஆனால் கிராமாந்தர ஹிந்துக்களில் பெரும்பாலோர் படைசேர்ப்பதில் மிக்க உதவிபுரிந்தனர். அவர்கள் சேகரித்த தொகை, ஸீக்கியர்களது மொத்தத் தொகைக்கு மிகக் குறைவாயிருந்தாலும் பஞ்சாப் மகம்மதியர்கள் தொகைக்கு ஏறத் தாழவருகின்றது.”

பஞ்சாப், லெப்டினண்ட்-கவர்னர் என்னும் பட்டப்பெயர்கொண்ட அதிகாரியால் ஆட்சிசெய்யப்படுகிறது. அவருக்குதவியாய் லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் (Legislative Council) என்னும் சட்டச்சபை ஒன்றுண்டு—இச்சபை மெம்பர்களில் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் சிலர் நியமிக்கப்பட்டவர்களுமாகும்.

பஞ்சாபின் தலைமை ஸ்தானமாய் லாகூர்பட்டணம் இருக்கிறது, இருந்தும் வருகிறது. அப்பட்டணம் 250,000-ஜனத்தொகைகொண்ட பெரிய பட்டணமாகும். அப்பட்டணம் கல்கத்தாவிலிருந்து 1200-மைல் தூரத்திலும் டில்லியிலிருந்து 300-மைல் தூரத்திலும், கராச்சியிலிருந்து 784-மைல் தூரத்திலும், பம்பாயிலிருந்து 1162-மைல் தூரத்திலுமிருக்கிறது.

இம்மாகாணம் கமிஷனர்களுக்குள்ளடங்கிய 5-பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வைந்து பாகங்களும் டிப்டி கமிஷனர்கள் அல்லது கலெக்டர்களுக் குள்பட்ட 28-ஜில்லாக்களாகப் பிரிவுபடும். அவை இந்தியா கவர்ண்மெண்டின் கோடை விடுதியான ஸிம்லாவை உட்கொண்ட பஞ்சாப்பின் கிழக்கு பாகமாகிய அம்பாலா பிரிவு; மலைப்பிராந்தங்களும் மலைப்பிராந்தங்களைச்சார்ந்த பிரதேசங்களுமாகிய ஜலாந்தர்பிரிவு ; மத்திய பிரிவாகிய லாகூர்; வடமேற்குப் பிரிவாகிய ராவல்பிண்டி ; பஞ்சாப்பின் மேற்குபாகமாகிய முல்டான்.

அத்தியாயம் 2

ஸர்-மைகேல் ஒடையாருடைய அரசாட்சி

“ மகான்களே! எப்போதும் பஞ்சாபின் அருஞ் செயல்களில் நான் தலையிடுவதுபற்றி அடிக்கடி குற்றஞ் சாட்டப்படுகிறேன். இம்மாகாணத்தில் உலாவும் எனது பெருமை, குறுகலான அதிகார தோரணையில் சம்பந்தப் பட்டதாய்க் கருதப்படக்கூடாது. 15-வருஷகாலம் இம் மாகாணத்திற்கு வெளியே வசித்திருக்கிறேன். அக்காலத் திற்குள் இந்தியாவின் அநேக பாகங்களைப் பார்வையிட் டிருக்கிறேன். ஆங்கு நான் பார்த்ததும், அறிந்ததுமான

பட்டணங்கள், மனிதர்கள் அவர்களது நடத்தைகள், சிநேகாஷ்ணஸ்திதிகள், ஸபைகள், இராஜாங்கங்கள் முதலியவைகளைப் பற்றிச் சொல்லக்கூடும். ஆனால் அவைகளில் ஓரிடத்தாகிலும் குடிசை முதல் குபேரர் வீடுவரையில் பஞ்சாப் காண்பிக்கிறதுபோன்ற அதே குணங்களைக் காணவில்லை. என்ன நிலைமையிலாவது ஜாதியிலாவது இருந்தபோதிலும் மனிதனுக்கு மனிதன் அவநம்பிக்கை யாவது சந்தேகமாவதில்லாமல் பஞ்சாபியைக்காணலாமென்று நான் கண்டுகொண்டேன். பேருக்குமாத்திரமில்லாமல் உள்ளன்போடு கூடிய மிகுதியான இராஜவிசுவாசத்துடனும், தற்பெருமையில்லாத தைரியத்துடனும், தியானத்தில் மட்டும் அல்லாது உண்மையில் ஊக்கத்துடனும், நிலைத்து நில்லா கொள்கைகளில் சம்பந்தப்படாத முற்போக்குடனும், விஷயத்தில் சம்பந்தப்படாத வெறும் பேச்சுடனல்லாமலும் இருக்கிறார்களென்று கண்டுகொண்டேன். எவ்விதத்திலும் தாழாமல் எல்லாவற்றைக் காட்டிலும் மிக்கப் பெருமையுடன் இந்திய இதர மாகாணங்களோடு பஞ்சாப் சேரும்படி செய்தது இக்குணங்கள் தான். உங்கள்முன் தோன்றக்கூடிய வாழ்விற்கு முக்கியமான நன்னடத்தையோடு சம்பந்தப்பட்ட இக்குணங்கள் தான் முற்போக்குக்கும் சம்பத்துக்கும் பின்னுதவியாய் பஞ்சாப்பைக் காக்கக் கூடியதாகும்."

ஸர். எம். ஓடையார், அமிர்தஸரஸ், லாகூர் முதலியவிடத்து நிராயுதபாணிகளான ஜனங்கள்மீது துப்பாக்கிப் பிரயோகமும், அமிர்தஸரஸ் படுகொலையும், பெருநெருப்பும் நடந்த மூன்று நாட்களுக்கு முன்னும், இந்தியாவெங்கும் நடந்தேறிய ஸர்வஜன உபவாசதினத்துக்கு மறுதினமுமாகிய ஏப்ரல் மாதம் 7-ம் தேதி ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியது இவ்விஷயமேயாகும். அக்காலத்து

அவர் வெளியேற யத்தனித்ததற்குமுன், கடைசியாகக் கூட்டப்பட்ட சபையோர் முன்பாகப் பேசிய பேச்சினின்றும் மேற்சொன்ன விஷயம் எடுக்கப்பட்டதாகும்.

ஆனால் அதே பேச்சில் பின்வரும் விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

சண்டைக் காலங்களில் மிகத்திறமையுடன் நிர்வகிக்கப்பட்டுவந்த பொதுஜனசமாதானப்பாதுகாப்பு, சண்டையில்லாத அமைதியான காலத்திலும் பரவியிருக்கும் வண்ணம் இம்மாகாண கவர்ன்மெண்டார் ஊர்ஜ்ஜிதமான எண்ணங்கொண்டிருக்கின்றனர். இன்னும் கொள்ளவும் போவார்கள். ஆகவே, அபிப்பிராயம் எதாயிருந்தாலும் கவர்ன்மெண்டுக்கு விரோதமாய் பொதுஜன உணர்ச்சியை எழுப்ப பகிரங்கமாய் பிரயத்தனம் செய்துவந்த அமிர்தஸரஸ் லாகூர் வாசிகளிற் சிலருக்கு விரோதமாய் இந்தியப் பாதுகாப்புச்சட்டப்பிரகாரம் (Defence of India Act) ஏற்கனவே காரியம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்நிய விரோதிகளை அடக்கி உள்நாட்டில சமாதானத்தை நிலை நிறுத்திய பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இந்தக் கலகக்காரர்களை அலக்ஷியஞ் செய்யமுடியும், என்றும், தாம் தூரத்தில் நின்றுகொண்டு துஷ்டச் செய்கைகளுக்கு ஆளாகும்படி தூண்டுதல் செய்யப்படக்கூடிய ஒன்று மறியாத சிறுவர்களைக் காப்பாற்றவேண்டிய ஓர் கடமையையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆகவே நான் இம்மாகாணத்தில் இராஜாங்க விரோத விவகாரங்களில் சம்பந்தப்பட்டு வேலைசெய்யும் சகல ஜனங்களுக்கும் எச்சரிக்கை செய்வது யாதெனில், மீட்டிங்குகளை ஒழுங்காய்க் கூட்டுவதும், ஒழுங்காய்ப் பேசுவதும், பின்னர் அதனால் ஏற்படக்கூடியதுமான சகல விஷயங்களின் பொறுப்பும் அவர்களைச் சார்ந்ததாகுமென்பதே. இவ்

வித நிபந்தனைகளுக் குட்பட்டு நடத்தப்படும் எவ்விதப் பொதுஜனக் கூட்டத்தின் ஸ்வதந்திரத்தையும் தடை செய்ய கவர்ன்மெண்டாருக்கு எண்ணமில்லை. இவ்விதம் நடத்தப்படும் கூட்டத்தில் கூட்டம் கூட்டும் நபர் படபடத்துப் பேசும் உபந்நியாஸகர்களை நியாயமான கொள்கைகளால் தடுப்பதற்குக் கூட முடியாமல் போய் விடுகிறதென்பது யாவருமறிந்த விஷயம். வழக்கமாகச் சில கலகக்காரர்கள் பேரிரைச்சலோடும் வெறிபிடித்தும் பேசுவதனாலேயே, நியாயத்துக்குக் கட்டுப்பட்ட தெளிந்த மனிதர்களும் அவ்வித மீட்டிங்குகளுக்குப் போக வெறுக்கிறார்களென்றும் கேட்டுப் பயப்படுகிறேன். ஆகவே உபந்நியாஸகர்களை கட்டுப்படுத்தக் கூடிய மனிதர்கள் இல்லாமலோ, இருந்தும் கட்டுப்படுத்த முடியாமலோ போய்விடுகிறது. ஆகவே பத்திரிகைகளுக்கும் உபந்நியாஸ மேடைகளுக்கும எச்சரிக்கை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு நேர்ந்தது. நியாயத்துக்குரிய சீர்திருத்தங்களைத் தயாரிக்க இதுதானா சாந்தமும், ஒழுங்குமான மார்க்கம்? நிச்சயமாய் அதுவல்ல. இவ்விதகெடுதலான மார்க்கத்தைக் கற்பிக்கின்ற ஜனங்கள், தாங்கள் போராடுகிறதாகச் சொல்கிற சீர்திருத்தக் காரணங்களுக்கு ஜன்ம விரோதிகளாவார்கள். அதிர்ஷ்ட வசமாய் அவர்கள் செல்வாக்கு அவர்களிடும் பேரிரைச்சலுக்குக் கூட ஒத்துவரவில்லை. பஞ்சாபியர் குணத்தோடு அவர்கள் பேசவில்லை."

பிறகு அவர் ரௌலட் ஆக்டின் குற்றமற்ற குண பாவங்களை விரித்துரைத்தார். அவ்விதம் சொன்னபோது உண்மையில்லா விஷயத்தையும் பற்றிக் கூறலானார். அதாவது அந்த ரௌலட் சட்டம் ஸ்வயேச்சையாய் ஒருவரைக் கைது செய்யவோ, சோதனை போடவோ, தலையிட்டு விவகரிக்கவோ போலீஸ்காரர்களுக்கு அதிகார

மில்லை யென்பதாகும். ரௌலட் சட்டத்தைப் படித்த ஒவ்வொருவருக்கும் அவ்விதமான அதிகாரங்கள் போலீஸாருக்குண்டு என்பது நன்ருகத் தெரியவரும். அவ்விதம் அச்சட்டம் போலீஸார்களுக்கு இடங்கொடுப்பதனுல் தான் ஜனங்கள் அதைப் பலமாய் எதிர்க்கிருர்கள். ஸர்மை கேல், ரௌலட் சட்டத்தின் இவ்வித விநோத வர்ணனை யோடு மட்டில் திருப்தி யடையவில்லை. தங்கள் மதக் கொள்கையின் பாகமாய் ஆயிரக்கணக்கான ஜனங்கள் உப வாசமிருந்து ஏப்ரல் மாதம் ஆருந்தேதி நடத்திவைத்த வைபவத்தைப்பற்றி தான் உணர்ந்ததையும் தெரிவிக்க விரும்பினுர். இவ்விதமாய் அதைப்பார்த்து நகைத்து ஏள னம் செய்தார்:—

"ரௌலட் சட்டத்துக்கு விரோதமாய் லாகூரிலும், அமிர்தசரஸிலும் சமீபத்தில் நடந்த நகைக்கத்தக்க சம்ப வங்கள் ஏதும் அறியாமலும் சுலபமாய் நம்பத்தகுந்தவர் களுமாகும். ஜனங்களை, எவ்வளவு சுலபமாய் கெடுதலான வழியில் செலுத்தும் என்பதை உணரக்கூடிய ஆயிரத்துக் கொரு மனிதரையாவது தெரிவிக்காதிருந்தால் ஏளன மாக விருந்திருக்கும். அவர்களைக் கெடுதலான வழியில் திருப்புவதற்கு மட்டில் விரும்புகிறவர்கள் அபாயகரமான பொறுப்புக் குள்ளாக வேண்டி யிருக்கிறது. கியாதி வாய்ந்த பிரஸிடெண்ட் லிங்கன் அவர்களது வாக்கியத்தை இவர்களுக்கு நினைப்புண்டுபண்ண விரும்புகிறேன்; "நீங் கள் புத்திசாலியாயும் மனச்சாக்ஷிக்கு விரோதமாய்ச் செய் கிறவர்களாயுமிருந்தால் எல்லா ஜனங்களையும் சிலகாலம் கெடுதலான வழியில் புத்தியைச் செலுத்தவும் சிலரை எப் போதும் கெடுதலான வழியில் புத்தியைச் செலுத்தவும் செய்விக்கக்கூடும். ஆனுல் எல்லோரையும் எப்போதும் கெடுதலான வழியில் புத்தியைச் செலுத்தும்படி செய்

விக்க முடியாது. நற்புத்தியை நாடாமல் அக்ஞானத்தை விரும்புகிற ஜனங்கள் மனவேதனை யடையக்கூடிய ஒரு நாளைப் பத்திரமாய் சேமித்து வைத்துக்கொள்கிறார்கள்." இந்தியா தேசத்து எந்த வேறு தலைக் கவர்ன்மெண்டார்களும் எப்ரல் மாதம் 7-ம் தேதி ஜனங்களைப் பார்த்து நகைத்தார்களில்லை. ஸர். எம். ஒடையர் நீங்கலாக ஒவ்வொருவரும் எப்ரல் ஆறுந்தேதி சம்பவத்தின் பொருளை எறக்குறைய அறிந்துகொண்டார்கள். ஆனால் ஸர். மைகேலின் ஒரே ஆவலென்னவென்றால், நற்புத்தியை நாடாது துராசையையோ அக்ஞானத்தையோ நாடுவதாய் அவர் எண்ணியவர்களுக்கு "மனவேதனை யடையக்கூடிய நாளை" தேடிவைக்க வேண்டு மென்பதேயாகும். ஸர்மைகேல் நற்புத்தியை நாடுவதற்குப் பதிலாக மாற்றமுடியாத துராசையையும் அக்ஞானத்தையும் எவ்விதம் நாடினாரென்றும் ஜனங்களையும் மேலதிகாரிகளையும் கெடுதலான வழியில் திருப்பி எவ்வளவு அபாயகரமான பொறுப்பை ஏற்றுக்கொண்டாரென்றும் தொடரும் பக்கங்களில் தெரிவிக்கக் கடமை எங்களுக்கு ஏற்பட்டிருப்பது மிக்க வருத்தத்தையுண்டு பண்ணுமலிராது. (Day of reckoning) "மனவேதனை யடையக் கூடியநாள்" என்னும் சொற்றொடர் தொகுதிக்குப் பொருளைத் தெரிவிக்கும் கடமையும் வருத்தத்தைத் தரும். 10ம் தேதி திரும்பவும் பேச வேண்டிய சந்தர்ப்பத்தையும் பெற்றிருந்தார். அமிர்தசரஸிலும் லாகூரிலும் நடந்த சம்பவத்தை யுணர்ந்த பின்னர் மாலையில் பேசினார். உபசாரப்பத்திரம் சமர்ப்பிக்க மான்ட்கோமெரி (Montgomery Hall) கூடத்தில் கூடிய பஞ்சாப் இராணுவ வகுப்புப் பிரதிநிதிகளைக் கண்டு உபந்நியசித்தார். அஸோஷியேடட் பிரஸ்காரர்கள் தெரிவித்த பேச்சு முழுதையும் நாங்கள் வெளியிடுகின்றோம்.

"இன்று இரவு இங்கு கூடமுடியாதபடி இன்றுமாலை நடந்த மனக்கிளர்ச்சி தடுக்கா திருப்பதை நினைக்க நான் சந்தோஷ மடைகிறேன். பஞ்சாப் தேச மகம்மதியர் ஸீக்கியர் ஹிந்து முதலானவர்கள் தம் தம் ஜாதி, மதம், கொள்கைகள் முதலியவைகளில் வேறுபட்டவர்களாயிருந் தும் ஒருவர்க்கொருவர் நேசப்பான்மையுடன் சௌரியம் இராஜவிஸ்வாசம் என்ற இரண்டு பந்தங்களால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுடன் கட்டுப்பட்டு கியாதிவாய்ந்த இரா ணுவ வகுப்புப் பிரதிநிதிகளாய் பலர் இங்கு கூடியுள்ள தைக் காண நான் பெருமை கொள்கிறேன்.

"நீங்கள் அரசாட்சியின் கஷ்டங்களையும், கலகத்தா லும், அராஜகத்தாலும் அமைதியையும் முற்போக்கையும் கெடுப்பதைத் தடுக்க ஏற்பாடு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தையும் நன்றாயுணரக்கூடும். சென்ற சிலவாரங்களுக்குள், கலகத்தாலும் அராஜகத்தாலும் கெடுதி நேராதபடி ஜனங்களது சொத்தையும் உயிரையும் பத்திரப் படுத்தவேண்டி ஒரு சட்டம் எவ்வாறு வெளிப் படுத்தப்பட்ட தென்பதையும் நீங்கள் பார்த்திருக்கிறீர் கள்—துரதிர்ஷ்டவசமாய் அவ்வித நிலைமை தோன்றினால் மட்டில் அமுலுக்குக் கொண்டுவரப்படக் கூடிய சட்டம் பிடிவாதமான பொய்யையும் மாறுபொருளையும் கற்பிக்கத் தகுந்த பேரிரைச்சலிடும் சில வகுப்புகளால் அத்தியா வசியமான நிலைமையில் ஜனங்களைக் காப்பாற்ற, ஜனங் களுக்கே விரோதமான ஆயுதமாய்த் தோற்றும்படி செய் யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை நன்றாய் கற் றறிந்த நீங்கள் அக்கலகம் எவ்வளவு ஆதாரமற்றதென அறிவீர்கள். ரௌலட் சட்டத்துக்கு விரோதமாய்க் கல கம் செய்யும் பாவனையில் இந்தியாவுக்காகச் சண்டை போட்டு போர்முனையிலிருந்து திரும்பிய வீரத்தன்மை

யுள்ள பஞ்சாபி மகம்மதியர்கள், கூர்க்கர்கள், ஸீக்கியர்கள் ஆகிய இவர்களைப் பழிக்க யத்தனித்த பொழுது முல்டானில் சில நாட்களுக்கு முந்தி நடந்த விஷயத்திலிருந்து கலகத்துக்கு ஆஸ்பதமான மனிதர்களது எண்ணங்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம். இவ்விதம் தீங்கிழைத்தவர்கள் தங்களிடத்தில் இராணுவ சக்தியைப் பெறுதிருப்பது மட்டுமன்றி அவர்களது வீட்டையும் அடுப்பையும் காக்கும் சௌரியமும் இராஜ பக்தியு முள்ளவர்களது திறமையை மெச்சவும் சக்தியற்றவர்களா யிருக்கிறார்களென்பதை நாமறிய விளக்குகிறார்கள். அவர்கள் எண்ணம் கவர்ன்மெண்டை எதிர்க்கவும் துரோக சிந்தனையில்லாது உண்மையாய் நடந்து கொள்கிற மனிதர்களுக்குத் தீங்கிழைக்கவும் தான் இருக்கிறது. இராஜ பக்தியுள்ள மனிதர்கள் அவர்கள் கெட்ட எண்ணங்களை எதிர்க்கவும் வேண்டும் எதிர்க்கவும் செய்வார்கள். ஆகவே நான் உங்களைக் கேட்டுக் கொள்வதென்னவென்றால், சட்டத்துள் அடங்கிய பிரகாரம், கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயங்களை உங்கள் வாக்கு செல்லக்கூடிய விடங்களிலுள்ள ஜனங்களுக்கு விரித்துரைத்து, ஒன்று மறியாதவர்களும், சீக்கிரத்தில் எதையும் நம்பத் தகுந்ததுமான ஜனங்களையும் பட்டணக் கடைகளிலுள்ள நீசர்களையும் கெட்டவழியில் பிரவேசிக்கும் படியும் கலகஞ் செய்யும்படியும் தூண்டுதல் செய்கின்ற கசடர்களை வெளிப்படுத்த வேண்டுமென்பதே யாகும்.

"கிளர்ச்சியை விருத்தி செய்ய விரும்பும் நபர்கள் முதலில் சேஷ்டையற்ற எதிர்ப்பு (Passive Resistence) என்றழைக்கப்படும் கொள்கையைத் துவக்கினர். அது எந்த நிலைமையை அடைந்த தென்று தெரியுமா? சனிக்கிழமையன்று முல்டானில் என்ன நடந்த தென்பதை நீங்

கள் கேட்டிருக்கிறீர்கள். ஞாயிறன்று லாகூரிலும் அமிர்த சாஸிலும் சட்டத்துக்குக் கட்டுப்பட்ட ஜனங்கள்மீது பலாத்காரமும், பயமுறுத்தும் பிரயோகமும் செய்யப்பட்டது. பம்பாயில் பகிரங்கமாகச் சட்டத்தையே அலக்ஷியஞ் செய்ய ஆரம்பித்தனர். இக்கிளர்ச்சியை உடனுக்குடனே அடக்காமற் போனால் குழப்பமும் ரணக்களமு மேற்படுத்தும். அமிர்தசாஸிலும் லாகூரிலும் ஏற்கனவே அவ்விதம் ஏற்படுத்தி விட்டது. சட்டத்துக்கடங்கிய ஜனங்களுடைய சொத்துக்களுக்கும் உயிருக்கும் ஆபத்தை யுண்டு பண்ணும் கவர்ன்மெண்டார், எவ்வித இராஜாங்கக் கொள்கையைப் பெற்றிருந்தாலும் பகிரங்கமாய்க் கிளர்ச்சியைக் கண்டனம் செய்து அதை முடிவுக்குக் கொண்டு வரும்படி உங்களையும், எல்லா இராஜ விசுவாஸமுள்ள ஜனங்களையும் எதிர் பார்க்கிறார்கள். இந்த விஷயத்திலும் இதைப் போன்ற விஷயங்களிலும் கவர்ன்மெண்டோடு நீங்கள் ஒற்றுமை பாராட்டினால் சண்டையில் நீங்கள்செய்தநன்றி சிலாகிக்கப்படுவதுபோல் மிக்கச் சிலாகிக்கப்படவும் கூடும். "நிலைமை இப்போது மோசமாயிருக்கிறது. உங்களுடைய தீவிரப் பிரயத்தனமும் கவர்ன்மெண்டாருடைய பிரயத்தனமும் வேண்டியிருக்கிறது. தயக்கமின்றி கவர்ன்மெண்டார் தங்களுடைய கடமையை செய்வதன்றி உங்களுக்கும் தாங்குதலாய் நிற்கும் கவர்ன்மெண்டார் சட்டத்தை அமுல் செய்வார்கள். அது இரணகளத்தை யுண்டுபண்ணும்போலிருப்பதால் அதன் பொறுப்பு சட்டத்துக்கு விரோதமாய்க் கிளர்ச்சிசெய்ய இதரர்களைத் தூண்டும் நபர்களைச்சாரும். இதுதான் நான் கொடுக்கக்கூடிய கடைசீ புத்திமதியாகும். இதைப்பற்றி உடனே கவலையெடுத்துக்கொண்டு நான் இம்மாகாணத்தை விட்டு நீங்குமுன் பொதுச் சமாதானத்தை நிலை நிறுத்துவீர்களென

நான் உணர்கிறேன். இக்கஷ்டம் அபாயகரமாயிருந்தாலும் எங்கும் வியாபித்ததாயில்லை. உங்கள் உதவியால் சீக்கிரத்தில் நீக்கப்படக்கூடும். சண்டைக் காலத்திலாவது உள்நாட்டுக் கலகத்திலாவது பஞ்சாப் இராணுவ வம்சத்தார்களை விருதாவாய்க் கேட்டுப் போனதில்லை என்பதை என் ஞாபகத்தில் பெருமையுடன் கொள்வேன். அடுத்த சிலவாரங்களுக்குள், பிரதிநிதிகளாய் வந்துள்ள உங்கள் இனத்தாராலும் உங்களுடைய காரியங்களாலும், என்னுடைய நன்றியறிதலையும் கவர்ன்மெண்டாருடைய நன்மதிப்பையும் பெறுவீர்களென்று நான் திடமாய் நம்புகிறேன்.

"நான் இப்போது செல்ல அநுமதி பெறவேண்டும். மாகாணத்தை விட்டு விலகும்போது நீங்கள் செய்துள்ளதைப்பற்றிய நல் ஞாபகத்தைக் கொண்டுபோவேன். உங்களையாவது, உங்கள் வேலையையாவது, உங்களுடைய க்ஷேமத்தையாவது மறக்கவே மாட்டேன்."

ஸர் மைகேல் ஓடையரது மன வெழுச்சியை ஒருவாறு இது தெரியப்படுத்துவதால் இவ்வுபந்நியாஸம் முழுதையும் எடுத்தெழுதினோம். இவ்வுபந்நியாஸம் பஞ்சாப் இராணுவ வம்சத்தார்களுக்குக் கொடுக்கப் பட்டதாகும். அவர் ஜனங்களுக்கு விரோதமாய் அவர்களைத் தூண்டுதல் செய்யத் தயங்கவில்லை. அவர் மாறான விஷயங்களைக் கூறியிருக்கிறார். உதாரணமாக "பட்டாளத்தார்களுக்கு விரோதமாய் முல்டான் வாசிகள் நடத்தை யிருந்தது" என்பதாகும். நாங்கள் அவ்விஷயத்தை ஆராய்ந் தறிந்திருக்கிறோம். முல்டான் வழியாய்ச் சென்ற பட்டாளத்தார்கள்மீது எவ்வித குற்றமும் செய்யப் படவில்லை யென்பதை நன்றாய்த் தெரிய வருகிறது. சபையோருக்கு வேண்டுமென்றே ரௌலட்சட்டத்தின் லக்ஷியத்தை வேறு

படுத்திச் சொல்லி யிருக்கின்றார். பின்னர் இராஜாங்கக் கிளர்ச்சியில் சம்பந்தப் படாமலிருப்பதற்காகத் தண்டனையால் பயப்படுத்தியிருக்கிறார்.

ஸர்மைகேல் ஒடையர் ஒவ்வொரு வகுப்பாரையும் எவ்விதம் தன்னை வெறுக்கும்படி செய்து கொண்டாரென்பதையும் பொது ஜனங்கள் மீது கற்றறிந்த வகுப்பார் கொண்டிருந்த செல்வாக்கை எவ்வாறு குறைத்தாரென்பதையும் பற்றிச் நாங்கள் கூறப்போகிறோம்.

1913-ம் வருஷம் பஞ்சாப் லெவ்டினன்ட் கவர்னராய் நியமிக்கப்படுமுன் அவருக்கு மிகுதியான அநுபவமிருந்தது. சீர் திருத்தங்களுக் குரித்தான முன் யத்தனங்களைக் குறித்து அருவெறுக்கத் தகுந்த விவகாரங்களோடு அரசாட்சியைத் துவக்கினார். உத்தியோகத்தைப்பெற்ற சில வாரங்களுக்கெல்லாம் உபசாரப்பத்திரம் பெறும் சம்பவ மீட்டிங்கில் பதிலளித்தது என்னவென்றால்:—"இந்த மாகாண அரசாட்சியை நான் கைக்கொண்ட சொற்ப காலத்தில், எவ்விதம் அரசாட்சியை நான் நடத்த வேண்டும் என்பதைப்பற்றியும், ஜனங்கள் ஆவலைத் திருப்தி செய்ய என்ன செய்யவேண்டு மென்பதைப்பற்றியும், சுய ஆட்சி வழியில் செலுத்தக்கூடிய மார்க்கத்தை எவ்வாறு சுலபப் படுத்தவேண்டு மென்பதைப் பற்றியும், நிர்வாக இலாகாவையும் எவ்வாறு பிரிக்க வேண்டுமென்றும் இன்னும் இதர சுதேசாதிபதிகளது விவகாரங்களைக் கவனிக்க வேண்டுமென்றும் பலசிலாக்கியமானதும் ஆழ்ந்துயோஜிக்கப்பட்டதுமான அபிப்பிராயங்களைப்பெற்றேன். இவ்வகையான குறுகிய வினெண்ணங்கள் இராஜாங்கக் கடமைகளைப் பலப்படுத்துவதோடு குடிஜனங்களுக்கும் சுயேச்சையான நகர வாசிகளுக்கு முள்ள மூலாதாரமானக் கடமைகளிலும் கவனம் செலுத்தப்பட்டால் அவைகள் மதிப்

யைப் பெறக் கூடுமானாலும், அவைகளுக்குள்ள ஆதாயத்தையும் விசேஷத்தையும் கூடப் பெற்றிருக்கின்றன. உயிரையும் சொத்தையும் பத்திரப் படுத்தக் கூடிய முக்கிய பாத்தியதையை கவர்ன்மெண்டார் எவ்வாறு நிர்வகித்து நடத்து மென்பதையும், இனத்தார்களை உத்தேசித்த பொறுப்பை ஜனங்கள் எவ்வாறு உணரும்படி செய்ய வேண்டும் என்பதையும் பற்றிய அனுபவரீதியான அபிப்பிராயங்களை நான் வரவேற்கவும் வேண்டும் வரவேற்கவும் போகிறேன். இதைத் தவிர்த்த மற்ற எல்லா நோக்கங்களும் என அபிப்பிராயத்தில், மேற்சொன்ன இரண்டு அபிப்பிராயங்களுக்குக் கீழ்ப்பட்டதென்றும் இந்த முக்கிய பாத்தியதைகள் சரியாய் நிர்வகிக்கப் படுகிறவரையில் நிறுத்தப் படவேண்டுமென்றும் படுகிறது." இவ்விதம் அவர் சபையோருக்கு, தேசத்தின் முற்போக்குக்கு முக்கிய ஆதாரமாய் அவர்கள் கொண்ட அச்சீர்திருத்தங்கள் குறுகலான வீணெண்ணங்களை யுடையவை யென்றும், இனத்தார்களுக்குள்ள கடமைகளை யுணரும்படி செய்து சொத்தையும் உயிரையும் பத்திரப்படுத்தி வைப்பதில் அவருக்குதவிசெய்ய அவர்களை எதிர்பார்ப்பதாயுமான விஷயங்களையும் முன் எச்சரிக்கைசெய்தார். உயிரும் சொத்தும் ஒழுங்காய் பத்திரப் படுத்தப்பட் டிருக்கின்றனவென்றும் இந்தப் பத்திரம் பிரிட்டிஷ் அரசாட்சியினது கௌரவமான வெற்றி யென்றும், சபையோர்களால் சொல்லப் பட்ட சீர்திருத்தஆசைகள் இனத்தார்களுக்கான பொறுப்பைக் காண்பிக்கிறதென்றும் ஒருவர் எண்ணவேண்டியிருக்கும். இதே பேச்சில் ஸ்வதேச பாஷா பத்திரிகைகளுக்குத் தர்மோபதேசமும் செய்தார். அச்சுச் சட்டப்படியான விவகாரமும் பின்தொடர்ந்தது. ஸ்வதேச பாஷா பத்திரிகைகளிடமிருந்து ஜாமீனும் வாங்கப்பட்டது. சில

வகைளில் ஜாமீன் கட்டப்பட்டத் தொகையும் பறிமுதல் செய்யப்பட்டது. ஒரு மாதத்திற்குப் பிறகு தன் மாகாண சட்டச் சபைத்தலைமை ஸ்தானாதிபதி ஹோதாவில் தன் முதல் உபந்நியாசத்திலேயே பத்திரிகைகளுக்கு இரண்டாந்தடவை எச்சரிக்கை செய்தார்:—

"இதற்குமுன் எடுத்துக் கொள்ளப்பட்ட காரியங்கள் எதிர்பார்த்த பலனைக் கொடாவிட்டால் கவர்ன்மெண்டார் குற்றவாளிகளை, சட்டத்திற்கு விரோதமாய் கலகத்தையும் அப்பிரியத்தையும் விருத்தி செய்யும் இதர குற்றவாளிகளைத் தண்டிப்பதுபோல், தண்டிப்பதல்லாமல், சட்டம் இடம் கொடுக்கக்கூடிய எல்லா வழிகளையும் முயற்சிப்போம். அவைகளுள் ஜாமீன் பெறுவதும், ஜாமீன் தொகையைப் பறிமுதல் செய்வதுமே அற்ப தண்டனையாகும்." அந்த மாகாணத்தில் சமாதானம் நிலை பெற்றிருப்பதாய் அதே பேச்சில் அவரே சொல்லியிருக்கிற "இதுவரை நிறைவேறியுள்ள அருஞ் செயல்கள் எப்போதுமே இம்மாகாணத்தில் சிறப்பாய் விளங்கியிருக்கிற பரஸ்பர விசுவாசம் ஜனங்களுக்கும் இராஜாங்கத்தாருக்குமுள்ள சிநேகப்பான்மை ஆகிய இவற்றால் கைகூடி வந்ததாகும்." பேச்சு அடங்கியுள்ள போதிலும் பத்திரிகைகளைப்பற்றிய கடுமையான நோக்கம் இந்த எச்சரிக்கையோடு கையாளப் பட்டிருக்கிறது: ஆறுமாதத்திற்குப் பிறகு, இந்த மாகாணத்திற்கு நிர்வாக சபை ஏற்படுத்த வேண்டுமென்ற ஏற்பாட்டைப்பற்றி தன் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்த ஓர் சந்தர்ப்பத்தைப் பெற்றார். இந்தத் தீங்கற்ற ஏற்பாட்டிற்கு அவர் 1914-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13-ம் தேதி பின்வருமாறு பதிலளித்தார்.—"ஆச்சரியப்படும் வண்ணம் திடீரென இவ்வேற்பாடு அவருக்கு நேர்ந்திருக்கிறது. லெப்டினண்ட் கவர்

னரை மாகாண கவர்ன்மெண்டின் முக்கியத் தலைவராகவும், பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகவும் எண்ண ஜனங்கள் ஆரம்பமுதல் வழக்கப்பட்டிருந்தனர். அந்த மாகாணம் இதர எந்த மாகாணத்தோடும் அல்லது இராஜதானியோடும் சீர்தூக்கிப் பார்க்கப் படுமிடத்து ஒத்திருக்கும்படி அம்முறையால் முன்னேற்ற மடைந்தும் செழித்தோங்கி வளர்ந்து மிருக்கிறது. இம்மாகாணத்துத் தற்கால அரசாக்ஷி ஏதோ சில குற்றங்களுடையதென்றும் அக்குற்றங்கள் நிர்வாக சபை ஏற்படுத்தப் பட்டால் நிவர்த்தி யாகுமென்றும் காண்பிக்கப் பட்டாலொழிய அது பிரஸ்தாப இராஜாங்க விஷயங்களிலொன்ருகக் கருதப்படாது." பிறகு அவர், அவரைக் கௌரவிக்க வந்த பிரபுக்களை "கவர்ன்மெண்டை ஒழுங்கு படுத்த முட்டாள்கள் வாதாடட்டும்" என்று தூஷித்தார்.

சண்டை ஆரம்பமான ஐந்து மாதங்களுக்குப் பிறகு இந்துதேச பாதுகாப்புச் சட்டத்(Defence of India Act)தின் முழுபலனையும் பஞ்சாபியர்கள் மரியாதையாய் அனுபவித்தனர். இவைகளை அமுல் செலுத்தியதில் அவருக்குரித்தான பங்கு குறைவல்ல. எவ்வளவு பங்கு எடுத்துக்கொண்டாரென்பதும், சாதாரண வழக்கத்துக்கு மிஞ்சி சட்ட சம்மதமாய் எவ்வளவு அதிகாரங்களை விரும்பினரென்பதும் அவரால் சிபார்சு செய்யப்பட்டுப் பின்னர் இம்பீரியல் கவர்ன்மெண்டாரால்(Imperial Government) அங்கீகரிக்கப்பட்ட பின் வாலாற்ருல் தெரியவரும். இவைகளை நாங்கள் இராஜத்துரோக விஷய பரிசீலனைக் கமிட்டி (The Sedition Committee) யாரது ரிப்போர்ட் 151-ம் பக்கத்திலிருந்து எடுத்துக் கொண்டோம். "இக்காலத்தில் குற்றம் செய்யும்போதாவது அல்லது குற்றத்தால் பிடிக்கப்பட்ட போதாவது அல்லது தீங்கை யுண்டு

பண்ணும் பொழுதாவது கைதுசெய்யப் படக்கூடிய இரா ஜத் துரோகிகளையும் கலகக்காரர்களையும் கிரிமினல் லா (Criminal Law) இடங்கொடுக்கிற வரையில் குற்றஞ் சாட்டுதல், அப்பீல் நடத்தல் முதலிய விவகாரங்களுக்கு வக்கீல்கள் புத்தி நுட்பத்தால் வெகு நாள்கள் நீடிக்கக் கூடியதாய் வழக்கை விடுதல் மிகவும் வெறுக்கத்தக்க காரியமாயிருக்கிறது. ஆகவே லெப்டினன்ட்கவர்னர் அவர் கள் கீழ் குறிப்பிட்ட இவ்விவகாரங்களில் லோகல் கவர்ன் மெண்டாரது அனுமதியிக் குள்ளடங்கி விவகரிக்க ஒரு நியாயமான திட்டங்களை வரைந்து அங்கீகாரத்துக் கனுப்பியிருக்கிறோம். (a) இராஜாங்க சம்பந்தமான அல் லது இராஜாங்க சம்மந்த மானதுபோல் தோன்றுகிற குற்ற விவகாரங்களை தண்டனை செய்து போக்க. (b) அவ் வித வழக்குகளின் அப்பீல் விவகாரங்களைப்போக்க. (c) சாதாரண சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதைவிட துரித மாய் குற்றம் அடைந்துள்ள வகுப்பாரது மனிதர்களிட மிருந்து ஜாமீன் வாங்க. (d) கலகத்துக்குக் காரணமான மனிதர்களை வைத்துக்கொண்டு சதியாலோசனை செய்யும் கிராமத்தார்களையும் கிராமாதிபதிகளையும் உடனுக்குடனே தண்டிக்க.”

லோகமான்யதிலகர், பிபின் சந்திரபாலர் போன்ற பிரபுக்களை இம்மாகாணத்துக்குள் வரவொட்டாமல் தடுத்து இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தால் (Defence of India Act) தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங் களைத் துர்விநியோகப் படுத்தினார். அற்ப குற்றத்தினாலோ குற்ற மில்லாமலேயோ நூற்றுக் கணக்கான தன் மாகாண ஜனங்களை வெளியிடங்களுக்குப் போகாதபடி சிறைப் படுத்தினார். அவர் ஸ்வதேச பாஷைப் பத்திரிகைகளின் வாயைக் கட்டிவிட்டார். தேசிய வாதிகள் பத்திரிகைக

ளான "நியூ இந்தியா" "அமிர்த பஜார் பத்திரிகை" "இண்டிபெண்டன்ட்" முதலியவற்றை மாகாணத்திற்குள் பிரவேசிக்க வொட்டாமல் தடுத்து விட்டார். பிறகு அவர் தணிக்கை செய்யப்பட்ட பத்திரிகைகளையும் வெளிவர வொட்டாமல் தடுத்து மாகாண ஜனங்கள் தம் அபிப்பிராயங்களை சுயேச்சையுடன் பத்திரிகைகள் மூலமாய் அறிந்து கொள்ளவும் முடியாமல் செய்துவிட்டார். இவ்விதம் சுயேச்சையாய்ப் பேசவும் எழுதவும் முடியாமற் செய்தும், பஞ்சாப் தேச ஜனங்க்ள் தன் அரசாட்சியால் மிகச் சந்தோஷமுள்ளவரா யிருக்கின்றனரென்று பிறர் அறியும் வண்ணமும் ஏற்பாடுகள் செய்தார்.

ராஜாங்க விவகாரங்களில் ஜனங்களுக்குள்ள அக்கரைகளை முற்றிலும் ஒடித்துப்போட அவசிய சட்ட நிர்மானங்களை ஏற்படுத்தி அவதூறு செய்தது மட்டுமல்லாமல் பொது ஜனங்களைக் கூட்டுவித்து பயத்தையும், எச்சரிக்கையும் கொடுத்து தனக்குள்ள அதிகாரத்திற்கும் அவதூறு ஏற்படுத்திக் கொண்டார்.

இடைவிடாது பொதுஜன காரியத்தைப் பூஷணமாகக் கொண்டுழைத்து லாலா துணிசந்த் அவர்கள், ஸர். எம். ஓடையரின் அரசாட்சியினது விசேஷானுபவத்தைப் பெற்றிருக்கின்றனர். அவர், எங்களுக்குக் கொடுத்த வாக்கு மூலத்தில் கூறுவது யாதெனில்:—

"இந்தியச் சங்கத்தார்களது (Indian Association) காரியதரிசி என்ற ஹோதாவில் பொதுஜனக் கூட்டங்களை நான் கூட்ட வேண்டியிருந்தது. விளம்பரத்தை விடுத்த பின்னர், கவர்ன்மெண்டின் முக்கிய காரியதரிசியாலும் லாகூர் கமிஷனராலும் அவர்களை வந்து பார்க்கும்படி கூப்பிடப்பட்டேன். அவர்கள் எப்பொழுதும், என்னுடைய இடத்தில் அநேக ஜனங்கள் லாகூரில் பொதுஜனக்

கூட்டத்தை கூட்டுவதைத்தவிர வேறு எந்தக் காரியங்களையும் செய்யலாமென்று சொல்லி பொது ஜனக் கூட்டங்கள் நடைபெறுமலிருக்கும் வண்ணம் தடை செய்தார்கள். கவர்ன்மெண்டின் முக்கிய காரியதரிசியாகவும் (The Chief Secretary to Government) கமிஷனரும் ஸர். மைகேல் ஒடையருக்காக வேண்டி என்று நான் எண்ணும் வண்ணம் ஒரு தரத்துக்கு மேல் நான் யாரை உபந்நியாசத்துக்கு அழைக்கப் போகிறேனென்றும் மாகாணத்துக்கு வெளியேயிருந்து யார் யார் அழைக்கப்பட்டிருக்கிறார்களென்றும் கேட்டார்கள். இதுமட்டு மல்லாது மாகாணச் சட்டச்சபை மெம்பர்களிற் சிலர், லாகூரில் நடந்த மாகாணக் கான்பரன்ஸைக் கவனிக்க வந்தபோது முக்கிய காரியதரிசி அவர்கள் அவர்களைக் கூப்பிட்டு பிராட்லா கூடத்தில் (Bradlaugh Hall) நடந்த பொது ஜனக் கூட்டத்திற்கு வர மனோதைரியப் படாவண்ணம் பயமுறுத்தி விட்டனர். (வாக்கு மூலம் நெ. 553.)

1919-ம் வருஷம் இம்பீரியல் சட்டச்சபை (Imperial Legislative Council) மெம்பர்கள் சீர் திருத்தங்களுக்கு வேண்டிய அபிப்பிராயங்களடங்கிய மனுவில் கையெழுத்து செய்தனர். அவ்வபிப்பிராயங்களை அங்கீகரிக்க ஒரு பொதுக் கூட்டமும் கூட்டப்பட்டது. அம்மீட்டிங்கு விவரங்களடங்கிய விளம்பரப்பத்திரிகையில் கையொப்பம் கொடுத்தவர்களில் நால்வர் பஞ்சாப் மனிதர்கள். அவர் அவர்களுக்குச் சொல்லியனுப்பி அவர்கள் அவ்விதம் இஷ்டப்படித் துணிந்ததற்கும் கையொப்ப மிட்டதற்கும் மிகக் கடிந்து வைதார். பிறகு காங்கிரஸ் லீக் ஏற்பாடு துவக்கப்பட்டது. அவர் பஞ்சாப் அதன் வலைக்குள்ளடங்காமலிருக்கும் வண்ணம் செய்யப் பிரயத்தனப் பட்டார். ஹிந்துக்களுக்கும், மகம்மதியர்களுக்கும் மனமொத்த

சிநேகத்தை யுண்டுபண்ணக் கூடிய அவ்வேற்பாட்டுக்குத் தடைசெய்ய கொஞ்சமும் பின்வாங்கினரில்லை. அவர், மிஸஸ் பெஸன்டம்மையாலும், மிஸ்டர் திலகராலும் ஏற்படுத்தப்பட்ட அமைதியானவும், ஒழுங்கானதுமான சுய ஆட்சி கிளர்ச்சியையும் (Home Rule Movement) துராக்ருத ரீதியில் பிரிட்டிஷார் ஆட்சியினின்றும் விலகி சுய ஆட்சிகொள்ள விரும்பும் கலகக்காரர்களது எண்ணத்தையும், ஜெர்மனியர்களது உதவியால் மகம்மதிய இராஜ்யத்தை ஏற்படுத்தி விடலாமென்று எண்ணி தென்மேற்கு பஞ்சாப் பிரதேசத்து பைத்தியம் பிடித்த ஜனங்கள் தங்கள் இருப்பிடத்தை விட்டுச் சென்றதையும் நினைந்து ஒன்றுக்கொன்று வித்தியாசம் பாராட்டாமல் மயக்கங்கொண்டார். அவர் கொடூரமான வழியில் கலகக்காரர்கள் கிளர்ச்சியை அடக்கிவிட்டனர். நூற்றுக்கணக்கான நிரபராதியான ஜனங்களை அநியாயமாய் அதர்மவழிகளில் சிக்ஷித்தாரெனச் சொல்லப் பயப்படுகிறோம். 1915-ம் வருஷம் தானியத்தைப் பற்றிய அற்பக்கலகமென்று முதலில் பாவித்துத் தென்மேற்கு பஞ்சாப் பாகத்து ஆதரவற்ற குடிகளைக் கொள்ளையடிக்க எண்ணங் கொண்டார். சைனியபலம் கைக்கு வந்ததும் ஊர்ஜிதமான நடவடிக்கை அதன்மேலெடுத்துக் கொண்டார். இந்தக் கலகம் படைசேர்க்கும் காரியத்தையும் கெடுக்கும் வண்ணம் அவ்வளவு மிக்கக் கெடுதலான நிலைமைக்கும் வந்து விட்டது.

1917-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 13-ம் தேதி ஒரிஸ்ஸா பீஹார் மாகாணத்தைப்போல் பஞ்சாப் சட்டச் சபையையும், நியாய விலாகாவையும் ஒழுங்கு படுத்த வேண்டுமென்று பெருமை தங்கிய மிஸ்டர் மகம்மத் ஷாபி அவர்களால் ஒரு தீர்மானம் கொண்டுவரப் பட்டது. எப்பாகத்திலிருந்தும் இதற்கு எதிரிடையான அபிப்பிராயங்

கள் வெளிவரவில்லை. ஸர். எம். ஒடையர்கூட இதற்கு அநுகூலமாய்ப் பேச முன்வந்தார். ஆனால், எல்லோரும் ஆச்சரியப்படும் வண்ணம் ஒரே பேச்சில் படித்த வகுப் பார்களை தன்னால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு தூரம் தகாத அவதூறு மொழிகளைச் சொரிந்தார். கடைசியில் இதைச் சகிக்க முடியா பெருமை தங்கிய பண்டிதர் மதன மோஹன மாளவியா அவர்கள் அவரைத் தடுத்து மன் னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி சொன்னார். பிறகு இரா ஜப் பிரதிநிதி வேண்டுகோளால் ஒப்புக் கொள்ளவும் வேண்டி வந்தது. ஹிஸ் எக்ஸலன்ஸி இராஜப் பிரதிநிதி அவர்கள் ஸர்மைகேல் அபிப்பிராயங்களினின்றும் வில இக் கொள்ளவேண்டு மென்றும் உணர்ந்தார். ஸர்மை கேலினுடைய அப்பேச்சினின்றும் சில விஷயங்களை நாங் கள் கொடுப்போம்.

"என் மாகாணத்தைப் பற்றி நான் பேசவேண்டும் போது சீக்கிரத்தில் முன்னேற்ற மடைவதை வரவேற் பேன். (ஆனால் சுய ஆட்சிக்கு முக்கியமானவை யென்று மில் (Mill) என்பவரால் சொல்லப்பட்ட மூன்று காரணங் களை அவர் நினைந்து) அக்கொள்கைகள் வெகுநாட்களான பின்னும் நிறைவேற்றக் கூடியவை யல்லவென்று சொன் னார். அவர் மேலும் சொன்னதாவது:—இவர்கள் "இந்தி யாவின் இராஜ பக்தியையும், இந்தியாது சகாயத்தையும் பஞ்சாப் சைனியமாய் விளங்கும் இந்திய சைனியத்தின் பேருதவியையும் நினைந்து இராஜாங்க விவகாரங்களில் தலையிட விரும்புகிறவர்களானால், அந்த மாகாணத்தைப் பற்றிய பச்சாதாபத்திற்கும் சக்ரவர்த்திக்குக் காட்ட வேண்டிய இராஜ பக்திக்குமாக வாசாமாத்திரத்தில் எதை யும் காட்டாமல் படை சேர்க்கும் விதங்களில் இதர மாகா ணங்களில் உதவியைக் காட்டட்டும்."

தொடரும் மற்றொரு பத்தி, ஸர்மைகேல் படித்த வகுப்பாரிடம் மதிப்பில்லாது அதே பேச்சில் பேசிய விஷயத்தைத் தெரிவிக்கின்றது. "நாம் ஆபத்து நிலையிலிருக்கும் இக்காலங்களில் இவர்கள் இராஜாங்க விஷய உபந்நியாசங்களால் காது செவிடு படும்படியும் இராஜாங்க விஷயத் துண்டுப் பத்திரிகைகளால் பொட்டையாகும் படியும் செய்வது இடையிடையே நம் ஜன்ம பூமிக்குச் சென்று வீண் அபத்தங்களால் கலக்க மடைந்திருக்கும் நமது மனதை ஒழுங்கி படுத்திக்கொள்ள வேண்டுவதும், உழுவதே தொழிலும், விளைச்சலுக்கு விளைச்சல் கணக்குப் பார்ப்பதுமான இம்மனிதர்கள் சப்தம் போட்டு பேசும் பேச்சு என்னதான் பண்ணும் என்பதை நமக்கு நாமே கேட்டுக் கொள்வதும் தகும் எனத் தோற்றுகின்றது." இந்தப் பேச்சில் மறைந்துள்ள விஷயங்கள் மிக்க வெளிப்படையானவை. படித்த வகுப்பாருக் குண்டு பண்ணிய இவ்வருமானத்துக்குத் தான் அவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி செய்யப் பட்டார்.

சாதாரணமாய் "மன்னிப்புக் கேட்டுக் கொள்ளல்" (apology) என்னும் பதத்திற்கு அர்த்தம் என்னவென்றால் தான் பேசும் பேச்சுக்கோ, செய்கைக்கோ, ஓர்தரம் ஒருவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளப்பட்டால் திரும்ப அவர் அவ்விதம் செய்யார் என்பதற்காகும். ஸர் மைகேல் அவ்விதமல்ல. அதே வருஷத்து அக்டோபர் மாதம் 30ம் தேதி மன்னிப்புக் கேட்டுக்கொண்ட ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப் பிறகு—பின்வரும் பேச்சுக்களால் இவ் விஷயத்தைத் திரும்பவும் அநுபவரீதியில் கைக்கொண்டாரென்பது தெரியவரும்.

"சென்ற மாதம் இம்பீரியல் சட்டச் சபையில் (Imperial council) சண்டையில் பஞ்சாப் செய்த உபகா

ரத்தையும் இதர மாகாணங்கள் செய்த உபகாரத்தையும் சீர்தூக்கி மெச்சி அழுத்திச் சொன்னபோது சில ஜனங்கள் மிகை எனக் கூறினார்கள். நான் திரும்பவும் என் முன் கொள்கையை ஒட்டி, பஞ்சாப், சண்டைக்கு மனித வகையிலும், பணவகையிலும், சாமான்கள் வகையிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு உதவி செய்தது மிகச் சிலாக்கியமா யிருக்கிறதென்றும், கவர்ன்மெண்டின் பிரத்தியேக தயவை நாட ஸ்வதந்திரத்தைப் பெற்றிருக்கிற தென்றும் சொல்லி வாதிப்பேன். பரித்தியாகம் செய்ய வேண்டிய பொறுப்பை மிக்க ஏற்றுக்கொள்ள வேண்டிய பஞ்சாப் இராணுவவகுப்பார், கவர்ன்மெண்டாரிடமிருந்து மிக்க நன்மதிப்பைப் பெற்று வருகிறார்க ளென்றும், இன்னும் பெற்று வருவார்களென்றும் உறுதியாய்க் கூறுவேன். இதர வகுப்பார்களுக் குண்டுபண்ணக் கூடியதை விட அற்ப லாபத்தை இராஜாங்க அநுகூலங்கள் இவர்களுக் குண்டுபண்ணும். அவர்கள் தகுதி யென்றும், விரும்பத் தகுந்ததென்றும் மதிக்கக்கூடிய மதிப்பையும், இலாபத்தையும் நாம் எதிர்பார்க்கவேண்டி யிருக்கிறது.”

இந்தத் திருத்தப்பட்ட பேச்சில் அந்தக் குற்றம் பிரதிபலிப்ப தல்லாமல் பாழான நிலைமையில் திருத்தப்பட்டதாகவும் தெரிகிறது. ‘பஞ்சாபியர் ஒப்புயர்வற்ற உபகாரத்தைச் செய்திருக்கிறார்கள்’ என்ற,—எவரும் இதற்கு எதிர்த்துப்பேசமுடியாத—விஷயத்தை ருஜுப்படுத்த உண்மையான விஷயங்களை எடுத்துக் கொண்டதுபோல, குற்றஞ்சாட்டத் தன்பேச்சைத் திருப்பிக்கொண்டார். இதர வகுப்பார்களினின்றும் இராணுவ வகுப்பார்களைப் பிரிப்பது, அவ்வகுப்பார்கள் இராஜாங்க விவகாரங்களில் அநுபோகமற்றவர்க ளென்று குற்றஞ் சாட்டப்படுவதுபோலாகும். அவர்களுக்கு விசேஷ கௌரவங்களைக் கொடுக்க

வேண்டுமென்று அநுகூலங்களைக் காண்பித்தும் இதர வகுப்பார்களினின்றும் அவர்களை அவர் பிரிக்கப் பார்க்கிறார். நாங்கள் சொன்ன விஷயங்களினின்றும் படித்த வகுப்பார்களிடத்தில் அவருக்குள்ள அருவெறுப்பும், இராஜாங்க விவகாரங்களில் அவர்கள் தலையிடாவண்ணம்செய்ய வேண்டும் என்ற அவாது எண்ணமும் வெளியாகின்றன.

1919ம் ஸு மார்ச் மாதம் 5ம் தேதி இந்தியா கவர்ன்மெண்டாரால் வெளிப்படுத்தப் பட்ட தஸ்தாவேஜில், சீர்திருத்த விஷயமான பாகத்தை விளக்கும்போது அவர் கூறும் விஷயங்கள், படித்த வகுப்பாரைப்பற்றி வெகு தெளிவாகத் தூஷித்துத் தெரிவிக்கின்றன. 'இந்தியா முழுமைக்கும் வேண்டிய தேவை' என்று படித்த வகுப்பார்கள் விரும்புவதை விவரித்துச் சொல்லும்போது அவர் கூறுவது என்னவென்றால் :—" ஆபத்திலிருக்கிற ஜனங்களிடமிருந்து இவ்வகை வேண்டுகோள்கள் வரவில்லை யென்றும், அதிகாரத்தையும் உத்தியோகத்தையும் ஆவலுடன் விரும்புகிறவர்களும் பொறுப்பற்றவர்களுமாகும் சில மனிதர்களிடமிருந்தே வருவதாகவும் நன்றாய்த் தெரிந்தால், நாம், நம்மிடம் பொறுப்பேற்றப்பட்டுள்ள நம்பிக்கைக்கு விரோதமில்லாமல், எவ்வளவு பிடிவாதமும், கஷ்டமும் கொடுக்கக்கூடியவர்களாயிருந்தாலும் ஒன்றும் தெரியாத எல்லா ஜனங்களது க்ஷேமத்தையும் பேரிரைச்சலிடும் இராஜாங்க விவகாரிகளுக்குமுன் வைக்கவேண்டும். இங்கே பர்க்கின் (Burke) எச்சரிக்கையைக் குறிப்பிடலாம்:—

" அநேக ஆயிரம் ஆடுமாடுகள் பிரிட்டிஷ் ஓக் விருக்ஷத்தி னிழலில் மௌனமாய்ப் படுத்திருந்து அசைபோட்டிருக்க அற்ப தத்துக்கிளிகள் வயலில் இருந்துகொண்டு பேரிரைச்ச லிடுவதைப்போல் பேரிரைச்சலிடும் மனிதர்

களே உலகத்தி லுள்ளவர்கள் என்று எண்ணுதிருக்க வேண்டுகிறேன்." இந்த மேற்கோள்களில் எவ்வித கொடிய தூஷணை கூறப்பட்டிருக்கிற தென்று நாங்கள் விவரித்துச் சொல்லவேண்டிய தில்லை. உண்மையை நன்ருய் அறிந்துகொள்ளாது, அதே விஷய விவரங்களில் படித்த வகுப்பார்கள், எல்லா பொது ஜனங்களோடும் பொதுக் கொள்கைகளில் சம்பந்தப் பட்டவர்க ளல்ல வென்றும், அநேக பொது ஜனங்கள் படித்த வகுப்புத் தலைவர்களை விட்டுப்பிரிய யத்தனித்து விட்டார்க ளென்றும் கூறுகிருர். மிஸ்ஸஸ் பெஸண்ட், மிஸ்டர் திலகர், மிஸ்டர் ஜின்ணு, பெருமை தங்கிய பண்டிதர் மாளவியா மஹமதாபாத் ராஜா ஆகிய இவர்களால் எடுத்துக் கொள்ளப்படும் சுய ஆட்சியின் பிரயத்தனங்களை அலக்ஷியஞ் செய்தும் பேசுகிருர். பிராமணரல்லாதார் கிளர்ச்சியானது, ஸர்வ இந்தியா மகம்மதியர்கள் சங்கத்தையும் (All India Moslim League) மிகக் குறைவாய்க் காட்டுகிற தென்று கூறியும், திலகர், பாலர் முதலானவர்களை நாட்டுக்குள் வரவொட்டாமல் தடுத்தும், பஞ்சாப் ராஜீய உணர்ச்சி கொண்டு எழுவதைக் கண்டு விசனித்தும், தேசத்தின் முன்னேற்றத்துக் கொள்கைகள் இராஜாங்க விவகாரப் பிரசங்க வகுப்பார்களுக்கு மட்டு மல்லாது இந்திய ஜனங்கள் யாவருக்குமே உபயோகப் படுவதா யிருக்க வேண்டுமென்று பரிந்து பேசுவதுபோல் பேசியும், பின் வருமாறு சில வார்த்தைகளைக் கூறியும் தனது விஷய வாலாற்றை முடிக்கிருர் .—

"இந்தக் கொள்கையில் அழுத்திச் செல்லும்படியான ஆவசியகத்தை நான் உணர்ந்ததேனென்ருல் இந்தியா கவர்ன்மெண்டாரிடமிருந்து அதைப்பற்றிய போதுமான மதிப்பை நான் எதிர்பார்க்க முடியாதென்பதேயாகும்.

ஒருவேளை இவ்விஷயம் அங்கீகரிக்கப்பட்டதாய் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதுபோ லிருக்கிறது. ஆனால் உபகார மான அக்காரியத்தை மறைவாய் வைத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அது வெளிவாராமலிருக்கையிலேயே, தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் இது ஒன்றுதான் போல் நினைத்து, யத்தனித்த விஷயங்களைப் படித்துப் பார்க்கப்பட்டதனின்றும் எப்படிப் படித்த வகுப்பார் களின் ஓர் பாகத்தைத் திருப்தி செய்யவேண்டுமென் பது தெளிவாகிறது.

சந்தேகமின்றிப் படித்த வகுப்பார்கள் பொது ஜனங் களின் பிரதி நிதிகளாய் விளங்குகிறார்கள். ஆனால் சென்ற சிலமாதங்களாக வெளிவந்துள்ள விஷயங்களுக்குப் பிறகு இப்பாத்தியதையின் மதிப்பை வெளியிடுவது அவசிய மில்லையெனத் தோற்றுகிறது. இதை விவரிக்க ஏதாவது அநுபவ விஷயத்தை உபயோகிப்போம் — மதசம்பந்த மான கலகங்களைத் தடுத்தல், மதபேதங்களைப் போக்கல், பாதுகாப்புச் சேனைக்கும் யுத்த வீரர்களுக்கும் ஆள் சேர்த்தல்——ஆகிய இவ்விஷயங்களுக்குள் ஏதாவ தொன்றை முன்வைக்கும்போது இராஜீயவாதி, வழக்கம் போல் பின்வாங்குகிறான். நன்மையைச் செய்யத்தகுந்த செல்வாக்குப் பொதுவாய் ஒன்றுமேயில்லை. ஆனால் அவன் நியாயமற்றதும் வஞ்சகத்தன்மையதுமான கஷ்டங் களைக் கொடுக்கவுங் கூடும், கொடுக்கவும் செய்கிறான்.

"சுய ஆட்சிக்காக விவாத வழக்காய் அடிக்கடி சுதேசமன்னர்களது நாட்டில் (Native States) மதசம் பந்தமான கலகங்களில்லையென்று சொல்லப்படுகிறது. இதற்கு அனேக காரணங்களிருக்கின்றன. அவைகளுள் முக்கியமானதென்னவென்றால் இராஜீயவாதிகளென்று சொல்லப்படும் தொழிலாளிகள் அங்கே கிடையா. அப்

படி இருந்தாலும் இராஜீய விவகாரங்களில் தலையிடவிடுவ தில்லை. சுதேச சமஸ்தானங்களில் ஏற்பட்ட ஓர் சமீப மதசம்பந்தமான கலகம் எனக்குத் தெரிந்தது யாதெனில்: போபால் சமஸ்தானத்து ஸுன்னிப் பிரிவினர்களுக்கும் ஷியா பிரிவினர்களுக்கு மேற்பட்ட மதக்கலகமாகும். அது ஏற்படக் காரணம் என்னவென்றால், தன்னை விளம் பரப்படுத்திக்கொள்ள ஆவல்பெற்ற பம்பாய் மகம்மதிய வக்கீல் ஒருவர் தலையிட்டதனாலாகும். பஞ்சாப்பில் மத சம்பந்தமான சமாதானங்கள் அடிக்கடிப் பிரபலமாய்த் தோன்றினாலும் பெருங்கலகத்துக்கும் படுகொலைக்கும் ஆளாவதில்லை. ஏனென்றால் அந்த நாட்டுத் தலைவர் களுக்கு யாரைக்கொண்டு அக்கலகத்தை யடக்கலாமென் பது நன்றாய்த் தெரியவரும். அவர்கள் இராஜீயவாதிகள் அல்ல. ஆனால் உள்நாட்டுச் செல்வாக்கு வாய்ந்த சாந்த மான ஜனங்களாகும்.'' அனுபவ விவகாரங்களுக்கு இரா ஜீய வாதிகள் பிரயோஜனமில்லையென்று இந்தியா முழு மைக்கும் ருஜுப்படுத்த முயன்ற விஷயங்களை இங்குதான் நாம் பெற்றிருக்கின்றோம்.

ஸர்-மைகேலுக்கும் படித்த வகுப்பார்களுக்கும் சம் பந்தமான விஷயங்கள் அவ்வளவுதான். ஆனால் மற்றை யோரை அன்பாகப் பெருமைப் படுத்துவதாய்ச் சொல் லலாமென்றாலும் படைசேர்க்கும் விதத்தாலும், யுத்தத் துக்குப் பணம் சேகரிக்கும் விதத்தாலும் தன்னை விட்டும், கவர்ன்மெண்டை விட்டும் அவர்களை விலக்கிக்கொண்டு விட்டார். இந்த விஷயத்தைப் பற்றிப் பரிசிலனை செய்ய, நாங்கள் மிக்கத் தாங்கலான மனதோடல்லாது புகவில்லை. சண்டைக்காலத்தில் வெகு முயற்சியுடன் ஆள்சேகரம் செய்யவேண்டிய அவசியத்தையும் பணசேகரம் செய்ய வேண்டிய அவசியத்தையும் நாங்கள் உணர்ந்து கொள்கி

றோம். பிரிட்டிஷ் சாம்பிராஜ்யத்து இதர மெம்பர்களைப் போல், சமானமான பங்காளிகளாய் உரிமைகொள்ள இப்போது விரும்புகிறதுபோல் விரும்புகிறதாயிருந்தால், பிரிட்டிஷ் சாம்பிராஜ்யத்தின் முழுச்சுமையில் இதற்குண்டான முழுபாகத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டு மென்பதையுங் கூட உணர்ந்து கொள்கிறோம். ஆகவே எங்களால் கூடுமான பணத்தையும், மனிதர்களையும் சேகரம்செய்வதில் பிரயோகிக்கப்பட்ட பிரயோகங்களைப் பற்றிய வரலாறுகளை நீக்கியிருந்திருப்போம். படை சேர்ப்பதற்கு ஜனங்களும் இராணுவ வகுப்பாரும் உடனே முன்னுக்கு வருவதையும், எதிர் பாராத கலகம் பஞ்சாபில் தோன்றியதையும் அறிந்து பேசும்போது பஞ்சாபில் உண்டான பலாத்காரப் பிரயோகக் காக்ஷிக்கும், நியாயவாய்ந்த ருஜுக்களைக் கண்டு பிடிக்கவேண்டியதற்கும் காரணங்களைத் தேட வேண்டியது அவசியமாகும். ஏதோ இருப்பதுபோல் பாவித்துச் சொல்லப்பட்ட ரௌலட் சட்டத்தைப்பற்றிய எவ்விதமான தப்பபிப்பிராயங்களும் ஜனங்களது கேள்விக்குப் பதிலாகவும் அநேக ஜனங்கள் கஷ்டத்துக்குள்ளானதற்குக் காரணமாகவும் எடுத்துச்சொல்ல முடியாதென நினைக்கின்றோம்.

இராஜ்ய கடமைகளான காரியங்களில் ஒவ்வொருவருடைய புனிதமான ஸ்வயேச்சையை அவமதிக்கவும், ஹிம்சை அல்லது பலாத்காரத்தைத்தான் அறியா திருத்தலும் மறைவாகவோ, பகிரங்கமாகவோ சட்டவிரோதமாய் நடந்துகொள்வதும் தகாதகாரியங்களாகும்.

நாங்கள் சேகரித்துள்ள ருஜுக்களும், படித்துள்ள நியாயவிலாகா தஸ்தாவேஜுகளும், மொத்தமாகப் படை சேகரிப்பதிலும் பணம் சேகரிப்பதிலும் உபயோகிக்கப்பட்ட மார்க்கங்களும் நடத்தைக் குரியவும் ஆசாரத்திற்

குரியவுமான வரம்புகளைத் தாண்டிப் போயிருப்பன வாகவோ அல்லது இந்த வழிகள் ஸர்மைகேல் ஒடையா ருக்குத் தெரியாதனவாகவோ இருந்திருக்க வேண்டு மென்று தெரிகிறது. உண்மையாகவே, படையில் சேர வேண்டுமென்ற பலாத்காரமான விதியைப் பகிரங்கமாய்ப் பேசியும், ஞாபகப் படுத்தியும், ஒருசமயம் செலுத்தியும் வந்ததாய்த் தெரிகிறது. தானுய் வந்து சேரவேண்டும் என்ற விதியை விட பலாத்காரப் படுத்தல் எவ்வளவோ மேன்மையான தென்றும் கூறுகிறோம். ஏனென்றால் தானுய் வந்து சேரவேண்டும் என்ற விதியால், பலஹீனர் களும் நிஷ்பிரயோஜனமாய்ச் சேரவேண்டிவரும். நல்ல பலாட்டியர் தப்பியோட நேரிடும். பலாத்காரப் படுத்துவ தால் நல்ல பலாட்டியர் மட்டில் எடுத்துக் கொள்ளப் படக் கூடும்.

உண்மை விவரங்களை ஒருவாறு கண்ணோட்டம் செய் வோம்.

டெல்லிக்குப் போகவேண்டிய காரியக்கிரமம் ஒருவாறு முடிந்த உடனே 1918-ம் வருஷம் மே மாதம் 4-ம் தேதி கூட்டப்பட்ட மீட்டிங்கில் ஸர்மைகேல் சொன்னதாவது:- "ஒழுங்கான சைனியத்துக்கு லக்ஷம் மனிதர்கள் வேண் டும். கூடுமானுல் தானுய் தாகல் பண்ணிக் கொள்ளப்படும் முறையாலும் அவசியமானுல் பலாத்கார முறையாலுமாக வேண்டும். இதே மீட்டிங்கில் கர்னல் போபாம் யெங் என் பவர் சொன்னதாவது "முயற்சியை எவ்வாறு பங்கிடுவ தென்பதைத் தீர்மானிக்கும் பொழுது உபதேசத்தால் வழிகாட்டித் திருப்ப வேண்டியவர்களைக் கூடப் பலாத் காரப்படுத்த வேண்டுவது அவசியமான காரியமா யிருக்கி றது. தன்னிஷ்டமாய்ப் பதிவுசெய்து கொள்ளும் திட்டங் களில் நாம் இன்னும் வேலைசெய்ய முயற்சிக்கவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்துக்கும், தாலூக்காவுக்கும் கிடைக்கக் கூடிய சாமான்களைப்பற்றிய பங்குகளைத் திட்டம் செய்ய வேண்டும். பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் பலாத்காரப் படுத்தாமல் வேண்டிய மனிதர்களைப் பெறவேண்டும். கடமையைச் செய்ய தானே முன் வருபவர்களிடம் மரியாதையாய் நாம் நடந்துகொள்ளவேண்டும். அந்தந்த பாகங்களுக்குத் தலைவர்களைப்பொருக்கி யெடுக்க ஜனங்கள் தவறினால், கவர்ன்மெண்டார் முன்வந்து அவர்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பார்களென்றும் நாம் சொல்லச் சக்தி யுள்ளவர்களா யிருக்கவேண்டும்."

அதேமீட்டிங்கில் ஸர். மைகேல் ஓடையர் அவர்களே பின் வருமாறு சொல்லி யிருக்கிறார்:—"படை சேர்க்கும் விதத்தைப் பற்றிய விஷயத்தினின்றும் நான் விலகு முன்னர் பலாத்கார முறையில் படைசேர்க்கும் விதத்தைப் பற்றி நான் சொல்லவேண்டும். 5 லக்ஷம் போர்வீரர்களுக்காக, இந்தியா முழுவதுமுள்ள மனிதர்களைப் பலாத்காரப் படுத்துவார்களென்று ஒருவரும் கனவில் கூட நினைக்க மாட்டார்கள். பலாத்காரமின்றி வேறெந்த விதத்திலாவது படைசேர்க்கக் கூடுமானால் என்னைவிட அதிகமாய்ச் சந்தோஷப்படக் கூடியவர்கள் வேறில்லை யென்று நான் சொல்லக்கூடும். இதற்கு முன் தன்னிஷ்டப்படிப் பதிவு செய்து கொள்ளு முறையால் அநேகர் முன் வந்திருப்பதனின்றும் அதிகச் சிரமம் எடுத்துக் கொண்டுள்ளதாயும், அச்சுமையை எல்லா ஜில்லாக்களிலும் சமமாய்ப் பங்கிடவில்லை யென்றும், தங்கள் கடமையைச் செய்த ஜனங்கள் அவ்விதம் செய்யாதவர்களைப் பார்த்துக் கோபங்கொள்ளா திருக்கின்றார்கள் என்றும் விஷயத்தை ஊகித்துக் கண்டறிய வேண்டியிருக்கிறது. நிலச்சுவான்தார்கள் பணவிஷயத்தாலும் மனித விஷயத்

தாலும் சண்டையின் பெரும்பளுவைத் தாங்கள் தாங்கி நிற்பதாயும் மற்றவர்கள் எந்த விஷயத்திலும் ஒன்றுமே செய்யவில்லையென்றும் குறை கூறுகிறார்கள். வகுப்பார்களுக்குச் சமமில்லாப் பளுவேற்படுதல் எப்போதும் சம்பவிக்கக்கூடிய குறையாகும் மனிதர்கள் அதிகமாய் வேண்டிய நிர்ப்பந்தமும், ஆக்ஞையும் அதிகமாய் ஏற்படுமானல், இவ்விஷயமும் அதிகரிக்கும். "சிலவிடங்களில் தன்னிஷ்டப்படிப் பதிவு செய்து கொள்ளும் முறையால் வேண்டிய மனித சேகரமாகாம லிருக்கின்றது. அதை எதிரிடாதது கோழைத்தனமாகும். நாங்கள் வாக்குத் தத்தம் கொடுத்திருக்கின்றோம். அதை நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடுகளைக் காலக்கிரமத்தில் நாங்கள் கையாள வேண்டும். மாகாணத்து உட்பிரதேசத்திலும் வெளிப்பிரதேசத்திலும் நமக்கு அத்தியாவசியமாய்ச் சேர்க்க வேண்டிய மனிதர்களைச் சேகரிப்பதற்கு அனுஷ்டிக்க வேண்டிய ஒருவகையான பலாத்காரப் பிரயோகத்தை பஞ்சாபிலுள்ள ஜனங்கள் யாவரும் அங்கீகரிப்பதாய் நான் நம்புகிறேன். உதாரணமாக சமஸ்தானத்துக்கு ஏதோ கொஞ்சம் தொகையைக்கொடுத்து பத்தோ, பதினைந்தோ, இருபதோ மனிதர்கள் கூடியுள்ளவர்களுள் ஒருவரை அனுப்பி விடுதலாகும். இங்கே விஜயஞ் செய்துள்ள பெரும் பான்மையோரான ஜனங்கள் என் அபிப்பிராயத்தை அங்கீகரிப்பதாகவே நினைக்கிறேன். அஃது உண்மையானல் இதற்கு முன் அதிக பளுவைத் தாங்கி வந்த மாகாணமானது நிச்சயமாய்த் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது யுக்தமானதாகும். ஆனல் இதைப் பற்றிய தீர்மானமானது வேறொருவர் கையிலடங்கி யிருக்கிறது. ஆனல் பிரபுக்களே, உடனே இதைப்பற்றிய விஷயங்களைத் துவக்கிவிடக் கூடாது. மனிதர்களோ உடனே

வேண்டும். ஆகவே இப்போது யாது செய்யவேண்டு வது யுக்தமாய் ஏற்பட்டிருக்கிறதென்றால் மாகாணங்களுக்காகப் பகிர்ந்து கொடுக்கப்பட்ட தொகையை வசூலிப்பதில் கவர்ன்மெண்டார் அதிகாரத்தைச் செலுத்த வேண்டும். தன்னிஷ்டப்படிப் பதிவுசெய்து கொள்வதில் நாம் நினைக்கிற தொகையுள்ள மனிதர்கள் வருவதானால் அவ்வித அதிகாரப் பிரயோகங்களைப் பிரயோகிப்பதில்லை என்ற தெளிவான அபிப்பிராயங்களைக் கொண்டு எல்லா முக்கியமான முயற்சிகளையும் முதலிலேயே செய்யத் துவக்கவேண்டும்.”

இயற்கையான நிர்ப்பந்தங்களுக்குமேல் பலப்பிராப்தியாகும்படி, தொகை சேகரிக்கத்தகுந்த கொள்கைகளை வெளிப்படுத்தும் விளம்பரங்களைப் பஞ்சாப் கவர்ன்மெண்டார் விடுத்தனர். அவ்விளம்பரப் பத்திரிகையினின்றும் நாங்கள் ஒரு பத்தியை எடுத்துக் கீழ் பிரசுரிக்கின்றோம். “அநேகம் பட்டணங்களிலிருந்து நியாயமாய் எதிர் பார்க்கக்கூடிய தொகையை மதிப்பிட்டு டிப்டி கமிஷனர்கள் (Deputy Commissioners) இம்முயற்சியைக் கொண்டுள்ளவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று நான் ஞாபகப்படுத்துவேன். இவர்கள் இவ்வாறு செய்வதால், பிரத்தியேக உத்தியோகஸ்தர்களால் இப்போது புனர் பரிசீலனை செய்யப்பட்டுவரும் வருமான வரிக்கணக்கில் மிக்க உதவியைப் பெறுவார்கள். வருமான வரிக்கணக்கு, யுத்தக்கடன் கொடுக்கக் கூடியவர்களாய்க் கருதப்படும் மனிதர்களுக்குத் தக்கபடி நம்பத்தகுந்த விதத்தில் அவர்களது செல்வநிலைமையையும் தெரிவிக்கின்றது. சில ஜில்லாக்களில் ஏற்கனவே விதிக்கப்பட்டிருப்பதாய் நம்பப்படும் ஓர் மதிப்பான அளவையும் அக்கணக்குத் தெரியப்படுத்துகிறது. அதில் அவர்கள் செலுத்தியுள்ள பங்கின் அள

வைக்கொண்டு பார்க்கும்போது வருமானவரி கொடுப் போர் சகட்டுக்கு வருமானவரி விதிக்கப்படும் தொகை யில் பாதியிலிருந்து கால்பங்கு அளவாவது யுத்தக்கட ஞகக் கொடுக்கக்கூடுமென்று எதிர்பார்ப்பது நியாய மெனத் தோற்றுகின்றது. அவரவர்கள் ஸ்தல நிலைமைக் குத் தகுந்தபடி இவ்விதமான கணக்குகளையாவது, வேறு கணக்குகளையாவது பிரயோகித்து டிப்டி கமிஷனர்கள் தங் கள் கிராமங்களிலும், பட்டணங்களிலும் உள்ளநபர்கள், எதிர்பார்க்கத் தகுந்தவண்ணம் உதவி செய்கிறார்களா வென்று பார்த்தறியக்கூடிய சக்தியுள்ளவர்களா யிருக்க வேண்டும்.

பிறகு டிப்டி கமிஷனர்கள் தனிக் கூட்டங்கள் கூட்டி ஸாவ்காரிகள் (Sahukars) அடங்கிய லோகல் கமிட்டி (Local Committee) களை எற்படுத்தியும் இன்னும் சில இதைப்போன்ற உபாயங்களாலும் எதிர்பார்க்கப்பட்டத் தொகை அதமபக்ஷத் தொகையாகப் பெறமுயலவேண் டும். வியாபாரிகளும் இதரர்களுமடங்கிய லோகல் கமிட்டி யார், நியாயவிலாக அதிகாரிகளது தலைமையின் கீழ் தாசில்தார்களோடு கூடி கடன்பாவ விபாவங்களைப்பற்றி ஓர்வித முடிவுக்குவரச் சக்தியுள்ளவர்களாவார்கள். பட் டணங்கள் ஒவ்வொன்றும் உபகரித்த தொகைகளையும், ஒவ்வொரு ஜாதியார்களும் உபகரித்த தொகைகளையும் பற்றி கணக்குகள் உடனுக்குடனே வெளிப்படுத்திச் சீர் தூக்கிப் பார்த்து போட்டி போடும்படிசெய்து பணஞ் சேகரிக்கவேண்டும். ஸன்னத்துக்கு (Sanads) த்தகுந்த வண்ணம் பணங்கிடைப்பதா யிருந்தால் வாக்குத்தத்தம் செய்தும், உத்தியோகத்துக்குத் தகுந்த வண்ணமும், பிரத்தியேக யோக்யதா பத்திரங்களுக்குத் தகுந்தவண் ணமும் பணம் கிடைப்பதாயிருந்தாலும் வாக்குத் தத்தம்

செய்தும் உதவிசெய்யப்படலாம். இது தவிர தமது கடமைகளை, இதுவிஷயத்தில் செய்யத் தவறுகிற பணக்காரர்களான பட்டணத்தார்களுக்கு, முனிசிபல் கமிட்டிமெம்பர் ஸ்தானங்களிலும், கௌரவ மாஜிஸ்டிரேட் உத்தியோகங்களிலும், இதுபோன்ற இதர கவர்ன்மெண்ட் நன்மதிப்புகளிலும், கவர்ன்மெண்டாருக் கநுகூலமாய் உதவிபுரியும் நபர்களுக்கே உதவிசெய்யப்படலாமென்ற கொள்கைகளை நன்ருய்த் தெரியப்படுத்திப் பார்க்கவேண்டும்." இதற்கிணங்க கீழ்தர உத்தியோகஸ்தர்கள் ஜனங்களைத் தொந்தரவுசெய்ய ஆரம்பித்தனர். ஒருகடிதம் அம்பாலா ஜில்லாவிலுள்ள ஒரு விலாசத்தாருக்கு "ஒருவாரத்துக்குள் ஸப்ஜட்ஜ் லாலா ரன்ஜிலால்மூலமாய் யுத்தக்கடனில் எவ்வளவு தொகை போடக்கூடுமென்பதை இவ்விலாசதார் டி. ஸி (D. C. or Deputy Commissioner) க்குத் தெரியப்படுத்த வேண்டும்" என்று எழுதப்பட்டிருந்தது. இதனிலடங்கும் பொருள் வெளிப்படை.

நியாய விவகாரங்களில்கூட இவ்விஷயங்கள் அநுஷ்டானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சாக்வால் நகர முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட் தனது 1917ம் ௵ 82-ம் நெம்பர் கிரிமினல் வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளியைப் பின்வருமாறுசொல்லி விடுதலை செய்துவிட்டார். "இக்குற்றவாளியும் இவரது சகோதரரும் "நமது தினநிதி" (Our Day Fund) க்கு ரூபா 110-உபகரித்திருப்பதாலும் வாய்மொழியான ராஜியும் ஏற்படுத்தப்பட்டுள்ளபடியாலும் இக்குற்றவாளி விடுதலை செய்யப்பட்டிருக்கிருர்." அதே நியாயஸபையில் (Court) 1917ம்௵ 36-நம்பர் வழக்கில், வருமான வரிவஜா சம்பந்தமாய் டௌலட்ஸிங்கின் புத்திரரான மேஹர் ஸிங்க் மனு செய்துகொண்டிருக்கிருர். மாஜிஸ்டிரேட் அந்த

மனுவைத் தள்ளுபடி செய்தபோது இதரவிஷயங்களைப் பற்றியும் குறிப்பிட்டார். "சண்டையால் கோவேறு கழுதைகளிலிருந்து கிடைக்கும் இலாபம் அதிகம். இந்த மனுதார் யுத்தக் கடனுக ஒரு தம்பிடியும் கொடுத்தவரல்ல. படைக்கூட்டத்தில் பதிவுசெய்துகொள்ளத்தகுந்த ஒரு புத்திரனையும் பெற்றிருக்கிறார்." முஜபர்கிரகம் ஜில்லாவில் வீஹியா என்ற கிராமமிருக்கிறது. அங்கு ஒரு பெருங் கூட்டத்தார் நேயப் தாசில்தார் விடுதியைச் சூழ்ந்துகொண்டார்கள். கிராமாந்தரப் போலீஸார்களையும், கூலியாட்களையும் தாக்கினர். சில ஜனங்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் 52-பேர்கள் "இன்டியன் பினல் கோட்" 147வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டி விஜாரிக்கப்பட்டனர். அப்பீல் விவகாரம் நடந்தபோது செஷன்ஸ் ஜட்ஜ் சிலரை விடுதலை செய்து விட்டனர். சிலருடைய தண்டனைகளைக் குறைத்தனர். பிரஸ்தாப ஜட்ஜாகிய மிஸ்டர் கோல்ட்ஸ்டிரீம் (Coldstream) அப்போது சொன்னதாவது, "ஜனங்கள் தாங்கள் சொல்ல விரும்பும் விஷயங்களுக்கு உண்மையான சங்கடத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்" மேலும் அவர் "யுத்தக் கடனைப் பெறவும் படை சேர்க்கவும் பொறுப்பு வாய்ந்த ஸெயில்தார்களும் (Zaildars) லாம்பார்தார்களும் அநுஷ்டித்த வழிகளாலும், முஜபர் கிரகம் ஜில்லா கீழ்தர உத்யோகஸ்தர்கள் கொண்ட முயற்சிகளாலும் அநேக விடங்களில் மிகுந்த அதிருப்தி ஏற்பட்டிருப்பதாய் நன்ருய்த் தெரிகிறது. இம்முறைகள் அதிகாரிகளது அநுமதியால் கையாளப் படாதன வென்பதும், குற்றமுள்ளன வென்பதும், கவர்ன்மென்டார் நோக்கத்துக்கு விரோதமானவை யென்பதும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். தொலை தூரமானப் பிரதேசங்களில் ஜனங்களால் சகிக்க

முடியாதனவாய்க்கூட இம்முறைகள் இருப்பதாய்த் தெரிகிறது. பிரஸ்தாப வழக்கைப்போன்ற விவகாரங்களில் பிரதிவாதிகளாக ருஜூவுக்கு எடுத்துக்கொள்ள எதிர்பார்ப்பது மிக்க அசம்பாவிதமான காரியமாகும். வழக்காக எடுத்துக் கொள்ளப்பட்டால் நிச்சயமாய் ருஜூவாகிவிடும். நியாய விலாகா சம்பந்தமான விவகாரங்களினின்றும் நான் விலகும்படி நேரக்கூடிய சங்கடங்கள் ஏற்பட்ட போதிலும், நியாயத்தை உத்தேசித்து விளக்கப் புகுவது அவசியமா யிருக்கிறது. இதற்குமுன் நான் சொன்னது போல், இப்போது நான் சொல்லியிருக்கும் உண்மை விஷயங்கள் என்னவென்றால் சாதாரண புத்திக்குரிய விஷய விவரங்களே யாகும்.” நியாயாதிபதி அபிப்பிராயங் கொண்டது என்னவென்றால் பலாத்காரப் பிரயோகங்கள் யாவும் கவர்ன்மெண்டார் நோக்கத்துக்குப் பிரதிகூலமானவை என்பதாகும். நாங்கள் பிரயாணஞ் செய்த ஒவ்வோரிடத்திலும், ஜனங்களைத் தொந்தரவு செய்த உத்தியோகஸ்தர்கள், இகழ்ந்துரைக்கப் பட்டும் பகிரங்கமாய் அவதூறு செய்யப்பட்டும் வரப்படுவது மன்றி, சில விவகாரங்களில் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டும் வருகின்றனர்.

ஷஹபுரி ஜில்லாவில் ஒரு தாசில்தார் அநியாயமாய்க் கொல்லப்பட்டும் போய்விட்டார். அவ் வழக்கை விசாரிக்க ஒரு பிரத்தியேகக் கமிட்டியும் ஏற்பட்டது. 46 குடி ஜனங்கள் தண்டனை விதிக்கப்பட்டனர். அவர்களில் நால்வர்க்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 12 பேர்களுக்கு தீபாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டது. 8 பேர்கள் விடுதலை பெற்றனர். 12 பேர்கள் கடைசியில் விடுதலையடைந்தனர். மேற்குறித்த விஷயங்களை நாங்கள் எடுத்துக்கொண்ட ஸர் மைகேல் ஓடையரது விளம்பரத்தில்

கூறியிருப்பது என்னவென்றால், 'காலஞ்சென்ற ஸையத் நாதர் ஹூஸேன் என்பவரால் ஜனங்கள் ஹிம்ஸிக்கப்பட்டார்கள் என்று வீண் அபவாதம் கூறப்பட்டிருக்கிறது. நிதிச் சபையார்கள் குற்றத்தை விருத்திப் பண்ணக்கூடிய வளவில் எந்த உண்மை விஷயங்களையும் ருஜூப்படுத்த பிரதிவாதிகளுக்கு இடங் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கிருந்தும் இவ் விஷயங்களெல்லாம் பலாத்காரப் பிரயோகங்களுக்குள் அடங்கும். அவருக்கு விரோதமாய் எதுவும் ருஜூவாகவில்லை. எந்த அகௌரவமான குணங்களாலும் அவர் கியாதி கெட்டுப் போகவில்லை யென்றும் நியாய சபையார் அபிப்பிராயங் கொண்டிருக்கின்றனர்."

எங்கள் அபிப்பிராயத்தில் அநுஷ்டிக்கப்பட்ட பலாத்காரப் பிரயோகம் அதன் சொந்த தண்டனைக்குரியதாயிருக்கிறது. ஆனால் விசாரணை காலத்துக் கொண்டுவரப்பட்ட ருஜூக்களை ஸர்-மைகேல் ஒடையார் அவர்கள் படித்திருக்கவேண்டும். இறந்தவர் தரப்பில் மகமத்கான், வாதியாய் நின்று வாக்குமூலம் படித்தது யாதெனில், "பட்வாரியால் (Patwari) தயாரிக்கப்பட்ட ஒரு கிராமத்து எல்லாமனிதர்களின் பெயர்களடங்கிய ஒரு பட்டியை ஒரு தாசில்தார் வைத்துக்கொள்ளவேண்டும். இதன்மேல் அவர் செய்யவேண்டிய வழி என்னவென்றால், அந்தப் பட்டி (List) வந்ததும் கிராமத்துக்குச்சென்று அவர் தேர்ந்தெடுக்கும் மனிதர்களைப் பெறுவதில் தடையிருக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டுவதாகும். ஒரு குடும்பத்தில் மூன்று அல்லது நான்கு நபர்களிருந்தால் சண்டை சைனியத்துக்காக ஒருவர் இருவரை கொடுத்துதவக் கேட்கவேண்டுவது அவரது கடமையாகும்———குர்ஞவுக்குப் பக்கத்துப் பாகத்திலிருந்து (சைனியத்துக்காகப் பிடிக்கப்பட்டுக்) கைவிட்டு ஓடிய மனிதர்களையும் அவர்

அடைந்தார். அம்மனிதர்கள் காவலுடன், படை சேர்க்கும் உத்தியோகஸ்தரிடம் அனுப்பப்பட்டனர். அந்தப்பட்டியிலடங்கிய பல பெயர்களைப் பொருக்கியெடுக்கப்பட்டவர்களாக அத்தாசில்தார் குறித்துக்கொண்டார்——— தாசில்தார் வருவதைக் கேட்டவுடனே இந்த இலாகா ஜமீன்தார்கள் வழக்கப்பிரகாரம் ஓடிவிட்டனர். அவர்கள் தாசில்தார் முன்னிலையில் வரும் வழக்கமுமில்லை வருவதற்கும் பயப்படுவார்கள்." பிரத்தியேக நியாய விசாரணைச் சபைத் தலைவர் தன்னுடைய குறிப்பில் பின்வரும் விஷயங்களைக் குறித்திருக்கின்றனர்:—

"நாதிர் ஹுஸைன்ஷா சேனையில் சேரும் வழக்கமில்லா அநாகரிக ஜனங்களைச் சேனைக்கழைக்கப் பிரயத்தனம் செய்ததில் மிதமிஞ்சிய பிடிவாதத்துடனும் யுக்தியற்ற துறையிலும் இருந்து விட்டார். ஜனங்களும் சைனியத்தில் சேருவது உசிதமெனத் தாங்கிப்பேசச் சக்தியற்றவர்களுமானார்கள். பிப்ரவரி மாதம் 6-ம் தேதி பாட்வாரி, (Patwari) பாக்ஹூர்க்கான் கிராம ஜனங்களது பெயர்ப் பட்டியைத் தயார் செய்தனர். கவர்ன்மெண்டார் அந்த மனிதர்கள் பெயரை உறவினர், வயது முதலியவைகளோடும் தெரியப்படுத்தினர். ஆகவே பிப்ரவரிமாதம் 6-ம தேதி சைனியத்தில் அவர்கள் சேர்க்கப்படப் போகின்றார்களென்று மனிதர்கள் கண்டுகொண்டு கலக்கம் கொண்டனர்."

ரெவினியு அஸிஸ்டெண்டான கான் ஆமத் ஹுஸேன் கான் அவர்கள் கோர்ட்டார்முன் கூறியதாவது:—"அவர்கள், ஸ்திரீகள் முன்பாக சிலமனிதர்களை நிர்வாணத்தோடு நிற்கும்படி அவர் செய்ததாக நான் கேள்விப்பட்டேன். ———முட்களால் எந்த ஸ்திரீயையும் உபத்திரவப்படுத்தப்பட்டதாய் நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் முட்

புதர்கள் மத்தியில் மனிதர்கள்தான் வைக்கப்பட்டிருந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஜூன்மாதத்தில்தான் இவ்வகையான விவரங்களைக் கேள்விப்பட்டேன். நான் ஒரு பொழுதும் இதைச் செய்ததில்லை. நான் மேல்சொன்னவையாவும் ஸெயில்தார்களாலும், இதர ஜமீன்தார்களாலும் சொல்லிக் கேள்விப்பட்டவைகளே. கௌராகாட்டிலும் (ஒருவேளை குர்ஜுவாயிருக்கக் கூடிய) ஏதோ பட்டாணிக் கிராமத்திலும் ஸ்திரீகள் ஹிம்சை செய்யப்படுகிறார்கள் என்பதை ஹஸாரி மியாணியைச் சார்ந்த குலாம் மகம்மத் எனக்குக் கூறினார். ஏதோ சில ஸ்திரீகள் மித்ரான்ஜாவுக்கும் பிறகு அவ்விடமிருந்து புல்வாலுக்கும் தன்னினத்தார்களை படையில் சேர்ப்பதற்கோ, படையினின்றும் விலக்குவதற்கோ தூண்டுதல் செய்யக் கொண்டுபோகப்படப் போவதாயும் அவர் சொன்னார். தாசில்தார்களுடைய இனத்தார்கள் ஒடியொளிந்தவர்களுடைய வீட்டைக் கொள்ளையிட்டும் வயலில் மாடுகொண்டு மேய்த்தும் விட்டார்களெனக் கேள்விப்பட்டேன். பூஷாகாலன் கிராம ஷெர் ஆலி என்பவர் வசம் 15,000 - முதல் 17,000 - ரூபாய்கள் வரையில் தாசில்தாருடைய சேகரத் திரவியம் இருந்ததாய் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். இத்தொகை படை சேர்க்கும் விதத்தில் லஞ்சமாக வாங்கப்பட்ட தொகையெனவும் தெரிவிக்கப்பட்டது. ஷெர் ஆலி என்பவர் இத்தொகையை அபகரித்துக் கொண்டதாயும் கேள்விப்பட்டிருக்கிறேன். கிராமத்தார்களுடைய மனவேதனையெல்லாம் படைசேர்க்கும் விஷயத்தைப் பற்றியதுதானாகும். அவர்கள் படையில் சேர்வதில் இஷ்டப்படவில்லை. ஜூன் மாதத்தில் குல்லாப்பூர் (Ghullappur) கிராம இரண்டு ஸ்திரீகள், தொந்தரவு செய்யப்பட்டார்களென்று

பிறகு கேள்விப்பட்டேன். சானி சேஹன் ஜனங்களில் பெரும்பாலோர் ஓடி யொளிந்து கொண்டார்களென்று கண்டு அவர்கள் வயல்களை மாடுகொண்டு மேய்த்ததால் ஓடி யொளிந்து கொண்ட ஜனங்கள் திரும்பி வந்து விட்டார்களென்றும் தாசில்தாரே என்னிடம் சொல்லியிருக்கிறார்.” கோர்ட்டார், இயற்கையில் இறந்து போனவரால் ஹிம்சை எற்பட்ட தென்பது ருஜுப்படுத்தப்பட்ட தென்பதைக்காண அடக்கிக் கொண்டார்கள். அவர்கள் சொன்னதாவது, “எங்கள் வேண்டுகோளுக் கிணங்கி தாசில்தாருடைய நடத்தையைப் பற்றி அவர் கேள்விப்பட்டதை யெல்லாம் ரெவினியு அஸிஸ்டண்ட் கான் ஆமத்கான் கூறினர். ஆனல் எங்கள் முன்னிலையிலுள்ள ருஜுக்களினின்றும் தெரிவது யாதெனில் படைசேர்க்கும் விதங்கள் யாவும் பலாத்கார மானவையே என்பதாகும். தாசில்தாரால் ஹிம்சைப் படுத்தப் பட்டதாய் விஷயங்கள் எதும் ருஜுவாகவில்லை.” இதன்மேல் கவர்ன்மெண்டார் கடிதப் போக்கு வரவு கூறுவது யாதெனில் “அவர் ஜனங்களைத் தொந்தரவு செய்யவுமில்லை அவர்களது உணர்ச்சியைக் கிளப்பவுமில்லை” என்பதாகும். அவ்வித எந்த விஷயங்களையும் உறுதிப் படுத்தத் தகுந்த ருஜுக்களை கோர்ட்டார் வைத்துக் கொள்ளவில்லை. இதற்கு மாருக கோர்ட்டாருக்கு ரெவினியு அஸிஸ்டெண்டால் கொடுக்கப்பட்ட வாக்கு மூலத்தின்மேல் கவர்ன்மெண்டார் உண்மையைப் பெற விரும்பியிருந்தால், கொலைக்குற்ற விசாரணை நடத்தப் பிரயத்தனப்பட்டிருப்பது மட்டுமல்லாமல் எவ்வாறு ஹிம்சை கொடுக்கப்பட்டது என்பதைப் பற்றியும் விஷய பரிசீலனை செய்யவும் முன் வந்திருப்பார்கள்.

நேரிடச் செய்ததாய் ருஜுவாகக்கூடிய சில ருஜுக்களை நாங்கள் சேகரம் செய்திருக்கிறோம். அவைகள் மிக

வும் கடுமையானவைகள் ஆகையால் எங்கள் ரிப்போர்ட்டோடு வெளியிடப் பின் வாங்குகிறோம். அவ்வகையான விஷயச் சேர்க்கைகளுக்கும் மிஸ்டர் காந்தியே ஜவாப்தாரி ஆதலால் அவரே அது விஷயத்தைப்பற்றி கவர்ன்மெண்டாரோடு கடிதப் போக்கு வரவு வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

மற்றோர் வழக்கில் அதே ஜில்லாவில் சில ஜனங்கள் ஒரு கிராமத்தைச் சுற்றி நின்று ஏழு மனிதர்களைக் கைது செய்ததைத் தடுத்ததாய்க் கூறப்படுகிறது. அவர்கள் சுடப்பட்டார்கள். அதனால் பலர் உயிர் துறந்ததாயும் சொல்லப்படுகிறது. படைசேர்க்கும் விதத்தில் இஷ்டப்படாததற்குத் தடுத்ததாய்ப் பிரதிவாதி தரப்பில் சொல்லியதைக் கோர்ட்டார் ஏற்காது தள்ளி விட்டனர். பலாத்கார வகைகள், ஜனங்கள் சுடப்பட்டதாலும் ஜனங்கள் எதிர்த்ததாலும் ருஜுவாக இடமாயிருக்கின்றன.

முல்தான் பாகத்தைச்சார்ந்த காபிர் வாலதாஸிலில், கோர்ட் ஆவ் வார்ட்ஸ் (Court of Wards) என்னும் சொத்து ரக்ஷணஸபையாருக்குக் கீழ்ப்பட்டுள்ள ஒரு சமஸ்தான மானேஜர் கிஜிகூட்டத்தாரில் சிலரை படைக்கழைக்கச் சென்றார். அப்போது கலகம் ஏற்பட்டு அநேகர் கொலை யுண்டனர். பப்ளிக் ப்ராஸிகூடர் என்னும் உத்யோகஸ்தர் மானேஜர்மேல் வழக்குக்கொண்டு வந்தனர். 'மானேஜர் ஏன் அந்தக் கூட்டத்தார்களை யழைக்க வேண்டுமென்றும், எதற்காக, ஏன் அவர்கள் கலகஞ் செய்யவேண்டுமென்றும்' இவ்வழக்குத் தெரிவிக்கின்றது.

ஸர்மைகேல் ஒடையரால் வெளியிடப்பட்ட படைசேர்க்கும் விவரப்பட்டியினின்றும் சில விடைமொழிகளை நாங்கள் பெற்றிருக்கின்றோம். 1917-ம்வருஷ டிசம்பர் கடைசியில் வெளிவந்த முல்டான் ஜில்லாவைச்சார்ந்த

படைசேர்க்கு விவரப்பட்டியினின்றும் மொத்தப் புருஷர்களில் 586-பேருக்கு ஒருவர் வீதம் 759-நபர்கள் சேர்ந்துள்ளதாய்த் தெரிகிறது. 1918-நவம்பர் கடைசியிலோ 93-க்கு ஒருவர்வீதம் 4636-நபர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். இவ்வளவு விருத்தியாம் சத்துக்குக்காரணம் பலாத்காரப் பிரயோகம்தானெனத் தெரிகிறது. கமிஷனர் சொன்னதாவது :—“ சிலர் தவிர பெரும்பான்மையான ஜில்லாத்தலைவர்கள் தங்கள் கடமையைச் செய்யவில்லையென்பதைக்காண எனக்குப் பயமாயிருக்கிறது. தங்கள் குடும்பத்திலுள்ள மனிதர்களில் சிலரைப் படையில் சேர்ப்பதற்குப் பதிலாகத் தாழ்ந்த வகுப்பார்களைப் பணம் கொடுத்துச் சேகரிக்கவோ பலாத்காரப் படுத்தவோ செய்தனர். சில தலைவர்கள் குற்றமுள்ள மார்க்கத்தில் பலாத்காரப்படுத்தவும் துணிந்தனர். இதனுல் சில விடங்களில் கலகமும் ஏற்பட்டது. கவர்ன்மென்டார் உத்தரவுக்கு விரோதமாய் ஒரு ஜில்லாவாசிகளை மற்ருெரு ஜில்லா வாசிகளாகத் திருட்டுத்தனமாய்க் குறித்து அவர்கள் அநேகரைப் பதிவுசெய்யவும் செய்தனர் ” இவ்விதமிருக்க ஸர்மைகேல் ஓடையர் அவர்கள் “ பலர் சைனியத்தில் பதிவு செய்துகொண்டும் ஓடிவிடுகிருர்கள் சிலரே யுத்தகளத்தில் விரோதிகளை எதிர்க்கின்றனர் ” என்று வருந்தும்படியானது ஆச்சரியமல்ல.

அம்பாலா டிவிஷன் கமிஷனர் அவர்கள் தெரிவித்தது யாதெனில் “ குறிக்கப்பட்டத் தொகையளவு ஜனங்களைச்சேர்க்க சிறுவர்களுக்கு அதிகப் பணம் உபகரித்து ஜனங்களுக்கு இடமுங் காட்டிவிட்டனர். இவ்வாறு கொடுக்கப்பட்ட தொகை ஒவ்வொருவருக்கும் ரூபா 500-முதல் 1000-வரையிலானதாகும் ”

மற்ருெரு வழக்கம் யாதெனில் (Indian Penal

Code) இந்தியன் பினல் கோட் என்னும் சட்டப் புத்தகத்திலடங்கிய 1(9-அல்லது 110-வது செக்ஷன்படி மனிதர்களைக் கெட்ட நடத்தை யுள்ளவர்களாகப் பாவித்து நல்ல நடத்தை ஜாமீனாக பணங்கட்டவேண்டியதோ அல்லது படையாட்களாகப் பதிவுசெய்துகொள்வதோ என்பதாகும். 1917-ம் வருஷத்து கிரிமினல் நியாய விலாகா (Criminal Justice) ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருப்பது யாதெனில் :—" இவ்வருஷத்தில் ஜில்லா மாஜிஸ்டிரேட்டார்கள் படைசேர்க்கும் வேலையில் தங்கள் காலத்தில் பெரும்பாகத்தைச் செலவிட்டிருக்கின்றனர். இந்தியன் பினல்கோட் 110-வது செக்ஷன்படி ஜாமின் கொடுக்கவேண்டிய நபர்கள் மிக்கக் குறைந்திருப்பதன் காரணம் பெரும்பாலும் சண்டைக்கு ஆள்சேர்த்ததனாலாகும்" கார்னல் ஜில்லா வைச்சார்ந்த கிராமத்துக்கு ஒரு உத்தியோகஸ்தர்போய் படையாட்களாகத் தாமேவந்து சேரும்படி அநேக பையன்களைத் தூண்டினர். இவ்வகைப் பையன்களுள் ஒருவனது தந்தை மாஜிஸ்டிரேட்டினிடம் போய்த் தனது ஒரே பிள்ளையைத் தன்னைவிட்டுப் பிரிக்காமலிருக்கும்படி வேண்டினர். மாஜிஸ்ட்ரேட் இணங்கவில்லை. கலகத்துக்குக் காரணமான கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இந்தியப் பாதுகாப்பு சட்டப் (Defence of India Act) படி சிலர் கைது செய்யப்பட்டனர். ஐந்து பேர்கள் தண்டனை விதிக்கப்பட்டனர். இத் தண்டனை அப்பீலில் ரத்து செய்யப்பட்டது. இவ் வழக்குத் தீர்ப்பினின்றும் வெளி வந்திருப்பது யாதெனில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ஹாமில்டன் என்பவருடைய வெளிப்படையான உத்தரவுகளால் கீழ்க் கோர்ட்டார் அவ்விதம் நடந்துகொண்டனர் என்பதாகும். அப்பீல் கோர்ட்டார் சொல்வது யாதெனில், "அடிக்கடி ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டா

ரால் வெளிப்படுத்தப் பட்டுள்ள உத்தரவுகளைப் பார்க்கும் போது, அவரால் ஏற்கனவே உத்தரவிடப்பட்டப் பிரகாரம் அக் கிராமத்தினின்றும் 20 நபர்கள் வரவேண்டியதில் இந்தக் குற்றவாளிகளும் தங்கள் நெருங்கிய பந்துக்களிலிருந்துமனிதர்களைப் படைக்கு அனுப்பி யிருந்தாலாவது தாமே படையில் சேரத் தகுந்த சக்தியுள்ளவர்களாக விருந்தாலாவது விடப்பட் டிருந்திருப்பார்கள்." உண்மையாகவே இருபது ஆட்களும் படைக்குக் கொடுக்கப் பட்டனர். ஆனால் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அவர்கள் குற்றவாளிகளிடமிருந்தே இருபது பெயர்களையும் பெற விரும்பினர்.

1917ம் ஹு குஜரான் வாலாவில் ஸர் மைகேல் ஒடையர் அவர்கள் படைசேர்க்கும் பலனைக் கண்டு திருப்தியடையாமல் ஜனங்களுடைய அசிரத்தையைக் கண்டு அவதூறு செய்ய விருப்பமுங் கொண்டனர். வேண்டுமென்றோ அல்லது தற்செயலாகவோ டிப்டி கமிஷனர் ஸ்தானத்தில் கர்னல் ஒப்ரீன் வந்தனர். அதனால் படைசேர்க்கும் தொகை அதிகமாக யத்தனித்தது. குஜரான் வாலாவில் 1918ம் ஹு ஆகஸ்ட் மாதம் கூட்டப்பட்ட தர்பாரில் படை சேர்க்கப்பட்டதா லேற்பட்ட பலனைப் பின் வருமாறு சுருக்கிக் கூறினர்.: "ஒரு வருஷத்துக்கு முன் குஜரான் வாலாவில் 3888 மனிதர்கள் சைனியத்துக்கு வந்தனர். அதாவது மொத்தப் புருஷத் தொகையில் 150க்கு ஒருவரே ஒருவர்தான் வந்தவராகும். இது மிகுந்த திருப்தியான முறைகளால் ஏற்பட்ட பலனாகும். இவ்வளவு பலனும் கியாதி பெற்ற ஜில்லா சண்டைச் சபை (District War League) யினரது நன் முயற்சியாலும்; டிப்டி கமிஷனர் கர்னல் ஒப்ரீன், அவரது உதவி உத்யோகஸ்தர்கள் ஆகிய இவர்களது நன்முயற்சியாலும், ஜில்லாப் படை சேர்க்கும் உத்தியோகஸ்தர், மேஜர் பார்னஸ், அவ

ரது உத்யோகஸ்தர்கள் ஆகிய இவர்களது பின்பலத்தா லும் ஏற்பட்டவையாகும்.

குஜரான்வாலா, மணியன்வாலா, சுஹர்கானு, ஹாபிஜா பாத் ஆகிய இவ்விடங்களி லிருந்தும் இன்னும் பற்பல விடங்களிலிருந்தும் எங்களுக்கு வந்துள்ள பிரத்யக்ஷப் பிரமாண வாக்குமூலங்களி லடங்கியுள்ள வழிகளால் இப் பலன் ஏற்பட்டதாகும்.

எங்களால் சேகரிக்கப்பட்டு அநுபந்தத்தோடு அச்சி டப்பட் டிருக்கும் வாக்குமூலங்களி லிருந்து ஒரே ஒரு சிறந்த வாக்குமூலத்தை எடுத்துக்கொண்டு அதனின்றும் சில விஷயங்களைக் கூறுகிறோம். வாக்குமூலங்களைச் சேக ரிப்பதற்காகப் பிரத்தியேகமாய் நியமனம் செய்யப்பட்ட மிஸ்டர் லாப்ஸிங், எம். ஏ., பார்-அட்-லா அவர்கள் முன்பு குஜரான்வாலா ஜில்லா, ராதாளியினது பங்காளியான ஸர் தார்கான் கொடுத்த வாக்குமூலம் என்னவென்றால் :—

“ வைகாசிமாதம் தாசில்தார் எங்கள் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். அன்று இரவு, மறுநாள் காலை கிராம வெளிமுன்பு நாங்கள் யாவரும்வந்து சேரவேண்டு மென்று அவரால் பறை யறை செய்விக்கப்பட்டது. அது அறுவடை காலமாயிருந்தபடியாலும், படையாட்களாய் எல்லோரும் கொண்டுபோகப் படுவார்களென்ற பயத்தா லும்மிகச் சிலரே காலையில் ஆங்குவந்தனர். ஆகவே தாசில் தார் 60-அல்லது 70-பேர்களை அபராதப்பணம்கொடுக்கும் படி செய்தார். இவ்வாறு வசூல் செய்யப்பட்ட பணம் 1,600-ஆகும். அவ்விடத்திலிருந்து 18-மைல் தூரத்தி லுள்ள குஜரான்வாலா, தலைமை ஸ்தானத்துக்கு ஜனங்கள் யாவரும் வந்து சேரும்படி அவரால் உத்தாவிடப்பட்டார் கள். குறித்த தினத்தன்று ஜனங்கள் யாவரும் ஆங்கு போய்ச் சேர்ந்ததும் யாவரும் வரிசையாய் நிறுத்தி

வைக்கப்பட்டார்கள். அவர்களினின்றும் ஏழுபேர்கள் பொருக்கி யெடுக்கப்பட்டார்கள். இவையாவும் தாசில்தார் பாடேகான் (Fatah Khan) என்பவரால் நடத்தப்பட்டதாகும். இதரமனிதர்கள் அவதூறு செய்யப்பட்டும், அடிக்கப்பட்டும் இன்னும் அநேக படையாட்களைக் கொண்டுவரும்படியும் உத்தரவிடப்பட்டார்கள். (வாக்குமூலம் நெ. 591)

ஸியால்கூர் வக்கீல், ஸர்தார் ஸன்ட் ஸிங் அவர்கள் படை சேர்க்கும் விதம், யுத்தக் கடன் வசூலிக்கப்பட்ட வழிகள் ஆகிய இவைகளைப்பற்றி இவ்வாறு சுருக்கிக் கூறுகிறார் :—

"இந்த ஜில்லாவில் யுத்தக்கடன் கொடுக்கும்படி ஜனங்கள் பலாத்காரப்படுத்தப்பட்டார்கள். தங்களுக்குக் கௌரவம் சம்பாதித்துக்கொள்ள கௌரவப்பட்டம் பெற விரும்புவோர் பொது ஜனங்களிடமிருந்து யுத்தக் கடனை வசூலித்தார்கள். ஏறக்குறைய ஒருகாணி நிலவளவு கொண்ட சதுரத்துக்கு ரூபா 33-வீதம் பலாத்காரமாய் பிரயோகிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது. ஒருவர்கூட தவிர்க்கப்படவில்லை தரித்திரனென்று ஒத்துக்கொள்ளப்பட்ட நபர் கூடக் கொடுக்கவேண்டியிருந்தது. இவ்வாறு விதிக்கப்பட்ட சரித்திரம் மிக்க இன்பத்தைத் தரத்தக்கது. ஒரு ஏகரா விலை மதிப்பான ரூபா 33—கவர்ன்மெண்டாருக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று ஒவ்வொரு சதுர நிலத்தாருக்கும் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வித ஏற்பாடு, கௌரவபட்டங்களை விரும்புவோர்களால் முதலில் எடுத்துக் கூறப்பட்டதாகும். இது அந்த ஸ்தல அதிகாரிகளால் ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் லோகல் கவர்ன்மெண்டார் அதை ஒருவகையாய்ச் சீர்திருத்திக் கொண்டனர். இனமாகக் கொடுக்கப்பட்ட தொகையை

லோகல் கவர்ன்மெண்டார் கடனாகப் பாவித்து அதற்கான வட்டித் தொகையை கடன் கொடுத்த மனிதர்களுக்குக் கொடாமல் கிராம நன்மைக்காக செலவழிக்கப்படுமென்று கூறினர்.

(சாக். நெ. 26 ஜி. எஸ்) உத்தமஸிங் அவ்விதம் பணம் உபகரிக்கத் தயங்கினதைப் பற்றி ஒரு குற்றத்தின் மீது தண்டிக்கப்பட்டார். அவர் பணம் கொடுப்பதாய் ஒத்துக்கொண்டதும் அவ்வழக்கு வாப்ஸ் வாங்கிக் கொள்ளப்பட்டது.

இம்பீரியல் சண்டை கஷ்ட நிவர்த்தி தொகை. (Imperial war Relief Fund.)

ஒரு சதுரத்துக்கு (per square) 10-ரூபா விதிக்கப்பட்டது. அதைக் கொடுக்காது போனால் இலகுவில் விவகாரம் முடியாதென்று கண்டுகொண்டதன்மேல் ஜனங்கள் அதைக் கொடுத்து விட்டனர்.

லம்பார்தார்கள் படையாள்களைத் திரட்டித் தர வேண்டும். இல்லாது போனால் லம்பார்தாரி உரிமைகளையிழக்க நேரிடும். சிலர் விலக்கப்பட்டும் போயினர். இவ்விதம் ஒரு படையாளுக்கு ரூபா 500 க்கு உயர்ந்தது. ஜனங்களைப் பந்தப்படுத்தி அமைதி நிலைபெறும்படி செய்ய போலீஸார்கள் அனுப்பப்பட்டனர். மாஜிஸ்டிரேட்டுகள் ஜாமீன்மேல் மனிதர்களை விடுதலை செய்வதில்லை. அவர்கள் படையாள்களைக் கொடுப்பதாகச் சம்மதிக்காத வரையில் ஜெயிலிலிருந்து விடுவிப்பதுமில்லை. தானே படையில் சேர்வதாயிருந்தால் கிரிமினல் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன் மீதுள்ள குற்ற தண்டனையும் ரத்து செய்யப்பட்டது. (வாக்குமூலம் 516.)

இவ்விதம் பஞ்சாபியர்கள் யாவரும் ஒரே மனதினராய் ஒற்றுமை பாவிக்கும் வண்ணம் ஸர்மைகேல் ஓடை

யர் செய்துவிட்டார். இவ்வித நேசம் இதற்கு முன் எப்போதுமே இருந்ததில்லை. ஆகவே சென்ற ஏப்ரல் மாதம் வந்ததும், பஞ்சாபின் ஒற்றுமையையும், இந்தியாவின் ஒற்றுமையையும் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டார். அப்பொழுது அவர் பிரமித்துப் போய்விட்டார். அதன்மீது தான் முன் நாங்கள் எடுத்துக் காட்டியபடி கோபமொழிகளை வெளியிட்டதாகும். அவர், தனது கொடிய ஆட்சியினால் அடிமைத் தன்மையில் அடக்கி வைத்திருந்த சக்தி வெளிக்கிளம்பவே அதை நன்றாய் நசுக்கிவிடத் தன்னாலியன்ற பிரயத்தனம் எடுத்துக் கொண்டார். தலைவர்கள் கண்ணியமாய்ப் பேசிய எந்த மொழியிலும் ஆபத்திருப்பதாகப் பாவித்தார். எந்தக் கூட்டத்திலும் சதியாலோசனை நடப்பதாய் நினைத்தனர். இவ்விதம் இவர் தன்னைக் கூட மறந்து டாக்டர் ஸத்யபால், டாக்டர் கிச்லு, மிஸ்டர் காந்தி முதலானவர்களுக்கு விரோதமாய் உத்தரவுகளிட்டனர். தன் அரசாட்சியால் க்ஷாத்திரங் கொண்டுள்ள ஜனங்களைக் கோபமுண்டாகும்படி செய்வதோடு தான் இக்காரியம் முடியுமென்று அவர் அறிந்திருக்க வேண்டும். அவர் ஜனங்களை நசுக்கி விடவேண்டுமென்ற எண்ணத்தோடு ஜனங்களை வம்புக்கிழுத்ததாய் நினைக்க எங்களைத் தூண்டுகிறது. அநுபந்தத்தி லடங்கிய வாக்குமூலத்தால் மிகவும் கோபத்துக்கு ஆளாகும்படி ஜனங்களை அவர் செய்தாரென்றும் அதனால் அவர்கள் தங்கள் பொறுமையைவிட்டு எழும்பும்படி நேர்ந்ததென்றும் தெரிகிறது. அவ்வாறு அவர்கள் பொறுமையை யிழந்ததற்குக் கைகண்ட பலனை யடையவும் செய்தனர். ஆனால் அவர்கள் ஆச்சரியப்படும் வண்ணம் அதி சீக்கிரத்தில் தங்கள் பொறுமையை கைக்கொண்டனர். தகாத துப்பாக்கிப் பிரயோகத்தால் சுத்தப்பட் டெழுந்தும் ஸர் மைகேல்

ஓடையரிடமிருந்து தேகாரோக்கிய நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றும் விளங்கக் கூடியவராயினர்.

அத்தியாயம் 3.
(The Rowlatt Bills)
ரௌலட் சட்டங்கள்.

இதற்கு முந்திய அத்தியாயத்தால் லோகல் கவர்ன் மெண்டாரால் பஞ்சாபியர் அநேகவித உபத்திரவங்களுக்கும் அருவெறுப்புக்கும் ஆளானார்கள் என்பது போதுமான அளவுடன் விளங்குகிறது. படித்த ஜனங்களாகிய சமீப ஜனத் தலைவர்களுக்கு ஜனங்களை அடக்குதல் என்பது சிரம சாத்தியமான காரியமாய்ப் போயிற்று. இவ்விதம் பஞ்சாபின் நிலைமை இருந்து கொண்டிருந்த போது ரௌலட் சட்டங்களும் வெளிவந்தன.

இந்த இரண்டு சட்டங்களும் வெளிவந்த காலத்து இந்தியாவில் எவ்வித கலகாஸ்பதமான காரியங்களுமில்லையென்பது வெளிப்படையான விஷயம். இது பஞ்சாபையும் வங்காளத்தையும் தவிர மற்றெந்த பாகங்களையும் வெகு காலங்களாகவே உண்மையாய்க் கெடுதி செய்யவில்லை. வங்காளப் பிரிவினையால் வங்காளத்தில் அதிருப்தி ஏற்பட்டது. பஞ்சாபிலோ லோகல் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட அநேகவித ஹிம்சைகளால் அதிருப்தி ஏற்பட்டது ஆகும். அது மேலும் கானடாவில் குடியேறிய சீக் ஜாதியார்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கினால் விருத்தியடைந்தது. அந்தத் தீங்கு விஷயம் உள்நாட்டு ஜனங்களுள் பரவவே அவர்களும் அதை நினைந்து வருத்தமுற்றனர். பலாத்காரமாய்த் தலையிட்டு நடத்தப்பட்ட கோமகாட மாரு (Komagata Maru) விஷயம் அதை மிக

வும் அதிகமாக்கிற்று. இவ்வித பலாத்காரங்களின் காரணங்கள் ஒவ்வொரு விஷயத்திலும் தெளிவாய் எடுத்துக் காட்டப்பட்டன. எங்கள் புத்திக் கெட்டிய வரையில் அவை போக்கடிக்கக்கூடியனவும் குணப்படுத்தப்படக் கூடியனவுமேயாகும். இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தினால் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு கவர்ன்மெண்டார் வாதிக்கிறபடி, பஞ்சாபிலும் வங்காளத்திலுமிருந்த பலாத்காரத்தோடு கூடிய கலகங்கள் தடைபடுத்தப்பட்டன.

சண்டைக்காலங்களில் எதிர் பார்க்கப்பட்ட கலகங்கள் ஏற்படாவண்ணம் தடுக்க, அத்தியாவசியமான சட்டமாய் இது அங்கீகரிக்கப்பட்டது. பிரான்ஸிலும் மொஸபடோமியாவிலும் நடந்த போர்க்களங்களுக்கு இந்தியாவிலுள்ள தளவாடங்கள் யாவும் கொண்டுபோகப்பட்டதும், இந்திய உள்நாட்டுச் சமாதானம் ஜனங்களுடைய இராஜபக்தியிலும், அவர்களது அமைதியான குணத்திலும் பொறுத்ததாயிருந்தது. ஆகவே அச்சட்டங்கள் பிரயோஜனப்படலாமென நினைக்கப்பட்டன. இராணுவச்சட்டம்போன்ற நிர்வாக சபையாரது சட்டங்கள் நான்குபேருடைய வேலையை ஒரு போலீஸ்காரரால் நிர்வகிக்கக்கூடிய அவ்வளவு சௌகரியத்தை யுண்டுபண்ணின. இது ஜனங்களது ஸ்வதந்திரத்தைப் பாதித்துப் போலீஸாரது வழியில்நின்ற கஷ்டங்களையும் போக்கிற்று. ஆகவே க்ஷாத்திரம் ஒருவிதத்தில் ஒடுங்க ஜனங்கள் அப்பொழுது இந்திய பாதுகாப்புச் சட்டத்தை ரத்துசெய்ய வேண்டினர். ஏன் அவர்கள் அவ்விதம் செய்யவேண்டுமென்றால், அத்தியாவசியகாலத்தில் தான் பிரயோகிக்கப்படும் என்றும் இராஜாங்க விஷய சம்பந்தமானவைகளைப் பிரசங்கித்ததைத் தடுக்கவாவது, இராஜகீயத் தலை

வர்களது பிரசாரவேலைக்குத் தடங்கல் செய்யவாவது ஏற்படாதென்றும் மேலும் அது இவ்வித வேலைகளுக்கு அநுகூலமானதாகவே யிருக்கும் என்றும் கவர்ன்மெண்டார் வாக்குத்தத்தம் கொடுத்திருக்க அது, இந்திய சுய ஆட்சிப் பிரசாரவேலையை வெகு ஊர்ஜிதத்துடன் கிளர்ச்சி செய்துவந்த மிஸ்ஸஸ் பெஸண்டின் மேலேயே பிரயோகிக்கப்பட்டது. அந்த அம்மாளுடைய ஜன்மசத்துருக்களாலும் கொள்ளப்படாத எவ்வித சந்தேகமான எதிர்ப்பும் அவர்கள் காரியத்திலடங்கவில்லை. பொதுஜனங்கள் ஆகவே கவர்ன்மெண்டாரிடம் மிக்க அவநம்பிக்கை கொண்டனர். இந்தியா சண்டையில் உதவிசெய்த வகையிலும், 1917-ம் ஆக்ஸ்ட்மீ கொடுக்கப்பட்ட இராஜசாஸனப்படி பொறுப்பு வாய்ந்த இராஜாங்கம் கிடைக்கும் என்ற வகையிலும் அந்தச்சட்டம் எடுபட்டுவிடலாம் என நம்பினர். இரகசிய காரிய இலாகா(Secret Service Department) தாராது வெறுக்கத் தகுந்த கவனத்தினின்றும் ஒழிவாவது ஜனங்கள் பெற்றிருக்கவேண்டும்.

இப்படியிருக்க இரண்டு சட்டங்கள் திடீரென கிளம்பியதால் ஜனங்கள் ஆச்சரிய மடைந்தனர். சீர் திருத்த விஷயமாய் ஸிவில் ஸர்விஸ் வர்த்தகர்களது மூலாதாரத்துக்குப் பங்கம் நேரிடுமோவெனப் பயந்து இவ்வகைச் சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டதாய் வைஸிராய் (இராஜப் பிரதிநிதி) பேசியதனின்றும் தெரிந்ததன்மேல் ஜனங்கள் சமாதானமுங் கொண்டனர். சத்தியாக்ரஹக் கிளர்ச்சியை மிஸ்டர் கந்தி அவர்கள் வெளியிட்டபோது பத்திரிகைகளுக்கு இந்தியர்களது நிலைமையை இவ்வாறு விவரித்துக் கடித மெழுதியிருக்கிறார்.

"ஐயா, ரௌலட் சட்டங்களைப் பற்றிய சத்தியாக்ரஹ பிரதிக்ஞையை இதனுடன் சேர்த்தனுப்பி

யிருக்கிறேன். இவ்வகையான வழிகளை யனுசரித்தது இந்தியச் சரித்திலடங்கிய மிகவும் முக்கிய சம்பவமாகும். இவ்வித வழியை அவசரமாய் நான் கைக்கொள்ளவில்லை யென்பதை உறுதியாய்ச் சொல்லுகிறேன். என்னைப் பற்றியவரையில் சொல்லப் புகுந்தால் நான் அதைப்பற்றி யோஜிக்க அநேக இரவுகள் தூங்காமலிருக்க நேர்ந்தது. கவர்ன்மெண்டாருடைய நிலைமையை மெச்ச என்னாலான வரையில் முயற்சித்தேன். ஆனால் இவ்வித அசாதாரண சட்டங்களை யேற்படுத்தக்கூடிய நிர்ப்பந்தம் யாது நேர்ந்த தென எனக்கு விளங்கவில்லை. நான் ரௌலட் கமிட்டி யாரது ரிபோர்ட்டைப் படித்திருக்கிறேன். ஆச்சரியத் துடன் அதனிலடங்கிய விஷய விவரங்கள் முழுதையும் கவனித்தேன். கமிட்டியாரது நேர் விரோதமான அபிப் பிராயத்தை நான் கொள்ளும்படி அது செய்தது. ரகஸிய மான கொடிய கலகம் ஏதோ அற்ப மனிதர்களால் ஏதோ ஒரு மூலையில் நடக்கிறதாய் ரிபோர்ட்டினின்றும் தெரி கிறது. அவ்விதம் துஷ்டமனிதர்கள் இருப்பது அபாய காமானதுதான். கவர்ன்மெண்டார்களுக்கு மிக்க அதி காரத்தைக் கொடுத்தும் இந்தியா முழுவதுமுள்ள ஜனங் களைப் பங்கப்படுத்தக் கூடியதான சட்டங்களை ஏற்படுத்து வது மிக அபாயகரமானது. எல்லாவற்றையும் விட நிலை மைக்கு மிஞ்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்வதும் அபாயகரமானதுதான். இந்தியாவிலுள்ள அநேக லக்ஷம் ஜனங்களும் பூலோகத்திலுள்ள எல்லா ஜனங்களையும்விட மிகவும் சாந்தமானவர்கள் என்ற சரித்திர சம்பந்தமான உண்மை விஷயங்களை கமிட்டியார்கள் முற்றிலும் உணர வில்லை போலும்.

இப்பொழுது சட்டங்களை நிர்மாணித்த விஷயங்களைப் பற்றிப் பேசப்புகுவோம். ஸிவில் ஸர்விஸ் வர்க்கத்தா

ருக்கும், பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கும் உரிய வைஸிராயி னது சில வாக்குறுதிகளோடு முகவுரை துவக்கப்பட்டிருக் கிறது. வைஸிராயினது வார்த்தைகளைப் பற்றி எங்களில் பலர் சந்தேகங் கொள்கிறோம். அவரது முழு எண்ண மும், செயலும் என்னவென்று என்னாலறிந்து கொள்ள முடியவில்லை என்பதை நான் உண்மையாய் ஒப்புக் கொள் கின்றேன். இந்தியாவின் க்ஷேமத்தைவிட ஸிவில் ஸர்விஸ் வர்க்கத்தாரது க்ஷேமமும் பிரிட்டிஷ் வியாபாரிகளது க்ஷேமமும் முக்கியமானதெனக் கொண்டால் ஒரு இந்தி யரும் இந்தக் கொள்கையை ஒத்துக்கொள்ள மாட்டார் கள். அது இராஜ்யத்திற்குள் சகோதர வாத்ஸல்ய சண்டையாக முடியும். சீர் திருத்தங்கள் வந்தால் வரட் டும் வராது போனாலும் போகட்டும். ஜீவாதாரமான கொள்கைகளில் தகுதியான சமரச வுணர்ச்சியைப் பெற் றிருக்க வேண்டுமென்பதே இக்கால உணர்ச்சியாகும். இதற்கு மாறான எதுவும் உண்மையாய்த் திருப்தியைக் கொடுக்காது. ஸிவில் ஸர்விஸ் கூட்டத்தினர் யாவரும் இந்தியாவின் பொறுப்பை ஏற்றவர்களாகவும் ஊழியர்க ளாகவும் வாசாமாத்திரத்தி லல்லாது அனுஷ்டானத்தி லும் காண்பிக்கிறவரையில் தான் இந்தியாவிலிருக்க யோக்கியதை யுள்ளவர்களென்றும், பிரிட்டிஷ் வியாபாரி கள் இந்தியாவுக்கு வேண்டிய சாமான்களை உபகரிப்ப தோடு இந்தியாவுக் குரித்தான, கைத்தொழில், வித்தை, வியாபாரம் முதலியவைகளுக்குப் பங்க மேற்படுத்தாமல் தனித்து நிற்கும் வரையில் தான் இந்தியாவிலிருக்கத் தகுதி யுள்ளவர்களென்றும் அறிந்து கொள்ளவேண்டும். ரௌலட் சட்டங்களுக்குப் பதிலாக அதனிடத்து இரண்டு கொள்கைகளை ஏற்படுத்த வேண்டும். சமஸ்தானத்துக்கு எதிரிடையான எந்த துராலோசனையையும் பற்றி அவர்

கள் சாமர்த்தியத்துடன் செய்வார்களென்று நான் வாக்குறுதி செய்கிறேன். பொதுஜனக் கொள்கையை ஸர் ஜார்ஜ் லௌண்டிஸ் நிந்தித்தபோது எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்ப்பது போலானார். அவர் அவரது இந்துதேச சரித்திரத்தையும் மறந்துவிட்டார். இதுவரையில் கவர்ன்மெண்டார், பொதுஜன அபிப்பிராயத்தை யறிந்து அதற்கிணங்க தனது தீர்க்காலோசனையுடன் கொண்டிருந்த அபிப்பிராயத்தையும் மாற்றிக்கொள்ள நேர்ந்ததையும் அவர் அறியவில்லை.

அரசாட்சி செய்பவர்களிடம் வேரூன்றியுள்ள வியாதிக்குறிகளை சந்தேகமறத் தெரிவிக்கும் விஷயங்களாக இச்சட்டங்கள் நிற்கின்றனவென்று நான் என் நினைத்தேனென்பது இப்போது எளிதில் விளங்கும். ஆகவே தெளிவாய் விளக்கப்படுவது அவசியம். சட்டங்களில் இரகசியமாய் அடக்கப்பட்டுள்ள எண்ணங்களையும் அது அமுல் செய்யப்படும் நிலைமைகளையு முணர்ந்த பொறுமையில்லாச் சிறுவர்கள் இரகசியமாய் வம்பு பண்ணுதலே மருந்தெனக் கொள்வார்கள். அந்தச் சட்டங்கள் க்ஷாத்திரத்தையும் கெட்ட அபிப்பிராயத்தையும் சமஸ்தானத்துக்கு விரோதமாய் உண்டுபண்ணும். இதற்கு உதாரணமாக பலாத்காரப் பிரயோகமே சந்தேகமறச் சாட்சியாய் நிற்கின்றது. எந்தக் கஷ்டம் நேர்ந்தாலும் அதற்குள்ளடங்கி உண்மையாய் நடந்துகொள்ள விரும்பும் இந்தியத் தலைவர்களைக் கொண்டே கவர்ன்மெண்டார் நன்கு தெரிந்துகொள்ளலாம். இதைப்பற்றி அவர்கள் இவர்களிடம் க்ஷாத்திரங் கொள்ளுதல் பலனைத் தராது எனப்படுகிறது. யார் கலகஞ் செய்தவர்களாகக் கருதப்படுகிறார்களோ அவர்களை அடக்கு முறையாகக் கைக்கொள்ளவேண்டிய மருந்து இதுதானென்றும், அம்மருந்து அவர்கள் கொண்டுள்ள

அதிருப்தியையும் போக்கடிக்கவல்லதென்றும் நினைத்து, பலாத்காரத்தை அதிகாரத்துடன் செலுத்த விரும்புகிறவர்களுக்குத் தங்கள் ஒழுங்கானவும் பிடிவாதமுமான வழிகளால் நல்லுணர்ச்சியை இவ்விந்தியத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தியத் தலைவர்கள் இந்த மருந்தை எப்படி உபயோகிப்பதென்பதை நன்ருய் உணர்ந்தால் அதனின்றும் கெடுதல் சம்பவியாது. அவர்கள் அவ்வளவு சக்தியுள்ளவர்களா வென்பதை நான் அறியவேண்டுவது அநாவசியம். அவர்கள் இம் மருந்தை கைக்கொள்ளுமுன் அவசியமாய்த் தாங்கள் தீர்க்க விரும்பும் நோய்க்குத் தகுதியுள்ளதா வென்பதை உணரவேண்டும். இதைத் தவிரச் சற்றுத் தாழ்ந்தப் பிரயோகத்தால் முடியாதெனக் கண்டறிந்தாய் விட்டதா என்பதையும் பார்க்கவேண்டும். தாழ்ந்த பிரயோகங்களால் முடியாதெனவும் அந்த மருந்தே சிலாக்கியமானதெனவும் நன்ருய்க் கண்டுகொண்டால் உபயோகிக்கலாம். மிகுதியானவை கடவுளைச் சேர்ந்ததாகும்.

இப்படிக்கு
தங்களன்புள்ள
(ஒப்பம்) எம். கே. காந்தி.

மிஸ்டர் காந்தி அவர்களால் மேற்சொல்லப்பட்ட சத்யாக்ரஹ பிரதிக்ஞையின் விவரங்களைக் கீழ் விவரிக்கின்றோம் :—

"சமஸ்தானத்துக்கும், இனத்தார் யாவருக்கும் பிரத்யேகமாய் ஏற்பட்டுள்ள முக்கிய ஆதாரமான உரிமைகளையும், நியாயத்தையும், ஸ்வதந்திரத்தையும் 1919ம் ஹூ்த்து (ஒழுங்கு படுத்தப்பட்ட) இன்டியன் கிரிமினல் சட்டம் நெ. 1-ம் 1919ம் ஹூ்த்து (ஆபத்துக் காலத்தில் பிரயோகிக்கப்படவேண்டிய) க்ரிமினல் சட்டம் நெ. 2-ம் கவிழ்த்து

விடுவதுமன்றி மிக்க நியாய மற்றனவாகவும் தென்படு கின்றன என்பது எங்கள் மனமார்ந்த அபிப்பிராயம். இச் சட்டங்கள் ரத்து செய்யப்படுகிற வரையில், இச் சட்டம் அமூல் படுத்தப்படும்போது அச் சட்டங்களுக்கும் இவற்றைப் போன்று யுக்தமென்று இனி நியமிக்கப்படும் கமிட்டியார் வெளிப்படுத்தும் சட்டங்களுக்கும் நாங்கள் கீழ்ப்படிந்து நடக்க ஒழுங்காய் மறுப்போம் என்பதை நாங்கள் வற்புறுத்துகின்றோம். மேலும், இந்தப் போராட்டத்தில் நாங்கள் நன்றியறிவுடன் உண்மையைக் கைக் கொள்வோ மெனவும், உயிருக்காவது, மனிதருக்காவது, சொத்துக்காவது பங்கமேற்படுத்தக்கூடிய பலாத்காரத் தைக் கொள்ளமாட்டோ மென்பதையும் உறுதியுடன் கூறுகின்றோம்."

இப்போது ரௌலட் சட்டம் (Rowlatt Act) என்று விளங்கும் நெ-2. சட்டத்தை எவ்வளவு சுருக்கமாய் ஆராய்ந்து பார்க்கமுடியுமோ அவ்வளவுதூரம் ஆராய்ந்து பார்ப்போம். கவர்ன்மென்டாரால் வேண்டுமென்றே தள்ளுபடி செய்யப்பட்ட நெ-1. சட்டத்தைப்பற்றி நாம் பரிசிலனை செய்யப் போவதில்லை.

இராஜாங்க விரோதமான விஷயங்களைப் பரிசிலனை செய்ய 1917-ம் வரு டிசம்பர்மாதம் 10-ம் தேதி இந்தியா கவர்ன்மென்டாரால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இதன் தலைமை அதிகாரி மிஸ்டர் ஜஸ்டிஸ் ரௌலட். இவர் பெயரால்தான் இச்சட்டம் வழங்கப்படுகிறது. இக் கமிட்டி யேற்பட்டதன் காரணங்கள் என்னவென்றால்:—(1) இந்தியாவில் கலகத்துக் காஸ்பதமான சதியாலோசனைக்காரர்கள் எங்கெங்கே எப்படி இருந்து வருகிறார்கள் என்று கண்டுபிடித்தறிவிக்கவேண்டும். (2) அந்த சதியாலோசனைக்காரர்களைக் கண்டுபிடிப்பதில் எவ்வித கஷ்

டம் நேர்ந்தது அவர்களை யடக்க எந்தவிதமான சட்டத்தைக் கவர்ன்மெண்டார் அநுஷ்டிக்கலாம் என்பனவற்றையும் தெரிவிக்கவேண்டும்." அந்தக் கமிட்டியார் இரகசியமான விடத்தில் கூடி விஷய பரிசீலனை செய்ய வேண்டும். அது 1918-ம்௵ ஏப்ரல்மாதம் 15-ம் தேதி தனது ரிபோர்ட்டை வெளியிட்டது. லாகூரில் நான்கு முறை வீற்றிருந்து பலசீலனைசெய்ததுதவிர மற்றைய மீட்டிங்குகளையெல்லாம் கல்கத்தாவிலேயே அக்கமிட்டி நடத்தியது. மிஸ்டர் ஜஸ்டிஸ் ரௌலட் அவர்கள் கவர்ன்மெண்டாருக்கு விலாஸமிட்டெழுதி யனுப்பிய முற்பதில் கூறியிருப்பது என்னவென்றால்:—

"தங்களால் நியமிக்கப்பட்டு உத்தரவிடப்பட்ட பிரகாரம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இரகசியமான விடத்திலேயே அமர்ந்து பரிசீலனை செய்தோம். கமிட்டியார் முன் எவ்வகையான வாக்குமூலங்கள் கொடுக்கப்பட்டன வென்பதும், யார் கொடுத்தார்கள் என்பதும் இதுவரையில் ஜனங்களில் யாருக்கும் தெரியாது. ஜனங்கள் தரபில் சாக்ஷிகள் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. ஏனென்றால் அது முழுதும் கமிட்டியார் முன்னிலையில் தெரிவிக்கப்படாததாகும்."

இச்சட்டங்கள் இந்தக் கமிட்டியாரது சிபார்சின்மேல் வெளிவந்ததாகும். நாங்கள் அந்த ரிபோர்ட்டையும் அதன் சிபார்சுகளையும் படித்திருக்கிறோம். அவைகள் செய்யப்பட்ட அக்காலத்தில் நிகழாத சம்பவங்களைத் தடுக்க அவைகள் சிபார்சு செய்யப்பட்டனவாகையால் அவைகளை யறிந்து கொள்வது இலகுவாய்த் தோற்றவில்லை. இந்தியப் பாதுகாப்புச் சட்டமாவது அல்லது அதன் அநுகுணமான சட்டமாவதில்லாமல் சேஷ்டைகளற்று பொது அமைதியை நிலைநாட்டுத லரிதான காரிய

மென்னும் வாதத்தை அறிகிறோம். இந்த வாதம் இரண்டு எண்ணங்களைக் கொண்டதாகும்—அவை, அந்த அடக்குச் சட்டம் கலகத்துக்குக் காரணமான குற்றங்களை யடக்க அத்தியாவசியமானதோடு அச்சட்டம் அமுலிலிருக்கும் வரையில் எவ்விதமான மனிதரும் அக்குற்றஞ் செய்யத் துணியாதிருக்கின்றனர் என்பதைக் காட்டுவது ஒன்று. கலகக்காரர்கள் என்று சொல்லப்படும் ஜனங்கள் இன்னும் இருக்கிறார்கள் அல்லது இருந்தார்கள் என்பதைத் தெரியப் படுத்துவது இரண்டாவது.

அந்த முதலெண்ணம் இராஜ தர்ம நிபுணத்துவ மின்மையையும் ஒத்துக்கொள்ளத் தகுந்த நஷ்டத்தையும் மோசமாய்க் காட்டிக் கொடுக்கின்றது.

இரண்டாவது, அது உண்மையானால் நம்பிக்கையற்ற சாமர்த்திய மின்மையைத் தெரிவிக்கின்றது. அடக்கு முறைச் சட்டம் வேண்டியிருக்கின்ற தென்பதனாலேயே ஜனங்களுக் கநுகூலமான மனமின்மையைத் தெரிவிக்கின்றது. இன்னும் தெளிவாய்ச் சொன்னால் கவர்ன்மெண்டார் அவர்களது இஷ்டத்துக்கு விரோதமா யிருக்கின்றனர் என்பதாகும். இவ்விஷயம் ரௌலட் சட்டம் கொண்டு வரப்படும்போதே அவரது கியாதி வாய்ந்த பேச்சில் நன்றாய் வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. ராஜாங்கத் திருத்தம், ஒத்துக்கொள்ளப்பட்ட கலகக்காரரைத் திருப்தி செய்யத் தகுந்ததா யில்லாததோடு அடக்குமுறை யில்லாத அதே சமாதானத்தை நிலை நாட்டத்தகுந்த உண்மையான வழியென்றும் தெரிவிக்கிறது என்று சொல்லி பின்னும் சொன்னதாவது :—'கலகக்காரர்கள் இவ்விதமான வேற்றுமைக்கொண் டிருக்கின்றனர். இராஜாங்கச் சீர் திருத்தங்களால் சந்தோஷமடையப் போகின்றதில்லை. நாம் அவர்களைப் பற்றி நினைக்க வேண்டாம். சட்டத்தால்

மட்டில் அவர்களை ஆளுவோம்' என்று நினைப்பது தகுதியா? ராஜநீதி தெரிந்த பெரியோர்கள் அவ்விதம் செய்வது ஒழுங்கற்ற வழியென்று நான் நினைக்கிறேன். நாம் அவர்களுக்கு அடிமைத் தனமுள்ள கட்டுப்பாட்டினின்றும் விடுக்கும் சீர்திருத்தங்களால் திருப்தி செய்யவேண்டும். திருப்தி செய்யப்படவேண்டியவர்கள் இந்த இராஜாங்க விரோதமான கலகக்காரர்கள் அல்ல. நாம் குணப்படுத்த வேண்டிய பொது ஜன அபிப்பிராயமே கலகத்தையுண்டுபண்ணுகிற தாகும். திருப்தியும் ஒழுங்கான இராஜாங்க விவகாரமும் நடந்துகொண்டிருக்க, இராஜாங்கத் துரோகிகள் தங்கள் துர்ப்புத்தியைக் கேட்கத் தகுந்த மனிதர்களைக் காணுதபோது சட்டத்தால் அவர்கள் தண்டிக்கப் படாவிட்டாலும் தாங்களே சேஷ்டையற்று இறந்து போவார்கள்."

அச் சட்டத்தி லடங்கிய ஒப்புக்கொள்ளத் தகுந்த அடக்கு முறை குணங்களைப்பற்றி குற்றமற்ற ஜனங்கள் பயப்பட வேண்டாமென்று புத்திமதி கூறி பெருமை தங்கிய மிஸ்டர் சாஸ்திரி அவர்கள் பின்னும் சொன்னதாவது :—

ஒரு கெட்ட சட்டம் ஒருமுறை வெளிக்கொண்டு வரப்பட்டால் கெட்ட மனிதர்கள்மேல் எப்போதுமே அது உபயோகப் படுத்தப் படுவதில்லை. * * * * திகிலேற்பட்ட காலங்களில் அதுவும் ஏதோ சில காலம் கவர்ன்மெண்டார் தங்கள் பொறுப்பை யிழந்தவர்களாயிருந்திருக்கப் பார்த்திருக்கிறேன். பயங்கரமான அராசாட்சி ஏற்பட் டிருப்பதாய் நான் அறிய வருகிறேன். மிக்க சிலாக்கியமும் கண்ணியமுமான இந்தியர்களும், நம்மவர்களில் சிலாக்கியமான குணங்களைப் பெற்றவர்களும் சந்தேகிக்கப்பட்டு மணிக்கொருதரம் குற்றவாளிகளைக்

கண்டுபிடிக்கும் இரகசியப் போலீஸார்களால் (Officers of Criminal Investigation Department) பார்வையிடப் பட்டு வருவது எனக்குத் தெரியும். * * * கவர்ன் மெண்டார் அடக்குமுறைச் சட்டத்தை அனுஷ்டிப்பதால் குற்றமற்றவர்கள் சௌக்கியமா யிருக்க முடியாது. என் னைப்போன்ற மனிதர்கள் குற்றமற்ற மனிதர்களாகக் கரு தப்பட மாட்டார்கள். இராஜாங்க விவகாரங்களில் தலை யிடாதவர்களும், எவ்விதப் பொதுஜனக் கூட்டங்களில் தலையிடாதவர்களும், வீட்டுக்குள்ளிருந்து ஜபதபங்கள் செய்துகொண்டு, கேட்ட வரிகளைக் கொடுத்து, எல்லா கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்கும் கைகட்டி வாய் பொத்தி நமஸ்காரஞ் செய்துகொண்டு மிருப்பவர்கள் குற்றமற்றவர்க ளாவார்கள். இராஜாங்க விவகாரங்களில் தலையிடுகிறவர்கள், பொதுஜன நன்மைக்காக ஆங்காங்கு சென்று பணஞ் சேகரிப்பவர்கள், பொதுஜன மீட்டிங்கில் பேசுகிறவர்கள், ஆகிய இவர்கள் சந்தேகிக்கப்படக் கூடிய வர்க ளாவார்கள். நான் அவ்வித குற்றவாளிகளுக்குள்ள தோஷங்களைப் பெறக்கூடிய எல்லையோரத்தி லிருக்கின் றேன். வேறு எவ் விஷயத்தைப்பற்றியு மில்லாது போனு லும் சுய நன்மையை உத்தேசித்தாவது நான் சொல்ல வேண்டியது என்னவென்றுல் இவ்வகையான சட்டங்க ளைப் பெற்ற நிர்வாக உத்தியோகஸ்தர்கள் துஷ்டர்களை மட்டில் வருத்தத்துக் குள்ளாக்கார்கள். அது துஷ்டர்க ளையும் நல்லவர்களையும் வருத்தப் படுத்தும். பொதுஜன ஊழியத்தையும், உற்சாகத்தையும் குறைக்கும். இராஜாங்க விவகார சம்பந்தமான விஷய பரிசிலனைகள் குறைந்து போம். பிறகு பொறுப்பு வாய்ந்த அரசாட்சி என்பது பரிகாசத்துக் கிடமான விஷயமாய்ப் போய்விடும். உங்க ளது சபைகளை விருத்தி செய்துகொள்ளலாம். அவைக

ளுக்கான மெம்பர்களைப் பொருக்கி யெடுத்துக் கொள்ள லாம். அப்போது மெம்பர்கள் கோழைத்தன முள்ளவர் களாகவும் மனதிற் கிசைந்தவர்களாகவு மிருப்பார்கள். அப்போது, அடக்கு முறைகளுக்கான சட்டங்களைப் பெற்ற (அந்தரங்க சபையாரது ஆலோசனையின் மேல் இஷ்டப்படி ஆட்சி செய்யும்) எதேச்சாதிகார இராஜாங் கத்தார் பிரஜா பிரபுத்துவத்துக் குரிய கவர்ன்மெண்டா ரென பெயருக்கு மாத்திரம் சொல்லிக் கொண்டு தடங்க லின்றி ஆட்சி செய்யலாம். துஷ்டர்களைத் தண்டிக்கவே நாங்கள் ஆவலுள்ளவர்களா யிருக்கிறோம். துஷ்டர்கள் தண்டிக்கப்படக் கூடாதென எங்களில் ஒருவரும் சொல்ல வில்லை. ஆனல் * * * துஷ்டர்கள் கூட சில வழிக ளில் தண்டிக்கப்பட வேண்டும். ஸ்கேப்பிங்டன் சுடப் பட்டபொழுது உலகமுழுதும் நடுங்கியதென்று நான் ஞாப கப் படுத்திக்கொள்கிறேன் * * * * இப்பொழுது சண்டையில் கூட எல்லா ஜனங்களும் ஆவேசத்துடனும், ஆபத்துடனும் அல்லல்பட்டுக் கொண் டிருக்கும்போதும், விரோதிகளை எப்படி ஜயிப்ப தென் பதைத் தவிர வேறு எண்ணங் கொள்ளாத போதும், என் பிரபுவே, சண்டைக்கான சட்டங்க ளிருக்கின்றன. நீங் கள் தந்திரங் காட்டவேண்டி யிருக்கிறது. *

* * * ஒரு தேசத்தில் தொலை தூரத்தில் குற்றவாளிகள் இருக்கும்போது அவர் களைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்குச் சில வழிகளிருக் கின்றன. நீங்கள் அவர்களை மறைத்து வைத்துக்கொண்டு நியாயத்தைப் பங்கப் படுத்தக் கூடியதான வழிகளிலும் நிலத்தில் சட்டமே இல்லையா என்று குற்றமற்றவர்கள் நினைக்கும் வண்ணமும், கண்ணியமும், நற்குணமும், பொது நன்மைக் கநுகூலமுமான வேலைகள் தடைபடும் வண்ண

மும் தண்டிப்பது நியாயமாகாது. அப்படியும் துஷ்டத் தனத்தை அடியோடு போக்கக்கூடிய சட்டமாய் இதை நினைக்கலா மெனிலோ இது மிக்கப் பெரியதானதாகும். இராஜாங்கத்தில் பயங்கரமான சட்ட திட்டங்கள் இருக் கின்றனவென்று பொது ஜன வேலையிலும், இராஜாங்க விவகாரங்களிலும் தலையிடாமலும், கதவைச் சாத்திக் கொண்டு சட்டத்துக்குப் பயந்து கண்ணியமுள்ள மனிதர் கள் வீட்டுக்குள் ளிருப்பதைக் காட்டிலும் அற்பத் துஷ் டர்கள் வெளியிலுலாவ விடுவது மிக்க சிலாக்கியமானது தான்." மிஸ்டர் சாஸ்திரி அவர்கள், தன் வசத்திலுள்ள சட்டத்தைப்பற்றி ஸர் வில்லியம் வின்ஸெண்ட் அவர்கள் "அடக்கு முறைக்கல்ல இராஜாங்க விவகாரங்களைப் பரி சுத்தப்படுத்த" என்று சொன்னதை நம்பவில்லை. மிஸ்டர் சாஸ்திரி அவர்கள் அவரது நல்லபிப் பிராயத்துக்கு நன்றி செலுத்தினாராயினும் பின்னர் அவர் கூறியதாவது: "ஹா! இந்த உலகத்தில் நல்லெண்ணங்கள் எப்பொழுதும் நல்ல பலனைத் தருவதாயிருந்தால் அது மிக நன்றா யிருந்திருக் கும் * * * இராஜாங்க விவகாரத்துக்கும் கொண்டாட்டத்துக்கும் தகுதியான சட்ட நிர்மாணத்துக்குரிய சரித்திரம், அநேக நல்லெண் ணங்கள் கெடுதலாக முடிந்துள்ள பல உதாரணங்களைப் பெற்றிருக்கின்றனவே. தரித்திரத்தைப் போக்கடிக்க ஏற்பட்டசட்டங்கள் அதிகப்பாழான தரித்திரத்தை உண்டு பண்ணி யிருக்கின்றன. ஆகவே இராஜாங்க விவகாரங் களைப் பரிசுத்தப் படுத்தும் எண்ணத்துடன் எங்கள் முன் கொண்டுவரப்பட்ட சட்டம் அவைகளை யடக்கக் கூடிய சட்டமாய்க் கூடிய சீக்கிரத்தில் வரலாமென்பதைப் பெருமை தங்கிய ஸர் வில்லியம் வின்ஸன்ட் அவர்களுக் குணர்த்த சந்தர்ப்ப மெடுத்துக் கொள்கிறேன். அரசாட்

சிக் குரிய சமாதானத்துக்குப் பங்கம் உண்டு பண்ணக் கூடிய நிர்வாக அதிகாரிகள் கையில் இவ்வித சட்டத்தைக் கொடுக்காமலிருக்க நிரந்தரச் சட்டப்புத்தகங்களிலேறு மல் நீங்கள் நீக்கி வைக்கவேண்டும். இந்த அடக்கு முறைச் சட்டத்துக்கு பொதுஜன உதவி எதும் பெறவில்லை. "இந்திய சகாமெம்பர்கள் ஒற்றுமையாயும் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமலும்" எதிர்த்து நிற்கும்போது அதற்கு மாறுய்க் சட்டத்தைப் பிரேரணை செய்வது கூடாதெனத் தடுத்து கவர்ன்மெண்டாருக்கு எச்சரிக்கைசெய்யும்ரீதியில் சட்டச் சபையை நோக்கி அவர் சொன்னதாவது:—"இப்போது இதற்குப் பின்னுதவியாய் எந்த இந்தியரைப் பெற்றிருக்கின்றீர்கள். உங்களுக்குப் பின்னல் பொறுப் புள்ள எந்த இந்திய ஜனங்களது அங்கீகாரத்தையும் பெறுமல் இவ்வளவு நூற்றுண்டுகளாய்ப் பிரத்தியேகமாய் ஆண்டுவந்திருக்கிறீர்கள்" என்ற இவ்வாக்கியத்துடன் இந்தியாவின் துக்ககரமான கதையை நான் சுருக்கிக்கூற லாம். * * * * * * *

எவ்வகையான பொதுஜன அபிப்பிராயமும் உங்களுக் கநுகூலமாயில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும் இச் சட்டத்துக் கநுகூலமாயில்லை. ஜமீன்தார் மெம்பர்களும் தங்களுக் கநுகூலமாயில்லை. சட்டமெம்பர்களும் அதனுல் பிரயோஜனமடையார்கள். வியாபாரமெம்பர்களும் இதனுல் நன்மையடையமாட்டார்கள். இருந்தாலும் பெருமை தங்கிய ஸர்ஜியார்ஜ் லௌண்டிஸ் அவர்கள் எங்களுக்குச் சொன்னதாவது, "நாங்கள் இது சரியானதென்று கருதுவதால் நாங்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றவே வேண்டும். உங்கள் உதவியைப்பெற்றிருந்தால் நாங்கள் சந்தோஷமுள்ளவர்களாக விருந்திருப்போம். நாங்கள் மிக்க விருப்பமுள்ளவர்களா யிருந்தபோதிலும் உங்க

ளுடைய உதவியில்லாமல் எங்களுடைய பொறுப்பின் மேல்சட்டத்தை நிறைவேற்ற வேண்டியதுதான்." இவ்வாறு கூறிய பெருமை தங்கிய சட்டமெம்பர் அவர்களது தைரியத்தை நான் மெச்சுகிறேன். அவர் கபடமில்லாமல் பின்வருமாறு சொல்லியதைப் பற்றியும் சந்தோஷப்படுகின்றேன். "இன்றையதினம் நாங்கள் பொறுப்பைப் பெற்றவர்களாக விருக்கின்றோம். உங்களுக்குப் பொறுப்பேதுமில்லை." நாங்கள் அந்த நிலைமையை நன்குணர்கிறோம். இந்தச் சட்ட நிர்மாணத்தைப்பற்றி எங்களுக்குப் பொறுப்பேதுமில்லை. இவ்வழக்குப் பொதுஜன அபிப்பிராயத்துக்கு விடப்பட்டிருக்கிறபொழுது நாங்கள் பொறுப்பைப் பெற்றிருந்தோம். அப்பொறுப்பை வகிக்க மறுத்துவிட்டோம்" என்று சில ஆங்கிலேயப் பொதுஜனங்கள் சொல்லக்கூடியபடி பெருமைதங்கிய ஸர். வில்லியம் வின்ஸெண்ட் நினைத்ததாய்த் தென்பட்டதை நம்ப மறுக்கிறோம். எங்களுக்கேதும் பொறுப்பில்லை.

பிறகு மிஸ்டர் சாஸ்திரியார் அவர்கள் பின்வரும் மரியாதையான எச்சரிக்கையுடன் தனதுபேச்சை முடித்தார் :—

"எனது பிரபுவே, இப்போது நான் யாருக்காக இச்சபையில் இருக்கின்றேனோ அந்த ஜனங்களது உணர்ச்சிக்கு நியாயத்தைச்செய்ய இன்னும் ஒரே ஒரு விஷயத்தைக் கூறவேண்டியிருக்கிறது. பெருமைதங்கிய சட்டமெம்பர் அவர்கள், பேசியபொழுது நம்மில் சிலர் கிளர்ச்சி செய்யப்போவதாகப் பயமுறுத்திப் பேசியது, எல்லாரையும் நினைத்துச் சொல்லியதாய் நான் நினைக்கவில்லை. இந்தச் சட்டத்துக்கு விரோதமாகப் பேசிய எவரும் எவ்விதமான விஷயத்துக்கும் இடங்கொடுக்கவில்லை. அவர் ஒரு

வேலை கிளர்ச்சிசெய்யப் போவதுபோல் பேசினூர்கள் என்று சொல்லியிருக்கலாம். எங்களில் ஒருவராவது நிச்சயமாய் மிதவாதிகளில் ஒருவராவது தேசத்தில் கிளர்ச்சி செய்யச் சக்தியுடையவரா யிருக்கவில்லையென்று சொல்ல சந்தர்ப்பமெடுத்துக்கொள்கின்றேன். அது முடியாத காரியம். கிளர்ச்சி இதற்கு முன்னதாகவே இருந்திருக்க வேண்டும். இராஜாங்கவிஷயமான உலகநடவடிக்கைகளில் நாம் இங்கு உபயோகப்படுத்திய சொற்கள் பலன் ஏற்படுத்தக்கூடுவதா யிருந்தால் இதற்குமுன்னூல் அவர்கள் மார்பு படபட வென்று அடித்துக்கொண் டிருக்கும். கிளர்ச்சி அங்கே நடந்துகொண்டிருக்கின்றது. இந்தக் காரியத்தில் எங்களில் ஒருவருக்காவது எவ்விதப் பங்குமில்லையென்று இன்னமும் உறுதிமொழி கூறுகின்றேம். எங்கள் வேண்டுகோள் நிறைவேருதபோனூல் சட்டமும் நிறைவேற்றப்பட்டால் கிளர்ச்சிக்குச் சம்பந்தப்படாமல் இங்குள்ள எவரும் தங்கள் காரியத்தை நடத்த முடியாதென நம்புகிறேன்.

இவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்டபோதிலும், பொருக்கியெடுத்த சபையார்முன் அச்சட்டத்தை விடவேண்டுமென்ற பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது. சட்டச்சபை முடியக்கூடிய ஆறுமாதம் வரையிலாவது ஒத்திப்போடப்படவேண்டுமென்று கேட்க 1919-ம்ஹு பிப்ரவரிமாதம் ஆரும்தேதி அதுவும் தோற்றுப்போயிற்று. 35-பேர்கள் அந்தச் சட்டத்துக்குச் சாதகமாயும் 22-பேர்கள் சட்டத்துக்கு விரோதமாயும் தங்கள் வோட்டுரிமைகளைக் கொடுத்தனர். சட்டத்துக்கு விரோதமாய் நின்ற 35-பேர்களில் ஒருவரே இந்தியர். அவர் வைஸிராயினது நிர்வாக சபை மெம்பராகும். அவர் தான் உத்தியோகத்தை ராஜீனமாசெய்யத் தயாராயிருந்தா லொழிய எதிரிடையாய்

வோட் கொடுக்க முடியாது. வோட் விவரங்கள் பின் வருமாறாகும் :—

சட்டத்துக்கு
விரோதமானவர்கள்
22

பெருமை தங்கிய ஸர் கங்காதர
[சிதநாவிஸ்
,, பாபு எஸ். என் பானர்ஜி
,, மஹாபதாமாத் ராஜா
,, டாக்டர் டி. பி. ஸப்ரு
,, பண்டிதர் எம். எம். மாள
[வியா
,, மிஸ்டர் எஸ். ஸாஸ்திரி
,, ,, பி. என். சர்மா
,, மீர் அஸத் ஆல்கான் பஹ
[தர்
,, மிஸ்டர் வி. ஜெ. படேல்
,, ,, எம். ஏ. ஜின்ஞ
,, ஸர்-பாஸல்பாய் கரீம்
[பாய்
,, ராய் ஸீதாநாத்ரே பஹ
[தர்
,, ராஜா ஸர்-ராம்பாலஸிங்
,, ராய் கிருஷ்ணஸாஹே
[பஹதர்
,, கனிகாராஜா
,, மிஸ்டர் மஸாரல் ஹேக்
,, கான்பஹதர் மீரான் மகம்
[மத் ஹாபி
,, கான் ஜல்பிகார் ஆலிகான்
,, மிஸ்டர் ஜி. எல். கபர்தே
,, ராய் பி. டி. ஷுகல் பஹ
[தர்
,, கெ. கெ. சண்டா
,, மௌஷ்பாடு

சட்டத்துக்கு
அநுகூலமானவர்கள்
35

ஹிஸ் எக்ஸலன்ஸி கமாண்டர்
[இன்-சீப்
பெருமை தங்கிய ஸர்-க்ளாடி
[ஹில்
,, ஸர்-சங்கரன் நாயர்
,, ஸர்-ஜார்ஜ் லௌண்டிஸ்
,, ஸர்-உவில்யம் வின்ஸெ
[ண்ட்
,, ஸர்-ஜேம்ஸ் மெஸ்டன்
,, ஸர்-ஆர்தர்-ஆண்டர்ஸன்
,, மிஸ்டர் டபிள்யு. ஏ. ஜா
[ன்ஸைட்
,, ஸர்-வர்னே. லொவெட்
,, மிஸ்டர் எச். எப். ஹொ
[வார்ட்
,, ஸர்-ஜேம்ஸ் டுபோலே
,, மிஸ்டர் ஏ. எச். லே
,, மிஸ்டர் எச். ஷார்ப்
,, மிஸ்டர் ஆர். ஏ. மன்ட்
,, மேஜர் ஜெனரல் ஸர்-
[ஆல்ப்ரட் பிங்க்லே
,, ஸர்காட் ப்ரெ-பெல்
,, மிஸ்டர் எப். ஸி. ரோஸ்
,, மிஸ்டர் ஸி. எச். கெஸ்டி
[வின்
,, மிஸ்டர் டி. டி. எஸ். ப்ரே
,, லெப்டினன்ட் கர்னல்
[ஆர். இ. ஹாலண்டு
,, ஸர்ஜன் ஜெனரல்
[டப்ளியு. ஆர். எட்வர்ட்ஸ்.
,, மிஸ்டர் ஜி. ஆர். கிளார்க்

சட்டத்துக்கு
அநுகூலமானவர்கள்

மிஸ்டர் ஏ. பி. முதிமான்
,, ஸி. ஏ. பாரன்
,, பி. எல். மூர்
,, எம். என். ஹாக்
,, டி. இமர்ஸன்
,, இ. எச். ஸி. வால்ஷ்
,, ஸி. ஏ. கின்கேல்ட்
,, ஸர்-ஜான் டோனல்ட்
,, மிஸ்டர் பி. ஜெ. பாகன்
,, டப்ளியு. ஜெ. ரேய்ட்
,, டப்ளியு. எப். பைஸ்
,, எச். மான்க்ரீப் ஸ்மித்

சில சீர்திருத்தத்துடன் அந்தச் சட்டம் 18-ந்தேதி மார்ச்சுமாதம் கடைசியாக நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டது. அது எந்த மெம்பரால் கொண்டு வரப்பட்டதோ அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த விஷயத்திலேயே சம்பந்தப்படாமலிருக்க மூன்று பேர்கள் தங்கள் ஸ்தானங்களை ராஜீனுமா செய்துவிட்டனர். அவர்கள் (1) பண்டிதர் மதன் மோஹன் மாளவியா (2) மிஸ்டர் மஸாரல் ஹேக் (3) மிஸ்டர் எம். ஏ. ஜின்னு.

நாம் இப்போது ரௌலட் சட்டத்தின் அம்சங்களை ஆராய்ந்து பார்த்து அதன்மேல் அச்சட்டத்தால் இணையில்லாத கிளர்ச்சி நடந்தது யுக்தமா என்பதையும் கவனிப்போம்.

முதலில் அது நிரந்தரச் சட்டமாய்ப் பாவிக்கப்பட்டது. பின்னர், அது சண்டை முடிவிலிருந்து மூன்று வருஷங்கள் வரையில் அநுஷ்டானத்தில் வைப்பது என்று ஸெலக்ட் கமிட்டியார் (இதற்கானப் பிரத்தியேகக் கமிட்

டியர்) ஒத்துக் கொண்டனர். இக்கால வறையறை சட்டத்தின் கொள்கைகளை யுத்தேசித்து விவாதிக்கப்படும் விவாதத்தை எவ்விதத்திலும் மாற்றாது என்று நாங்கள் நினைக்கிறோம்.

அது 43 பகுதிகளாகவும் 5 உட் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதன் சுற்றுவழியே சுவாரசியமானது அது கூறுவதாவது:—

"கலக சம்பந்தமானவும், இராஜாங்க விரோதமானவுமான விஷயங்களைத் தடுக்கக் கவர்ன்மெண்டார் தங்கள் கைவசமாயுள்ள கிரிமினல் சட்டங்களை அதிகப்படுத்தியும் ஆபத்துக் காலத்து உபயோகிக்க வேண்டிய அதிகாரங்களை உபயோகப் படுத்தியும் வரவேண்டியது அவசியமாயிருக்கிறது."

அது பிரிட்டிஷ் இந்தியா முழுதும் வியாபிக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் எந்தப் பாகத்திலாவது கலக சம்பந்தமானவும், இராஜாங்க விரோதமானவுமான விஷயங்கள் நடப்பதாய் கவர்னர் ஜெனரல் நிச்சயங்கொண்டும், விளம்பரத்தில் கூறப்பட்டுள்ள கால அளவுக்குள் முதல் பாகத்தில் கூறப்பட்டுள்ள சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவரக்கூடிய குற்றவாளிகளும் ஏற்பட்டு, அக்குற்றவாளிகளினின்றும் ஜனங்களது சொத்து சுதந்தரங்களைக் காப்பாற்றுவதற்காக அவைகளை அதிசீக்கிரத்தில் வெளிக்குக்கொண்டு வரவேண்டிய ஆவசியகமும் ஏற்பட்டால் மட்டில் முதல் பாகம், தம் ஸபையோடு கூடிய கவர்னர் ஜெனரலுக் குதவியாயிருக்கிறது. இந்தச் சட்டத்துக்கு அநுகூலமாயிருப்பவர் நிர்வாக அதிகாரிகள் கையில் அதிக சக்தி இருப்பதாய் ஒத்துக் கொள்வதுமன்றி, உயர்ந்த பதவியைப்பெற்ற ஸபையினரோடுகூடிய கவர்னர் ஜெனரலுக்குக் கலக சம்பந்தமான அல்லது இராஜாங்க விரோத

மான காரியங்கள் கைதூக்கப்படுகின்ற தென்றுவது, நியாயவகையான கொள்கைகளை வேறு விதமாய் அமுல் செலுத்தப்படுகின்றன வாகையால் இவைகளை ரத்து செய்து போடவேண்டு மென்றுவது நினைக்கவேண்டுவது அநாவசியம் என்றும் வாதாடுகிறார்கள். பொதுவாய் இந்த உயர்ந்த அதிகாரி எவ்வாறு திருப்தி அடைகிறார் என்பதைப் பார்ப்போம். மிகவும் தாழ்ந்த போலீஸ்காரனிடமிருந்து இவ்விவகாரம் ஆரம்பமாகிறது. அப்போலீஸ்காரன் எவ்விஷயத்தையும் கிரகித்துக் கொள்ளச் சக்தியற்றவனாய், எதையும் சிக்கிரத்தில் நம்பி மேல் கோட்டைக் கட்டக் கூடியவனாய் இருப்பதால் கெடுதலுக்குக் காரணமாகிறது. அவன் தனது மேலதிகாரிக்கு, கலகத்துக்கிடமான விவகாரங்கள் நடை பெறுவதாயும் அதன் மீது குற்றங்களும் நடை பெறுவதாயும் தெரிவிக்கின்றான். அம்மேலதிகாரி அதன்மேல் அவ்விஷயத்தை உளவின்மேல் கண்டுபிடிக்க ஆரம்பிக்கிறார். அவர் அவ்விஷயத்தைக் கண்டு பிடித்தாலும், கண்டு பிடிக்காது போனாலும், விவகாரத்தி லடங்கிய போலீஸ்காரன் இன்னும் சில சாக்ஷியங்களைச் சேகரித்து உண்மையோ, தப்போ, படிப்படியாய் மேல்சென்று கடைசியில் கவர்னர் ஜெனரலுடைய காதுக் கெட்டுகிறது. அவர் இத்தகுதி பற்ற ஆதாரங்களைக் கொண்டு உத்தரவு செய்ய ஆயத்தமாகிறார். பஞ்சாபில் நடந்த சம்பவங்களைப் படித்தால், எவ்விதம் வதந்திகளும், சந்தேகங்களும் குற்றமற்ற ஜனங்களது கொலைக்கும் தண்டனைக்கும் காரணங்க ளாகின்றன வென்பது புலப்படும்.

நாம் இப்பொழுது ஜாப்தாவி லடங்கிய குற்றங்கள் யாவை யென்று கவனிப்போம். அவைகள் மிகவும் கொடிய இராஜத் துரோகமான குற்றங்களையும் பெற்றி

ருக்கின்றன. அவை, கொடுமையான ஆயுதங்களோடு கலகம் செய்யக் கூடியதும், இனத்தார்களுள் க்ஷாத்திரத்தை யுண்டுபண்ணக் கூடியதும் அபாயமான ஆயுதங்களால் ஆபத்தான உபத்திரவத்தை யுண்டுபண்ணியும், ஒரு அநீத சட்டத்தையாவது சொத்து சுதந்தரங்களைக் கெடுக்க வல்ல வழியையாவது அநுசரித்துத் துன்பத்தை யுண்டு பண்ணியும் கொள்ளை முதலியன செய்ய ஜனங்களைத் தூண்டியும் இன்னும் இவைபோன்று வேறு கெடுதல்களைச் செய்தும் விடக்கூடியனவா யிருக்கின்றன. இவ்விதத்தில் கவர்ன்மெண்டார் சட்டத்தைப் பற்றி வாதம் செய்வது, ஒரு மதசம்பந்தமான கலகம், ஒரு ஹிந்து முகம்மதிய சண்டை, கொள்ளைத் தொழில், ஆகிய இவைகள் யாவும் கலகத்தை யுண்டுபண்ணக் கூடியவை என்று கருதப்படக் கூடியவையாகும். ஒருதடவை அவ்விதம் சந்தேகிக்கப் பட்டால் அது எப்போதும் நீடித்திருக்கக் கூடியதாகும்.

குற்ற விசாரணை செய்யும் தோரணை யென்ன? இச் சட்டத்தைக் கொண்டுவரும் நபராது வார்த்தைகளில் அதைப்பற்றிக் கூறுவோம். இவ்விதமான விசாரணைகள், "இரகசியமான விடத்தில் குற்றவாளி கைது செய்யப் படாமல், அப்பீல் செய்துகொள்ளவும் அநுமதி கொடுக்கப்படாமல்" நடத்தப்பட வேண்டும். அந்த நியாய சபையார் அவ்வழக்கின் முழுவிவகாரத்தையோ, பாதியையோ அம் மாகாணத்தின் எந்த பாகத்திலாவது அவர்கள் நினைக்கும் வண்ணமும் அல்லது ஹைகோர்ட்டில் வழக்கமாய் உட்கார்ந்து விசாரணை நடத்தக்கூடிய இடத்தைத் தவிர, அட்வோகேட் ஜெனரல் அநுமதி கொடுக்கக்கூடிய வேறிடங்களிலும் நடத்தலாம்.

பிரஸ்தாப சட்டத்தின் முதல் பாகத்தை எவ்விதத்தி

ஹும் சம்பந்தப்படாத க்ரிமினல் ப்ரொஸிஜர் கோட், அதனுள் ளடங்கும் வழக்குகளை விசாரிப்பதில் உபயோகப் படுத்தப்படக் கூடாதென ஏழாவது ஸெக்ஷன் தெரிவிக்கிறது. எட்டாவது ஸெக்ஷன் 'மாஜிஸ்டிரேட்டால் விடுக்கப்பட்ட வாரன்ட் (Warrant) வழக்குகள்' சம்பந்தமானவற்றிற்குப் பிராணஹானி தண்டனையும் கொடுக்கத் தகுந்த விசாரணைகளை நடத்துவதற்கான வழிகளைச் சாங் தப்படுத்துகிறது. குற்றவாளி 14 நாட்களுக்கு மேல் படாத தவணையில், ஒரு தவணைதான் கேட்டுக்கொள்ளலாம். 18-வது செக்ஷன், எவிடென்ஸ் ஆக்ட் செக்ஷன்களிலுள்ள இரண்டு முக்கியமான செக்ஷன்களைச் சற்றுத் தழுவி கூறுகின்றது. இந்தியன் எவிடன்ஸ் ஆக்ட் என்று சட்டத்தின் 32, 33 செக்ஷன்கள் (பிரிவுகள்), இறந்த சாக்ஷியினது வாக்குமூலம் அவனது பண விவகாரங்களுக்கு அது விரோதமாயும் ஏற்கனவே குறுக்குவிசாரணை செய்யப் பட்டதாயும் இருந்தால் மட்டில் ஒப்புக்கொள்ளப்படும் என்பனவற்றைத் தெரிவிக்கின்றன. இவையிரண்டும் 18-வது செக்ஷன்களி லடக்கப்பட்டன. ஒரு மாஜிஸ்ட்ரேட் முன்னால் வாக்குமூலங் கொடுக்கவேண்டிய ஒருவன், இறந்துபோனாலாவது, அகப்படாது போனாலாவது, வாக்குமூலங் கொடுக்கச் சக்தியற்றிருந்தா லாவது போனால், கோர்ட்டார் அவ்விதமரணம், காணமற்போதல், சக்தியின்மை ஆகிய இவைகள் குற்றவாளிகளுக் கநுகூலமாய் முடிந்ததாய் நினைத்துத் திருப்தியடைவார்கள். நியாயத்துக்கு விரோதமான வழக்கை யுண்டுபண்ணத் தகுந்ததாய் இந்த செக்ஷனிருக்கின்றது. குற்றவாளிக்கநுகூலமாய் அந்த மரணம், காணமற்போதல், சக்தியின்மை முதலியன எப்போது நடந்தனவென்பதைக் கோர்ட்டார் கண்டறிவது மிகவும் கஷ்டமான காரியமாகும்.

ஆகவே குறுக்கு விசாரணை செய்யப்படாத ஒரு மனிதனது, சுயநன்மையைப் பாராட்டத்தகுந்த வாக்குமூலத்தின் பலத்தினல், ஒரு குற்றமற்ற மனிதனது உயிர் சுலபமாய் ஆபத்துக்குள்ளாக்கப்படலாம்.

17-வது செக்ஷன்பிரகாரம், அவ்வித விசாரணைகளில் கொடுக்கப்பட்ட தீர்ப்புகள் அப்பீலுக்காவது, புனர் விசாரணைக்காவது எடுத்துக் கொள்ளப் படமாட்டா. ஏனென்றால் இந்த நியாயஸபையில் மூன்று காயமான (Permanent) ஹைகோர்ட் ஜட்ஜ்கள் இருந்து வழக்குகளை விசாரிப்பதால் அப்பீல் செய்விக்கவாவது, புனர் விசாரணை செய்விக்கவாவது, எவிடென்ஸ் ஆக்ட், க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட்களால் கொடுக்கப்பட்ட பாதிஸ்வதந்திரமும் கொள்ளவாவது வேண்டியதில்லையென்று சொல்லப்படுகிறது.

சென்ற ஏப்ரல் மாதம் நடந்த விஷயங்களைப்பற்றி நாங்கள் பரீக்ஷித்தபோது மூன்று ஹைகோர்ட் ஜட்ஜிகள் சேர்ந்து, ஹைகோர்ட்டுக்குள்ள குணபாவங்களில்லாத இடத்தில் பிரத்யேகமாய் உட்கார்ந்து விசாரணைசெய்த காலத்தில் சங்கடமாயிருந்ததை நாங்கள் காண்பிப்போம். ஒரு உயர்ந்த நியாயாதிபதியும், வாக்குமூலங்களைச் சேகரிக்கும்போதாவது சட்டத்தைப் பிரயோகிக்கும்போதாவது உதவிக்குத் தகுந்த சட்ட நிபுணர்கள் இல்லாத காலத்து தவறுதல் செய்யக்கூடும். இவ்வளவுதான் ரௌலட்சட்டம் முதல் பகுதியைப்பற்றிச் சொல்லக்கூடும். அதுகுணத்தில் தண்டனைக் குரியதாயிருக்கிறது. இரண்டாவதுபாகம் தடுக்கக்கூடிய சட்டங்களைப்பற்றிக் கூறுகிறது. ஆகவே இச்சட்டத்தைப் பிரேரணைசெய்தவர் ஒத்துக்கொண்டபடி எதிர்ப்பதற்கு மிக்க அநுகூலமாயிருக்கிறது. முதல்பாகம் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்

குத்தகுந்த வழிகளைக் கற்பிப்பதாயிருக்க இரண்டாவது பாகம் கலகத்துக்குக் காரணமான குறிகள் ஏற்படுவதாய்த் தெரிந்த இடங்களென்று நன்ருய்த்தெரிந்தால் ஸபையோடுகூடிய கவர்னர் ஜெனரல் அவர்கள் இரண்டாவதுபாகத்திலடங்கிய பிரயோகங்களை உபயோகிக்கலாமென்னும் அதிகாரத்தை அது கொடுக்கிறது. ஆகவே செக்ஷன் 22 கலகத்துக்குச் சம்பந்தமானவனென்று நியாயமாய் ஒருவன், லோகல் கவர்ண்மென்டாருக்குத் தெரியவந்தால் அவன் வழக்கைப்பற்றிய சகல விவகாரங்களையும், ஹைக்கோர்ட் ஜட்ஜிடம் கொடுத்து அவர் அபிப்பிராயப்படி நடத்த உத்விபுரிகிறது. இரண்டாவது பாகச் சட்டம் அவசியமாய்ப் பிரயோகிக்கப்படவேண்டுமென்றே லோகல் கவர்ன்மெண்டார் அறிந்தால் ஒருவருஷத்துக்கு மேற்படாத காலத்துக்கு ஜாமீன் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அந்த ஜாமீன், தாகலாக்கப்பட்ட எந்தக்குற்றத்தையும் செய்யாமலிருப்பதற்கும், கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்காமல் தன்னிருப்பிடத்தை மாற்ருதிருப்பதற்கும், ஏதோ குறிக்கப்பட்ட ஓரிடத்திலேயே இருப்பதற்கும், பொதுஜன சமாதானத்தையோ பத்திரத்தையோ பங்கப்படுத்தாமலிருப்பதற்கும், அடிக்கடி சமீபத்திலுள்ள போலீஸாரிடத்தில் தன்னைப்பற்றிக் குறித்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதற்கும் வாங்கப்படுவதாகும்.

செக்ஷன் 24-கவர்ன்மெண்டாருக்கு, "அதிகாரத்தோடு கூடிய அங்கீகாரத்தைப்பெறத் தகுந்த எல்லாவழிகளையும்" உபயோகிக்க அதிகாரம் கொடுக்கிறது. இவ்விதம் சந்தேகமாத்திரத்தில் மிகவும் உயர்ந்தமனிதனும்போலீஸ்காராது முழுதயவில் அடங்கும்படியாய்விடுகிறது. இதுவே குற்றங்களைப் போக்கடிக்கக்கூடிய வழியென்று கருதப்

பட்டால் அது வியாதியைவிடக் கேடுகெட்டதாகும். வியாதியைக் கெடுக்க உபயோகிக்கப்பட்ட மருந்து வியாதியையே உண்டுபண்ணுவதுபோலாகும்.

இந்த இரண்டாவதுபகுதி லோகல் கவர்ன்மெண்டாரைக் கண்டிக்கத்தகுந்த தனியந்திரமாகவும் செய்கிறது. அதுகுற்றத்தைக் கண்டுபிடிக்கும் அதிகாரியெனக் கூப்பிடப்படுகிறது. லோகல் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட உத்தரவுகளை 22-வது செக்ஷன்பிரகாரம் திருத்த இந்த அதிகாரி சக்தியுள்ளவராகிறார். இதற்காக அவருடைய இஷ்டப்படியல்லாது அவசியமாய் இரகசியமான விடத்திலேயே விசாரணை நடத்தவேண்டும். அந்த அதிகாரி ஒவ்வொருவகையிலும் விவகாரம் நடந்துகொண்டிருக்கும்போது நியாயமானகாலங்களில் குற்றவாளியைத் தமது சபைக்கு முன்வரவும் அவ்விதம் வரும்போது அவன்மேலேற்படுத்தப்பட்ட குற்றத்தைத் தெரிவிக்கவும் வேண்டும்.

நாம் பிரத்தியேகமாய்க் கூறிய 26-வது ஸெக்ஷன், குற்றஞ்சாட்டப்பட்ட மனிதன் வக்கீல் உதவிபெறக்கூடாதென்றும் லோகல் கவர்ன்மெண்டாருக்கும் அவ்வதிகாரம் கிடையாதென்றும் தெரிவிக்கின்றது. பொதுஜன அமைதிக்காவது, தனிநபரது சௌக்கியத்திற்காவது கெடுதல் விளைவிக்கத்தகுந்த எவ்விஷயத்தையும் குற்றவாளிக்குத் தெரியப்படுத்தக் கூடாதென அது வற்புறுத்துகிறது. விசாரணைக்குக் கொண்டுவரப்படும் குற்றவாளி எவ்வித சௌகரியமும் பெறாமல் விசாரிக்கப்படும்போது தன்னைக் குற்றத்துள்ளாக்கக்கூடிய மனிதரையாவது, எழுத்துமூலமான தஸ்தாவேஜுகளையாவது காண்பிக்கும்படியாய்க் கேட்டுக்கொண்டாலும் அவ்வதிகாரி தன்னிஷ்டப்படி மறுக்கலாம். நியாயபங்கமான இவ்வளவு வகையும்

போதாதெனநினைத்து 26-வது செக்ஷனிலும் சில விஷயங்களை அச்சட்டம் விவரிக்கின்றது. இந்த விசாரணை நடக்கும்போது லா அவ் எவிடன்ஸ் என்னும் சட்டத்தையும் அநுசரித்து நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் இவ்வதிகாரிக்குக் கிடையாதென 26-வது செக்ஷன் தெரிவிக்கின்றது. கட்டுக்கமையாத பல செக்ஷன்களைப் பெற்றிருந்தபோதிலும் நியாயமான விவகாரங்களில் மனதை வெகு காலங்களாகச் செலுத்தியுள்ள ஒருவருக்குத் தன்னிஷ்டப்படியான நியாயத்தைச் சொல்ல மனம் துணியாதென நாங்கள் தைரியமாய்ச் சொல்வோம்.

27-வது செக்ஷன் குற்றசோதனை ரிபோர்ட்டைப் பைசல் செய்வதோடு அந்த ரிபோர்ட் கவர்ன்மென்டாரை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தத்தகுந்ததல்ல என்றும் தெரிவிக்கிறது. அதே செக்ஷன் முன்உத்தரவு பிரகாரம் இன்னும் பன்னிரண்டு மாதங்களுக்கு அந்தத் தவணையைத் தள்ளிவைத்துக்கொள்ளலாமென்று கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் கொடுக்கிறது. முடிவில் குற்றசோதனை அதிகாரிகள் எவ்வாறு நியமிக்கப்படுகிறுர்கள் என்ருல், "ஒருவர் இந்திய இராஜாங்க உத்தியோகப் பற்றில்லாதவராகவும் மிகுதியான இருவர் ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜ் ஸ்தானத்துக்குக் கீழ்பட்ட நியாயவிலாகா உத்யோகத்தைப் பெருதவர்களாயுமுள்ள நபர்களாயுமிருப்பார்கள்" எனவும் தெரிவிக்கிறது.

இச்சட்டத்தைப் பிரேரணை செய்யும் மெம்பர் சொல்வதுபோல் இரண்டாவதுபாகம் (Part II)முதல்பாகத்தைவிட (Part I) கெடுதலானதா யிருந்தால், "மூன்ருவது பாகம் (Part III) இவைகளைக் காட்டிலும் இன்னும் பலமானதா யிருக்கிறது" என்பதாகும். இதைப்பற்றி ஸர் உவில்லியம் ஸென்ட் ஆறுதலாய்க் கூறுவது யாதெனில்,

"பொதுஜன அமைதியைப் பங்கப்படுத்தக்கூடிய ரீதியில் முன் பதிவு செய்யப்பட்ட குற்றங்கள் விசேஷமாய்ப் பரவியிருக்கின்றனவென்று நன்ருய்த்தெரிந்தால் மட்டில் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் அவர்கள் அமுலுக்குக் கொண்டு வரக்கூடும்" என்பதாகும். முதல் பாகத்திலோ (Part I) பதிவு செய்யப்பட்டுள்ள குற்றங்கள் பொது ஜன அமைதியைப் பங்கப்படுத்தக் கூடிய ரீதியில் மிகவும் பரவியிருந்தால் மட்டில் பொதுஜன சாவதானத்தைக் காப்பாற்ற அக்குற்றங்களைச் சீக்கிரம் தண்டிக்கப் பிரயத்தனப்படவேண்டும் என்பதாகும். மூன்ருவது பாகமோ (Part III) பொது ஜன சாவதானத்தைப் பங்கப் படுத்தக் கூடிய ரீதியில் பரவியிருந்தால் மட்டில் அமுல் நடத்தப்படும் என்பதாகும். ஆகவே இரண்டுக்கும் விசேஷ வித்தியாசம் இருப்பதாய்த் தெரியவில்லை. அப்படிக்கிருந்தும் மூன்ருவது பாகம் (Part III) 34 வது செக்ஷன், சந்தேகிக்கப்பட்ட மனிதனை ஒரு நியாயாதிபதி முன் கொண்டு வருவதற்குக் கவர்ன்மெண்டாருக்கு அதிகாரங் கொடுப்பதல்லாமல், அந்த நியாயாதிபதியின் அபிப்பிராயத்தின் மேல் பாகம் (இரண்டு) (Part II) செக்ஷன் 22 பிரகாரம் எச்சரிக்கையாவது முன்னறிவிப்பாவது இல்லாமல் கைது செய்யவும் அவனைத் தண்டிக்கவும் அவனது இடத்தைச் சோதனை போடவும் அதிகாரம் கொடுக்கிறது. பிறகு உத்தரவுகளிடப்பட்டதும் எவ்விதம் விவகாரத்தை நடத்த வேண்டுமென்பது இரண்டாவது பாகத்தில் (Part II) அடங்கியதேயாகும். ஆகவே குற்றசோதனை அதிகாரி குற்றசோதனை செய்வதற்காக ஒரு குற்றவாளியை சரியான விசாரணைக்குக் கொண்டுவராமல் இரண்டுவருஷங்கள் வரையில் வைத்திருக்கலாம் என்று ஏற்படுகிறது. அந்தச் சட்டம் ஒருவரைச் சிறையிலடைக்கமட்டில் ஏற்படுத்

தப்பட்டதல்லாது மனக்கிளர்ச்சியும் ஆர்வமும் தோன்றி ஜனங்கள் அல்லல் படும்போது அவர்களைத் தாக்கவும் இடங் கொடுக்க ஏற்படுத்தப்பட்டதாய்த் தெரிகிறது. பயம், கலகம், இராணுவச்சட்டம் என்ற பேர்கள் மட்டி யில்லாது ஒழுங்கின்றி விளங்கும் அரசாட்சியை ஒருவர் நினைத்துக்கொள்வது கஷ்டமான காரியமல்ல.

நான்காவது பாகம் (Part IV) இந்தியப்பாதுகாப்புச் சட்டத்தால் ஏற்கனவே தண்டிக்கப்பட்ட நபரைப்பற்றிய தாகும். அது இரண்டாவது பாகத்திலடங்கிய செக்ஷன்க ளாலும், வங்காள ராஜியகுற்றவாளிகள் ரெகுலேஷனி (Bengal State Prisoner's Regulation)ல் அடங்கிய செக் ஷன்களாலும், மூன்றாவது பாகத்திலடங்கிய செக்ஷன்க ளாலும் குற்றஞ்சாட்டப்பட்ட நபரையும் குறிக்கும். இந் திய ஆர்டினன்ஸ் (India Ordinance) என்னும் சட்டத் தால் குற்றஞ் சாட்டப்பட்ட நபரையும் இரண்டாவது பாகத்துக்குட் படுத்தும்.

முதல்பாகம், இரண்டாம் பாகம், மூன்றும்பாகம் ஆகிய இவைகள் ரத்துசெய்யப்பட்டாலும் நான்காவது பாகம் இவைகளைப் பூர்த்திசெய்யும். விசாரணை, பரி சோதனை, உத்தரவு பிறப்பித்தல் ஆகிய இவைகள் ஒருவர் மேல் நடந்துகொண்டிருக்கும் இதைப்போன்ற வேறொன் றும் அவர்மேல் தொடரப்படலாம். இதுதவிர பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் மூன்றாவது பாகத்தைக்கொண்டு நட வடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் விவகாரம் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு 'வெளியிலும் செல்லும் என்பதைத் தெரி விக்கின்றது.

செக்ஷன் 42. ஜனங்களது நன்மைக்காக நல்லெண் ணத்தோடு இந்தச் சட்டத்தைக்கொண்டு நடவடிக்கை நடத்தப்பட்ட விஷயத்தின்மேல் எவரும் எவர்மேலும்

எக்கோர்ட்டிலும் வியவகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாது எனத் தெரிவிக்கிறது. கடைசி செக்ஷன் கூறுவது யாதெனில் 'இந்தச்சட்டம் லோகல் கவர்ன்மெண்டாரது இதர ஆதிகாரங்களுக்கு அநுகூலமாய் ஏற்பட்டிருக்கிறதே தவிர அவைகளைக் குறைக்கக் கூடியதாய் ஏற்பட்டிருக்க வில்லை,' என்பதாகும்.

இந்தச்சட்டமே, இதற்குமுன் இந்தியாவில் எப்போதுமே தோன்றியிராத பலத்த ஆக்ஷேபனையைப் பெற்றதாகும். இந்தச் சட்டத்தைப்பற்றித் தப்பபிப்பிராயம கவர்ன்மெண்ட் தரபில் கொண்டு வாதிக்கப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு நாங்களும், இவ்விதம் ஜனங்களும் தப்பபிப்பிராயம் கொள்ளக் கூடுமென நினைக்கிறோம். உத்தியோகதரபிலும் இது தப்பர்த்தம் நிச்சயமாய்க் கொள்ளப்பட்டிருக்கிறது. நாங்கள் ஜனங்களிடமிருந்து கேள்வியுற்ற தப்பர்த்தம் யாதெனில் " ஒரு அப்பீலும் கிடையாதாம், ஒருவிஷயவாதமும் கிடையாதாம், ஒருவக்கீலும் கூடாதாம்" என்பதாகும். இதுவே ஜனங்களது அபிப்பிராயமானால் இதனாலுண்டாகக்கூடிய பலனைக் காட்டிலும் தீமையே அதிகமாமென நாங்கள் நினைக்கிறோம். தன்னயம் பாராட்டும் எவனும் இனத்தாரில் கலகம் உண்டாக்கச் சம்மதியானென்பது எங்களபிப்பிராயம். இவ்வளவு ஜனங்களும் எதிர்த்தும் கவர்ன்மெண்டார் பிடிவாதமாய் நிறைவேற்றத் துணிந்தது அவர்களது முழுக் குற்றத்தையும் தெரிவித்து விட்டது. அபாயகரமான காலங்களில் நிலைமையைச் சீர்திருத்த வைஸிராய் அவர்களுக்கு வேண்டிய அதிகாரங்களிருக்கின்றன. இராஜாங்க விரோதகலகம் இந்தியாவில் அரிதாயிருக்க இந்தியாவுக்கே உரியதாய்ப்பாவித்து, இராஜாங்க விரோதத்தைப் போக்கடிக்க வல்ல சிலாக்கிய மருந்தான தாராள ஹ்ருதயத்

துடன் செய்யப்பட்ட சீர் திருத்தம் கொண்டுவரப்படும் இச்சமயத்தில் இந்திய இராஜாங்க சட்டப் புத்தகங்களுள் ஒன்றாய் இதையும் சேர்க்கப் பார்ப்பது மிகவும் அதிருப்தி கரமான விஷயமாகும்.

அத்தியாயம் 4.

ஸத்தியாக்ரஹம்

பல பத்திரிகைகளும், இம்பீரியல் சட்டச் சபையைச் சார்ந்த இந்திய மெம்பர்களும், ஆக்ஷேபனை செய்யும்படி நிற்கும் ரௌலட் சட்டத்தோடு போராட மிஸ்டர் காந்தியால் இந்த சத்தியாக்ரஹக் கிளர்ச்சி ஏற்படுத்தப்பட்டதாகும்.

ஜனங்கள் சத்தியாக்ரஹம் என்றால் என்ன வென்பதையும் எவ்வாறு அநுஷ்டிக்கப்படவேண்டும் என்பதையும்பற்றி சொற்பமே அறிந்திருக்கின்றனர். ஆகவே இதைப்பற்றி முழு விவரங்களையும், இதை யேற்படுத்திய கர்த்தாவின் சொந்த பதங்களிலேயே கீழ் விவரிக்கின்றோம்:—

"சென்ற 30-வருஷங்களாகவே நான் சத்யாக்ரஹத்தை உபதேசஞ் செய்துகொண்டும் அநுஷ்டித்துக் கொண்டும் வருகிறேன். இப்போது நான் தெரிந்துகொண்டதுபோல் சத்தியாக்ரஹத்தின் கொள்கைகள் பலவிடங்களில் வியாபிக்கப் பட்டிருக்கின்றன.

ஸத்யாக்ரஹம் என்னும் பதம் என்னுல் தென்னுப்பிரிக்காவில் முதல் முதல் வெளிக்கொண்டு வரப்பட்டது. இந்தக்கிளர்ச்சி தென்னுப்பிரிக்க இந்தியர்களால் எட்டு வருஷகாலம் கையாளப்பட்டதாகும். ஐக்கிய இராஜாங்

கம் (United Kingdom) (இங்கிலாந்து, ஐர்லாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் ஆகிய இவைகளடங்கிய இராஜாங்கம்), தென்னுப்பிரிக்கா முதலிய விடங்களில், அக்காலத்தில் வழங்கிக் கொண்டிருந்த பாஸிவ் ரெஸிஸ்டன்ஸ் (Passive Resistance) என்னும் பதத் தொடரினின்றும் வேறுபட்டது என்பதைத் தெரிவிக்கவே இப்பதம் வெளியிடப்பட்டது. இதன் தத்வார்த்தம் என்னவென்றால் உண்மையைக் கடைப்பிடித்தல்; ஆகவே "உண்மைச் சக்தி" யாகும். இதை நான் விருப்பச் சக்தி அல்லது "ஆத்ம சக்தி" என்றும் கூப்பிட்டிருக்கிறேன். சத்யாக்ரஹத்தை அநுஷ்டித்த முதற்காலத்தில் இதனால் விரோதிக்குப் பலாத்காரப் பிரயோகம் எதுவும் நடைபெருதெனக் கண்டுகொண்டேன். ஆனல் அநுஷ்டிப்பவர் குற்றமற்ற பொறுமையையும் இரக்கத்தையும் பெறவேண்டுவது அவசியமாகும். ஒருவருக்கு உண்மையாய்த் தோற்றுவது பிறர்க்குப் பொய்யாய்த் தோற்றலாம். பொறுமை என்றால் ஸ்வயகஷ்டத்தை அபேக்ஷித்தல். ஆகவே இதனின்றும் விளங்குவது யாதெனில் உண்மைக்காக ஸ்வயகஷ்டத்தை அபேக்ஷித்தல் என்பது இக்கொள்கையின் பொருளே தவிர பிறர்க்குத் தீங்கிழைத்தல் என்பதல்ல.

சத்தியாக்ரஹம் என்பதற்கும், பாஸிவ் ரெஸிஸ்டன்ஸ் என்பதற்கும் பொருள் மிக்க வேறுபட்டதாகும். பாஸிவ் ரெஸிஸ்டன்ஸ் என்பது சக்தியற்றவர்கள், போராட்டம் கலகம் முதலிய ஆத்மசக்தியால் தன்னெண்ணத்தை நிறைவேற்ற எடுத்துக்கொண்டுள்ள ஆயுதம் எனக் கருதப்பட்டது. ஆனல் சத்தியாக்ரஹமோ சக்தியுள்ள மனிதர்களால் எவ்விதமான போராட்டமுமில்லாது தன் நல்ல எண்ணத்தை நிறைவேற்ற எடுத்துக்கொண்ட ஆயுதம் எனத் தெரிவிக்கிறது.

பார்ஸீகர்களுடையவும் மீடெஸினுடையவுமான சட்டங்கள் தன் உள்ளக் கருத்துக்கு விரோதமானவையாயிருந்தமையால் டானியல் என்னும் பிரபு உண்மையான சத்தியாக்ரஹத்தைக் கைக்கொண்டு எதிர்த்துக் கஷ்டத்தை யனுபவித்தார். அதீனியப் பிள்ளைகளுக்குத் தனக்கு உண்மையானவற்றைப் போதித்தால் மரணதண்டனை ஏற்பட்டபோதிலும் ஸாக்ரடீஸ் அவர்களுக்குப் போதனை செய்ததை விடவில்லை. இந்த விதத்தில் இவர் சத்தியாக்ரஹிதான். பிரஹ்லாதனுக்குத் தன் தந்தை போதித்தது நியாயமெனத் தோன்றாததால் அவரால் ஏற்பட்ட கொடுந்தண்டனையை மிக்கப் பொறுமையுடன் சகித்தார். மிராபி என்னும் மாது தன் கணவன் மனதுக் கிசைந்து நடக்கும்படி எவ்வளவு தூரம் வற்புறுத்தப் பட்டபோதிலும், தன் மனதுக்கு நியாயமெனத் தோற்றியதை கைவிடாது பிரிந்திருந்து கணவனால் ஏற்பட்ட சங்கடங்களை அனுபவிக்க இயந்தனளே தவிர கணவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவில்லை. பிரஹ்லாதனும், மிராபியும் சத்தியாக்ரஹத்தை அநுஷ்டித்தனர். டானியல், பிரஹ்லாதன், மிராபி, ஸாக்ரடீஸ் ஆகிய இவர்கள் யாவரும் பிறருக்கு எவ்விதக் கஷ்டத்தையும் கொடுக்கவில்லை என்பதை யாவரும் நன்றுயுணரவேண்டும். டானியலும், ஸாக்ரடீஸும் அவரவர்கள் நாட்டுச் சிறந்த மனிதர்களே யாவர். பிரஹ்லாதன் உண்மையான பிள்ளைதான்; மிராபியும் கற்புக்கரசிதான்.

இந்த ஸத்தியாக்ரஹம் புதிதானதல்ல. இந்தக் கிரஹக் கொள்கைகளே இராஜாங்கக் கொள்கைகளாயின. ஓர் குடித்தனத்தில் ஏற்படக்கூடிய வழக்குகளும், மனஸ்தாபங்களும் அன்பாகிய சட்டத்தினால் தீர்த்துவைக்கப் படுகின்றன. ஓர் குடித்தனத்தில் கஷ்டப்படுகிறவன் பிற

ரால் நன்கு மதிக்கப்படுகிறான். ஏனென்றால் அவன் கஷ்டப்படுவதெல்லாம் உயர்ந்த கொள்கைகளை நிலைநிறுத்தவே. இதற்காகத் தன் எண்ணத்துக்கு விரோதமாயிருப்பவர்களை இம்சை செய்வதுமில்லை. கோபித்துக் கொள்வதுமில்லை. கோபத்தை யடக்கலும் ஸ்வயகஷ்டத்தை யனுபவித்தலும் மிக்கக் கஷ்டமானவையாயிருந்தாலும் கொள்கைகளை அற்பமா யெண்ணுவதுமில்லை. ஆனால் முக்கியமல்லாத விஷயங்களில் குடும்பத்து இதர மனிதர்களோடு இயைந்து பிறருக்கு இம்சையை ஏற்படுத்தாமல் சமாஸ்யாவம் குடும்பத்தில் நிலை பெறும்படி உதவி புரிகிறான். இவ்விதம் ஓர் குடும்பத்து மனிதன் தடங்கலாயிருந்தாலும் தனித்து நின்றாலும் குடும்பத்தின் க்ஷேமத்தை நாடியே வேலை செய்தவனாகிறான். நாகரீகம் முதிர்ந்த உலகு முழுதும் இவ்விதமான உண்மையால்தான் சாந்தமானதாயிருந்தாலும் நிச்சயமாகக் குடித்தனம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

தேசத்தார் கொள்கைகளில் ஒன்றாயிருக்கமுடியாது, அவர்கள் செய்கைகளும் எல்லா தேசத்தவர்களும் அநுஷ்டிக்கத் தகுந்த நற்செய்கைகளாகவுமிரா என்பனவற்றை நான் நன்றாயுணர்வேன். அப்படிக் கிருந்தும் குடித்தன விவகாரங்களில் மேற்சொல்லப்பட்ட வண்ணம் நடத்தைகள் தேச வித்தியாச விவகாரமின்றி இருந்தால் தான் இந்த இராஜாங்க விஷயங்களும் ஒவ்வும். இந்தச் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடத்தலை எவ்வளவுதூரம் அநுஷ்டிக்கின்றார்களோ அவ்வளவு தூரம்தான் அத்தேசம் நாகரீகம் முதிர்ந்த தேசமெனக் கருதப்படும்.

இந்த அன்பென்னும் சட்டமானது உண்மை யென்னும் சட்டத்தைத் தவிர வேறு இல்லை. ஒரு தேசத்தார் மற்றவர்களுக்கு ஹிம்சை செய்வதற்காக உண்மை யில்லா

விசுவாசத்தைப் பெற்றிருக்கக் கூடும். இது ஒரு சிறுவன் ஒரு பெண்மீது மோகங் கொள்வது போலவே யாகும். அல்லது உன்மத்தரான பெற்றோர்கள் தம் குழந்தைகள் மீது குருட்டுத்தனமான அன்பைக் கொள்ளுதல்போலாகும். அன்பென்பது ஜீவ வித்தியாசமின்றி எல்லாப் பிராணிகளிடத்தும் செல்வதாகும். அது ஒருபோதும் பாரபக்ஷமானதல்ல ஆகவேதான் சத்தியாக்ரஹம் என்பது ஓர் நாணயம் என்றும், அந்த நாணயத்தின் முகப்பக்கத்தில் அன்பும் பின்பக்கத்தில் உண்மையும் உளது என்றும் கூறப்படுகிறது. அந்த நாணயம் அளவற்ற மதிப்புடன் எல்லா விடங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

சத்தியாக்ரஹம் தன் பலத்தைச் சார்ந்து நிற்றலாகும். அது உபயோகிக்கப் படுமுன் விரோதியினது அனுமதியைப் பெற்று உபயோகிக்கப் படுவதல்ல உண்மையாகவே அது எதிரிகள் எவ்வளவுதூரம் மன்றுடுகிறார்களோ அவ்வளவுதூரம் இதன் சிறப்பும் பிரகாசிக்கும். ஆகவே அது எதிர்க்க முடியாத பலத்தோடு கூடியதாகும். சத்தியாக்ரஹிக்குத் தோல்வி யென்பதே தெரியாது. ஏனென்றால் சலிப்பின்றி அவன் உண்மைக்குப் பாடு படுகிறவனாகும். இந்தச் சண்டையில் உயிரிழப்பவன் பாசறையினின்றும் விமோசனத்தை யடைவதைவிட ஸ்வதந்தரத்தைப் பெற வல்ல வழியையும் பெறுவதாகும்.

ஆத்ம சக்தி என்று இதற்குப் பெயர்வரக் காரணம் யாதெனில் ஆத்மா என்று ஒன்று நம்முள் இருக்கிறது என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டுவது அவசியம். சத்தியாக்ரஹி, மரணம் என்பதைக் கஷ்டத்தின் முடிவு என்று உணராமல் உயர்ந்த நிலைமையை அடைதல் எனக் கொள்ளல் வேண்டும். தனது அபிப்பிராயத்தைத் தெரிவிப்ப

தற்குச் சரீரம் ஒரு கருவியாக விளங்குகிறது. சத்தியாக்ரஹி, தான்கொள்ளும் உண்மை அவனது விரோதிகொள்ளும் அபிப்பிராயத்திற்கு இடையூறு யிராமலிருப்பதற்குத் தன்னுடலை விடுகிருன். எதிரியின் அபிப்பிராயம் எவ்விதத்திலாவது அநுகூலப்பட வேண்டும் என்ற சத்தியமான எண்ணத்தின்மேல் தன் உடலை விடுகிருன். இவ்விதம் மனமொப்பி சத்தியத்திற்காக உடலைக் கொடுக்க வேண்டும். சரீரம் அழிகிறதே தவிர ஆத்மா அழியவில்லை என்ற எண்ணத்தைக் கொண்டால்தான் உண்மையின் வெற்றியை இந்தச் சரீரத்தைக் கொண்டே பெற விரும்பாதவனாகிருன். உண்மையாகவே வெற்றியானது எதிரிக்கு உண்மையைப் போதிக்கும் ரீதியிலிருக்கிறது. இதைத்தான் சத்தியாக்ரஹி இகலோகத்தில் தெரிவிக்க முடியும். சத்தியாக்ரஹி எதிரிக்குத் தீங்கிழைக்காததுமன்றி சாந்தமான வழியால் நல்ல புத்தியையோ, நல்ல ஹ்ருதயத்தையோ உண்டு பண்ணுவதால் அது அவனுக்கு இரண்டு விதங்களில் நன்மையை யுண்டு பண்ணுகிறது. இவ்விதம் இதை அநுஷ்டிப்பவனுக்கும் நன்மையை யுண்டு பண்ணுவது மன்றி யாருக்கு விரோதமாய் அனுஷ்டிக்கப்படுகிறதோ அவருக்கும் நன்மையை யுண்டுபண்ணுகிறது. இதைச் சிலரேதான் அனுஷ்டிக்க முடியும் என வாதிக்கப்பட்டிருக்கிறது என்னுடைய அநுபவம், இதற்கு விரோதமானதா யிருக்கிறது. அதன் அற்பக் கொள்கைகளான —உண்மையைக் கடைப்பிடித்தல், ஸ்வய கஷ்டத்தை பொருட்படுத்தாமை—ஆகிய இவைகளை ஒருவன் நன்றாயறிந்தால் எவனும் இதை அனுஷ்டிக்கக்கூடும். வேறு எந்த நற்குணத்தை அனுஷ்டிப்பதைக் காட்டிலும் இதை அனுஷ்டித்தல் மிகவும் இலகுவானது. உபவாசமிருப்பதற்கு ஒருவன் எவ்வளவு விஷயத்தைக் கற்கவேண்டுமோ

அவ்வளவு வேதாந்த விஷயங்களைத்தான் இதற்கும் கற்க வேண்டும்.

எல்லாங்கூடி பார்க்குமிடத்து, உண்மையைக் கடைப் பிடிப்பது நியாயமென்பதற்கு விரோதமாய் எவருமே இல்லை. எதிரியோடு அநாகரிகமாய் பலத்தை உபயோகப் படுத்தி உண்மையைப் போதிப்பது என்பது யுக்தமான தல்ல. இதை யாவரும் சுலபமாய் அறியக்கூடியதே. குற் றத்துக்குக் கீழ்ப்படிதல் மிகவும் தப்பிதமாகும். ஏனென் ருல் வாதம் ஒருவனது அபிப்பிராயத்தை மாற்றுதலரிது. அவனை நல்ல வழிக்குக் கொண்டு வருவதற்கு கௌரவமும் உண்மையுமானவழி தன்னுயிரைக் கொடுத்தாவது உண் மைக்கு அடங்கி நடத்தலேயாகும். இப்படி இருந்தால் தான் உலகத்தில் குற்றம் என்பது இராது. முக்கியமான வஸ்துவுக்குத் தொந்தரவேற்படும்பொழுது இதற்கு மத்தியஸ்தமு மேற்படாது.

“ஆனல் இராஜாங்க விவகாரத்திலோ ஜனங்கள் அநியாயச்சட்டங்கள் என்ற குற்றத்துக்கு விரோதமாய்ப் போராடுகின்றனர். நீங்கள் இவ்விதச்சட்டங்கள் ஏற் படுத்தினவர்களை மநு முதலிய விவகாரங்களால் ரத்து செய்யக் கேட்டுக்கொண்டது முடியாமற்போகவே நமக்கு ஏற்பட்டுள்ள இதாமுக்கியவழி அவ்வகைச் சட்டங்களுக் குக் கீழ்ப்படியாதிருத்தலேயாகும். இவ்விதம் நீங்கள் கீழ்ப்படியாதுபோனல் சட்டத்தை அவமானப்படுத்திய தோஷத்தால் தண்டனைக்குள்ளாகும்படி ஆகிறீர்கள். நீங் கள் தண்டனைக்குத் தயாரானல் அவர்கள் இணங்கத்தான் நேரிடும். ஆகவே சத்யாக்ரஹத்தை ஒழுங்காய் எதிர்த்தல் என்று ஜனங்கள் அழைக்கின்றனர். அது குற்றமில்லாத விதத்தில் ஒழுங்காய் எதிர்த்தலைச் சார்ந்ததாகும்.

குற்றவாளி அதாவது சாதாரண சட்ட விரோதமான

குற்றவாளி மூடத்தனமாய்ச் சட்ட விரோதமாய் நடந்ததுமன்றி தண்டனைக் குட்படவும் மனங்கொள்வதில்லை. ஆனால் சத்யாக்ரஹி அவ்விதமில்லை. சத்தியாக்ரஹி எப்போதும் சட்டத்துக்குக் கீழ்ப்படிபவன். ஆனால் அவன் அவ்விதம் கீழ்ப்படிதல் சட்டத்தைக்கண்டு பயந்தல்ல. இனத்தாரது க்ஷேமத்தை நாடியேயாகும். ஆனால் சில சமயங்களில் சில சட்டங்கள் இனத்தாரது க்ஷேமத்தைப் பங்கப்படுத்தக் கூடியதுபோல் தோன்றுவதுண்டு. அப்போது அவன் சட்டத்துக்கு விரோதமாய் நடந்து அதனால் கிடைக்கக்கூடிய தண்டனைக்குமுள்ளாகச் சித்தமாகிறான். சட்டமேற்படுத்தியவர்க்கு இவ்விதம்தான் விரோதமாயிருக்கும் தன்மையைத் தெரியப்படுத்த சத்தியத்துக்கும் நல்லொழுக்கத்துக்கும் மாறாத எச்சட்டத்துக்கும் கீழ்ப்படியாதிருந்து தெரிவிக்கின்றான். என் அபிப்பிராயத்தில் சத்தியாக்ரஹத்தின் அழகும் சிரேஷ்டமும் அதிகமான தென்பதும் குழந்தைகளுங்கூட அநுஷ்டிக்கத் தகுந்தது என்பதும் ஆகும். ஒப்பந்த இந்திய ஆட்கள் என்று கூப்பிடப்படும் இனத்தார்களைச் சார்ந்த அநேக ஆயிர மனிதர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் முதலானவர்களுக்கு என்னால் போதிக்கப்பட்டதாகும். அதனால் மிக்க நன்மையும் ஏற்பட்டிருக்கிறது.

ரௌலட் சட்டங்கள் வெளிவந்த காலத்து அவற்றைத் தன்னால் கூடிய வரையில் எதிர்த்துப் போராட வேண்டியவளவு மனிதர்களது சுயேச்சையைப் பங்கப்படுத்துவதாய் நான் கண்டுகொண்டேன். இவ்விதமே இந்தியர்கள் யாவரும் நினைத்ததாயும் தெரியவந்தது. சுயேச்சையான இராஜாங்கத்தாரே அநுஷ்டிக்கத்தகுந்த முறையல்லாத முறையை ஒழுங்கான சபைகளுடைய இந்தியகவர்ன்மெண்டார் முதன் முதல் அநுஷ்டிப்ப

தென்றால் ஒழுங்கற்றதான காரியமாகும். வரக்கூடிய கிளர்ச்சி ஒடுங்கினாலும் சரி, பலாத்காரப் பிரயோகத்தில் கொண்டுவந்து விட்டாலும் சரி ஒரு விதத்தில் ஏதாவது முடிவுக்கு வரவேண்டுமென்பதையும் உணர்ந்தேன்.

ஆகவே, நான் சத்யாக்ரஹத்தின் உண்மையை ஒழுங்காய் அநுசரித்து எதிர்த்துப் போராட வேண்டிய கொள்கைகளை வெளியிடத் துணிந்தேன். இது உண்மையாகவே அந்தரங்க சுத்தியையும் கிளர்ச்சியையும் தெரிவிப்பதால் உபவாசம், வேலையற்ற ஒய்வு, பிரார்த்தனை முதலியவைகளை ஏப்ரல் மாதம் ஆறும் தேதி அநுஷ்டிக்க வேண்டுமென்றும் தெரிவித்தேன். இவ்விரதத்தை இந்தியாவிலுள்ள ஜனங்கள் யாவரும் கொண்டாடினர். இதை யனுஷ்டிக்க வேண்டிய கிராமத்துச் சங்கங்களாவது முற்பிரயத்தனமாவது கிடையாது. அப்படிக்கிருந்தும் மூலை முடுக்கிலுள்ள கிராமங்களும் அனுஷ்டித்தது மிக்க ஆச்சரியப்படத் தகுந்த விஷயமாகும். இக்கொள்கையை அநுஷ்டிக்கத் தான் வேண்டுமென்று தெரிந்தவுடன் மகா ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஏப்ரல் மாதம் ஆறும் தேதி ஜனங்களால் எவ்வித தொந்தரவும் ஏற்படவுமில்லை, போலீஸார் தலையிடவேண்டிய நிர்ப்பந்தமான விவகாரமும் ஏற்படவுமில்லை. இந்தக் கொண்டாட்டம் உண்மையாகவே திடீரென்றும் தன்னிச்சையுடனும் செய்யப்பட்டதாகும். மார்ச்சுமாதம் 24-ம் தேதி மதராஸ் ஜனங்களுக்குப் பின்வருமாறு அனுப்பிய விஷயங்களைத் தவிர கொண்டாட்ட விஷயமான வேறு விஷயங்களைப் பிறகு அனுப்பினதேயில்லை.

"நான் அநேக கூட்டங்களில் தெளிவாய்க் கூறியிருப்பதுபோல் சத்தியாக்ரஹம் என்பது ஒரு மதசம்பந்தமான கிளர்ச்சி என்பதைக் கூறுகிறேன். இது சுத்திக்கும்

தபசுக்கு முரித்தான வழியாகும். அது சீர்திருத்தத்தையோ, கஷ்டத்தினின்றும் நீக்கக்கூடிய மன ஆறுதலையோ ஸ்வயகஷ்டத்தின்மேல் கொடுக்கத் தகுந்ததாகும். ஆகவே நான் வைசிராய் அவர்கள் 1919-ம் வருஷம் இரண்டாவது சட்டத் (Bill) துக்குத் தம்மிஷ்டத்தைக் கொடுக்கவந்த ஞாயிற்றுக்கிழமைக்கு மறு ஞாயிற்றுக்கிழமையில் யாவரும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கும்படி சொல்லத் துணிந்தேன். ஒழுங்காய் அடக்கத்துடன் ஜனங்கள் யாவரும் கொண்டாடி நற்பலனை யடைவதற்குப் பின்வரும் கொள்கைகளை வெளியிடுகின்றேன்:—

(I) மதசம்பந்தமான விஷயத்தினுலாவது, சரீர அசௌக்கியத்தினுலாவது தடங்கல் ஏற்பட்டாலன்றி மற்ற எந்த விஷயங்களிலும் யாவரும், முதல் நாள் இரவு சாப்பிட்ட மணிநேரத்தினின்று மறுநாள் இரவு அதே மணி நேரமுள்ள 24-மணி அவகாசகாலம் யாவரும் உபவாசமிருந்து இதை அநுஷ்டிக்கவேண்டும். இந்த உபவாசம் கவர்ன்மெண்டாரைப் பாதிக்கக் கூடிய எந்தவகையாகவு மிருக்கக்கூடாது. சத்தியாக்ரஹிகளாய்ச் சேர்ந்துள்ள யாவரும் அவர்கள் வாக்குத் தத்தம் செய்துள்ள கொள்கைகளுக்கு மாருமல் ஒழுங்காய் சத்தியத்துக்குப் போராடத் தகுதியுள்ளவர்களெனத் தகுந்த குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். மற்றையோர் தங்கள் மனக் கொதிப்பை மட்டில் தெரிவிப்பதற்காக அநுஷ்டித்தால் போதும்.

(II) பொதுஜன சம்பந்தமான எவ்வித அவசிய நற்காரியங்களையும், அன்றைய தினத்துக்கு மட்டில் நிறுத்தி வைக்கவேண்டும். சந்தை முதலிய எல்லா வியாபாரஸ்தானங்களையும், அன்று தினத்துக்கு மூடிவிடவேண்டும். ஞாயிற்றுக்கிழமைகூட வேலைசெய்யவேண்டிய

உத்தியோகஸ்தர்கள் முன்னதாகவே ரஜா (விடுமுறை) வாங்கிக்கொண்டு இதைக் கொண்டாடலாம்.

பொதுஜன ஊழியக்காரர்களான உத்தியோகஸ்தர்களுக்கும் மேற்சொன்ன இரண்டு கொள்கைகளும் சார்ந்தனவாகும். அவர்களும் அநுஷ்டிக்கலாம். அவர்கள் பொதுஜன விவகாரங்களில் தலையிடக்கூடாதென்றிருந்த போதிலும் வெகு முக்கியமான இவ்விவகாரங்களில் அதுவும் அற்பக் கட்டுப்பாட்டுக் குள்ளடங்கி சந்தேகமற நடக்கலாம்.

(III) கிராமங்கள் உள்ளடங்கிய சகல விடங்களிலும் பொதுக்கூட்டங்கள் கூட்டப்பட்டு அவைகளில் இச்சட்டங்கள் *ரத்துசெய்யப்படவேண்டுமென்று பிரார்த்தனைகள் நடைபெறவேண்டும்.

என்னுடைய புத்திமதியை அங்கீகரிக்க எண்ணங்கொண்டால் எல்லா சத்தியாக்ரஹ சங்கத்தார்களும் ஒழுங்காய் வேண்டிய காரியங்களை உபகரித்தும் இதர சங்கத்தார்கள் அவர்கள் கொண்ட எண்ணங்களை நிறைவேற்றியும் வைக்கவேண்டுமென்பது எனது அபிப்பிராயமாகும்.

மிஸ்டர் காந்தியினால் விளக்கப்பட்ட சத்தியாக்ரஹக் கொள்கைகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாயும் புத்தி சாதுர்யத்தோடு விளங்கக் கூடியதுமாகும். முதல் பார்வையில் தோற்றக் கூடியதுபோல் எல்லாவிவகாரங்களிலும் இதை அநுஷ்டிப்பதென்பது முடியாத காரியமாகும். சத்தியாக்ரஹத்தை அநுஷ்டிப்பதற்கு மன அடக்கமும், பொறுமையும் மிகுதியாய் வேண்டும். இவைகள் அநுஷ்டானத்தில் அத்தியாவசியமாய் வேண்டியிருக்க, அநுபவத்தில் இவைகள் மிகக் குறைவாய்ப்

போய்விடக் கூடும். அநேக ஜனங்களால் எல்லாக்காரியத்திற்கும் அநுஷ்டிக்கப் படத் தகுந்த சத்தியாக்ரஹம், ஏறக்குறைய நற்குணமமைந்த பெரியோர்களால் கையாளப்படவேண்டியதாகும். ஓர் சாதாரண மனிதன் குற்றத்தோடு கூடிய கோபத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் போது அவன் போராட்டம் செய்ய யத்தனிக்கின்றானே தவிர ஸ்வயகஷ்டத்தைப் பொறுமையாய் வகிக்கத்துணிவதில்லை. மிஸ்டர் காந்தி அவர்கள், குடும்ப விவகாரங்களில் பொறுப்பைப் பெற்றவர்கள் அநுஷ்டிக்கும் குணத்தை இராஜாங்க விவகாரங்களிலும் அநுஷ்டிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்.

இந்தக் கொள்கையை எவ்வாறு அநுஷ்டிக்கும்படி செய்வது என்பதை இதற்குமுன் சொல்லி யிருப்பதைவிட அதிகமாய்ச் சொல்ல இது இடமில்லை. இந்த அபாயமற்றக் கொள்கையை உபதேசிப்பதானால் ஜனங்களுக்குள் நன்மையை யுண்டுபண்ணுமே தவிர வேறொன்றும் செய்யாதென்பது நிதர்சனமாய்த் தெரிகின்றது. சத்தியாக்ரஹம் என்பது சிறிதும் மனிதர்கள் மனதில் பதியாதிருந்தால் வேறுவிதமாய், நடைபெற்ற கொண்டாட்டம் முடிந்திருக்கும். ஆனால் நூற்றுக்கணக்கான மனிதர்களைப் பரீக்ஷித்துப்பார்த்ததில் அவ்விதம் எங்களுக்குப் புலப்படவில்லை. பஞ்சாபியர்கள் நீங்கலாக மற்றைய இந்திய இனத்தார்கள் கொண்ட மனவடக்கம் தெரிவிப்பது யாதெனில் அவர்கள் பஞ்சாபியர்கள் கொண்ட எண்ணத்துக்கு முற்றிலும் விரோதமானவர்கள் என்பதல்ல. ஆனால் சத்தியாக்ரஹத்தின் அடக்கமான கொள்கைகள் இந்திய ஜனங்களுக்கு விரோதமாய்க் கவர்ன்மெண்டார் கொண்டுவந்த ரௌலட் சட்டத்தா லேற்பட்ட கோபத்தைத் தடுக்கத் தகுந்த நற்குணத்தைப் பெற்றிருக்கின்றன வென்பதே யாகும்.

பொறுமையுடனும், நற்குணத்துடனும் தேச சட்டங்களுக்கு விரோதமாய் ஜனங்கள்மன்றாடியிருந்தால் இதற்கு முன்பாகவே கவர்ன்மெண்டார் ஜனங்கள் மனோபீஷ்டப்படி நடந்துகொண்டிருந் திருப்பார்கள். ஆனால் சத்தியாக்ரஹத்தின் அடக்கமான தன்மைகள், பஞ்சாப் கவர்ன்மெண்டார்களால் விதிக்கப்பட்ட நிர்ப்பந்தங்களைத் தாங்க முடியவில்லை எனவும் தெரிவித்திருக்கிறது. ஸர்மைகேல் ஓடையர் சத்யாக்ரஹத்தின் அடக்கமான குணத்தைக் கௌரவித்து இதர மாகாணத் தலைவர்கள் ஏறக்குறைய ஒழுங்காய் நடந்து கொண்டதுபோல் ஜனங்களுக்கநுகூலமாய் நடந்துகொண்டிருந்தால் பஞ்சாபில் நடந்த கொடிய சம்பவங்கள் நடந்திராததோடு இதற்கு முன் சில மாதங்களாய் நடைபெற்று வந்த தேச சரித்திரமும் வேறு விதமாய் எழுதப்பட்டிருக்கும்.

சத்யாக்ருஹத்தைச் சரியான வழியில் அநுஷ்டித்தால், ஜனங்களுக்கு விரோதமாய் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தும் சட்டங்கள் முழுவதும் தடுக்கப்படப் படாமல் போனபோதிலும் ஏற்படுத்துவது கஷ்டமாகவாவது ஏற்படுமென்பது எங்களபிப்பிராயம். அரசாட்சி செய்வோர் அரசாளப் படுவோரின் அபிப்பிராயப்படி இவ்விதம் அரசாள வேண்டுமென்று விதிக்கப் பட்டிருக்கையில் இவ்விதம் குறை கூறுவதில் பிரயோஜனமில்லை.

பஞ்சாபில் நடந்த கொலை, அக்நிபாதை, அழிவு முதலியவைகளுக்கு சத்தியாக்ரஹம் என்பதுதான் காரணமா, என்பதை ஆராயவேண்டியது அவசியமாகும். நாங்கள் மேலே காட்டியபடி சத்யாக்ரஹ உபதேசம் ஒரு போதும் பலாத்காரமான போராட்டத்தை யுண்டுபண்ணாது. ஏனென்றால் சத்தியாக்ரஹமே பலாத்காரமான

போராட்டத்திற்கு முற்றிலும் எதிரானது. சத்யாக்ரஹத்தின் ஒழுங்கான அடக்கப் போராட்டத்தை வேறு விதமாய் எடுத்துக் கொள்ளப்படக்கூடும். ஆனல் அது விஷயத்தில் ஜனங்கள் அதி ஜாக்கிரதையான கவனத்தைச் செலுத்த வேண்டியது அவசியமாகும். இவ்வித ஆவசியகத்தையும் நாங்கள் ஒத்துக் கொள்ளுகிறேம். சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் மிகச் சுலபமானதாகும். ஆனல் அதனலேற்படும் தன் கஷ்டத்தைச் சகித்துக் கொள்ளல் மிக்கக் கஷ்டமானதாகும். என்ன கஷ்டம் வந்தாலும் சகிக்கக் கூடிய ஒருவருக்குத்தான் சட்டத்திற்குக் கீழ்ப்படியா திருக்கவேண்டிய கொள்கையை உபதேசிக்கவேண்டும். மிஸ்டர் காந்தி அவர்கள், பக்குவமில்லாத பொது ஜனங்களுக்கு சட்டத்துக்குக் கீழ்படியாதிருக்குந்தன்மையை உபதேசம் செய்யமுன்வந்தது பிழையென்பதை நியாயமாயும் கபடமில்லாமலும் ஒத்துக்கொண்டதுமின்றி, உடனே அந்தக்கிளர்ச்சியை நிறுத்தியும் விட்டனர்.

என்றலும், பஞ்சாபிலுள்ளோர், சத்யாக்ரஹக் கொள்கைகளுள் ஒன்ருகும் சட்டத்துக்குக் கீழ்ப்படியா திருத்தலை உணர்ந்து கொள்ளவுமில்லை மெச்சவுமில்லை. அநுஷ்டிக்கவுமில்லை. இப்போது கொண்டாடப்பட்ட விருதத்துக்கும் சட்டத்துக்கும் கீழ்ப்படியாத் தன்மைக்கும் யாதொருவித சம்பந்தமுமில்லை. ஆனல் பலாத்காரப் போராட்டமின்றி அநுஷ்டிக்கப்படும்வரையில் தான் இது சத்யாக்ரஹத்தின் கொள்கைகளுள் ஒன்ருகும். ஹார்தால் (Hartal) என்பது கல்பாந்த காலங்களாக ஏப்ரல் மாதம் பஞ்சாபில் அநுஷ்டிக்கப்பட்ட இதே கொள்கையுடன் ஜனங்களால் அநுஷ்டிக்கப் பட்டதாகும். ஆகவே ஸத்யாக்ரஹமாவது ஹார்தாலாவது ஜனங்களது அதிகச் செய

னுக்குக் காரண மாகாது. அவ்விதம் ஏற்பட்டதற்குக் காரணம் பின்வரும் பாகங்களில் விரிவாய் விளக்கப்படும்.

அத்தியாயம் 5

இராணுவச் சட்டம்.

பாகம் I—(பொது நோக்கம்)

படித்த வகுப்பாரிடத்திலும், படை சேர்க்கும் விதங்களிலும் ஸர்மைகேல் ஒடையரது அரசாட்சி எவ்வாறு சம்பந்தப்பட்டிருந்தது என்பதை நாம் முன் கூறியிருக்கிறோம். ஸர்மைகேல் ஒடையர் அவர்கள் எவ்வாறு பஞ்சாபியர் யாவரையும் தம்மிடமிருந்து விலக்கிக்கொண்டார், என்பதை விளக்க நாங்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றோம். ரௌலட் சட்டத்தையும் அதனாலேற்பட்ட விஷயங்களையுங் கூட விரிவாய்க் கூறியிருக்கின்றோம். அச்சட்டம் ரத்துசெய்யப் படவேண்டுமென்று இந்தியா முழுதும் போராடிய விதத்தையும் கூறியுள்ளோம்.

ஸத்யாக்ரஹத்தின் கொள்கைகளையும் அதை இயற்றிய கர்த்தாவின் வாக்கியங்களிலேயே கூறியாய்விட்டது. ஏப்ரல்மாதம் ஆறும்தேதிதான் சுயஉருவைப்பெற்ற ரௌலட் சட்டத்தின் கிளர்ச்சியும் ஒருவிதக்கெடுதலும் செய்யவில்லையென்பதையும் சத்யாக்ரஹத்தின் கொள்கைகளும் அதை உபயோகப்படுத்தியவிதமும் ஒருவிதக் கெடுதலும் செய்யவில்லை யென்பதையும் தெளிவாய் விளக்கிக் காட்டியிருக்கின்றோம். ஆனால் உண்மையாகவே அதன் வியாபகமும், பலனும் சொத்துஸ்வதந்தரங்களுக்கும், உயிருக்கும் அபாயமில்லாத காலத்துத்தான் வெளிப்படும். ரௌலட் சட்டத்தின் கிளர்ச்சியும், சத்யாக்ரஹமும் ஜனங்களைத் தங்கள் சக்தியையுணரும்படி செய்ததுமன்றி ஊக்கத்தையும்

உண்டுபண்ணியதாகும். ஸர். மைகேல் ஒடையார் அவர்களால் தெரிவிக்கப்பட்ட பிரகாரமான அரசாட்சியை ஜனங்கள் விரும்பவில்லை. அவர்கள் மிக்க அருவெறுப்பையடைந்தனர். உணவுப்பொருள்களின் அதிக விலையால் இந்த அருவெறுப்பு மிக்க அதிகமாயிற்று. சண்டைக்குப்பிறகு அவர்கள் நல்ல காலத்தை எதிர்பார்த்தனர். அதற்குப் பதிலாக அவர்கள் நிலைமையே பரிதாபகரமானதாயிற்று. இதனோடு காலிபத் கிளர்ச்சியும் தோன்றி நிலைமையை மிக்கக் கேவலமானதாக்கிற்று. மகம்மதியர்களும் நியாயமான காரணமில்லாது பிரிட்டிஷாரிடம் அவநம்பிக்கை கொள்ளவில்லை.

ஏப்ரல்மாதச் சம்பவங்களை நன்றாயுணர இதற்குமுன் நடந்த விஷயங்களை நன்றாய் மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும். இவைகளே விசேஷமாய் வழக்குகளுக்குக் கொண்டுவரப்படுபவையாகும்.

பஞ்சாப் முழுதும் ஏப்ரல்மாதம் ஆறும் தேதி ஹார்தால் நடந்தது. பஞ்சாபில் இதற்குமுன் இவ்விதக்கொண்டாட்டக்காக்ஷி நடைபெற்றதில்லை. இவ்விதமே இந்தியா முழுமையுமாகும். அன்றையதினம் தலைவர்களும் ஜனங்களும் ஒருமனப்பட்டு ஒரேமனிதராய்த் தென்பட்டனர். ஹிந்துக்களுள்ளும், மகம்மதியர்களுள்ளும் சகோதர பாவம் பரவியிருந்தது. எங்கும் ரௌலட்சட்டத்துக்கு விரோதமாய்த் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன, அதை ரத்துசெய்யவேண்டுமென்றும் மன்றாடினர். ஏப்ரல் மாதம்ஆறும் தேதிக்காட்சி ஜனங்களது சாந்தமான மனவுறுதியைக் காட்டிற்று.

ஸர்மைகேல் ஒடையார் விஷயத்திலும் இதை நன்றாய்த் தெரியப்படுத்திவிட்டது. இந்த ஹார்தாலிலும், ஹிந்துமகம்மதிய ஒற்றுமையிலும் பிரிட்டிஷ் அரசாட்சிக்கு

அபாயமிருப்பதாய் அவர் உணர்ந்தார். அந்த ஒற்றுமை பிரிட்டிஷ் இராஜாங்கவிரோதமான ஒற்றுமையென அவர் அறிந்து அதை எவ்விதத்திலும் முறிக்க யத்தனங்கொண் டார். லாகூர்தலைவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை யும் “சதியாலோசனை, சண்டையிடுதல்” என்ற பெய ரால் அவர்களது அமைதியான செயல்களைப் பெருமை படுத்துகிறது. லாகூர் வழக்கின் சுருக்க வரலாறு பின் வருமாறுகும் :—“1919-ம் வரு மார்ச்மாதம் 18-ம் தேதி இம்பீரியல் சபையாரால் ரௌலட் சட்டம் என்னும் சட் டம் வெளிக்கொண்டுவரப்பட்டது. அதன்மேல் பஞ்சா புக்கு வெளியே சிலஜனங்கள் கூடி சதியாலோசனை செய்ய லாயினர். அவர்களோடு இக்குற்றவாளியும் சம்பந்தப் பட்டு கலகத்துக்கு ஆஸ்பதமான அநேகக் கூட்டங்களைக் கூட்டி ஜனங்களது உணர்ச்சியைக் கவர்ன்மெண்டுக்கு விரோதமாய்த் திருப்பியதுமன்றி அச்சட்டத்தைப்பற்றி அதிக பீதியடையச்செய்து அதை எதிர்க்கும்படியும் செய் தனர். அதன்பிரகாரம் இந்தியாமுழுவதிலும் முக்கியமாய் பஞ்சாபில் குற்றவாளியுள்பட மேற்சொல்லப்பட்ட எல்லா சதியாலோசனைக்காரர்களும் மார்ச்மாதம் 30-ம் தேதி ஹார்தால் என்ற பெயரோடு வேலை நிறுத்தங் கொண்ட னர். இவ்விதம் இவர்கள் செய்தது கலகத்தை யேற்படுத்த வும் தேசத்தின் செல்வ நிலைமையைப் பங்கப்படுத்தவும் கவர்ன்மெண்டாருக்கு விரோதமாய் ஜனங்களது மனதைத் திருப்பவுமேயாகும்.”

“கலகக்காரர்கள் கூட்டம்” என்ற பெயரோடு ஷெ சுருக்கத்தில் சில மீட்டிங்குகளின் வரலாறுகள் பின்னர் கூறப்பட்டிருக்கின்றன. இதைத் தொடர்ந்து இரண்டு பத்திகள் வருகின்றன. அவைகளைக் கவர்ன்மெண்டார் தரபில் எடுக்கப்பட்டவண்ணம் கூறுகின்றோம் :—

"ஏப்ரல்மாதம் 9-ம் தேதி கவர்ன்மெண்டாருக்கு விரோதமாய்க் கிளர்ச்சிசெய்ய வேண்டுமென்ற சதியாலோசனையோடு, ராமநவமி ஊர்வலகாலத்தில் குற்றவாளி, ராம்பாஜிடட், கோகுலசந்த், தர்மதாஸ்ஸூரி, தூனிசந்த் ஆகிய இவர்களோடு சட்டத்தால் ஏற்பட்டதாக ஹிந்து சகோதரர்களது சகோதரபாவத்தை கவர்ன்மெண்டாருக்கு விரோதமாய் ஆதரித்தனர். ஏப்ரல்மாதம் 10-ம் தேதி பஞ்சாப் கவர்ன்மெண்டார் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்த சதியாலோசனைக்காரர்களுள் ஒருவரான காந்தி என்ற பெயர் கொண்டவரை மாகாணத்துக்குள் வரவொட்டாமல் தடுத்தனர். அதே தேதியில் கவர்ன்மெண்டார், அமிர்தசரஸ்வாசிகளும் சதியாலோசனைக்காரர்களுமாகும் கிச்சுலு, சத்தியபால் என்ற பெயர்கொண்டவர்களை வெளியேற்றவும் உத்தரவிட்டனர். அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தக் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்ட இவ்வித முன் பிரயத்தனங்களைச் சதியாலோசனைக்காரர்கள் இராஜரோடு யுத்தம் செய்வதற்கான அறிகுறியாய்க் கொண்டனர்" நாங்கள் இப்பத்திரிகைகளை இங்குஎடுத்துக்கூறியதன்காரணம் எங்களால் கூறப்பட்ட விஷயங்களைப் பலப்படுத்துவதற்காகும். அதாவது ஹார்தால், மீட்டிங்குகள், ஹிந்துமகம்மதியர்கள் ஒற்றுமை ஆகிய இவைகள் யாவும் கவர்ன்மெண்டாருக்கு விரோதமானவை என்று தப்பர்த்தம் செய்யப்பட்டதே ஆகும். ஹார்தாலும், சகோதரபாவமும் பின்னாலேற்பட்ட யோஜனையல்ல. ஏப்ரல் மாதம் 7-ம் தேதி, வெளிப்படையாகத் தன்னபிப்பிராயத்தை ஸர்மைகேல் ஓடையர் வெளியிட்டுவிட்டார். அன்றுதினம் பேசிய பேச்சினின்றும் முன்னதாக நாங்கள் கூறியாய்விட்டது. ஜலாந்தர் பாரிஸ்டரான பெருமைதங்கிய ரேய்ஸாடா

பாகட்ராமை அன்றுதினம் அவர் கண்டனர். அவரிடம் ஹார்தாலைப்பற்றி அவர் நினைத்த மனத்தாங்கலைக் கூறி விட்டனர். அது, அவர் கொடுத்த பின்வரும் வாக்கு மூலத்தினின்றும் நன்றாய் விளங்கும்.

ரெய்ஸாடா பாகட்ராம் கூறுவதாவது :—

"சட்டச் சபை மீட்டிங்குக்குப் பிறகு நான் லெப்டினன்ட் கவர்னரை தர்சனக் கிருகத்தில் (Drawing room) கண்டேன். அவர் என்னை "எவ்விதமாய் நீங்கள் ஹார்தாலை ஜலாந்தரில் கொண்டாடினீர்கள்?" என்று கேட்டார். அது சிறந்த கொண்டாட்டமே என்றும் கலகமேயில்லையென்றும் கூறினேன். ஸர் மைகேல் ஓடையார் அவர்கள் எதனால் கொண்டாடப் பட்டதென்று கேட்டார். நான் அதற்கு "காந்தியினது ஆத்ம சக்தியால் கொண்டாடப் பட்ட" தென்று நினைக்கிறேன் என்று கூறினேன். இதன்மேல் ஸர் மைகேல் அவர்கள் கை முஷ்டி செய்து தூக்கி "ரெய்ஸாடா ஸாஹேப், கந்தியினது ஆத்ம சக்தியைவிட உயர்ந்த சக்தி யிருக்கிறதென்று நினைத்துக்கொள்," என்று சொன்னார்.

இவ்விதம் ஸர் மைகேல் அவர்கள், தாம் நினைக்கக் கூடிய எந்த வழியிலாவது இராஜாங்க விவகார சம்பந்தமான பேச்சுக்களை ஜனங்கள் மனதினின்று அகற்றவேண்டுமென்று எண்ணங் கொண்டார். ஜனங்களைப் பைத்தியம் பிடிக்கும்படி செய்யத் தயாரானார். அவர் எவ்விதம் இவ் விஷயத்தில் பாதி வெற்றிகொண்டார் என்பது இப்போது பார்ப்போம்.

இராணுவச் சட்டம்.

பாகம் II

1. அமிர்தசரஸ்

நாம் முதலில் அமிர்தசரஸை எடுத்துக் கொள்வோம். ஏனென்றால் முதன்முதல் இவ்விடத்தில்தான் கலகம் ஏற்பட்டதாகும். லாகூரைக் காட்டிலும் பல விஷயங்களில் அமிர்தசரஸ் பெருமை யுடையதா யிருந்தாலும் முக்கியாம்சங்களில் லாகூருக்கு இரண்டாவதாகத் தான் கூறலாம். அதன் ஜனத்தொகை 160,000. ஸீக் ஜாதியர்களது உத்தம க்ஷேத்திரம் இதுதான். இவ்விடத்தில்தான் அவர்களது 'ஸ்வர்ணலயம்' இருக்கிறது. இங்கு மிக்க வியாபாரம் நடைபெறுவதாலும், ஸ்வர்ணலய மிருப்பதாலும் அநேக வியாபாரிகள் உள்நாட்டி லிருந்தும் வெளி நாட்டி லிருந்தும் வருவதன்றி அநேக மனிதர்களும் உள் நாட்டினின்றும் வெளி நாட்டினின்றும் வருகின்றனர்.

ஹிந்துக்களது வருஷப் பிறப்பு தினம் ஏப்ரல் மாதம் நடுவில் வருவதாகும். அப்பொழுது அமிர்தஸரஸில் மாட்டுச் சந்தையும் நடைபெறுவதுண்டு. புது வருஷப் பிறப்புத் தினத்தை (வைசாகம்) பைஸாகி என்றழைப்பார்கள். இவ் வருஷப் பிறப்புக் கொண்டாட்டம், வியாபார விஷயமாகவும் மத விஷயமாகவும் சிரேஷ்டமானதால் தேசத்தின் பற்பல விடங்களிலிருந்து ஜனங்கள் இங்கு வந்து கூடுவது வழக்கம். ராமநவமி மஹோற்சவத்திற்கு முன் இந்த வைசாக உற்சவம் நடைபெறும்.

ஏப்ரல் 6-ம் தேதி மஹோத்ஸவத்தை சிறந்த ஹார்தாலாகவே அமிர்தசரஸ் வாசிகள் கொண்டாடினர். மகம்மதியர், சீக்கியர்கள், ஹிந்துக்கள் முதலிய சகல மதஸ்தர்களும் சிறுமை பெருமையின்றி இதைக் கொண்டாடினர்.

அது தன்னிச்சையாயும் திடீரென்றும் கொண்டாடப் பட்டதாகும். கூட்டத்தார்கள் நடந்துகொண்ட தன்மை மிகச் சிறந்ததா யிருந்ததுமின்றி விசனிக்கத் தகுந்ததாக வாவது குறைகூறத் தகுந்ததாக வாவது இல்லை.

ஏப்ரல் மாதம் 9-ம் தேதி ராமநவமி தினமாகும். அது முக்கியமாய் ஹிந்துக்களது கொண்டாட்டமே யாகும். ஆனால் இந்தத் தடவை ஹிந்துக்களும் மகம்மதி யர்களும் ஒற்றுமையாய்க் கொண்டாட நேர்ந்ததாகும். மகம்மதியர்கள் இக் கொண்டாட்டத்திற்கு விசேஷப் பொறுப்பை யேற்று நடத்தியும் வைத்தனர். இவ்வித சகோதர பாவத்திற்கு டாக்டர் கிச்லுவும், டாக்டர் சத் தியபாலுமே முக்கிய காரணமாகும். இதற்கு வெகுநாட் களுக்கு முன்பாகவே இவர்கள் இருவரும் பொதுஜன ஊழியத்தில் மிக்கப் பாடுபட்டவரெனப் பெயர் வாங்கி யவர்கள்.

டாக்டர் ஸையிபுடீன் கிச்சிலு என்பவர் மிக்க வரு மானமும், ஜனுபிமானமும் பெற்ற மகம்மதிய பாரிஸ்ட ராகும். அவர் கேம்ரிட்ஜ் என்னும் பட்டணத்தில் படிப் புப் பட்டத்தைப் பெற்றவரும் மன்செஸ்டர் பட்டணத்தில் தத்துவஞான நிபுணத்வத்தை யடைந்தது மன்றிப் பட்ட மும் பெற்றவராம். அமிர்தசர் பட்டணத்து மாணுக்க ரும், அவராகும். அவருக்கு வயது 35, விவாகமானவர், இரண்டு குழந்தைகளையும் ஈசனருளால் பெற்றிருக்கிறுர். ஹிந்து மகம்மதியர்கள் ஒற்றுமைக்கு வெகு வருஷங்களா கப் பிரயாசைப்பட்டு வந்தவர்.

டாக்டர் சத்யபால் என்பவர் ஓர் ஹிந்து. காத்ரி பிரிவைச் சார்ந்தவர். அவர் பஞ்சாப் ஸர்வ கலாசாலை யைச் சார்ந்த பி.ஏ. எம்.பி., யாகும். சண்டைக் காலத் தில், லெப்டினன்ட் எல். எம். எஸ். என்ற பட்டத்தோடு

ஏடனில் வேலை செய்தவர். இவர் டாக்டர் கிச்சுலுவோடு பொது ஜன ஊழியத்தில் உழைத்தவர். அமிர்தசரஸ் ரெயில்வே ஸ்டேஷனில் பிளாட்பாரம் டிக்கட்டுகள் இந்தியர்களுக்குக் கொடுக்கப் படாததற்கு மிக்கப் பாடுபட்டு வெற்றிபெற்றதால் மிக்கப் பிரஸித்தி பெற்றவர். ரௌலட் சட்டக் கிளர்ச்சியில் இவர்க ளிருவரும் இன்னும் கியாதியையும் ஜனாபிமானத்தையும் பெற்றவர்க ளாகும். இருவரும் சத்தியாக்ரஹம் விருதம் பூண்டவர்கள். எல்லா இடங்களைப்போலும் அமிர்தசரஸிலும் ரௌலட் சட்டக் கிளர்ச்சியானது இதற்கு முந்தியதைக் காட்டிலும் அநேக ஜனங்களை மீட்டிங்கு மேடைகளுக் கழைத்தது. இக் கிளர்ச்சி நாளுக்குநாள் விருத்தி யடைந்து இவர்களால் பலரும் உண்மை யறியவே இவர்கள் தெய்வமென அப்பாக ஜனங்களால் கொண்டாடப் பட்டனர்

1919-ம் ஞு மார்ச் மாதம் 29-ம் தேதி டாக்டர் சத்தியபால் அவர்கள் பஞ்சாப் கவர்ன்மெண்டாரால் பொதுக் கூட்டம் கூட்டப் படாதென்றும் இவர் அதில் பேசக் கூடாதென்றும் உத்திரவிடப்பட்டு அம் மாகாணத்தில் ஓரிடத்தில் காரிய மற்றிருக்கச் செய்துவிட்டனர். முந்திய அத்தியாயத்தில் கூறி யிருப்பதுபோல் மார்ச் மாதம் 30-ம் தேதியும் சிற்சில விடங்களில் ஹார்தால் கொண்டாடப் பட்டது. அன்று தினம் அமிர்தசரஸிலும் கொண்டாடப்பட்டது.

அமிர்த சரஸில் மார்ச்சு 30-ம் தேதி கூட்டப்பட்ட மீட்டிங்கில் உத்தியோக ரீதியில் 30,000-முதல் 35,000-வரையில் ஜனங்கள் கூடியிருந்ததாய் அறிவிக்கப்படுகிறது. ஆனால் எவ்வித கலகாஸ்பதமான காரியமும் நடைபெறவில்லை யென்பதை யாவரும் ஒத்துக் கொள்கின்றனர். அந்த மீட்டிங்கில் பேசிய நபர்கள் இந்த விருதத்தின்

மதசம்பந்தமான பாகத்தையும், அமைதிக்கு ஆதாரமான பாகத்தையும் பற்றிப் பேசினர். இவைகள்தான் டாக்டர் கிச்சுலுவின் கடைசி வார்த்தைகளாகும்.

"தேசிய சம்பந்தமான விவகாரங்களில் நாங்கள் எப்பொழுதும் மிக்கப் பாடுபடத் தயாராயிருக்கின்றோம். மகாத்மா காந்தியின் ஸ்ரீமுகத்தை உங்களுக்குப் படித்துக் காண்பித்தேன். தேசத்தார் யாவரும் போராட்டத்துக்குத் தயாராயிருக்கவேண்டும். இதனல் இந்த தேசமாவது பட்டணமாவது இரத்த வெள்ளத்தால் நிரம்பப்பட வேண்டுமென்பது அர்த்தமல்ல. இந்த போராட்டமானது உண்மைக்கான போராட்டமாய் ஒழுங்காய் நடைபெற வேண்டும். இதனல் ஜெயிலுக்குப்போகும்படி நேர்ந்தாலும், உள்நாட்டு சிறைவாசம் நேர்ந்தாலும் மனச்சாட்சிக்கு விரோதமான காரியத்தைச் செய்ய உடன்படாதிருக்கவேண்டும்."

மறுபடியும்:—"ஒருவருக்காவது உபத்திரமாவது, தீங்காவது இழைக்காதீர்கள். வீட்டிற்குச் சாந்தமாய்ப் போங்கள். தோட்டத்தில் கொஞ்சம் உலாவுங்கள். எந்த ராஜத்துரோகிகளைக் கண்டாவது போலீஸ்காரரைக் கண்டாவது கெட்ட வார்த்தைகளை உபயோகப் படுத்தாதீர்கள். அவ்விதம் உபயோகப்படுத்தினல் நாட்டில் அமைதி குறைந்து கலகத்துக்குக் காரண மேற்படும்."

ஆனல் ஸர் மைகேல் ஓடையாரோ ஹார்தாலாலும் அமிர்தசரஸ் மீட்டிங்காலும் பீதி யடைந்து விட்டார். டாக்டர் சத்தியபாலுக்கு விதித்ததுபோல் டாக்டர் கிச்சுலுமீதும் தண்டனை உத்தரவு பிறப்பித்தார். இவ் வுத்தரவு ஏப்ரல் 8-ம் தேதி யிடப்பட் டிருக்கிறது. அதில் கூறப்பட் டிருப்பது யாதெனில் "அவர் மறு உத்தரவு பெறுகிற வரையில் (a) அமிர்தசரஸ் பட்டணத்து முனிஸி

பல் எல்லைக்குள்தான் தங்கவும் வசிக்கவும் முடியும். (b) நேராகவாவது வேறு மூலமாகவாவது பத்திரிகைக்காரர்களோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளக் கூடாது. (c) எந்த மீட்டிங்கையும் கூட்டவாவது, எந்த மீட்டிங்குக்குப் போகவாவது, எந்த மீட்டிங்கிலும் பேசவாவது எழுத்து மூலமாய் எதையும் தெரியப் படுத்தவாவது கூடாது."

இவ்விதமே, பண்டிதர் கோதுமால், பண்டிதர் தீனநாதர், ஸ்வாமி அநுபவநந்தர் ஆகிய இவர்களும் தடுக்கப் பட்டனர். இவ் வுத்தரவுகள் பொது ஜனங்களது மனதை மிக்கப்புண்படுத்தியபோதிலும் அதைரியப்படுத்தவில்லை. ஆகவே எப்ரல் மாதம் ஆரும் தேதியும் மற்ருேர் ஹார்தால் நடத்தப்பட்டது. மார்ச் மாதம் 30-ம் தேதி கூட்டப்பட்ட மீட்டிங்கைவிட மிகப் பெரிய மீட்டிங்காய் நடைபெற்றது. அமிர்தசரஸ் பாரிஸ்டரான மிஸ்டர் பாத்ரல் இஸ்லாம்கான் அக்கிராசனம் வகித்தார். 50,000 க்கு மேற்பட்ட ஜனங்கள் கூடினர். உத்யோக ரீதியில் இம் மீட்டிங்கைப் பற்றி வெளிவந்த விஷயத்தினின்றும் தெரிய வருவது யாதெனில், 'டாக்டர் சத்யபால் மீதும் இன்னும் இவரைப் போன்ற பலர்மீதும் உத்தர விடப்பட்டிருக்கும் உத்தரவை ரத்து செய்யும்படியும் வேண்டி தீர்மானம் கொண்டுவரப்பட்டது' என்பதாகும். இவ்வுத்தரவுகளைப் பற்றிப் பேசப்பட்ட பேச்சுகள் பின்வரும் ரிபோர்ட் வாக்கியங்களால் தெரியலாகும்:—

"அவர்களிடத்துள்ள ஓர் குற்ற மென்னவென்ருல் ரௌலட் சட்டத்தின் உண்மையான எண்ணத்தை நம்மெல்லோருக்கும் தெரியப்படுத்தி விட்டனர்."

ரௌலட் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்னும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அக்கிராசனுதிபதி முடிவுரையில் சொன்னதாவது:—

"இன்றுதினம் மீட்டிங்கு, சென்ற ஞாயிற்றுக்கிழமை கூட்டப்பட்டதை விட மிக வெற்றி பொருந்தியதாகக் கூட்டப்பட்டிருக்கிறது. அபிப்பிராயத்தை வெளியிட வேண்டுமென்ற உங்கள் எண்ணம் கைகூடிவிட்டது. இக் காலத்தில் ஜனங்கள் தங்கள் ஆத்திரத்தை வெளியிடக் கூடாது பொறுமையா யிருக்கவேண்டும். மஹாத்மா காந்தியின் போதனை என்னவென்றால்:—இந்தப்போராட்டத்தில் நாம் துக்கத்தையும் மனவருத்தத்தையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுமே யல்லாமல் பலாத்காரப் பிரயோகங்களில் சம்பந்தப்படாமல் விலகி யிருக்கவேண்டும். பொய் அழியும், உண்மை வெற்றி பெறும், நீங்கள் மனவமைதியையும் பொறுமையையும் கைப்பற்றினால் இந்தக் கூட்டம் மிக்க நற்பலனைத் தரும். ஆனால் கொஞ்ச கலகமேற்பட்டாலும் ஒருவருக் கொருவர் சிறிது சண்டைசெய்தாலும் இந்த மீட்டிங்கு நிஷ்பிரயோஜனமாய் விடும். ஆகவே இச்சபையோரை நான் வேண்டிக் கொள்ளுவது யாதெனில், ஒருவிதமான ஊர்வலமுமில்லாமல் இந்தக் கூட்டத்தை விட்டுக் கலைந்து அமைதியுடன் செல்லவேண்டுமென்பதே."

ஏப்ரல் 8-என்று தேதியிடப்பட்டதும், மேற்சொன்ன விஷயங்க ளடங்கியதுமான ரிபோர்ட்டின் முடிவுரை யாதெனில் :—

"பொது ஜனங்கள் யாவரும் அக்கிராசனாதிபதி அவர்களது போதனைக்குக் கீழ்ப்படிந்தே நடந்தனர்."

முன் சொல்லப்பட்டபடி ஏப்ரல்மாதம் 9-ம் தேதி ராமநவமி தினமாகும். அத்தினத்தன்று மகம்மதியர்களும் ஹிந்துக்களும் சகோதர ஒற்றுமை பாராட்ட வேண்டுமென்று தலைவர்கள் தீர்மானித்துக்கொண்டனர். ராமநவமி சாதாரண மதசம்பந்தமானப் பண்டிகையே

யாகும். அன்றுதினம் மகம்மதியர்களும் ஒற்றுமைகாட்ட விரும்பியதால் பெரிய கொண்டாட்டமாயிற்று. அநேக மகம்மதியர்களடங்கிய பெரிய ஊர்வலமும் நடைபெற்றது. டாக்டர் கிச்சுலுவும், டாக்டர் சத்யபாலும் அநேக இடங்களிலிருந்து இவ்வூர்வலத்தைக் கண்ணுற்றுக் களித்தனர். அவர்கள் முன்பாக இவ்வூர்வலம் சென்றபோது ஜனங்கள் அவர்களைக் குதூகலத்துடன் வரவேற்றனர். அமிர்தசரஸ் டிப்டி கமிஷனர் அவர்களும் இதைக் கண்ணுற்றனர். அநேக பாண்டுவாத்தியக்காரர்கள் அவர்கள் சமீபம் சென்றதும் "இராஜனைக் கடவுள் இரக்ஷிப்பாராக" என்றதைப்பாடினர். இவ்வளவு குதூகல விவகாரங்கள் நடந்தும் ஒருவிதமான ஆபத்தாவது அருவெறுக்கத்தகுந்த விஷயமாவது நடைபெறவில்லை.

இவ்வளவு ஜனங்களது கொண்டாட்டத்தையும், தேசீய உணர்ச்சியையும் கண்ட எந்த அதிகாரியும் மிக்கச் சந்தோஷமும் ஜனங்களிடம் பச்சாத்தாபமும் கொள்ளாமலிரார். ஆனால் ஸர்மைகேல் ஒடையாருக்கோ மிக்கக் கோபத்தை யுண்டாக்கிற்று. அவர், தம்மால் விடுக்கப்பட்ட உத்தரவு அவர்களைக் கீழ்ப்படியச்செய்யவேண்டியிருக்கத் தைரியமுள்ளவர்களாகவும் தங்கள் தேவைகளில் பிடிவாதமுள்ளவர்களாகவும் இருக்கும்படி செய்துவிட்டதைப்பார்த்து மிக்கக் கோபங்கொண்டார். இவ்விதம் அநுபவரீதியில் பொதுஜனக் கொண்டாட்டங்கள் முற்றிலும் ஒழுங்கான கட்டுப்பாட்டுடன் நடைபெற்றிருக்க, பஞ்சாப் கவர்ன்மெண்ட் ஸெக்ரிடேரியட் ஆபீஸிலிருந்து ஒருத்தரவு பொதுஜன சமாதானத்தைக் கலைக்கவந்தது. ஏனென்றால் லெப்டினன்ட் கவர்னர் அவர்கள் டாக்டர் சத்யபாலையும், கிச்சுலுவையும் தேசப்பிரஷ்டம் செய்யத் தீர்மானித்துவிட்டார். இவ்வுத்தரவுகள் ஏப்ரல்மாதம் 9-ம்

தேதி இரவு வெகுநேரம் கழித்து அமிர்தசரஸுக்கு வந்து சேர்ந்தன. டிப்டி கமிஷனர் அவர்கள் டாக்டர் கிச்சுலூ அவர்களுக்கும் டாக்டர் ஸத்யபால் அவர்களுக்கும் ஏப்ரல்மாதம் 10-ம் தேதி சொல்லியனுப்பினூர். அவர்கள் வந்ததும் அவர்களிடம் அவ்வுத்தரவைச் சமர்ப்பித்து, உடனே ஒரு மோட்டார் வண்டியிலேற்றி எங்கேயோ ஓரிடத்துக்குக் கொண்டுபோக உத்தரவிட்டார். அமிர்தசரஸ்முழுதும் அதிசீக்கிரத்தில் இச்செய்தி பரவியது. ஒரு கூட்டமும் உடனே கூட்டப்பட்டது. அது துக்கத்தைக் கொண்டாடக் கூட்டப்பட்டதாகும்—அநேகர் தலைப் பாகையின்றியும், காலில் மிதியடியின்றியும், கையில் பிரம்புகளின்றியும் வந்து கூடியவர்களாகும். இவர்கள் யாவரும் டிப்டி கமிஷனர் பங்களாவுக்குச்சென்று தாங்கள் மிக்கப்பிரியத்தோடு நேசித்த ஸத்தியபாலையும், கிச்சுலுவையும் விடுதலை செய்யும்படி வேண்டலாமென நினைத்துப் போயினர். அக்கூட்டம் அமிர்தசரஸ் முக்கியவீதிகளிலெல்லாம் கடந்து சென்றன. இவ்வாறு சென்றபோது தாண்டிய முக்கிய கட்டடங்கள், நாஷனல்பாங்க், டவுன் ஹால், கிறிஸ்டியன் மிஷன் ஹால் முதலியன. இவைகள் தான்பின்னுல் அவர்களிற்சிலரால் இடிக்கப்பட்டனவாகும். இக்கூட்டத்தார் ரெயில்வே மேல்பாலத்தின்மேல் சென்றுகொண்டிருந்தபோது பட்டாளத்தார்களால் தடுக்கப்பட்டனர். இந்த மனிதர்கள், அவர்களைத் தாங்கள் டிப்டி கமிஷனர் அவர்கள் பங்களாவுக்குச் செல்லவேண்டுமென்றும், அங்குபோய் பிரியாதுசெய்துகொள்ளப் போகிறோமென்றும் ஆகவே வழிவிடவேண்டுமென்றும் கேட்டு மன்றுடினர். இவர்கள் அவர்களைத் எட்டித்தள்ளவே பட்டாளத்தார் சற்றுப்பின் தள்ளப்பட்டனர். உடனே கூட்டத்துள் சிலர் முன் சென்றனர். இதைக்கண்டதும் பட்டா

ளத்தார் இவர்கள்மேல் சுடவாரம்பித்தனர். சிலர் இறந்தனர். சிலர் காயமடைந்தனர். உடனே கூட்டத்தினர் பின்னடைந்தனர். இக்கூட்டத்தினர் தங்கள் பொறுமையையிழந்து அமைதியில்லாத கூட்டத்தினர் ஆயினர். அவர்கள் தங்கள் தலைவர்களை விடுவிக்கப்பிரயத்தனங் கொண்டனர். சிலர் உயிர் துறந்தும் சிலர் கொல்லப்பட்டும் போனதைப்பற்றி மிக்கக் கோபமுண்டனர். இந்தக் கோபங்கொண்ட மனிதர்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் போன மனிதர்களைத் தூக்கிக்கொண்டு சிலர் ரெயில்வே அடிப்பாலத்துக்கும் சிலர் ஹால்பஜாருக்கும் போயினர். இறந்துபோனவர்களையும் காயம்பட்டவர்களையும் பார்த்த ஜனங்கள் வெகு ஆத்திரங்கொண்டனர். கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஒருபெருங்கூட்டம் கூடிற்று. அவர்கள் ரெயில்வேபாலத்தின்மீதும் ரெயில்வேபாலத்தின் கீழும் ஓடினர். இப்போது சிலர் தடியையும் மரத்துண்டுகளையும் பெற்றிருந்தனர். இரண்டுபாலங்களும் இராணுவத்தார்களால் காவல் செய்யப்பட்டன.

இந்த சமயத்தில் வக்கீல்கள் சிலர் இக்கூக்குரலைக் கேட்டு மத்தியஸ்தம் செய்ய டிப்டி கமிஷனர் அவர்களைப் பார்வையிடச் சென்றனர். அவர்கள் இதில் தலையிட்டு விசாரணைசெய்ய அனுமதி கொடுக்கப்பட்டனர். அவர்கள் வந்தபோது அமிர்தசரஸ் போலீஸ் டிப்டி கமிஷனர் அவர்கள் ஒரு பெருங்கூட்டம் ரெயில்வேவாசலண்டை சென்றிருக்கிறதாகக் கூறினர். ஆகவே சிலர் அங்கு சென்றனர். சிலர் ரெயில்வே பாலத்தண்டை நின்றனர். ரெயில் வாசலண்டைச் சென்றவர்கள் ஆங்கு கூடியிருந்த கூட்டத்தைக் கலைத்துவிட்டனர். ரெயில்வே மேல்பாலத்தண்டையிலிருந்த கூட்டத்தைக் கலைப்பது மிகவும் கஷ்டமானதாய்ப் போய்விட்டது. மிஸ்டர் ஸலேரியா அவர்களும்

மிஸ்டர் மாக்பூல் மகமத் அவர்களும் கூட்டத்தைக் கலைப்ப தற்கும், அதிகாரிகள் கூட்டத்தைநோக்கிச் சுடாமலிருப்ப தற்கும் தன்னுலியன்ற வரையில் முயற்சித்தனர். அவர் கள் வெற்றிபெறுவார்கள்போல் தோன்றியது. ஆனல் கூட்டத்துள் எடங்கிய சிலர் பட்டாளத்தார்மீது கற்களை வீசியும் தடிகொண்டடித்தும் உபத்திரவப்படுத்தவே அவர் கள் மிகச்சுட்டு ஏறக்குறைய 20-பேர்களைக் கொன்றும் அநேகரைக்காயப்படுத்தியும் விட்டனர். மிஸ்டர் ஸலேரி யாவும் மிஸ்டர் மாக்பூல் மகமத் அவர்களும் தப்பியதே தம்பிரான் புண்ணியமாயிற்று. இவர்கள் இருவரும் கூட் டத்தின் மத்தியில்புகுந்து அதிகாரிகளுக் கநுகூலமாய் கூட்டத்தைக் கலைக்கமுயலும்போது சுடுவதற்கு உத்தரவு செய்துவிட்டதை இராணுவ அதிகாரி மிக்க விசனித்தார். மிஸ்டர் மாக்பூல் மகமத் அவர்கள் உடனே ஆஸ்பத்திரி சென்று டாக்டர் தனபதிராய் அவர்களைக் கொண்டு காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்யும்படி வேண்டி னர். ஆஸ்பத்திரியிலிருந்து கட்டில்களும் கொண்டுவரப் பட்டன. ஆனல் மிஸ்டர் ப்ளோமர் அவர்கள் இதில் தலை யிட்டுக்கொண்டு ஜனங்கள் தாங்களே தங்கள் சௌகரியங் களைத் தேடிக்கொள்வார்களெனச் சொல்லி அவைகளைத் திருப்பிவிட்டனர். இதன்மேல் சில காயப்பட்ட மனிதர் கள் டாக்டர் கிதர்நாத் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். அவர் ஜனனு ஆஸ்பத்திரி சமீபத்தில் வசித்து வந்தனர். மிஸ்ட்ரஸ் ஈஸ்டன் என்பவர் இதைப்பார்த்துச் சிரித்து மகம்மதியர்களும், ஹிந்துக்களும் தாங்கள் நடந்துகொண் டதற்கு நல்ல பலனை யடைந்தனர் என்று சொன்னதாகச் சொல்லப்படுகிறது. இதன்மீது கூட்டத்தாரிற் சிலர் ஆஸ் பத்திரிக்குள் புகுந்து மிஸ்ட்ரஸ் ஈர்ஸ்டனைத் தேட யத்த னித்தனர். ஆனல் அம் மாது மிஸ்ட்ரஸ் பெஞ்சமின் என்

னும் மாதால் ஒளிக்கப்பட்டாள். இவ்விதம் கூட்டத்தாரினின்றும் தப்பிவிட்டார். ஆத்திரங்கொண்ட கூட்டத்தார்கள் நாஷனல் பாங்கியைச் சுற்றிலும் நின்றுகொண்டு மானேஜராகிய மிஸ்டர் ஸ்டூவார்ட் அவர்களையும், அகௌன்டண்ட் மிஸ்டர் ஸ்காட்டையும் கொன்று விட்டனர். ரெயில்வே சாமான்கள் கிடங்குக்குச் சென்ற கூட்டத்தார்கள் ரெயில்வே கார்டான மிஸ்டர் ராபின்ஸனைக் கொலை செய்துவிட்டனர். சில கூட்டத்தார்கள் அலயன்ஸ் பாங்கியைத் தாக்க வாரம்பித்தனர். இதன்மேல் மானேஜராகிய மிஸ்டர் தாம்ஸன் இவர்களைச் சுட கூட்டத்தார்கள் மிக்க ஆத்திரம்கொண்டு இவரையும் கொன்று பாங்கி சாமான்களால் இவர் சரீரத்தைச் சுற்றி வெளியே தள்ளி சுட்டுவிட்டனர். ரிகோபாலத் தண்டை, பட்டாளத்தார் விடுதிக்கு மின்சார விளக்குப் போடும் ஸார் ஸண்ட்ரோலண்டு அவர்கள் கொல்லப்பட்டனர். டவுன் ஹால், போஸ்ட் ஆபீஸ், மிஷன் ஹால், பகதன்வாலா ரெயில்வே ஸ்டேஷனில் பாதி ஆகிய இவைகளும் கொளுத்தப்பட்டன. சார்ட்டர்ட் பாங்கியையும் இவ்வித நிலைமைக்குக் கொண்டுவர யத்தனித்தனர். ஆனால் அதிக சேதம் நேரவில்லை. பாங்கியின் இந்திய உத்யோகஸ்தர்கள் இவ்வாபத்தினின்றும் காப்பாற்றிவிட்டனர். மிஸ் ஷெர்வுட் என்னும் மாது ஸைகிலில் சென்றுகொண்டிருந்தபோது ஜனங்கள் அவளை மிருகத் தன்மையாய்த் தாக்கினர். ஆனால் அக்கூட்டத்துள்ளிருந்த ஒருமாணாக்கனது தந்தை அவரைக் காப்பாற்றி விட்டனர். கூட்டத்தாரிற் சிலர் நாஷனல் பாங்கிக் கிடங்கைக் கொள்ளையிட வாரம்பித்தனர். பாங்கியின் சில சாமான்கள் சில போலீஸார் வசமிருக்க அவர்களால் அச் சாமான்கள் திருடப்பட்டனவென அபிப்பிராயப்பட்டதாய்த் தெரிகிறது. இவ்விதம்

இந்தக் கொள்ளையும் நாசமும் ஏப்ரல் மாதம் 10-ம் தேதி மாலை 5 மணியோடு முடிவுற்றது.

மிக்க அன்பாய் நேசிக்கப்பட்ட தலைவர்கள் எதிர் பார்க்கப் படாத நிலைமையில் வெளியேற்றப் பட்டது மிக்க ஜனங்களுக்கு ஆத்திரத்தை யுண்டு பண்ணியது. இது தவிர அமைதியாய்க் கூட்டத்தார் டிப்டி கமிஷனர் அவர்களிடம் பிரார்த்தனை செய்து கொள்ளச் சென்ற போதும் தடுக்கப்பட்டனர். தடுக்கப் பட்டபோது கூட்டத்தார் பிடிவாதங் கொள்ள அவர்கள் சுடப்படவும் செய்தனர். இச் சமயத்தில் நாம், கூட்டத்தார் ரெயில்வே மேல் பாலம் வரும் வரையிலும், பட்டாளத்தாரோடு மன்றுடும் வரையிலும் எவ்வித தீங்கையும் இழைக்கவில்லை யென்பதைக் குறிப்பிட வேண்டியது அவசியம். இக் கூட்டத்தார்கள் டிப்டி கமிஷனர் அவர்கள் பங்களாவுக்கு விடப்பட்டு அங்கே இவர்கள் பிரார்த்தனை எடுபடாமல் போனால் என்னவாயிருக்கும் என்பது ஒருவராலும் சொல்லப்பட மாட்டாது. அது வெகுவாய் டிப்டி கமிஷனர் அவர்கள் நடந்துகொள்ளும் நிலைமையைப் பொருத்ததா யிருந்திருக்கும். கூட்டத்தார்கள் உறுதியான மனதுடன் சென்றதாகவே வைத்துக் கொள்வோம். அவர்கள் தீங்கிழைப்பார்கள் போல் தென்பட் டிருந்தால் அதிகாரிகள் அவர்களை தடுத்திருக்கலாம். இராணுவச் சட்ட கமிஷன்கள் முன்னிலையில் கொடுக்கப் பட்ட வாக்குமூலங்களாலும், லார்ட் ஹன்டர்ஸ் கமிட்டியார் முன் கொடுக்கப் பட்ட வாக்குமூலங்களாலும் எங்களுக்குக் கிடைத்துள்ள வாக்குமூலங்களாலும் அவர்கள் சுடப்படப் போவதாய் எச்சரிக்கை செய்யப் படவில்லை யெனத் தெரிகிறது. எல்லா நாகரிக தேசங்களிலும் சுடுவதற்கு யத்தனிப்பதற்கு முன் அநுஷ்டிக்க வேண்டிய தர்மங்கள் யாவையும்

அநுஷ்டித்ததாயும் தெரியவில்லை. சமாதான வார்த்தை யாவது, பிரீதியை யுண்டுபண்ணத் தகுந்த வார்த்தையாவது இதர சாந்தமான வழிகளாவது அநுஷ்டிக்கப்படவில்லை. கூட்டத்தார்கள் மன்றாடியதும் சுட உத்தரவிடப் பட்டாய் விட்டது. இந்த தேசத்தில் நிர்வாக அதிகாரிகளுக்காவது இராணுவ அதிகாரிகளுக்காவது எவ்வித தொந்தரவும் ஏற்படாமல் இந்தியர்களது உயிருக்கு நாசத்தை யுண்டுபண்ணுவது சகஜமாய் விட்டது.

மிஸ்டர் ஸாலேரியாவோடு கூட்டத்தார் மத்தியில் பிரவேசித்து ஜனங்களைக் கலையும்படி செய்த ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் மாக்பூல் மகம்மத் அவர்கள் இரண்டாவது தடவை இராணுவத்தார் சுட்டதைப் பற்றிக் கூறுவதாவது :—

“ நாங்கள் கூட்டத்தார்களைப் பின்னுக் கழைக்கலா மென்ற நல்லெண்ணங்கொண்டு டிப்டி கமிஷனர் அவர்களையும், இதர உத்தியோகஸ்தர்களையும் சுடாமல் பின்வாங்க ஸாலேரியாவும் நானும் கூவிச் சொன்னோம். கூட்டத்திற் சிலர் பட்டாளத்தார்மேல் கல்லையும், கட்டையும் வீசினர். அப்பட்டாளத்தார் எவ்வித எச்சரிக்கையும் முன்னறிக்கையுமின்றி படபடவென்று சுட ஆரம்பித்தனர். எனது இடப்பக்கத்திலும், வடப்பக்கத்திலும் குண்டுகள் பறந்தன. கொல்லப்பட்டும் காயப்பட்டும்போன 20 - அல்லது 25– பேர்கள் போக மிகுதியான கூட்டத்தார்கள் கலைந்தனர். அவர்கள் சுட்டு நிறுத்தியதும் நான் அவர்களிடம்சென்று காயப்பட்டவர்களுக்கான வண்டியாவது முன்னுதவியாவது தயாராயிருக்கிறதாவெனக் கேட்டேன். சமீபத்திலுள்ள ஆஸ்பத்திரிக்கு உதவியை நாடிச் செல்லலாமாவென விரும்பினேன். என்னைப் பட்டாளத்தார்கள் விடவில்லை. என்றாலும் மிஸ்டர் ஸேமூர் அவர்கள் என்னை

விட அனுமதி கொடுத்தனர். இவ்விதம் சுட்டபோது டிப்டி கமிஷனர் அவர்களே பிரசன்னமாயிருந்தனர். நாங்கள் இருவரும் வக்கீல்கள் என்பதும், நாங்கள் கூட்டத்தைக் கலைக்க வந்திருக்கிறோமென்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் தெய்வச் செயலாகத்தான் பிழைத்தோம். அதிகாரிகளுக்கு இன்னும் கொஞ்சம் பொறுமை யேற்பட்டிருந்தால் நாங்கள் கூட்டத்தைப் பின்வாங்கச் செய்திருப்போம். அதிகாரிகள் சுட தீர்மானித்து விட்டதும் அவர்களுக்குதவியாய் வண்டியாவது சிகிச்சைக்கான இதர விஷயங்களாவது சேகரஞ்செய்யப் பிரயத்தனப்படாதது மிக்க விசனத்தைத் தரத்தக்கதாகும். உடனே வைத்திய சிகிச்சைகள் செய்யப்பட்டிருந்தால் சிலர் பிழைத்திருக்கக் கூடுமென்றும் நான் சொல்லுவேன். கொஞ்சம் சுட்டதுமே ஜனங்கள் ஓட ஆரம்பித்தனர். அப்போதும் சுடுகிறதை நிற்காமல் இன்னும் சுட்டுக்கொண்டே யிருந்தனர். அவர்களில் அநேகர் முதுகில் சுடப்பட்டனர். காயப்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலோர் இடுப்புக்குமேலும், முகத்திலும், தலையிலும் சுடப்பட்டவர்களாகும். (வாக்குமூலம் 5. இங்கிலீஷ் பிரதிபக்கங்கள் 30 & 31) இதுவரையில் கூட்டத்தார்கள் எவ்விதத் துஷ்டச் செய்கையும், செய்யவில்லையென்பது ஞாபகத்திலிருக்கவேண்டும். ஆகவே, பொறுமைக்காவது அலக்ஷியத்துக்காவது இடமில்லாமற் போயிற்று. இதுவேதான் சாட்சியின் வாக்குமூலப்படி வழக்குக் காரணமாயிற்று.

தலைவர்களை அப்புறப்படுத்தியதுமன்றி, அநியாயமாய் ஜனங்களைச் சுட்டது மன்றி அவர்களுக்குதவியாய் வைத்திய சிகிச்சைகள் ஏற்படுத்தாதது ஜனங்களுடைய சொத்துக்கும், உயிருக்கும் நாசத்தை யுண்டுபண்ண

வேண்டுமென்றே எண்ணங் கொண்டதாய்த் தெரிகிறது. பாங்கி மானேஜர்கள் மிக்கக் கீர்த்தியானவர்களும், ஜனப் பிரியர்களுமாகுமென்பதில் ஐயமில்லை. கொல்லப்பட்ட இதரர்கள் ஜனங்களுக்குத் தெரியாது. அவர்கள் சுத்த மானவர்களே யாகும். மிஸ் ஷெர்வுட் என்னும் மாது அன்பு மிகுந்த கிறிஸ்த உபாத்யாயனியாகும். மிஸ்டர் ஈஸ்டனது எவ்வித குற்றமுள்ள வார்த்தைகளும் கூட்டத் தார்கள் செல்வதைத் தடுத்திரா. கட்டடங்களை அழித் தது சுத்தப் பைத்தியக்காரத்தனமேயாகும். அமிர்தசரஸ் ஜனங்களால் இதற்குமுன் காண்பிக்கப்பட்ட பொறுமை யும், அரிய காரியமும் இக்கூட்டத்தார்களது வெறிபிடித்த காரியங்களால் கெட்டுப் போயிற்று.

இவ்வெறிபிடித்த காரியங்கள் தடுக்கப்படக்கூடுமா? அநியா ஜனங்களது படுகொலைத் தடுக்கப்பட்டிருக்குமா? போலீஸார்கள் யாதுசெய்துகொண் டிருந்தார்கள்? டவுன் ஹாலோடு சேர்ந்ததுதான் போலீஸார் ஸ்டேஷனுமாகும். போலீஸ் ஸ்டேஷனிலும் போதுமானவளவு உத்தி யோகஸ்தர்களிருந்தார்கள். டவுன் ஹாலை அழித்த கூட் டத்தார் போலீஸார் விடுதியைப் பங்கப் படுத்தவில்லை. அழிக்கப்பட்ட கட்டடங்களில் பெரும்பாலும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில்தானிருந்தன. பாங்கிகள் சுடப்படப்போகின்றன வென்ற சமாசாரமும் அவர்களுக் கறிவிக்கப்பட்டது. போலீஸார்கள் தம்மாபத்தைக் கவ னிக்காது கொல்லப்படவிருந்த இங்கிலீஷ்காரரது உயிரை யாவது காப்பாற்றி யிருக்கவேண்டியது அவர்கள்கடமை.

இக்கொலையும் வீட்டுநாசமும் திடீரென நேர்ந்ததால் கவர்ன்மெண்டார் அச்சமயம் கலங்கிப் போயினர். லெப்டினண்ட் கவர்னர் அவர்களால் மிஸ்டர் கிச்சின் அவர்கள் லாகூரிலிருந்து அஞ்சலில் அனுப்பப்பட்டார்.

ஹண்டர் கமிட்டி முன்பு அவர் விசாரிக்கப்பட்டபோது அவர் கொடுத்த வாக்குமூலத்தில் அவர் ரஸ்தாவில் ஜனங்களைக் கண்டதாகச் சொல்லியிருக்கிறார். லாகூருக்கு 35-மைல் தூரத்திலுள்ள அமிர்த சரஸுக்கு அவர் மோட்டார் வண்டியேறி யாதொருவித தொந்தரவும் பெறாமல் போயிருக்கிறார். இது ஏப்பிரல் மாதம் 10-ந் தேதி மாலை 4-மணிக்கு நடந்ததாகும். அன்றிரவு 11-மணிக்கு பட்டாளம், மேஜர் மாக்டொனல்டால் நிர்வகிக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டது. மிஸ்டர் கிச்சன் அவர்கள் அவரிடம் சொன்னதாவது, "நிலைமை அவர்களால் அடக்க முடியாமல் போய்விட்டது. இராணுவ நிலைமைக்குத் தகுந்தவண்ணம் நீர் தகுந்த ஜாக்கிரதை யெடுத்துக் கொள்ளவேண்டும்." இன்னும் அவர் அவாது வாக்குமூலத்தில் சொல்வதாவது, 'பட்டணத்திற்குத் தகுதியான சைனியத்தை யனுப்பி ஆங்குள்ள சமாசாரங்களையாவது பிழைக்கக்கூடிய மனிதர்களையாவது கொண்டுவரவேண்டும்" என்பதாகும். அப்போது லார்டு ஹண்டர் "ஏன் ஒரு ஸிவில் அதிகாரி அனுப்பப்படவில்லை?" என்று கேட்டார். மிஸ்டர் கிச்சன் பதில் சொன்னதாவது, "அக்கூட்டத்தார்கள் வழி முழுதும் சண்டைபோட வேண்டியிருக்கும். இராணுவத்தார்களாலேயே நடத்தப்படவேண்டிய காரியத்தில் ஸிவில் மாஜிஸ்டிரேட்டார் தலையிடுவது அக்காரியத்துக்குப் பங்கமாய்ப்போய் விடும்...... ....பிழைக்கக் கூடியவர்கள் வெளியே கொண்டு வரப் பட்டனர். போலீஸ்டேஷனும் சண்டை சச்சரவில்லாமல் பலப்படுத்தப் பட்டது."

அவர் லாகூருக்கு 10-ம் தேதி திரும்பினார். அப்பட்டண நிர்வாக காரியம் மிஸ்டர் மைல்ஸ் இர்விங் என்பவரால்இராணுவத்தார்கள் கையில் விடப்பட்டது. அவர்

லாகூர் போய்ச் சேர்ந்ததும், இதைப்பற்றி லெப்டினன்ட் கவர்னர் அவர்களுக்குத் தெரியப்படுத்தினர். லெப்டினன்ட் கவர்னர் அவர்களும் இதை அங்கீகரித்தார். மறு நாள், மிஸ்டர் கிச்சின் அவர்கள் அமிர்தசாஸுக்கு மோடாரேறிச் சென்றனர். ஆனால் அவர் எவ்வித கலகமும் நடப்பதாய் அறியவில்லை. இப்படியிருக்கும் சமயத்தில் ஜெனரல் டையர் அவர்கள் வந்தார். அவர் தனது விடுதியை ராம்பாக் என்னுமிடத்தில் வைத்துக்கொண்டு ஸகல நிர்வாகத்தையும் தான் கவனித்து வந்தார்.

ஜெனரல் டையர் செய்த முதல் காரியம் என்னவென்றால் ஜனங்களைக் கைது செய்தலாகும். அவர் பட்டணத்துக்குள் பிரவேசித்து ஏறக்குறைய பன்னிரண்டு பேர்களை எவ்வித சங்கடமுமின்றிக் கைது செய்தார்.

இப்பொழுது ஜனங்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதைக் கவனிப்போம். 10-ம் தேதி இரவு பட்டணத்தில் திருட்டாவது கொள்ளையாவது நடைபெறவில்லை. 11-ம் தேதி காலை பிணங்களை அடக்கம் செய்ய விரும்பினர். முதலில் இராணுவத்தார்கள் ஒரு பாடையோடு நான்கு பேர்களுக்கு மேல் போக இடங்கொடுக்கவில்லை. ஜனங்கள் மிக்க அதிருப்தியடைந்தனர். அவர்கள் சவக்கோலங்கொண்டு செல்ல விரும்பினர். அவரவர்கள் தங்கள் தங்கள் இனத்தார்கள் சிலரை அனுப்பி உத்தரவு வாங்கச் செய்தனர். கடைசியாய் மிக்க மனக்கசகலுடன் உத்தரவு கொடுக்கப்பட்டதென்றாலும் மாலை 2 மணிக்குள் திரும்பிவந்து விடவேண்டுமென்று உத்தரவாயிற்று. சவக்கோலம் மிக்கப்பெரிதாயிருந்தது. உத்தரவுக்குச் சரியாயும் கீழ்ப்படிந்தும் நடந்தனர். குறித்தகாலத்திற்குள்ளும் எல்லாக் காரியமும் நடைபெற்றது. எப்ரல் மாதம் 12-ம் தேதி, அமிர்தசரஸ் சதியாலோசனை வழக்

இல் உடந்தையாளியைக் காட்டிக் கொடுப்பவராய் வந்த ஹான்ஸ்ராஜ் என்பவர், டாஹம் காடிகானில் ஒரு கூட்டம் கூட்டினர். ஏப்ரல் மாதம் 13-ம் தேதி, லாலா கன்யாலால் தலைமையின் கீழ் ஜாலியன்வாலாபாகில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்படுமென்றும் கூறினர். லாலா கன்யாலால் அவர்கள், தான் அவ்வகையான எந்த மீட்டிங்குக்கும் வரவேண்டுமென்று எவராலும் கூப்பிடப் படவில்லையென்றும் அதற்குத்தான் ஒத்துக் கொள்ளவுமில்லையென்றும் கூறுகிறார். அவர் கௌரவம் வாய்ந்த பழைய வக்கீலாகும். 75 வயதுள்ளவர். ஜனாபிமானத்தைப் பெற்றவர். (வாக்குமூலம் 29) அவர் வாக்கு மூலங்கொடுத்தது சரியென்பதற்குச் சந்தேகங் கொள்ளப்படவேயில்லை. அவருடைய பெயர் அங்கு உபயோகிக்கப்பட்டதன் காரணம் அதிக ஜனங்கள் கூடுவார்கள் என்பதற்காகவேயாகும்.

இதைப் பற்றிப் பின் வரும் விஷயங்களை நன்றாய் உணர, இடையே, அமிர்தசரஸ் வாசியான ஒருவர் தாம் சிறிதுகாலம் வெளியே சென்றிருந்தாலும் அங்நகர் வர்ணனையைப் பற்றிக் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டுவது அவசியமாகும். இவ்வர்ணனையைக் கொடுத்தவர், பஞ்சாப் சேம்பர் ஆவ் காமெர்ஸ் (Punjab Chamber of Commerce) டிப்டி சேர்மனும், அமிர்சாஸ் ப்ளவர் அண்டு ஜெனரல் மில்ஸ் கம்பெனி(Amritsar Flour and General Mills Company) மானேஜிங் டைரெக்டருமாகும் லாலா கிர்தாரிலால் அவர்களாகும். அவர் சொல்வதாவது:—

"1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி காலை 11-30 க்கு கான்பூரில் கல்கத்தா மெயிலேறி அமிர்தசாஸ் வந்து சேர்ந்தேன். அமிர்தசரஸ் கால்வாய்ப் பாலத்திலிருந்தும் அதன் மீதும் போலீஸார்கள் வரிசையாய்

நின்று இருப்புப் பாதையைக் காத்து வந்தனர். வண்டி ஸ்டேஷனுக்குள் பிரவேசித்ததும் அவ்விட முழுதும் பட்டாளத்தார்களால் கைவசப் படுத்தப்பட்டதுபோல் ஆங்காங்கு இராணுவ வீரர்கள் துப்பாக்கிகளுடன் சிதறியிருந்தனர்.........ஒரு கூலியாவது ஒருவண்டியாவது கிடைக்கவில்லை. நான் ஸ்டேஷன் பிளாட்பாரம் என்று சொல்லப் படும் ஜனங்கள் இருக்குமிடத்தைத்தாண்டி வெளியேவந்த போது நண்பர் ஸர்தார் பிக்ராம் ஸிங் என்பவர் என்னைக் கண்டு, நான் எங்கிருந்து வந்திறங்கினேனோ அந்த விடத்திற்கே திரும்பிப் போகவாவது அல்லது எவ்விதத்திலும் பட்டணத்திற்குள் பிரவேசிக்காம லிருக்கவாவது வேண்டுமெனச் சொன்னார். நான் நினைத்ததுபோல் அவர் மிகவும் பயந்திருந்த படியால் என்னிடம் அவர் வெகுநேரம் பேசவில்லை. மிக்கக் கஷ்டத்துடன் 20 நிமிஷ நேரம் தங்கிய பிறகு ஒரு ரெயில்வே உத்யோகஸ்தரது தயவில் ஒரு கூலியைப் பெற்றேன். அக் கூலி உதவியால் என் மூட்டையை எடுத்துக்கொண்டு ஸ்வர்ணாலயம் வரையில் சென்றேன். அந்தப் பாலத்தண்டை சில ஐரோப்பிய வீரர்கள் காவல் புரிந்து வந்தனர். அவர்கள் யார் வந்த போதும் அவர்கள் சாமான்களைச் சோதனை போடாமல் உள்ளே விடுவதில்லை. ஒவ்வொருவ ரிடமிருந்தும் குச்சி முதலிய எந்த மர வஸ்துவும் பிடுங்கப்பட்டது. என்னுடைய சாமான்களெல்லாம் சோதனை போடப்பட்டதும் போகும்படி உத்தரவு கொடுக்கப் பட்டேன். ஒருவரும் வண்டியின் மேல் பாலத்தின்மேற் போக விடப்படவில்லை. இவ்விதம் அநேகமாய் ஏப்ரல் மாதம் 15-ம் தேதி வரையில் நடைபெற்று வந்ததெனலாம். பட்டணத்துக்கு வெளியே எங்கு கண்டாலும் போலீஸாரும் பட்டாளத்தாரும்தான் துப்பாக்கியும் சநியனுமாய் நின்றுகொண்

டிருந்தனர். பட்டணத்துக்குள் எந்த விடத்திலும் ஒரு போலீஸ்காரர்கூட காணப்பட வில்லை........பட்டணத்துக்குள் பிரவேசித்ததும் முதன்முதல் நான் தெரிந்து கொண்டது யாதெனில் ஜலவசதி முற்றிலும் நிறுத்தப்பட்டதே யாகும்...........அஸ்தமித்ததும் நான் கண்டு கொண்டது என்னவென்றால் பட்டணத்தைச் சார்ந்த மின்சார விளக்குக ளெல்லாம் நிறுத்தப்பட்டது மாகும். இவ்வித கஷ்டம், குறைந்தது எப்ரல் 18-ம் தேதி 19-ம் தேதி வரையிலாவது நடந்திருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன். ஸ்வர்ணாலயத்துக்குச் சென்றபோது பலாத்காரப் போராட்டத்துக்கான குறிகளும் காணப்பட்டன." (வாக்குமூலம் 1. ஆங்கிலப் பிரதி பக்கங்கள் 1, 2) உத்தியோக ரீதியில் வந்த விஷயத்திலும், ஜல, விளக்கு விஷயமான இக் கஷ்டங்கள் மூன்று நாட்கள் நடந்தனவாய்த் தெரிகின்றன. சிலரே கலகத்தில் சம்பந்தப் பட்டதற்கு, பட்டண முழு ஜனங்களையும் தண்டிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனேயே, லார்டு ஹண்டர் அவர்கள், ஒரு குற்றவாளிக்கு அமைதியான நகரவாசிகள் தடுக்கப்பட முடியாதெனத் தெரிவித்த பிரகாரம் இவ்விதம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

எப்ரல் மாதம் 13-ம் தேதி காலை 9-30-க்கு ஜெனரல் டையர் பட்டணத்துக்குள் தேக பாதுகாப்புடன் சென்று ஓர் அறிக்கை யிட்டார். அவர் ஹண்டர் கமிட்டியார் முன் வாக்குமூலங் கொடுத்தபடி மூன்று பாகமாய் உள்ளன. அவைகளுள் கடைசி பாகமே இப்போது நமக்கு வேண்டும். அது பின் வருமாறாகும் :—பட்டணத்துக்குள் எந்த பாகத்திலாவது, பட்டண முழுதிலாவது, பட்டணத்துக்கு வெளியிலாவது எவ்விதமான ஊர்வலமும் நடத்தப்படக் கூடாது. அவ்விதம் எந்த ஊர்வலம் நடந்தா

லும், குறைந்தது நான்கு பேர்கள் கூடிலுைம் அதைச் சட்ட விரோதமான கூட்டமென்றே பாவித்து அவசிய மிருந்தால் ஆயுதங்களைக் கொண்டும் கலைத்து விடுவோம். "அவசிய மிருந்தால்" என்பதற்கும், 'ஊர்வலம்' என்பதற்கும், 'கூட்டம்' என்பதற்கும் என்ன பொருள் என்பதைப் பற்றி ஜெனரல் ஓடையர் கேள்வி யிடப்பட்டார். "அவசியமானல்" என்பதற்கு "கூட்டப்பட்ட கூட்டம் வேறு விதத்தில் கலைக்கப்பட முடியாது போனல்" என்றும் "கூட்டம்" என்பதற்கு "பொது ஜனத் தெருக் கூட்டம்" என்றும் பொருள் கொள்ளப்பட்டது. இல்லாது போனல் 4 பேர்களுக்கு மேல் ஒரு வீட்டில் குடியிருந்தால் கூட அவ் வறிக்கை பிரகாரம் சட்ட விரோதமானதாகும்.

இந்த அறிக்கை பஞ்சாபி துவிபாஷையாலும், உருது துவிபாஷையாலும் எங்கும் பறையறை செய்விக்கப் பட்டது. இதை முடிக்க ஜெனரல் டயர் அவர்களுக்கு 2 அல்லது 3 மணி நேரம் பிடித்தது. ஜனங்கள் சேர்வதற்காகத் தம்பட்டமும் அடிக்கப்பட்டது. எங்கெங்கே தம்பட்டம் அடிக்கப்பட்டு சொல்லப்பட்டது என்பதைத் தெரிவிக்க ஜெனரலுக்கு ஒரு படமும் எழுதிக் காட்டப்பட்டது. பட்டணத்து அநேக இடங்களில் இது படிக்கப்படவில்லை யென்பதையும் ஒத்துக் கொண்டார். அவர்கள் சென்ற வழியின் படத்தையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். பாதி ஜனங்களுக்கு மேல் அதாவது அதிக ஜனங்கள் வசிக்கக்கூடிய விடங்களில் இவ் விஷயம் தெரிவிக்கப் படவே யில்லை. இந்த அறிக்கையைப்பற்றி மிகச் சிலருக்கேதான் தெரியுமென்பதற்கு எவ்வளவோ அத்தாக்ஷிகளிருக்கின்றன. ஏப்ரல் மாதம் 13-ம் தேதி என்பது இதற்கு முன்னல் சொல்லப் பட்டதுபோல் ஹிந்து வருஷப் பிறப்பு தினமாகிய "வைசாகம்" என்பதாகும்.

இந்த அறிக்கையைப் பற்றி ஒன்றுமறியாத அநேக ஜனங்கள் இப் பட்டணத்துக்கு வந்து கூடினர். இவ்விதம் ஜனங்கள் வந்த விஷயத்தைப் பற்றியும், அவர்களுக்கு இவ் வறிக்கை விஷயமாய் ஒன்றும் தெரியாது என்பதைப் பற்றியும் உத்தியோக தரபில் சாக்ஷிகள் ஒத்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்த அறிக்கை செய்யப்பட்ட காலத்தில் அமிர்தசரஸ் தெருக்களில் ஒருபையன் ஒரு தகர டப்பியைத் தட்டிக்கொண்டு ஜாலன்வாலாபாகில் 4-மணிக்கு லாலா கன்யாலால் அவர்களது தலைமை ஸ்தானத்தின் கீழ் ஒரு கூட்டம் நடைபெறுமென தெரிவித்தான். பையன் தெரிவித்த போது என்ன மணி இருக்குமென்று சிலர் கேட்கலாம். நமக்குக் கிடைத்த வாக்குமூலத்தால் தெரிவது யாதெனில் ஜெனரல் டையர் அவர்கள் விளம்பரம் தெரிவித்ததற்குச் சற்று முன்னதாக விருக்குமெனத் தெரிகிறது. லாலா கன்யாலால் கூறுவது யாதெனில், "இதுவரையில் இன்னாரென்று என்னால் கண்டு பிடிக்க முடியாத ஏதோ ஒருவன் ஜாலன்வாலாபாகில் என்னால் எப்பிரல்மாதம் 13-ந்தேதி ஒரு கூட்டம் நடைபெறுமெனக் கூறினான். நான் அக்காலத்து ரீதியை ஒழுங்காய் எடுத்துரைப்பேன் என்று ஜனங்கள் நம்பினர். (வாக்குமூலம் 29. ஆங்கிலப் பிரதி பக்கம் 73.)

அன்று தினம் பகல் 4-30-க்கு ஜாலன்வாலா பாக்கில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்படப் போவதாய் அன்று தினம் 12-45-மணிக்கு ஜெனரல் டையர் அவர்கள், கேள்விப்பட்டனர். அந்தக் கூட்டத்தைத் தடுக்க ஜெனரல் டையர் அவர்கள் ஒருவித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லையென்று ஒத்துக்கொள்கிறார். லார்டுஹண்டர் அவர்கள், " ஜாலன்வாலாபாக்கில் மீட்டிங்குகூடப்

போவதாயிருந்ததை நீர் ஏன் தடுத்திருக்கக் கூடாது?" என்று கேட்டார்.

ஜெனரல்.—"நான் கூடிய சீக்கிரத்தில் அங்குசென்றேன். நான் மிக்க யோசிக்க வேண்டியு மிருந்தது. நான் என் சைனியத்தை ஒருங்கு கூட்டவும் வேண்டியிருந்தது. ஜனங்கள் கூட்டம் கூட்டக் கூடாதென்று நான் போதுமான வளவு சொல்லிவிட்டதாயெண்ணினேன்."

லார்டுஹண்டர்.—"உமக்கு யோசனை செய்வதற்கும் மனதைத் திடப்படுத்திக் கொள்ளவும் 12-40-முதல் 4-மணிவரையிலா பிடித்தது?"

ஜெனரல்டையர்.—"நான் காலமே சொல்லியிருக்கும் போது அவர்கள் கூட்டம் கூடுவார்களென்றே எண்ணவேயில்லை. ஒரு பட்டாளத்தை யனுப்பி அவர்களைப் போகாமலிருக்கும்படி தடைசெய்ய யோசிக்கவுமில்லை."

மாலை 4-மணிக்கு மீட்டிங்கு கூட்டப்பட்டிருப்பதாய் நிச்சயமாய்த் தெரியவந்தது. உடனே அவர் பட்டாளத்துக்குச் சென்று 25-சீக்கியர்களோடும், 25 - துப்பாக்கிக் கொண்ட கூர்க்கர்களோடும் சென்றார். இது தவிர கூக்ரிஸ் ஆயுதத்தோடு 40-கூர்க்கர்களையும், இரண்டு யுத்த தளவாட மோடார் வண்டிகளையும் கொண்டு போனார். அவர் சாதாரண கால்நடையாய் அவ்விடத்துக்குச் சென்றார். லார்டுஹண்டர் அவர்கள் "நீங்கள் ஏன் அதிசீக்கிரம் அங்கு சென்றிருக்கக்கூடாது?" என்று கேட்டதற்கு அவர் "எங்களால் முடியவில்லை. வெயில் கடுமையாக விருந்தது. நாங்கள் சாதாரண நடையோடே சென்றோம்" என்றார். அவர் மாலை 5-அல்லது 5--15-க்கு அங்கு சென்றார்.

ஜாலன்வாலாபாக் என்பதென்ன ? ஜாலி என்பது அத்தோட்டமிருக்கும் இடத்துக்கு மூல புருஷர். உவாலா என்றால் உடைய எனப் பொருள்படும். பாக் என்றால் தோட்டமென்பதாகும். இது நான்கு பக்கமும் வீடுகளால் சூழப்பட்ட ஒரு வெற்று மைதானமாகும். அது ஒருவருடைய பிரத்தியேக சொத்து. ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வந்தது. அது ஒரு நாற்கோண வடிவமான இடம். அதைச்சுற்றிலும் சுவருண்டு. அநேகமாய் அதைச் சுற்றிலுமுள்ள வீடுகளின் சுவர்களே இதன் எல்லைச் சுவர்களாயின. அந்த நாற்கோண வடிவமுள்ள நிலத்தில் மூன்று மரங்களும் ஒரு ஸமாதியும் ஒரு கிணறு முண்டு. இதன் முக்கியவழி ஒரு குறுகலான வழியாகும். இதன் வழியாய் யுத்த தளவாடங்க ளடங்கிய வண்டி தாராளமாய்ப் போக முடியாது. இது தவிர வேறு நல்வழிகளும் கிடையா. ஆனால் 4 அல்லது 5 இடங்களில் ஏதோ குறுகலான வழிகளால் வெளியே வரமுடியும். முக்கிய வாசல் வழி உயர்ந்தும் பட்டாளத்தார்கள் ஒழுங்காய் நிறுத்தப்பட்டு முன்னிலையிலுள்ள ஜனக்கூட்டத்தைச் சுட வாட்டமானதாயுமிருந்தது. ஆகவே ஜெனரல் டையர் அவர்கள் தனது 90 வீரர்களுடன் சென்றதும் ஜனங்கள் வெளியேறச் சரியான வழியைப் பெறவில்லை.

வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ள கைப்பிரதிப்படி ஜெனரல் டையர் வருவதற்குமுன் ஹான்ஸ்ராஜ் அவர்கள் வசத்தில் 20,000 ஜனங்களிருந்தனர். அவரும் மற்றும் சிலரும் அதற்காகப்போடப்பட்ட சற்று உயர்ந்த மேடையில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். துருப்புகள் வருவதற்கு முன் ஒரு ஆகாய விமானம் உயர வட்ட மிட்டுக் கொண்டிருந்தது. ஹான்ஸ்ராஜ் கூட்டத்தார்களை பயப்படாமலிருக்கச் சொன்னார். அந்தச் சபை, பல குழந்தை

களும் பையன்களும் கூடிய சபையாகும். சில பெற்றோர் குழந்தைகளுடன் ஆங்கு வந்திருந்தனர். ஜனங்கள்கையில் தடிவைத்துக் கொண்டிருக்க வில்லை. சில ஸி. ஐ. டி (துப்பறியும் போலீஸார்களும்) உத்தியோகஸ்தர்களும் அம்மீட்டிங்குக்கு வந்திருந்தனர். அவர்களில் இருவர் ஹான்ஸ் ராஜோடு பேசிக்கொண்டிருந்ததாய்த் தென் பட்டனர். ஜெனரல் டையர் அவர்கள் வலது பக்கத்தில் 25 வீரர்களையும் இடது பக்கத்தில் 25 வீரர்களையும் நாற் கோண பாகத்தின் வடபாகத்தில் உயர்ந்த விடத்தில் நிறுத்தி விட்டனர். பிறகு நடந்த விஷயங்களை அவர் கொடுத்த வாக்கு மூலப்படியே கூறுவோம்:—

வினா.—நீங்கள் பாகுக்கு (தோட்டத்துக்கு)ப் போனதும் யாது செய்தீர்கள்?

விடை.—நான் சுட ஆரம்பித்தேன்.

வினா.—உடனேயா?

விடை.—உடனே தான். நான் அந்த விஷயத்தைப்பற்றி யோஜித்தேன். என்னுடைய கடமை என்ன என் பதைப்பற்றி யோஜிக்க 30 ஸெகண்டுகளுக்குமேல் பிடிக்கவில்லை.

வினா.—கூட்டத்தார்கள் என்ன செய்து கொண்டிருந் தனர்.

விடை.—"நல்லது. அவர்கள் கூட்டம்கூட்டிக்கொண்டிருந் தனர். அங்கு ஒரு மனிதன் ஒரு உயர்ந்த மேடை யில் உயரமான விடத்தில் உட்கார்ந்து கொண்டிருந் தான். அவன் கைகள் அங்கு மிங்கும் அசைந்தாடிக் கொண்டிருந்தன. அவன் வாஸ்தவமாகவே உபந் நியசித்துக் கொண்டிருந்தான். நான் நினைத்துச் சொல்லக் கூடியதுபோலவே அந்த நாற்கோணத்தின்

மத்திய பாகத்திலிருந்தான். நான் துருப்புகளை வைத்துக் கொண்டிருந்த இடத்துக்கு 50 அல்லது 60 கஜ தூரத்துக்கு அப்பால் அவனிருக்கலாம்."

அநேகர் தன் அறிக்கையை அறிந்திருக்க மாட்டார்கள் என்பதை ஜெனரல் டையர் ஒத்துக் கொண்டார். ஆகவே லார்டு ஹண்டர், "அறிக்கையை உணராத ஜனங்கள், கூட்டத்திலிருப்பதால் அவர்களுக்கும் ஆபத்து நேரிடுமென நினைத்து, அவர்களை நோக்கி இப்போது கூட்டத்தைக் கலைக்காதபோனால் ஆபத்து நேரிடுமென எச்சரிக்கை செய்திருக்கக் கூடாதா?" எனக்கேட்டார்.

விடை.—இல்லை. அந்த சமயத்தில் நான் கேட்கவில்லை. என்னுடைய உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவில்லை என்பதையும், இராணுவச்சட்டம் விதிக்கப்பட்டும் ஜனங்கள் அடங்கவில்லை என்பதையும்தான் நான் உணர்ந்தேன். ஆகவேதான் நான் உடனே சுடும் கடமையைக் கைக்கொண்டேன்.

வினா.—நீங்கள் கூட்டத்தைக் கலைப்பதற்குமுன் கூட்டத்தார் எவ்விதப் பிரயத்தனமும் எடுத்துக்கொள்ளவில்லையா ?

விடை.—இல்லை ஐயா. அவர்களிற் சிலர் ஓட ஆரம்பித்தனர்.

வினா.—ஓட ஆரம்பித்தார்களா ?

விடை.—ஆம். நான் சுட ஆரம்பித்தபோது, மத்தியிலிருந்த பெருங்கூட்டத்தினர் பெரும்பாலோர் வலது பக்கமாக ஓட ஆரம்பித்தனர்.

வினா.—இராணுவச்சட்டம் விதிக்கப்பட்டது. மிகவும் ஆபத்தைக் கொடுக்கக்கூடிய வழியை நீங்கள் கைக்கொள்ளுமுன் பட்டணத்தின் அமைதிக்குக் காரண

பூதரான டிப்டி கமிஷனர் என்ற அதிகாரியை நீங்கள் கலந்து யோஜித்தீர்களா ?

விடை.—அந்தக்காலத்தில் கலந்து யோஜிப்பதற்கு ஒரு டிப்டி கமிஷனருமில்லை. இன்னும் சிலரைக் கலந்து யோஜிக்க வேண்டுமென்பது யுக்தமானவழி என்பதை நான் உணரவில்லை. என்ன காரியத்தை நான் உடனேசெய்யவேண்டுமென்பதை மட்டில் யோஜித்தேன். நான் என்னுடைய இராணுவதோரணையில் அவசியம் சுட்டேதீரவேண்டுமென்றும், அப்படிச் சுடாதபோனால் நான் என்னுடைய கடமையைச் செய்யத் தவறியவனாவேன் என்பதையும் உணர்ந்தேன்.

விஞ.—கூட்டத்தைக் கலைக்கவேண்டுமென்ற எண்ணத்துடனா நீங்கள் சுட்டது ?

விடை.—இல்லை ஐயா. அவர்கள் கலைகிறவரையில் சுடவேண்டுமென்பதாகும்.

விஞ.—நீங்கள் சுட ஆரம்பித்ததும் கூட்டம் கலையவாரம்பித்ததா ?

விடை.—உடனே.

விஞ.—நீங்கள் இன்னும் சுட்டுக்கொண்டேயிருந்தீர்களா ?

விடை.—ஆம்.

விஞ.—கூட்டம் கலைவதாயிருப்பதைப் பார்த்ததும் நீங்கள் ஏன் நிறுத்தவில்லை ?

விடை.—அவர்கள் நன்றாகக் கலைந்துபோகிற பரியந்தம் சுடவேண்டியது என் கடமை என நினைத்தேன். நான் கொஞ்சம் சுட்டிருந்தால் நான் சுட்டதில் மிக்கத் தப்பிதம் செய்தவன் ஆவேன்.

பிறகு அநேக கேள்விகள் போடப்பட்டபோது ஜெனரல்டையர், "தான் 10-நிமிஷகாலம் சுட்டதாகவும், தன்னுடைய இராணுவ அனுபவத்தில் இவ்விதமான கூட்டத்தைக் கலைத்த அநுபவமில்லையென்றும், சுடாமலே தன்னால் கூட்டத்தைக் கலைத்திருக்க முடியுமென்றும், அப்படிக்கிருக்க சுட்டுக் கூட்டத்தைக் கலைத்த காரணம் அவ்விதம் நான் செய்யாதுபோனால் திரும்ப கூட்ட ஜனங்கள் என்னிடம் வந்து என்னை பரிகசிப்பார்களென்றும், இவ்விதத்தில் நானே என் முட்டாள் தனத்துக்குக்காரணமாவேனென்றும் எண்ணினேன்" என்றார். அவர்தான் சுட்டதற்குக் காரணமாக மற்றொரு கேள்விக்குப் பதிலாகச் சொன்னதைக் கீழ் குறிப்பிடுகின்றோம்.

" அவர்கள் என்னையும் என் இராணுவக் கூட்டத்தார்களையும் திடீரெனக் கெடுதல் செய்வார்கள்போல் எண்ணினேன். மேலே கூறப்பட்டவையெல்லாம் அமிர்தசரஸ் மட்டிற்குமல்லாது எல்லாவிடங்களிலும் நடைபெறுவதாயும் தெரியவந்தது. இந்த இராணுவநிலைமையும் அமிர்தசரஸுக்குமட்டு மல்லாது எல்லாவிடங்களுக்கு முரித்தானதென்று எண்ணினேன்." ஜெனரல் 1650-ரவைகள் வெளியேறும்படி சுட்டார். யுத்த தளவாடங்கள் நிறைந்த வண்டியை பாக்குக்குள் (அந்த கூட்டம் கூடிய விடத்திற்குள்) கொண்டுபோயிருந்தால் அதைக்கொண்டு இன்னும் சுட்டிருப்பார். அவர் சுட்டதை நிறுத்தியதன் காரணம் அவர் வசத்திலிருந்த துப்பாக்கிகளில் ரவைகளில்லை. கூட்டமோ இன்னும் மிகுந்திருந்தது. அவர் சுடப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்யவாவது, காயப்பட்டவர்களை வெளியேற்றவாவது பிரயத்தனங் கொள்ளவில்லை. உதவி செய்யவேண்டியது அவரது கடமையாய் இல்லாமல்போய் விட்டது. அது வைத்தியர் விஷயமான வேலையாகிவிட்

டது. அவர் சுட்டதை நிறுத்தியவுடனே அவரும்சென்று விட்டார். அடிக்கடி அவர் கூட்ட மிகுந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் தன் துப்பாக்கியைத் திருப்பிச் சுட்டார். அவர்கள் வேகமாய் ஓடிவிட்டார்களே என்ற எண்ணத் துடன் அவர்களைச் சுடவில்லை. அவர்கள், கூட்டம் கூடிய குற்றத்தைச் செய்ததற்குத் தண்டனையாக ஜெனரல் அவர்களைச் சுட்டார்.''

நேரிட இக்காக்ஷியைக் கண்ட ஒருவாது வாக்குமூலத் தால் இன்னும் சில விபரங்களைக் கூறுவோம். லாலா கிர்தாரி லால் அவர்களது வாக்குமூலத்தை ஏற்கனவே கூறி யுள்ளோம். அந்தப் பாக்கை (கூட்டம் கூடிய விடத்தை) அவர் அதற்கு எதிராயுள்ள ஒரு வீட்டின் மெத்தையினின் றும் பார்த்ததாய்ச் சொல்லிய விவரத்தைக் கூறுவோம். "நூற்றுக் கணக்கான ஜனங்கள் அந்த விடத்தில் கொல் லப்பட்டதை நான் பார்த்தேன். ஜனங்கள் எந்த வழி யாய் வெளியேற எத்தனித்தார்களோ அந்த விடத்தை நோக்கிச் சுட்டதே மிக்கக் கொடிய காரியமாகும். வெளியே செல்லக் கூடிய வழிகள் 4-அல்லது 5-தான். இவ்விடங்களிலெல்லாம் குண்டுமழை பொழியப்பட்டன. ....அநேகர் ஓடிய ஜனக்கூட்டத்தில் அகப் பட்டும், மிதிபட்டும், உயிர் துறந்தும் போயினர். இரத்தம் வெள்ளமாய் ஓடின. பூமியில் மல்லாந்து படுக்கப்பட்ட மனிதர்களும் சுடப்பட்டனர்.........................இறந்த வர்களைப் பற்றியாவது காயப்படுத்தப் பட்டவர்களைப் பற்றியாவது அதிகாரிகள் எவ்வித பிரயத்தனமும் எடுத் துக்கொள்ளவில்லை.................................நான் பிறகு காயப்படுத்தப்பட்டவர்களுக்கு தண்ணீர் முதலியன கொடுத்து என்னாலான உதவிபுரிந்தேன்................. அந்த இடம் முழுதையும் சுற்றிப்பார்த்து ஆங்கு கிடந்த

ஒவ்வொருவரையும் பார்த்தேன். வெவ்வேறிடங்களில் பலர் கும்பல் கும்பலாய் மடிந்து கிடந்திருந்தார்கள்....... ....வளர்ந்த மனிதர்களும் சிறுபையன்களும் கூட மடிந்து கிடந்தார்கள். சிலர்க்குத் தலை உடைக்கப்பட்டிருந்தது. சிலர்க்குக் கண்ணிலும், சிலர்க்கு மூக்கிலும், சிலர்க்கு மார்பிலும், சிலர்க்குக் கால்களிலும், கைகளிலும் பலத்த காயமுண்டாக்கப்பட்டிருந்தது.............+.............அப்போது ஆயிரத்துக்கு மேலிட்ட நபர்கள் ஆங்கு இருந்திருக்கவேண்டுமென்று நினைத்தேன்.....................ஜனங்கள் இறந்தும் காயப்பட்டும்போன தம்மினத்தாரையும் கவனியாது ஓட ஆரம்பித்தனர். ஏன் இவ்விதம் அவர்கள் ஓடினார்களென்றால் திரும்பவும் 8-மணிக்குமேல் அவர்கள் சுடப்படப் போவதாய்த் தெரியவந்தது." (வாக்கு மூலம் 1. ஆங்கில பிரதி பக்கம் 10-11.)

ஏப்ரல் மாதம் 13-ம் தேதி தம்பட்ட மடித்து விளம்பரப் படுத்தப்பட்ட அறிக்கையின் இரண்டாவது பாகம் பின் வருமாறாகும்:—

"பட்டணத்தில் வசிப்போர் எவரும் இரவு 8-மணிக்கு மேல் அவரவர் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது. அப்படி வந்தால் அவர்கள் சுடப்படுவார்கள்."

தான் நேரிடப்பார்த்ததாய் முன் சொன்ன அவர், பின்னும் கூறுவதாவது: "நன்றாகக் காயப்படுத்தப்பட்ட நபர்கள் சிலர் அத்தோட்டத்தைவிட்டு வீட்டுக்குச்சென்ற போது நடுவழியில் விழுந்து உயிர் துறந்தனர். இவ்விதம் தான் வைசாகப் பண்டிகையைக் கொண்டாடினர்."

இறந்தவர்கள் கணக்கைப்பற்றிப் பேசப்புகும்போது கவர்ன்மெண்டார் கணக்கிடுவது விந்தையா யிருக்கிறது.

அவர்கள் ஆகஸ்ட் 20-ம் தேதிக்கு முன் இறந்தவர்களைக் கணக்கிடத் துவக்கவில்லை. அதாவது இக்காரியம் நடந்து நான்கு மாதங்களுக்குப் பிறகு கணக்கிடத் துணிந்தார்கள். மிஸ்டர் தாம்ஸன் அவர்கள் 290 ஜனங்களுக்குமேல் சுடப்படவில்லையெனக் கூறினர். நேரிடத் தொடர்ந்துசென்று குறைந்த தொகையைக் கூறிய ஸேவா ஸமிதியின் கணக்கான 500 என்ற தொகையை அநேகமாய் ஒத்துக் கொள்ளவும் செய்தனர். உண்மையான தொகை இவ்வளவென்று எப்போதுமே வெளிவராது. ஆனால் உண்மையை ஆராய்ந்த வளவில் லாலா கிர்தாரிலால் அவர்கள் கூறிய 1000 என்ற தொகை மிகையென்றாவது அவரது திட்டமற்ற எண்ணம் என்றாவது சொல்லக் கூடாதெனத் தெரிகிறது. அலக்ஷியமாய் அவர்கள் சுட்டிருக்கலாம். அவர்கள் 20,000 ஜனங்கள் கூடியுள்ள நடுவிடத்தில் சுட்டும் 1000 பேர்கள் சுடப்படவில்லை. வலது பக்கத்திலுள்ள குறுகிய சந்தாகிய ஹான் ஸாலி சந்தைப் பார்த்தும் சுடப்பட்டதாகுமென நினைத்துக் கொள்ளவேண்டும். சந்துக்கெதிரேயுள்ள வீட்டுக் கொசலி (முன் பக்கம்) யிலும் குண்டுகள் சுடப்பட்ட அடையாளங்கள் காணப்பட்டன. எங்கள் கையிலுள்ள வாக்கு மூலங்களால் வெளிவழிகளிலும் காவல் வைக்கப் பட்டிருந்ததாகவும், ஜனங்கள் இவ்வழிகள் மூலமாகத் தப்பியோட யத்தனித்தபோது சுடப்பட்டதாகவும் தெரியவருகிறது. இவைகளெல்லாம் ஜெனரல் டையர் அவர்கள் அதிகமாய்ச் சுடவேண்டுமென்று எண்ணங் கொண்டதைத் தெரிவிக்கின்றன. இவ்வளவு செய்தும் 1000 பேர்களே சுடப்பட்டார்கள் என்றால் குற்றம் அவரைச் சார்ந்ததல்ல. தோட்டாக்களும் செலவழிந்து போயின. குறுகலான பாதை வழியாய் யுத்ததளவாடங்கள் அடங்கிய வண்டியும் உள்ளே கொண்டுபோகப்

பட முடியவில்லை. 13-ம் தேதி நடந்த அகோரமான செயல்களை வர்ணிக்கவும், ஜஸ்டிஸ் ரான்கின் அவர்களது வார்த்தையான "மிக்க பயங்கரமான" என்ற பதத்தை யுபயோகப் படுத்தவும் மனம் துணியவில்லை. இதை நன்ரு யுணர எவரும் உத்தியோக ரீதியான வாக்குமூலங்களையும், எங்களால் வெளிப்படுத்தப்பட்ட வாக்கு மூலங்களையும் படிக்க வேண்டுவது அவசியமாகும். ஏப்ரல் 10-ம் தேதி நடந்த போராட்டத்திற்குப் பிறகு ஆங்கிலேய உத்தி யோகஸ்தர்கள் யாவரும் மிக்கக் கோபங் கொண்டனர். அவர்கள் அவ்வாறு கொண்டது நியாயந்தான். எவருக் குத் தங்கள் மரியாதையைத் தெரிவித்து வந்தனரோ அவர்களே இவரை எதிர்க்க வாரம்பித்தனர். இவர்களுள் கியாதிபெற்ற அமிர்தசரஸ் வாசியான லாலா டோலன் தாஸ் அவர்கள், அதிகாரிகள் உத்தரவின்மேல் சென்ற போது அவர்கள் கோப நிலையிலிருந்ததாய்த் தெரியவந் தது. எல்லோரும் கோப நிலைமையிலிருந்தார்கள். அவர்களுள் மிஸ்டர் ஸெமூர் அவர்கள் மிக்கக் கோபங் கொண்டு கொல்லப்பட்ட ஒவ்வொரு ஐரோப்பியருக்குப் பதிலாக ஆயிரம் இந்தியர்கள் கொல்லப்படுவார்கள் என்று சொன்னூர். சிலர் பட்டணத்தையே தகர்த்துவிடவேண்டு மென்றனர். அப்போது லாலா டோலன்தாஸ், 'எவ் விதத்திலாவது இந்த பஞ்சாப் முழுவதும் புனிதமாய் மதிக்கப்படும் இந்த ஸ்வர்ண லயத்துக்குப் பங்கமேற் பட்டால் கஷ்டத்துக்கு எல்லையென்பது இல்லாமற்போய் விடும் இதை நன்ருயறியவும்.') என்று உத்தியோகஸ்தர் களுக்குக் கூறினூர். (வாக்கு மூலம் 1. ஆங்கிலப் பிரதி பக்கம் 7.)

ஏப்ரல் மாதம் 11-ம் தேதி, இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காக, பாரிஸ்டர் மிஸ்டர் மகம்மத் ஸாதிக் அவர்

களும் மற்றும் சிலரும் அதிகாரிகளைக் கேட்கச் சென்றனர். அவர் சொல்கிறதாவது, "அவர்களோடு நான் பேசிக்கொண்டிருந்தபோது எனக்குத் தெரிந்தது யாதெனில், ஐரோப்பியர்கள்; கொல்லப்பட்டார்கள் அவர்கள் இரத்தம் வீணுகப் போகாது, ஏதாவது கொஞ்சம் கலகமாவது அடக்க மின்மையாவது, அமைதிக்கு விரோதமாவது தோன்றினுல் போதுமான சைனியங்களை உபயோகித்து அவசியமானுல் பட்டணமே தகர்க்கப்பட்டாலும் படலாம்" (வாக்கு மூலம் 19). ஏப்ரல் மாதம் 11-ம் தேதி ஸிவில் ஸர்ஜன் கர்னல் ஸ்மித் அவர்கள் சொன்னதாக ஸப்-அஸிஸ்டண்டு ஸர்ஜனுகிய டாக்டர் பால முகுந்தர் சொல்வதாவது, "ஜெனரல் டையர் அவர்கள் வந்து கொண்டிருக்கிறுர். அவர் இப்பட்டணத்தை அழிக்கப் போகிறுர். அவர் பட்டணத்தைப் பற்றிய படம் எழுதிப் பட்டணத்தை அரைமணி நேரத்தில் எப்படித் தகர்ப்பது என்பதைப்பற்றி எங்களுக்குக் காண்பித்தார். நான் அப்பட்டணத்தில் வசிப்பதாய்ச் சொன்னேன். பட்டணம் தகர்க்கப்பட்டால் என் கெதி எப்படியாகுமென்று கேட்டேன். நீ உன்னைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பினுல் பட்டணத்தைவிட்டு ஆஸ்பத்திரியில் வசிக்கவேண்டுமெனக் கூறினுர்." (வாக்குமூலம் 20 ஆ-பி. பக்கம் 56)

ஏப்ரல் மாதம் 13-ம் தேதி "பயம்" எவ்விதம், ஏன் வந்ததென்பது இவ்வாறு தெரிந்துகொண்டோம். பட்டணத்தைத் தகர்க்கவேண்டிய அபிப்பிராயம் நிறுத்தப்பட்டது. 13-ம் தேதி மீட்டிங்கு இவர்களுக்கு சமயமாய் ஏற்பட்டது. ஜெனரல்டையர் இதைப்பிடித்துக்கொண்டார். கிளென்கோ சித்ரவதை என்பதைப்போல் இதுவும் ஒரு சித்ரவதையென மிஸ்டர் ஸி. எவ். ஆண்ட்ரூஸ் அவர்கள் அபிப்பிராயப்பட்டுச் சொன்னுர். மனுஷ்யத்தன்மை

யில்லாத காரியங்களில் ஏதாவது வரையறையிருந்தால் ஜாலன்வாலாபாக் படுகொலையைவிட கிளென்கோபாக் படுகொலை மிகக்குறைவாகவேயாகும். ஆனால் இக்காலத்து உண்மையளவுகணக்கிடப்படுவது போல் கிளென்கோ படுகொலை நடந்தகாலத்து கணக்கிடப்படவில்லை. அறிக்கையைக்கேட்ட ஜனங்கள்கூட, அதில் தவிர்க்கத் தகுந்த பாகத்தின் பொருளை உணர்ந்திருக்கமாட்டார்கள் என்பது எங்கள் அபிப்பிராயம். அந்த அறிக்கைக்கு விரோதமாய் எவரும் மீட்டிங்குக்குச் செல்லவில்லை. இராணுவத்தார்களுக்கு எவ்வித இடைஞ்சலான காரியமும் செய்யப்படவில்லை. அக்கொலைக்காரியம் தகுதியுள்ளதெனக்கூற எவ்வித குற்றமான காரியமும் அமிர்தசரஸுக்குள்ளாவது அமிர்தசரஸுக்கு வெளியிலாவது செய்யப்படவில்லை. அது மனிதத் தன்மையில்லாத காரியமாகும். எவ்வித மன்னிப்பையும் பெறுவதற்கியலாத இக்குற்றம், இந்தியாவின் பிரிட்டிஷ் அரசாக்ஷியினின்றும் நீக்கப்படவேண்டியிருந்தால் ஜெனரல் டையர் அவர்களை உடனே இராணுவ அதிகாரித் தனத்தினின்றும் நீக்கி விசாரணைக்குக் கொண்டுவரவேண்டும்.

அவர், லார்டு ஹண்டர் கமிட்டிமுன்பு தான்செய்த காரியத்தை ஸர்மைகேல் ஓடையர் அவர்கள் நியாயமென ஒத்துக்கொண்டதாகச் சொன்னார். பஞ்சாப் ஜனங்களது ரக்ஷகராக நியமிக்கப்பட்டிருக்கும் ஒருவர், இவ்வித மனிதத்தன்மையில்லாக் காரியத்தைச்செய்ய அநுமதி கொடுத்திருப்பாரா என்பது எங்களுக்கு மிக்கச் சந்தேகமாயிருந்தது. இராணுவச்சட்டத்தை உபயோகப்படுத்தும்போதும் இராணுவத்தலைவர்கள் ஏதோ சில துப்பாக்கிகளைத்தான் உபயோகப்படுத்தவேண்டும் என விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஜெனரல் டையர் அவர்கள் இதைச் சற்றும்

கவனிக்கவில்லையென்றே சொல்லத்துணிவோம். இதனுல் நாங்கள் இங்கிலீஷ்காரர்களைக் கொலைசெய்ததும் கட்டடங்களை எரித்ததும் நியாயமென்ருவது, குறைந்ததென்ருவது எந்தவிதத்திலும் தாங்கிப் பேசவில்லை. அவ்விதம் கொலைசெய்தவர்கள் எவ்விதத்திலும் பரிந்து பேசப்படுவதற்கு யோக்கியதையைப் பெறவில்லை. ஆனுல் ஜெனரல் டையர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறபடி கோபம் மூட்டப்பட்ட ஜனங்களுக்கு பீதியுண்டுபண்ண ஏதும் அறியா ஜனங்களைக் கொலைசெய்யவேண்டுவது அவசியமேயில்லை. காயப்படுத்தப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் அப்புறப்படுத்தவும் தகனம் செய்யவேண்டியவர்களைத் தகனம் செய்யவும் புதைக்கவேண்டியவர்களைப் புதைக்கவும் ஏப்ரல் 14-ம் தேதி செலவழிக்கப்பட்டது. இதற்கு அதிகாரம் வாங்கவேண்டுவது அவசியமாகும். இதற்கு ஓர் சுருக்கமான விளம்பரம் கொடுக்கப்பட்டது. “ஜனங்கள் அவரவாது பிரேதங்களை அதிசீக்கிரத்தில் புதைக்கவோ எரிக்கவோ செய்யவேண்டும். இதைப்பற்றி எவ்விதமான ஆர்ப்பாட்டமான காரியமு மிருக்கக்கூடாது.”

எப்ரல் மாதம் 14-ம் தேதி பட்டணத்தின் நிலைமை எவ்வாறிருந்ததென்று லார்டுஹண்டர் அவர்கள் கேட்க ஜெனரல் டையர் அவர்கள் “எனது உத்தரவுப்படி சரிவரகாரியங்கள் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றனவா வெனப் பார்க்கப்போயிருந்தேன். காவற்படையாட்களைக் கண்டேன். எல்லாம் மிக்க அமைதியுடனேயே யிருந்தது.”

மாலை இரண்டுமணி சுமாருக்கு பட்டணத்து ஜனங்கள். முனிஸிபல் கமிஷனர்கள், மாஜிஸ்டிரேட்டுகள், வியாபாரிகள் ஆகிய இவர்கள் போலீஸ்டேஷனில் வந்துகூட்டினர். அங்கு கமிஷனர் அவர்கள் பின் வருமாறு பேசினர். “ஏ ஜனங்களே! உங்களுக்குச் சமாதானம்

வேண்டுமா ? சண்டைவேண்டுமா ? கவர்ன்மெண்டாருக்குச் சர்வவல்லமையுண்டு, ஸர்க்கார் ஜெர்மனியை ஜயித்துவிட்டனர். அவர்கள் எல்லாக்காரியத்தையும் செய்யக்கூடிய சக்தியுண்டு. ஜெனரல் இன்றுதினம் உத்தரவுகள் கொடுத்துவிடுவார். பட்டணம் அவருடைய வசத்திலிருக்கிறது என்ருல் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் அவ்வுத்தரவுகளுக்கு அடங்கி நடக்கத்தான்வேண்டிவரும்."

(வா. I. பக்கம் II)

கமிஷனராகிய மிஸ்டர் கிச்சன் இவ்வளவு பேசிய பின்னர் சென்றுவிட்டார். ஜெனரல் டையர் அவர்கள் மெஸர்ஸ் மைல்ஸ் இர்விங், ரெஹில், ப்ளோமர், மிலிடரி கார்டு (இராணுவரக்ஷகர்) முதலானவர்களோடு மாலை 5-மணிக்கு வந்துசேர்ந்தார். அவர் எல்லோருடனும் வெகு கோபத்துடன் அறையில்புகுந்து பின்வருமாறு உருடுபாஷையில் பேசினர். (அதுபின் வருமாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது) :—

"நான் ஒரு சிப்பாயென்றும் வீரனென்றும், ஏ ஜனங்களே! உங்களுக்குத் தெரியும். உங்களுக்குச் சண்டை வேண்டுமா சமாதானம் வேண்டுமா. உங்களுக்குச் சண்டை வேண்டுமானல் அதற்குக் கவர்ன்மென்டார் தயாரா யிருக்கின்றனர். உங்களுக்குச் சமாதானம் வேண்டுமானுல் என் உத்தரவுக்கடங்கி கடையைத் திறந்துவிடுங்கள். இல்லாதுபோனுல் நான் சுட்டு விடுவேன். எனக்கு பிரான்ஸு யுத்தபூமியும் அமிர்த சரஸ்யுத்த பூமியும் ஒன்றுதான். நான் ஒரு இராணுவ மனிதன். நான் என்னிஷ்டம்போல் செய்வேன். நான் இப்பக்கம் அப்பக்கம் திரும்பமாட்டேன். சண்டை வேண்டுமானுல் சொல்லிவிடுங்கள். சமாதானம் இவ்விடத்தில் குடிகொள்ள வேண்டுமானுல் உடனே என்னுத்தரவுபடி எல்லாக் கடை

களும் திறக்கப்பட வேண்டும். நீங்கள் கவர்ன்மெண்டாருக்கு விரோதமாய்ப் பேசுகிறீர்கள். ஜர்மனியிலும், வங்காளத்திலும் கல்விப் பயிற்சி பெற்ற மனிதர்கள் இராஜாங்கத் துரோகமாய்ப் பேசுகிறார்கள். இவைகளை யெல்லாம் தெரியப் படுத்துவேன். உத்தரவுக்கு அடங்கி நடவுங்கள். இதைத் தவிர வேறு எனக்கு வேண்டியதில்லை. நான் 30 வருஷங்களுக்கு மேல் இராணுவத்தில் வேலை செய்திருக்கிறேன். இந்தியச் சிப்பாய்களைப் பற்றியும் சீக்கியர்களைப் பற்றியும் எனக்கு நன்றாய்த் தெரியும். நீங்கள் அமைதியா யிருக்கவேண்டும். இல்லாது போனால் கடைகள் யாவும் துப்பாக்கியாலும் பலாத்காரப் பிரயோகத்தினாலும் திறந்து வைக்கப்படும். நீங்கள் "பட்மாஷெஸ்" (Badmashes) என்பதைப்பற்றி எனக்குச் சொல்லவேண்டும். நான் அவர்களைச் சுட்டு விடுவேன். என் உத்தரவுகளுக்கு அடங்கி நடக்கவும் வேண்டும். கடைகளும் திறக்கப்பட வேண்டும். சண்டை வேண்டுமானால் சொல்லி விடுங்கள்." இவருக்குப் பின்னால் டிப்டி கமிஷனர் மிஸ்டர் மைல்ஸ் இர்விங் அவர்கள் பேசினார். அவரது பேச்சினின்றும் இரண்டு வாக்கியங்களை நாங்கள் இங்கு குறிப்பிடுகின்றோம்:—"நீங்கள் இங்கலீஷ்காரர்களைக் கொன்ற மகா பாதகமான காரியத்தைச் செய்து விட்டீர்கள். உங்கள் மீதும் உங்கள் குழந்தைகள் மீதும் அதற்குப் பிரதியாய் பழி வாங்கப்படும்."

15-ம் தேதி எல்லாக் கடைகளும் திறக்கப்பட்டன. 13-ம் தேதி பிராயச் சித்தமும், 14-ம் தேதி பேச்சும் மறுநாள் கடைகள் திறக்கப் பட்டதும் ஆகிய இவைகளைக் கண்ட யாவரும் மறுபடியும் ஸிவில் ரூல் (ஒழுங்கான அரசாக்ஷி) ஏற்படுமென்றே நினைத்தனர். ஆனால் அது அப்படி ஏற்படவில்லை. பழிக்குப் பழி இன்னும் சரியாய்

வாங்கப்பட வில்லைபோ லிருக்கிறது. ஆகவே இராணுவச் சட்டம் அறிக்கை யிடப்பட்டது. உண்மையா யிருந்தது உண்மையான சட்ட அறிக்கையாய் வெளிவந்தது. ஜூன் மாதம் 9-ம் தேதி வரையில் இது அமூலி லிருந்தது. அமிர்தசரஸில் ஜனங்களது உயிர் பலவிதங்களில் ஆபத்துக் கிடமாயிற்று :—

1. மிஸ். ஷெர்வுட் தாக்கப்பட்ட தெரு ஜனங்கள் கசையடி அடிக்கப்பட்டும், அதுவழியாய்ச் சென்ற ஜனங்கள் வயிற்றால் நகர்ந்தும் செல்ல உத்தரவிடப் பட்டனர்.

2. பேருக்கு மட்டில் இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களுக் கென்றும் ஆனால் அநுபவத்தில் எல்லா இங்கிலீஷ் காரர்களுக்கும் ஜனங்கள் சலாம் செய்யவேண்டும். இல்லாது போனால் கைது செய்யப்பட்டும் அவமானமடைந்தும் போவார்கள்.

3. அற்ப குற்றத்திற்காகவும் பகிரங்கமாகக் கசையடியும் இதர தண்டனைகளும் விதிக்கப் பட்டன.

4. பட்டணத்திலுள்ள எல்லா வக்கீல்களும் ஸ்பெஷல் கான்ஸ்டேபில்களாய் நியமிக்கப்பட்டு சாதாரணக் கூலிகள்போல் காரணமின்றி வேலை வாங்கப்பட்டனர்.

5. யோக்யதை, கவுரவம் முதலியன எதுவும் பார்க்கப்படாமல் ஜனங்கள் கைது செய்யப் பட்டனர். அவர்கள் அவ்வாறு கைது செய்யப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்ட காலத்தில் அவர்களை இழிவு படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடனும், வாக்குமூலம் வாங்கவும், குற்றத்தை ஒத்துக்கொள்ளவும் பலவகையாய் ஹிம்சிக்கப் பட்டனர்.

6. பிரத்தியேக நியாய சபை ஏற்படுத்தப்பட்டு சட்டங்களுக்கு மாறான அநியாய வழியில் குற்ற விசாரணைகள் நடத்தப்பட்டும் வந்தது. இதனால் வருத்த மடைந்த

வர்கள் அப்பீல் செய்து கொள்ளவும் அநுமதி கொடுக்கப் படவில்லை.

நாம் இப்போது நகர்ந்து செல்லும் தண்டனையைப் பற்றிப் பேசுவோம். இவ்விதம் நகர்ந்து செல்லும் தண்டனை ஒரு குறுகிய சந்தில் நடத்தப்பட்டது. இச் சந்து ஜனங்கள் நிறைந்தவிடம். இச் சந்தின் இரு பக்கங்களிலும் இரண்டு மெத்தைகள் கொண்ட கட்டடங்கள் உண்டு. இத் தெருக்களினின்றும் இன்னுஞ் சிறிய சந்துகள் பிரியும். இவைகளிலும் வீடுகள் உண்டு. அந்த சந்து ஜனங்கள், வெளியே கடை, கண்ணிக்குச் செல்ல வேண்டியிருந்தால் வேறு வழி கிடையாது. இவ் வழியே செல்ல வேண்டுமானால் நகர்ந்துதான் செல்லவேண்டும், திரும்பியும் வரவேண்டும. ஆகவே ஏற்பட்டது என்ன வென்றால் யாவரும் இதன் வழியே வெளியே போகும் போதும் வரும் போதும் நகர்ந்து செல்ல வேண்டுவதாகும். வைத்தியம், வசதிக்கான அநுகூலங்கள், யாவும் நகர்ந்து செல்பவர்களுக்குத்தான் கொடுக்கப்படும்.

இவ்விதம் உத்திரவிடப்பட்ட சந்தின் முழு நீளம் 150-கஜமாகும். இந்த சந்தின் மத்தியில் ஒரு, "திக்டிகி" என்ற ஒன்று போடப்பட்டிருக்கும். அது கசையடி அடிப்பதற்கே கட்டப்பட்டதாகும். இவ்வுத்தரவு 8-நாட்கள் நீடித்து நடந்தன. ஜெனரல் டையர் அவர்கள் இதை நான்கு நால்களால் (இரண்டு கைகளாலும், இரண்டு கால்களாலும் ஆடு மாடுபோல் நடத்தல்) நடத்தல் எனப் பெயர்கொடுத் தழைத்தாலும் அது அப்படியல்ல. ஊர்வன போல் ஜனங்கள் கையாலும் முழங்காலாலும் படுத்து நடக்கவேண்டியதாகும். அப்போது வயிறு பூமியில் பதிந்திருக்கவேண்டும். இவ்விதம் நகர்ந்து சென்றபோது முழங்கால் வளைந்தாவது, தூக்கப்பட்டாவது போனால்

இவ்விதம் இவர்களை நகரும்படி செய்பவர், பின்னின்றும் துப்பாக்கி முனையால் நகருபவர் முதுகில் குத்துவார்கள். ஆகவே நகர்வது யாவும் வயிற்றினாலும், கைகளாலுமே ஆகவேண்டியது ஆகும். இதர எல்லா சந்துகளைப்போல் இந்தச் சந்தும் அழுக் கடைந்தும், குப்பைகளோடும், கல் லாங்காசு மணல் முதலியவைகளோடு மிருக்கும். இவ்வுத் தரவு உடனே கொடுக்கப்பட்டும், மேல் அதிகாரிகளது உத்தரவின்மேல் பிறகு எடுக்கப்பட்டும் வந்தது, குறிப் பிடத்தகுந்தது. இதுதான் ஜெனரல் டயர் கொடுத்த உத்தரவுக்கான சமாதானங்கள்:—ஸ்திரீகளும் அடிக்கப் பட்டார்கள் என்பதை யுணர்ந்தேன். நாங்கள் ஸ்திரீ களைப் புனிதமாய்ப் பாவிப்பது வழக்கம். இந்த பயங்கர மான செய்கைகளுக்குத் தகுந்த தண்டனை விதிக்க நான் ஆராய்ந்து பார்த்தேன். அதற்கு வழிதேட என்னால் முடியவில்லை. அதில் கொஞ்சம் ஆபத்திருந்தது. இப் பொழுது நான் காவலிடங்களைப் பார்த்ததில், ஒரு முக் கோண வடிவமுள்ள பந்தலைக்கட்ட உத்தரவு செய்தேன். தெருக்களைச் சிரேஷ்டமானதாய்ப் பாவிக்கவேண்டுமென் பதை யுணர்ந்தேன். ஆகவே இரண்டு கோடிகளிலும் காவல் வைத்தேன். இது வழியாய் எந்த இந்தியனும் உள்ளே செல்லும்படி விடக்கூடாதென உத்தரவு செய் தேன். அவ்விதம் போக இஷ்டப்பட்டால் நான்கு கால்க ளால் மிருகங்கள் நகர்வதுபோல் நகர்ந்து செல்லவேண்டு மென்று உத்தரவு செய்தேன். இவ்விதம் செய்தால் இதை யறிந்த எந்த புத்தியுள்ள மனிதனும், எந்தப் பைத்தியம் பிடித்த மனிதனும் இந்தத் தெருவழியாய்ப் போக இசை யான் என நினைத்தேன்." தண்டனையின் நினைப்பையும், துர்நீதியையும் நாம் இலகுவில் தள்ளக்கூடியதாயில்லை. மிஸ் ஷெர்வுட் 10-ந்தேதி தாக்கப்பட்டார், இந்த உத்

தரவு 19-ந்தேதி பிரசுரஞ் செய்யப்பட்டது. மிஸ் ஷெர்வுட் என்பவர் யார் என்பதை யுணராதபலர் இதற்குள்ளாக வேண்டியதாயிற்று. அம்மாது கோழைத் தனமான மனிதர்களால் தாக்கப்பட்டதை உத்தேசித்து பஞ்சாபியரில் அநேகர் மிக்க வருத்தங்கொண் டிருக்கக் கூடும். இவ்வித மனிதர்களே இந்தத் தண்டனைக்குள்ளாக வேண்டியிருந்தது. மனிதர்களுடைய நிலைமையைச் சிறுமைப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடனேயே தண்டனையைக் கண்டுபிடித்து விதித்து அதனுல் சந்தோஷமடைபவர்களுடைய மனதின் நிலைமையை வர்ணிப்பது மிக்க சிரம சாத்தியமானதாகும். தெருக்காவல் காலை 6-மணிமுதல் மாலை 8-மணி வரையில் வைக்கப்பட்டிருந்தது. வீட்டை விட்டு வெளியே போகவேண்டிய காலங்களில், அமைதியான நகர ஜனங்களை வெளியே போகவிடாது படுத்து நகரும்படி செய்ததற்கு என்ன நியாயம் கூற முடியுமென லார்டு ஹண்டர் அவர்கள் அவரைக் கேட்டதற்கு ஜெனரல் டையர், "அவர்கள் இதர காலங்களில் வெளியே போகலாமே" என்ருர்.

அதாவது இரவு 10-மணியிலிருந்து காலை 6-மணி வரையில் போகலாமென்ருர். (மாலை 8-மணி என்பது பின்னர் 15-ந்தேதி 10-மணிக்கு மாற்றப்பட்டது.) ஜெனரல் அவர்கள் இதற்கு மாருக இரவு 10-மணிக்குமேல் எவரும் வெளிச்செல்ல மாட்டார்களென்று நினைத்து வேறு உத்தரவு கொடுக்கப்பட்டது என்றதை நினைக்கவில்லை போலும். அவர் அப்படிச் செய்திருந்தால் அவரைச் சுட்டுவிட அதிகாரமுண்டு. என்ருலும் அவர் அதே வாக்கியத்தில்கூட சில வார்த்தைகளைச் சொல்லித் தப்பித்துக் கொண்டார். "அது மிக்க தீமையை யுண்டுபண்ணுமென்று நான் நினைக்கவில்லை. அவர்கள் சிறிது கஷ்டத்தை அத

ளுல் அடைந்தாலும் இராணுவச் சட்டப் பிரகாரம் அது வெகுவாய்ப் பாதிக்காது. அவர்கள் இதரவழிகளில் உயிருக்கவசியமானவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஏதோ அற்ப கஷ்டங்களை அனுபவிக்காமலிருக்க முடியாது.

லார்டு ஹண்டர்.—"கலககாலத்தில் அமைதியான ஜனங்கள் கலகத்தை யடக்க இயலாது என்பதை நீர் ஒத்துக்கொள்ளுகிறீர்கள். அப்படி யிருக்கும்போது அக்கூட்டத்தார்களை நீக்கி அமைதியான ஜனங்களுக்குப் பூரண உதவி கொடுக்கக் கூடியது நியாயமாகாதா ?"

ஜெனரல் டையர்.—"ஆம்; சட்டத்துக்குக் கீழ்ப்பட்ட ஜனங்கள் மிக்க அற்பம். ஆனால் அந்தக் காலத்தில் துஷ்டர்களைத் தண்டனை செய்ததாகத்தான் நான் நினைக்கிறேன்."

வினா.—"ஆனால் மிஸ் ஷெர்வுட்டைத் தாக்கியவர் அடிக்கடி நடமாடும் தெரு இதுவில்லையே ?"

விடை.—"இல்லை; அந்தத் தெருவின் மத்தியில் ஒரு மேடை ஏற்படுத்தினேன். அந்த மாதைத் தாக்கியவர்கள் அங்கு வந்தால் அவர்களைக் கசையடி அடிக்கலாமென்றிருந்தேன். நான் அவர்களை அடிக்கவே நினைத்தேன்.

என்ன வாஸ்தவமாய் நடந்தது என்பதைப்பற்றி ஒரு நிமிஷம் ஆராய்ந்து பார்ப்போம். அமிர்தசரஸிலுள்ள ஒரு பெரிய கம்பெனியின் உதவி உத்தியோகஸ்தர் லாலா ஈஸ்வர்தாஸ் என்பவர் ஏப்பிரல்மாதம் 18-ந்தேதி லாலா லாப்சந்த்தினுடைய வீட்டிற்குச் சென்றார். திடீரென்று மிஸ்டர் ப்ளோமர் அவர்கள் இராணுவ உதவியுடன் அங்கு வந்தார். லாலா ஈஸ்வரதாஸனும் அவருடைய சிநேகிதர்

களும் ஒரு ஜன்னல் வழியாய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்கள். மிஸ்டர் ப்ளோமர் அவர்களைக் கண்டதும் நின்றுகொண்டு ஸலாம் செய்யச் சொன்னார். இராணுவத்தார்கள் தங்குவதற்கநுகூலமாய் அவர் வீட்டின் ஒரு பாகத்தைக் காலி செய்துகொடுக்கும்படி மிஸ்டர் லாலா லாப் சந்த் அவர்கள் கேட்கப்பட்டார். இந்த சாக்ஷி சொல்வதாவது, "ஈஸ்வரதாஸ், பான்னுலால், மேலாராம், நான் ஆகிய இவர்கள் கூடி வீட்டுக்குப்போக விரும்பினோம். போலீஸார்களால் உள்ளே விடப்படவில்லை. நாங்கள் திரும்பக் கேட்டோம். தெருவழியாய் நகர்ந்து சென்றால் அவ்வனுமதி கொடுக்கப்படுமெனச் சொன்னார். ஆகவே நாங்கள் யாவரும் தெருவழியாய் வயிற்றால் நகர்ந்து செல்ல நேர்ந்தது. வேறு ரஸ்தாவழியாய் நாங்கள் வீட்டுக்குச் செல்ல முடியவில்லை. (வாக்குமூலம் 104. பக்கம் 163) எழுத்துமூலமாகவாவது வாக்கு விளம்பர மூலமாகவாவது இவ்வுத்தரவு இதற்கு முன் பிறப்பிக்கப்படவில்லை யென்பதைக் கவனிக்கவேண்டுவது அவசியமாகும். இது அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட போதுதான் எல்லோருக்கும் தெரியவந்தது."

மற்றொரு சாக்ஷி லாலா மேகமால் என்பவர். இவர் ஒரு துணி வியாபாரி. இவர் கூறுவது யாதெனில், "என்னுடையவீடு குச்சாகுரிச்சன் என்னும் சந்திலிருக்கிறது. (இந்த சந்து நகர்ந்துசெல்லவேண்டிய சந்தின் ஒருபிரிவு) என்னுடைய கடை குரு பஜாரிலிருக்கிறது. குச்சாகுரிச்சானில் இராணுவவீரர்கள் வைக்கப்பட்ட முதல்நாள் நான் வீட்டுக்கு மாலை 5-மணிக்குத் திரும்பியபொழுது தடுக்கப்பட்டேன். நான் வயிற்றால் நகர்ந்து செல்ல உத்தரவிடப்பட்டேன். ஆனால், நான் ஓடிவிட்டேன். வீரர்கள் அவ்விடத்தைவிட்டு நீங்குகிறவரையில் நான் வெளியே

ஓரிடத்தில் தங்கி யிருந்தேன். மாலை 9-மணிக்கு வீட்டுக்கு வந்தேன். என்மனையாள் ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அவளுக்குக் கொடுக்க வீட்டில் தண்ணீர்கூட கிடையாது. ஒரு வைத்தியரும் கிடையாது. ஒருமருந்தும் கிடையாது. நான் இரவு வெகுநேரம் கழித்து தண்ணீர் கொண்டுவர நேர்ந்தது. ஒரு வைத்தியரும் வயிற்றால் நகர்ந்து வரமாட்டார்களாதலால் ஏழுநாட்கள் வரையில் ஒருவைத்திய சிகிச்சையும் அவளுக்குக் கொடுக்கப்படவில்லை." (வா. 114)

இந்தச்சந்தில் சந்நியாசிகள் வசிக்கிற ஜைன ஸபா மந்திரம் என்ற ஓர் மடம் இருக்கிறது. இந்த மந்திரத்துக்குச் சமீபத்தில் லாலா ரல்யாராம் என்ற அபின் கன்ட்ராக்டர் வசிக்கிறார். ஒருநாள் இவர் தன் கடைக்குச் சென்றபோது வயிற்றால் நகர்ந்துசெல்ல உத்தரவிடப்பட்டார். அவர் சொல்கிறதாவது, "நான் நகர்ந்துசென்ற பொழுது கால்ஜோட்டால் (Boots) அவர்கள் என்னை உதைத்தார்கள். அவர்களது துப்பாக்கியின் நுனியால் என்னைக் குத்தினார்கள். அன்றுதினம் சாப்பிட வீட்டுக்குப் போகவில்லை......................முழு எட்டுநாளும் ஒரு தோட்டிகூட வரவில்லை. ஆகவே வீட்டின் குப்பைகள் எடுக்கப்படவில்லை. வீட்டு கக்ஸூஸ் (Latrine) சுத்தம் செய்யப்படவில்லை. ஜலம் ஸப்ளை செய்கிறவர்களும் வரவில்லை..............எங்களுக்குக் கறிகாய்களாவது சாப்பாட்டிற்குவேண்டிய வஸ்துக்களாவது கிடைக்கவில்லை" (வா. 102) அந்த சந்தில் வசிக்கிற ஜைனமந்திர லாலா கணபதிராய் . அவர்கள் கூறுவதாவது, "கடவுளைத் தொழ விரும்பி அந்தத் தெருவிலுள்ள கோயிலுக்கு வரவேண்டியவர்கள்கூட இவ்விதம் நகர்ந்தே வரவேண்டி யிருந்தது." (வா. 122)

உண்டியல்காரரான (பணவியாபாரி) லாலாதேவி தாஸ் அவர்கள் வயிற்றால் நகர்ந்து செல்லவேண்டி யிருந்தது. அவர் வீட்டுக்குத் திரும்பிப்போக விரும்பினார். ஆனால் அவர் நகர்ந்துபோகவே பலாத்காரப் படுத்தப்பட்டார். அவர் சொல்கிறதாவது, "நான் முதலில் கைகளாலும் முழங்காலாலும் நகர்ந்துசெல்ல யத்தனித்தேன். ஆனால் நான் வயிற்றாலே நகர்ந்து செல்லவேண்டுமென்று சங்கினால் (துப்பாக்கியின் நுனியிலுள்ள ஓர் கூரான முப்பட்டையான ஆயுதம்) பயமுறுத்தப்பட்டேன்." (வா-99)

இருபது வருஷகாலமாய் காஹன்சந்த் என்பவர் கண் தெரியாது கஷ்டப்படுகிறார். அவர் நகர்ந்து செல்லும்படிக்கு விதிக்கப்பட்டார். காலால் உதைக்கவும் பட்டார்.

உபாத்தியாயரான அப்தல்லா என்பவர் நகர்ந்து செல்லவேண்டியிருந்தது. அவர் நகர்ந்து செல்லும் வழியில் இளைப்பாறியபொழுது அவர் உதைக்கப்பட்டதன்றி துப்பாக்கியின் முனையால் குத்தவும்பட்டார். அவர் ஸ்தூல சரீரத்தைப்பெற்றவராதலால் அவர் தேகமுழுவதும் கிழிக்கப்பட்டது. (வா. 106)

இவ்விதம் நகர்ந்துசெல்லவேண்டிய தண்டனை விதிக்கப்பட்டபோது பரிசுத்த ஜீவப் பிராணிகளாய்க் கருதப்படும் புறாக்களும் இதரபறவைகளும் சுடப்பட்டன. அச்சந்தின் மற்றொரு கோடியில் ஜீவப்பிராணிகளை ரக்ஷிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஜீவரக்ஷணமடம் (Pinjarapole) அசுசியாக்கப்பட்டது. தெருக்களிலுள்ள கிணறுகள் சமீபத்தில் வீரர்கள் ஜலமலோபாதைகளைக் கழித்ததனால் அசுத்தப்படுத்தப்பட்டன. (வா. 121)

50-மனிதர்கள் வரையில் நகர்ந்து செல்லவேண்டிய தண்டனையால் சிக்ஷை யடைந்தனரென உத்தியோக முறையில் தெரிவிக்கப்படுகிறது.

ஸலாம் செய்வதில் ஒருவர் பலாத்காரப்படுத்தப்பட்டு ஸ்வயமாய் கஷ்டத்தை அநுபவித்தால்தான் இதன் கஷ்டத்தை நன்ருய் உணரமுடியும். இவ்வித கஷ்டத்தை நேரிட அநுபவித்தவர்களது வாக்குமூலங்களால் இவர்களுக்கு எவ்வித உபத்திரவங்கள் விதிக்கப்பட்டன என்பதை நாங்கள் உணரச் சற்று இயலுகின்றது. அசையாமல் நேராக நின்றுகொண்டு வலதுகையால் சலாம் செய்யவேண்டுமென்பது 160,000 ஜனங்களடங்கிய இப்பட்டணத்துக்கு விதிக்கப்பட்டது என்ருல் இது அற்பமான காரியமல்ல. சரியாய் சலாம் செய்யாததற்குக் கைது செய்யப்பட்டதாய்க் கூறுகின்ற சாக்ஷிகள் அகப்பட்டது அதிசயமில்லை. இவ்விதம் செய்யத் தவறியவர்கள் அநேகவிதங்களில் துன்புறுத்தப்பட்டனர்.

எப்ரல் மாதம் 18-ம் தேதி லாலா ஹரி கோபாலகான்ஞ பி. ஏ. அவர்கள் சில சிநேகர்களோடு ஒரு தெருவழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவர், ஜெனரல் டையரோடு சில போலீஸ்காரர்கள் குதிரையின்மீது வரக் கண்டார். ஜெனரல் டையர் இவரைக் கூப்பிட்டார். லாலா ஹரி கோபால் அவர்கள், அவரிடம் சென்றதும் பட்டாளத்தார் தோரணையில் சலாம் செய்தார். அதன்மீது அவருக்குச் சரியாய்ச் சலாம் செய்யத் தெரியவில்லையென்றும் மறுநாள் ராம்பாக் தோட்டத்துக்கு வரவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டார். ஜெனராலுக்குச் சலாம் செய்து உத்தரவு பெற்றுக்கொண்டு பட்டண போலீஸ் ஸூபரின்டென்டெண்டு மிஸ்டர் ப்ளோமர் அவர்களிடம் சென்று ராம்பாக்கில் எங்கே வருகிறது? என்று கேட்டார். உடனே மிஸ்டர் ப்ளோமர் அவர்கள் ஒரு கான்ஸ்டேபிலைக் கூப்பிட்டு கொத்தவால் ஸாஹேப்பினிடம் அழைத்துக்கொண்டு போக உத்தரவிட்டார்.

அங்கு கொண்டுபோகப் பட்டதும் ஈரத்தரையில் இரண்டு மூன்று பேர்களோடு உட்கார்த்தப்பட்டார். இரவு எழு மணிக்கு இன்னும் அநேகர் அங்கே கொண்டுபோகப் பட்டனர். பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்கு இரண்டிரண்டு பேர்களாகக் கொண்டுபோகப் பட்டனர். அங்கே திறந்த மைதானத்தில் இரவைக் கழிக்க நேர்ந்தது. இவர்களுக்குக் காவலாய் ஒரு கூர்க்க வீரன் வைக்கப்பட்டான். காலையில் 8-30 மணிக்கு ராம்பாக்குக்கு அவர்கள் கொண்டு போகப்பட்டார்கள். அங்கே ஒரு இராணுவ ஹவல்தார் அவர்கள் இவர்களுக்குச் சலாம் செய்யக் கற்றுக் கொடுக்கிறவரையில் வெயிலில் நிறுத்தப்பட்டனர். பிறகு அவர்கள் விடப்பட்டார்கள். (வா. 95. & வா. 96).

ஒரு கௌரவ மாஜிஸ்திரேட்டான மியான் பிராஜ்டின் அவர்கள் கூறுவதாவது. "மிஸ்டர் ப்ளோமர் அவர்களையும் ஜெனரலையும் கண்டு எழுந்து நின்று சலாம் செய்யாததற்கு ஜனங்கள் கசையடியடிக்கப்படுவது வழக்கம் தான். அவ்விதம் கசையடியடிக்கப் பட்டதையும் கைது செய்யப்பட்டதையும் நான் நேரிட பார்த்திருக்கிறேன். இவ்வித குற்றம் தமக்கு நேராமலிருப்பதற்கும் தண்டனையைப் பெறுமலிருப்பதற்கும் அநுபவரீதியில் ஜனங்கள் நாள் முழுதும் நின்றுகொண்டிருக்கும்படியும் பயமுறுத்தப்பட்டனர். நான் என் "அநுபவரீதியில்" என்று கூறினேனென்றால் மோட்டார் வண்டியின் சப்தம் கேட்டபோதெல்லாம் அவர்கள் நிற்கவேண்டி வந்தது. நானே அப்படிச் செய்தேன்." (வா. 2.)

பொது ஜனங்கள் நடமாடும் வழியில் கசையடி யடிக்கப்பட்டது இழிவாயிருந்ததுமன்றி சித்ரவதை செய்வது போலுமிருந்தது. உத்யோக ரீதியில் கொடுக்கப்பட்டதைத் தவிர ஏன் கசையடியடிக்கப் படவேண்டுமென்பதே

எங்களுக்குத் தெரியவில்லை. உத்தியோக ரீதியில் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களால், ஒழுங்கான நடத்தை யில்லாததாலும் மிஸ் ஷெர்வுட்டைத் தாக்கியதாலும் நடந்ததெனத் தெரிகிறது. ஜனங்கள் நகரும்படி செய்யப்பட்ட சந்தில் இக்கசையடி கொடுக்கப்பட்டதென்பதை ஜெனரல் டையர் ஒத்துக்கொண்டார். 6 பையன்கள் அந்தக் கொட்டகையில் அடிக்கப்பட்டனர். அவர்களில் ஒவ்வொருவரும் டிக்டிக்கியில் (முக்கோண வடிவமுள்ள ஒரு சட்ட இணைப்பு) கட்டப்பட்டு 30 அடிகள் கொடுக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவனாகிய சுந்தரஸிங், "காலாவதடி அடிக்கப்பட்டதும் பிரக்ஞையற்றுப் போனான். ஒரு வீரன் அவன் வாயில் கொஞ்சம் தண்ணீர் வார்த்ததும் பிரக்ஞை வந்தது. திரும்பவும் அடி கொடுக்கப்பட்டது. இரண்டாவது தடவையும் பிரக்ஞையற்றுப் போனான். இவ்விதமிருந்தும் 30 அடிகள் ஓயாமல் கொடுத்து விட்டனர். பிறகு அவன் டிக்டிக்கியிலிருந்து பிரக்ஞையற்றும் இரத்த வெள்ளத்தோடும் எடுத்துக்கொண்டு போகப்பட்டான். இதர பையன்களும் இவ்வாறே நடத்தப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் அடிக்கப்படும்போதே பிரக்ஞையற்றுப் போயினர். அவர்கள் யாவரும் விலங்கு போடப்பட்டனர். கொஞ்சதூரம் கூட நடக்க முடியாமற் போகவே போலீஸ்காரர்களால் இழுத்துச் செல்லப்பட்டனர். பிறகு அவர்கள் கோட்டைக்குள் கொண்டு போகப்பட்டனர்." (வா. 115, 117, & 118.)

ஜெனரல் டையர் அவர்கள் வாக்குமூலம் கொடுத்தபோது கான்ஸ்டேபில்களாய்வந்த வக்கீல்கள் மிக்க உதவி புரிந்தனரென்று சொன்னார். மிஸ்டர் கிச்சின், அவர்கள் அவ்வேலையை விரும்பியதாகவும் கூறினர். தங்கள் வேலையைப்பற்றி வக்கீல்களே என்ன சொன்னார்களென்பதைப்

பற்றியும் எவ்விதம் வேலைகள் செய்தார்கள் என்பதைப் பற்றியும் சற்று ஆராய்வோம். ஏற்கனவே லாலா கன்யா லால் என்பவரைப்பற்றிக் கூறியிருக்கின்றோம். அவர் தான் அமிர்த சரஸுக்குள் மிக்கப் பழைய வக்கீலாகும். அவர் கூட இந்த வேலையைப் பார்க்க நேர்ந்தது. அவர் சொல்கிறதாவது:—"இவ்வூர் வக்கீல்களோடு ஸ்பெஷல் கான்ஸ்டேபிலாய்ச் சேர நானும் வற்புறுத்தப்பட்டேன். பட்டணத்தில் சமாதானம் நிலைத்திருந்தபோதும், அவ்வித உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமே இல்லாத போதும் ஏப்ரல் மாதம் 22-ம் தேதி இந்த உத்யோகம ஏற்படுத்தப்பட்டது. போலீஸார்களது உதவியே இதற்குப் போதுமானது. உண்மையாகவே சமாதானம் பட்டணத்தில் குடிகொண்டிருந்தது. வயதான காலத்தில் கூலியாளைப்போல் நாற்காலிகளையும் மேஜைகளையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு போக நேர்ந்தது. அதிக உஷ்ணமான வெயிலில் காவல் காக்கவும் வேண்டியிருந்தது. எங்களுக்குக் கொடுக்கப்பட்ட வசவுகளும் அவமரியாதைகளும் இன்னும் அதிக வருத்தத்தைக் கொடுத்தன. சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்த எங்கள் உத்யோகம் அவசியமென நான் கருதவில்லை. இந்த உத்தரவெல்லாம் எங்களைத் தண்டிக்க என்பதேயாகும். உள்ளூர் வக்கீல்கள் யாவரும் பொது ஜன விஷயங்களில் சிரத்தையெடுத்துக்கொண்டும் ரௌலட் சட்டத்துக்கு விரோதமாய்க் கிளர்ச்சி செய்தும் வந்ததால்தான் இவ்வாறு தண்டனைக் குள்ளாக்கப்பட்டனர்." (வா. 29.)

முனிஸிபல் கமிஷனரும் ஹைகோர்ட் வக்கீலுமாகும். லாலா பால முகுந்த பாட்டியா அவர்கள் எவ்வாறு ஸ்பெஷல் கான்ஸ்டேபில்கள் நியமிக்கப் பட்டார்கள் என்ப

தைப் பற்றியும் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பதைப் பற்றியும் சொல்லும்போது, "நாங்கள் தரையின்மீது உட்கார்த்தப் பட்டோம். அப்போதுதான் இரண்டுபேர்கள் திக் டிக்கியில் கட்டப்பட்டு கசையடி யடிக்கப்பட்டார்கள். இதை நாங்கள் பார்ப்பதற்காகவே அழைக்க உத்தர விடப்பட்டதாய்த் தெரிய வந்தது. மாலையில் எல்லா வக்கீல்களும் வரிசையாய் நிறுத்தப்பட்டார்கள். லெப்டினன்ட் நியுமன் அவர்கள் இதற்கு அதிகாரியாய் நியமிக்கப்பட்டார். அவர் உதைப்பேன் என்று பயமுறுத்தினர். அவர்கள் ஒருநாளைக்கு மூன்றுதரம் தங்களைப்பற்றித் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்றும் மிகுதியான காலங்களில் நகரத்தைச் சுற்றிவர வேண்டு மென்றும் உத்தர விட்டார். அதாவது பட்டணத்திலோ தோட்டத்திலோ நாள் முழுது மிருக்கவேண்டு மென்று உத்தரவிடப்பட்டோம். அவர்கள் அப்போது எங்களுக்குத் தெரியப் படுத்தியது யாதெனில் 'நீங்கள் யாவரும் வெற்றுக் கான்ஸ்டேபில்கள்தான். உங்கள் வேலையைச் சரிவரச் செய்யாது போனால் சிறைவாசம் செய்யப் படுவதும், கசையடி யடிக்கப்படுவதும் அன்றி மரண தண்டனையும் விதிக்கப்படும் என்பது ஞாபகத்தி லிருக்கட்டும்!" என்பதாகும் அனேகக் கீழ்தர வேலைக்காரர்கள் இருந்தாலும் நாங்கள் யாவரும் நாற்காலிகளையும், மேஜைகளையும் வெயிலில் எங்களைக் கௌரவமாய் மதிக்கக் கூடிய ஜனங்கள் முன்பு தூக்கிக்கொண்டு போக உத்திரவிடப்பட்டோம். எவ்வாறு சலாம் செய்யவேண்டு மென்றும் பிரத்தியேகமாய்க் கற்றுக் கொடுக்கப்பட்டோம். நாங்கள் யாவரும் மே மாதம் 12-ம் தேதி வெளியில் விடப்பட்டோம்" அவர்கூட லாலா கன்யா லால்போல் வக்கீல்கள் இவ் வேலை

யில் நியமிக்கப்பட்டதன் காரணம் இவர்களைத் தண்டிப் பதற்காகவே என்றார். (வா. 91)

பண்டிதர் ராஜேந்திர மிஸ்ராவும் இதர வக்கீல்களும் மேற்சொன்ன விஷயங்களையே ஒத்துக் கொள்வது மன்றி நாங்கள் அதிகாரிகளுக்கே வேலை செய்தபோதிலும் அவமானப் படுத்தப்பட்டும் சங்கடப் படுத்தப்பட்டும் போனோம் என்று கூறினர். (வா. 94.)

ஏறக்குறைய 93 வக்கீல்கள், அவர்கள் வேலையைச் செய்து பணஞ் சம்பாதிக்க முடியாமல் நஷ்டமடையச் செய்யப்பட்டதோடுகூட அவமானமும் படுத்தப்பட்டார்கள்.

இராணுவச் சட்டம் விதிக்கப்பட்ட காலங்களில் கும்பல் கும்பலாய்க் கைது செய்யப் பட்டவர்கள் எவ்வாறு சிறை வாசத்தை யடைந்தார்கள் என்பதைப் பற்றியும், எவ்வாறு கோரமான தண்டனையை யடைந்தார்கள் என்பதைப் பற்றியும் சொல்ல மனம் நடுங்குகிறது. அக்காலத்தில் அந் நகரவாசிகளது சொத்தும் உயிரும் மிக்க ஆபத்தான நிலைமையி லிருந்ததென்றே கூறலாகும்.

லாலா கிர்தாரி லால் சொல்கிறதாவது, "ஏப்ரல் மாதம் 12-ம் தேதி முதல் இவ்வாறு கைது செய்யப்பட்டார்கள் என்பதை நான் என் ஞாபகத்துக் கெட்டியவரையில் சொல்வேன். அதற்குப் பிறகு இக் கைது செய்யப்படுவது நிறுத்தப்படவே யில்லை. ஜனங்கள் அவரவர்கள் தம் தம் தொழிலைச் செய்துகொண் டிருந்தபோது நாளுக்கு நாள் எவ்வகைத் தொழிலாளிகளும் பிடித்துக் கைது செய்யப்பட்டார்கள். அதற்கு ஒரு கூற்றமும் ஆக்ஷேபிக்கப் படவில்லை." அவர்கள் என் குற்றஞ் செய்யப் பட்டார்கள்? எதற்காகச் சிறை வாசம் கொடுக்கப்

பட்டது ? என்பன யாவும் தெரிவிக்கப்படாமலே அநேக நாட்களாகவும் மாதங்களாகவும் சிறையி லடைக்கப் பட்டனர். அவர்கள் சிநேகர்களோடாவது பந்துக்களோடாவது கலந்து யோஜித்துக் கொள்ள சந்தர்ப்பமும் கொடுக்கப் படவில்லை. மிஸ்டர் .பாத்ரல் இஸ்லாம் ஆலிகான் அவர்கள் கைது செய்யப்பட்ட போது, ஜனங்களுக்குள் பரவியிருந்த எண்ணம் என்னவென்றால், காங்கிரஸில் சம்பந்தப்பட்ட யாவருக்கும் இக்கதி நேரும் என்பதாகும். லாலா கிர்தாரிலால் அவர்கள் ஏப்பிரல்மீ 7உ அமிர்தசரஸை விட்டுத் தனது உறவினர் ஒருவர் கான்பூரில் மிக்க நோயால் வருந்துகிறார் என்பதைக் கேட்டுச் சென்று அவரைப் பார்த்துவிட்டு 11-ந்தேதி திரும்பி வந்தார். அவர் திரும்ப கான்பூர்போக விரும்பினார். அநேக கஷ்டங்களுக்குள்ளான பிறகு அமிர்தசரஸை விட்டு வெளியேபோக உத்தரவுபெற்றார். அவர்ஏப்பிரல்மீ 21-ந் தேதி கல்கத்தாமெயிலில்சென்றார். போகும்போது பியாஸ் நதி பாலத்தின்மீது வண்டி நிறுத்தப்பட்டு இந்திய ஜனங்களது மூட்டைகள் யாவும் நன்றாய்ச் சோதனை போடப்பட்டன. கொஞ்சகாலத்திற்குப் பிறகு அமிர்தசரஸ் அதிகாரிகளால் அவர் அழைக்கப்பட்டதாய்த் தெரிவிக்கப்பட்டார். அவர் கான்பூர் போலீஸ் சூப்ரின்டென்டெண்டு முன்போய் நிற்க, அவர் இவரை மரியாதையுடன் நடத்தி அமிர்தசரஸுக்குப் போலீஸ் பந்தோபஸ்துடன் அனுப்பினார். இவருடன் சென்ற போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் அவர்கள் இவருக்கு அனுமதி கொடுத்ததன்மேல் ஒரு பத்திரிகையைப் படிக்க வாங்கினார்.

அமிர்தசரஸ் சூப்ரின்டென்டெண்டுக்கு இது அதிகமாய்ப் போய்விட்டது. ஆனால் சப் இன்ஸ்பெக்டர் அவர்கள், அமைதியாய் அந்த சூப்ரின்டென்டெண்டைப்

பார்த்து, தானே லாலா கிர்தாரிலாலைப் பத்திரிகை வாங்கிப்படிக்கும்படிச் செய்ததாயும் இவ்விதமான இவரது ஸ்வதந்தரத்தைத் தடுக்கத் தனது அதிகாரி உத்தர விடவில்லை யெனவும் கூறினார். லாலா கிர்தாரி உடனே விலங்கிடப்பட்டார். என் இவ்வாறு கைதுசெய்யப்பட வேண்டும் என்று கேள்விகேட்டபோது பதிலேகொடுக்கப் படவில்லை. அவருக்கு, 22-4-19 பகல் 11-மணியிலிருந்து மறுநாள் காலை 8-மணிவரையில் எவ்வித ஆகாரமும் கொடுக்கப்படவில்லை. இவர் அடைக்கப்பட்ட அறையின் மூலையில் மிக்க நாற்றமுள்ள ஒருபானை வைக்கப்பட்டிருந்தது. மறுநாள்காலை அவர்கள் யாவரும் தேகோபாதையைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு வெளியே சற்று நேரம் விடப்பட்டுத் திரும்பக் கைதுசெய்யப்பட்டார்கள். ஸ்நானம் செய்யவாவது, வேறு துணிமாற்றிக்கொள்ளவாவது அநுமதி கொடுக்கப்படவில்லை. அப்போது மிக்க தாராள நெஞ்சம் படைத்த ஒரு கான்ஸ்டபில் பக்கத்திலிருந்ததால் மிக்கக் கஷ்டத்துடன் குடிக்க ஜலம் கிடைத்தது. மேமாதம் மிக்கத் தீக்ஷ்ண்யக் கோடைகாலமென்பதைப்பற்றியும், அப்போது, அநேகர் அடைக்கப்பட்ட காற்றில்லாத அறையில் வசிக்க நேர்ந்ததானல் எவ்வளவு கஷ்டமுண்டாகும் என்பதைப்பற்றியும் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. காலக்கிரமத்தில் அவர் அதிகாரிகள் முன்பாகக் கொண்டுபோகப்பட்டார். இவரை ஒரு அதிகாரி மிக்க இழிவாய் நிந்தித்தார். மேமீ 24-ம்வ இவர் அவ்விடத்தை விட்டு ஸப்ஸிடியரி ஜெயிலுக்குக் கொண்டுபோகப் பட்டார். மனிதர்கள் சாப்பிட முடியாத ஆகாரமாய்க் கொடுக்கப்பட்டது. மே மாதம் 27-ம் தேதி அவரும் அவருடைய சிநேகிதர்களும் இரண்டிரண்டு பேர்களாய் விலங்கிடப்பட்டு லாகூருக்குக் கொண்டு

போகப்பட்டார்கள். ஒருவரும் அவர்கள் பக்கத்தில் நெருங்க அநுமதிகொடுக்கப்படவில்லை. அப்படித்துணிந்து யாராவது வந்தால் அவர்களும் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் லாகூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து நியாயஸ்தலத்துக்கு நடந்து செல்ல நேர்ந்தது. இதன் தூரம் ஏறக்குறைய இரண்டுமைல்களிருக்கலாம். வழியில் தீர்த்தம் கூட குடிக்கக் கூடாதென்றும் போலீஸ் இன்ஸ்பெக்டர் வற்புறுத்தி யழைத்துச்சென்றார். கோர்ட்டுக்குச் சென்றதும் நாள்முழுதும் வெளியேநிற்க நேர்ந்தது. பிறகு அவர்கள் ஸென்ட்ரல் ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கே இவர்கள், 7 அடி நீளம் 2 அடி அகலம் 4 அடி உயரமுள்ள ஒவ்வொரு இருப்புக் கூட்டில் ஒவ்வொருவராய் அடைக்கப்பட்டனர். ஸ்நானத்துக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த இடம் மிகவும் அசங்கியமான விடமாயிருந்தது. எல்லாக் காரியங்களுக்கும் உபயோகப் படக்கூடிய கால்வாய் எங்களுக்கு ஸ்நானத்துக்கு காண்பிக்கப்பட்டது. 27-ம் தேதி அவரவர் பந்துக்களால் வாடகைக்கு ஏற்படுத்தப்பட்ட இடத்துக்குப் போக அநுமதி கொடுக்கப்பட்டார்கள். அங்கு கொஞ்சம் நல்ல ஆகாரமும் கிடைத்தது. இவ்விடத்தில் தான் உடையும் மாற்ற அநுமதி கொடுக்கப்பட்டது. மே மாதம் 28-ம் தேதி அவர்கள் பார்ஸ்டால் ஜெயிலுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். ஜூன் மாதம் 3-ம் தேதி அமிர்தசரஸ் கைதிகளிற் சிலர் விசாரணைக்குக் கொண்டுபோகப்பட்டனர். தம்மேல் தொடுக்கப்பட்ட வழக்கு இன்னதென்பதென்றே யுணராத பலர் சாக்ஷிகொடுக்கச்சொல்லி அழைக்கப்பட்டனர். ஜூன் மாதம் 6-ம் தேதி லாலா கிர்தாரிலால் அவர்கள் விசாரணையின்றி விடுவிக்கப்பட்டார். இவருக்கு, இவர்மேல் தொடுக்கப்பட்ட வழக்கு

என்னதென்றும், என் கைது செய்யப்பட்டாரென்றும் தெரியாது. இவ்விதம் அமிர்தசாஸ் தலைவர்களுள் ஒருவர் அதிகாரிகளறியக் கைதுசெய்யப்பட்டு மகா பாதகனை விடக் கேவலமாய்த் தண்டிக்கப்பட்டார். விசாரணைக்குக் கொண்டுவரப்படும் ஒவ்வொருவரும் தம் பந்துக்களையும், படித்த வக்கீல்களது போதனையையும் பார்க்கும்படி அநுமதி கொடுக்கப்படுவதோடு கூட விரும்பிய ஆகாரத்தையும் எடுத்துக்கொள்ள அநுமதி கொடுக்கப்படுவது வழக்கமாகும். இப்படிக் கிருந்தும் இவர்களுக் கவ்வநுமதி கொடுக்கப்படவில்லை. அமிர்தசாஸ் பிரபுக்களுள் ஒருவரும் 21 வருஷகாலம் கௌரவ மாஜிஸ்திரேட் உத்யோகத்தை வகித்தவருமாகும். மியான் பிராஸ்டின் அவர்கள், மகா கொடியவர்கள் தண்டனை பெறுமலிருக்கவும் மிகவும் கௌரவம் வாய்ந்த பெரியோர்களே தண்டனையை யடையவும் நேர்ந்தது" என்று சொல்கிறார். (வாக். 2.)

ஏப்ரல் மாதம் 10-ம் தேதி தனக்கு நேரக்கூடிய ஆபத்தையும் மதியாமல் பாலத்தடியில் கூடிய கூட்டத்தைக் கலைக்கவந்த மகானாய் யாவருமறிந்த ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் மாக்பூல் மகம்மத் அவர்களும் ஒரு ஸப் இன்ஸ்பெக்டரால் கைதுசெய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டார். அங்கே அவர் "நான் ராபின்ஸனையும் ரௌலண்டையும் கொன்ற கொலை பாதகர்களைக் காட்டக்கூடும்" என்று சொல்ல வற்புறுத்தப்பட்டார். ஆனால் அவர், "நான் அதைப்பற்றி ஏற்கனவே எழுத்து மூலமாய் வாக்குமூலம் கொடுத்திருக்கிறேனே அதில் அவ்விதம் என்னால் காட்ட முடியாதென்றும் அவர்களை நான் பார்க்கவில்லை யென்றும் கூறியிருக்கிறேனே," என்றார். அந்த வாக்குமூலம் உடனே கொண்டுவரப்பட்டது அதை அவரைக் கொண்டே கிழித்துப்

போடச் சொன்னார்கள். பிறகு தாங்கள் குற்றவாளிகளாய் இருக்கலாமென்று ஊகித்த சில நபர்களது பெயரைச் சேர்த்து ஒரு புதிய வாக்குமூலம் எழுதிக் கொடுக்கச் சொன்னார்கள். அதற்கு அவர் மாட்டேனென்று சொல்லிவிட்டார். அதனால் அவர் பலவிதத்தில் பயமுறுத்தப்பட்டார். என்றாலும் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார். அவர் பிரதிவாதியாய் வாதிக்க ஏற்படுத்தப்பட்டார். எஸ் ஸுக்கா ஸிங் அவர்கள் பிரதிவாதியாய் வாக்குமூலம் கொடுக்க எல்லோரும் மறுத்து விட்டனர். அவ்விதமே நீரும் இருந்துவிடுமென அவருக்குச் சொன்னார். அதற்கு அவர் 'எனக்கு மனச்சாக்ஷி யிருக்கிறது போதும்' என்றார். எஸ் ஸுக்கா ஸிங்கோ 'அந்தக் காலத்தில் ஒருவருக்கும் மனச்சாக்ஷியில்லை. மனச்சாக்ஷி யிருந்தவர்கள் தான் தண்டனையை யடைந்தனர்' என்று சொன்னார். பின்னும் அவர், அவரது வக்கீல் சன்னத் பிடுங்கப்பட்டதாகவும் இன்னும் அவர் கெடுதலுக் குள்ளாவார் என்றும் கூறினார். (வா. 5.)

பிறகு எப்ரல் மாதம் 20-ம் தேதி ஸர்தார் ஸுக்கா ஸிங் அவர்கள், 62 வயதுள்ளவரும், ஸீனியர் அஸிஸ்டண்டு ஸர்ஜனுமாகும் டாக்டர் கிதார்நாத் பந்தாரி என்பவரைப் பிடித்து எப்ரல் மாதம் 10-ம் தேதி மிஸ்ட்ரஸ் ஈஸ்டனைத்தாக்கிய கூட்டத்தார்களுள் யாராவது ஒருவரைத் தெரியுமா" என்று கேட்டார். டாக்டர் கிதார்நாத் அவர்கள் அவ்விதம் என்னால் முடியாதெனச் சொல்லிவிட்டார். இதன்மீது ஸர்தார் ஸுக்காஸிங், மிஸ்டர் ப்ளோமர், மிஸ்டர் மார்ஷல் ஆகிய மூவரும், "ஓ! நீர் கவர்ன்மெண்டாருக்கு உதவிசெய்ய மாட்டீர்போலும் நீர் கைது செய்யப் படுவீர்" எனக்கூவினர். இதன்மீது டாக்டர் அவர்கள், "நான் பார்க்காத ஒரு மனிதனது பெயரை

யும் என்னால் சொல்லமுடியாது நீங்கள் என்னவேண்டு மானாலும் செய்து கொள்ளலாம்" என்றார். அதன்மீது ஸூக்காஸிங் அவர்கள் டாக்டரைப் பார்த்து "உம்மைக் கைதுசெய்ய உத்தரவுகளைப் பெற்றிருக்கின்றேன் கைதியாயிருக்கும்போதே யோஜித்துக் கொள்ளும்" என்றார். அவருக்கு அவ்வுத்தரவுகள் காண்பிக்கப்படவில்லை. அவரது உதவி உத்யோகஸ்தரோடு பிறகு ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார். ஏப்ரல் மாதம் 27-ம் தேதி வரையில் அவர்கள் இருவரும் ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தனர். அதன் மேல் ஸப்ஸிடியரி ஜெயிலுக்குக் கொண்டுபோகப் பட்டனர். அவ்விடமிருந்து அந்த ஜெயில் ஒரு மைல் தூரம் இருக்கிறது. அவருக்கு ரக்தாசயக்கெடுதல் உண்டாதலால் வண்டி கேட்டார். இதர மனிதர்களோடு விலங்கிடப்பட்டு கடைத்தெரு வழியாக கொண்டுபோகப்படுவது மிக்க நடுக்கத்தைத் தருமென்றுங் கூறினார். அவ்விதம் சொல்லியும் கேட்கப்படவில்லை. இதர 62 கைதிகளோடு ஜெயிலுக்கு நடத்திக்கொண்டு போகப்பட்டார். அவர் கூறுவதாவது "மிகவும்உஷ்ணமாயிருந்தபடியால் ஜெயிலுக்குப் போகும்போது மயக்கங்கொண்டேன். ஒருபோலீஸ்காரன் தயவுசெய்து எனக்குக் கொஞ்சம் ஜலம் கொண்டு வந்து கொடுத்த படியால் திரும்பவும் பிரக்ஞையைப்பெற்றேன்." பின்னர் அவர் தின்னமுடியாத ஒரு ரொட்டித் துண்டம் கொடுக்கப்பட்டு ஒரு அறையில் பூட்டப்பட்டனர். வெளியிலிருந்து அவரதுநண்பர் அவருக்குக்கொடுக்க வந்த ஆகாரத்தையும் தடுத்து விட்டனர். அவரது உடையை அவர் மாற்றிக்கொள்ளவும் அநுமதி கொடுக்கப்படவில்லை. அவரது வஸ்திரம் வியர்வையால் நனைந்து துர்நாற்றம்கொண்டிருந்தது. மேமாதம் இரண்டாம்தேதி டிப்டிகமிஷனர் அவர்கள் ஜெயிலைப் பார்வையிடப்போனார்.

அப்போது டாக்டர் "நான் இவ்விதம் இங்கு வைக்கப் படக் காரணம் யாது?" எனக் கேட்டார். கூட்டத்தார் மிஸ்ட்ரஸ் ஈஸ்டனைத்தாக்கியபொழுது அவளைக்காப்பாற்ற நீர் பிரயத்தனப்படாத குற்றத்தைத்தவிர வேறு ஒன்று மில்லையெனக் கூறினர். டாக்டர் அவர்கள், "எப்போது கூட்டத்தார்கள் அவளைத் தாக்கினர்கள் என்பதே எனக் குத்தெரியாதே அவ்விதமிருக்க நான் எவ்வாறு பிரயத்த னப்படுவது?" என்று கூறினர். என்ன கூறியும் பிரயோஜ னப்படவில்லை. கடைசியில் அவரும் அவருடைய உதவி உத்யோகஸ்தரும் ஒருவித குற்றமும் சாட்டப்படாமல் மேமாதம் 12-ம் தேதி விடப்பட்டார்கள். அவர் போலீஸ் ஸ்டேஷன் ஜெயிலில் ஏப்ரல் 20-முதல் 27-வரையில் வைக் கப்பட்டிருந்தபோது ஏதோ ஒருவர் அவரிடம் இரண்டு முறைசென்று, "நீங்கள் ஒருவித குற்றமுமில்லாமல் தொந் தரவுபடுகிறீர்கள். கூட்டத்துள் உங்களுக்குத் தெரிந்த சிலரைச் சொல்லிவிடுகிறதுதானே. அவ்விதம் சொல்லி விட்டால் உடனே விடுவிக்கப்படுவீர்கள்" என்றார். (வா. 13)

மிஸ்ட்ரஸ் ஈஸ்டனைத் தாக்கப் பிரயத்தனப்பட்ட தாகக் குற்றஞ் சாட்டப்பட்டு முதலில் தூக்குத் தண்டனை யையும் பிறகு அது ஐந்துவருஷ கடுங்காவல் தண்டனை யாய்க் குறைக்கப்பட்டதையும் பெற்ற மகம்மத் ஆக்ராம் என்பவர்க்கு மிஸ்டர் மகம்மத் ஆமீன் என்னும் வக்கீல் தந்தையாகும். அவர், தனக்கும் மிஸ்ட்ரஸ் ஈஸ்டனுக் கும் மிக்க நெருங்கிய சிநேகபாவமுண்டென்றும், தன் பிள்ளை அவரைத் தாய்க்குச் சமானமாய்ப் பாவிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்ததனல் அவன் அவ்விதம் செய்ய நியாயமில்லையென்றும் கூறினர். ஏப்ரல்மாதம் 20-ம் தேதி அவர், அவர் பிள்ளை, அவரது சகோதரர்

யாவரும் கைதுசெய்யப்பட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டனர். அவர் கூறுவதாவது, நான் ஒரு கான்ஸ்டேபிலால் ஹவ்லத்துக்குக் கொண்டுபோகப் பட்டேன். அது ஒரு சிறிய அறையாயிருந்தபடியால் 30-துரதிர்ஷ்டமனிதர்களை அங்கு இருக்கக் கண்டேன். அவர்கள் தாகத்திற்காக ஜலம்வேண்டி இரும்புக்கம்பு களுக்கிடையே கைகளை நீட்டிவேண்டியது மிக்கப் பரி தாபகரமான நிலையிலிருந்தது. அதைப் பார்த்ததும் எனக்கு மயக்கம் வந்துவிட்டது. நான் ஒரு போலீஸ் காரனைக் கூப்பிட்டுச் சொன்னதாவது, 'எனக்கு அங்கே யிருப்பதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் நான் அங்கே கால்மணிநேரம்கூட உட்கார்ந்திருக்க முடியாது' என்றேன். அதன்மேல் அக்கான்ஸ்டபில் இன்ஸ்பெக்ட ரிடம்சென்று சிக்கிரத்தில் திரும்பிவந்து, டாக்டர்பாஷிர், பாரிஸ்டர்-அட்-லா மிஸ்டர் பாத்ரல் இஸ்லாம் ஆலிகான் என்பவர்களோடுகூட வேறு ஒரு அறையிலிருக்கும்படி செய்தார். இந்த அறையிலிருந்து சில பேர்களை அழைத் துக் கொண்டுபோய் எங்களையும் மற்றும் அறுவரையும் ஆங்குவைத்தனர். இந்த அசுத்தமான அறையைப்போல் என்ஜென்மத்திலும் வேறு அறையைப் பார்த்திருக்கமாட் டேன். எங்களில் அநேகர் இரவுமுழுதும் உட்கார்ந்து கொண்டே யிருந்தோம். நாங்கள் எங்கள்வீட்டு ஆகாரங் களை எடுத்துக்கொள்ளும்படி ஒரு இரவுக்குமட்டில் உத்த ரவுசெய்தால் போதுமென்று வேண்டினோம். ஆனால் அது மறுதளிக்கப்பட்டது. நாங்கள் போர்வையை வேண்டினோம், அதுவும் கொடுக்கப்படவில்லை. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஒருபோலீஸ்காரன் காமாவினிடம் வந்து "நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? உங்க ளுக்கு விரோதியான 4, 5 பேர்களைக் கூறினல் உங்களைச்

சாக்ஷிகளாக எடுத்துக்கொள்வோம்" என்றான். காமா, "நான் சொல்லக்கூடியதாய் எவ்வித விரோதியும் எனக் கில்லை" என்று கூறிவிட்டனர். போலீஸ்காரன் போய் விட்டான். பிறகு கொஞ்சநிமிஷம் பொறுத்து அவன் திரும்பிவந்து அவரைப்பார்த்து "இதோபார். 'க்வாயம்' என்று ஒரு பெயரைச் சொல்லிவையேன்;' நீ உனக்கிஷ் டப்படி சிலபேரைச் சொல்லிவையேன்" என்று தனித் தனி எல்லாரையும் பார்த்துச் சுட்டிச் சொல்லிப் போயி னன். இதைக்கண்டதும், போலீஸ்காரர்கள் பொய்ச் சாக்ஷிகள் சேகரிக்கின்றனரே என்ன நேருமோ, நிலைமை ஆபத்தாய்விட்டதே என்று நாங்கள்பயந்து போனேம். ஜெயிலின் நிலைமையை அந்தச்சாக்ஷி வர்ணிக்கிறார். அவர் கள் இரண்டிரண்டுபேர்களாய் விலங்கிடப்பட்டு அறையி லடைக்கப்பட்டதுமன்றி ஜலமலோபாதையைக் கழிக்க நேர்ந்தாலும் இரண்டிரண்டுபேர்களாக இணைக்கப்பட்ட வண்ணமே அனுப்பப்பட்டனர். அவர் கக்ஷிலிருந்த போது தங்கள் விலங்கைக் கழற்றும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டும் அநுமதி கொடுக்கப்படவில்லை. வெயிலில் சுற் றிச்சுற்றி வரும்படி அவர்கள் வற்புறுத்தப்பட்டனர்— இது தேகப்பயிற்சிக்காகப்போலும். 36-மணி நேரங்களாக அவர்களுக்கு ஆகாரமே கொடுக்கப்படவில்லை. வெறும் தரையில் படுக்கும்படியும் செய்யப்பட்டனர். கடைசியில் அவர்கள் விலங்குகள் எடுக்கப்பட்டன. "நாங்கள் எடுத் துக் கொள்ளவேண்டிய ஆகாரம் என்னவென்றால் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த கொள்ளுக் குவியலும் மற் றொருபுறத்தில் தொட்டியில் வைக்கப்பட்டிருந்த ஜலமும் ஆகும். இது தவிர ஒரு மூலையில் ஒன்றுக்குப்போக (ஜல மோசனம் செய்ய) ஒரு தகரடப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த ஆகாரத்தை நாங்கள் எடுத்துக்கொள்ள முடியவில்லை

ஆகவே அன்றையதினம் பட்டினியாகவே யிருந்தோம்" மறுநாள் நிலைமை சற்று அநுகூலமாயிற்று. அவர்கள் சொந்த ஆகாரத்தை எடுத்துக்கொள்ளவும் வேறு உடையை உடுத்துக்கொள்ளவும் அநுமதி கொடுக்கப்பட்டார்கள். இவர்கள்கோட்டையில் 22-நாட்கள்தங்கினர். மேமீ 12-ம்வ விசாரணைக்கு அவர்கள் லாகூருக்குக் கொண்டு போகப்பட்டனர். அவர்கள் 52-மனிதர்களும் ஒரே தொடராகச் சங்கலியால் இணைக்கப்பட்டிருந்தனர். லாகூரில் அவர்கள் நாள்முழுதும் ஆகாரம் நீரில்லாமல் வெளியே உட்கார்த்தப்பட்டனர். அவர்கள் லாகூர் ஸ்டேஷனிலிருந்து கோர்ட்டுக்கும், பிறகு கோர்ட்டிலிருந்து ஸெண்ட்ரல் ஜெயிலுக்கும் எரிகிற வெயிலில் நடத்திக்கொண்டு போகப்பட்டனர். மேமாதம் 27-ம் தேதி அவரும் அவரது சகோதாரும் விடுவிக்கப்பட்டனர். (வா. 14)

மிஸ்ட்ரஸ் நெல்லே பெஞ்சமின் என்பவர் மிஸ்ட்ரஸ் ஈஸ்டனுக்குச் சிநேகிதர். மிஸ்ட்ரஸ் ஈஸ்டனுக்கு ஆபத்து வராமல் காத்தவருள் இவரும் ஒருவர். அவர் சொல்கிறதாவது, "விசாரணை நடந்துக்கொண்டிருந்த காலத்தில் நான் இரண்டு தடவை போலீஸ்டேஷனுக்குக் கூட்டி அனுப்பப்பட்டேன். கூட்டத்தில் மகம்மத் அமீனைக் கண்டதாய்ச் சொல்லும்படி போதிக்கப்பட்டேன். நான் அது உண்மையல்லவென்று சொன்னபொழுது நான் ஜெயிலுக்கு அனுப்பபடுவேன் என்று மிஸ்டர் ப்ளோமரால் பயமுறுத்தப்பட்டேன்: எனக்குத் தெரிந்தவரையில் உண்மையைச் சொல்லுகிறேனென்றும் பொய்ச்சாட்சி சொல்லமாட்டேனென்றும் சொன்னேன். மஹமத் அமின் அக்கூட்டத்திலிருந்ததாகப் பொய்சொன்னல் கவர்ன்மெண்டிலிருந்து வெகுமதி வாங்கித் தருவதாயும்

அவர்கள் என்னைத் தூண்டினார்கள். நான் திரும்பவும் மறுத்து விட்டேன்." (வா - 16.)

ஸெத்குல் மகம்மத் என்ற கண்ணாடி வியாபாரி ஏப்பிரல் 20-ந்தேதி (நமாஸ் படித்தல்) பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது கைதுசெய்யப்பட்டு போலீஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் பொய்ச்சாக்ஷி சொல்லும்படியும் தூண்டப்பட்டார். இன்ஸ்பெக்டர் ஜவஹர்லால் அவர்கள் அவரது தாடியைப் பிடித்து உலுக்கினார். அதனால் கொஞ்சநேரம் வரையில் மிக்க உபத்திரவமுண்டாயது. அவர் பிறகு வாக்குமூலம் கொடுக்கும்படி கேட்கப்பட்டதாவது, "டாக்டர் சத்தியபாலும், டாக்டர் கிச்சிலுவும் என்னை 6-ந்தேதி ஹார்தாலை நடத்தும்படி தூண்டினர். அவர்கள் வெடிகுண்டுகளை உபயோகித்து இங்கிலீஷ்காரரை நாட்டினின்றும் துரத்திவிடுவதாய்ச் சொல்லி என்னைத் தைரியப் படுத்தினர்." இதற்கு அந்த சாக்ஷி சம்மதிக்கவில்லை. அந்த உத்தியோகஸ்தர் தன் கீழ் உத்தியோகஸ்தர்களைக் கூப்பிட்டு அவரை ஒழுங்கு படுத்தச் சொன்னார். பிறகு அவர் உத்தியோகஸ்தரது மேஜையினின்று சற்று தூரத்தில் கொண்டுபோகப்பட்டார். அங்கு சில கான்ஸ்டேபில்கள் தங்கள் மனம் தோன்றியவாறு அவரை ஹிம்சைப்படுத்தி ஜவஹர்லாலுக்குத் திருப்தியை யுண்டாக்கினர். அப்பவும் அவர் சம்மதிக்கவில்லை. பிறகு அவரது கையைப் பிடித்து ஒரு கட்டிலின் காலின் கீழ் வைத்து அந்தக் கட்டிலில் எட்டு பேர்கள் சேர்ந்து உட்கார்ந்தார்கள். வலி பொறுக்க முடியாமல் போகவே அவர் கோவென்று அலறி "என் கையை விட்டு விட்டால் நீங்கள் என்ன சொல்லச் சொன்னாலும் சொல்கிறேன்" என்றார். பிறகு அவர் ஜவஹர்லாலிடம் கொண்டுபோகப்பட்டார். ஆனால் அவர் டாக்டர் கிச்

சுலுமீதும், டாக்டர் சத்தியபால்மீதும் அவதூறு சொல்ல மறுபடியும் சம்மதிக்கவில்லை. ஆகவே அவர் அன்று தினம் ஒரு அறையில் அடைக்கப்பட்டார். அடுத்த இரண்டு நாட்களிலும் அவர் நன்ருய், பிரம்பாலும், கையாலும் அடிக்கப்பட்டார். அவரைக் குற்றவாளியாய்ப் பிடித்துத் தூக்கிலிட்டு விடுவோம் என்றும் பயமுறுத்தப் பட்டார். இந்த அடி எட்டு நாட்கள் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டன. எட்டாம்நாள் மறுபடி அவர், அவர்கள் வேண்டிய வண்ணம் வாக்குமூலங் கொடுப்பதாய்ச் சம்மதித்தார். பிறகு அவர் மாஜிஸ்டிரேட் ஆகா இப்ராஹிம் முன் கொண்டுபோகப்பட்டார். அங்குபோயும் அவர், "உண்மையல்லா வாக்குமூலத்தையே" கொடுத்தனர். உடந்தையாளியான ஹன்ஸ்ராஜ் அவர்களும் அப்போது போலீஸ் ஸ்டேஷனிலிருந்து போலீஸ்காரர்கள் கேட்பதுபோல் சொல்லும்படி புத்திமதிசொன்ஞர். பிறகு 10-நாட்கள் வரையில் அங்கு தேக்கிவைக்கப்பட்டார். அதன்பின்னர் ஜூன்மாதம் 9-ந்தேதி வரையில் தினம் ஒரு தரம் போலீஸ்டேஷனுக்கு வந்து ஆஜர் கொடுக்கும்படி ஒத்துக்கொண்டதன்மேல் விடப்பட்டார். ஜூன்மாதம் 9-ந்தேதி லாகூருக்குக் கொண்டுபோகப்பட்டார். ஜூன் மாதம் 16-ந்தேதி இராணுவச்சட்ட நியாய சபையார் முன் கொண்டுபோகப்பட்டார். அங்கு சகல விவகாரங்களுக்கு முள்ளாகி நியாயாதிபதிகளிடத்தில் தான் சித்ரவதை செய்யப்பட்டதாய்க் கூறிஞர். (வா-21)

14-வயதுள்ள பிரிஜிலால் என்ற பையன் 9 - நாட்கள் வரையில் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தான். இரண்டு நாட்களுக்குப் பிறகு ஹன்ஸ்ராஜினிடம் விடப்பட்டபோது அவரால் அப்பையன், இராணுவச்சட்ட நியாயாதிபதிகள் முன்பு பொய் வாக்குமூலம் கொடுக்கத்

தூண்டப்பட்டான். இப்போது எங்கள் முன்பு அவ்விதம் சொல்லப் பின்வாங்குகிறான். (வா-22.)

எப்பிரல்மாதம் 13-ந்தேதி ஜெனரல் டையர் முன்பு சாராய வியாபாரியான ஸர்தார் ஆத்மஸிங் அவர்கள் கைது செய்யப்பட்டார். அவர் ஊர்வலத்தோடு நடந்து அழைத்துச் செல்லப்பட்டார். அவர் கூறுவதாவது, "அவர்கள் என் கைகளில் ஒரு துணியைக் கட்டி பட்டணப் பல தெருக்கள் வழியாய் எல்லாரோடும் இழுத்துச் செல்லப்பட்டேன். தண்ணீர் குடிக்க விரும்பிய காலத்தில் ஒரு வீரன் என்னைக் குடிக்காதிருக்கும்படித் தடுத்துவிட்டான். அன்று பகல், இன்னும் சிலர்கூடக் கைதியாகப் பிடிக்கப்பட்டார்கள். அவர்களில் ஒன்பது பேர்கள் விலங்கிடப்பட்டு ஆகாரமின்றி ஒரு அறையில் பூட்டப்பட்டனர். 15-ந்தேதி ஜெனரல் முன் கொண்டுபோகப்பட்டார்கள். அங்கு எல்லோரும் மரத்தில் கட்டப்பட்டு அடிக்கடி வையவும், பரிகசித்துச் சிரிக்கவும் பட்டார்கள். ஜெனரல் கொஞ்சம் சிற்றுண்டி சாப்பிட்டபின் அவர் முன் எல்லோரும் கொண்டுபோகப்பட்டனர். ஸர்தார் ஆத்மஸிங் 8-நாட்கள் காவல்தண்டனை விதிக்கப்பட்டார். அவர்மீது என்ன குற்றமென்று சொல்லப்படவேயில்லை. அவர் காவலில் வைக்கப்பட்ட காலத்தில் அவரிடமிருந்த ஒரு தங்க மோதிரமும், அவருடைய பெயர்கொண்ட வெஸ்ட் என்ட் ஹண்டிங் கைகெடியாரமும் ஒரு ஜார்ஜெண்டால் பிடுங்கப்பட்டன. (வா-30.)

எப்பிரல்மாதம் 18-ந்தேதி மகம்மத் இஸ்மேல் என்ற கசாப்புக் கடைக்காரன் கைது செய்யப்பட்டான். இவரது சகோதரர் தீனு என்பவர் அகப்படும் வரையில் இருவரும் நன்றாயடிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். தீனுவும் 3-நாட்கள் வரையில் தேக்கி வைக்கப்பட்டனர்.

இரக்கமின்றி அடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (வா-46.)

அப்தல் அஸீஸ் என்ற கறிகாய் வியாபாரி அவர் மறுதளித்த கான்ஸாமாவில் சத்தியஞ் செய்ததற்குக் கைது செய்யப்பட்டார். அவர் ஜெனரல் முன்பு கொண்டு போகப்பட்டதும் இரண்டு நாட்கள் சிறைவாசத்திலிருக்கும்படி உத்தரவிடப்பட்டது. அவருக்குப் பத்தடிகொடுக்கப்பட்டதும் தவிர, அவரது கடையை 14-நாட்களுக்கு மூடும்படியும் உத்தர விடப்பட்டது. (வா-123.)

58-வயதானவரும், உத்தியோகத்திலிருந்து பென்ஷன் பெற்றவருமாகும் லாலா ராலியாராம் என்பவர் ஒரு ஸப் இன்ஸ்பெக்டரால், மிஸ்ட்ரஸ் ஷெர்வுட்டை அடித்த நபர்களில் சிலரது பெயரைக் கொடுக்கும்படி கேட்கப்பட்டார். அவர் அப்போது இல்லாததால் தனக்கு ஒன்றும் தெரியாதெனக் கூறினர். அதன்மேல் அவர் பிரம்பினுல் அடிக்கப்பட்டார். அவரது தாடியைப் பிடித்து உலுக்கினுர்கள். அந்தத் தெருவின் மேலும் கீழும் நடந்து செல்லும்படியும் செய்யப்பட்டு அன்றுமாலை விடுதலை செய்யப்பட்டார். (வா. 107.)

லாலா தாதுமால் என்பவர் அடிக்கப்பட்டு நகரும்படி உத்தரவிடப்பட்டார். அவரும் அவரது பிள்ளையும் கைது செய்யப்பட்டார்கள். பின்னர் அவர் மட்டும் விடுதலையடைந்தார். திரும்பவும் கைது செய்யப்பட்டார். போலீஸ்காரருக்காக ரூபா 100 - கடைத்தலைவனிடம் கொடுத்ததன்மேல் கடைசியாய் விடுதலையடைந்தார். அவர் திரும்பவும் கைது செய்யப்பட்டு மற்றும் 50-ரூபா கொடுத்து விடுதலையைப் பெற்றுக்கொள்ளும்படி உத்தர விடப்பட்டார். போலீஸ்காரர்கள், அவர் கடைக்குள் பலாத்காரமாய்ப் பிரவேசித்து பாலடைக்கட்டி முதலிய

வைகளைத் தங்கள் உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டு போவது வழக்கம். அவரது பிள்ளை 8-நாட்கள் வரையில் தேக்கிவைக்கப்பட்டு 30-அடிகள் வரையில் அடிக்கப்பட்டார். அடிக்கப்படும்போது பிரக்ஞையற்றுப் போனதும் கவனிக்கப்படவில்லை. இதர மனிதர்கள் கசையடி யடிக்கப்பட்டதையும் பார்க்கும்படி உத்தர விடப்பட்டார். அவர், "இந்த மனிதர்கள் வலிபொறுக்கமாட்டாமல் கதறினது மன்றி இரத்த வெள்ளமோடும்படியும் செய்யப்பட்டனர்" என்றார். (வா. 116.)

தனிராம் என்பவர் கீழே உட்கார்த்தப்பட்டும் கையைத் தன் கால்களின் கீழ் வைத்துக்கொள்ளும்படி செய்து அதன் மூலமாய்த் தன் மார்பிலுள்ள தொங்கட்டத்தைத் தொடும்படிக்கும் உத்தரவிடப்பட்டதை லாலா ராகாராம் கண்டார். (வா. 108.)

ஸப் இன்ஸ்பெக்டர் அமீர்கானால் ஏப்பிரல்மாதம் மூன்றாவது வாரம், குலாம்காதர் டூப்கார் என்பவர் கைது செய்யப்பட்டார். கொள்ளையிடப்பட்ட பொருள்களைக் காண்பிக்கும்படியும் உத்தர விடப்பட்டார். தனக்கொன்றும் தெரியாதென்று அவர்சொன்னபோது நன்றாய் அவர் அடிக்கப்பட்டார். பக்தன் லாலா ரெயில்வே ஸ்டேஷனைக் கொள்ளையிட்டும், கொளுத்தியும் அக்கிரமம் செய்த கூட்டத்தார்களிற் சிலரைக் காண்பிக்கும்படி கேட்கப்பட்டார். அவர் தலைக்குட்டையை அவிழ்த்து அவர்களது கைகளைக் கட்டி ஒரு மரத்தில் 10 - நிமிஷகாலம் தொங்கவிட்டிருந்தார்கள். தன் பக்கத்தில் 8-அல்லது 9-பேர்கள் சித்ரவதை செய்யப்பட்டதையும் அவர் கண்டார். அவர் கூறுவதாவது, "பூமியின்மீது பீரா குஜர் என்பவர் படுத்திருக்க (அவரது முகத்தை நான் நன்றாய்க் கண்டறிந்த) ஒரு ஹவல்தார், ஸப் இன்ஸ்பெக்டர் அமீர்கான் முன்

ணிலையில் ஒரு தடி கொண்டு அபானத் துவாரத்தைக்குத்தி னதைக் கண்டேன். அவர் அக்காலத்திலெல்லாம் கதறி அழுதார். போலீஸ்காரர்களுக்கு மன இரக்கம் வரவில்லை. மூன்று நாட்கள் இரவும் பகலும் எவ்வித ஆகாரமும் நாங்கள் எடுத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்படவில்லை. அக்காலங்களில் போலீஸ்காரர்களால் சித்ரவதைகளுக்குள்ளானோம். 5 நாட்கள் கழித்து நான் விடப்பட்டேன்.” (வா. 141)

குலாம்காதருக்கு நேர்ந்ததுபோல் தனக்கும் நேர்ந்ததாகக்கூறி அவன் கொடுத்த வாக்குமூலத்தை மிராஜ்டின் என்னும் நாவிதன் கூறுகிறான். (வா 142.)

நாங்கள் பார்த்தவரையில், குலாம் ஜிலானி என்றழைக்கப்படும் இமாமுக்கு (மகம்மதிய குருவுக்கு) த்தான் அதிக சித்ரவதை கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவர் நாமநவமிப் பண்டிகை விஷயத்தில் விசேஷசிரத்தையெடுத்துக் கொண்டவர். அவர் ஏப்ரல் மாதம் 16-ம் தேதி கைது செய்யப்பட்டார். இந்த இமாமுக்கு எவ்வித சித்ரவதை கொடுக்கப்பட்ட தென்பதை இவர் கொடுத்த (வா 134.) வாக்குமூலத்தைவிடாது படித்தவர்களுக்குத்தான் நன்றாய்த் தெரியும். இதைப்படிக்க வேண்டியது அவசியமுமாகும். கௌரவ மாஜிஸ்டிரேட் மியான் பிரஸ்டின் (வா 2), பாரிஸ்டர் மிஸ்டர் குலாம் யாஸீன் வா. 6) ஆகிய இவர்கள் கொடுத்த வாக்குமூலம் குலாம் ஜிலானி கொடுத்த வாக்குமூல விஷயங்களைத் தாங்கி நிற்கின்றன. குலாம ஜிலானி அநுபவிக்க வேண்டிவந்த சித்ரவதை காலத்து அவர் கதறிய பரிதாபக்குரலை மகம்மத் ஷாபி (வா. 139.) கேட்டதாயும் பார்த்ததாயும் கூறுகிறார். அதே நாள் காதிர் டின் என்பவர் ஒருவர் இதே விதமாய்ச் சித்ரவதை செய்யப்பட்டாரென்றும் அவர் அவாது சித்ரவதை

யால் அடைந்த துன்பத்தினின்றும் திரும்பி சொஸ்த மடையவேயில்லை யென்றும் கூறுகிறார். (வா. 139). நிலச்சுவான்தாரரும் சொந்தக்காரருமாகும் மியான், குமார் உஷன்கான் அவர்கள், சிறையினின்றும் சித்ரவதையினின்றும் தப்பி மௌல்வி குலாம் ஜிலானி வெளிவந்ததும் தன்னைப் பார்த்ததாய்க் கூறுகிறார். அவரடைந்த புண்களை அவர் கண்டார். அப்போது அவர் அவரிடம் சொன்ன வாக்குமூலம் அவர் எங்களுக்குக் கொடுத்த வாக்குமூலம் போலவே யிருக்கிறது. (வா. 140.) குலாம் மகம்மத் அவர் மீதும் காதிர்டின்மீதும் விதிக்கப்பட்ட சித்ரவதையைப் பார்த்ததாயும், சில நாட்களுக்கு முன்தான் அவர் இறந்து போனதாயும் அவர் கூறுகிறார் (வா. 138). நிலச்சுவான்தாரரும் ஜமீந்தாரருமாகும் ஹாஜி ஷாம்ஸடீன் அவர்கள் கூட மௌல்வி குலாம் ஜிலானிக்கும், காலஞ்சென்ற காதிர் டின்னுக்கும் விதிக்கப்பட்ட சித்ரவதையைப்பார்த்ததாகக் கூறுகிறார். போலீஸ்காரரால் ஹாஜி கூப்பிடப்பட்டார். அவர் கூறுவதாவது, "அவர்கள் அவரது அபானத்துவாரத்தில் தடியைச் சொருகினார்கள். அவர் மிக்க ஆபத்தான நிலைமையிலுமிருந்தார். அவரது மலமும் மூத்திரமும்வெளிவந்ததையும் பார்த்தேன். அப்போது வெளியே நின்றுகொண்டிருந்த நாங்கள் சரிவரவாக்குமூலம் கொடுக்காதபோனால் இவ்வாறு சித்ரவதை செய்யப் படுவோமென்றும் போலீஸாரால் அறிவிக்கப்பட்டோம்.(வா.135) ஜிலானிக்கும் காதர் டின்னுக்கும் கொடுக்கப்பட்ட சித்திரவதை விவர வாக்குமூலங்களுக்கும் 136—137 சாக்ஷிகளால் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களுக்கும் ஒற்றுமையும் இருக்கிறது. பாஷ்மீனா வியாபாரி மாலிக் அப்தல் ஹாய் அவர்கள் போலீஸ் சூபரின்டென்டெண்டினிடமிருந்து தந்தியைப் பெற்றதும் மே மாதம் 15-ம் தேதி

சேர லாகூரிலிருந்து அமிர்த சாஸுக்குச் சென்றார். அங்கே அவர் இன்ஸ்பெக்டர் ஜவஹர்லால் வசம் ஒப்பு விக்கப்பட்ட அவர் டாக்டர் கிச்சுலுவுக்கு விரோதமாய் சாக்ஷியங் கொடுக்க இசைந்தால் அவரது சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்படுமெனத் தூண்டினார். அவர் அவ்விதம் கூற மறுத்தபொழுது அவரும் குற்றவாளிகளுள் ஒருவராய்ச் சேர்க்கப்படுவாரெனப் பயமுறுத்தப்பட்டார். எல்லா முன் எச்சரிக்கையும் பயமும் காண்பிக்கப்பட்ட பின்னர் ஒருஅறைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டு ஈவிரக்கமின்றி நையப் புடைக்கப்பட்டார். இவ்வாறு பயமுறுத்தப்பட்டதும் அவர் இணங்கினார். அவர் வாக்கு மூலம் எடுத்துக்கொள்ளப்பட்டது. பிறகு இராணுவ நியாய சபையார் முன் கூப்பிடப்பட்டார். அங்கு அவர் கூறுகிறதாவது, "நான் உண்மையையே சொல்லத்துணிந்தேன்.....................பொய்ச்சாக்ஷி சொல்ல போலீஸ்காரர்களால் எவ்வாறு இச்சிக்கப்பட்டேன் என்று ஜட்ஜிகளிடத்தில் தெரியப் படுத்தினேன். நான் எனது வாக்கு மூலத்தைக் கொடுத்தவுடனே வெளியே வந்தேன். நெய்ப் கோர்ட்டார் என்னைக் கைதுசெய்து போலீசார் அறைக்குக் கொண்டுபோக யத்தனித்தனர். உடனே நான் கோவென்று கதறினேன். இந்த வழக்கு சம்பந்தமாய் ஆங்குவந்த பாரிஸ்டர்கள் உடனே ஆங்கு வந்தனர். அவர்கள் முகுந்தலால்பூரி, மிஸ்டர் ஹாஸன் முதலானவர்களாகும்...........நெய்ப் கோர்ட்டார் என்னை விட்டதும் நியாயாதிபதிகள் முன்பு நான்போய் எல்லாக் கதைகளையும் சொன்னேன். அப்போது தலைமை ஜட்ஜாய் வீற்றிருந்தவர் வேறு வழியாய் வீட்டிற்குப் போக உத்தர விட்டனர்." (வா. 148).

ஏப்ரல்மீ 19-ம் தேதி பாரிஸ்டர்-அட்-லா மிஸ்டர்

பாத்ரல் இஸ்லாம்கான் அவர்கள் கைது செய்யப்பட்டார். போலீஸார் அவரது மனைவியின் படுக்கை யறைக்குள் புக யத்தனித்தனர். அம் மாது அவர்களை வெளியே போகும்படி சொன்னபோது அவர்கள் மறுத்து விட்டனர். அவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போகப் பட்டார். அப்போது ப்ளோமர், "இந்த மனிதன் தானையா பஞ்சாப் லெப்டினன்ட் கவர்னராய் வரப் பிரியப் பட்டவர்" என்று கூவினார். பிறகு எவ்வாறு அவர் பொய்ச் சாக்ஷி சொல்ல வற்புறுத்தப் பட்டார் என்பதைக் கூறுகிறார். பின்னர் அவர் இதர கைதிகளோடு எவ்வித நிலையிலிருந்த அறையில் அடைக்கப் பட்டாரென்றும், விடுதலை செய்யப்படுமுன் எவ்வித கஷ்டங்களுக் குள்ளாக்கப்பட்டா ரென்றும், எந்தெந்த கஷ்டங்கள் அவர் அனுபவித்தாரென்றும் கூறுகிறார். அவர் கடைசியில் கூறிய விஷயமாவது, "குலாம் ஜிலானி என்பவரைச் சித்திரவதைக் குள்ளாக்கி எனக்கு விரோதமாய்ப் பொய்ச் சாக்ஷி சேகரிக்க போலீசார் தம்மாலான வரையில் முயற்சித்தனர். அவரோ இராணுவ நியாய கமிஷன் முன் என்னைப்பற்றி விசாரணை நடந்த காலத்தில் உண்மையைச் சொல்லி விட்டனர். இவ்விதம் நான் கைது செய்யப்பட்டு இரண்டரை மாத காலம் சிறையிலும் வைக்கப் பட்டு என் ஆயுளுக்குள்ளாக விசாரணையும் செய்யப்பட்டேன்." (வா. 88)

பார்-அட்-லா மிஸ்டர் கர்டியல்ஸிங் ஸலாரியா அவர்களும் கைது செய்யப்பட்டனர். இவரும், முன், பாலத்தடியில் கூட்டம் நின்று கலகம் செய்த காலத்து, தன்னுயிரையும் கருதாது அவர்களைக் கலைக்க யத்தனித்தவ ராகும். தானும் அனுபவிக்க நேர்ந்த கஷ்டங்களை அவர் வர்ணிக்கி

ருர். அவர் மே மாதம் 23-ம் தேதியிலிருந்து ஜுலை மாதம் 5-ம்டை வரையில் ஜெயிலில் வைக்கப்பட்டார். (வா. 87)

இவ்விதம் இஷ்டப் பிரகாரம் வர்ஜா வர்ஜமின்றிக் கைது செய்யப் பட்டவர்களையும், அநுகூல வாக்குமூலங் களைச் சேகரிக்கச் செய்யப்பட்ட சித்ரவதைகளையும் வர் ணிக்க இவ்வளவு பத்திகளும் இராணுவச் சட்டம் என்ற தலையங்கத்தில் செலவிடப்பட் டிருக்கின்றன. இவ்வள வும் மகா பாதகமான சித்ர வதைகளுக்கான கதையே யாகும். ஜாலியன்வாலாபாக் படுகொலை இவ்வித நாடக நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது. கஷ்ட மடைந்த வர்கள் கைது செய்யப்பட்டதன்றி கைது செய்யப் படுவோ மென்று பயந்தவர்களும் கஷ்டத்துக் குள்ளானர் கள். இதனின்றும் விளங்குவது என்னவென்ருல் கைது செய்யப்பட்ட முறையில் ஒருவித ஒழுங்குமே யில்லை யெனத் தெரிகிறது. எவ்வித அந்தஸ்திலும், வகுப்பிலு மிருந்த ஜனங்களும் இவ்வித கஷ்டங்களுக் குள்ளானர் கள். ஒருவருக்கும் பத்திர மென்ப தேற்படவில்லை. இந் தத் தலையங்கத்தில் வாக்குமூலங்களைச் சேகரிப்பதில் நாங் கள் மிக்க ஜாக்கிரதை யெடுத்துக்கொண்டோ மென்பதை யும் கூறுகின்ரும். நாங்கள் விஜாரிக்கப் புகுந்தபோது நம்பிக்கை யில்லாதவர்களாக விருந்தோம். பிறகு ஒவ் வொரு வாக்குமூலமாக எங்களுக்குக் கிடைக்க வாரம் பித்த காலத்து பொதுக் குற்றத்தை ஒத்துக்கொள்ள நிர்ப்பந்தப் பட்டவர்களானேம். மிக்கக் கேவலமான வாக்குமூலங்களும் எந்த நியாய ஸ்தலத்துக்குக் கொண்டு போகப் பட்டாலும் உறுதிப் படுத்தப் படுமாறு நிற்கின் றன வென்று நாங்கள் கூறுவோம்.

போலீஸ்காரர்களால் லஞ்சம் வெகுவாய் வாங்கப் பட்டன வென்று ரூபிக்கத் தகுந்த அநேக வாக்குமூலங்

கள் இருக்கின்றன வென்றுங் கூறுவோம். இவ் விஷயங்களில் வாக்குமூலம் வாங்க அமிர்தசரஸுக்குப் போவதை நிறுத்தி விட்டோம்; ஏனென்றால் சாக்ஷிகள் தங்கள் மனவுறுதியைத் தெரிவித்தார்களே யன்றி அவர்கள் பெயர்களைக் குறிப்பிட மனமில்லாது போயினர். இக் குற்ற விஷயத்தின் உண்மையைக் கவர்ன்மெண்டார் அறிய விரும்பினால், இதைப்பற்றி விசாரணை செய்ய அவர்கள் துணியலாம். ஆனால் இதன் விஷயத்தில் வாக்குமூலங் கொடுக்க வரும் நபர்களைக் காப்பாற்றும் பொறுப்பை அவர்களேற்றுக் கொள்ளவேண்டி நேரும். இவ்வகைக் குற்றவாளிகளை மறைக்க கவர்ன்மெண்டார் விரும்ப மாட்டார்களென்றே நாங்கள் நிச்சயமாய்க் கூறுவோம். அதற்கு நாங்கள் சொல்வதே ஏற்ற வழியாகும். இவ் வழியை அனுசரித்தால் மகத்தான பாப வழியினின்றும் போலீஸ் இலாகாவையே திருத்தலாம். சித்ர வதைகளையும் இவ்வித விசாரணைக்குக் கொண்டுவருவதற் கேற்றதாகும். அது அங்கே கவர்ன்மெண்டார் முன்னிலையி லிருக்கிறது. அவர்கள் அது விஷயமாய்க் கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூலங்களை அறியாதிருக்க முடியாது.

பொய்ச் சாக்ஷி பெறுவதற்குப் பலத்த பிரயத்தனம் கட்டுப்பாடாய் எடுத்துக் கொள்ளப் பட்ட தென்பதற்கு விஷயங்களை அதிகமாய்ச் சொல்ல வேண்டுவ தவசியம். இராணுவச் சட்ட கமிஷன் முன்னும், ஸம்மரி கோர்ட்டுகளின் முன்னும், அந்த ஸ்தல அதிகாரிகளின் முன்னும் விசாரிக்கப்பட்ட விசாரணைகாலத்து, நியாயவிரோதமான சம்பவங்கள் பல நடந்திருக்க வேண்டும். இந்த நியாய சபைகளின் சேர்க்கைகளைப் பற்றிக் கூறுவதும் தவறாகாது. இராணுவச் சட்டக் கமிஷனென்பது மூன்று நியாயாதிபதிகள் கூடிய ஒரு சபை. இவர்களுக்கு ஏதோ

அற்ப இடங்களுக் குட்பட்ட வழக்குகளைத் தான் விசாரணை செய்ய அதிகார முண்டு. அவர்களுக்கு மரண தண்டனையும் விதிக்க அதிகார முண்டு. அவர்களுக்கு வாக்குமூலங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டு மென்ற நிர்ப்பந்தம் கிடையாது. அவர்கள் செய்த தீர்ப்புக்கு அப்பீலுங் கிடையாது. ஸம்மரி கோர்ட்டு என்பது வழக்கமாய் ஒரே ஒரு மாஜிஸ்ட்ரேட்டால் நடத்தப்படுவதாகும். இவருக்கு இரண்டு வருஷம் வரையில் காவல் தண்டனை விதிக்கவும் ரூ. 1,000 வரையில் அபராதம் விதிக்கவும் அதிகார முண்டு. இவர்கள் தீர்ப்புக்குக் கூட அப்பீல் கிடையாது. இவர் சொல்லிய தீர்ப்பே உறுதியான தீர்ப்பாகும். இந்த நியாய சபையார்களால் விசாரிக்கப்பட்டு தீர்ப்புச் சொல்லப்பட்ட வழக்குகளையும் கவர்ன்மெண்டாரால் வெளிப் படுத்தப்பட்ட கணக்கு வழக்கு வரலாறுகளையும் நன்ருய் ஆராய்ந்து பார்த்தோம். அவ்விதம் பார்த்ததில் அநேகமாய்ப் பெரும்பான்மையான வழக்குகளின் தீர்ப்புகள் மிக்கக் கேடா யிருக்கின்றன. கணக்கு வழக்கு விவகார மூலப்படி இராணுவச் சட்ட கமிஷன் முன்பாக விசாரிக்கப்பட்ட வழக்குகள் 188. இவைகளில் மூன்று விடுதலை செய்யப் பட்டவையாகும். ஸம்மரி கோர்ட்டார்களாலும், ஸ்தல அதிகாரிகளாலும் 173 வழக்குகள் விசாரிக்கப் பட்டன. அவைகளுள் 32 வழக்குகள் விடுதலை செய்யப் பட்டவையாகும்.

இவ்வாறு நாங்கள் கூறிய நியாய சபையார்களால் தண்டனை விதிக்கப்பட்ட பெரும்பாலரும் சக்ரவர்த்தி ஸ்ரீமுகத்தால் விடுதலை யடைந்தபடியால் இதன் விவகாரங்களைப் பற்றி விரிவாய்ச் சொல்லவேண்டிய தவசியம். ஆனால் சிலருக்குக் குறைந்த தண்டனையாய் சொத்துக்களைப் பறி முதல் செய்யப் பட்டதன்றி ஆயுள் முழுவதும்

தீபாந்தரசிக்ஷையும் விதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு விதிக்கப் பட்டதற்கு ரௌலட் சட்டத்துக்கு விரோதமாய் ஹார்தால் நடத்தியதும், கூட்டங் கூடிப் பேசியதுமே காரணங்களாகும். உடந்தையாளியின் வாக்குமூலத்தைக் கொண்டு பெரிய குற்றங்களை ஆரோபித்துத் தலைவர்கள் தண்டனை விதிக்கப்பட் டிருக்கிறார்கள். லாகூர் சம்பவங்களைப் பற்றி ஆராய்ந்து சொல்லப் புகும்போது இராணுவச் சட்ட கமிஷன் முன்பாக விசாரிக்கப்பட்ட வழக்குகளைப் பற்றி இன்னும் கொஞ்சம் விவரமாய்க் கூறுவோம். அதிகாரிகள் டாக்டர் கிச்சுலுவையும், டாக்டர் சத்தியபாலையும் இரகசியமாய் தேசப் பிரஷ்டம் செய்தது மகத்தானக் குற்றம் எனவும், சட்ட விஷயத்தில் அவசரப்பட்டு விட்டார்கள் எனவும்; தேசப் பிரஷ்டம் செய்தபோதிலும் கொஞ்சம் யோசனை யுடனும் தந்திரமாகவும் நடந்திருந்தால் இவ்வளவு தூரம் வந்திரா தெனவும் ஜனங்கள் கூடிக் கலகம் செய்தது மிக்கக் கேவலமும் அருவெறுக்கத் தகுந்த காரிய மெனவும்; ஜாலியன்வாலா தோட்டச் சம்பவங்கள் இதுவரையில் எங்கும் நடந்திராததும், முன்னதாக அறிவிக்கப் படாமலே மிக்க க்ஷாத்திரத்தைத் தெரிவிக்கப் பட்டதும், மனிதத் தன்மை யில்லாததுமான காரிய மெனவும்; அமிர்தசரஸில் அகாரணமாய் இராணுவச் சட்டத்தை ஜெனரல் டையர் கொண்டுவந்ததும், அதை நீடித்து நடத்தியதும் அதிகாரிகளுக்கு அகௌரவ மெனவும் அதன் அரசாக்ஷி நாகரிக இராஜாங்கத்துக்கு அழகல்ல வென்பதையும் கூறி, அமிர்தசரஸ் பரிசிலனையைப் பற்றிய விஷயங்களை ஒருவாறு முடிவு செய்வோம்.

டார்ன் டாரன்

டார்ன் டாரன் என்பது அமிர்தசரஸ் ஜில்லாவின் ஓர் பாகமும் ஒரு ரெயில்வே ஸ்டேஷனுமாகும். அது அமிர்தசரஸிலிருந்து 16 மைல் தூரத்திலிருக்கிறது. இதுவும் சீக்ஜாதியார்களது முக்கிய ஸ்தலங்களுள் ஒன்றாகும். ஆனால் ஸ்தல மகிமையில் அமிர்தசரஸுக்கு இரண்டாவதாகும். இங்கு கஜானாவைக் கொள்ளையிட முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதாகப் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் கூறுகிறார். எங்கள் கையிலுள்ள வாக்கு மூலங்களால் அவ்வித விஷயம் வெறும் பொய்க்கதையேயெனக் கூறுவோம். இவ்விதமிருந்தும் ஒரு ஸம்மரி கோர்ட்டாரால் பலர் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

லாகூர் பட்டணம்

தலைமைப் பட்டணமாகவும், கவர்ன்மெண்டாரது இருப்பிடமாகவும் லாகூர் இருப்பதால் இராஜாங்க விவகார ரீதியில், பஞ்சாப்புக்குள் முக்கிய முதல் பட்டணமாகக் கூறலாகும். சீக்கியர்களது முக்கிய ஸ்தலமாயிருக்கிற விதத்திலும், கலகம் முதலில் தோன்றியதனாலும், கவர்ன்மெண்டாரது முக்கிய நோக்கம் அங்குதான் தீர்மானிக்கப் பட்டதாலும் அமிர்தசரஸை முதலில் கூறினோம். லாகூர் ஒரு பெரிய ரெயில்வே ஜங்ஷன் ஸ்டேஷனாகும். இங்கிருந்து பிஷாவார், கல்கத்தா, கராச்சி, பம்பாய் முதலிய இடங்களுக்கு இருப்புப்பாதைகள் செல்கின்றன. லாகூரிலிருந்து டில்லிக்கு 298 மைல் தூரம். (கன்டோன்மெண்ட்) பட்டாளத்தார் இருக்குமிடம் நீங்கலாக மிகுதியானவிடத்து ஜனத்தொகை 250,000. இவற்றுள் மகம்மதிய ஜனத்தொகையே விசேஷம். ஹிந்துக்கள்

ஜனத்தொகை மகம்மதிய மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பாகமாகும்.

லாகூரில் பையன்களுக்காகப் பத்து காலேஜ்களும் பெண்களுக்காக இரண்டு காலேஜ்களும், பையன்களுக்கும் பெண்களுக்கும் அநேக ஹைஸ்கூல்களும் இருக்கின்றன. அது பஞ்சாப் ஸர்வகலாசாலை (University) யின் முக்கிய ஸ்தானமுமாகும். அங்கு இரண்டு தினசரிப் பத்திரிகைகள் பிரசுரிக்கப் படுகின்றன. அவைகளுள் ஒன்று தேசீய உணர்ச்சியை ஆதரித்தும்; மற்றொன்று அந்தரங்க ஆலோசனையின்மேல் அரசாட்சி செய்யும் இராஜாங்கத்தையும், ஐரோப்பியர்கள் வியாபாரத்தை ஆதரித்தும்; பிரசுரம் செய்யப்படுகின்றது. இவை தவிர சுதேச பாஷைகளில் பல தினசரிப் பத்திரிகைகளும் வாராந்தரப் பத்திரிகைகளும் பிரசுரிக்கப் படுகின்றன. ஆகவே லாகூர், பஞ்சாபிலுள்ள எல்லா இடங்களைக் காட்டிலும் படித்த வகுப்பாரை மிகுதியாய்ப் பெற்றும் ஆங்காங்கு தினேதினே சம்பவிக்கும் சமாசாரங்களை யறிந்தும் வருகிறது. ஸர் மைகேல் ஒடையர் அவர்களே, பஞ்சாப் இந்திய இராஜீய உணர்ச்சியில் இதரமாகாணங்களைக் காட்டிலும் விசேஷ சிரத்தைகாட்டாம லிருந்ததைப் பற்றிக் குறிப்பிட்டும் புகழ்ந்தும் பேசியிருக்கிறார். ஆனால் சமீபத்தில் அங்கு இராஜீய உணர்ச்சி தோன்ற அம் மாகாணமே இதர மாகாணங்களுக்கு முன் வழிகாட்டியாய் இருந்தது. இந்த இராஜீய உணர்ச்சி, ஸர்மைகேல் ஒடையர் அவர்கள் இதற்குமுன் யாம் குறிப்பிட்டபடி உத்தியோகத்தை வகிக்கப்புகுமுன் தன் சபை (Council) முன்னிலையில் பேசிய பேச்சால் பலப்படுத்தப் படுகிறது. மேலும், ரௌலட் சட்டம் கொண்டுவரப்பட்ட காலத்து இராஜீய உணர்ச்சி சம்பந்தமாய் இதர மாகாணங்களைப்

போல் இதுவும் பங்கு பெற்றுழைத்தது. இதில் லாகூரே பஞ்சாப்புக்கு வழிகாட்டியா யிருந்தது. மிஸ்டர் காந்தி அவர்கள் சத்யாக்ரஹக பிரதிக்ஞையை வெளியிட்ட காலத்து பஞ்சாப்புத் தலைவர்கள் கடைசி நிமிஷபரியந்தம் ஒத்துக்கொள்வதா வேண்டாமாவென்று தயங்கி வந்தனர். உண்மையாகவே லாகூரில் சத்யாக்ரஹப் பிரதிக்ஞையைக் கைக்கொண்டவர் ஒருவரும் இல்லையென்றே கூறலாம். ஆனால் ஹார்தாலும் உபவாசமும் வேறுமுறையில் அநுஷ்டிக்கப்பட்டு வந்தன. அநுசாரணையில் ஒருவித பிரதிக்ஞையும் ஒருவிதத் தொடர்ச்சியுள்ள செயலும் அநாவசியமாகக் கருதப்பட்டது. இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில்கூட, தலைவர்கள், நிச்சயமான கொள்கையை அனுசரித்தவராகவாவது, மிஸ்டர் காந்தியினது வேண்டுகோளுக்கு எந்த விதமான பதிலைக்கொடுப்பது என்று உணர்ந்தவராகவாவது தெரியவில்லை. அவர்கள் அவரது வேண்டுகோளை அச்சிட்டுப் பிரசுரஞ் செய்துவிடுவது என்று தீர்மானித்தார்கள். கவர்ன்மெண்டார் ஹார்தால் நடக்கப்போவதாய் உணர்ந்தவுடனே பீதியடைந்து விட்டனர். ஏப்ரல் மாதம் நான்காம் தேதி, முன் அனுமதியை பெறுமல் எந்த மீட்டிங்கையும் ஊர்வலத்தையும் நடத்தக் கூடாதென போலீஸ் உத்தரவு லாகூரில் பிறப்பிக்கப் பட்டது. ஐந்தாம் தேதி, தலைவர்கள் தன்னைவந்து பார்க்கும்படி டிப்டி கமிஷனர் அவர்கள் உத்தரவிட்டார். பண்டிதர் ராம்பஜ் (ராம்பஜனர்) டட் சௌதாரி முதலிய தலைவர்கள் தங்கள் வாக்குமூலங்களில் தாங்கள் கமிஷனரைக் கண்டுவந்த வரலாற்றையும் அதன் பின்னர் நடந்த வரலாற்றையும் வர்ணித்துக்கூறி யிருக்கின்றனர். அந்த சந்திப்பில், விவகாரத்துக் கெடுத்துக் கொள்ளப்பட்ட மீட்டிங்கை வேண்டாமென்று தடுத்து விட்டால்கூட

நிறுத்திவிடுகின்றோம் என்றும் விட்டுக்கொடுத்துத் தலைவர்கள் பேசினார்கள். ஆனால் டிப்டி கமிஷனர் அவர்கள் பின்வரும் விஷயங்களுக்குமட்டில் கட்டுப்பட்டு நடந்தால் போதுமென்று கூறி திருப்திபடைந்து விட்டார். அவைகளாவன :—

(a) 5-ம்தேதி மாலைவரையில் யாவரும் பட்டண ஜனங்களை ஹார்தாலுக்குச் சாதகமாகவாவது விரோதமாகவாவது உட்படுத்த முயற்சிக்கலாம்.

(b) 6-ம்தேதி எந்த வழியிலும் பிரயத்தனிக்கக் கூடாது.

(c) மீட்டிங்கை நடத்தலாம். ஆனால் கலகத்துக்கிடமான பேச்சைப் பேசக்கூடாது.

6-ம்தேதி பொழுதுவிடிந்ததும், லாகூரில் இதற்கு முன் எப்பொழுதுமே தோன்றியிராத வண்ணம் ஹார்தால் நடந்தது. ஆயிரக்கணக்கான ஸ்திரீகளும் குழந்தைகளும் ஹார்தாலைக் கொண்டாடினர். ஜனங்கள் ஸ்நானம் செய்ய நதிக்குச் சென்றனர். திரும்பிவந்த போது ஊர்வலம்போல் திரும்பிவந்தனர். உண்மையாகப் பேசினால் இதற்குமுன் நாங்கள் தெரிவித்த போலீஸார் விளம்பரத்துக்கு விரோதமானதாகவே இதைக்கூறலாம். எப்படியிருந்தும் இந்த ஊர்வலம் ஒழுங்காகவே நடைபெற்றது. போலீஸார்கள் புத்திசாலித்தனமாய் இதில் தலையிடா திருந்தனர். ஆனால் ஊர்வலம் மால்நோக்கிச் சென்றபோது போஸ்டாபீசுக்குமேல் போகக்கூடாதெனத் தடுத்து விட்டனர். இந்த ஊர்வலத்தைத் திரும்பிப்போகும்படி செய்ய தலைவர்களது உதவியை அவர்கள் பெற்றனர். மால்வரையில் போவதாயிருந்த ஊர்வலத்தை லாலா துனிசந்த் அவர்களும் டாக்டர் கோகுல சந்த்

நாரங் அவர்களும் சேர்ந்துதவிபுரிந்து தடுத்து வெற்றி பெற்றார்கள்.

இவ்விதமிருந்த போதிலும் ஸர் மைகேல் ஓடையர் மனதில் ஏதோ உறுத்திக்கொண்டிருந்ததாய்த் தெரியவந்தது.

அவர் உரையாடிக்கொண் டிருந்த சமயங்களில் பஞ்சாபில் ஹார்தாலே யிருக்கக் கூடாதெனச் சொன்னதாகச் சொல்லப்படுகிறது. தலைமைப் பட்டணத்திலேயே ஹார்தால் சிறப்பாய் நடந்ததைக் கண்டவுடன் அவர் மிக்க வருத்தத்தோடு ஆச்சரியப்பட்டார். இவ்விதம் சிறப்பாய் ஹார்தாலை நிறைவேற்றிய குற்றத்துக்குத் தலைவர்கள் சரியான வழியில் தண்டிக்கப்படும்படி செய்கிறேன் என்று சொன்னதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிற்பகலில் பிராட்லா ஹாலில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அநேக ஆயிரம் ஜனங்கள் வந்துகூடினர். இவ்வித மீட்டிங்கை லாகூர் ஒருபொழுதும் கண்டதேயில்லை. உளவு போலீஸ் இலாகா சூபரின்டென்டென்டை (Superintendent of the Criminal Investigation Department) ஸர் மைகேல் ஓடையர் அவர்கள் அனுப்பி மீட்டிங்கைக் கவனிக்கும்படி செய்தார். அந்த மீட்டிங்கில் பேசப்பட்ட சகல உபந்நியாசங்களும் தெரிவிக்கப்பட்டன. அவைகளை நாங்கள் பார்த்தோம். ரௌலட் சட்டத்தை ரத்து செய்யும்படிச் சொல்ல ஜனங்களுக்குள்ள ஸ்வதந்தரத்தை வற்புறுத்தியும் தொடர்ந்தும் சொல்லப்பட்டதே தவிர கலகம் செய்யும்படி தூண்டுதல் செய்யக்கூடிய எவ்வித விஷயங்களும் இராஜத்துரோகமான மொழிகளும் அடங்கினதாயில்லை. 7-ம்தேதியும் 8-ந்தேதியும் ஒன்றும் நடைபெறவில்லை.

ஏப்ரல்மாதம் 9-ம் தேதி அமிர்தசரஸில் ராமநவமி தினம் கொண்டாடப்பட்டது. ஜனங்கள், இந்துக்களையும் மகம்மதியர்களையும் சகோதரரீதியில் பாவிக்கும் வண்ணம் கொண்டாட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தனை வருஷங்களாய்க் கொண்டாடப்பட்டுவந்த மதசம்பந்தமான கொண்டாட்டம் தேசீய சம்பந்தமான கொண்டாட்டமாய் இப்போது நிறைவேற்றப்பட்டது. ஊர்வலத்தாரோடு உத்யோகஸ்தர்களுமிருந்தார்கள். அவர்களைக் கண்டபோதெல்லாம் குதூகலம் செய்தனர்.

இவ்விதம் 10-ம் தேதிவரையில் எங்கும் அமைதியாகவே யிருந்தது. ஆனால் ஸர். மைகேல் ஓடையரோ அவ்விதமில்லை. டாக்டர் ஸத்யபால் அவர்கள், மிஸ்டர் காந்தியை அமிர்தசரஸைப் பார்வையிடும்படிக்கும், ஸத்யாக்ரகக் கொள்கையை விரித்துரைக்கவும் அழைத்ததை அவர் அறிந்துகொண்டார். சந்யாசி ஸ்வாமி சிரத்தாநந்தர் அவர்களது வேண்டுகோளுக் கிணங்கியும், சத்யபால் அவர்களது வேண்டுகோளுக் கிணங்கியும் ஏப்ரல்மாதம் 8-ம் தேதி மிஸ்டர் காந்தி பம்பாயைவிட்டு டில்லிக்குப் புறப்பட்டு விட்டாரென்பதும் அவருக்குத் தெரிந்துவிட்டது. அது அவருக்குச் சகிக்கக்கூடாததாயிற்று. வைஸிராயினிடமிருந்து அவர் அநுமதிபெற்றுக்கொண்டு, காந்தி அவர்கள் பஞ்சாபுக்குள் பிரவேசித்ததும் முதல் ஸ்டேஷனிலேயே அவரைத்தடுத்துக் கைதுசெய்து பம்பாய் மாகாணத்துக்குத் திருப்பியனுப்பி அங்கே அவரை, எங்கும் செல்லமுடியாதபடி இன்டெர்ன்மென்ட் என்னும் சட்டத்துக்கு உள்ளாக்கினர். பத்தாம்தேதி காந்தியினது செய்தி லாகூருக்கு ஸிவில் அண்டு மிலிட்டரி கெஜட்மூலமாகத் தெரியவந்ததும் எவ்விதப் பிரயத்தனமுமின்றி கடைகள் மூடப்பட்டன. 4-மணிக்கு எல்லாவேலைகளும்

நிறுத்தப்பட்டன. சில பட்டணத்து ஜனங்கள் ஒன்று கூடி மால் நோக்கிப் போயினர். அமார்க்காலி போனதும் அது பெருங் கூட்டமாயிற்று.

6-ம் தேதிக் கூட்டம், மாலுக்குச் செல்லாது தடுக்கப் பட்டதுபோல், இக்கூட்டத்தின் பெரும்பாலோரும் பார்மன் கிறிஸ்டின் காலேஜுக்குச் சமீபத்தில் தடுக்கப்பட்டனர். ஆனால் மாணுக்கருள்பட 300-அல்லது 400-பேர்கள், மிஸ்டர்காந்தியை விட்டுவிடவேண்டுமென்று கவர்ன்மெண்டாரைச் கேட்டுக்கொள்ள மால்வரையில் போவதென்றே தீர்மானித்துச்சென்றனர். இது தெரிந்தவுடன் போலீஸ் கூட்டத்தினர் இக்கூட்டத்தினருடைய பின்புறமாய்வந்து அவர்களை வளைந்துகொண்டு ஓடையர் ஸோல்ஜர்ஸ் கிளப்புக்கு அருகில் முன்போகவிடாதபடி தடுத்துவிட்டனர். அப்போதும் அவர்கள்கேட்ட வழியாயில்லை. உடனே சுட உத்தரவு கொடுக்கப்பட்டது. 2-அல்லது 3-பேர்கள் கொல்லப்பட்டனர் அநேகர் புண்படுத்தப் பட்டனர். இதன்மேல் அக்கூட்டத்தினர் பின்னடைந்தனர். இறந்தவர்களும் காயமடைந்தவர்களும் போலீஸார்களால் தூக்கிச் செல்லப்பட்டனர். அருகில்வந்த வைத்தியர்களது (டாக்டர்களது) உதவியும் மறுக்கப்பட்டது. இவ்வாறு கூட்டம் கலைக்கப்பட்டும், போலீஸார்களால் மெதுவாய் பின்னுக்குத் தள்ளப்பட்டும் அமார்க்காலி வழியாய் லோஹாரி கேட்டுக்கொண்டு வரப்பட்டனர். இந்தவிடத்திலும் போலீஸ்காரர்கள் கூட்டத்தைக்கலைத்துவிட முயன்றனர். ஹண்டர் கமிட்டிமுன், போலீஸ் சூபரின்டென்டென்டு, மிஸ்டர் பிராட்வே அவர்கள் சொன்ன வண்ணம் இங்கு அரைமணிக்குமேல் இராஜிப் பேச்சுகள் நடந்தன. இச்சமயத்தில், இவ்விஷயத்தை ஒருவர், பண்டிதர் ராம் பஜ் டட் சௌதாரி வீட்டுக்கு ஓடிப்போய்ச் சொன்னதும்

அவர் தன்னாலான உதவியைச்செய்ய அங்கு ஓடிவந்தார். அவர் கூட்டத்தார்களைக் கலைந்துபோகும்படி சொன்னார். அவரதுகுரல் அவரது அருகிலிருந்த சிலருக்கே எட்டியது. மற்றோர்க்கு எட்டவேயில்லை. ஆகவே அவர் ஒரு உயர்ந்த ஸ்தலத்தின்மேல் நின்று பேச ஆரம்பித்தார். இதற்குள், போலீஸ் சூபரின்டென்டென்டு அவர்கள், பொறுமையற்றுப் போனார். டிப்டி கமிஷனர் அவர்களும் வந்துவிட்டார். பண்டித் ராம்பஜ் டட் சௌதாரி அவர்கள் டிப்டி கமிஷனர் அவர்களிடம் சென்று தனக்குச் சிலநிமிஷம் கூட்டத்தைக் கலைக்க அநுமதிகொடுக்கும்படிக்கும்தான் அதற்குள் அவர்களது மனதைத் திருப்பி நல்வழிப்படுத்த முயற்சிப்பதாயும் கூறினார். ஆனால் மிஸ்டர் பைஸன் (Mr. Fyson) அவர்கள், இரண்டே நிமிஷம் அநுமதி கொடுத்து அதற்குள் கூட்டம் கலையாதபோனால் சுடும்படி உத்தரவிட்டுவிடுவேனென்றும் கூறினார். இரண்டே நிமிஷங்களுக்குள் ஜனங்களுக்கு எதுவும் சொல்ல முடியாதென்றும் அவ்விதம் சொன்னாலும் அவர்கள் கிரகித்துக் கொள்ள முடியாதென்றும் கெஞ்சி மன்றாடினார். அவர் கேட்கவில்லை. அப்படியும் பண்டிதர் தன்னாலானவரையில் முயற்சித்தார்; சிலர்கூட்டத்தைவிட்டுக் கலைந்துபோயினர். இதற்குள் கொடுத்த மணிப்பிரகாரம் இரண்டு நிமிஷங்கள் முடியவே, மிஸ்டர் பைஸன் அவர்கள் சுட உத்தரவிட்டனர். இதன்மேல் ஓடையர் ஸோல்ஜர்ஸ் கிளப்புக்குச் சமீபத்தில் நடந்த சேதமே இங்கும் நடைபெற்றது. இவ்விதம் சுட்டதும் கூட்டம் கலைந்தோடியது. ஆனால் ஜனங்களது இருதயத்தில் அது புண்படுத்திக்கொண்டிருந்தது.

இவ்விதம் இரண்டுதரம் சுட்டதும் அநாவசியமென்றும், அவ்விதம் நேராதிருக்கச் செய்யக்கூடுமென்பதும் எங்களபிப்பிராயம். அக்கூட்டத்தார்வசம் எவ்வித ஆயுத

மும் கிடையாது. கிறிஸ்டியன் காலேஜ், ஒய். எம். ஸி. ஏ., (Y. M. C. A.) ஸிம்லா அலயன்ஸ் பாங்கி, வங்காள பாங்கி, போஸ்டாபீஸ், தந்தியாபீஸ், ஹைகோர்ட், காதிட்ரல்முதலிய பல பொதுஜனக்கட்டடங்களைத்தாண்டி அக்கூட்டம் சென்றது. அமிர்தசரஸில் நடந்ததுபோலவே இவ்விடத்திலும் அதிகாரிகள் முன்னெச்சரிக்கை கொடுக்காது போயினர். பண்டிதர் ராம்பஜ்டட் சௌதாரி அவர்கள் வேண்டியும் போதுமானவளவு சாவகாசம் கொடுக்காது போயினர். கூட்டத்தாரால் எவ்வித உபத்திரவமும் கொடுக்கப்படவில்லை. இந்தியாவில் எப்பக்கத்திலும் விளங்கும் கூட்டத்தரினது குணம், இவ்வித பஞ்சாபியர் விவகாரங்களில் உள்ளதுபோலவேதான் இருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம். ஏன் இவ்விதம் நாம் சொல்லப் புகுந்தோமென்றால், சிலர், பஞ்சாப் கூட்டத்தாருடைய குணத்துக்கும் இதரமாகாணக்கூட்டத்தாருடைய குணத்துக்கும் வித்தியாசமுண்டென்று நினைத்துச் சொல்லியதாகக் கேள்விப்பட்டோம். எங்கள் அபிப்பிராயம் அவ்விதமில்லாது முற்றிலும் மாறானதா யிருக்கின்றது. எங்களிற் சிலர் பஞ்சாப்கூட்டத்தார் ஒருதடியைக்கொண்டே விலக்கப் பட்டதைப் பார்த்திருக்கிறார்கள். லாகூர், காஸூர், அமிர்தசரஸ் கூட்டத்தார்கள் எவ்வித தீவர எண்ணத்தைப் பெற்றிருந்தாலும் அவர்களில் ஒருவர்கூட சுடப்படுவதற்கு எதிர் நிற்கமுடியாது. ஆபீஸர்கள் கூறுவதுபோல் கூட்டத்தார்கள் ஏராளமானவர்களா யிருப்பதாகவே பாவித்துக்கொண்டாலும் எந்த வுலகத்திலாவது ஒரு சிறு சைனியத்திற்கு எதிராக நிற்கும்படி கூட்டப்படமுடியுமா? பம்பாயில்கூடிய ஒருபெருங் கூட்டத்தை ஏப்ரல் மாதம் 30-ம் தேதி இரண்டு டஜன் குதிரைவீரர்கள் நடுவேசென்று கலைத்துவிட்டதாக உத்யோக முறையில்

அறிவிக்கப்படுகிறது. துஷ்டத்தனம் செய்ய வேண்டுமென்று, துஷ்டத்தனத்தில் மிக்கக்கியாதிபெற்ற பிதோனி கூட்டத்தார்கள் சென்றுவிட்டால் அதிகம் செய்துவிடக் கூடும். இவர்களே சுலபத்தில் அடக்கப்பட்டார்கள். பொதுவாய் இந்தியாமுழுமைக்கும், அல்லது பிரத்யேகமாய் பஞ்சாபுக்குமட்டில், போலீஸார்களுக்கு எவ்வித உபத்திரவமும் ஏற்படக்கூடாதென்றும் அற்பக்கலகாஸ்பதமான காரியம் தென்படவே சுட்டுவிடவேண்டுமென்றும் ஏதோ எழுதப்படாத ஒரு சட்டமிருந்து வருகிறது போல் தென்படுகிறது.

நாகரீகம் முதிர்ந்த இராஜாங்கத்தாரது இலக்ஷணம் அற்ப ஏழை மனிதர்களது உயிரை இலகுவாயெண்ணுவதென்பதாயிருந்தால், பஞ்சாப் கவர்ன்மெண்டார் அதைக் கைக்கொள்ளவில்லையென்றே சொல்வோம். ஆளுவோரை விட ஆளப்படுவோர் தொகை அதிகமாயிருப்பதால் அவ்விதம் செய்யப்பட்டதெனக் கூறினால் அது ஒப்புக்கொள்ளத் தகுந்ததாயில்லை. அவர்கள் உத்தரவைப்பற்றி, சில உத்தியோகஸ்தர்கள், உபேக்ஷையான பதில் கொடுப்பதானது, அற்பப் பட்டணத்தார்களது உயிரைப் பற்றிச் சற்று மதிப்பும், தந்திரமும், பொறுமையும் அவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் இவ்விதம் சுடவேண்டுவது அநாவசியமாய்ப் போயிருக்குமென்றே எடுத்துக் காட்டுகிறது. கூட்டம் கலைந்த பின்னர் காயப்படுத்தப்பட்டவர்களைப்பற்றி எவ்வித சிகிச்சையும் எடுத்துக்கொள்ளப்படாததைக் காணும்போதெல்லாம் மேல் சொல்லப்பட்ட எங்கள் அபிப்பிராயம் பலமடைகிறது. இப்பரிசீலனை விஷயத்தைத் திரும்பச் சொல்லப் புகும்போதும் நாங்கள் மேற்சொன்ன விஷயங்களை மறுபடி சொல்வது மிகையெனத் தென்பட்டாலும் நாங்கள் சொல்லவேண்டுவது

அவசியமாயிருக்கிறது. காயப்படுத்தப் பட்டவர்களையும் இறந்தவர்களையும் அவர்களது உறவினர்களிடம் ஒப்புவிக்க எவ்விதப் பிரயத்தனமும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. உறவினர்களும் அவர்களைப்பெற அநுமதிபெறப் படவில்லை.

இது ஒரு பெரிய மனவருத்தத்தையும், க்ஷாத்திரத்தையும் ஜனங்களுக்குள் ஏற்படுத்தி விட்டது. ஆகவே 11-ம் தேதியும் இந்த ஹார்தால் தொடர்ந்து அநுஷ்டிக்கப்பட்டது. தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அடிக்கடி சம்பாஷணைகள் நடந்து வந்தன. காயப்படுத்தப் பட்டவர்களையும் இறந்தவர்களையும் திருப்பிக் கொடுக்கும்படி தலைவர்கள் தங்களால் கூடியவரையில் மன்றாடிக் கெஞ்சிக் கேட்டனர். ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. ஜனங்களை எந்த விதத்திலும் சந்தோஷப்படுத்தாமல் அதிகாரிகள் ஹார்தாலைத் தடுக்கக் கேட்டனர். லாகூர் தலைவர்கள் விடுவிக்கப்பட்டதும் அவர்களை நாங்கள் பலமுறை கண்டிருக்கிறோம். அவர்கள் தங்கள் வாக்கு மூலங்களை எங்களுக்குக் கொடுத்துதவியிருக்கின்றனர். அதிகாரிகள் காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் கொடுக்கச் சம்மதிக்காது போனாலும் தலைவர்கள் தங்களாலான வரையில் ஹார்தாலைக் கலைக்க முயற்சித்தனர். ஆனால் அவர்கள் வெற்றிபெறவில்லை. 11-ம் தேதி பாதுஷாஹி மசூதியில் ஒரு பெருங் கூட்டம் கூட்டப்பட்டது. அதில் ஹார்தாலைக் கலைக்க பலயோசனைகள் செய்யப்பட்டன. அதிலிருந்து ஒன்றும் பலன் ஏற்படவில்லை. டிப்டி கமிஷனரோடு மறுபடியும் பேட்டிகண்டு பேசினர். அதில் தலைவர்கள் கூறிய தென்னவென்றால், இராணுவ வீரர்கள் ஒருவரும் மீட்டிங்கு கூட்டப்படும் இடத்துச் சமீபத்தில் வைக்கப்படாதே போனால் மீட்டிங்கைத் தாங்கள் நடத்து

வதாய்ச் சொன்னார்கள். இவ்வித வாக்குறுதி மிஸ்டர் பைஸன் அவர்களால் கொடுக்கப் பட்டதாய் பண்டிதர் ராம்பஜ்டட் சௌதாரி கூறுகிறார். மிஸ்டர் பைஸனோ அவ்விதம் தான் சொல்லவில்லையென்று மறுக்கிறார். எங்கள் கையிலுள்ள வாக்குமூலம் மிஸ்டர் சௌதாரி சொல்வதை உறுதிப்படுத்துகிறது. பாதுஷாஹி மசூதியில் ஒரு பெருங் கூட்டம் கூட்டப்பட்டது. உண்மையாகவே உணர்ச்சி மிக்க அதிகரித்தது. பண்டிதர் ராம்பஜ்டட் சௌதாரி அவர்களே தமது சக்திவாய்ந்த வாக்சாதுர்யத்தால் ஜனங்கள் உணரும் வண்ணம் சொல்லச் சக்தியைப் பெற்றார். ஒருவிதமான எண்ணமும் முடிவுறாமல் கூட்டம் கலைந்தது. ஜனங்கள் வீட்டுக்குச் சென்றபோது இராணுவ வீரர்கள் அவர்களை நோக்கிச் சுட்டனர். கூட்டம் மிக்கக் கட்டுக்கு மீறிப் போய்விட்ட படியால் சுடும்படி நேரிட்டதென்று இராணுவத் தாப்பில் கூறப்படுகின்றது. மிஸ்டர் பைஸன் அவர்களால், முன் யாம் சொன்னபடி, "இராணுவத்தார்களைக் கூட்டப்படுமிடத்துக் கருகில் வைப்பதில்லை" என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தால் இவ்விதம் வைத்தது நியாயத்துக்கு விரோதமானதாகும். மறுபடியும் உயிர்ச்சேதம் மேற்பட்டது. இது ஜனங்களது மனதை அதிகமாய்ப் புண்படுத்தித் தலைவர்களால் எவ்வித காரியமும் நிர்வகிக்க முடியாதபடிச் செய்துவிட்டது. பிறகும் தலைவர்கள் தங்களுக்குள் கலந்து யோஜித்துக் கொண்டனர். அதிகாரிகள் எவ்வித இராஜிக்கும் உடன்படாதவர்களாய் விட்டனர். அவர்கள் சில தலைவர்களோடு பேச மனங் கொண்டனர். சிலரோடு

பேச மனங் கொள்ளவில்லை. ஹார்தால் பின்னும் நடந்தது. கொள்ளையும் பட்டினியும் நடைபெறு மெனத் தோற்றியது. ஆகவே ஜனங்கள் தர்ம சத்திரங்கள் ஏற்படுத்த ஆரம்பித்தனர். இதற்கு அநேகர் திரவிய உதவி செய்தனர். இவ்விதம் ஏப்ரல்மீ 15-ம்வ கிட்டியது. 16-ம் தேதி பஞ்சாப் முக்கியத் தலைவரான லாலா ஹரிகிருஷ்ண லால், மிக்க ஜனாபிமானம்பெற்ற லாலா தூனிசந்த், பண்டிதர் ராம்பாஜிடட் சௌதாரி ஆகிய இவர்கள் டிப்டி கமிஷனரால் அழைக்கப்பட்டனர். இவர்கள் எதற்காக அழைக்கப்பட்டன ரென்றால் இவர்களைக் கைதுசெய்து தேசப்பிரஷ்டம் செய்வதற்கேயாகும். அவர்கள் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டதும் லாகூரில் இராணுவச்சட்டம் அமுலுக்குக்கொண்டுவரப்பட்டது.

ஏன் இவ்வாறு இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டதெனத் தலைவர்கள் கேட்டகாலத்து டிப்டிகமிஷனர் அவர்கள் ஹார்தாலைத் தடுப்பதற்காகவே இவ்விதம் செய்யப்பட்டதெனக் கூறினர். கடைகள் திறக்கப்படாதுபோனால் பட்டாளத்தார்களைக்கொண்டு கடைகளைத் திறக்கும்படி செய்வித்துச் சாமான்களை விற்றிருப்போம் என்று கர்னல் ஜான்ஸன் அவர்கள் தங்கள் வாக்குமூலத்தில் கூறியிருக்கின்றார். இந்த எச்சரிக்கை உண்மையாகவே கொடுக்கப்பட்டது. இராணுவத்தார்களது நிர்ப்பந்தங்களுக்குப் பயந்து லாகூர் வியாபாரிகள் த்ங்கள் கடைகளைத் திறந்துவிட்டனர். தங்கள் உணர்ச்சியைத் தெரிவிக்க ஹார்தால் கொண்டாடுதலைக் ஜனங்கள் கைக்கொண்டது

தப்போ சரியோ, அதை நாம் விவகரிப்பது அநாவசியம். தங்கள் கடைகளை ஜனங்கள் திறக்கமாட்டேனென்றதால் எந்தக் குற்றத்தை அவர்கள் செய்தவர்களாவார்கள் என்பது தெரியவில்லை. பலாத்காரத்தால் ஜனங்களைக் கடைகளைத் திறக்கும்படி செய்வித்தல் தப்பிதமாகும். சமாதானத்தை ஏற்படுத்த, பலாத்காரப் பிரயோகத்தைத் தகுந்தப் பிரயோகமாய் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டாலும், நாங்கள் சமாதான ஹார்தாலை உயர்ந்த ஆயுதமாய் உண்மையாகவே கருதவில்லை.

பஞ்சாப் மாகாணத்தின் இதர பாகங்களில் கலகம் பரவாவண்ணம் தடுப்பதற்கு, லாகூரில் இராணுவச் சட்டத்தை ஏற்படுத்துவது அவசியமென கர்னல் ஜான்ஸன் அவர்கள் லார்டுஹண்டர் முன் தன் அபிப்பிராயத்தைக் கூறியிருக்கின்றார். லாகூரில் இராணுவக் சட்டத்தை ஏற்படுத்தியது அநியாயமான காரியமென நாங்கள் நினைக்கிறோம். லாகூரில் எந்த மனிதர்க்கும் எந்த சொத்துக்கும் ஜனங்களால் சேதம் நேரவில்லை. பாதுஷாஹி மசூதியில் நடந்த ஒரு மீட்டிங்கில் ஜனங்கள் ஸி. ஐ. டி, (உளவு போலீஸார்) உத்தியோகஸ்தரைத் தாக்கியதை நாங்கள், ஜனங்கள் செய்த பலாத்காரப் பிரயோகத்தில் ஒன்றாய்ச் சேர்க்கவில்லை. அந்த உத்தியோகஸ்தரை ஜனங்கள் தாக்கியது மிக்க அக்கிரமமான காரியம்தான். ஆனால், இவ்விதமான ஒரு அற்பகாரியத்தால் இராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதென்றால், சாதாரணமாய் நடைபெறும் ஒவ்வொரு குற்றமான காரியத்

திற்கும் இராணுவச் சட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர வேண்டியது அவசியந்தான். லாகூர் தலைவர் எவராவது வெளிப்பிராந்திய எந்தக் கிளர்ச்சியோடாவது சம்பந்தப் பட்டதாக ஒரு ருஜுவும் பகிரங்கமாய்க் கொண்டுவரப்பட வில்லை. அமிர்தசரசுக்கும் லாகூருக்குமே எவ்வித சம்பந்த மும் கிடையாது. லாகூர் ஜனங்களது க்ஷேமம் யாவும் சட் டத்திலும் சமாதானத்திலும் தான் அடங்கியிருக்கிறது. லாகூரில் இராணுவ சம்பந்தமான மனிதர்கள் எவருமே யில்லை. இராணுவச் சட்டத்தை லாகூரில் கொண்டு வந்து விட்டது, லாகூரில் சாவதானத்தை ஏற்படுத்த வாவது லாகூரினின்றும் வெளியில் கலகம் பரவாவண் ணம் தடுப்பதற்காகவாவது ஏற்பட்டதாயில்லை. இராஜ பக்தி மிகுந்த லாகூர் ஜனங்கள்மீது இது அபகாரத்தைப் பிரயோகித்ததுபோலாகும். நாங்கள் இவ்விடத்தில், சக்ர வர்த்தியினிடம் வைக்கவேண்டிய பக்திக்கும், பிரிட்டிஷ் ஜனங்களிடம் வைக்கவேண்டிய பக்திக்கும், பெரிய உத்தி யோகத்துக்கு அவமானத்தை யுண்டுபண்ணும் மிகக் கொடியவனுடைய அவிவேக உதவிக்கும் வித்தியாசம் தெரிவிக்க விரும்புகிறோம்.

எங்கெங்கே கலகங்கள் நடந்தனவோ அவையெல்லாம் ஸர்-மைகேல் ஒடையாரது அரசாட்சியின் ஒழுங்கற்ற முறையைத் தெரிவிப்பதாகும். அவர் அரசாட்சியைக் கைக்கொண்டது முதல், படித்த வகுப்பாரைத் தன்னு லியன்றவழிகளெல்லாம் விலக்கியிருக்கிறார். சண்டைக் காகப் பணத்தையும், மனிதர்களையும் மட்டுக்கு மிஞ்சிய

வைராக்கியத்தால் சேகரித்து ஜனங்களது மனதைப் புண் படுத்திவிட்டார். இராஜ்யமே ஆபத்தான நிலைமையி லிருந்த காலத்து சண்டைக் குதவிசெய்ய, சன்மார்க்கமும், ஸமரஸமுமான வழிகளில் உதவிக்கான முயற்சி செய்வது மிகவும் யுக்தமானது என்று எங்களுக்குப் புலப்படுகிறது. ஆனால் ஸர்-மைகேல் ஒடையார் அவர்களோ ஒழுங்கான வழிகளைத் தாண்டித் தன் கீழ் அதிகாரிகளைச் சண்டைக்கு மனிதர்களையும் பணத்தையும்சேகரிக்க உத்தரவுகொடுத்து விட்டனர். அவர்கள் பிரிட்டிஷ் அரசாட்சிக்கே அவமா னத்தை ஏற்படுத்தக் கூடியதாய் ஆள் சேகரிக்கவும் ஆரம் பித்து விட்டனர்.

எங்தெந்த ஜில்லாக்களில் அதிகமாய் வற்புறுத்தப் பட்டு ஜனங்களும் பணமும் சேகரிக்கப்பட்டனவோ, அவ் விடங்களிலெல்லாம் போராட்டம் ஏற்படவில்லையாகை யால், அவ்விதம் பணமும் ஆளும் சேகரிக்கப்பட்டது இக்காலத்துக்கு ஒருகாரணமாக மாட்டாதெனக் கூறப் படுகிறது. இந்த வாக்குமூலம் பாதியளவு உண்மைதான். அப்படிக்கிருந்தும் உண்மையைப் பற்றியவரையில் கார ணம் வெளிப்படையாய்த் தானிருக்கிறது. தம்மைத் தாமே காத்துக்கொள்ளக்கூடிய சக்தியுள்ள நபர்கள் பலர் இவ்விதப் போராட்டத்தினின்றும் தப்பி விட்டார்கள். சக்தியற்ற நபர்கள் தம் மனவலி யிழக்க நேர்ந்தாலொழிய போராட்டத்தைக் கைக்கொண்ட மனிதர்களாயில்லை. டாறுனத் தியாகத்தை யொத்த மாறுன அதிருப்தியும், மனிதர்கள் இருதயத்தில் குடிகொண்டது. கவர்ன்மெண்

டாரும் ஜனங்களும் புத்திசாலித்தனமான மார்க்கத்தை அநுசரித்திருக்கலாம். மாருன போராட்டத்துக்கு மாருனத்தியாகமே மேலானதென நாங்கள் சொல்ல வேண்டுவதனுவசியம். மாருனத் தியாகத்திற்குப் பயிற்சி செய்யப்பட்ட ஜனங்களை மாருன போராட்டத்திற்கழைத்தது பஞ்சாப் கவர்ன்மெண்டேயாகும்.

ஆனுல் லாகூரோ கௌரவமாகத் தான் விரும்பிய வழியை விட்டு விலகாமலே யிருந்து விட்டது. ஜாலீன் வாலா தோட்டத்தில் நடைபெற்ற படுகொலைக் கிலக்கான மனிதர்களது உயிரைக் காட்டிலும், லாகூரில் கொல்லப் பட்டவர்களது உயிர் மிக்கப் பரிசுத்தமானது என்பது எங்கள் அபிப்பிராயம்.

இந்தக் கஷ்டங்களைக் குறித்து யாம் வெள்ளோட்டமாய்ச் சில விஷயங்களைக் கூறுவோம்:—

ஆப்பிரிக்காவில் மிக்கக் கியாதிபெற்று விளங்கிய கர்னல் ஜான்ஸன் அவர்களே, 1919ஞ ஏப்பிரல்மீ 5உ முதல் மேமீ 29உ வரையில் லாகூரில் நடைபெற்ற இராணுவச் சட்டத்திலுள்ளடங்கிய சமஸ்தானத் தலைவராய் விளங்கியவர். அவருடைய அரசாட்சியானது பணக்காரர்கள் ஏழையென்ற வித்தியாசமில்லாமல், அநேக காலேஜ்களில் படித்து வந்த அநேக ஆயிர மாணவர்கள் உள்பட யாவரும் மனத்தாங்கல் அடையும்படியாயிற்று. மிகவும்

உயர்ந்தவர்களும் இவ்வித கெட்ட அதிகாரத்துக்குட்பட வேண்டியதாயிற்று.

அவாது மாலை மணிச்சட்டத்தை (இரவு 8-மணிக்கு மேல் போகக் கூடாதென்ற சட்டத்தை) எடுத்துக்கொள்வோம். லாகூரைப்போன்ற பெரிய பட்டணத்தில் அதி சீக்கிரத்தில் படுக்கைக்குச் செல்லக்கூடிய சில விட ஜனங்கள்மட்டில் இக்கஷ்டத்தை யுணாாமற் போகலாம். ஆனால் லாகூரில் இது சகிக்கத்தகுந்ததாயில்லை. வைத்திய உதவியை விரும்பியவர்கள்கூட அவ்வித உதவியைப் பெறுமலிருக்க நேர்ந்தது. பண்டிதர் ஜகந்நாராயணர் அவர்களால் இவ்வகைக் கஷ்டம் எடுத்துக் காண்பிக்கப்பட்டபோது, இவ்விதக் கஷ்டங்களை யனுபவிக்காமல் நீங்கள் சண்டைபோட முடியாது என்று அவர் உடனே சொன்னார். பொருப்பு வாய்ந்த உத்தியோகத்தைப் பெற்ற கர்னல் ஜான்ஸன் போன்றவர்கள், எந்தவிதத்திலும் "யுத்தம் செய்தல்" என்று கூப்பிடப்பட முடியாத நிலைமையைச் சட்டத்திற் குரித்தான பதத்தொடர்களால் குறிப்பிட்டது அழகல்ல. லாகூரிலாவது, பஞ்சாபிலாவது நிலைபெற்றிருந்த நிலைமையைத் தெரிவிக்கவே இழிவுபடத் தகுக்த அப்பதத் தொடர் உபயோகிக்கப்பட்டதாகும். லார்டுஹண்டர் முன்பு கொண்டுவரப்பட்ட எல்லா ருஜுக்களையும் படித்திருக்கிறோம். அவைகளில் ஒன்றிலாவது "சக்கிரவர்த்திக்கு விரோதமாகச் சண்டை தொடுக்கப்பட்டது" என்பதைத் தெரிவிக்கக் கூடிய ஒரு விஷயமாவது வரவில்லை. எவ்விதத்தி

லும் ஜனங்கள் எவ்வித ஆயுதத்தையும் உபயோகிக்கவில்லை யென கர்னல் ஜான்ஸனே ஒத்துக்கொண் டிருக்கின்றார். ஆயுதங்களைத் தாராளமாய் உபயோகிக்கக்கூடிய நபர் களும் தாங்கள் மட்டில் அவ்வாயுதங்களை உபயோகிக்கா தது மன்றிப் பிறரையும் உபயோகிக்கும்படி செய்யவில்லை. இராணுவச்சட்ட நியாய சபையாரால் "யுத்தஞ்செய்தல்" (Waging war) என்பதற்கு எவ்வித அபிப்பிராயங்கொண்ட பொருள் கொடுக்கப்பட்ட தென்பதைக் கீழ் கூறுவோம். ஆனால் இங்கு, நியாயமற்ற அரசாட்சிக்கு விரோதமாய் ஒழுங்காயும் சாந்தமாயும் எதிர்த்ததைத் தவிர, வேறு குற் றத்தைச் செய்யாத ஜனங்கள் மீது, கடுமையான உத்தரவு களை, கேட்பார் பேச்சைக் கேட்டும் தன்னிஷ்டப்படியும் நடத்தியவரும், மிக்க நீடித்த காலம் உத்தியோகத்தை வகித்தவரும், மிக்க அநுபவம் வாய்ந்தவருமாகும் ஒரு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் எவ்வித ஆதாரமுமில்லாது பொருப்பற்ற வாக்குமூலங்களைக் கொடுத்ததைக் கவனிக்க வேண்டும். இந்த வாக்குமூலங்களை எந்த புத்தியுள்ள மனிதனும் ஒத்துக்கொள்ளத் தகுந்ததாயில்லை. நியாய மாகவோ, அநியாயமாகவோ, தெரிந்தோ தெரியாமலோ மாலைமணிச் சட்டத்தை மீறி நடந்த பல ஜனங்கள் மிக்கக் கேவலமான குற்றவாளிகள் நடத்தப்படுவதுபோல் பகி ரங்கமாகச் சவுக்கடி கொடுக்கப்பட்டனர்.

கர்னல் ஜான்ஸன் தன் சாட்சியத்தில் தான் செய்த விளம்பரத்திற்கு விசேஷமான பெருமை கொடுத்தார். அவ்விளம்பர மென்னவென்றால், அவரது துருப்பு சிப்பாய்கள்மேல் ஏதாவது வெடி குண்டு எறியப்பட்டால் அங்கிருந்து சுமார் 100 கெஜம் தூரத்திற்குள் சுற்றுவட்டையில் இருக்கும் எல்லா ஜனங்களும் அறிந்ததாக நிதானிக்கப்படு மென்றும், அவ்விடத்தில் வசிப்பவர்கள் ஒரு மணி நேரத்திற்குள் காலி பண்ணவேண்டு மென்றும், அங்கிருக்கும் கோவில்கள், மசூதிகள் தவிர மற்றெல்லா கட்டிடங்களையும் இடித்துவிடப்படுமென்றும் உத்திரவு செய்தார்.

இன்னும் அவர் செய்த வேலைகளைக் கவனிப்போம். 800 டாங்கா (tonga) வண்டிகளை பலாத்காரமாக கைவசப்படுத்திக் கொண்டார்; பின்னாலே 200 டாங்காக்களை மாத்திரம் வைத்துக்கொண்டு, 600 டாங்காக்களைத் திருப்பிக் கொடுத்து விட்டார். இந்த இருநூறு வண்டிகளையும் ராணுவச் சட்டம் (Martial law) நிகழ்ந்து வந்த காலம் வரை வைத்துக்கொண்டார். இந்தியர்களுக்கு ஸொந்தமான மோட்டார்கார்களை யெல்லாம் பிடுங்கிக் கொண்டார். ரயில் பிரயாணம் போகிறவர்களுக்கு வேண்டுமான தடை செய்தார். அதற்குக் காரணம், அந்தப் பட்டணத்தி லிருந்து வெளியே போகிறவர்கள் அங்கங்கே போய் கலகம் உண்டாக்குவார்களாம்! தர்ம சத்திரங்களை நிறுத்திவிட்டார். சாப்பாட்டு வஸ்துக்கள் இன்னின்ன விலைக்குத்தான் விற்கலாம் என்று கட்டளை யிட்டார். துப்பாக்கி லைசென்ஸ் வைத்துக்கொண் டிருந்தவர்களிடமிருந்து துப்பாக்கிகளைப் பிடுங்கிக்கொண்டார். அதன் மேல் அவர் மேலதிகாரிகளிட மிருந்து உண்மையான ராஜ விச்வாஸம் உள்ளவர்களுடைய துப்பாக்கிகளைத்

திருப்பிக் கொடுக்கும்படி உத்திரவு வந்தது. அவ்வூர் டிப்டி கமிஷனர் (Deputy Commissioner) பாட்ஷாஹி மசூதியை சாத்திவிட்ட உத்திரவை உறுதிப்படுத்தினர். ஒரு ஹிந்துவும் அந்த மசூதிக்குள் வரவிட மாட்டோம் என்று மசூதி தர்மகர்த்தாக்கள் ஜாமீன் கொடுத்ததின் பேரில் மசூதியைத் திறப்பதற்கு அனுமதி கொடுத்தார்.

ஸம்மரி கோர்ட்டுகளை (Summary Courts) எற்படுத்தினர். அந்த கோர்ட்டுமுன் வந்த கேஸ்களை தானே விசாரணை செய்தார். அப்படி 277 பேர்கள்மேல் கேஸ் நடந்தது. அதில் 201 பேர்கள் தண்டிக்கப் பட்டார்கள். தண்டனையோ 2 வருஷம் கடினகாவலும், 30 அடியும், 1000 ரூபாய் அபராதமும். 66 பேர்கள் 800 அடி வாங்கினர்கள். போதும் போதாததற்கு இவர்களை யெல்லாம் தெரு முச்சந்தியில் வைத்து அடித்தாராம். மேலதிகாரிகள் அப்படி அடிக்கக்கூடாதென்று உத்திரவு அனுப்பித்ததன்மேல்தான் இது ஒய்ந்தது. இவர்கள் அப்படி அடி தாங்குவார்களா என்று டாக்டர்களைவிட்டுப் பரிசோதனை செய்யவில்லை. ஹண்டர் துரையவர்கள் இப்படி யடிப்பதால் விபரீதம் விளையுமென்று தோன்றவில்லையா என்று கேட்டதற்கு, ஜான்ஸன் எனக்கு அப்படிப்படவில்லை என்றார். அவர் கருத்தில் இதுதான் ரொம்ப லகுவான தண்டனையாகப்பட்டதாம்; இப்படி ஜனங்களைப் பயமுறுத்தினதால், இன்னும் அதிகமான தண்டனையிலிருந்து அவர்களைக் காப்பாற்றினதாகவும் சொன்னர். ஜட்ஜ்ரான்கின் என்பவருக்கு அற்ப குற்றத்திற்காக ஜனங்களைக் கூட்டங் கூட்டமாகச் சேர்த்து தெருவிலடிப்பது அக்ரமம் என்று தோன்றிற்று.

அதற்கு ஜான்ஸன், “நீர் சொல்வது எனக்கு ஸரி என்று தோன்றவில்லை. இங்கேயோ அநேக ஜனங்கள்

இருக்கிறார்கள்; நம் உத்திரவுமீறி நடந்தால் தண்டனை விதிப்போம் என்று விளம்பரம் செய்திருக்கிறோம். இவர்கள் செய்யும் குற்றத்திற்கெல்லாம் ஜயிலில்போடுவதுதான் தண்டனையென்றால் இங்கிருக்கும் ஜனங்கள் அதற்குப் பயப்படமாட்டார்கள். ஜயிலில் நல்ல ஆகாரம் கிடைக்கிறது. அவர்களுக்கு வீட்டைக்காட்டிலும் ஜயில் ரொம்ப சௌக்கியம். ஆகையால் சீக்கிரத்தில் ஜயில் ரொம்பிப் போய்விடும். அந்த பயத்தினால்தான் அடிக்கச் சொன்னேன்" என்றார். இன்னொரு இடத்தில் இப்படி அடிப்பது ஆயிரம் துருப்பு சிப்பாய்கள் செய்கிறவேலைக்கு சமானமென்று சொன்னார்.

இந்தமாதிரியான கொடுந்தண்டனைகளை விதித்த ஜான்ஸன் அவர் வகித்த கௌரவமான வேலைக்கு லாய்க்கில்லை என்பது எங்கள் அபிப்பிராயம்.

இதுமட்டுமல்ல, சாட்சியில் சொன்னதிற்குமேல் எவ்வளவோ பேர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதெல்லாம் கணக்கிற்குவரவில்லை. லாகூரில் 170-சாட்சிகளுக்கு மேல் விசாரித்ததில், கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் பெரிய அதிகாரிகள் முதற்கொண்டு கீழ் அதிகாரிகள் வரையில் அநேகர் தாறுமாறாக அவர்களுக்குத் தோன்றினபடியெல்லாம் தங்குதடையில்லாமல் உத்திரவித்ததாக ஸ்டேட்மெண்டு வாங்கி யிருக்கிறோம்.

ஜான்ஸனுக்கு வக்கீல் குமாஸ்தாக்கள்மேல் ரொம்ப ஆத்ரம். ரயில் பிரயாணத்தைப் பற்றி செய்த உத்திரவில், "வக்கீல் குமாஸ்தாக்களும், அவர்கள் வேலைக்காரர்களும் ராஜத்துரோகமான காரியங்களில் தலைப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஆகையால் அவர்கள் உத்திரவன்னியில் (Lahore Civil Command) லாகூர் ஸிவில்

கம்மாண்டுக்கு வெளியே போகக்கூடாது; ஒவ்வொரு வக்கீலும் தன் கீழுள்ள குமாஸ்தாக்கள், காரியஸ்தர்கள், வேலைக்காரர்கள் ஆகிய இவர்களுடைய லிஸ்ட் கவர்ன் மெண்டுக்கு ஒப்புவிக்க வேண்டும்" என்று விதித்தார். என்ன ஆதாரத்தின்மேல் இப்படி உத்திரவு போட்டாய் என்று ஸ்ர்ஸேத்தல்வாட் கேட்டதற்கு சொல்லக் கேள்வி தான் என்றார்.

இவருக்கு வக்கீலைக்கண்டால் ஆகாது. பஞ்சாப்புக்கு வெளியூரிலிருந்து கூட ஒரு வக்கீலும் வராமல் தடுத்தார் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அப்படி வந் தால் ராஜத் துரோகமான விஷயங்களை ஜனங்களுக்கு போதித்து விடுவார்களாம்!

மனோஹர்லால் என்பவர் ரொம்ப படித்த வக்கீல். தகுந்த அந்தஸ்துள்ளவர். அவர் ராஜ விசுவாஸத்தைப் பற்றி ஸந்தேகமேயில்லை. எந்த காரியத்தையும் ஆராய்ந்து செய்பவர். அவர் எம். ஏ. பரீக்ஷை கொடுத்திருக்கிறார். பஞ்சாப் மாகாண யூனிவர்ஸிடி ஸிண்டிகேட்டில் ஒரு மெம்பர். ரொம்ப கௌரவமுள்ளவர். ஹைகோர்ட்டு வக்கீல் சங்கத்திற்குத் தலைவர். இன்னும் அநேக சங்கங் களில் முக்கிய மெம்பர். இவரையுங்கூட மார்ஷல் லா (Martial Law) அதிகாரிகள் உபத்திரவித்து விட்டார்கள். ட்ரைப்யூன் நியூஸ்பேபருக்கு அவர் ஒரு ட்ரஸ்டீ (Trustee) என்று அவரை ஏப்ரல் மீ 18-ந் தேதி காலை 7½ மணிக்கு அரெஸ்டு பண்ணினார்கள். அதற்கு வாரண்டும் கிடை யாது, என்ன குற்றம் பண்ணினாரென்று அவருக்குச் சொல்லவுமில்லை. அவர் பட்ட கஷ்டத்தை அவர் வாயால் சற்று கேட்போம்.

" என்வீட்டில் என்னை அரெஸ்டு பண்ணினபொழுது என் ஸம்ஸாரம் குழந்தைகளிடத்தில் சொல்லிக்கொள்ளுவ

தற்கு இரண்டு நிமிஷம்கூட இல்லை. இன்ன இடத்திற்குக் கொண்டுபோகப் போகிறார்களென்று எனக்குத் தெரியாது. மத்தியானம் இரண்டு மணிக்கு என்னை லாகூர் ஸெண்ட்ரல் ஜெயிலுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அங்கே கேட்டில் என்னிடமிருந்ததையெல்லாம் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் ரிஜிஸ்டரில் என் கட்டை விரலால் ஒத்தச் சொல்லி அதன்மேல் 14- நெ. வார்டில் ஒரு உள்ளே அடைத்து விட்டார்கள். இந்த வார்ட் பெரிய குற்றம் செய்த கைதிகளுக்கு ஏற்பட்டது. கொஞ்ச நேரம் கழித்து 2-துர்கந்தமான ஜெயில்கம்பிளிகளையும், 2-இரும்பு பாத்திரங்களையும் கொண்டுவந்து கொடுத்தார்கள். 3-மணி நேரத்திற்குப் பின் ஜெயிலின் மற்றொரு பாகத்திற்கு என்னைக்கொண்டுபோய் விட்டார்கள். அங்கே மாவறைக்க வேண்டும். இதைப்பற்றி விஸ்தரிக்க வேண்டியதில்லை. அங்கிருந்த அறைகள் ரொம்ப சிறியவை. பாத்திரங்களோ அழுக்கூறி நாற்றமாயிருந்தன. என்மேல் போட்டிருந்த உடுப்பைத் தவிர வேறு உடுப்பு கிடையாது. 21-ந்தேதி திங்கட்கிழமை ஸாயந்திரம்வரை எனக்கு வேறு உடுப்பு கொடுக்கவில்லை. என் பிள்ளை கொண்டுவந்த உடுப்பை போட்டுக்கொள்வதற்கு அனுமதி கொடுத்தார்கள்.

என் பெண்ஜாதி பிள்ளைகளுக்கு நான் எங்கே அடைபட்டிருக்கிறேனென்பது தெரியாது. நானும் அவர்களுக்கு ஒன்றும் எழுதக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். சனிக்கிழமை ஸாயந்திரம் ஜெயில் ஸூப்ரின்டெண்டெண்டு அனுமதியின் பேரில் ஒரு கார்டு எழுதினேன்.

21-ந்தேதி திங்கட்கிழமை என் சிநேகிதர் பாரிஸ்டர் கன்வர்தலீப்ஸிங் என்பவரும், என் பிள்ளையும் என்னைப் பார்க்க வந்தார்கள். ஆனால் யாராவது ஒருவர்தான்

பார்க்கலாமென்று சொல்லிவிட்டார்கள். அதன்மேல் என் சிநேகிதருடன் ஜெயில் சேவகன் முன்பு கொஞ்ச நிமிஷம் பேச உத்தரவளித்தார்கள். என் பிள்ளையோடு ஒரு நிமிஷம் பேசவேண்டுமென்று கேட்டதற்கு ஜெயில் துரை கோவன் முடியாது என்று சொல்லிவிட்டார்.

23-ந்தேதி புதன்கிழமை ஐரோப்பிய கைதிகள் இருக்கும் வார்டுக்கு என்னை மாற்றிவிட்டார்கள். அங்கே கொஞ்சம் சௌகரியம் இருந்தது.

மேமாதம் 16-ந்தேதி வரையில் அங்கே இருந்தேன். அன்று காலையில் என்னை விடுதலை செய்தார்கள். இதற்குள் மூன்றுதரம் தான் என் சிநேகிதர்கள், பந்துக்கள் முதலியவர்களிடம் பேச அனுமதி கிடைத்தது.

நான் ஜெயிலிலிருந்த காலம்வரை என்னுடைய குற்றம் இன்னதென்று எனக்குச் சொல்லவில்லை.'' அதுவரையில் தானேவென்றால் இந்த ஸ்டேட்மெண்டு வாங்கும் ஸமயம் வரையிலும் அவரைப்பிடித்து ஜயிலில் அடைத்ததற்குக் காரணம் அவருக்குத் தெரியாது.

மனோஹர்லாலை ஜயிலுக்குக் கூட்டிக்கொண்டு போனதற்குப்பின் அவர் வீட்டில் நடந்த காரியம் என்ன? போலீஸ்காரர்கள் வீட்டைச் சோதனை செய்தார்கள். அவர் ஸம்ஸாரம் ரொம்ப பலஹீனமானவள். அவளும் குழந்தைகளும் வேலைக்காரர்கள் இருக்கும் இடத்திற்குப் போக வேண்டியதாயிற்று. அவர்களுக்குப் படுக்கும் படுக்கைகூட சிநேகிதர்களிடமிருந்து இரவல்வாங்கவேண்டியதாயிற்று. ஒருநாள் பூராவாக சோதனை நடந்தது. 2, 3-விலையுயர்ந்த புஸ்தகங்களைப் போலீஸார்கள் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை.

ஏதாவது ஒரு குற்றம் செய்திருப்பாரோ என்று ஊகிக்கும் காலத்தில் அவர் சொன்னதைக் கவனிக்கவேண்டும். "என் வேலையுண்டு என் வீடுண்டு. வேறு விஷயங்களில் நான் பிரவேசிக்கிறதில்லை. இந்த ஊர் டிப்டி கமிஷனர் (Deputy Commissioner) அநேகம் கூட்டம் கூட்டினார். அதற்கு ஒன்றுக்கும் நானும் போகவில்லை, அவரும் என்னைக் கூப்பிடவில்லை. இன்னும் இதர மீட்டிங்குகளுக்கும் போகிறதும் இல்லை."

இப்பேர்க்கொத்த பெரியவரைத் தகுந்த விசாரணையில்லாமல் ஜெயிலில் அடைக்க உத்திரவு செய்த ஜான்ஸன் இந்தப் பெரிய வேலைக்கு அருகரல்ல. இந்தியர்களின் கவுரவத்தை அல்பமாக நினைத்த இந்த மூடர் மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியின் உத்தியோகஸ்தராக இருக்கவே கூடாது.

இக்கொடியவர் செய்த ஹிம்ஸை அநேகவிதம். யார் யார் இவருக்குக் கெடுதிசெய்வார்களென்று தோன்றினதோ அவரவர்கள் வீட்டில் இவர் விளம்பரத்தை ஓட்டிவிட உத்திரவு செய்தார். அந்த நோட்டீஸுகளுக்கு யாதொரு பழுதும் வாராதபடி, அழுக்குகூடபடாதபடி ஜாக்கிரதையா யிருக்கவேண்டியது வீட்டுக்காரன் பொறுப்பு: என்ன கருத்துடன் இந்த நோட்டீஸை ஓட்டச்சொன்னாய் என்று கேட்டதற்கு, "யாரெல்லாம் தங்கள் ராஜவிச்வாஸத்தை பஹிரங்கமாக வெளிக்காட்டவில்லையோ, அவர்கள் இப்பேர்க்கொத்த காரியம் செய்யவேண்டியது. ஸி. ஐ. டி. (C. I. D.) க் காரர்கள் இவர்கள் இன்னாரென்று தெரிந்தெடுக்க வேண்டியது. 24-மணிநேரமும் காத்துக்கொண்டிருந்தால்தானே நோட்டீஸுக்குப் பழுதுவராது என்று கேட்டதற்கு, ஜான்ஸன் 'ஆம், அப்படித்தான். அது ரொம்ப அவசியம்'" என்

ஞர். இப்பேர்க்கொத்த கொடிய உத்திரவை பிறப்பித்ததுமல்லாமல், அதற்காக ஒரு டிபார்ட்மெண்டையே மேன் பார்வைக்காக ஏற்படுத்தி விட்டார். என்ன கொடுமை!

பள்ளிக்கூடப் பையன்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் செய்த ஹிம்ஸையைச் சற்று விசாரிப்போம். ஸர் ஸேத்தல்வாட்டுக்கும் ஜான்ஸனுக்கும் நடந்த ஸம்பாஷணை பின்வருமாறு:—

கேள்வி.—நோட்டீஸ் ஒட்டப்பட்ட கட்டிடங்களில் ஸநாதன தர்மகாலேஜ் ஒன்று?

ஜான்ஸன் உத்தரம்.—ஆம்.

கேள்வி.—முதல் லிஸ்டில்போடாமல் பின்னுல் சேர்க்கப் பட்டிருக்கிறதோ?

உத்.—ஆம். லிஸ்ட் மறுபடியும் போடப்பட்டது.

கே.—இந்த காலேஜின் வெளிச்சுவற்றில் ஒட்டின நோட்டீஸ் யாராலோ கிழிக்கப்பட்டது?

உத்.—இந்த சமாசாரம் யாரோ ஒருவரால் தெரிவிக்கப் பட்டது. போலீஸ்காரரால் அல்ல.

கேள்.—அதற்காக அந்த காலேஜ் ஹாஸ்டல் பையன்களை எல்லாம் அரெஸ்டு பண்ணினதுண்டோ?

உத்.—காலேஜில் எந்த ஆண்பிள்ளை இருந்தாலும் அவர்களை யெல்லாம் அரெஸ்டு பண்ண உத்திரவு செய்தேன்.

கே.—எவ்வளவு பேர் அரெஸ்டு செய்யப்பட்டார்கள்?

உத்.—500.

கே.—இந்த நோட்டீஸை பழுதாக்கினதற்கு 500 பையன்களையா அரெஸ்டு பண்ணினுய்?

உத்.—பையன்களை மட்டுமல்ல, வாத்தியார்களையும் சேர்த்து அரெஸ்டு பண்ணினேன்.

கே.—அப்படி அரெஸ்டு பண்ணின எல்லாரையும் காலேஜி லிருந்து 3 மைலிலிருக்கும் கோட்டைக்கு நடந்து போக உத்திரவு செய்தாயா ?

உத்.—அப்படிதான்.

கே.—போகும்போது அவர்கள் தலையில் அவர்கள் படுக் கையைத் தூக்கிக்கொண்டு போகச் சொன்னாயா ?

உத்.—வேண்டுமானால், கொண்டுபோகச் சொன்னேன்.

கே.—கட்டாயப்படுத்த வில்லையா ?

உத்.—அப்படி உத்திரவு போடவில்லை. வேண்டுமானால் தான்.

கே.—கடுங்கோடையில் மத்தியான வெயிலில்தானே இப் படி போகச் சொன்னாய் ?

உத்.—ஆம்.

கே.—வெயில் ரொம்ப ஜாஸ்தி யில்லையா ?

உத்.—ஆம்.

கே.—இத்தனை பேரையும் அந்த வெயிலில் 3 மைல் போகச் சொன்னாய் ?

உத்.—அப்படித்தான்.

கே.—கோட்டையில் எவ்வளவு காலம் அடைத்திருந்தாய்?

உத்.—ஒருநாள். மன்னிக்கவேண்டும் ; இரண்டுநாள் முழு வதும்.

கே.—நோட்டீஸுக்குப் பழுது வாராதபடி ஜாக்கிரதையா யிருக்கிறோம் என்று அந்த காலேஜ் பிரின்ஸிபால் பொறுப்புக் கட்டிக் கொண்டதற்குப் பிறகுதான் அவர்களை விடுதலை செய்தாயோ ?

உத்.—ஆம். இனிமேல் அப்படி நடக்காது என்று உத்திர வாதம் வாங்கிக்கொண்டுதான் விட்டேன்.

கே.—அப்படி நீ செய்தது உனக்கே சரியென்று பட் டதா ?

உத்.—ரொம்ப ஸரி. இப்படி ஒருசமயம் அகப்படவேண்டுமே என்று பார்த்துக்கொண்டிருந்தேன்.

கே.—அப்படி யென்றால், மார்ஷல் லா (Martial Law) வினுடைய குரூரத்தையும், அதன் பராக்ரமத்தையும் காண்பிப்பதற்கு ஒரு ஸமயம் பார்த்துக் கொண்டிருந்தாயோ?

உத்.—அப்படித்தான்.

கே.—வெகு ஆவலாய் இருந்தாயோ?

உத்.—ஆம்.

கே.—உனக்கு நல்ல ஸமயம் கிடைத்தது?

உத்.—கிடைத்த ஸமயத்தை விடவில்லை.

கே.—விடாதபடிப் பிடித்துக் கொண்டு 500 காலேஜ் பையன்களையும் உபாத்தியாயர்களையும் கடும்வெயிலில் 3 மைல் தூரமுள்ள கோட்டைக்குப் போகச் சொன்னாயோ?

உத்.—ஆமாம்.

கே.—இன்னமும் உனக்கு அந்த எண்ணம்தானே?

உத்.—ஸந்தேகமென்ன? ஸமயம் வந்தால் நாளைக்கும் அப்படியே செய்வேன்.

இதில் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. இப்படி ஜான்ஸன் சொன்னபொழுது அவர் லாகூரை விட்டுப் போய் 6 மாதமாய்விட்டது. கோப வெறியில் சொன்னதல்ல. தீர்க்காலோசனை பண்ணி சொன்ன வார்த்தைகள். இவருடைய கொடுந்தன்மை இதிலிருந்தே தெரிய வருகிறது.

இவருடைய அற்புதமான நோட்டீஸை யாராவது கிழித்திருந்தால் இவர் செய்யவேண்டியதென்ன? தீர விசாரிக்க வேண்டியது. அப்படி யில்லாமல் உபாத்தியாயர்களையும் பையன்களையும் தண்டிக்கக் கூடாது.

ஆனால் ஜான்ஸன் ஸாதாரண மனிதரா? மகாப்ராக்ஞ ரல்லவா? அரை குறையாய் எந்த காரியத்தையும் செய்ய மாட்டார். மேல் என்ன செய்தார்? டி. ஏ. வி. காலேஜ், தயால்ஸிங் காலேஜ், மெடிகல் காலேஜ்—இந்த காலேஜி களிலுள்ள பையன்களை விஷமம் செய்யவொட்டாமல் தடுக்கவேண்டுமென்று தீர்மானித்து, அந்தந்த காலேஜ் பையன்கள் தங்கள் தங்கள் பேர் கூப்பிடும்பொழுது ஆஜ ராகவேண்டுமென்று உத்திரவு செய்தான்.—இப்படி நாளொன்றுக்கு 4-தரம் பேர் கூப்பிடப்படுமென்றும், காலமே 7-மணிமுதல், 11-மணி வரையிலும், மத்தியானம் 3-மணிமுதல், 7½-மணி வரையிலும், பேர் கூப்பிடப்படும் காலமென்றும், விதித்தான்.

கே.—மெடிகல் காலேஜ் பையன்கள் பேர் கூப்பிடும் பொழுது ஆஜீராயிருப்பதற்கு தினம் 17 மைல் நடக்க வேண்டி வந்ததல்லவா?

உத்.—16 மைல்தான். 17 இல்லை, நானே அளந்தேன்.

கே.—இப்படி 3 வாரம் தினந்தோறும் கடும் வெயிலில் நடக்கச் சொன்னாயா?

உத்.—மெடிகல் ஸர்டிபிகேட் வாங்கினவர்களைத் தவிர பாக்கி எல்லாரையும் அப்படி நடக்கச் சொன்னேன்.

கே.—இதுதான் ஸரியான வழியென்று தோன்றினதோ?

உத்.—எனக்கு அப்படித்தான் தோன்றிற்று.

கே.—இன்னமும் அதுதான் உன் அபிப்பிராயமோ?

உத்.—தடையில்லாமல்.

கே.—அப்படிச் செய்வது பையன்களுக்கு ரொம்ப கஷ்ட மென்று தோன்றவில்லையா?

உத்.—கஷ்டமேயில்லை.

கே.—நீ செய்த காரியத்தினால் நூற்றுக்கணக்கான அல் லது ஆயிரக் கணக்கான பள்ளிக்கூட மாணாக்கர்களை

பிரிட்டிஷ்கவர்ன்மெண்டார்களுக்கு துவேஷிகளாகச் செய்து விட்டாயென்று எப்பொழுதாவது நினைத்தாயா ?

உத்.—அப்படி தோன்றினதுண்டு. ஆனால் அந்த காலேஜிகளில் ரொம்ப ராஜத்துரோகம் இருந்ததாகவும் என் உத்திரவால் அது ஜாஸ்தியாகாதென்றும் தீர்மானித்தேன்.

கே.—உன் உத்திரவால் ராஜவிச்வாஸம் விருத்தியாயிற்று ?

உத்.—ராஜ விச்வாஸத்தை விருத்தி பண்ண வேண்டுமென்பது என் கருத்தல்ல, அவர்கள் வெளியே போய் கலகம் செய்யக் கூடாதென்பது தான் என் கருத்து.

கே.—உன் எண்ணம் நிறைவேறினதா ?

உத்.—நிறைவேறிற்று.

கே.—நீ செய்ததுதான் சரியான வழியென்று தோன்றினதோ ?

உத்.—எனக்குத் தோன்றின வழிகளில் அதுதான் ஸரி. தவிர இரண்டு வழிகள் உண்டு. பள்ளிக் கூடங்களைச் சாத்திவிடலாம், அல்லது பையன்கள்மேல் கேஸ் கொண்டுவரலாம்.

கே.—ஜனங்கள் ராஜவிச்வாசமா யிருப்பதற்கு அவர்களை ஹிம்ஸிப்பதுதான் ஸரியானவழியென்று உனக்குத் தோன்றுகிறதோ ?

உ. ராஜத்துரோகம் இருக்கிறதென்று ஸந்தேகத்திற்குக் கூட இடம் இருக்கக்கூடாதென்பது. அப்படியிருந்தால் கடுமையான தண்டனை வரும் என்று தெரிந்து கொள்வதற்கு இதுதான் ஸரியான வழி.

கே.—இப்படி ஹிம்ஸித்த பையன்களில் அநேகர் நல்லவர்களாயு மிருந்திருக்கலாமே.

உத்.—சிலபேர்களை விட்டுவிட்டேன்.

ஆங்கிலஸ்திரீகளை சில மாணுக்கர்கள் நிந்தித்தார்கள் என்று ஜான்ஸன் சொன்னார். ஆதாரம் ஒன்றும் அதற்குக் கிடையாது. ஆகிலும், பள்ளிக்கூட ப்ரின்ஸிபால்களை ஒரு மீட்டிங்கில்கூட்டி, எப்படி பையன்களைத் தண்டிக்கலாம் என்று கேட்டார். அவரவர்களுக்குத் தோன்றினதைச் சொன்னார்கள். அதெல்லாம் போதாது என்று சொல்லிவிட்டு, ஜாஸ்தியான தண்டனைகள் விதிக்காவிட்டால் பள்ளிக்கூடங்களைமூடி மாணுக்கர்கள் பரீக்ஷைக்குப் போகமுடியாதபடி செய்துவிடுவேனென்றும் பயமுறுத்தினார். இந்தவிதமாக ஆயிரத்துப் பதினொரு பையன்களை தண்டிக்கப்பட்டார்கள். அந்தகாலத்தில் பையன்களுக்கு ஸம்பவித்ததைப்பற்றி தயால்ஸிங் காலேஜ் இங்கிலீஷ் ப்ரொபெஸராயிருந்த ஸாநத்ராம் க்ரோவர். M.A.B.Sc. என்பவர் பின் வருமாறு எழுதுகிறார் :—

" இந்த ஊரில் ஹார்ட்டல் (Hartal) நடந்தபொழுது என் காலேஜ் பையன்கள் நடத்தையில் ஒருமாறுதலுமில்லை. எனக்குத் தெரிந்தவரையிலும் ஒரு பையனாவது தவறி நடக்கவில்லை.

இன்னும் அநேக கட்டிடங்களைப்போல் எங்கள் காலேஜ்சுவற்றிலும் மார்ஷல் லா (Martial Law) நோட்டீஸ் ஒட்டப்பட்டது. ஒட்டி பத்துநாளைக்குப்பின், ஒரு நாள் சாயங்காலம் 7-மணிக்கு எங்கள் காலேஜ் பிரின்ஸ்பாலுக்கு ஒரு நோட்டீஸ் வந்தது. அதன் கருத்து, நோட்டீஸுக்கு அடுத்து ராஜத்துரோகவிஷயமான மற்றொரு நோட்டீஸ் ஒட்டப்பட்டிருக்கிறதென்றும் அதை எழுதியவன் இன்னானென்று கண்டுபிடித்து மறுநாள் மத்தியானம் 12-மணிக்குள் சேனைத்தலைவனுக்கு (Commanding Officer) ரிபோர்ட்டு அனுப்பவேண்டுமென்பதுதான்.

பள்ளிக்கூடத்து அதிகாரிகளும், உபாத்தியாயர்களும் மாணுக்கர்களும் புது நோட்டீஸ் எழுதினவனைக் கண்டு பிடிக்க முயன்றும் முடியவில்லை. காலேஜ் சம்பந்தமான வர்கள் ஒருவரும் அதைச் செய்யவில்லை. அவ்விதமாக கவர்ன்மெண்டுக்குப்பதில் எழுதிக்கொண்டிருந்தபொழுது கர்னல் ஜான்ஸனும் சில ஸி. ஐ. டி. உத்தியோகஸ்தர் களும் காலேஜிக்கு வந்தார்கள். ட்ரஸ்டீக்களில் ஒருவரா யிருந்த ராஜாநரேந்திரநாத் என்பவர் கர்னலிடத்தில் போய் விஷயத்தை எடுத்துச் சொன்னர். அப்பொழுது அங்கிருந்த ஸி. ஐ. டி. ஆள் ஒருவன்தான் அந்த காலேஜ் சுவற்றில் ஒரு இடத்தில் மேறகூறிய நோடீஸை ஆணி யால் பதித்திருந்ததாகவும், அதைத் தான் பார்த்ததாக வும் சொன்னதுடன் அந்த இடத்தையும் சுட்டிக்காட்டி ஞன். நான் கர்னலுக்கு அது சுத்த கட்டுக்கதை என் றேன். சுவற்றில் ஆணி அறைந்திருநதால் அந்த அடை யாளம் இருக்குமே. அதை ஒன்றையும் காணுமே. அத ஞல் அது சுத்தப் பொய் என்றேன். நாங்கள் எழுதிய பதிலையும் காட்டினேம். அதற்கு ஆபீஸருக்கு அதை அனுப்புங்கள் என்று கர்னல் சொன்னர். அப்படியே பதிலும அனுப்பப்பட்டது. அன்றைய ஸாயந்திரமே பிரின்ஸிபால் மறுநாட்காலையில் 9 மணிக்கு கர்னலைப் பார்க் கும்படி இன்னெரு நோடீஸ் வந்தது. ப்ரின்ஸிபால் பார்த்து விட்டுத் திரும்பிவரும்பொழுது துருப்பு சிப்பாய் கள் ஈட்டிகளுடன் கூட வந்தார்கள் வந்தவுடன் "250 ரூபாய் அபராதம் கொடுக்கிருயா, அல்லது 3 மாசம் ஜெயிலுக்குப் போகிருயா" என்று கேட்டார்கள். அந்த க்ஷணமே அபராதத்தை கொடுத்து விட்டார்.

"சில நாட்களுக்குப்பின், அந்த ஊர் டிப்டி கமிஷன ரிடமிருந்து எங்கள் காலேஜ் ப்ரின்ஸிபாலுக்கும் (இதா

காலேஜிகளைப் போல்) கலகக்காரர்களைக் கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டுமென்று ஒரு உத்திரவு வந்தது. அந்த உத்திரவில் எந்தக் கலகம், எங்கே நடந்த கலகம், யார் செய்த கலகம் என்பது ஒன்றும் தெளிவாகச் சொல்லப் படவில்லை. சில பையன்களைத் தண்டிக்க வேண்டுமென்பது அதன் கருத்தா யிருக்கலாமென்று நாங்கள் ஊகித்தோம். இந்த அதிகாரியைத் திருப்தி செய்ய வேண்டுவதற்காகக் காலேஜ் கௌன்ஸில் கூடி சில பையன்களைப் பொறுக்கி, அவர்களுக்கு இன்ன தண்டனை விதிக்கவேண்டுமென்று தீர்மானித்து, அந்த லிஸ்டை ட்ரஸ்டீகளுக்குக் காண்பிவித்து, அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்ட பிறகு, அந்தலிஸ்டையும், ராஜா நரேந்திரநாத் என்பவர் கொடுத்த கடிதத்தையும் எடுத்துக் கொண்டு நேரில் டிப்டி கமிஷனரிடத்தில் போய்க் காண்பித்தேன்.

"இரண்டொரு நாட் கழித்து, தண்டனை போதாதென்றும், போதுமான பையன்களைத் தண்டிக்கவில்லையென்றும் எங்கள் லெட்டருக்குப் பதில் வந்தது. காலேஜ் கௌன்ஸில் மறுபடியும் கூடி, இன்னும் சில பையன்களை லிஸ்டில் சேர்த்துத் தண்டனைகளையும் அதிகப்படுத்தினோம். மறுநாள் டிப்டி கமிஷனுருக்கு ஸந்தோஷம் வந்து விதித்த தண்டனை ஸரிதானென்று எழுதினான். அத்துடன் அபராதம் போட்ட 250 ரூபாயையும் திருப்பினார்.

என்ன தண்டனை விதித்தார்கள்? சில பையன்களைப் பள்ளிக்கூடத்தி லிருந்து தள்ளிவிட்டார்கள். பரீக்ஷைக்குப் போகக்கூடாது என்று தடுத்து விட்டார்கள். இதெல்லாம் வாஸ்தவமாகப் பையன்கள் குற்றம் செய்தார்கள் என்று விசாரணை மூலமாகத் தீர்மானித்துச் செய்த காரியமோ? அப்படியல்ல.

இவர் பள்ளிக்கூடப் பிள்ளைகள் மேல் வைத்திருந்த துவேஷத்திற்கு இன்னொரு உதாரணம் கொடுப்போம்.

மேமீ 10உ லாகூர் ஸிவில் கம்மாண்டு ஸ்டாப் ஆபீஸரா யிருந்த (Staff Officer, Lahore Civil Command) மேஜர் பார்ன்ஸ் என்பவர், லாகூர், டி. ஏ. வி. காலேஜ் ப்ரின்ஸிபாலுக்கு பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினர். அதிலிருந்து ஜான்ஸனுடைய மனது என்னமா யிருந்த தென்று அறிந்துகொள்ளலாம்.

"7உ நீ எழுதிய கடிதம் கம்மாண்டிங் ஆபீஸர் (Officer Commanding Lahore Civil Area) பார்வையிட்டார். லாகூரிலுள்ள இதர காலேஜ் பையன்களைக் காட்டிலும் உன் காலேஜ் பையன்கள் ராஜத் துரோக காரியத்தில் நிரம்ப ஊக்கத்தோடு வேலை செய்தார்க ளென்று தெரியவருகிறதென்றும், அதனால் நீ உன் பையன்களுக்கு விதித்த தண்டனை போதாதென்றும் சொல்லுகிறர். ஆகையால், நீ தண்டனைகளை ஜாஸ்திப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் உன் பள்ளிக்கூடம் மூடப்படுவதுடன், அதில் வாசிக்கும் எல்லா பிள்ளைகளையும் பரீக்ஷைக்குப் போகாமல் தடுத்துவிடுவார்.

"என்னமாதிரியாக நீ தண்டனைகளை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்குச் சில உதாரணம் கொடுக்கிறேன். இந்த வூர் கவர்ன்மெண்டு காலேஜில் 6-பையன்களை பள்ளிக்கூடத்திலிருந்து தள்ளிவிட்டோம். வேறு ஒரு காலேஜிக்கும் அவர்கள் போய்ச் சேராதபடிக்குச் செய்துவிட்டோம். இன்னும் 6-பேர்கள் ஒரு பரீக்ஷைக்கும் போகக் கூடாதென்று விதித்தோம்.

இன்னும் 6-பேர்களை 1-வருஷம்மட்டும் பள்ளிக்கூடத்திற்கு வாராதபடி செய்தோம். 15-பேர்கள் வாங்கிக்

கொண்டிருந்த ஸ்காலர்ஷிப்பை. (Scholarship) நிறுத்தி விட்டோம். இன்னும் 112-பேர்களுக்கு சில்லரையான தண்டனைகளை விதித்தோம்.

"தயால்ஸிங் காலேஜில், மாணுக்கர்கள் விலக்கப்பட்டார்கள். 5-பேர்கள் 1-வருஷம்வரை வாசிக்க வரக்கூடாது. 14-பேரை கீழ்கிளாஸில் தள்ளிவிட்டோம். இன்னும் 14-பேரை 3-மாஸம் நீக்கிவிட்டோம். 2-பேருக்கு ஸ்காலர்ஷிப் போய்விட்டது. 224-பேருக்கு சில்லரை தண்டனை. 245-பேருக்கு நன்னடத்தை ஜாமீன் வாங்கினேம்.

"ஆதலால் நீயும் இதற்கு குறையாமல் உன் பையன்களைக் கண்டித்தால் உன்காலேஜ்நிற்கும். இல்லாவிட்டால் மூடப்படும்.

"பையன்கள் கொடுத்த அபராதத்தை நீ சொன்னபடி செலவழிக்க இஷ்டமில்லை."

மாணுக்கர்களுக்கு இவர் செய்த கொடுமையை இதனுடன் நிறுத்துவோம். சாதாரணமான ஜனங்களை இவர் எப்படி ஹிம்ஸித்தார்? இரண்டுபேருக்குமேல் வீதியில் சேர்ந்துபோனுல் அதுகுற்றம் என்றூர். ஏன்? அவ்வுத்தரவின் பூர்வபீடிகையில் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ஐரோப்பியர் வரும்பொழுது, இரண்டு சுதேசிகளுக்குமேல் அவருக்கு எதிரே சென்றுல் கலகம் வரும். அப்படி கலகம், சண்டை, சச்சரவு வாராதபடி தடுப்பதற்காக இந்த உத்திரவு ஏற்பட்டிருக்கிறது." ஸர்-சிமன்லால் யார் கலகம் பண்ணுவார்கள் என்று கேட்டதற்கு, ஜான்ஸன் சுதேசிகள் பண்ணமாட்டார்கள்; ஐரோப்பியர் பண்ணுவார் என்றூர்.

இரண்டு சுதேசிகளுக்குமேல் தெருவில் நடந்தால் ஐரோப்பியன் கலகம் பண்ணுவானும்! கலகம் வராம

விருப்பதற்கு இந்தியர்கள் கஷ்டப்படவேண்டுமாம்!! என்ன உத்திரவு! எவ்வளவு திவ்யம்! இந்தியர்களின் மோட்டார்க்கார்களை ஏன் பிடுங்கிக்கொண்டாய் என்று கேட்டதற்கு "அது ரொம்ப யுக்தமான காரியம். இல்லா மற்போனால் ஜனங்களுக்கு கலகம் பண்ணக் கூடாதென் கிற யுக்தி வராது" என்றார்.

ஜான்ஸன் படுத்திய பாட்டை இன்னும் கொஞ்சம் சொல்வோம்.

கேள்வி.—லாகூரில் ஒரு பாகத்தில் ஒரு கலியாணக் கூட் டத்தில் பத்து பேர்களுக்குமேல் போகிறார்களென்று நீ பிடித்து அடைத்ததுண்டா? மாப்பிள்ளையையும் அவனைச் சேர்ந்தவர்களையும் அரெஸ்டு பண்ணின துண்டா? புரோகிதரையும் இன்னும் சிலரையும் சவுக்கால் அடித்ததுண்டா?

ஜான்ஸன் உத்தரம்.—அப்படி செய்ததுண்டு. ஆனால் அது ஒன்றுதான் எனக்குத் தெரிந்தவரையும் தப்பிதம் என்று தோன்றிற்று. அதைக் கேட்டவுடன் அப ராதத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டேன். அப்ப டிச் செய்த மாஜிஸ்ட்ரேட்டை மாற்றி விட்டேன்.

இந்த ஒரே உதாரணத்தைக் கொண்டு அவன் எவ்வ ளவு உபத்திரவம் பண்ணி யிருப்பானென்று தெரிந்து கொள்ளலாம். இதுபோன்ற உத்திரவுகள் அங்கே அவசி யமு மல்ல. அங்குள்ள ஜனங்களுக்கு எவ்வளவு ஆத்திரம் ஜனித்திருக்கும் என்றும் தெரியலாம்.

இதுவரையில் கர்னல் ஜான்ஸன் தான் இவ்வளவு கொடுமைகளுக்கும் கர்த்தா என்று சொல்லி வந்தோம். இவருக்கு மேலதிகாரி இவரைக் காட்டிலும் கொடியவர். அவர் கருத்தை நிறைவேற்றினவர் இந்த ஜான்ஸன். அந்த அதிகாரி யார்? ஸர் மைக்கேல் ஓட்வையர். அவர்

எண்ணின தெல்லாம் ஜான்ஸன் முடித்து வைத்தார். மனோஹர் லாலை அரெஸ்டு பண்ணினதாகச் சொன்னோமே. ஏன் அப்படிச் செய்தார்? அவர் ட்ரைப்யூன் பத்திரிகைக்கு ஒரு ட்ரஸ்டீ. அப் பத்திரிகையையும் அதைச் சேர்ந்தவர்களையும் நசுக்கிவிட வேண்டியது ஏன்? ஸர் மைக்கேல் பண்ணின பிசகுகளை யெல்லாம் எடுத்துக் காட்டியது. காளிநாத் ராய் என்பவர் அதற்கு பத்திராதிபர். அவர் வெகு ஸமர்த்தர். ஓட்வைருக்கு பயப்பட மாட்டார். அவர் செய்ததெல்லாம், சொன்னதெல்லாம் ஸரி, ஸரி, என்கவேண்டும். அப்படி இவர் சொல்லவில்லை. ஏப்ரல் 7உ மூடத்தனமாகவும் இந்தியர்களைக் கண்டபடி ஏசியும் ஸர்–மைக்கேல் பேசினார். அவர் பேசினது ரொம்ப அசட்டுத் தனம் என்று காளிநாத்ராய் தன் பேப்பரில் எழுதினார். அது மைக்கேலுக்குப் பொறுக்க வில்லை. உடனே ராயை அரெஸ்டு செய்து ராஜத் துரோக விஷயத்தை எழுதினாரென்று தண்டித்து விட்டார்.

அவர் எழுதியதில் அப்படி பிசகாக ஒரு வார்த்தையு மில்லையென்று உறுதியாகச் சொல்லுகிறோம். ராயை உபத்திரவப் பண்ணினது ரொம்ப அநியாயம்.

பிரதாப் என்ற பத்திரிகையின் அதிபர் ரொம்ப சாந்தமும் பொறுமையும் பொருந்தியவர். பெரும்பாலும் மத விஷயமாக தன் பத்திரிகையில் பிரசுரம் செய்து வந்தார். அவரையும் உபத்திரவித்தார்கள். இந்த ஹிம்ஸையால் ட்ரைப்யூன், பஞ்சாபி, பிரதாப் என்ற பத்திரிகைகள் நின்று விட்டன.

இதுவரையிலும் பஹிரங்கமாக கொடுமை நடத்தி வந்ததைப்பற்றிச் சொன்னோம். இனிமேல் அவர்கள்

கோர்ட்டு, சட்டம் என்ற பேர் வைத்துக்கொண்டு பண்ணின பாதகங்களைச் சொல்லுவோம்.

மார்ஷல் லா கம்மிஷன்கள் (Martial Law Commissions) என்ற புது கோர்ட்டுகள் ஏற்படுத்தினார்கள். ராஜத்துரோகம் முதலிய பெரிய குற்றங்கள்தான் இந்த கோர்ட்டுகளில் விசாரிக்கப்படும். இது மூலமாக கூடுமான ஹிம்ஸையை அதிகாரிகள் செய்தார்கள்.

பஞ்சாப் மாகாணத்தில் பெரியவர்களும், ஸம்பத்து வாய்ந்தவர்களும், ஜனங்களின் நன்மைக்குப் பாடுபடுபவர்களும், ஆகிய 11 - தலைவர்களைப் பிடித்து சிறையில் அடைத்துவைத்தார்கள். அதில் 7-பேர்கள் பாரிஸ்டர்களும், வக்கீல்களும். அதில் முக்கியமானவர் லாலா ஹரிக்கிஷன்லால். ஏன் இவரை அடைத்தார்கள் ? அந்த மாகாணத்து லெப்டினெண்டு கவர்னராயிருந்த ஸர் - மைக்கேலுக்கு இவர்மேல் பொறாமை அதிகம். ஜனங்களுக்கு இவரிடத்தில் விச்வாஸம் அதிகம். அது அவருக்குப் பொறுக்கவில்லை. லாலாவை அநேக விதமாகக் கெடுத்துவிடப் பார்த்தார். பாங்கிங், வியாபாரம் முதலிய விஷயங்களிலும் அவருக்கு ஸாமர்த்தியம் அதிகம். அவர் கீழேயிருந்த கம்பெனியை யெல்லாம் அடியோடே நாசமாக்கிவிட யத்தனித்தார். திடீரென்று வீட்டிலிருந்து அவரை ஊருக்கப்புறம் போகும்படி உத்திரவு பண்ணினார். அவர்மேல் கேஸ் கொண்டுவந்து ஜெயிலில் அடைத்துவிட்டார்; கேஸுக்கு ஆதாரம் என்ன? வெறும் கட்டுக்கதை.

காங்கிரஸ் மகாஸபையாரால் சீமைக்குப்போய் நம் கஷ்டங்களை எடுத்துச் சொல்லுவதற்கு நியமிக்கப்பட்ட டெபுடேஷனில் (Deputation) இவர் ஒருவர். அவர் 1919 ஏப்பிரல் கடைசியில் போக ஏற்பாடு செய்து

கொண்டிருந்தார். அந்த ஸமயம் பார்த்து அவரை ஹிம்ஸை செய்ய கங்கணம் கட்டிக்கொண்டார். அந்த ஜல்லண்டரில் நடந்தேறிய பஞ்சாப்மாகாண கான்பரன் ஸுக்கு லாலா தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அவரும் இன்னும் மற்றத் தலைவர்களும் யுத்தம் செய்தார்களென்று குற்றம் சாட்டி மார்ஷல் லா கோர்ட்டுமூலமாகத் தண்டிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு விரோதமான சாட்சிகளின் வாக்குமூலத்தை வெகு ஜாக்கிரதையாக வாசித்தோம். அதில் தெரிந்த தென்னவென்றால், இவர்கள் ரௌலட் சட்டம் கூடாதென்று கூட்டம் கூடி பேசி, கடை கண்ணிகளை மூடின தினம் ஊக்கத்துடன் வேலை செய்தார்கள். ஏழைகளுக்கு வேண்டிய உணவு அளித்தார்கள். இவ்வளவுதான் இவர்கள் செய்த குற்றம். இவர்களை விசாரித்த ஜட்ஜிகளின் தீர்ப்பையும் வாசித்தோம்.

அந்தத் தீர்ப்பின் அநியாயத்தை என்னென்று சொல்லுவது! இப்படி லாலாவை உபத்திரவம் பண்ணினதில் அவருக்கு என்ன செலவு ஆயிற்று? 1200 ரூபாய் தந்திக்கும், 12,000 ரூபாய் விசாரணைக்கும், அப்பீலுக்கும் ஏராளமான ரூபாயும் செலவழிந்தது. இம்மட்டோ இவர் வர்த்தகம் முதலிய விஷயங்களிலும் 5 லக்ஷம் ரூபாய்க்கு மேல் நஷ்டம். ஆனால் லாலாவுக்கு இது ஒரு பொருட்டல்ல. அநேகர் இந்த கோர்ட்டுகள் மூலமாகப் பாப்பராய் விட்டார்கள். ஸந்தானம் என்பவர் லாகூரில் ஒரு பாரிஸ்டர், அவர் டிபென்ஸ் (Defence) கட்சிக்கு வக்கீலாயிருந்தார். அவர் ஏப்ரல் 10-ந் தேதி லாகூர் ஜனங்களை சுட்டபோது பார்த்தவர். அதைப்பற்றியும், மார்ஷல் லாவைப் பற்றியும், அந்த கோர்ட்டுகள் பண்ணின அநியாயத்தைப்பற்றியும் வெகு விஸ்தாரமாகவும் தெளிவாக

வும் எழுதியிருக்கிறார். அதிலிருந்து சில விஷயங்கள் எடுத்து பின் வருமாறு எழுதுகிறோம்.

"இந்தியர்கள் எவ்வளவு அந்தஸ்துள்ளவர்களாயிருந்தபோதிலும் மான பங்கம் பண்ணப்பட்டார்கள். அதைவிட மனதிற்கு வருத்தத்தைக் கொடுக்கக் கூடியது ஒன்று உண்டு. அது என்ன? ஜனங்களை நூற்றுக் கணக்காக அரெஸ்டு செய்து மார்ஷல் லா கோர்ட்டுகளுக்கு முன் விசாரணைக்குக் கொண்டுவந்த அக்ரமம். அவர்கள் ஸ்திதியைப் பார்த்தால் கண்ணீர் தாரைதாரையாக வரும். அவர்கள் கட்சியை எடுத்துப் பேசவல்ல வக்கீல் உதவி கிடையாது. கேஸ் விசாரணைக்கு வரும்பொழுது கவர்ன்மெண்டு 10, 15 பேருக்கு ஒரு வக்கீலை நியமிப்பார்கள். அந்த வக்கீலுக்கு தன் கட்சிகேஸ் இன்னதென்பது தெரியாது. கட்சிக்காரனோ ஜயிலில் அடைபட்டுப் போனான். அவனோடு 5 நிமிஷம்கூட பேச அனுமதி கொடுக்கவில்லை. கேஸ்களோ அபாரம். விசாரணையோ விசித்திரம். ஒரு தரத்திற்கு 30, 40 கைதிகளைக் கொண்டுவந்து நிறுத்துவார்கள். அவர்களுக்கு அதற்கு முன்னால் என்ன குற்றத்திற்காக ஜயிலில் அடைத்தார்களென்று தெரியாது. கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்தினவுடன் அவர்களுக்கு குற்ற பத்திரிகை வாசிப்பார்கள். உடனே என்ன என்ன சாட்சி கூப்பிட வேண்டுமென்று கேட்பார்கள். ஆனால் அந்த சாட்சிகள் வருவதற்கு கவர்ன்மெண்டு உத்தரவாதியல்ல என்பார்கள். ப்ராஸிகியூஷன் தரப்பு சாட்சி வாக்குமூலத்தைச் சொல்லமாட்டார்கள். அதின் காப்பியையும் எடுக்க விடமாட்டார்கள். வக்கீலுடன் பேசவேண்டிய அவகாசம் கொடுக்க மாட்டார்கள். ஒரே நாளில் கேஸை முடித்துவிடுவார்கள். தீர்ப்பு என்னமாயிருக்குமென்பது எல்லாருக்கும் தெளிவாய் விளங்கும்.

இதுதான் ஏழைகள் கதி. பணக்காரர்கள நல்ல சாதுரியமான வக்கீல்களை வைத்திருப்பார்களே. அவர்கள் பாடென்ன?

முதல் கஷ்டம், இன்னார் கேஸ் இன்ன தினம் எடுப்பார்களென்பது ஒருவருக்கும் தெரியாது. அப்படியிருந்தால் பெரிய வக்கீல்கள் வரமுடியாது.

இரண்டாவது கஷ்டம், வக்கீலைப் பிடித்தது அந்த நாள் கவர்ன்மெண்டுக்கு வக்கீலே ஆகாது. வக்கில்களோ ஸாதாரணமாக ராஜாங்க விஷயத்தில் தலைப்பட்டிருப்பார்கள். எங்கே இந்த கேஸ்களில் தங்களையும் மாட்டி விடுகிறார்களோ என்று பயந்துகொண்டேயிருந்தார்கள். அப்படிப் பட்டவர்கள் எப்படி டிபென்ஸ் (Defence) வக்கீலாக வருவார்கள்.

மூன்ருவது கஷ்டம், தப்பித் தவறி வக்கீலாக வந்தாலும் அவன் தலை இரவல். அப்படி வந்தவர்கள் கலகக்காரர்கள், ராஜத்வேஷிகள் என்று கவர்ன்மெண்டின் அபிப்பிராயம் என்று ஜனங்களின் எண்ணம். (அப்போர்க்கொத்த ஸமயத்தில் வக்கிலாய்ப் போவது புலி வாயில் தலையை விடுவதுபோல் இருந்தது.) அதற்கு ஒரு உதாரணம்: கனம் பொருந்திய மியான் மகம்மது ஷாபி என்பவர் ஒரு வக்கீலா யிருந்தார். அவர் இப்பொழுது வைஸிராய் நிர்வாகச் சபையில் ஒரு மெம்பர். ராம் ப்ரஸாத் ஸேட்டின் ஒரு பந்து இவரை வக்கீலாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஷாபியும் ஸம்மதித்தார்.

சிலநாள் கழித்து, ஷாபி முடியாது என்று கட்டைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

அதற்கு அவர் சொல்லிய காரணம்—கவர்ன்மெண்டுக்கு அவர் வக்கிலா யிருப்பது பிடிக்கவில்லை யென்பது

தான். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் எந்த வக்கீல் வருவார்?

என்னுடைய சொந்த அனுபவத்தில் கவர்ன்மெண்டுக்குப் பிரியமோ, அப்பிரியமோ, அந்தக் காலத்து போலீஸுக்கு அது பிடிக்கவில்லை. 1919 மே வரையில் என்னை ஒருவரும் தொந்தரவிக்கவில்லை. அந்த மாஸம் 14உ லாலா ஹரிகிஷன் லாலுக்கும் மற்றவர்களுக்கும் நான் வக்கீலாக நியமிக்கப் பட்டேன். அவர்கள் கேஸை மற்றொரு கோர்ட்டுக்கு மாற்றவேண்டும் என்ற மனுவை எடுத்துக்கொண்டு ஸிம்லாவுக்குப் போய் அனுமதி கேட்டேன். மனுவைத் தள்ளி விட்டார்கள். அது முதற்கொண்டு என்னை போலீஸார்கள் உபத்திரவம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இந்த காரணங்களால் ஸரியான வக்கீல் வைக்க முடியவில்லை. கவர்ன்மெண்டு பட்சம் ஜயத்துக்கு ஸந்தேகம் வேண்டுமா? இந்த கோர்ட்டுகளின் முன்னால் குற்றஞ் சாட்டப் பட்டவர்களுக்கு தண்டனையைத் தவிர விடுதலை யென்பது அபூர்வம்.

போதும் போதாதற்கு, வெளியூரிலிருந்து ஒரு வக்கீலும் வரக் கூடாதென்று உத்தரவு செய்தார்கள். அதின் உட்கருத்து அங்கு நடக்கும் அனியாயமும் அக்ரமும் வெளியே ஒருவருக்கும் தெரியக் கூடாதென்பதுதான்.

இம்மாதிரி குற்றம் சாட்டப் பட்டவர்களுக்குத் தகுந்த வக்கீல்களை வைக்க முடியாதபடி அநேக இடையூறு செய்ததுமன்றி, மார்ஷல் லா கோர்ட்டுகள், வேறு எந்தவிதமான கோர்ட்டுகளும் செய்யாத, எந்த கோர்ட்டுகளும் செய்யத் துணியாத, காரியங்களைச் செய்தன.

எங்கெங்கே ஜனங்கள் பந்தோபஸ்துக்காக புது கோர்ட்டுகள் அவசியமோ அங்கெல்லாம் ஸம்மரி ஜனரல்

கோர்ட்டு மார்ஷல் (General Summary Court Martial) வைக்க வைஸிராய் (Viceroy) அனுமதி கொடுத்தார். ஆனல் எல்லாவித கேஸுக்களும், எல்லாவித விசாரணையும் இந்த கோர்ட்டின் முன்னுல் கொண்டுவந்து விட்டார்கள். இந்த கோர்ட்டுகள் எதற்காக நிர்மிப்பது வழக்கம்? யுத்த களத்தில் சேனைகளை யடக்குவதற்கு. அச் சேனைகள் தாறுமாருக சேனுபதியின் உத்திரவில்லாமல் ஏதாவது செய்தால் அதைத் தண்டிக்க ஏற்படும் கோர்ட்டுகள். இப்பேர்க்கொத்த கோர்ட்டுகளைக் கொண்டா ஸாமான்ய மான கேஸுக்களை விசாரிக்கச் செய்வது?

இந்த கோர்ட்டுகளுக்கு முன் பேசவந்த வக்கீல்களை ரொம்ப அவமரியாதையாக நடத்தினுர்கள். ஏதோ தாங் கள் தாக்ஷண்யத்திற்காக அந்த வக்கீல்களைக் கோர்ட்டுக் குள் விட்டால்போல் எண்ணம்.

கேஸ் நடத்தும் பொழுது வக்கீல் ஏதாவது கேட் டால் துடுக்காகவும், அகங்கதையுடனும் இல்லையென்று மறுதளிக்கிறது.

வக்கீல் தான் கேஸ் நடத்துவதற்கு வேண்டிய சிற்சில குறிப்புகள் தவிர வேறு எந்தவிதமாகவாகவும் கோர்ட் டில் நடப்பதை எடுத்துப் பிரசுரிக்க விடுவதில்லை.

பிராஸிகியூஷன் தரப்பு சாட்சியின் வாக்குமூலத்தை முழுவதும் எடுத்துக்கொள்வார்கள். பின்னர் அந்த சாட்சிகளையே கிராஸ் பண்ணினுல் குற்றவாளிகளுக்கு அதிலிருந்து ஏதாவது அனுகூலம் இருக்கும்போல் இருந் தால் அதை யெடுக்க மாட்டார்கள். வக்கீல் அதையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டாலும் எடுப்ப தில்லை. இது ஒரு அனியாயம். இதற்கு ஒரு உதா ரணம். லாகூர் தலைவர்கள் கேஸில் பிராஸிகியூஷன் தரப் பில் ஒரு முக்கியமான சாட்சி விசாரிக்கப்பட்டார். அவர்

மாதப் ஆலிஷா என்ெருரு போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் அவர் 29-ம் சாட்சி. அரைமணி சாவகாசம் அவரை எதிர் கட்சி வக்கீல் கிராஸ்பண்ணினார். அவர் ஸ்டேட்டு மெண்டு கொடுத்ததெல்லாம் பொய்யாய்ப் போய்விட்டது. அவருடைய முக்கிய வாக்கு மூலத்தை மட்டும் எடுத்துக்கொண்டார்கள். அவர்கிராஸில் உடைந்ததை இரண்டொரு வரியில் அடக்கி விட்டார்கள். ஆயினும் தீர்ப்பு சொல்லுவதற்கு இது ஒரு பெரிய ஆதாரமாம்!!

இன்னொரு அனியாயம். கிராஸ் பண்ணுவதற்கு வேண்டிய அனுகூலங்கள் கொடுக்கவில்லை. வக்கீல்கள் இவ்வளவு கேள்விகள்தான் கேட்கலாம் என்றும், இவ்வளவு மணிக்குள்தான் கேட்கவேண்டும் என்றும் நிபந்தனைகள் ஏற்படுத்தினார்கள். பிராஸிகியூஷன் தரப்பு சாட்சிகளை இடைஞ்சல் கேள்விகளைக் கேட்டால் பதில் சொல்லாதேயுங்கள் என்ருர்கள். வக்கீல்களிடத்தில் துடுக்காய்ப் பேசவிட்டார்கள். ஒரு சாட்சி கிராஸில் அகப்பட்டுக்கொண்டால், "ஞாபகமில்லையென்று சொல்" என்பார்கள். அதற்குமேல் கேள்வி கேட்கவிடமாட்டார்கள். ஐரோப்பிய சாட்சிகளை அவர்கள் வாயாலே தாங்கள் சொன்னதெல்லாம் பிசகு என்று சொல்லும்படியான கேள்விகள் கேட்கவிடமாட்டார்கள். அப்படி கேட்டால் அது பெருங்குற்றம்.

மேற்சொன்னது முழுவதும் நானே நேரில் பார்த்தது.

இன்னொரு அனியாயம். கடைசியில் கேஸை விரித்துப் பேசவிடுகிறதில்லை. இவ்வளவு நிமிஷத்திற்குள் பேசவேண்டுமென்பார்கள். நாங்கள் ஏதாவது ஆக்ஷேபனை பண்ணினால் அதையெல்லாம் தள்ளிவிடுவார்கள்.

இந்த கோர்ட்டுகள் நியாயஸ்தலங்களா? ஜட்ஜிகள் தீர்ப்பு நியாயமான தீர்ப்பா? அங்கு அனியாயமே குடி கொண்டது. அவர்கள் விசாரணையும் அனியாயம். அவர்கள் தீர்ப்பும் அனியாயம்.

இவ்வளவு தொந்திரவுக்குட்பட்டவர்கள் தலைவர்கள் மட்டுமல்ல. அநேகம் பேர்களை மார்ஷல் கோர்ட்டுகள் முன்பும், இன்னும் அநேகரை ஸம்மரி கோர்ட்டுகள் முன்பும் விசாரித்தார்கள். மார்ஷல் லா கமிஷன்கள் முன்பு 64-பேரை விசாரித்ததாகவும், அதில் 8-பேரை விடுதலை செய்ததாகவும், ஸம்மரி கோர்ட்டுகள் முன்பு 350-பேரை விசாரித்ததாகவும், அதில் 102-பேரை விடுதலை செய்ததாகவும், 40-பேரை அகாரணமாக அரெஸ்டு பண்ணி சுமார் ஒருமாசம் வரை ஜயிலில் வைத்திருந்து பின்பு விசாரணையில்லாமலே விடுதலை செய்ததாகவும் ஸ்டேட்மெண்டு வாங்கியிருக்கிறோம்.

இவ்வளவு அனியாயமும் லாகூரில் நடந்தது. அவ்வூரிலுள்ளவர்கள் ஒரு பிசகும் செய்யவில்லை. அதிகாரிகளுக்கு எவ்வளவு உதவி செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்தார்கள். இப்படி ஜனங்களும் தலைவர்களும் மனுஷயத்தனத்தில் எது கூடுமோ அவ்வளவும் செய்தும், அந்த ஊரை மார்ஷல் லாவுக்குள்ளாக்கி, அவ்வூருக்கு ஒரு ஈவிரக்கமில்லாத கொடியப் பாதகனை அதிகாரியுமாக்கி ஜனங்களுக்கு கணக்கில்லாத ஹிம்ஸையையும் செய்தார்கள். அந்த ஊர் அப்பொழுது பட்ட பாட்டை எழுதி முடியாது.

காசூர்.

காசூர் என்பது லாகூர் ஜில்லாவில் ஒரு முக்யமான பட்டணம். அது லாகூரிலிருந்து 40—மைல் தூரத்திலுள்ளது. அது ஒரு பிரதான ரயில்வே ஸ்டேஷன். அதில்

வியாபாரம் அதிகம். 24,000 ஜனத்தொகை உள்ளது. ஏப்ரல் 6-ந்தேதியில் காசூரில் ஹார்ட்டல் (Hartal) நடக்கவில்லை. 10-ந் தேதி வரை ஒரு விசேஷமுமில்லை. 11-ந் தேதி காலை மகாத்மா காந்தியை அரெஸ்டு பண்ணினதாகவும், டாக்டர் ஸத்தியபால், டாக்டர் கிச்லியூ என்பவர்களை திடீரென்று பலாத்காரமாக வேறு ஊருக்கு அனுப்பிவித்து விட்டதாகவும் அவ்வூருக்கு சமாசாரம் வந்தது.

அன்றையதினம் கடைகண்ணிகளை சாத்திவிட்டார்கள். அன்று சாயங்காலம் ஒரு மகா ஜனக்கூட்டம் நடந்தது. அந்த மீட்டிங்கில் பேசினவர்களிடத்தில் ஒரு குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை. ரௌலட் ஆக்ட்டினால் வரும் தீமைகளை எடுத்துச் சொன்னார்களே ஒழிய வேறு குற்றமுள்ள பேச்சுக்கள் பேசவில்லை. ஏப்ரல் 12-ந் தேதி முழுவதும் ஹார்ட்டல் (Hartal) நடந்தது. ஜனங்களுக்கு முதல்நாளிருந்த தன்மை மறுநாள் மாறியது. ஹண்டர் கமிட்டி முன்னால் (Hunter Committee) ஒரு சாட்சி சொன்னது நம்பக் கூடியது. அது என்ன? அம்ருத ஸாஸிலிருந்து சிலர் அவ்வூருக்கு வந்ததாகவும், அம்ருதசாஸில் நடந்ததைப்பற்றி ஜனங்களுக்கு ஒன்றுக்குப் பத்தாய் காட்டிச் சொன்னதாகவும், அதனால் அங்குள்ள சிலருக்கு கோபாவேசம் ஜனித்ததாகவும் மேற்கூறிய சாட்சி சொல்லியது. அதன் மேல் சில வீண்போது போக்குபவர்களும் மற்றும் சிலரும் கூடி அவ்வூர் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். அதைக் கொளுத்த முயன்றார்கள். இந்த மாதிரி சிலர் குற்றம் செய்யப் போகிறார்களென்பது கேள்விப்பட்ட அவ்வூர் தலைவர்கள் ஸ்டேஷனுக்கு ஓடி நெருப்பை அணைத்து விட்டார்கள். தங்கள் எண்ணம் நிறைவேறாமற்போகவே, விஷமத்துக்கென்றே வந்திருந்த சில துஷ்டர்கள் கைகாட்டி மாத்திற்கருகே சென்றார்கள்.

அப்பொழுது தான் ஒரு ரயில் அங்குவந்து தங்கினது. கலகக்காரர்கள் ஒரு வண்டியிலிருந்த கிரோஸின் எண்ணெய் முதலியவைகளை கீழே கொட்டினார்கள். சில ஐரோப்பியர்களைக் கண்டதும் அவர்களை எதிர்த்தார்கள். குலாம் மொஹிதீன் என்பவர் அந்த ஊரில் பெரிய வக்கீல், அவரும் அவர் சிநேகிதர்களும் ஸமயத்தில் வந்து அந்த துஷ்டர்களை ஓட்டிவிட்டார்கள். வண்டியிலிருந்த ஷேர்போர்ன் துரையும் அவர் ஸம்ஸாரமும் குழந்தைகளும் பத்திரமாக பாதுகாக்கப் பட்டார்கள். ரயிலும் ஸ்டேஷனுக்கு வந்தது. அதில் இரண்டு ஆங்கில சிப்பாய்கள் இருந்தார்கள். ஸ்டேஷனில் கலகக்காரர்கள் கூட்டம் ஜாஸ்தியாய் விட்டது. இரண்டு சிப்பாய்களும் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள யத்தனித்தார்கள். ரயிலை விட்டிறங்கி ஜனங்களைச் சுட்டார்கள். அதை அக்கூட்டம் அலட்சியம் செய்தது. ஆத்திரம் அதிகமாயிற்று. அந்த இரண்டு சிப்பாய்களையும் பிடித்துத் தடியாலடித்துக் கொன்றார்கள். இது ரொம்ப மூடத்தனம். கொடுமையான காரியம். எல்லாராலும் இகழத்தக்கது. அமிர்தசரஸிலாவது ஜனங்களுக்கு கோபம்வரக் காரணம் இருந்தது. டாக்டர் ஸத்தியபாலையும் டாக்டர் கிச்லியூவையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். பாலத்தினருகே ஜனங்கள்மேல் சுட்டார்கள். காசூரிலோ அப்படி யொன்றுமில்லை. அனாவசியமாக இந்த கலகம் செய்தார்கள். இப்பேர்க்கொத்த செயல்களை நாங்கள் மனப்பூர்த்தியாக கண்டிருக்கிறோம். கலகக்காரர்கள் சிப்பாய்களைக் கொன்ற பிறகு ரெவின்யூகச்சேரிக்குப் போய் அதை எரித்துவிட்டார்கள். கடைசியாக போலீஸ்காரர்கள்வந்து சுட்டவுடன் போய்விட்டார்கள்.

இதில் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. எங்

கெங்கெல்லாம் கலகம் நடந்ததோ, அங்கெல்லாம் கலகம் ஆரம்பித்து கொஞ்சநேரத்திற்குள் முடிந்து விட்டது. காசூரிலும் அப்படியே கொஞ்சநேரத்திற்குள் கலகம் ஓய்ந்துவிட்டது. ராஜத்துரோகமான துர்யோஜனையால் உண்டான காரியம் அல்ல என்பது தெளிவாய் விளங்குகிறது. வெகு ஸுலபமாய் அதிகாரிகள் வேண்டி அரெஸ்டு செய்தார்கள். மிஸ்டர் மார்ஸ்டன் என்பவர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். மார்ஷல் லாவை எப்ரல் 16உ கவர்ன்மெண்டார் விளம்பரம் செய்தார்கள். அந்த சட்டத்தை சித்திக்குக் கொண்டுவர கர்னல் மாக்ரேயும், காப்டன்டோவ்டனும் நியமிக்கப்பட்டார்கள். இந்த இரண்டு உத்தியோகஸ்தர்கள் படுத்தியபாட்டை ஹண்டர் கமிட்டி (Hunter Committee) முன்பாக கொடுத்த சாக்ஷியத்திலிருந்து பின்வருமாறு சுருக்கிச் சொல்வோம்.

ஏப்ரல் 16உ அரெஸ்டு செய்ய ஆரம்பித்தார்கள். முதலில் அரெஸ்டு செய்யப்பட்டவர் பாபா தனபதிராய். அவருக்கு வயது 65. வெகுநாள் வக்கீல். ரொம்ப மரியாதை பெற்றவர். அவரை லாகூர் ஸெண்ட்ரல் ஜயிலுக்குக் கொண்டுபோனார்கள். 46-நாள் அங்கே வைத்திருந்தார்கள். ஜூன் 1உ அவரை விட்டுவிட்டார்கள். இதுவரையிலும் அவரை ஏன் அரெஸ்டு பண்ணினார்களென்று அவருக்குச் சொல்லவில்லை. மேற்கூறிய 16உயிலே 21-பேரை அரெஸ்டுபண்ணினார்கள்; மறுநாள் இன்னும் 3-பேரையும், 18உ4-பேரையும், 19உ-யில் 40-பேரையும் பிடித்து அடைத்தார்கள். ஆகக்கூடிய மொத்தம் 172-பேர்கள் அடைபட்டார்கள். விசாரணைக்கு வராமலே 97-பேர்களை விட்டுவிட்டார்கள். 75-பேர்கள் விசாரிக்கப்பட்டார்கள். 51 - பேர் தண்டிக்கப்பட்டார்கள். அரெஸ்டு பண்ணப் பட்டவர்களில் மௌல்வி குலாம்

மொஹிதீனையும் மௌல்வி அப்துல் காதரையும் சேர்த்து விட்டார்கள். இவர்கள் இருவரும் ஷேர்போர்ன் துரையையும் அவர் குடும்பத்தையும் காப்பாற்றினார்கள் என்றும் இன்னும் கலகக்காரர்களை வேறு கெடுதிசெய்யாத வண்ணம் தடுத்தார்களென்றும் முன்னமே சொன்னோம். அவர்களையுங் கூடவிடவில்லை. அதிகாரிகள் இவர்கள் வீட்டிலும் இன்னும் அநேகர்வீட்டிலும் பரிசோதனை போட்டார்கள். அதற்கு ஒரு காரணமுமில்லை. மேமீ 1உ காசூரிலுள்ள ஆண் பெண் குழந்தைகள் அடங்கலாக எல்லாரையும் ரயில்வே ஸ்டேஷனுக்கு வர உத்திரவு போட்டார்கள். ஸ்டேஷனுக்கு வநதபின் யாராவது பாக்கி ஊரில் இருக்கிறார்களாவென்று தேடி பார்க்கச் சொன்னார்கள். வந்த ஜனங்களை வெயிலில் மத்தியானம் 2 மணி வரை ஆகாரமும் ஜலமுமில்லாமல் தலையில் ஒன்றையும் போட்டு மூடிக்கொள்ள விடாமல் உட்கார்த்தி வைத்திருந்தார்கள். இப்படி உபத்திரவித்ததினால் அதிகாரிகளுக்கு ஒரு பிரயோஜனமு மில்லை. ஆனால் ஜனங்களை ஹிம்ஸிக்க வேண்டும், பயமுறுத்த வேண்டும், அவமானம் பண்ணவேண்டும், என்ற எண்ணமே ஒழிய மற்றொரு கருத்துமில்லை. அனுதாரவான ஸ்திரீகள் என்ன பாடு பட்டார்கள் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

காசூரில் நடந்த விசாரணையைப் பற்றி கொஞ்சம் எழுதுவோம்.

40 பேருக்கு சவுக்கடி தண்டனை கிடைத்தது. மொத்தம் அடித்த அடி 710. சவுக்கடி கம்பத்தை ஸ்டேஷன் ப்ளாட்பாரத்தில் நிறுத்தினார்கள். பள்ளிக்கூடப் பையன்களையும் சவுக்கடி அடித்தார்கள். ஒரு பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர் தன் ஸ்கூல் பையன்கள் சரியாகக் கீழ்ப்படியவில்லையென்று சிப்பாய்களின் உதவியைக் கேட்டாராம்.

அதன்மேல் சிப்பாய்த் தலைவர் பையன்களையும் சவுக்கடி அடிப்பதற்கு உத்திரவு செய்தார். அங்குள்ள பள்ளிக்கூடத்து பையன்களை ஒருங்கு திரட்டி அதிலிருந்து 6 பையன்களைப் பொறுக்கச் சொன்னார். ஹெட்மாஸ்டர் பொறுக்கினவர்களைத் தள்ளிவிட்டார். மார்ஸ்டனைவிட்டு வேறே பையன்களைப் பொறுக்கச் சொன்னார். "கழுவிற்கேற்ற கோமுட்டி கதையாய்" அடி வாங்கத் தகுந்த பலமுள்ள பையன்களைப் பொறுக்கியெடுத்து பாக்கி பையன்களுக்கு முன்னால் இவர்களை நிறுத்தி அடிக்கச் சொன்னார். ஹண்டர் துரையவர்கள் அடிப்பதற்குக் காரணம் என்னவென்று மார்ஸ்டனை கேட்டார். ஒரு கருத்தும் இல்லை என்று பதில் சொன்னார். இது மார்ஷல் லா சட்டத்தில் கூறிய குற்றம் ஒன்றும் இல்லை. விசாரணையும் கிடையாது. அதிகாரிகளுக்கு அடிக்க வேண்டுமென்று தோன்றிற்று அடித்தார்கள். அவ்வளவுதான். என்ன கொடுமை!

இதில் இன்னொரு விநோதம். இந்த காசூரில்தான் விபசாரி ஸ்திரீகளை வரவழைத்து சவுக்கடி அடிப்பதை வேடிக்கை பார்க்கச் சொன்னது.

அதே ஊரில் படைக் காவலாளர்கள் அனியாயமாக இரண்டுபேரை சுட்டுக் கொன்றார்கள். அதில் ஒருவன் ஊமை. இந்த உத்தியோகஸ்தர்களும் அவர்கள் கீழுள்ள வேலைக்காரர்களும் மனுஷ்யர்களின் உயிரை த்ரணமாக நினைத்தார்கள்.

காசூரில்தான் அற்புதமான தண்டனைகள் விதிக்கப்பட்டன. "காப்டன் டவ்டனுக்கு விசாரணை செய்து தண்டிப்பதென்பது பிடிக்கவில்லை" என்று மார்ஸ்டன் சொன்னார். டவ்டனுக்கு சட்படென்று வேலை முடிய வேண்டியது. இவர் விதித்த தண்டனைகளுக்கு ரிக்கார்டே

கிடையாது. சிலபேரை ஏணிமேல் ஏறுங்கள் என்றார். சில ஸாதுக்கள் (ஸன்னியாசிகள்) மேல் சுண்ணும்பைக் கரைத்துக் கொட்டச் சொன்னார். ஸ்டேஷனில் உள்ள பாரமுள்ள மூட்டைகளை தூக்கச் சொன்னார்.

ஐரோப்பியர்களுக்கு ஸலாம் பண்ணுதவர்களை தங்கள் மூக்கை பூமியோடு வைத்து தேய்க்கச்சொன்னார். இல்லா விட்டால் சவுக்கால் அடிப்பார். இப்படி பயமுறுத்தி அவமானப்படுத்தலாமா என்றால் டவ்டனும், மார்ஸ்டனும் ஜனங்களுக்கு அத்தண்டனை வேடிக்கையாயிருக்கிறது பிடித்திருக்கிறதென்றார்கள். டவ்டன் ஜனங்களை தனக்கு ஒரு அட்ரெஸ் (உபசாரப் பத்திரிகை) வாசிக்கச் சொன்னார். ஒரு மகம்மதியனை தன்மேல் ஸ்துதியாக ஒரு கவி பாடச் சொன்னார். இன்னும் சிலரை 20-தரம் விடாமல் தவளைபோல் தாவச் சொன்னார். குறைந்த பக்ஷம் அப்படி 20-பேரை உபத்திரவித்தார்.

மிஸ்டர் மார்ஸ்டன் வக்கீல்கள் தான்செய்ததை அதிகமாக இட்டுக்கட்டி சொல்லுகிறார்கள் என்று குறை சொன்னார். ஒரு இந்து வக்கீல் "ஜனங்களை கவர்ன்மெண்டார் ஆயுதமில்லாத ஆடுமாடுகளென்று நினைக்கிறார்கள்" என்று சொன்னாராம்! அது பிசகா? ஜனங்களை ஹிம்ஸை பண்ணினதையும், அவர்களுக்கு அனியாயமான தண்டனை விதித்ததையும் உற்று நோக்கில் வக்கீல் சொன்னது முழுவதும் மெய்யே. காப்டென் டவ்டன் ஜனங்கள் மனம் ஒப்பி அடிமை ஆய்விட்டார்கள் என்றார். ஸேத்தல் வாட் அதற்கு என்ன கருத்து என்று கேட்டார். அதற்கு "நீ எப்படி சொல்லுகிறாயோ அப்படிச் செய்கிறதற்கு ஜனங்களுக்கு இஷ்டம்" என்றார். ஒரு கோயில் வரும் படியைப்பற்றி தனக்குத் தோன்றியபடி தீர்ப்பு செய்தார்.

தனக்கு யாராவது எதிர்த்து பேசுவதுபோல் தோன்றினல் அவரைத் தண்டிப்பார்.

மார்ஷல் லா சட்டத்திற்குமேல் தண்டிப்பான். அப்படி செய்யலாமா என்று கேட்டதற்கு எனக்குத் தோன்றியபடி செய்கிறதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறதென்றார்.

தனக்கு இருக்கும் அதிகாரம் முழுவதையும் செலுத்த எண்ணங்கொண்ட, அந்த காப்டன் டவ்டன், தான் கூப்பிட்டு வராமல் இருக்கின்ற ஜனங்களின் பேரில், கொடூரமான வாரண்டுகள் தன்னுடைய பரிவாரங்களிடம், கொடுத்து அனுப்பித்தார். அந்த வாரண்டுகளின் முக்கிய சமாசாரம் என்னவென்றால், அப்பேர்க்கொத்த ஜனங்களின் வீடுகளை நெருப்பிலிடுகிறதற்குத்தான். இக்கொடிய வாரண்டுகளுக்கு ராணுவச்சட்டம் (Martial Law) இடம் கொடுக்கிறதா என்று கேட்கப்பட்ட பொழுது, டவ்டன் சொன்னதாவது "ராணுவச்சட்டம் கொடுக்கிறது. அல்லாமல் நான் செய்ததே மிகவும் சரியென்று இப்பவும் நிச்சயமாக எண்ணுகிறேன்" என்றார். இந்த அபூர்வ புத்தியின் காரணத்தால், அநேக சக்தியற்ற ஜனங்களின் வீடுகளும், அவர்களால் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கப்பட்ட தினசரி சாமான்களும், எள்ளளவு கருணையில்லாமல் கொளுத்தப்பட்டன.

தவிரவும் கைதிகளை விசாரிப்பதற்கு முன்னமே, நியாயாதிபதிகள் கழுவில் ஏற்றஉத்திரவு விதிப்பார்கள் என்று, கழுவுமரங்களை ஜனக்குழப்பம் நடத்த இடத்திலேயே நட்டார்கள். இப்படி செய்ய ஸர். மைகேல் உத்திரவு கொடுத்ததாகவும் தெரியவருகிறது.

கழுவு ஏற்றுகிறது நடுத்தெருவில் நடக்கிறதற்குமுன், இந்திய பத்திரிகைகள் இப்பூவுலகத்தில் இதுவரையில்

நடக்காத அக்கிரமம் நடைபெறப் போகின்றது என்று கண்டித்து எழுதினவுடன் தெருவில் கழுவில் ஏற்றுகிறது விடப்பட்டதாக அறியலானேம். இப்பொழுதும் கழுவில் ஏற்றுகிறது நிற்கவில்லை. 18 மனிதர்கள் ராணுவச் சட்டத்தினல் உயிர் எடுக்கப்பட்டார்கள். இன்னும் இம்மாதிரியான அக்கிரமங்கள் நடந்திருக்கும். நடக்காததற்கு காரணம் என்னவென்றால் அந்த பெரிய தேசபக்தராயும், பரோபகாரத்தில் மிக்க வாஞ்சையுள்ளவராயும் இருக்கும் ஹானரபிள் பண்டிட் மோதிலால் நெகரு, ஸீக்ரிடரி ஆப் ஸ்டேட்க்கு தந்தி மூலமாய் இப்போர்க் கொத்த கொடுமையான கழுவு ஏற்றுகிறதை நிறுத்தவேண்டு மென்றும், குற்றவாளிகள் குற்றம் சட்டத்தால் நிச்சயப் படவில்லையென்றும், தெரிவித்ததால் தான். அதற்குப் பிறகுதான் ஸிகிரிடரி ஆப் ஸ்டேட் வைஸராயுக்கு கொலை செய்வதை இப்பொழுது நிறுத்த வேண்டுமென்று அதிகாரம் செய்தார். எப்படி இருந்த போதிலும் நமக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்கிறது என்னவென்றால், ராணுவச் சட்ட விசாரணைகள் சரிவர நடக்காததினல்தான். அக்காரணத்தால் கழுவேற்றப் பட்டவர்களும், கழுவிற்குத் தயாராக வைத்திருக்கிறவர்களும், குற்றமற்றவர்களே என்று எண்ணுகிறோம்.

இப்போர்க்கொத்த சமாசாரங்களை ஆராயாமலும், தங்கள் செய்த அக்கிரமங்களை தெய்வத்துக்குப் பிரீதி என்று எண்ணம் கொண்டவர்களில், கர்னல் மாக்ரேயே முக்கியமான தலைமையானவர். இந்தக் கூர்மை வாய்ந்த தளகர்த்தர் ஹன்டர் கமிஷனுக்கு (Hunter Commission) முன்பில் கூறியதாவது, “இந்த காசூர் பட்டணம் (Kasur) அநேக வருடங்களாக ராஜ துரோகத்திற்கு பேர் பெற்றது.” இந்த பயங்கரமான சங்கதியை தெரி

வித்ததல்லாமல், அவர் தன்னுடைய வார்த்தைகளைப் பலாத்காரம் செய்ய எண்ணங் கொண்டு, மிகவும் கெட்டிக்காரத்தனத்தோடு, தான் காஸூர் டவுனைப்பற்றி தனக்கு முன்னால் ஒன்றுமே தெரியாது யென்று கம்பீரமாக ஒத்துக்கொண்டார். அவ் வார்த்தைகளைக் கேட்டு ஸர்சிமன் லால் (Sir Chiman Lal) கர்னல் மாக்ரேயைக் கேட்டதாவது :—

கேள்வி.—காஸூர் ராஜத் துரோக கோட்டை யென்று சொல்வதற்கு காரணங்கள் என்ன?

உத்தரம்.—சொல்லக் கேள்விதான்.

கே.—ஆகையால், உனக்கு நேரில் தெரியாதே?

உத்.—தெரியாது.

கே.—அப்படி யிருக்கும்பொழுது, இந்த ஊர் ராஜத்துரோகத்திற்கு பேர் கொண்டது யென்று யார் சொன்னார்கள்?

உத்.—அந்தக் கேள்விக்கு பதில் கொடுக்க எனக்கு எண்ணம் இல்லை.

கே.—ஆனால், நீ ராஜ சாஸனத்தில் சொல்லியிருக்கிறாயே? அந்த ஸ்டேட்மெண்டின் காரணங்களைச் சொல்லவும்.

உத்.—அந்த ஸ்டேட்மெண்டுதான் காரணங்கள். அதற்கு மேல் நான் ஒன்றும் சொல்லமுடியாது.

கே.—உன்னுடைய காரணங்களைச் சொல்லவும். இந்தக் கேள்வியை ஏன் உன்னை வற்புறுத்திக் கேட்கிறேன் என்றால் ராஜஜனங்கள் காஸூரில் ஏப்பிரல் மாதம் 10-ந்தேதிக்குமுன், தேசசங்கங்களும், தேச பிரபாவத்தைப் பற்றியும் ஒன்றுமே நடக்கவில்லை யென்று கூறியிருப்பதினால்தான். ஆனால் நீ மட்டும் ராஜத்துரோகத்திற்கு வருஷங்களாக காஸூர்பேர் போனது யென்று சொல்வது, எனக்கு மிகவும் ஆச்

சர்யத்தைக் கொடுக்கிறது. ஆகையால் நீ இப்பவும் அதே எண்ணம் வைத்துக்கொண்டிருக்கிருயா?

உத்.—இந்தக்கேள்விக்கு நான் பதில்கொடுக்கமாட்டேன்.

* * * * * *

கேள்வி.—இன்னும் உன்னுடைய ஸ்டேட்மெண்டில் "காஸூரில் ராஜத்துரோகிகளான வக்கீல்கள் இருக்கிருர்கள்" என்று சொல்லியிருக்கிருய். இந்த சமாசாரமும் கேள்விப்பட்டதுதாஞ?

உத்.—ஆம்.

கே.—இந்த ஸ்டேட்மெண்டுக்கும், முன் மாதிரி ஆதாரம் கிடையாதே?

உத்.—கிடையாது.

கே.—நீ ராணுவச் சட்டம் செலுத்துகிறவனுயிருந்த பொழுது 12௳, அத்தேதிக்குப் பிறகும் வக்கீல்கள் ராஜஜனங்களோடு சேர்ந்து ஊரில் அமைதியை கொண்டுவர முயன்ருர்கள் என்ற சமாசாரமும் அவர்களில் ஒருவர் ஷெர்போன் (Mr. Sherborne) துரை காப்பாற்றுவதில் முக்கிய உபகாரம் புரிந்தார் என்ற சமாசாரமும் உனக்குத் தெரியுமா?

உத்.—தெரியும்.

கே.—அப்படி வக்கீல்கள் உதவி புரிந்தார்கள் யென்ற சமாசாரம் உனக்குத் தெரிந்திருக்கும்பொழுது இன்னும் வக்கீல்கள் ராஜத்துரோகிகள் யென்ற ஸ்டேட்மெண்டைக் கைக்கொள்ளுகிருயா?

உத்.—இப்பவும் அதே எண்ணத்துடன்தான் இருக்கிறேன்—கேள்விசமாசாரமாய் இருந்தபோதிலும் ஆனல் நீங்கள் சொல்வதும் நிஜம்தான்.

கே.—அப்படி நான் சொல்லுகிற வார்த்தைகள் சரி யென்று சொன்னல், நீ எப்படி உன்னுடைய

ஸ்டேட்மெண்டு முழுவதற்கும் பற்றிக்கொண்டிருக்க முடியும். ஆகையால் உன்னுடைய ஸ்டேட்மெண்டை மாறுபாடு செய்வாயா ?

உத்.—நான் உங்கள் கேள்வியை உங்களுக்கே திருப்புகிறேன்—எல்லா வக்கீல்களும் சமாதானம்கொண்டு வரமுயன்றார்களா ?

கே.—உம் கேள்விக்கு நான் விடைகொடுக்க இங்குயில்லை.

உத்.—நானும் உங்களுடையதிற்கு பதில்கொடுக்க இஷ்டமில்லை.

இதுவும் தவிர மாக்ரே காஸூர் வியாபாரிகளின் ஹூண்டிகள் அமிருதசரஸ் வர்த்தகர்களால் தங்களோடு ஹர்தாலில் சேராததினால் அவமதிக்கப்பட்டது வென்று சொன்னார். இச்சமாசாரம் கேள்விப்பட்டதுதான் இதற்கும் ஆதாரம் யில்லையென்று சொன்னார். இந்த ராணுவச் சிங்கம் ராஜாங்கத்திற்குத் தெரிந்த அமிதவாதக் கட்சிக்காரர்களுடைய வீட்டுக் கதவுகளின்பேரில் ராணுவச்சட்ட விளம்பரங்கள் ஒட்டச் செய்தார். இந்தச் சமாசாரத்தை செவியுற்று ஸர் சிமன்லால் (Sir Chimanlal) மர்க்ரேயை (Agitators) அஜிடேடர்ஸ் என்னும் வார்த்தை என்னவென்று கேட்டதற்கு அது நல்ல ஆங்கில பதமே யென்று சொன்னார். சிமன்லால் அந்தப் பதத்திற்கு அர்த்தம் என்னவென்று வினவ, அவர் ஸ்டேட்மெண்டில் சொன்னதைத் தவிர வேறு ஒன்றும் சொல்லமாட்டேன் என்றார்.

இப்பேர்க் கொத்த சாரமில்லாத சம்பாஷணை சற்று நேரம் நடந்தது. இந்த சம்பாஷணையை இங்கு கொஞ்சம் யெடுத்து காண்பித்ததிற்கு காரணம் யாதென்றால், எப்படி பெரிய பதவிகளில் யிருக்கிற உத்தி

யோகஸ்தர்கள் தங்கள் நிலைமையையும், கடமையையும் அறியாமல், ராஜாங்கத்தின் நல்ல பெயரை தங்களுடைய கொடுமையான செய்கையால் கெடுத்து விடுகிறார்கள் என்பதைக் காண்பிப்பதற்கே தான்.

இந்த வீரனுடைய செய்கைகள் இதோடுநிற்கவில்லை. தன் வார்த்தைகளில் மிருகத்தனத்தையும் பிடிவாதத்தையும் காட்டினார். இதற்கு பின்வரும் திருஷ்டாந்தங்களே போதும். இந்த சிம்மத்தை நீ போட்ட ராணுவச்சட்ட பயங்கரமான விளம்பரங்கள் பகுத்தறிவுடன் போடப் பட்டதா" என்று ஸர் சிமன்லால் கேட்க, "அப்படியே தான் செய்யப்பட்டது; இப்பவும் அவ்விளம்பரங்கள் வேண்டியதுதான் என்று பூர்வ மனத்தோடு நினைக் கிறேன்" என்று சொன்னார்.

கே.—நீ பையன்களைச் சாட்டையினால் அடிக்கச் சொன்னதில், 6 பெரிய பையன்களை அதற்காகப் பொறுக்கச் சொன்னாயா?

உத்.—ஆம்—பொதுவில் அப்படித்தான் சொன்னேன்.

கே.—அவர்கள் பெரியவர்களாயிருந்தது அவர்கள் தலையெழுத்தா?

உத்.—சந்தேகமென்ன.

கே.—பையன்கள் பெரியவர்களாய் யிருந்ததால் தான் அடிக்கச் சொன்னீர் போலும்?

உத்.—ஆம்.

கே.—அந்த கட்டளை உங்களுக்குச் சரியென்று தோன்றிற்று?

உத்.—அந்த சமயத்தில் அதுதான் சரியென்று தோன்றிற்று. இப்பொழுதும் அதே மாதிரியாகத்தான் பண்ணவேண்டும் யென்று எண்ணுகிறேன்.

இந்த இரண்டு உத்தியோகஸ்தர்களுடைய சம்பாஷணைகளிலிருந்து முன் கூறியதெல்லாம் மாதிரிகளே. அவர்கள் எப்பேர்க்கொத்த உத்தியோகஸ்தர்களென்று இந்த சம்பாஷணைகளிலிருந்து முழுவதையும் தெரிந்து கொள்ளலாம். நிஜமாக, இவர்களுடைய உத்தரங்கள் கடுமையிலும், பதில் ஒருவருக்கும் சொல்லாத தன்மையிலும், தடித்தனத்திலும் படிப்புக்கே சமாசாரம் யென்று சொல்லலாம். இப்பேர்க்கொத்த உத்தியோகஸ்தர்களை வேலையில் நியமித்தவர்கள் பேரில் பிசகுயில்லை. இவர்கள் பாம சாதுக்கள் என்று ஒருவருக்கும் தெரியாமலிருந்திருக்கலாம். பொதுவாக எண்ணுகையில் இப்பேர்க்கொத்த உத்தியோகஸ்தர்கள், தாங்கள் வகிக்கும் உத்தியோகங்களுக்கு அருகர்களல்ல யென்று அவர்களுடைய கொடுஞ் செயல்களால் பிரபஞ்சத்திற்கு தெரிவித்து விட்டார்கள். இந்த உத்தியோகஸ்தர்களல்லாமல், ராணுவச் சட்டமும், அதன் அதிகாரமும் இந்த பாரத மாதாவுக்கு அவசியமேயில்லையென்று நன்கு விளங்குகிறது.

பேட்டியும், கேம்கார்னும்

(Patti and Khemkarn)

இந்த இரண்டு ஊர்களும், காஸுருக்கு சில மைல்களுக் கப்பாலிலுள்ள, ரயில்வே ஸ்டேஷன்கள். கேம்கார்ன் ஊரில் ஸ்டேஷனிலிருந்த சாமான்கள் திருட்டுப் போயின. தந்திக் கம்பிகளும் அறுக்கப்பட்டன. இந்தச் சிறுக் குற்றங்கள், மார்ஸ்டன் துரை (Mr. Marsden) சொல்லியபடி ஏழைகளாலும், உழைப்பாளிகளாலும், சிறு கடைக்காரர்களாலும் நடந்திருக்கலாம். இந்த ஊரில் யிருக்கும் முக்கிய வாசிகள், (மார்ஸ்டன் துரை சொல்லியபடி) போலீஸ்காரர்களுக்கும், ராஜ ஜனங்களுக்கும் உதவி புரிந்தார்கள்.

ஆகையால், ராணுவச் சட்டம், இந்த பிசகற்ற ஊரில் உபயோகப் படுத்தினது, அக்கிரமமேதான்.

குஜ்ரான்வாலா

(Gujranwala)

குஜ்ரான்வாலா ஜில்லா, பல காரணங்களால், ஒரு முக்கிய ஜில்லாவாகப் பஞ்சாப் மாகாணத்தில் இருக்கிறது. குஜ்ரான்வாலா பட்டணம், 30 000 ஜனத் தொகையை உடையதா யிருந்தபோதிலும், அதன் பெருமை மகா ராஜா ரன்ஜிட்ஸிங்ஜீ பிறப்பிட மானதால்தான். இந்தப் பட்டணம், லாகூருக்கு 42 மைல்களுக்கு அப்பாலிலுள்ள ரயில்வே ஸ்டேஷன். நம்முடைய சமாசாரத்திற்கு வேண்டிய ஊர்கள், குஜ்ரான்வாலாவைத் தவிர எவைகளென்றால், வாசீராபாத், நைஸாமபாத், ஆகல்கார், ராமநகர், ஹாவிஸாபாத், ஸாங்ளா ஹில், மோமன், டாபான ஸிங்கு, மணியன்வாலா, நவான்பிண்டு, சூகர்கானுவும், ஹெயிக்கூபுராவும். குஜரன்வாலு ஜில்லா இரண்டு பாகமாகச் சென்ற நவம்பர் மாதம் செய்யப்பட்டது. இரண்டு பாகங்களும், ஒரே உத்தியோகஸ்தரிட மிருந்தமையால், நம்முடைய காரியங்களுக்கு, ஒரே ஜில்லாவாக பாவிப்போம்.

சென்ற ஏப்பிரல்மீ 13உ வரையில், கலகக் குறிகளிருந்ததாக தெரியவில்லை. ஏனென்றால், கர்னல் ஓபிரயன் 12உயில் அம்பல்லாவுக்கு மாற்றப்பட்டு சென்ற பொழுது, அவருடைய சிநேகிதர்கள் அவருக்கு அட்ராஸ் கொடுத்தார்கள். அவரே ஹன்டர் கமிட்டி முன்னே சொன்னது என்னவென்றால், ராஜாங்கத்தாருக்கு கலகக் குறிகளிருக்கிற தென்று தெரிந்திருந்தால், தன்னை மாற்றியிருக்க மாட்டார்க ளென்றார் அவரை 14உ குஜ்ரான்வாலாவில் குழப்பம் உண்டானதிற்குப் பிறகுதான், அவர்

அங்கு அனுப்பப்பட்டார். மார்ச்சுமீ 30உ குஜரான் வாலாவில் கலகம் கிடையாது; ஹார்தாலும் கிடையாது. எப்பிரல்மீ 4உ ஹார்தால் சமாசாரத்தைக் குறித்து, ஜில்லா காங்கிரஸ் சபை மெம்பர்கள் மகாத்மா காந்தியின் விளம்பரத்தின் பேரில், ஆலோசிக்க ஆரம்பித்தார்கள். 5-ம் தேதியில் கூடிய பெரிய பொதுஜனக் கூட்டத்தில் ரவுலட் சட்டம் அக்கிரமமானது என்று ஜன ஒப்பம் கொடுக்கப் பட்டது. இந்தக் கூட்டத்தில் பேசின வார்த்தைகள் மிகவும் மிதமாயும், ராஜ விசுவாசமாயும் இருந்தன. ஆனால் கர்னல் ஓபிரயன் மனதில் சமாதான மில்லை; அவர் குஜ்ரன்வாலா முக்கிய ஜனத் தலைவர்களைக் கூப்பிட்டு, ஏதாவது கலகம்போல் வெளியில் வரக்கண்டால், அவர் அவர்களைக் கண்டிப்பதாகச் சொன்னார். இந்த ஜனப் பிரதிநிதிகள் சந்தேகத்தைப் போக்கடிக்க எண்ணங் கொண்டவர்களாகி, டிப்டி கமிஷனரையும், ஸூப்ரிண்டன்ட் ஆப் போலீஸ் உத்தியோகஸ்தரையும், அவர்களுக்கு இஷ்டமிருந்தால், கூட்டத்தைச் சாரலா மென்றார்கள். எப்பிரல்மீ 6உ காலை, ஹார்டலாகியும், ஜனங்கள்—கிழவர், சிறுவர்க ளெல்லாரும்—தெய்வத்தைத் தொழுவதிலும், பட்டினி கிடப்பதிலும் விடிந்தது. ராஜாங்கத்தார்கள் இப்பேர்க்கொத்த தேசாபிமானிகளுடைய இச்சைகளை தங்களால் ஆனவரையில் தடுப்பதற்கு முயன்றார்க ளென்பதற்கு, அநேகவிதமான ஆதாரங்கள் இருக்கின்றன.

முன் சொல்லியமாதிரி, 12-ம் தேதிவரையில் எல்லாம் சரிவர நடந்துவந்தது. இச்சமயத்தில், ஆகாயத்திலிருந்து இடிவிழுந்ததுபோல், காந்தி மகாத்மாவை சிறையில் வைப்பதும், டாக்டர்கள் ஸத்யபால், கிச்சலூ முதலியவர்களை தேசாந்தரமனுப்புவதும், 10-ம் தேதி அமிர்ட்ஸர், லாகூரில் நடந்த பயங்கரமான கொடுமைகளும், குஜரான்

வாலா ஜனங்களுக்குத் தெரிந்தது. இச்சமயத்தில் ஜனங்களும், அவர்களுடைய முக்கியப் பிரதிநிதிகளும், ஒன்றுகூடி, மறுபடி ஹார்டல் பண்ணுவதின் சௌகரியத்தைக் குறித்தும், தேசாபிமானிகளைச் சிறை செய்தது பிசகு யென்பதற்கும், லாகூர் அமிர்ஸ்டாரில் கொலைசெய்யப்பட்ட அல்லது முடமாகச் செய்யப்பட்டவர்களுக்குத் துக்கத்தைத் தெரிவிப்பதற்கும், ஆலோசனை புரிந்தார்கள். ஜனப்பிரதிநிதிகள், ஹார்ட்டல் இச்சமயத்தில், பந்தோபஸ்தில்லாமல் செய்வது சரியில்லை யென்று எண்ணி மிகவும் ஒழுங்காக நடக்க ஒரு கூட்டம் கூடினபொழுது, ராஜாங்கத்தார்கள் தடுக்க முயன்றார்கள். அவர்கள் முயற்சி பயன் கொடுக்கவில்லை. ஆனால், எப்பிரல்மீ 14உ யில் ஒரு பெரிய ஹார்ட்டலுக்குத்தான் காரணமாயிற்று.

எப்ரல்மீ 13உ யும், மறுநாளும் பெய்ஸாகி (Baisaki) லீவு நாட்களா யிருந்தபடியால், நாட்டுப்புர ஜனங்கள், குஜ்ரன்வாலாவில் ஏதோ விநோதங்கள் நடக்கிறதென்று எண்ணி, அங்கு சென்றார்கள். 14உயில், ஜனக்கூட்டத்தில் (மதுபானம் பண்ணினவர்க ளிருக்க) ராஜாங்கக் கொடிய செயல்களால் கொஞ்சம் அடக்கமுடியாதவர்களாக யிருந்ததற்கு ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இப்பேர்க்கொத்த தருணத்தில், ஸ்டேஷனுக்கு சமீபத்திலிருக்கும் ஒருபாலத்தின்பேரில், ஒரு செத்த கன்றுக்குட்டி தொங்கவிட்டிருக்கிறதாக, சமாசாரம் வந்தது. யார் அப்படி செய்திருந்தபோதிலும், அப்பேர்க்கொத்த காரியம், ஹிந்துக்களுடைய மதக்கொள்கைகளுக்கு அருவருப்பு உண்டாக்குகிறது. இம்மாதிரி கட்டினதிற்கு அநேகவிதமான காரணங்கள் இருக்கிறதாக தெரிகின்றன. போலீஸ்காரர்களுக்கு ஹிந்து, முஸல்மன் சேர்க்கை

இஷ்ட மில்லாததினால், சண்டை உண்டுபண்ணுவதற்காகச் செத்தகன்றை கட்டினார்களென்று சிலர் காரணம் கூறுகிறார்கள். இதைத்தவிர, பள்ளிவாசல்களில் பன்றி மாம்ஸம் எறியப்பட்டதால், ராஜாங்கத்தார்களுடைய காரியமாகத் தானிருக்கவேண்டுமென்று, ஜனங்கள் மனதில் தோன்றிற்று. இந்தக்காரணத்தால் ஹிந்து, முஸல்மன் பந்துத்தவம் பிறிபடாமல், சிநேகம் 1000-மடங்கு அதிகரித்தது. உடனே ஒரு சிறு ஜனக்கூட்டம் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்றது.

அங்கே, லாகூரிலிருந்து வாஸிராபாத் குறித்துப் போக ரயில் வந்தது. அந்த ரயிலிலிருந்த ஒருவன் 13வ லாகூரில் நடந்த கொலையைப்பற்றிச் சொன்னான். உடனே லீவுக்காகவந்த ஜனங்கள், ரயிலை எப்படியாவது நிறுத்த வேண்டுமென்ற யெண்ணத்தோடு, கூட்டமாக உட்புகுந்தார்கள். சிலர் ரயிலை மறைத்துக் கற்களால் அடித்திருக்கலாம். குருக்கல் பாலத்தை நெருப்பு வைத்தார்கள். இக்காரியம் முழுமனதோடு செய்தார்களென்பதற்குக் காரணங்களில்லை. இப்படித் தீவைக்கும் சமாசாரத்தைக்கேட்டு, குருக்கல் கவர்னரும், லாலா ரால்யாராம், பாரிஸ்டர் லாப்ஸிங்கு, வக்கீல் டின் முகமது, இன்னும் சிலர்களும், பாலத்தை அடைந்தார்கள். ஒரு ஐரோப்பிய உத்தியோகஸ்தரும், போலீஸ்காரர்களுடன் தூரத்தில் பாலத்தை அடைய வந்துகொண்டிருந்தார். குருக்கல் ஆபீஸர்கள் முன் சொல்லிய இந்தியர்கள் உதவியோடு நெருப்பை அணைத்தார்கள்.

பிறகு, ஜனக்கூட்டமானது, ஸ்டேஷனுக்கு அருகாமையிலிருக்கிற காச்சிபாலத்தை அடைந்தது. இதற்குள் ஜனங்களை தூரத்துவதற்கு எண்ணங்கொண்ட ஸூப்ரெண்டெண்டு ஹிரன் (Mr. Herron) குண்டுகள்போட

ஆரம்பித்தார். அநேகர் மாண்டார்கள். ஜனப்பிரதிநிதிகள் தங்களால் இயன்றமட்டும் கூட்டத்தைச் சமாதானப் படுத்தினார்கள். தங்கள் காரியம் ஜயம் அடைவதற்கு, ஒரு சங்கம் ஏற்படுத்தினபொழுது, கடைசியில் தெய்வ கதியால் முடிவுபெறவில்லை. அந்தக் கூட்டத்திற்கு அடிபட்ட தேசாபிமானிகள் ஒருவிதமான இரக்கத்தை உண்டு பண்ணுவதற்குத்தான் கொண்டுவரப்பட்டது. ஆனால் ஜனங்கள் மிகவும் துக்கத்தை அடைந்தவர்களாய்க் கொண்டு, கூட்டம் கலைந்தவுடன், தபால் ஆபீஸ், மாதாகோவில், ஸ்டேஷன், கோர்ட்டுகள் எல்லாவற்றையும் இடித்துவிட்டார்கள். இந்தச் செய்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்த போலீஸ்காரர்கள் அவர்களைத் தடுக்கவில்லை. ஆனால் ராஜாங்க ஸ்டேட்மெண்டில் சொல்லியபடி அவர்கள் ஜனங்களை இன்னும் பாழாக்குகிறதற்குத் தூண்டினார்களென்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

இப்பேர்க்கொத்த பாழ்செய்யும் சமாசாரங்கள் கர்னல் ஒபிரயன் காதில் எட்டியவுடன், குஜ்ரான்வாலாவுக்கு விரைவாக வந்தார். இவர் வந்தவுடன், தான் செய்யும் காரியங்கள் கொடுமையா யிருந்தாலும் சட்டமாக பாவித்துக்கொள்ள வேண்டியதென்று, முக்கிய ஸிக்ரிட்டரிக்கு டெலிபோன் செய்தார். அவர் திரும்பி பதில் சொன்னது என்னவென்றால், எந்தக் காரியங்கள் தனக்குச் சரியென்றும், ராஜாங்க பலத்தை அதிகப்படுத்துமென்று தோன்றுகிறதோ அவைகளைச் செய்யவும் என்று உத்திரவு வந்தது. எப்படி ராஜாங்க பலத்தைக் குறித்து ஒபிரயன் கஷ்டப்பட்டார் என்பது பின்னால் தெரியவரும்.

நாம் எல்லோரும், ஜனங்கள் பாழ் செய்தது, குற்றமென்றுதான் எண்ணுகிறோம். ஆனால் ஜனக் குற்றங்களை, ராஜத்துரோக பாவங்களாக நினைத்து, திக்கற்ற பலஹீனர்

களை வேட்டையாடிக் கொன்றது, எளிய ஜனங்களின் குற்றங்களை மறைக்கிறது மல்லாமல், ராஜாங்கத்திற்கே ஒரு அக்கிரமமான, கொடிய, நெஞ்சற்ற யந்திரம் என்ற பேருக்கு தடையில்லாமல் போயிற்று.

கர்னல் ஓபிரயன் திரும்பியவுடன், ஜனங்களின் ஆத்திரம் அடங்கிவிட்டது. ஓபிரயனுக்கு உபகாரம் செய்யவந்த ஆகாயக்கப்பல்கள், எளிய ஜனங்களின்பேரில் வெடிகுண்டு (Bombs) எறிந்தன. கணக்கற்ற ஜனங்கள் உயிர் துரந்தார்கள். இந்தக்கப்பல்களின் வேலை ஜனங்களின் மேல் அல்ல ; ஆனால் கால்ஸா சாப்பாட்டுச் சாலையின் பேரில். அந்தச்சாலையிலிருந்த ஒரு பையனுடைய விவரம் மனத்தை மிகவும் அருவருக்கிறது, நடுங்கவும்செய்கிறது—அதைக் கொஞ்சம் கேட்போம்.—

"நாங்கள் மத்தியானம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தோம்——3-மணி சுமாருக்கு ஆகாயக்கப்பல்களின் சப்தங்கள், எங்கள் சாலையின் கூரைக்குமேல் கேட்டது... நாங்கள், அவைகள் 10-நிமிஷம் வரையில் கழுகுகள்போல் சுற்றிக்கொண் டிருந்ததைப் பார்த்தோம்..................திடீரென்று ஒரு பெரிய சப்தம் கேட்டது......... ஒரு பெரிய ஷெல் (Shell) எங்கள் திண்பண்டம் செய்யும் காந்தா ஸிங்கைக் கொன்றது......அந்தக் கொடிய விஷ குண்டிலிருந்து, ஒரு தூள்சிதரி, என் கையைக் காயப்படுத்தினது......அது கீழேவிழுந்து உடைந்த இடி சப்தத்தால், ஒரு பையன் நடுங்கிக் கீழே விழுந்தான் !!

இன்னும், சாப்பாட்டுச் சாலைக்கு ஸூப்ரிண்டெண்டெண்ட் சொல்லுகிறார்—

"எங்கள் பள்ளிக்கூடத்தில் தேச பிரவர்த்திச் சங்கங்கள் கிடையாது ; பள்ளிக்கூடச் சட்டங்களும் அப்படி

யிருப்பதற்கு அனுமதி கொடுக்கிறதில்லை. ஏப்பிரல்மீ 14உ ஒரு ஹாஸ்டல் பையனும் டவுனுக்குச் செல்லவில்லை." ஹண்டர் சபைமுன்னால் காப்டன் கார்பரி, "கூட்டம்கூட்டமாகப் போகும் ஜனங்களைவிலக்க உத்திரவு கொடுத்ததாக"ச் சொன்னார். கால்சா சாப்பாட்டுச் சாலையில், அதிக ஜனக் கூட்டம் இல்லாமையால் வெடிகுண்டு போடுவதற்குக் காரணமுமில்லை ஈசுவரகிருபையால் ஒருவரும் மாளவில்லை.

இப்போர்க்கொத்த வீரச் செயல்கள் செய்த உத்தியோகஸ்தர்கள் வாயிலிருந்தே எப்படி தாங்கள் பாம்ஸ்களை எறிந்தார்கள் என்பதையும், யந்திரத் துப்பாக்கிகளை உபயோகப் படுத்தினார்க ளென்பதையும் கேட்க, ஆச்சரியமும், ஆராத துக்கமும் நம்முடைய மனதில் உண்டாகிறது. பின்வரும் சம்பாஷணை கருணைக் குளமாகிய ஓபிரயனுக்கும் ஹண்டர் கமிட்டிக்கும் நடந்தது.

கேள்வி.—நீ பாம்ஸ்கள் போட்டதிற்குப் பிறகுதான், ஜனங்கள் ஓட ஆரம்பித்தார்களா ?

உத்தரம்.—ஆம்.

கே.—வீடுகளின் மேல்தானே போட்டாய்.

உத்.—ஆம்—நான் போட்ட குண்டுகள் சில வீடுகளின் மேல் விழுந்தன.

கே.—நீ யந்திர பீரங்கியை உபயோகப் படுத்தினாய்; ஆனால் பீரங்கி குண்டுகள் நீ துரத்தின மனிதர்களின் மேல் அடிபட்டது மல்லாமல், வீட்டிலிருக்கும் சாது ஜனங்களின் பேரிலும் அடிபட்டிருக்கு மல்லவா ?

உத். —சாதாரண ஜனங்களுக்கும், சாதுக்களுக்கும் வித்தியாசம் அப்பொழுது நான் செய்ய முடியவில்லை. ஒருவரும் பாழ் செய்யக்கூடாதென்று, நான் சுட்டேன்.

கே.—நல்லது. பாம்ஸ் போட்டதால்தான் ஜனங்கள் கலைந்தார்கள்போலும் ?

உத்.—ஆம்.

கே.—அவர்கள் ஊருக்குள் ஓடினார்களல்லவா ?

உத்.—ஓடினார்கள்.

கே —உன் காரியம். இப்பொழுது முடிந்து விட்டதே? அப்படி இருக்கும்பொழுது நீ எப்படி இஷ்டப் பிரகாரம் பீரங்கி யந்தரத்தை பிரயோகப் படுத்தினாய்?

உத்.—நான் இஷ்டப் பிரகாரம பிரயோகிக்கவில்லை. நான் ஓடின ஜனங்களைத்தான் சுட்டேனென்று சொன்னேன். ஓடின ஜனங்கள் ஊரில் ஒளிய ஓடினதினால் தான், ஊரைப் பார்க்கச் சுட்டேன்.

இப்போர்க்கொத்த கொடிய செயல்கள் 200 அடி தூரத்திலிருந்து செய்யப்பட்டன. என்ன காரணத்தினால் எப்பொழுதும் யந்திர பீரங்கியால் கொன்றுயென்று ஹண்டர் கமிட்டி ஆபீஸர் கேட்டதற்கு, ஓபிரயன். மிகவும் ஊக்கத்தோடு சொன்னதாவது "இன்னும் அதிகமான உயிர்ச் சேதங்கள், நஷ்டங்கள் உண்டு பண்ணுவதற்குத் தானே" என்றார்.

இந்த ஊரில் விளையாடினது போதாதென்று கருதி, ஓபிரயன் இன்னும் ஒரு கிராமத்தை நோக்கி, யந்தர பீரங்கியைத் திருப்பினார். அந்தச் சமயத்தில்தான் குஜ்ரன்வாலாவிலிருந்து ஜனங்கள் தங்கள் ஊரைக் குறித்து வருகிறார்கள். விரிவாகச் சொல்ல, இவர்களிலும் அநேகரைக் கொன்றார். இதைத் தவிர, குஜ்ரன்வாலா ஜனங்களைப் பயமுறுத்த எண்ணி, பட்டணத்தின் நடுவிலிருந்து 150 தடவைகள் நான்கு திக்குகளிலேயும், குண்டு போட்டார். இதற்குக் காரண மென்னவென்று ஸர் சிமன்லால் அவரைக் கேட்டபொழுது பதில் கொடுத்ததாவது, "நான்

வீடுகளின்பேரில் குண்டுகள் போட்டது ஜயம் கொடுக்கவில்லை. ஆகையால், ஜனங்களின்பேரில் சுட ஆரம்பித்தேனென்றான்!

எங்களுடைய எண்ணத்தில் ஆகாயக் கப்பலிலிருந்து காரணமில்லாமல் குண்டெறிவது அளவற்ற அக்கிரமமென்றே நிச்சயமாகப் புலப்படுகிறது. ஏனென்றால் கூட்டங்களெல்லாம் கலைந்தபிறகு குண்டுபோட ஆரம்பித்தார்கள். பாழ்செய்வதை நிறுத்துவதற்குப் போட்டதாக ஒரு துளி ஆதாரங்கூட கிடையாது. அப்படிக் காரணமில்லாமல் துரத்தி, வேட்டையாடிக் கொன்றதற்குக் காரணம்யாதென்று யோசிப்போமானால், அவர்களுக்கு உயிர் திருணமாயும், ரத்தம் ஜலமாயும் கொலைசெய்வது விளையாட்டு அலுவல்போலும் இருந்ததாகத் தோன்றுகிறது. ஆதாரப் பத்திரபடி 12 பேர்கள் கொல்லப்பட்டும், 24 பேர்கள் காயப்படுத்தினதாகத் தெரியவருகிறது. கொலை கொஞ்சமாக நடந்தது ராணுவச் சிப்பாய்களின் கருணையால் அல்ல; தெய்வத்தின் ஆக்ஞையால் குண்டுகள் சரியாய் வெடிக்கவில்லை.

எப்படியிருந்தபோதிலும், சட்டப்படி 14-ந்தேதி வெடிகுண்டு போடுகிறதற்கு அணுவளவு இடமேயில்லை; காரணமில்லாமல், ஆகாயக் கப்பல்களிலிருந்து 15-ம் தேதி குண்டுபோட்டதிற்கு ஒபிரயன் கேட்காமல் வந்த ராணுவ ஒத்தாசையே காரணமாகும்.

இப்படி ஆகாயக் கப்பல்களிலிருந்து குண்டுபோட ராணுவத் தலைவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தது, ஸர் மைக்கேல் ஒடையரே ஆவர். அவரே குண்டு போட்டாரென்பதிற்கு ஆதாரமில்லாத போனாலும், அவர் குண்டு போடுவது தர்மமென்று போதித்தவர்.

எப்பொழுதும், ஏரோப் பிளேனிலிருந்து குண்டு போடுவது கலகங்கள் அடக்க முடியாமலிருக்கும்பொழுது தான். அப்படியிருக்க, குஜ்ரான்வாலாவில் குழப்பம் நடந்து, அதிக நேரமானபிறகு குண்டுபோட்டது மிகவும் தப்பு. ஐரோப்பியர்களைக் காப்பாற்ற வந்திருக்கிறதற்கும் காரணமில்லை. ஏனென்றால் ஒரு ஐரோப்பிய உயிருக்கும் சேதம் கிடையாது. ஏரோப்பிளேனுடைய பார்வையே ஜனங்களின் மனதில் பயம் உண்டுபண்ணபோதும். ஆகையால் குண்டு ஏரோப்பிளேனிலிருந்து போட்டது எந்த ராணுவக் காரணத்தினாலும் சரியாகப் பாவிக்க முடியாது. கத்தி, துப்பாக்கியற்ற பல ஹீன ஜனங்களின்மீது, குழப்பங்களெல்லாம் தீர்ந்தவுடன், பயம் ஒன்றுமில்லையென்று நிச்சயமாய்த் தெரிந்தபோது, குண்டுகளால் சுட்டுக் கொல்வது, இவ்வுலகத்தில் இது வரையில் நடக்காத கொடுஞ் செயல். இதற்கு ராஜஜனங்களுடைய அத்தாட்சியே யிருக்கிறது. இதோடு அக்கிரமங்கள் நிற்கவில்லை. 15-ம் தேதியில், கணக்கற்ற பாரிஸ்டர்கள், வக்கீல்கள், ஜனப்பிரதிநிதிகள் சிறை செய்யப்பட்டார்கள். இவர்களில் சிலர், குழப்பத்தைத் தூண்டுகிறதற்கு உதவிபுரிந்தார்களென்று, ராஜாங்கத்திற்குப் பூர்வமாகத் தெரிந்த விஷயம். இப்படி சிறை செய்ததற்கு, எள்ளளவு காரணமுமில்லையென்று, ஓபிரயனே இப்பொழுது கூறியிருக்கிறார். இந்த ராணுவத்தலைவர், இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் (The Defence of India Act) 12 - வது அங்கத்தில் தனக்குக் கொடுத்த பலத்தினால் சிறை செய்ததாகச் சொல்லுகிறார். இந்த அங்கத்தில் என்னதான் சொல்லியிருக்கிறது என்று பார்ப்போம். தெரிந்தெடுத்த, கலகமே பிழைப்பாயுள்ள ராஜதுரோகிகளை தான் சிறை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இந்த ரூல்படி,

முன் சொல்லியவர்கள் நிஜமாக ராஜதுரோகிகளல்ல. ஆகையால், பின்வரும் ரெகுலேஷன்தான் ஓபிரயன் மனதில், அரெஸ்ட் செய்யும்போது இருந்திருக்க வேண்டும்:—

1915 ம் வருஷம் இந்திய பாதுகாப்புச் சட்டத்து 12 A. A. ரூல்படி கொடுத்த அதிகாரத்தின்படி லெப்டி னண்ட் கவர்னர் கமிஷனர்களை உத்திரவு பண்ணுகிற தென்னவென்றால் : எந்த மனிதர்கள் ராஜாங்கக் கலகம் செய்வதற்குப் பிரயத்தனப்படுகிறதாக தெரிகிறதோ, அவர்களைச் சட்ட வாரண்டில்லாமலே, சிறைசெய்யலாம்.” இந்த ரூல் அவன்மனதில் வைத்துக்கொண்டதாக எண்ணி னாலும் அவர் டிப்டி கமிஷனராயிருந்ததனால் பாதுகாப்புச் சட்டப்படி நடந்தது மிகவும்விரோதமானது. அதைத் தவிர அரெஸ்ட் பண்ணினவர்கள் இந்த விரோதமாய் நடந்த சட்டத்திற்குள் கூட ராஜதுரோகிகளாய் வரவில்லை. ஹண்டர் கமிட்டிக்கு முன்னால் ராஜ ஜனங்கள் உத்தரங் கள் கொடுத்ததில்கூட, அவர்களால் அரெஸ்டு செய்யப் பட்டவர்களுக்கு உடைகள் தலைப்பாகை போடுகிறதற்கு, தயவும், நேரமும் கொடுக்காமல் இழுக்கப்பட்டார்க ளென்று கம்பீரமாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி அரெஸ்டு செய்யப்பட்ட 22 தேசபக்தர்கள், இரண்டு இரண்டு பேர்களாக விலங்கு பூட்டப்பட்டு 2 மைல் தூரம் டவுனுக்குள் இழுக்கடித்து, மொட்டை ரயில் வண்டிகளில் உணவு பொருளில்லாமல் கொண்டுபோகப் பட்டார்களென்று, ஹண்டர் கமிஷன் முன்னில் உத்தரங் கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களைப் பிடித்துக் கொண்டு செல்வதற்கு ஒரு ஹிந்து கமிஷனரும், ஒரு மகமதிய கமிஷனரும் நியமிக்கப்பட்டார். இந்த சிறை பட்டவர்களில், 63 வயதுள்ள மிஸ்டர் ரால்யாராம் குருக்கல்

கவர்னர் ஒருவர். பின்வரும் அவருடைய வருத்தமான வார்த்தைகள் மனதைக் கவருகின்றன:—

"நான், 22-சிறைபண்ணப்பட்டவர்களில் ஒருவன். எங்கள் எல்லோரையும், 2, 2-பேர்களாகச் சேர்த்து, விலங்குகள் போட்டார்கள். எங்களை ராஜ ஜனங்கள் நடுத்தெருவுகளில் தூரத்தினதல்லாமல், எங்களை ஓடச் செய்தார்கள். அவமானங்கள் இதோடு நிற்கவில்லை. எங்களை மொட்டை டிரக் வண்டிகளில் உட்காரவைத்து லாகூருக்கு அழைத்துச் சென்றார்கள். எங்களில் ஒருவனுக்கு மல மூத்திரம்போக அவகாசம் கொடுக்கவில்லை. இருந்தவிடத்திலேயே மிருகம்போல் போகச் சொன்னார்கள். லாகூர் ஸ்டேஷனில் சிறைபட்டவர்களை மூட்டைகளுக்குச் சமானமாக கீழேதள்ளும்பொழுது, என் தள்ளாததன்மையால், இறங்க கொஞ்சநேரம் யோசித்தேன். ராஜ ஜனங்கள் சினங்கொண்டு, பலாத்காரமாக என்னை உருட்டித் தள்ளிவிட்டார்கள்." இவருடைய வரலாற்றைக் கேட்க, கண்களில் நீர் தளும்புகிறது. இதுநிற்க. இப்போர்க் கொத்த துயரச்செயல்களுக்குக் கர்த்தாவாகிய கர்னல் ஓபிரயன், ஏன் உடைகள் உடுத்துக்கொள்வதற்கு நேரம் கொடுக்காமலும், மொட்டை, டிரக்வண்டிகளில் இழுத்து கொண்டு போகப்பட்டார்களென்று கேட்கப்பட்ட பொழுது, அவர் ஜனங்களைப் பயமுறுத்துகிறதற்கேதானென்றார். இப்படி அழைத்துச் சென்றது "மிகவும் எளிதான தண்டனை" என்றும், மிகக் கருணையுடன் சொன்னார்.

இப்படியிருக்க, குஜ்ரன்வாலா ஜனங்கள் 16உயில் அநேகவித அவமானங்களுக் குட்பட்டவர்களாகப் பண்ணப்பட்டார்கள். வியாபாரிகள் மூடினகடைகளைத் திறக்க, பின்வரும் விரோதமான ஆர்டர் பிறந்தது :—

ராணுவச்சட்ட 2-ம் நம்பர் ரூல்படிக் கொடுத்த நோட்டீஸ்.

" குஜ்ரான்வாலா முன்சிபல் லிமிட்களுக்குள் இருக்கும் வியாபாரிகள், பட்டாள சிப்பாய்கள், ஜனங்கள் முதலியவர்களுக்கு நியமித்த விலைகளில் சாமான்கள் விற்காமல் கடைகளை மூடியிருப்பதாகத் தெரியவருகிறது. இனி அப்படிசெய்தால் கடைக்காரர்களை அரெஸ்டு செய்தும், டஜனடி அடிக்கப்படுவார்களென்பதைத் தெரிவிக்க, பின்வருமாறு ஆர்டர்கள் வெளியிடப்பட்டிருக்கிறன்றன.

(Sd) F. W. பெர்பெரி

18—4—1919 லெப்டினெண்ட் கர்னல்,

ஆபீஸர் கமாண்டிங்க்,

குஜ்ரான்வாலா ஜில்லா.

லார்ட் ஹண்டர் கமிட்டி மனிதர்களைச் சலாம்செய்ய வேண்டுமென்ற ஆர்டர் (Saluting Order) இன்னவென்று பதற்றின ராணுவச் சட்ட நோட்டீஸ் பின்வருமாறு :—

ராணுவச்சட்ட நோட்டீஸ்.

" குஜ்ரான்வாலா ஜனங்கள் ராஜாங்க சிவில், மில்டெரி உத்தியோகஸ்தர்களுக்கு தக்கமரியாதை செய்கிறதில்லையென்று அறியலானேம். ஆகையால், குஜ்ரான்வாலா ஜனங்கள் தங்கள் பெரிய மனிதர்களை எப்படி மரியாதை செய்வார்களோ, அதேமாதிரி ராஜாங்க உத்தியோகஸ்தர்களையும் செய்யக் கட்டளை யிடுகிறோம்.

எந்த குஜ்ரான்வாலா மனிதன், குதிரைசவாரி பண்ணிக்கொண்டிருந்தபோதிலும் அல்லது வண்டியில் போனாலும் சரி, ஒரு ஆபீசர் வரக்கண்டால் இரங்கி, அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு மரியாதை செய்யவேண்டும். யாராவது குடைபிடித்துக்கொண்டாவது அல்லது குடை வைத்துக்

கொண்டாவது யிருந்தால், அதை மரியாதையாகக் கீழே இறக்கி, வரும் ஆபீஸரை வலக்கையால் சலாம் செய்ய வேண்டும்.

(Sd) L. W. I. காம்பல்,
பிரிகேடு ஜனரல்.
ஆபீசர் கமாண்டிங்,
குஜ்ரான்வாலா ஜில்லா.

இந்த அற்புதமான கட்டளையை கர்னல் ஓபிரயன் இந்தியவழக்கத்திற்கு ஒத்துயிருப்பதே யென்றார். எப்படி யிருந்தபோதிலும், இப்பேர்க்கொத்த அவமரியாதை ஒரு நாளும் வழக்கமென்ற காரணத்தினால், ஒப்பமுடையதாக ஆகாது. இந்த ஆர்டர் எவ்வளவுதூரம் செலுத்தப்பட்டதென்பதை அறிவோம். நம்முள் இருக்கும் எவிடன்ஸ்படி, சாதாரணசிப்பாய்கள்கூட சலாமிடப்பட்டார்கள். அப்படிச் செய்யாதவர்களின் முதுகுகளில் மூன்று அல்லது நான்கு அடிகள் பெரிய கொம்புகளால் கொடுக்கப்பட்டன. ஹாவ்லிராம் கடைக்குமுன்னால் உட்கார்ந்து கொண்டிருந்த அறியாத மனிதன் ஒருவன், இந்தக் காரணத்தினால், அடிகள் பலமாகக் கொடுக்கப்பட்டான். இதோடு நிற்கவில்லை; பையன்கள் யூனியன் ஜாக்கொடியை சலாம் செய்வதற்கு மட்டும், வெவ்வேறிடங்களி லிருந்து கூடவேண்டியதாயிருந்தது.

அதிக யோக்கியதையுள்ள கனவான்கள் சாக்கடைகள் கழுவ, (தோட்டி தன் வேலைசெய்தானபோதிலும்) ஏவப்பட்டார்கள்.

ஜனங்கள், தங்கள் கையில் தடிகள் வைத்துக்கொள்ளாமல் தடுத்தார்கள். கொஞ்சகாலம் ரயில் பிரயாணம் நிறுத்தப்பட்டது. ஜனங்களுக்கு, இந்த அந்நியாய உத்

திரவுகளால் எவ்வளவு கஷ்டங்கள் உண்டாயிருக்குமென்பது யெழுத சாத்தியமில்லை.

இக்கொடிய சமாசாரங்களைத் தவிர, ராணுவச்சட்ட ஜட்ஜிகளுக்கும் ஸம்மரி கோர்ட்டுகளுக்கும் முன்னால் நடந்த, குற்றம் சாட்டப்பட்ட விவரம் அமிர்ஸ்டார் விசாரிப்பு போலவே. இதனால் என்ன தெரியவருகிற தென்றால், அரஸ்டு செய்ததினுடைய காரணங்கள் முழுவதும் கட்டுக்கதை. தப்பிக்கிறதற்கு செய்தார்கள் போலும். ஹண்டர் கமிட்டிக்கு முன்னால், கலகம் முக்கிய காரணமென்று சொன்னது, இப்பொழுது முழுப் பொய் என்று ஸித்தமாயிற்று. திவான்மாங்கல் ஸென்னுக்கும், அவர் குடும்பத்திற்குமுண்டான துயரமும், லாலா அமரநாத் வீட்டைக் கஷ்டப்படுத்தி காலிசெய்ததும், சட்டப்படி விசாரிக்காமல் தேசபக்தர்களை ஜெயிலில் அடைத்ததும், இம்மூன்று கொடுமையான அநியாய அக்கிரமங்கள், ஆங்கிலேய ராஜாங்கத்திற்கு அளவிடாத அவமானத்தைக் கொடுக்கிறது.

வாசீராபாத்

வாசீராபாத், குஜ்ரான்வாலாவிற்கு 20 மைலுக் கப்பாலுள்ள முக்கியமான ரயில்வே ஸ்டேஷன். இதன் ஜனத்தொகை 10,000. இந்த ஊரில் வருஷா வருஷம், பெய்ஸாகி சந்தை முடிந்தவுடன், பக்கத்தூர் ஜனங்கள் கூடுவது வழக்கம். ஆனால் மார்ச்சுமீ 30வயிலாவது அல்லது ஏப்ரல் 6வயி லாவது, இவ்விடத்தில் ஹார்ட்டல் நடக்கவில்லை; பின்பு, இந்த ஊருக்கு வரும் ஜனங்கள் லாகூர், அமிர்தஸரஸ், குஜ்ரான்வாலா முதலிய இடங்களின் நடந்த கஷ்டங்களைத் தெரிவித்தார்கள். கிராமத்திலிருந்து வந்தவர்கள் வாசீராபாத்தில் ஹார்ட்டல் நடக்காததைக் கண்டு, வருத்தப்பட்டுக்கொண்டு, உறுதி செய்து

கொண்டதாவது, "இந்த வாசீராபாத் ஜனங்கள், ஹார்ட்டல் நடத்தாததினால், நாம் ஒருவரும் இவர்களோடு சம்பந்தங்கள் செய்யக் கூடாது" என்றார்கள். 14உயில், ஹார்ட்டல் தயார் பண்ணுவதற்காக, அவ்வூர் மசூதியில் ஒரு கூட்டம் கூட்டினார்கள். ஹார்ட்டல் 15உயில் நடக்க கடைகள் மூடியதால் மட்டும் சந்தோஷமடையாத அதிகப் பிரசங்கிகள், மீட்டிங் முடிந்தவுடன், தந்திக் கம்பிகள் அறுப்பதற்கும், தண்டவாளங்களைப் பிடுங்கி விடுவதற்கும், புறப்பட்டார்கள். அவர்களில் சிலர், பெயிலி மாதரி வீட்டிற்குள் நுழைந்து, வீட்டைக் கொளுத்திப் பாழாக்கின தல்லாமல், அநேக அபூர்வமான கிரந்தங்களை நாசம் செய்தார்கள். இந்தக் காரியத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போலீஸ்காரர் தடுப்பவதற்குப் பிரயத்தனப் படவே யில்லை. அப்படி யிருந்து, உயிர்ச்சேதம் ஆகாமலிருந்தது தெய்வத்தின் கருணை யன்றோ? இந்தச் சாமியாரின் வீட்டைக் கொளுத்தினது பிசகென்றே நினைக்கிறோம். இப்படிக் கொளுத்தினதின் காரணம் ராஜ துரோகமல்ல; ஆனால் அது கல்வியற்ற கிராமத்தார்களின் செய்கை.

இப்பேர்க்கொத்த, கல்வி யற்றவர்கள் எப்படி தங்கள் தப்பிதங்களுக்காக தண்டிக்கப்பட்டார்களென்பதை இப்பொழுது பார்ப்போம். கர்னல் ஓபிரயன், போலீஸ் ராணுவ பந்தபஸ்தோடு 16உயில் வாசீராபாத்தை அடைந்தான். கணக்கற்ற மனிதர்கள் அரெஸ்டு செய்யப் பட்டார்கள்; குஜ்ரான்வாலாவில் நடந்த அக்கிரமங்கள் இங்கேயும் ஒன்றுவிடாமல் செய்யப்பட்டது.

18உயில் நடந்த தர்பாரில் கர்னல் ஓபிரயன் பின்வருமாறு கூறியதாகத் தெரிய வருகிறது:—

"ஓ! மூடர்களே, பைத்தியம் பிடித்த ஜனங்களே! கேளுங்கள்! நீங்கள் ஆங்கிலேய ராஜாங்கம் தொலைந்து போய்விட்டது என்று நினைத்தீர்கள். உங்கள் முட்டாள் தனத்திற்கு எங்களுக்கு வைத்தியம் தெரியும்—கையில் ஔடதம் இருக்கிறது. உங்கள் வீட்டை இடிக்கிறதிற்கும், சொத்துக்களை ராஜாங்கத்திற்குச் சொந்தமாகச் செய்வதற்கும், இன்னும், வீட்டைத் தீ மண்டபங்களாகப் பண்ணுவதற்கும், கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் யிருக்கிறதென்பதை விரைவாக அறியுங்கள்! இதற்கு உதாரணமாக, ஜேமியட்ஸிங்கு பாகாவின் சொத்தை கவர்ன்மெண்டுக்கு அபகரிக்கிறேன்," என்று இந்த ராணுவச் சிங்கம், பயங்கரமாகக் கர்ச்சித்தார்.

மறுநாள் ராணுவச் சட்டம் விளம்பரம் செய்யப்பட்டது. அதன் பிரயோகம் எப்படியென்று ஆரிய சமாஜம் காரியதரிசியாகிய டாக்டர் டாலட் சிங்கு பின் வருமாறு விவரிக்கிறார்:—"ராணுவச் சட்ட நோட்டீஸ்கள் வீடுகளிலும், பப்ளிக் கட்டிடங்களின் பேரிலும், தீர்க்கமாக ஒட்டப்பட்டன.

அரெஸ்டு செய்யப் பட்டவர்கள் வீட்டுக் கதவுகளில், கணக்கில்லாமல் ஒட்டப்பட்டது. ஆரிய சமாஜுக்கும் கலகத்திற்கும் சம்பந்த மில்லாம லிருந்த போதிலும், நோட்டீஸ்கள் அதில் பறந்தன. ஹார்ட்டனுக்கும் எனக்கும் ஒத்துமை யில்லாதபோதிலும், நான் நோட்டீஸ்கள் கிழிந்து போகாம லிருக்க காவல் வைக்கப் பட்டேன். இம்மாதிரி காவல் பார்த்துக் கொள்ள, நான் 2 காவல் காரர்கள் கூட போட நேர்ந்தது. அப்படி சரிவர பார்க்காம லிருந்திருப்பேனானல், என் உயிர் ராணுவச் சட்ட சிப்பாய்களிடம் அகப்பட்டிருக்கும்." இப்படிப் பார்த்து வந்த போதிலும், டாக்டர் டாலட் சிங்கு அரெஸ்டு செய்

யப் பட்டார்; ஆரிய சமாஜ் ரிஜிஸ்தர் புஸ்தகங்களைச் சிப்பாய் ரத்னங்கள் எடுத்துக் கொண்டார்கள். டாலட் சிங்கு 10 நாள் காவலில் வைக்கப்பட்ட சில ஜனங்களின் பேரில் குற்றம் சொல்லும்படி கட்டளை யிடப்பட்டார். பிறகு, மேமீ 30உ அவரை வெளியில் விட்டார்கள். மறுபடியும் ஜூன்மீ 7உ ஜயிலில் வைக்கப்பட்டார். வக்கீல் தனக்காகப் பேசவேண்டுமென்று அவர் கேட்டதற்கு ராணுவ சிரேஷ்டன் சம்மதிக்கவில்லை. அவரை அரெஸ்டு செய்ததற்குக் காரணம் மிகவும் ஆச்சரியத்தை உண்டு பண்ணும்படியான, கட்டுக் கதை. டாக்டர் டாலட் சிங்கு கர்னல் ஒபிரயனைக் காரணம் கூற விரும்பியபொழுது, அவர் தீர்க்க புத்தியோடு சொன்னதாவது :—“ஸ்வாமி சாரதாநந்தர் குழப்பம் செய்வதில் ஒருவராய் இருப்பதனால், நீயும் அவர் மாதிரி ஒருவனாயிருப்பதற்குச் சந்தேகமென்ன?”

முன் சொல்லிய அநியாயத்தோடு நிற்கவில்லை. யாராவது ஒருவன், முன்வரும் ஐரோப்பியனைச் சலாம் செய்யா விட்டால் அவனுடைய தலைப்பாகையை எடுத்து கழுத்தில் கட்டி, ராணுவக்கூடாரத்திற்கு இழுத்துச் செல்லப்படுவான். அங்கே அவனை விடாமல், அடி கொடுத்தாவது, பண அபராதம் போட்டாவது அனுப்பிப்பார்கள். மற்றொரு சாக்ஷி தான் ஒரு ஐரோப்பியனை சலாம் செய்திருந்தபோதிலும், அவன் அதைப் பார்க்காமல், தன்னை அவமதித்தற்காக, தன் செருப்பை முத்தமிடச் சொன்னானென்றார். இதன் நிஜத்தை அநேக இதர சாக்ஷிகள், தங்களுடைய வார்த்தைகளால் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

இன்னும் இதற்கு முன்னால் பட்டாளங்கள் பணம் கொடுக்காமலே, வீட்டுக்கு வீடு வெண்ணெ வாங்கிக்

கொண் டிருந்தார்கள். வெண்ணை வாங்குவது நின்ற வுடன், விதவைகள் வீடுகள் தவிர மற்றெல்லா வீடுகளிலும் ஒவ்வொரு ரூபாய் வாங்கப்பட்டது. அப்படி சேர்ந்த பணம் செலவழிந்து போனவுடன், மறுபடியும் வாங்க ஆரம்பித்தார்களென்று ஒரு சாக்ஷி சொல்லி யிருக்கிறான். வாசிராபாத்தில் மட்டிலுமே ரூ. 67,000 வாங்கப்பட்டது யென்று அவனே மறுபடியும் ஒப்பம் கொடுக்கிறான்.

போலீஸ்காரர்கள் பொய் சாட்சி சொல்வதற்கும், அரஸ்டு செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கும் ஏராள லஞ்சங்கள் வாங்கினார்களென்பதற்கு ஆதாரங்க ளிருக்கின்றன.

ஜனங்களுடைய கட்டில்களுக்குப் பணம் கொடுக்கா மல், பட்டாள உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டு போகப்பட்டதற்கும் ஆதாரமிருக்கிறது.

குஜ்ரான்வாலா மாதிரி இவ்விடத்திற்கும் பையன்கள் 'யூனியன் ஜாக்' ஜண்டாவை சலாம்போட, தினம் 3-தடவைகளில் ஒன்றுகூட வேண்டியிருந்தது. "மத்தி யான கடுமையான வெயிலில் அதிக தூரம் நடக்கும்படி சிறுபையன்கள் வற்புறுத்தப்பட்டார்கள்.

முன்னமேயே சர்தார் ஜேமேயித் சிங்கின் சொத் துக்களைக் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டார்க ளென்று முன்னமேயே நாம் சொன்னோம். அவர்கள் எப்படி எடுத்துக்கொண்டார்களென்பதை சர்தார் மகன் சொல்ல கேட்பது மிகவும் வியப்பைக் கொடுக்கிறது:

"டிப்டிகமிஷனரும் அவருடைய ஆபீசர்களும் எங்க ளுடைய கடையை நெருங்கியபொழுது என் தகப்பனார் மேல் வாரண்டுகள் கொடுத்திருக்கிறதாகத் தெரியவந்தது. போலீஸ்காரர்கள் எங்கள் வீடு முழுவதையும் சோதித்த

தல்லாமல், வீட்டிலிருக்கும் பெண்பிள்ளைகளைக் கண்டபடி வைதார்கள். பிறகு அவர்களை ஜெமியட்சிங்கு எங்கு போயிருக்கிறான், இல்லாவிட்டால் எங்கே மறைத்துவைத்திருக்கிறீர்கள் என்று கூச்சலிட்டதாகச் சொன்னான். இந்தப்போலீஸ்காரர்கள், பெண்டுகளைத் தொந்தரவுசெய்ததுமல்லாமல், தன் தகப்பனார் ஜம்மூவுக்குப் போயிருக்கிறதாகச் சொன்ன பையனும் கேள்விகளால் புண்படுத்தினார்கள். ஏப்ரல்மாதம் 21-ந்தேதி சொத்துக்களை ராஜாங்கத்துக்குச் சேரவேண்டியதென்ற ஆர்டர் பிறந்தது. மிகவும் அவமரியாதையாக 4-பெண்டுகளையும், 6-மைனர் குழந்தைகளையும், போலீஸ் சிப்பாய்கள் வீட்டிற்கு வெளியே நிற்கச் செய்தார்கள்.

"பெண்டுகள், புருடர் வழக்கப்படி வீட்டிற்குள் என்ன சிறிய வஸ்திரங்கள் கட்டிக்கொண்டிருப்பார்களோ அதோடு வெளியில் கொண்டுவரப்பட்டார்கள். குழந்தைகள் வீட்டிற்குள் விளையாடிக்கொண்டிருந்ததினால் வஸ்திரங்கள் கட்டிக்கொள்ளவில்லை. பெண்டுகளுக்கு செருப்புகூட போட்டுக்கொள்ளுவதற்கு நேரம் கொடாததினால், அவர்கள் கேவல உடுப்புகளுடன் வெளியேவர நேர்ந்தது. ஆயிரக்கணக்கான தர்மங்கள் செய்த, அநேக லட்ச ரூபாய் சொத்துடைய தர்மச் சிந்தனையுள்ள சாவகாரியினுடைய குடும்பம், அன்று நிழலுக்கு வீடுயில்லாமலும், உடுக்க உடையில்லாமலிருக்கும்படி நேர்ந்தது" எப்பேர்க்கொத்த மானபங்கம் என்று தெரியவரும். இந்த சமாசாரமுமல்லாமல், சண்டைக்கு அபரிமிதமாய் பணமும், ஆட்களும் கொடுத்த, கமாண்டர்-இன்-சீபிடமிருந்து ராஜ விசுவாசத்திற்கு ஸனதுபெற்ற சார்தார் ஜேமியட்சிங்கை இம்மாதிரி கேவலமாக நடத்தியது ராஜாங்கம் எவ்வளவு கொடூரமாக நடந்து வருகிறதென்று தெரியவருகிறது.

அவர்மேல் குற்றம் சாட்டப்பட்ட பத்திரங்கள் எல்லாவற்றையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். ஒரு எள்ளளவு பிசகும் அவர்மேல் இருக்கிறதாகத் தெரியவில்லை. இப்பேர்க்கொத்த 62-வயது சென்ற கண்ணில் பூ உடைய சர்தார், தேசபக்தரை ஒரு குகையில் அடைத்து ஒரு பழைய திருடனுக்குத் தண்டனை விதிப்பதுபோல் தொந்தரவு செய்தது, கொடிய அநியாயங்களில் மிகவும் கொடுமையான அநியாயம்.

இது நிற்க, காரணமில்லாமல் அரெஸ்டுபண்ணப்பட்டவர்களுடைய விசாரிப்பு கேலிக்கூத்தே யென்று சொல்லலாம். பின் வரும் விபரம் முன் சொல்லியதை விளக்கும்.—

"எல்லா ஜனங்களும், தமுக்கு அடி தெரிவிப்பால் போலீஸ்டேஷனுக்கு அழைக்கப்பட்டார்கள். ஏற்கனவே, போலீஸ்காரர்கள் சிறு பையன்களைக் குற்றம் சாட்டுகிறவர்களாக்கி, தயார்பண்ணி கிளிப்பிள்ளைப்பாடம் சொல்லும்படி செய்திருக்கிறார்கள். வந்திருக்கும் ஜனங்களில் யாரொருவர்பேரில் கேஸ்கொண்டுவர போலீஸ் விரும்பினால், அவர்கள் ஏவுகிற பையன் மிக்க ஊக்கத்தோடு பொய்சாட்சியும் காரணங்களையும் விரைவாகக் கூறுகிறான். அந்தச் சாட்சியின்பேரில் இஷ்டமுள்ளவரையில் அரெஸ்டுகள் நடந்தன. இதே மாதிரியான பையன்கள் கமிஷனுக்கு முன்னால் பொய்சாட்சி சொன்னதால், அநேக சாது ஜனங்களுக்கு கஷ்டங்களை அநுபவிக்கும்படி நேர்ந்தன."

நைஸாமபாத் (Nizamabad)

நைஸாமபாத், வாஸிராபாத்துக்கு ஒரு மைலுக்குள்ள, வீடுகள் நிறைந்த நீள சந்தை உடைய ஒரு கிராமம். அவ்விடத்தில் கையால் கத்தி, முதலியவைகள் செய்

கிறவர்கள் இருக்கிறார்கள். முன் சொல்லியபடி, இஜ் ஜனங்களில் சிலர் பெயிலி வீட்டைக் கொளுத்துவதில் சகாயம் செய்தவர்கள். இச்சகாயம் பூண்டதற்குக் கொடுத்த தண்டனையானது, பிசகிற்கு மிகவும் அதிகரித்த தென்பது எங்களுடைய எண்ணம். ஏப்பிரல்மாதம் 18-ந் தேதி ஆங்கிலேய ராணுவத்தோடு கூடிய ஒரு ரயில் இந்த ஊருக்கு வந்தது.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஜனங்களுக்குத் தங்களுக்கு என்ன நேரிடப்போகிறதென்பது தெரியாது. சிப்பாய்கள், வேட்டைக்காரர்கள் போல் கிராமம் முழு வதையும் சுற்றிக்கொண்டார்கள். பிறகு கடைகளை உடைத்து, மாவு, நெய் முதலியவைகளை அபகரித்ததுமல் லாமல் சொந்தக்கார ஜனங்களையே, மூட்டை தூக்கும் கூலிகளாக, ரயிலுக்குக் கொண்டு போகச் சொன்னார்கள். இந்தக் கஷ்டங்களைத் தவிர, நைஸாமபாத்து தொழிலாளி கள், போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியிலுள்ள பொட்டல் மைதானத்தில் காலை 7-மணியிலிருந்து சாயந்திரம் 8-மணி வரையில், 2 வாரத்திற்கு வெயிலில் உட்காரும்படி ஆக் கினை பிறந்தது. இந்த ஆக்ஞையை மீறாமல் நடக்கிறதற் காக, உழைப்பாளிகள் தங்கள் கருவிகள் செய்யும் ஷாப்பு களை மூடும்படி நேர்ந்தது.

இந்த கஷ்டங்கள் தவிர வேறுவிதமான கஷ்டங் களும் அவர்கள் அனுபவிக்கும்படி நேர்ந்தன. மகமது ரம்ஸான் என்ற பையன் ராணுவ கூடாரத்திற்கு சமீபத் தில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். இந்த அறி யாத பிசகிற்காக, அவன் சுடப்பட்டான்.

“2, 3 ஆங்கில போர்வீரர்கள், அந்த பிரேதத்தை, அவனுடைய தலைக்குட்டையால் கட்டி யிழுத்து, குளத் துக்கரையில் எறிந்து விட்டார்கள்.”

மிர்வாஜித் ஆலி என்னும் மொகலாயன், மிகவும் பெரிய ஸ்டேட்மெண்டில், எப்படி போலீஸ்காரர்கள் பொய்சாட்சி தயார்செய்தார்களென்றும், எப்படி ஜனங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் வெயிலில் உட்கார்த்தப்பட்டார்களென்றும், சொல்லுவதோடு பின்வருமாறு கூறுகிறான்.—

"என்னையும், என் பிள்ளையையும் சோதித்து, ஜயிலில் போடப்பட்டோம். ஜூன்மீ 9உ டிப்டி கமிஷனர் கர்னல் ஒபிரயன் முன்னால், 5, 6 வாசீராபாத் ஜனங்களோடு நானும் என் பிள்ளையும் இஸ்லாம் பெக்கும், சாயந்திரம் 6-மணி சுமாருக்குக் கொண்டுபோகப் பட்டோம். மூக்கினால் பூமியைத் தேய்ப்பது என்னும் கடும் தண்டனைக்கு நாங்கள் உட்பட்ட பிறகு, நாங்கள் விடப்பட்டோம்."

குற்றம் சாட்டுகிறதிற்குக் காரணம் இல்லாதபோனால், முன்சொல்லிய தண்டனையானது, தப்பில்லாத போதிலும் சாது ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. இப்பேர்க்கொத்த சாதுக்கள் பின்பு பிசகு செய்யமாட்டார்களென்பதை நிச்சயப்படுத்த ரூபா 6,500 ஜாமினாக வாங்கப்பட்டது.

சாக்ஷிகள் 324,325,326,334-ம் எப்படி போலீஸ்காரர்கள் பயமுறுத்தி சாக்ஷிகள் தயார் பண்ணினார்கள் என்பதற்கு ஆதாரம் கொடுத்திருக்கிறார்கள்.

அகல்கார் (Akalgarh)

அகல்கார், வாசீராபாத் - லைலாம்பூர் பிரான்ஞ்லினுள்ள ஒரு ரயில்வே ஸ்டேஷன். இதன் ஜனத்தொகை 4000. சீக் ராஜாங்கத்தில் முல்டான் கவர்னர்களாயிருந்த திவான் சான்மாலும், அவர் பிள்ளை முல்ராஜூம் வசிக்குமிடமாகியதால், இவ்வூருக்குப் பெருமை.

அகல்காரில் ஏப்ரல்மீ முடிவு வரையில் குழப்ப மிருந்ததாகத் தெரியவில்லை. 6உயில் ஹார்ட்டல் நடந்தது. அன்று பொதுஜனக் கூட்டத்திற்கு, திவான் சான்லால் வம்சத்தவன் திவான் கோபால் லால் அக்ராசனபத்யரா யிருந்தார். மறுபடியும் 14உயில், லாகூரிலும், அமிர்தஸரஸிலும் நடந்த அரஸ்டுகளுக்குமேல் ஒரு ஹார்ட்டல் நடைபெற்றது. 15உ ஹார்ட்டல் இல்லாத சமயத்தில் தந்திக் கம்பிகள் ஒரு மைல் தூரத்திற்கு அறுக்கப்பட்டன. அகல்கார் ஜனங்களால் அறுக்கப்பட்டதென்பதற்குக் கொஞ்சங்கூட ஆதாரமில்லை.

இச்சமாசாரத்தைக் கேட்டவுடன் ஏப்ரல்மீ 22உ டிப்டி கமிஷனர், வாய்க்கால் பாலத்தில் நின்றுகொண்டு, அகல்கார் முக்கிய மனிதர்களுக்குச் சொல்லி அனுப்பித் தார். அவர்கள் வந்தவுடன், டாக் பங்களாவுக்கு தன் மோட்டார் வண்டி போகவேண்டுமென்று சொல்லி, உடனே மோட்டார் போகும்படி சாலையை அகலப் படுத்தி, சரிப்படுத்த வேண்டுமென்று கட்டளையிட்டான். இதற்காக ஜனங்களிடமிருந்து ரூபா 2000 வசூல் செய்யப்பட்டு ரிப்பேர் செய்யப்பட்டது. இவ்வூரிலிருந்து இவ்வளவு பெரிய தொகை வசூலித்தது ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. இச்சிறிய ஊரிலிருந்து, ஜனங்களுடைய சக்தியை யோசியாமல் இப்படி தொகை சேர்த்தது அக்கிரமம்.

பிறகு குஜ்ரான்வாலா வாசீராபாத்தில் நடந்த மாதிரி இவ்விடத்திலேயும் ஜனப்பிரதிநிதிகள் அரெஸ்டு பண்ணப் பட்டார்கள். 30-ஜனங்கள் குற்றம் சாட்டப்பட்டு 20-பேர்கள் விடுதலை அடைந்தார்கள். 15-வயதுள்ள 2-சிறு வாலிபர்கள் ஒரு நாள் சிறை செய்யப்பட்டார்கள். 6 மணி

தர்களை ஜெயிலில்போட்டு, 2 பேர்களின் குற்றம் சாட்டுதலை வாபீஸ் வாங்கிக்கொண்டார்கள்.

நாம், இந்த ராணுவத்தலைவர்கள் எப்படி 2 மாதங்கள் வரையில் பொய் சாட்சிகள் தயார் செய்தும், லஞ்சம் வாங்கி அக்கிரமங்கள் செய்தார்களென்பதற்கு நம்சாக்ஷிகளால் கொடுக்கப்பட்ட ஆதாரவுகளின்பேரில், உலகத்திற்குத் தெரிவிப்பதற்காக சில உதாரணங்கள் கொடுக்கிறோம்:

நானக்சந்து என்பவர், போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் கொண்டு வரப்பட்டு, பொய் ஆதாரவுகள் கொடுக்கும்படி பயமுறுத்தப்பட்டார். அவர் பொய் சொல்ல மாட்டேனென்று சொல்லியபொழுது, "அவனை அரைமணிநேரத்திற்கு கடும் வெயிலில் நிற்கும்படி செய்தார்கள்." இத் தண்டனையோடு சந்தோஷமடையாமல், திட்டியும், சுட்டுபோடுவோமென்றும் பயமுறுத்தினார்கள். இப்பேர்க்கொத்த சமயத்தில், யார்தான் சொன்னபடி கேட்காமலிருக்கக்கூடும். அவன் தர்மத்திற்கு விரோதமாகப் பொய் சொல்லும்படி நேர்ந்தது. அவன் தன் மாதிரி எத்தனையோ மனிதர்கள் பயமுறுத்தப் பட்டார்களென்றும், தான் டாக் பங்களாவுக்கு பணம் வாங்காமல் பால் சப்ளை செய்ததாகக் கூறியிருக்கிறான்.

முன் சொல்லிய திவான் கோபால் லால் ஏப்ரல்மீ 22உ அரெஸ்டு செய்யப்பட்டார். அவரை 2 மாதம் ஜெயிலில் போட்டு, சாட்சி இல்லாததினால் விடுதலை செய்யப்பட்டார். அவர் என்ன சொல்லுகிறார் என்பதை நாம் கேட்போம்.—"ரிவன்யூ ஆபீசரும், எம். ஷெயிபு கான் முதலியவர்களால் கேட்கப்பட்ட லஞ்சத்தை நான் கொடுக்காததினாலேதான் அரெஸ்டு செய்யப்பட்டேன். நான் ஜெயிலில் இருந்த பொழுது, என்னுடைய

பந்துக்களிடமிருந்து எனக்காக ரூபா 5000-மும் என் மைத்துனனுக்காக ரூபா 1000-மும் முன்சொல்லியவர்கள் வாங்கிக்கொண்டார்கள். அதனால்தான் நான் விடுதலை செய்யப்பட்டேன்." (ஸ்டேட்—340. பக்கம் 468.)

ராம்லால் என்னும் 15 வயதுள்ள பையன் ஏப்பிரல்மீ 23வ அரெஸ்டு செய்யப்பட்டு மேமீ 13வ விடுதலை செய்யப்பட்டார். (ஸ்டேட் 342.)

லாலா கணேஷ்டாஸ் பாஸியும், அவருடைய இரு சகோதரர்களும் அரெஸ்டு செய்யப்பட்டார்கள்; அவர் ரூபா 2000-லஞ்சம் கொடுத்தபோதிலும், போலீஸார்கள் அவர்களை விடாமல், ஓடு காலிகளென்ற காரணத்தினால் அவர்களுடைய சொத்துக்களை ராஜாங்கத்திற்கு சேர்த்துக்கொண்டு அவர்கள் விடுதலையான பிறகும், அவர்களுடைய சொத்துக்களை 1919-ம் வருஷம் ஜுலைமாதம் 19-ந்தேதி வரை திரும்பிக்கொடுக்கவில்லை. (ஸ்டேட் 346.)

இன்னும், அகல்கார் முனிசிபாலிட்டிக்கு வைஸ் பிரிஸிடெண்டும் லாம்பர்தாருமாகிய சௌதிரி பாஸல்டார் அரெஸ்டு பண்ணப்பட்ட சிநேகிதர்க்கு சாட்சியாக சென்றதால், வாரண்டால் பிடிக்கப்பட்டு, விசாரித்து ரூபா 500-அபராதம் போடப்பட்டார். மேமீ 26வ காரணமில்லாமல் கர்னல் ஓபிரயனால் லாம்பர்தார் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அவர் லாம்பர்தார் வேலையிலிருந்தபொழுதுதான், முன் சொல்லிய அவசரமான மோட்டார் ரஸ்தா போடப்பட்டது. அந்த ரஸ்தா போடப்பட்ட விதத்தை பின்வருமாறு சொல்லுகிறார். "ஏழை உழைப்பாளிகள் கூலியில்லாமல், ஸெயில்தாரனாலும், ரெவின்யூ ஆபீஸரனாலும் அதிக கண்டிப்போடும், ஆக்ரமத்தோடும் வேலை வாங்கப்பட்டார்கள். இம்மா

திரி ரிப்பேர்க்காக ரூபா 1800-வாங்கினதில் ரூபா 700-அல்லது 800 - தான் கண்டிராக்டருக்கு கொடுக்கப்பட்டது" என்று சொல்லுகிறார். இக்கொடூரங்களைத் தவிர, டாக்பங்களாவிற்கு முன்னால் எல்லா ஜனங்களையும் சேகரித்து, மெஷின் பீரங்கிகளால் ராணுவஸ்தர்கள் குண்டு போட்டார்கள்" என்றும் பாசல்டாட் கூறுகிறார்.

முன் சொல்லிய பிரகாரம் ரூ. 1000 பீரங்கிக்குண்டுகள் போடக் கட்டடம் கட்டுவதற்கும், தந்திக் கம்பிகளை ரிப்பேர் செய்வதற்கு சிறிது தொகையும், ராணுவ தர்மகர்த்தாக்களால் வாங்கியதாக ஆதாரம் இருக்கிறது.

ராம்நகர் (Ramnagar)

ராம் நகர், அகல்கார்போலுள்ள சீனுப் நதிக்கரையிலுள்ள ஒரு கிராமம். இது ரயில்வேயிக்கு சமீபத்தில் உள்ளதல்ல. காலம் சென்ற மகாராஜா ரன்ஜிட் சிங்குக்கு இங்கு பாரதாரி என்ற அரண்மனை உண்டு.

இவ்வூரில் எப்பிரல்மீ 6உயில் ஒரு ஹார்ட்டலும், 15உயில் சிறியதான ஹார்ட்டலும் நடந்தது. நம் சக்கிரவர்த்தியின் பிம்பம் கொளுத்தப்பட்டதாக ஒரு வசனம் இருக்கிறது. வேறு ஒரு பாழ் கார்யமும் செய்ததாக தெரியவில்லை. இவ்வசனம் நிஜமாயிருக்குமோவென்று அநேக சாட்சிகளைக் கேட்டும், ராம்நகரில் 1919வருஷ நவம்பர்மீ 30உயில் பொதுஜனக் கூட்டம் கூடியும் விசாரித்ததில் ஒரு எள்ளளவு ஆதாரவுகூடக் கிடைக்கவில்லை. ஆகையால் இந்த வசனம் கட்டுக்கதையான மூட்டையென்று நம் மனதில் புலப்படுகிறது. இச்சமாசாரத்தைக் குறித்து போலீஸ் உத்தியோகஸ்தர்கள் எப்பிரல்மீ 24உ வரையில் ஒரு இடத்திலும் சொன்னதாகத் தெரியவில்லை.

கர்னல் ஒபிரயன் தன்னுடைய உயர்ந்த புத்தியோடு

போலீஸ் ஆபீசர்கள் வேறு சமாசாரங்களில் ஊக்க முடையவர்களாய் இருந்ததினால்தான், அவர்கள் ஒரு இடத்திலும் சொல்லவில்லை என்கிறார். இச்சமாசாரம் போலீஸ் டைரியிலாவது காணப்படாததால், முழுப் பொய் என்றே ஆகிறது. ஏப்ரல்மீ 17உ இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ், ராம்நகர் முழுவதையும் சுற்றின போதும், ஒருவரிடமாவது சொன்னதாகத் தெரியவில்லை.

இச் சமாசாரத் தலைவன், தான் ராம்நகரில் வெகு நாள் இருந்த போதிலும், மேமீ 9உக்கு முன்னால் அரெஸ்டு செய்யப்பட வில்லை.

இப்பேர்க் கொத்த பொய் சமாசாரத்தால், ராம்நகர் ஜனங்களின் மனது புண்பட்டது மல்லாமல், அநேகர் காரண மில்லாமல் அரெஸ்டு செய்யப்பட்டு, சட்டப்படி விசாரிக்கப்படாமல் தண்டனையும் விதிக்கப் பட்டார்கள்.

பிறப்பிலேயே தெய்வபக்தியுள்ள, 60 வயது சென்ற லாலா காரம் செண்டு, ராணுவ ரத்தினங்களுக்கு எளிதான பாத்திரமானார். இவர் 27 பேர்களோடு அரெஸ்டு செய்யப்பட்டு, தண்டனை அடைந்தார். இவர் ரயில்வேயிலும், போஸ்டு ஆபீஸ்களிலும் 1877 முதல் 1900வரு வரையில் இருந்த யோக்கியதையுள்ள கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் வேலையை விட்ட 1900வரு முதல், இவர் "உலக சிந்தனைகளை துறந்தவரே." அவர், "ராஜ பிம்பம் எரித்தலும் கிடையாது அதைப்பற்றி எழவு கோலமும் கிடையாது" என்று சொன்னார்.

இவர் சில பையன்கள் கடைத் தெருவுகளில் 'ஹெய்! ஹெய் ரவுலட்டு சட்டத்திற்கு' என்று சொன்னதாக சாக்ஷி சொல்லியிருக்கிறார். ஏப்ரல்மீ 7உயில் ராம்நகரில் ஹார்ட்டல் தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை

யென்று ஒரு ஸப் இன்ஸ்பெக்டர் எழுதிச் சென்றதாகவும் கூறி யிருக்கிறார். 24௳ ரிவன்யூ ஆபீஸர் ராம் நகருக்கு வந்து லாலா காரம் சண்டு இன்னும் சில குழப்பம் செய்தவர்களையும், விலங்கு போட்டு, குஜ்ரன்வாலாவில் ஜெயிலில் வைக்கப்பட்டவர்களாக மேமீ 16௳ வரை யிருந்தார்கள். அதுவரையில் எந்தக் காரணங்களுக்காக அவர்கள் அடைக்கப்பட்டார்க ளென்ற சமாசாரம் அவர்களுக்கே தெரியாது.

இப்படி காரணங்க ளில்லாமல் அரெஸ்டுகள் செய்தது, ராம்நகர் ஜனங்களுக்கு அதிக கோபமுண்டாயிற்று. அவர்களும், லாலா சுந்தா தாஸனும், ராஜாங்கத்திற்கு கோபத் தந்திகள் அடித்ததற்காக, ஜூன்மீ 11௳ குஜ்ரன்வாலாவி லிருக்கும் டிப்டி கமிஷனர் முன்னிலையில் கொண்டுவரப்பட்டு, கர்னல் ஓபிரயனால் மூக்குகளைப் பூமியில் பலமாகத் தேய்க்க வேண்டிய தென்ற கடும் தண்டனை பிறந்தது.

லாலா ஹான்ஸ் ராஜ், ராம்நகர் லாம்பர்தார் அப்துல்லாவுக்கு, ரூ. 200 லஞ்சம் கொடுக்காதவிட்டால், மறுநாள் அரெஸ்டு செய்யப்படுவாரென்று சொல்லப்பட்டார். இன்னும் அவர் சொல்லுவதாவது, "மறுநாள் காலையில் லாம்பர்தாருடைய சகோதரரும், ஒரு மீபாக்கிறியும் என் வீட்டுவாயலில் தடிகளோடு உட்கார்ந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். நான் கதவைத்திறந்து கொண்டிருக்கும் பொழுதே, என்னை அவர்கள் பலமாக இழுத்து, கடைத் தெருவுக்குக் கொண்டுவந்து விட்டார்கள்." இப்பொழுதும் ஹான்ஸ்ராஜ் லஞ்சம் கொடுக்க மாட்டே னென்றார். அப்பொழுது அவரை, முரட்டுத்தனமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுபோகப்பட்டார். அவர் தன்மேல் குற்றம் சாட்டுவதற்காக எப்படி

ராஜ ஜனங்கள் பொய் சாட்சி தயார் செய்தார்களென் பதை விவரித்திருக்கிறார். எப்படி யிருந்தபோதிலும், வாஜிராபாத்தில் ஏப்ரல்மீ 15உயி லிருந்து சாயந்திரம் $5\frac{1}{4}$-மணிக்கு அகல்காருக்கு வந்திருக்கும் பொழுது, மனுஷத் தன்மையால் ராம்நகரில் நடந்ததாகச் சொல்லப்பட்ட ராஜபிம்பம் எரிப்பதில் லாலா ஹான்ஸ் ராஜ் ஒருவராக இருந்திருக்கவே முடியாது.

முன் சொல்லிய கேஸ் பொய்யென்று சொல்லச் சென்ற லாலா கோபிந்து ஷெய், இன்னும் மற்றவர்களும் அரெஸ்டு பண்ணப்பட்டு, லாலா சுந்தர் தாஸுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை இவர்களுக்கும் விதிக்கப் பட்டது.

இன்னும் லாலா ராம் சந்து, ராஜ பிம்பத்தைக் கொளுத்தினர் என்றதி லிருந்து, ஒரு துணி பொம்மையைக் கொளுத்தின கதை வெளிப் பிறந்ததென்று சொல்லி யிருக்கிறார்.

37 வருஷங்களாக உழைத்த ஸ்டேஷன் மாஸ்டர், ஸெயிடு ஹாக்கிம் ஷா, தன்னை ராஜ ஜனங்கள், ராஜ பிம்பம் எரிய விட்டதைப் பார்த்ததாக ஏவப்பட்டு, தான் பொய் சொல்லமாட்டே னென்று வெளியில் வந்ததாக, சாக்ஷியம் கொடுத்திருக்கிறார்.

பகவன் தாஸ், இந்த ராஜ பிம்பம் எரித்த கேஸில் ராஜாங்கத்திற்கு சாக்ஷி சொன்னவர். இப்பொழுது, ராஜாங்கத்தாரின் பயத்தால் அப்படி சாக்ஷிசொன்ன தாகவும், அந்தக் கேஸ் கட்டுக்கதை யென்றும் சொன்ன திற்கு ஆதாரம் இருக்கிறது.

ஜெயிலில் போடுவது, சொத்தை அபகரிப்பது, மனத்தைப் புண் படுத்துவது முதலிய கஷ்டங்கள், அகல்கார்

ராம்நகர் ஜனங்களின் பேரில், தேச பக்தியைத் தொலைப்ப தற்கே கர்னல் ஒபிரயனால் பண்ணப் பட்டதே தவிர, ராஜாங்க பலத்தை ஊன்றுவதற்கு செய்யப் படவில்லை. இக் கொடிய பரிபாலனத்தை, மிகவும் வெறுக்கப் பண்ணு கிறது நம்முடைய தேசத்தாராகிய மாலிக் ஸாயிப்கான், கர்னல் ஒபிரயனோடு ஒத்தாசை புரிந்ததனால்தான்.

ஹாபி ஸாபாத் (Hafi Zabad)

ஹாபிஸாபாத் வாஸிராபாத் - லையால்பூர் ரயில்வே லயனில், அகல்காருக்கு 15-மைல்களுக் கப்பாலுள்ள, 5000 ஜனத்தொகை அடங்கிய ஒரு வியாபார தொழிலை யுடைய கிராமம்.

அமிர்தஸாஸிலும் லாகூரிலும் நடந்த அக்கிரமங்களை மறுக்க நடந்த ஹார்ட்டல் சமாசாரம் இவ்வூருக்கும் பர விற்று. ஏப்ரல்மீ 14உ ஹாபிஸாபாத்தில் ஒரு பெரிய ஹார்ட்டல் நடந்தது. மதுபானம் பண்ணினவர்களைப் பெரும்பாலும் உடையதான ஒரு ஜனக்கூட்டமானது, ஸ்டேஷனுக்கு 300-கஜத்திற் கப்பால்வரும் ரயில் வண் டியை நிறுத்தி, முதல்கிளாஸ் வண்டியில் உட்கார்ந்திருக் கும் லெப்டினண்ட் டாடமைக் கொல்லுவதற்காக, ஜன் னல் கண்ணாடிகளைக் கற்களால் அடித்தார்கள். குடி உட் கொள்ளாத சில ஜனங்கள், அநியாயமாய்க் கொல்லுவ தற்கு யத்தனிப்பதைக்கண்டு, தங்கள் உயிர்களை துல்ய மாக நினைத்து, அதிக கஷ்டத்துடன் டாடத்தைக் காப் பாற்றினார்கள். இச்சமயத்தில், ரயில் டாடத்தின் உத்திர வால் சீக்கிரம் வாஸிராபாத்க்குக் கொண்டுவரப்பட்டது. இச்சமாசாரத்திற்குப் பிறகு 15உயில், டாப்யென்ற குடி காரனால் 100-ஜனங்கள் சேர்க்கப்பட்டு, தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன. ஆனால் டாப்பிடிக்கப்பட்டு பந்தோ

பஸ்த்தில் வைக்கப்பட்டான். அவனுடைய கூட்டம், தன் தலையவனுக்கு ஏதோ உயிர் பயம் வருமென்று கருதி, தாசில் ஜன்னல்களை உடைத்து அவனை மீட்க முயன்றார்கள். ஆனால் ஒரு குண்டு சப்தமானது அவர்களைச் சிதறி ஓடும்படி செய்தது.

இச்சமாசாரங்களைக் கர்னல் ஒபிரயன் கேட்டு, ஹாபிஸாபாத்துக்குவந்தார். அகல்கார் முதலிய இடங்களில் நடந்த அக்கிரமங்கள் இங்கேயும் கொஞ்சம்கூட தழையில்லாமல் அனுசரிக்கப்பட்டது.

இருப்புப்பாதையைத் தடுத்தக்கேஸில், பீகாரிலால் காபூரும், அவன் வேலைக்காரனும் அரெஸ்டுசெய்யப்பட்டார்கள். தயார்செய்த பொய்சாட்சி ஆதாரத்தின்பேரில் ஒருமாதம் ஒன்பதுநாட்கள் ஜெயிலில்வைக்கப்பட்டு, காபூரும், அவன் ஊழியனும் விடப்பட்டார்கள். (ஸ்டேட்-396)

ஹார்ணம் ஸிங்கு தன்பிள்ளை ஜெயிலில் அடைக்கப்படாம லிருக்கநினைத்து, ரூ. 200-லஞ்சம் கொடுப்பதாகச் சொன்னபோதிலும், சிறைசெய்யப்பட்டான்.

போலீஸுக்கு லஞ்சம் கொடுக்க பணமில்லாத காரணத்தினால், தன்பிள்ளை ஜயிலுக்குப்போகவேண்டி யிருந்ததென்று ஹூக்காம்தேவி சொல்லுகிறாள்.

ருல்டூ ராம் என்னும் ஒரு வக்கீல் குமாஸ்தா, ஜனப்பிரதிநிதிகள், ஐரோப்பிய யுத்தத்திற்குப் பொருள், ஜன ஒத்தாசைகள் செய்திருந்தபோதிலும், பொய்சாட்சியின் ஆதரவால் ஜயிலில் வைக்கப்பட்டார்களென்று, அத்தாட்சி கொடுத்திருக்கிறார்.

ஸார்தார் திவான்ஸிங்கு, ஸப்எடிட்டர், பின்வருமாறு சொல்லுகிறார் :—“ முதலில், பெருமைவாய்ந்த 6-மனிதர்கள் அரெஸ்டு செய்யப்பட்டு விலங்கிடப்பட்டார்கள். அப்படி செய்யப்பட்டதற்கு காரணங்கள் போலீஸார்கள்

அவர்களுக்குச் சொல்லவில்லை. $1\frac{1}{2}$-மாதத்திற்குப்பிறகு, இவர்கள்மேல் குற்றங்கள் சாற்றப்பட்டன. பொய் சாக்ஷிகள் தயார் செய்வதற்காகப் போலீஸார்கள், ஜனங்களுக்குத் தெரியும்படி மார்க்கட்டு, ரஸ்தாக்களில் இவர்களை அடித்ததுமல்லாமல், அவமானமான வசவுகளால் இவர்கள் மனதைப் புண்படுத்தினார்கள்..............இதற்குள், போலீஸார்கள் பொய்சாக்ஷிகள் தயார் செய்கிறதாக வைஸராயுக்கும், லெப்டினண்ட் கவர்னருக்கும் தந்திகள் கொடுக்கப்பட்டன. இந்த பெரிய உத்தியோகஸ்தர்கள் தந்திகளில் அடங்கிய சமாசாரத்திற்கு ஒரு பரிகாரமும் செய்யவில்லை. காதிலும் போட்டுக்கொள்ளவில்லை.................................இப்படி தந்திகளெல்லாம் அனுப்பப்பட்டதென்று சமாசாரம் தெரிந்தவுடன் கர்னல் எல்லா தந்திகளையும் மறைத்து வைத்து விட்டார். எல்லா ஹாபிஸாபாத்கேஸ்களுக்கும், ஒரே நாளில் முடிவு பிறந்தது. ....ஹாபிஸாபாத்துக் குற்றவாளிகளான பெரிய வக்கீல்கள், வியாபாரிகள், மிராசுதார்கள், இன்னுமற்ற கனவான்களும், அவமானப்படுத்துகிறதற்காகவே, வீதிகளில் நடத்திக் கொண்டுபோகப் பட்டார்கள்."

கர்னல் ஒபிரயன் ஆட்கள் சேர்ப்பதிலும், ராணுவச் சட்டத்தினால் சிறை செய்வதிலேயும், சுறுசுறுப்புடன் சீர்திருத்தங்கள் செய்தாரென்பதை லாலாபேசெண்டு சோப்ரா விவரித்திருக்கிறார். முதலில் செய்த சீர்திருத்தமாவது :—அநேக ஜனங்கள் ஏப்பிரல் மாதம் 30-ந்தேதிக்கு அரெஸ்டு பண்ணப்படாத காரணத்தால், அநேக ஆபீஸர்களை வேலையிலிருந்து நீக்கியதையும் தவிர, தன் மனஞ்சார்ந்த ராணுவ ரத்னங்கள் நியமிக்கப் பட்டார்கள். ஏப்பிரல் மாதம் 30-ந்தேதி மாலை எல்லா தலைப்பாகைப் போடுகிறவர்கள் மறுநாள் தாசிலுக்கு

முன்னேவரத் தப்பினுல், சுடப்படுவார்க ளென்ற ஆக்ஞை பிறந்தது. இந்த ஆக்ஞை அநேக நாட்கள் நடை பெற்றதென்று சோப்மா சொல்லி யிருக்கிறுர்.

முன்சொல்லிய உத்திரவு மாதிரியே பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் கொடுக்கப்பட்டது. சில ஆங்கில சிப்பாய்கள் பணம் கொடுக்காமலே கடைகளிலிருந்து சாமான்கள் வாங்கி யிருக்கிறுர்கள். அப்படி பணம் கொடுக்கப்படாமல் இருந்த ஒரு கடைக்காரன் ஆண்டு ரூஸ்டுகூட இன்ஸ்பெக்டரிடம் புகார் செய்தபொழுது, 2 போலீஸ் காரர்கள் வேலையிலிருந்து, நீக்கப்படவும், ஒரு ஹப்வில்தார்ன் வேலையில் கீழ்தள்ளப்படவும் படி நேர்ந்தது. மிஸ்டர் சோப்ரா, தான் இங்கிலாந்தில் 13 வருஷங்கள் வசித்தவனுகவும், ஆக்ஸ்போர்ட்டில் படித் தவனுகவும், இந்தியன் அம்பிலன்ஸ்கோரில் சேர்ந்தவ னுகவும் இருக்க ஜனங்களுடைய கஷ்டங்கள் நிவர்த்திக் கிறதற்கே தேசக்குழப்பத்தில் சேர்ந்ததாகச் சொன்னுன்.

லாலா பீலி ராம், காபூர், 23 மற்று ஜனங்களோடு, 15 அடி நீளம், 12 அடி அகலமுள்ள அறையில் அடைக் கப்பட்டதாக சாக்ஷியம் கொடுத்திருக்கிறுர். அப்படிக் கொடூரமாய் அடைத்து வைக்கப்பட்டதற்குக் காரண மென்னவென்றுல், அவர்கள் விசாரிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளானதால் தான்.

பாரஸ்டு டிபார்ட்மெண்டில் முக்கிய குமாஸ்தாவா யிருந்த ஸார்தார் மீலா ஸிங்கு ஆள் சேர்க்கும் கொடு மையை நன்றுய் விவரத்திருக்கிறுர். தன்னுடைய அரெஸ்டு எப்படி நடந்தது என்று பின்வருமாறு சொல்லு கிறுர்: "நான் எப்ரல் மாதம் 21-ந்தேதியில் வாரண்டு இல் லாமல் அரெஸ்டு பண்ணப்பட்டேன். 22-ந்தேதி தான் வாரண்டுகள் தயார் செய்யப்பட்டு, ஜில்லா மேஜிஸ்டிரேட்

டின் கை ஒப்பம் வாங்கப்பட்டது மிகவும் துர்கந்தமான ஹாபிஸாபாத் ஜயிலில், 2 நாட்கள், அடைக்கப்பட்டேன். 4 மனிதர்கள்கூட இருக்கமுடியாத இச்சிறிய அறையில் 23 பேர்கள் அடைக்கப்பட்டார்கள். மலஜலம் போவதற்குக்கூட எங்களுக்கு உத்தாம் கிடையாது. இருந்த இடத்திலேயே எல்லாரும் மலம் கழிக்கவேண்டிய இருந்தது. 1919வரு ஏப்ரல் மாதம் 23-ந்தேதி நாங்கள் குஜ்ரன்வாலா ஜில்லா ஜயிலுக்குக் கொண்டுபோகப் பட்டோம். நாங்கள் 23 பேர்களும், இரண்டு இரண்டு பேர்களாக விலங்கிடப்பட்டதைத் தவிர, ஒரே சங்கலியால் எல்லாரும் கட்டப் பட்டோம். கத்தியெடுத்த துருப்புச் சிப்பாய்கள் எங்களை அழைத்துச் சென்றார்கள். நடுவழியில் தாகசாந்திகூடபண்ண, சிப்பாய்களுக்கு தயவு பிறக்கவில்லை. இதோடு கஷ்டங்கள் நிற்கவில்லை; அடிமைச் சேவகர்கள்கூட எங்களை அவமரியாதை செய்தார்கள். இவர்களே இப்படி செய்திருக்கும்பொழுது, போலீஸ் அக்கிரமங்கள் எவ்வளவு யிருந்திருக்குமென்று யோசித்துப்பார்க்க முடியும்.

குஜ்ரன்வாலா சூப்ரின்டெண்டெண்டு, 7, 8, மனிதர்களைத்தாங்கள்கொண்டுவந்தஉணவைச்சாப்பிடலாமென்று தயவு கூர்ந்தார். குஜ்ரன்வாலா ஜெயிலிலிருந்து, விலங்குகளோடு நாங்கள் வெளியில் கொண்டுவரப்பட்டபோது எங்களுக்குத் தயாராகச், செய்துவைத்திருந்த உணவை எடுத்துக்கொண்டு செல்வதற்கு உத்தரவு கொடுக்கவில்லை. ஆகையால், அந்த நாள் முழுவதும் பசியால் வருந்தும்படி நேர்ந்தது. மேமாதம் 29-ந்தேதி லாகூருக்குக் கொண்டு வரப்பட்டோம். எங்களுடைய கேஸ்களை கவர்ன்மெண்டார் விசாரிக்க, ஜூன் மீ 7உ எடுக்கப்போகிறதாக சொன்னபொழுது, என்னுடைய உறவினர்களுக்குத்

தெரிவிக்கிறதற்காவது, என் வக்கீல்கள் ஆலோசனைகள் கொடுக்கவாவது இடம் கொடுக்கவில்லை—டாக்டர் யும் ரெக்சிங்கு, ஸிம்லா அஸிஸ்டெண்டு ஸர்ஜன் என்னுடைய சாட்சிகளில் ஒருவர். கவர்ன்மெண்டார் அவரை அழைத்துவர தயவு கூறவில்லை. குறுக்குகேள்வியிலோ வென்றால், டாக்டர் டாலட்ராம் என்னுடைய சிநேகித ரல்லவென்று ஒப்புக்கொண்டார். கவர்ன்மெண்டு சாக்ஷிகள், பயத்தினால் பொய் சொல்லியதாகச் சொல்லுகிறார்கள்.

என்னுடைய சாக்ஷிகள் நான் அச்சமயத்தில் கண் வியாதியினால் வீட்டில் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த தால் நான் வீட்டை விட்டு வெளியில் போகவில்லை என்று சொன்னார்கள். நான் 60-வயது சென்ற கிழவன். நான் இதுவரையில் தேசசமாசாரங்களில் ஒத்தாசை செய்தவ னல்ல. கர்னல் ஒப்ரயன் புத்தி சொன்னதின்பேரில் மிஸ்டர் வேஸ் ரூபா 500 - எனக்கு அபராதம் போட் டார். என்னை மன்னிக்க வேண்டுமென்று கொடுத்த மனுவைக் கவனிக்கவில்லை. இது போலீஸ்காரர்களுடைய விஷமமே. இச்சமாசாரங்கள் ஒரே இடத்தில் ஒரே நாளில்தான் நடந்தது. பிறகு 14, 15-தேதிகளில் ஜனங் குழப்பங்கள் நடந்தன. போலீஸுக்கு நடக்கும் குழப் பங்கள் நன்றாகத் தெரிந்திருந்தபோதிலும் அடக்க நிறுத் தாமல், கை கொடுத்ததாகவே நான் சொல்வேன். மறு நாள் மருந்து இல்லாத சாதா குண்டு போட்டதாலேயே உயிர்சேதமில்லாமல் கூட்டம் கலைக்கப்பட்டது. முதல் நாளே போலீஸ் தங்கள் கடமையைச் செய்திருந்தால், மறு நாள் கூட்டத்தின் குழப்பம் உண்டாயிருக்காது.

ஜனங்கள் பாழ்செய்தது, சிறிய பணத்தொகைக்குள் தான். இதற்கு ரூ. 6000 அபாாதம் ஜனங்களிலிருந்து

வாங்கப்பட்டது. இதைத்தவிர போலீஸ் செலவுகளும், ஜனங்கள் கொடுக்கும்படி நேர்ந்தது. (ஸ்டேட்மெண்டு 389)

இன்னமும், லாலா ராம் ஷெஹேற, ஆங்கில-ஸம்ஸ்கிருத பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டர் அரெஸ்டுபண்ணப் பட்டவர்களில் ஒருவர். அவர் கிரகத்திலில்லாதபொழுது, அவருடைய வீடு இரவு 11-மணிவரை சோதிக்கப்பட்டது. பிறகு, அவரைச் சிறைசெய்து, குஜ்ரன்வாலா ஜெயிலில் இரண்டு வாரங்கள் வைக்கப்பட்டு, மறுபடியும் ஹாபிஸாபாத்துக்கு கொண்டுவரப்பட்டார். அவர் பின்வருமாறு சொல்லுகிறார் :—

" இவ்விடத்தில், என்னை கவர்ன்மெண்டு சாக்ஷியாக செய்வதற்கு அநேக பிரயத்தனங்கள் நடந்தன. போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னுடைய படிப்பைப்பற்றி முகஸ்துதி செய்ய ஆரம்பித்தார். அதுபயன்கொடாததால், என்னை பயமுறுத்த எண்ணி, என்னுடைய சொத்துகள் எல்லாம் பிடுங்கப்படுமென்றும், நான் தூக்குபோடப் படுவேனென்றும், தீபாந்திரத்திற்கு ஆயுசுக்கும் கொண்டுபோகப்பட வேண்டுமென்றும்—இம்மாதிரி என்னை நடுங்கடித்தார்.

நான் ஒருநாளும் தேசத்தின் மானத்தை விற்றவனாக ஆகமாட்டேனென்று தைரியமாகச் சொன்னேன். என் தகப்பனாரும் குருவும் ஸத்யம் எப்பொழுதும் சொல்லச் சொல்லி யிருக்கிறார்களென்றபொழுது, இன்ஸ்பெக்டர், என்னை நிஜம்தான் சொல்லச் சொல்லுகிறதாகச் சொன்னாரே ஒழிய வேறு ஒன்றும் பொய் சொல்ல வினவவில்லையென்று பயமுறுத்தினார். நான் கர்தியால் ஸிங்கு, லாலா ராம் ஷெய்க்கு சாக்ஷி சொல்லாதபடி பல வழிகளால் என்மனதை மாற்ற முயன்றார்கள். அவர்களுடைய பயங்கரமான வார்த்தைகளைக் கண்டுபயந்து,

ஸ்டேட்மெண்டு கொடுத்ததின் பேரில் என்னை விடுதலை செய்தார்கள்.

"1919வரு மேமீ 21வ ஹாபிஸாபாத் கோர்ட்டு முன்னால் நாங்கள் கொண்டுவரப்பட்டோம் நாங்கள்தான் குற்றவாளிகளென்று நிச்சயப்படுவதற்காகச் சாட்சி சொல்லப் புத்தியீனர்களாகிய தாழ்ந்தஜாதி ஜனங்கள் கொண்டுவரப்பட்டார்கள். நாங்கள் விலங்கிட்டபடியே மலஜலம் போக்கவேண்டி யிருந்தது. விலங்குகளுடன், இரவுகளில் மந்தார வெளியில் உறங்கும்படி நேர்ந்தது.

"எப்பிரல்மீ 23வ நான் கர்னல் ஓபிரயன் முன்னால் கொண்டுவரப்பட்டேன். ரூ. 1000 ஜாமீன் கொடுத்த தற்குப் பிறகுதான் என்னை விடுவித்தார்கள் நான்கு நாட்களுக்கு அப்பால் நான் டிப்டி கமிஷனரால் கூப்பிடப் பட்டு, இனிமேல் ஒரு நிபந்தனையிலும் நான் இருப்ப தாக யில்லை யென்று சொல்லப்பட்டேன். என்னை மன்னிப்புக்கு உரக்கக் கத்தும்படி சொன்னபோது, நான் அதே மாதிரி சொன்னேன். அவன் "ஓடிப் போ," என்று சொன்னதிற்கு அர்த்த மென்னவென்றால், நான் இச்சமயத்திற்குப்பிறகு கவர்ன்மெண்டு சாக்ஷியாகப் பாவித்துக் கொள்ளவேண்டு மென்பதுதான்.

"நான் வாக்குத்தத்தம் கொடுத்தபடி, ராஜ சாக்ஷியாய் வந்ததினால்தான், நான் மறுபடியும் அரெஸ்டு பண்ணப் படவில்லை யென்று போலீஸ் டிப்டி ஸூப்ரன்டென்டென்ட் சொன்னார்.

"இப்பொழுதும், ஜனப்பிரதிநிதிகள் ஒரு விதமான கெடுதலையும் தாகிலிலும், ஸ்டேஷனிலும் செய்ய வில்லை யென்பதை உறுதியாகச் சொல்லுகிறேன்." (ஸ்டேட்மெண்டு 413.)

முன் சொல்லியதற்குக் காரணம் யாதென்றால், எப்படி கர்னல் ஒபிரயன் முகஸ்துதி செய்வதோடுகூட, பய வார்த்தைகளால் படித்தவர்களைப் பொய்யர்களாகப் பண்ணினார் என்பதை காண்பிக்கிறதற்குத்தான்.

மிகவும் படித்தவர்கள் மேல், அமானுஷத் தன்மையான தொந்தரவுகளால் குழப்பத்தை நிறுத்த முயன்றது, கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் கீழ்மைத்தனத்தைக் காட்டுகிறது.

சாங்லா ஹில் (Sangla Hill)

ஸாங்லா ஹில், லாகூர்க்கு 62 மைலிலுள்ள, 4000 ஜனத் தொகை அடங்கிய, ஒரு புது ஊர். ஏப்ரல்மீ 12உ காந்தி மகான் அரெஸ்டு செய்யப் பட்டதற்காக, இங்கு ஒரு ஹார்ட்டல் நடந்தது. மிஸ்டர் பாஸ்வொர்த் ஸ்மித்து (Mr. Bosworth Smith) வார்த்தைகள் பிரகாரம், "ஹார்ட்டலுக்காக நியமித்த ஜனக்கூட்டத்தின் பிரயோஜனம் உடனே தெரியவில்லை. 13உ பெய்ஸாகி சந்தை குழப்பமில்லாமல் கலைந்தது........15உ ஸாங்லாவுக்கும், ஜாலன்வாலாவுக்கும் நடுவில் தந்திக் கம்பிகள் அறுக்கப் பட்டன. ஒரு சீக்கன், இன்னும் மற்ற தன் இனத்தாரோடு கூட ஸாங்லா ஸ்டேஷனில் அடைந்திருந்த இந்திய ராணுவ குற்றவாளியை, பலத்தினால் விடுவித்தார்கள். 15உ சாயந்திரம் கொலை செய்ய எண்ணங்கொண்டு, தந்தி இன்ஸ்பெக்டர் மிஸ்டர் வெல்ஸை எதிர்த்தார்கள்."

முன் சொல்லிய ஆதாரவில், அதிகப் பொய்க் கலப்புமிருக்கிறது.

சீக்கன் செய்த காரியம் தனியாகச் செய்த காரியம் தான். மிஸ்டர் வெல்ஸ்மீது கொலை செய்வதற்காகப்போன படையெடுப்பு மிகவும் பொய். நம்முன்பு இருக்கும்

சாக்ஷியத்திலிருந்து, ஸாங்லா ஜனங்கள் கொலை செய்வதிலாவது, பாழ் செய்வதிலாவது கைகொடுத்தவர்களென்று தெரியவில்லை. இப்படிக்கு இருக்கும்பொழுது, ஏப்ரல் 19-ம் தேதி ராணுவச்சட்டம் விளம்பரம் பண்ணப்பட்டது. டிப்டி கமிஷனர் ஸாங்லாவை அடைந்து, மறுபடியும் ஜனங்கள் ஹார்ட்டல் நடத்தக் கூடாதென்று சொல்லியதைத் தவிர, வேறுவிதமான காரியம் ஒன்றும் செய்யவில்லை. 22-ம் தேதியில் ராணுவக் கூட்டத்தோடு, ஒரு ஆபீஸர் இவ்வூருக்கு வந்து, 11 ஜனப் பிரதிநிதிகளை ஒரு மணிநேரம் அரெஸ்டில் வைத்து, விடுதலை செய்தான். மறுபடியும் ஏப்ரல் 26-ம் தேதியில் அரஸ்டுகள் ஆரம்பித்தன. ஜனங்களைப் பயமுறுத்துவதற்காக, மே மாதம் 12-ம் தேதி மலையின் உச்சியிலிருந்து குண்டுகள் போட்டார்கள். காப்டன் யூவிங், என்பவன், ஹண்டர் கமிட்டிக்கு முன்னால் "குண்டுகள் போட்டது ஜனங்களைப் பயமுறுத்துவதற்காக என்றார்.

அதேநாள், 13 தேசபக்தர்கள் அரெஸ்டு செய்து விலங்கிடப்பட்டார்கள். இன்னும் 64 அரெஸ்டுகள் நடந்தன. தங்களுடைய தலைப்பாகையால் கட்டப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் செல்லப்பட்டார்கள். தினந்தோறும் ஜன சங்கை எடுக்கப்பட்டது. 14-ம் தேதி இன்னும் 47 அரெஸ்டுகள் நடந்தது. மிஸ்டர் பாஸ்வொர்த்ஸ்மித் ரூ. 50,000 அபராதம் கொடுப்பார்களேயானால், அரெஸ்டு பண்ணப்பட்டவர்கள் விடப்படுவார்களென்று சொன்னார். பின்சொல்லிய சாக்ஷியத்தில், ஸ்மித் அந்த பணத்தொகை ஸாங்லா ஜனங்களுக்கு அபராதமாகக் கேட்டானே ஒழிய, விடுதலைக்காகக் கேட்கவில்லை என்று மறுத்தான். எப்படியிருந்த போதிலும், மேமீ 19உ 124-குற்றவாளிகளில் 116 பேர்கள் விடுதலை பணம்

வாங்கினதற்குப் பிறகு, பண்ணப்பட்டார்களென்பதற்கு ஆதாரம் இருக்கிறது. விடுதலை பண்ணப்பட்ட 8 பேர்கள் ஜூன் மாதம் 1-ம் தேதி விசாரணை அடைந்து, 6 மாத சிறைவாசமும் ஒவ்வொருவருக்கு ரூபா 100 அபராதமும் போடப்பட்டது.

காரணமில்லாமலே ஜனங்கள் டஜனடி அடிக்கப் பட்டார்கள். பணம் கொடுக்காமலே, பல சரக்குகள் கடைகளிலிருந்து எடுத்துக்கொண்டு போகப்பட்டது. மரியாதையுள்ள பெரியமகான்கள், ஆபீஸர்களின் பங்கா இழுப்பதற்கும், கொடும் வெயிலில் நிற்கும்படிக்கும் ஏவப்பட்டார்கள். பள்ளிக்குழந்தைகள் வெயிலில்நின்று கொண்டு, தினந்தோறும் பின்வருமாறு சொல்லும்படி கட்டளை யிடப்பட்டார்கள். "ஐயா! நாங்கள் பிசகு ஒன்றும் செய்யவில்லை; இனியும் பிசகுசெய்யமாட்டோம்" இப்படிப்பட்ட ஆர்டர் மிகவும் கடுமையாகப் பிரயோகப் படுத்தினதால், மிஸ்டர் பால்மோகண்டு, தன் மருமானுக்கு மன்னிப்பு வாங்க முடியவில்லை. இந்தப் பையன் 3-நாள் "ரோல்-காலு" க்காக வெயிலில் சென்றான். 5-ம் நாள் திரும்பி வந்த பொழுது, அதிகமாக வியர்வைவிட ஆரம் பித்தான். "அவன் கீழே விழுந்து, வாயிலெடுக்க ஆரம் பித்தான். டாக்டர் கயன்செண்டு மருந்து கொடுத்த போதிலும், பிரயோசனம் ஒன்றுமில்லை; பட்டாள ஐ. எம். எஸ். கூட அசாத்தியமாயிற்று. இச்சிறு வாலிபன் 7வயில், உயிர் துறந்தான்."

பாஸண்டுராம் 25 பேர்களோடு மேமாதம் 19-ந் தேதி அரஸ்டு செய்யப்பட்டான். அவர்களிடமிருந்து வாக்குமூலம் வாங்கப்படாமலே மே மாதம் 22-ந்தேதி விடுதலை பண்ணப்பட்டார்கள்.

16

பாஸண்டுராம் சொல்லுகிறார்: "பணம் கொடுக்கிற தாகச் சொன்னபோதிலும், எங்களுக்கு மலமூத்திரம் போக, போலீஸார் ரூபா 2 தினந்தோறும் பெற்றுக் கொண்டு தான் உத்திரவு கொடுத்தார்கள்." மே மாதம் 23-ந்தேதி ஸப் இன்ஸ்பெக்டர் பாஸண்டை ராஜசாட்சி சொல்லாதபோனால் அரஸ்டு பண்ணுவதாகச் சொன்னார். அதைத் தவிர அடிகொடுத்து நடுத் தெருவுகளில் இழுத் துச் சென்றதாக அவரே சொல்லியிருக்கிறார். (வா. 368)

ஸோகன்மால் கடையிலிருந்து ஐஸ்கட்டிகள் மணங்கு மணங்காகப் பணம் கொடாமலே, ராணுவச் சிப்பாய்க ளால் கொண்டுபோகப்பட்டது. (வா. 369)

ஹரிஸ் சந்திரா, ராணுவ சிப்பாய்களை சலாம் செய்த போதிலும், கை, கால், முதுகில் 6, 7 அடிகள் பலமாக அடிக்கப்பட்டான். கமாண்டிங்கு ஆபீஸர் கோபத் துடன் சவுக்கால் அடித்தார். சவுக்கு காலில் சுற்றிக் கொண்டது. (வா. 570)

ஸார்தார்ஸிங் பொய் சாக்ஷி சொல்லும்படி, வற் புறுத்தப்பட்ட போதிலும், அவர் சொல்லவில்லை. அதற் காக அரெஸ்டு செய்யப்பட்டு, 4-நாள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டார். அவரோடு இன்னும் 97-பேர் கைது செய்யப்பட் டிருந்தார்கள். அப்பொழுது முனிஸிபல் கமிட்டியார், நாங்கள் எல்லோரும் விடுதலை பெறவேண்டு மென்றால், அவர்கள் இஷ்டப்படி சாக்ஷி சொல்லும்படி கேட்டார்களாம். (வா. 371)

லக்ஷ்மணதாஸ் என்பவர், ஒரு சத்திரத்து காண்டி ராக்டர். ராணுவசட்டம் பிரயோகித்த நாட்களில், இச் சத்திரமானது, ராணுவ முக்கிய ஸ்தலமாக பண்ணப்பட் டது. இதனால் அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 150

நஷ்டம் வந்தது. இந்த நஷ்டத்தோடு இல்லாமல், பட்டாளம் இவரிடமிருந்து உணவுபொருள் வாங்கிக்கொண்டதால், இராப்பகலாய் விழித்துக்கொண்டு கடையிலே இருக்கும்படி ஆயிற்று. ஒரு நடு இரவில், அஸிஸ்டண்டு கமிஷனருக்கு ஒருவன் பால் வாங்கவந்தபோது, விளக்கு ஏற்றினது, கர்பியூ (Curfew) உத்திரவை மறுத்ததாக குற்றம் சாட்டப்பட்டு, லக்ஷ்மணதாஸும் அவர் சிநேகிதர்களும் அரெஸ்டு செய்யப்பட்டார்கள். அவர் பட்டாளத்திற்கு பால் ஸப்ளைசெய்வது கட்டளையா யிருந்தபடியால், விளக்கில்லாமல் பால் எடுத்துக் கொடுக்க முடியாத காரியமாகையால் தீபம் ஏற்றினதாக காரணம் கூறியபோதிலும், ஆபீஸர்கள் காது கொடுக்கவில்லை. அவருடைய பெரிய சகோதரர் என்ன சமாசாரமென்று ஆபீஸர்களை விசாரித்ததால் அவரும் அரெஸ்டு செய்யப்பட்டார். அவர்கள் 2-நாட்கள் ஜெயிலில் வைக்கப்பட்டு ஜாமீன் பேரில், விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலையான பிறகு, மறுபடியும் அழைக்கப்பட்டு, மனிதர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 அபராதமும், 6-சாட்டை அடிகளும் கொடுக்கப்பட்டது.

லக்ஷ்மணதாஸ் சாட்டை அடிதாங்க சக்தியற்றவரென்று, வைத்ய சர்டிபிகெட் பிறந்தபோது, அவருடைய அபராதம் இரண்டு பங்கு அதிகமாகப் பண்ணப்பட்டது. (ஸ்டேட்-372)

ஷாம் தாஸ், வெயிலில் பந்தோபஸ்துடன் நிற்கும்போது, தாகசாந்தி செய்யக்கூட உத்திரவு கொடுக்கப்படவில்லை. இக்காரணத்தினல் வியாதி வந்தபொழுது வைத்திய சகாயம் கொடுக்கப்படவில்லை. 9-நாட்களுக்கு அப்புறம் விடுதலை செய்யப்பட்டார். அவர் பின்வரு

மாறு கூறுகிறார். "இப்பவும், என்னுடைய அரெஸ்டின் காரணங்கள் எனக்குத் தெரியாது" (வா. 373)

நிகல்சண்டினுடைய மருமானை ஆபீஸர்கள் தேடி அகப்படாததினால், மாமாவே அதற்கு அரெஸ்டு செய்யப்பட்டார். எல்லோர் மாதிரி, அவரையும் வெயிலில் நிறுத்திவைத்தார்கள். அவர் இந்த அனுபவத்தைப்பற்றி பின்வருமாறு சொல்லுகிறார். "என் கிழ சரீரத்தின் பேரில் வெயில் கொடூரமாகப் பட்டதனால், மூன்றுதடவைகள் மூர்ச்சைப்பட்டு கீழே விழுந்தேன். இம்மாதிரி 5, 6-நாட்கள் அவஸ்தைப்பட்டு, காரணங்கள் கூறப்படாமல் விடுதலைசெய்யப்பட்டேன்." இதே மாதிரி ஜான் முகமது பாடோலி அவஸ்தைப்பட்டதல்லாமல், அவருடைய கடையிலிருக்கும் சாமான்கள் பணம் கொடாமலே போலீஸ்காரர்கள் கொண்டு போகப்பட்டதென்று கூறியிருக்கிறார். (வா. 375)

ஸோகன்லாலும், இன்னும் இவர் மாதிரி கண்ணியமுள்ள இருவர்களும், சேர்ந்து வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். சப் டிவிஷனல் ஆபீசர்ரெய், ஸ்ரீ ராம் 18உயில் ஸாங்லாவைப் பார்க்க வந்ததாக கூறியிருக்கிறார்கள். அரெஸ்டுகள் செய்யாமல் திரும்பி சென்று விட்டார். 19உ கர்னல் ஒபிரயன் இவ்விடம் வந்து சேர்ந்தார். இவரும் ஹார்ட்டல் குற்றத்தை மன்னித்ததாகவும் கூறியிருக்கிறார்கள்.

ஏப்பிரல் 22உதான் அரெஸ்டுகள் ஆரம்பித்தன. (ஸ்டேட் 376, ப. 503), மிஸ்டர் பாஸ்வொர்த் ஸ்மித் சொல்லும் வார்த்தைகள் நிஜமாயிருக்குமேயானால் 2-பெரிய ஆபீஸர்கள், முதலில் அரெஸ்டுகள் செய்யாமல் போயிருக்க மாட்டார்கள். ஆகையால், பாஸ்வொர்த

ஸ்மித்தே சிறு பிசகுகளைப் பெரியதாக எண்ணியதுமல்லா மல், அரெஸ்டுகள் செய்யும்படி ஸந்தர்ப்பங்கள் தானே உண்டு பண்ணினதாகச்சொல்லலாம். மோமன் ஸ்டேஷன் எரித்தது, தந்திகளை அறுத்தது முதலிய தப்பிதங்கள் சரியான ஆதாரவுகளில்லாததால், ஸாங்லா ஜனங்கள் செய்ததாகச் சொல்லமுடியாது.

முன் சொல்லிய 3-சாக்ஷிகளும் அரெஸ்டுகளைப்பற்றி சில முக்கிய சமாசாரங்கள் கூறியிருக்கிறார்கள். எல்லாம் ராணுவச்சட்டத்தின் பரிபாலனத்தையே சாறுகிறது. வாக்குமூலங்களோ பொய் ஆதாரவுகள் தயார் செய்யப் பட்டதென்பதைக் கூறுகின்றன. நம் சாக்ஷி சொல்லுகிறதாவது "மேமீ 11உ குற்றம் ருசு தயார் செய்வதற்காக, 29-ஜனங்களை அடித்துப் பயமுறுத்தி சம்பாதித்தார்கள். இவர்களில் 10-வயதிற்குட்பட்ட பையன்களும், ரயில்வே கிளார்க்குகள் 14-பேர்களும் இருந்தார்கள். அவர்களில், 3½ வருஷத்திற்கு கெட்ட நடத்தைக்கு சிறைசெய்யப் பட்ட பிரம்ஸிங்குபாஸஸ் ஒருவன் (ஸ்டேட். 376)

தாகபசியுடன் தானும், மற்றவர்களும் அவர் அவர்கள் ஊரில் இருப்பதாகக் காட்டிக்கொள்ள, வெயிலில் நிற்கும்படி நேர்ந்ததென்றும், அநேகர் சோர்வை அடைந்தார் என்றும், இதனால் தான் 2-மாதங்கள் ரொம்ப கஷ்டப்பட்டதாகவும், சாம்ஸிங் நந்தா சொல்லுகிறார். இது தவிர, இவர் 12-ந்தேதி ஸாங்கலாவில் இருந்ததாகப் போலீஸ்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர் அத்தேதியில் குஜ்ரான்வாலாவில் சாக்ஷி சொல்ல இருந்திருக்கிறார். 150-மனிதர்களை அரஸ்டு செய்து, 9-நாள் காவலில் வைத்திருந்து ரூ. 50,000 கொடுத்தால் விடுதலை செய்வதாகச் சொன்னார்களாம். (வா. 380)

குந்தன்லால் இங்கிலீஷ் சிப்பாய்கள் பணம் கொடுக்காமல் சாமான் எடுத்துச் சென்றார்களென்று சாக்ஷி சொல்லி யிருக்கிறார்.

மோமன் (Moman)

மோமன், லாகூர்பக்கத்தில், ஸாங்லாக்குக்கு 6-மைல்கள் தூரத்திலிருக்கும் கிராமம். இதில் வசிக்கும் ஜனங்களோ மற்றவர்களோ கொள்ளை அடித்துத் தந்திகளை அறுத்தது மிகவும் பெரிய குற்றமென்றே நினைக்கிறோம். இப்படி அறுத்ததற்கு வேண்டியதற்கு மேல் ராஜாங்கத்தார் சிக்ஷை செய்ததும் கண்டிக்கத்தக்கது. எவ்வளவோ அநியாயங்கள் இவ்விடம் நடந்திருந்தபோதிலும், ஸாங்க்லாவில் ஒரு பாகமானதால் விவரித்துச் சொல்லப்படவில்லை.

மணியன்வாலாவும் பக்கத்து ஊர்களும்

மணியன்லாலா 500-ஜனங்கள் அடங்கிய, ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்திலுள்ள ஒரு சிறிய கிராமம். ஏப்ரல்மீ 16வ ஜனங்களால் ஸ்டேஷனானது கொள்ளையடிக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது. அமிர்ஸ்டாரில் நடந்த அக்கிரமங்கள் தூக்கிச்சொல்லப்பட்டதால், இப்போர்க்கொத்த பாழ்வேலைகள் செய்யக் காரணமாயிற்று.

கிராமத்தார்கள் செய்த பாழ்வேலை மிகவும் கொடியதாயிருந்தபோதிலும், அவர்களிடமிருந்து வாங்கின அபராதம், தாங்கமுடியாததே ஆகும். ஏப்பிரல்மீ 19வ டாபான் ஸிங் ஸ்டேஷனுக்கு துருப்பு சிப்பாய்கள் அடங்கிய ரயில் வந்தது. மணியின்வாலா கிராமத்திற்குள் சென்று கொண்டிருக்கும் பொழுதே சிப்பாய்கள் குண்டு போட ஆரம்பித்தார்கள். இப்படி குண்டு போடப்பட்ட பொழுது, ஒரு மனிதன் இறந்தான். மற்றவர்களுக்குக் காயம்பட்டது.

இப்படி கண்ட விடங்களில் குண்டு போடுவதற்கு கொஞ்சங்கூட காரணம் கிடையாது. இந்த வெடி குண்டு சப்தத்தைக் கேட்டமாத்திரமே, ஸ்திரீகளும், கிழவர்களும் வாலிபர்களும் பயந்து தெருவுக்கு வந்து விட்டார்கள். 30வது லாம்பர்தாராக இருந்தவராயு மிருந்த ஸார்தார் அட்டர் ஸிங்கு உயிர் தப்பித்தார். அவருடைய வீடு சோதிக்கப்பட்டும் சமையல் பாத்திரங்கள் உடைக்கப்பட்டும், திரவியங்கள் எடுத்துக் கொண்டு போகவும் பட்டன. இந்த அட்டர் ஸிங்கு 115-பிராயங்கள் அடைந்த தொண்டு கிழவர். இவரும், இந்தர்ஸிங்கும் அரெஸ்டு செய்யப்பட்டு இவர் கிழத்தனத்தால் நடக்க முடியாததால் குதிரையில் வைத்துக்கொண்டு போகப்பட்டு, சாமான் கொண்டு போகும் ரயில் வண்டியில் வைக்கப்பட்டார்கள். இது இரும்பினால் செய்யப் பட்டதினால், எப்பிரல்மீ வெயிலில் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பது, யோசித்தால் தெரியவரும்.

சில நாட்களுக்குப் பிறகு, மிஸ்டர் பாஸ் வொர்த் ஸ்மித், இந்த ஊருக்கு ராணுவக் கூட்டத்தோடு வந்தார். அங்கே என்ன நடந்தது என்பதைக் கண்டுவர, மிஸ்டர் லாப் ஸிங்கு சென்றபொழுது, தேஜ் ஸிங்கு பின்வருமாறு அவர் முன்னால் சொன்னார் :—

"போலீஸ் உத்திரவால் எல்லா கிராமத்தார்களும் ராணுவ பங்களாவுக்கு சென்றபொழுது, நான் பின் தங்கி சென்றேன். அச்சமயத்தில், பாஸ் வொர்த் ஸ்மித் முன்ஷி நவாப் டின்னேயும், லேக்ஞ ஸிங்கையும், பலமாக அடித்ததைப் பார்த்தேன். அதற்குக் காரணமென்றால், பாய் மூல் ஸிங்கு ராஜாங்க விரோதமாக பேசினரென்று அவர்கள் பொய் சாக்ஷி சொல்லமாட்டோ மென்றதால் தான். இதற்காக, போலீஸ் பந்தோபஸ்தில் வைக்கப்

பட்டார்கள். பிறகு பாஸ் வொர்த் ஸ்மித், பெண்கள் இருக்கும் இடம் சென்று, அவர்களின் முகத் துணியை பலமாகப் பிடுங்கி எடுத்து, வாயில் வந்தபடி திட்டினார். அவர் அவர்களை "ஈக்கள், பொட்டை நாய்கள், பெண் கழுதைகள்," இன்னும் மற்ற அவமான வார்த்தைகளால், வைதார். இந்த அநியாய வார்த்தைகளை உச்சரிப்பதோடு நிற்காமல், புண் செய்த மாட்டை தார்க்குச்சியால் குத்து வதுபோல பின் வருமாறு பெண்களை அவமதித்தார். "சேவகர்கள் நீங்கள் தரித்துக் கொண்டிருக்கும் உடுப்பு களைச் சோதிப்பார்கள். நீங்கள் புருஷர்களோடு படுத்துக் கொண் டிருக்கும்பொழுது, ஏன் அவர்களை வெளியே போக விட்டீர்கள்," என்று சொல்லி, பலாத்காரமாக முகலில் தட்டிக் கொடுத்தார். (வா. 580)

குர்தேவி என்னும் கிழவி மிஸ்டர் லாப் ஸிங்கு முன் னால் சொல்லுகிறாள். "ராணுவச் சட்டம் நடை பெற்ற பொழுது, ஒருநாள் பங்களாவுக்கு முன்னால் பாஸ்வொர்த் ஸ்மித் 8 வயதிற்கு மேலுள்ள ஆண்களைக் கூட்டுவதைப் பார்த்தேன். இப்படி இவர்கள் பங்களாவில் உட்கார்ந்து கொண் டிருந்தபொழுது, அவர் திரும்பி கிராமத்திற்குள் வந்து, உணவு கொண்டுபோகும் ஸ்திரீகளை அழைத்துச் சென்றார். அப்படி வரும் ஸ்திரீகளை கண்டபடி திட்டி, முகத் துணிகளை தன்கம்பினாலேயே தள்ளிவிட்டு, அஞ்சலி பந்தம் செய்துகொண்டிருந்த அந்த ஸ்திரீகளைப் பலமாக அடித்தார். அவர் என்னை எளிதாக விடவில்லை. என்னை யும் இரண்டு தடவைகள் அடித்து, முகத்திலும் தடியால் தட்டினார். அதோடு நில்லாமல், எல்லா ஸ்திரீகளையும் "பன்றிகள், பொட்டை நாய்கள், கழுதைகள்" என்று வைது, போலீஸ்காரர்களைக் கொண்டு புடைவைகளை இழுத்து எறிந்து மானபங்கம் செய்வதாகவும் சொன்னார்.

இதோடு மனப் பிரீதி அடையாமல் என்னைக் காலால் உதைத்து, “எல்லா ஸ்திரீகளையும் செவிகளை ஒருவர் ஒருவர் பிடித்துக்கொண்டு தோப்பிக்கரணம் போடச் சொன்னார்”

இச் சமாசாரம் நிஜமென்று அநேக மணியன்வாலா கிராம ஸ்திரீகள் சொல்லி யிருக்கிறார்கள்.

கவர்ன்மெண்டு பள்ளி உபாத்தியாயராகிய நவாப்டின், மூல் ஸிங்கு ராஜாங்கத்தைப் பற்றி தூஷணை செய்து பேசியதாக பாஸ்வொர்த் ஸ்மித் இவரைப் பொய் சாக்ஷி சொல்லும்படி உத்தரவு பண்ணப் பட்டாரென்று கூறி யிருக்கிறார். இன்னமும் அவர் சொல்வதாவது, “நான் அப்படி பொய் சொல்ல மாட்டேனென்று வினவின பொழுது, ஸ்மித், என்னை அடித்தார். நான் கவர்ன்மெண்டு உபாத்தியாயா யிருந்ததால், கவர்ன்மெண்டுக்கு சாக்ஷி சொல்ல வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டதாகவும் சொல்லுகிறார். அவர் கைகொண்ட வரையில் அடிக்கப்பட்ட போதிலும் அடங்காததால், பங்களாவுக்கு இழுத்துச் செல்லும்படி சேவகனை உத்தரவு செய்தார்.

முன் சொல்லியது மாதிரியே, லேக்ரு ஸிங்குக்கும் நடந்தது. நாங்கள் பங்களாவுக்கு அழைத்து செல்லப்பட்டபொழுது, சாகிபு ஸ்திரீகளை அடைந்தார். அவர்கள் அழும் தொனிகள் எங்கள் செவிகளில் பட்டது.

முன் சொல்லிய மானபங்கமான அக்கிரம காரியங்களை செய்த மிஸ்டர் பாஸ்வொர்த் ஸ்மித், நாகரிகமுள்ள எந்த ராஜாங்கத்திலும் உத்தியோகம் வகிக்க மனிதரல்லவென்றும் ராஜ உடுப்பு போட மரியாதை யற்றவரென்றும் நிச்சயமாக எண்ணுகிறோம்.

மணியன்வாலாவைச் சார்ந்த மற்ற ஆதாரவுகள், எப்

படி ஸ்திரீகள் அவமதிக்கப்பட்டார்க ளென்றும், காரண மில்லாமல் தேசபக்தர்கள் அரெஸ்டு செய்யப்பட்டு, சிறை புகச் செய்து, தீபாந்தரங்கள் அனுப்பப் பட்டார்க ளென் றும், எப்படி சட்டத்திற்கு விரோதமாக, பாஸ் வொர்த் ஸ்மித் விசாரிப்புகள் செய்தாரென்றும் தெரிவிக்கிறது.

தெய்வாதீனமாக, ராஜ மன்னிப்பால் தீபாந்திரம் அனுப்பத் தயாரா யிருந்த தேசபக்தர்கள் விடுதலை செய் யப் பட்டார்கள். ஒருநாளும் ராஜமன்னிப்பால் மாறு அடைந்ததாக பாவிக்கப் படமாட்டாது. ராஜ மன்னிப் பைத் திருணமாக செய்ய, போலீஸ் அநியாயங்களும், பாஸ் வொர்த் ஸ்மித்தின் அக்கிரமங்களும் போதும்.

இவ்விதமான மிருகத் தன்மை கூடிய அக்கிரமங்கள் நடந்த மணியன்வாலா கிராமத்தை மிஸ்டர் வி.பெ. ஆண்டு ரூஸ், காங்கிரஸ் சப் கமிட்டிக்காக நேரில் சென்று வாக்கு மூலங்கள் சேகரித்தார்.

நவான்பிண்டு (சாக் நம்பர்-78)

நவான் பிண்டு என்னும் கிராமம், மணியன்வாலாவை விடச் சிறியது. காங்காதோக்ரன் தாசிலைச் சேர்ந்த ஒரு ஊர். ஸ்திரீகளுக்கு நடந்த அக்கிரமங்கள் தவிற, மற்ற வைகளில், மணியன்வாலாவின் தலையெழுத்து போல்தான் தாபான் ஸிங்கு ஸ்டேஷனை, நவான் பிண்டு மனிதர்கள் எரியவிட்டதாக வைத்துக் கொண்ட போதிலும், அதற் காக விதிக்கப்பட்ட தண்டனைகள் நம் 40 சாக்ஷிகள் சொல் லியதின் பேரில், ஈடுகளாக எண்ணப்பட மாட்டாது.

ஸ்டேஷன் எரிக்கப்பட்ட மறுநாள், ஜில்லா போர் டுக்கு ஒரு மனிதன் மெம்பராக எடுக்க, ஜனங்கள் வோட் கொடுக்கக் கூடிய பொழுது, சில வோட்டர்கள் அரெஸ்டு செய்யப் பட்டார்க ளென்று குடால் ஸிங்கு

சொல்லுகிறார். ஸ்டேஷன் எரித்த 3-வது நாள் குஷால் ஸ்டேஷனுக்குச் சென்றபொழுது, ஸப் இன்ஸ்பெக்டர் போர்ட்டர்களை யார், யார் அரெஸ்டு செய்யப் பட்டவர்களில் குற்றம் பண்ணினவர்கள் யென்று கேட்டபொழுது, அவர்கள் இருட்டில் கூட்டமாக இருந்ததால், ஒருவரும் தங்களுக்குத் தெரியவில்லை யென்று சொன்னார்கள். அப்பொழுது ஸப் இன்ஸ்பெக்டர் போர்ட்டர்களை முகஸ்துதி செய்ய ஆரம்பித்தார். அப்பொழுது அவர்களைக் குறித்து அவர் சொல்லியதாவது:—அவர் நவான் பிண்டு ஜனங்களைக் கூட்டுவதாகவும், அவர்களில் யாராவது சிலர் காண்பிக்கப்பட்டால், அவர் காரியத்திற்குப் போதுமென்றார். இக் காரியம் ஜயம் அடைவதற்காக, கிராம ஜனங்கள், அடைக்கப்பட்டு, வரிசையாக பாஸ் வொர்த் ஸ்மித் பங்களாவுக்கு எதிரில் உட்கார்த்தப் பட்டார்கள். அப்பொழுது ஸ்மித்து போர்ட்டர்களைப் பார்த்து, யார் யார் இந்த வரிசைகளில் தீ வைத்தார்க ளென்றார். போர்ட்டர்களால் சிலர் காட்டப்பட்டு, அவர்கள், கைகால்களுக்கு விலங்கிடப் பட்டார்கள்.

"லாம்பர்தார், ஜெயில்தார், ஸப் இன்ஸ்பெக்டர் முதலியவர்களோடு சூழப்பட்ட போர்ட்டர், கூட்டத்தில் ஒரு மனிதனைச் சுட்டிக்காட்டினான். இதேமாதிரி மற்றொரு போர்ட்டர் அதே மனிதன் தான் என்று நிச்சயமாகச் சொன்னான். இவ்வழியாக 28, 29-மனிதர் அரெஸ்டு செய்யப்பட்டார்கள்—பகவான்ஸிங்கு, தான் எரித்த தினம் வீட்டைவிட்டு வெளியில் கிளம்பவேயில்லை என்று சாதித்தார். அதற்காக, அவர் ஒரு மாத்தில் கட்டப்பட்டு, 12-தடவைகள் சாட்டை அடி அடிக்கப்பட்டார். பிறகு அரெஸ்டு செய்யப்பட்டவர்கள் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். என்னை அரெஸ்டு பண்ணினார்கள்.

நாங்கள் எல்லோரும், ஒரு சத்திரத்து அறையில் அடைக்கப்பட்டோம். நீர், உணவு கொடாமல் 2-நாட்கள் வைக்கப்பட்டோம். எங்களுக்காக உணவு கொண்டுவந்தவர்கள் துரத்தப்பட்டார்கள்.......................................

....

3-ம் நாள் கெனல் பங்களாவிற்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டோம். அன்றே ஈசுவரா ஸிங்கு வந்தார். அவர் கவர்ன்மெண்டுக்கு சாட்சி சொல்லாதுபோனால், அரெஸ்டு செய்யப்படுவாரென்று உத்திரவு பிறந்தது. இதே மாதிரி, டேஜ்ஸிங்கின்பேரிலும், தட்டான் ஸாது ஸிங்குபேரிலும் உத்திரவுகள் பிறந்தன. நாங்கள் அப்படி குற்றம் சாட்டும் சாட்சிகளாக வருகிறோம் என்ற வாக்குத் தத்தம் கொடுத்த பிறகுதான், விடுதலை செய்யப்பட்டோம். கிராமத்து ஜனங்களுக்கு முன்னால், அரெஸ்டு செய்யப்பட்டவர்கள், இந்த தண்டனைகள்தான் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டு, அதற்கு மாறுதலாகச் சொன்னவர்கள் அடிக்கப்பட்டார்கள்."

எப்படி மிஸ்டர் பாஸ்வொர்த் ஸ்மித் விசாரித்தாரென்றும், குற்றம் சாட்டும் சாட்சிகளை உண்டுபண்ணினார் என்றும், நமக்கு நன்கு விளங்குகிறது. அம்ருதசரஸ் கால்ஸா காலேஜ் பிரின்ஸிபல் மிஸ்டர் வாத்தன், நவான் பிண்டில் நியாயம் சரிவர நடத்தப்படவில்லையென்று ரிகார்டு செய்திருக்கிறார். பொதுச் சமாசாரத்திற்காக, அவருடைய ஆதாரவை அப்படியே எழுதியிருக்கிறோம்:—

"ஜிவான்ஸிங்குவின் புத்திரர்களாகிய பகவான்ஸிங்கும், மகார்ஸிங்கினுடைய இருப்பிடம், நவான்பிண்டு, சாக் நம்பர் 78, காங்காதோக்ரன், தாசில், குஜ்ரான்வாலா ஜில்லா—(1) இந்த இரண்டு மனிதர்களும், ஸ்டேஷனை எதிர்த்ததில் குற்றஞ் சாட்டப்பட்டு, 1919ஞு மேமீ

9வயில், பினல் கோடு, ஆர்ட்டிக்கள் 6, ஏ, பி, சி, ரூல்கள் படி, 3–வருஷ கடுந்தண்டனையும், ஆள் ஒவ்வொருவரும் ரூபா 200-அபராதம் போடவும் பட்டார்கள்.

இப்படி குற்றம் சாட்டப்பட்டவர்கள், பின்வரும் காரணங்களால், தங்களைத் தண்டித்தது அநியாயம் என்று சொல்லுகிறார்கள்:—

(*a*) எரித்த தினத்தில், தாங்கள் ஸ்டேஷனில் இல்லாததாக அநேக சாட்சிகளைக்கொண்டு ருசு செய்வதாகச் சொன்னபோதிலும், சாட்சிகள் கோர்ட்டாரவர்களால் கூப்பிடப்படவில்லை.

(*b*) அவர் குற்றவாளிகளாக ரயில் போர்ட்டர்களால் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அப்போர்ட்டர்களுக்கு இவர்கள் முகம்கூட சத்தியமாகத் தெரியாது. இவர்களைத் தெரிந்தெடுத்ததற்குக் காரணம் யாதெனில், போர்ட்டர்கள் லஞ்சம் கொடுக்கப்பட்டார்கள்.

(*c*) இப்படி தெரிந்து, இந்த 2-சகோதரர்களைமட்டும், எடுத்ததற்குக் காரணம் யாதென்றால், இவர்களுடைய குடும்ப விரோதிகளான ஜெளலாஸிங்கு, ஜெயில்தார், லாம்பார்தார், ஜீவான்ஸிங்கு முதலியவர்களுடைய தூண்டுதல் தான். இந்த விரோதம் லாம்பார்தார் வேலைக்காக 5-வருஷ காலமாக உண்டானது. இதற்குச்சாட்சி இருக்கிறதென்று சொல்லப்பட்டபோதிலும், கோர்ட்டாரவர்கள் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

(*d*) இப்பேர்க்கொத்த வாக்குமூலம் என்னுடைய மாணுக்கனுகிய 18 - வயதுள்ள ஜகத்ஸிங்கிடமிருந்து கிடைத்தது. அவன் குற்றவாளிகளில் ஒருவன். அவனுடைய ராஜவிசுவாசம் எனக்கு நன்கு தெரியும். அவனுக்கு ராஜத்துரோக எண்ணங்களிருந்தது என்பது

ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. சீக்கர்கள் சுபாவ குணமாகவே ராஜபக்தி உடையவர்கள். இந்த பையனுடைய உறவினர்கள் சர்க்கார் பள்ளியில் அவனைக் கற்கச் செய்தார்கள். நானே ரயில் கூலிகளை விசாரித்ததில் இந்த இரண்டு சகோதரர்களும் குற்றமற்றவர்களென்றும் அவர்களுடைய விரோதிகளால் கேஸ்கொண்டு வரப்பட்டதென்றும், நிச்சயமாகச் சொல்லுகிறார்கள்.

(e) அவனுடைய மூன்றாவது சகோதரன், மங்கல் ஸிங், ஸ்டேஷன் எரிந்துக்கொண்டிருக்கும்பொழுது அவ்விடம் இருந்ததாக கூலியாள்கள் சொன்னார்கள். ஆனால் டாபன் ஸ்டேஷனில் இருந்ததாகச் சொன்னநாளில், ஜகத் ஸிங் என்னும் சினேகிதனோடு கால்ஸா காலேஜில் இருந்ததாக வைன் பிரின்ஸபாலும் இன்னும் மற்றவர்களும் சொல்லுகிறார்கள். இவைகள் நம்பத்தக்கதே.

மாங்கல்ஸிங்கு, ஜகத்ஸிங்குக்கு லீவு வாங்குவதற்காக அன்றையதினம் நேரில் கண்டேன். நான் இச் சமாசாரத்தை டிப்டி கமிஷனருக்கு எழுதியவுடன் மாங்கல்ஸிங்கு விடுதலை செய்யப்பட்டான். இப்படி மகார் ஸிங்கு விடுதலைசெய்யப்பட்டபொழுது, அவனைப் போர்ட்டர்கள் குற்றவாளியென்று சொன்னதால், இவன் சகோதரர்மேல் இருக்கும் கேஸ், பொய்யென்று எண்ண இடம் இருக்கிறது.

(ஒப்பம்) ஜி. யே. வாத்தன்,
பிரின்ஸிபல்,
கால்ஸா காலேஜ், அமிர்தசாஸ்,
(ஸ்டேட் 613.)

முன்சொல்லிய மனிதர்கள், மிஸ்டர் வாத்தன் ஸ்டேட்மெண்டின்பேரில் விடுதலை செய்யப்பட்டார்கள். எல்லா

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும், மிஸ்டர் வாத்தன் போலுள்ள கனவான்கள் அகப்படுவது துர்லபம்.

ஜெயில்தார், லம்பார்தார்கள் தூண்டுதல்மேல், போர்ட்டர்கள் நவான்பிண்டில் இல்லாதமனிதர்களைச் சுட்டிக்காட்டி, அவர்கள் கைது செய்யப்பட்டார் என்றும் பிஷான்ஸிங் சொல்லுகிறார். (ஸ்டேட் 612.)

பாஸ்வொர்த் ஸ்மித்தால், ஸாரெயின்ஸிங்கு, மங்கல்ஸிங்கை ஒரு கூட்ட கைதிகளில் தெரிந்தெடுக்கும்படி உத்தர விடப்பட்டான். அப்பொழுது ஸாரெயின்ஸிங்கு சொல்லுவதாவது:—"நான் ஸ்டேஷன் எரித்தக் கூட்டத்தில் அவனைப் பார்க்கவில்லையென்று சொன்னேன். அப்பொழுது ஜெயில்தார் ஜ்வாலாஸிங்கும், ஜிவான்ஸிங்கும் கலகத்தில் நான் இருந்ததாக சாதித்தார்கள். இதற்குமேல் 3-மாதம் என்னை சிறைசெய்தார்கள். பிறகு வாத்தன் ஸ்டேட்மெண்டுமேல் என்னை விடுதலை செய்தார்கள்." இதனால் நாம் அறிந்து கொள்வது என்னவென்றால், காரணமில்லாமல் ஸாரெயின்ஸிங்கு சிறை செய்யப்பட்டான். அவன் லம்பார்தாராய் இருந்தபோதிலும் அதன் பிரயோஜனங்களை அடையாமல் வேலையிலிருந்து நீக்கப்பட்டான்; சிறைசெய்யப்பட்டது கொடுமையான அநியாயமாகும்.

ஸோஹான்ஸிங்குபேரிலும், முன் சொல்லிய சமாசாரங்கள் நடந்து விடுதலை செய்யப்பட்டான்.

குஷாலுடைய மனைவி, தன்பிள்ளை வேலையிலிருந்து நீக்கப்பட்ட பொழுது பின் வருமாறு சொல்லுகிறாள்: "பிள்ளைக்கு சாக்ஷிகள் கொண்டு வருவதற்கு எனக்கு உத்தரவு கொடுக்கப்படவில்லை. ரயில்வே போர்ட்டர்கள் சொன்ன காரணத்தால், கைது செய்யப்பட்டான். கைது செய்யப்பட்ட ஒருவனிடமிருந்து ஸ்டேட்மெண்டு வாங்

கப்படவில்லை. அப்படி வாங்காதது அநியாயமென்று ஒருவன் சொன்ன காரணத்தால், மரத்தில் கட்டப்பட்டுப் பலமாக அடிக்கப்பட்டான்." (ஸ்டேட் 616)

மற்ற இடங்களில் நடந்த மாதிரி நவான்பிண்டு கிராமத்திலேயும், ஆபீஸர்கள் பணம் கொடாமலே சாமான்களை எடுத்துச் சென்றார்கள் ஹீராஸிங்கிடமிருந்து மட்டும், ரூபா 108-விலையுள்ள சர்க்கரை, பால், நெய் முதலியவைகள் எடுத்துச் செல்லப்பட்டன இந்த பலஹீனமான ஸிங்கை, அவன் ஊர் ஜனங்கள் சிறு தொகைகள் இனமாய்க் கொடுத்துக் காப்பாற்றினார்கள்

கிஷின்சண்டு என்பவன், மிஸ்டர் பென்னி, பாஸ்வொர்த் ஸ்மித் கூடாரத்திற்கு இனமாய் 400-ரூபாய்க்கு உணவுப் பொருள்கள் கொடுக்கும்படி கட்டளையிடப்பட்டான். அவனை ஊர்மனிதர்கள் சிறு தொகைகள் கொடுத்துக் காப்பாற்றினார்கள். (ஸ்டேட் 619.)

கான்ஸிங்கின் பெண்ஜாதி ஜ்லாலி என்பவள் தன் 70-வயதுள்ள புருஷன் அரெஸ்டு செய்யப்பட்டாரென்று கூறுகிறாள். அவள் இன்னும் சொல்வதாவது, "லஞ்சம் வாங்காமல் போலீஸார்கள் எங்கள் பந்துக்களுக்கு அன்னம் கொடுக்க உத்தரவு கொடுக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் ரூபா 1-கொடுக்கவேண்டியிருந்தது." (ஸ்டேட் 620.)

நண்டுஸிங்கு சொல்லுகிறார், "10-வயதிற்கு மேல்பட்ட ஆண்பாலர்கள் எல்லாரும் கூட்டப்பட்டார்கள். மிஸ்டர் பாஸ்வொர்த் ஸ்மித் அவர்களை வரிசைக்கிரமமாக காலையிலிருந்து மாலைவரை வெயிலில் நிற்கும்படி செய்தார். அப்பொழுது என்னுடைய சகோதரன் பகவான்ஸிங்கு தான் ஒரு குற்றமும் செய்யவில்லையென்று ஸ்மித்திடம் சொன்னான். அதற்காக அவன் மரத்தில் கட்டப்

பட்டு, 12-அடிகள் அடிக்கப்பட்டான். இந்தகோரத்தை ஸ்மித்து பார்த்து, பகவான் செத்தாலும் கேள்வி முறை கிடையாதென்றார். இப்படி பகவான் அடிக்கப்பட்ட வுடன், மூர்ச்சைபோய் விழுந்து ஞாபகம் வர அதிக நாழிகைகளாயிற்று. பிறகு ஸப் இன்ஸ்பெக்டரால் அரெஸ்டு செய்யப்பட்டான். இப்பயங்கரமான செய்கை ஜனங்களைப் பயப்படசெய்தது. அப்பொழுது ஸ்மித்சொல் லியதாவது, யாராவது வாய்திறக்க ஆரம்பித்தால், அவர் கள் துருப்பு சிப்பாய்களால் சுடப்படுவார்கள் என்றார். ஜனங்கள் வாய்பேசவில்லை. (ஸ்டேட் 621.)

இந்த கிராமம் ரூபா 10,000 அபராதம் போடப்பட் டது. மூன்றில் ஒரு பங்கில் போன ராபி வசூல் செய் யப்பட்டது.

சூகர்காணு—(Chukarkana)

சூகர்காணு கிராமம், ஒரு பெரிய சந்தைகூடும் இடம். மண்டியி லிருந்து $1\frac{1}{2}$-மைல் தூரத்திற் கப்பால் கிராமம் இருக்கிறது.

எப்பிரல்மீ 12உ ஹார்ட்டல் கொண்டாடப்பட் டது. இதற்கு முன் நாள், நடந்த பொதுஜனக் கூட்டத் தில் முனிசிபல் கவுன்சிலர்கள்கூட வந்திருந்தார்கள். 14உ வரை விபரீதமாக ஒன்றும் நடக்கவில்லை. அமிர்தசரஸ் லாகூரில் நடந்த அக்கிரமங்கள், இவ்வூர் ஜனங்கள் செவி களில் எட்டியபடியால் 15உ குழப்பம் உண்டாயிற்று. மண்டி வியாபாரிகளும், கிராமத்தார்களும் ஒன்றுகூடி ஸ்டேஷனை எரித்து விட்டார்கள்.

இத் தருணத்தில் ராணுவ பட்டாளங்கள், யந்திர பீரங்கிகள் அடங்கிய ரயில் வந்தது. கண்டவிடங்களில் சுட்டார்கள். ஸ்ரீராம் ஸட் ஹண்டர் கமிட்டிக்கு முன்,

சுட்டது அவசியமானது என்று கூறி யிருக்கிறார். எங்களிடம் இருக்கும் வாக்கு மூலங்கள் அதை மறுதளிக்கிறது. ராணுவச் சட்ட விளம்பரத்திற்கு முன்னாலேயே இம்மாதிரி சுடுதல் ஆரம்பிக்கப் பட்டது. இன்னும் ராம்ஸட், ஸப்டிவிஷன் ஆபீஸாராய் இந்த ஜில்லாவில் அநேக வருஷங்கள் இருந்ததால் ஜனங்கள் தன்மை அவருக்கு முழுவதும் தெரியும்.

தான் சுடச் சொன்னதிற்குக் காரணம் என்னவென்று கேட்டபொழுது, இந்திய பீனல்கோடு சட்டத்தில் அதிகாரம் இருக்கிறதென்று பண்டிட் ஜகத் நாராயணனுக்குச் சொல்லி யிருக்கிறார். ஸர் சிமன்லால் அவனை ஏன் சுட்டாய் என்று கேட்டபொழுது அவர் சொன்னதாவது, "நாங்கள் வருவதிற்கு முன்னமேயே, ஜனக்கூட்டம் இருந்ததால், நாங்கள் சுடுவதற்குந் தக்க காரணமாயிற்று." இன்னும், "சூகர்கானு ஜனங்கள் கொள்ளை யடிக்க ஆரம்பித்ததாகவும் கேள்விப்பட்டேன்." அப்பொழுது ஸர் சிமன்லால் சொல்லியதாவது, "நீ, விசாரிக்காமல், தானே சுட்டாய்?" அப்பொழுது அவன் ஆம் என்றான். ஸர் சிமன்லால் சொல்லியதாவது, "அப்பொழுது உன் எண்ணம் ஜனங்களைப் பயமுறுத்துவதற்குத் தானே?" "ஆம்," என்றான். சிமன்லால் கேட்டதாவது, "சுட்டதிற்குப் பிறகு, ஸ்டேஷனைக் குறித்து சென்றீர்களல்லவா?" அதற்கும் "ஆம்," என்றான்.

கேள்வி:—சுற்றுகிற தென்பதிற்கு என்ன அர்த்தம்? ஜனங்கள் ஒரு விஷமமும் செய்ய வில்லையே.

உத்தரம்:—அந்த சமயத்தில் இல்லை. ஜனங்கள் கிராமத்திற்குள் வரவும் போகவும் கண்டேன்.

கேள்வி.—அவர் போய்வந்த காரணம் உனக்குத் தெரியாதே?

உத்தரம்.—ரயில் வண்டியை பாழ் செய்வதற்குத்தான்.

கேள்வி.—ஜனங்கள் பாழ் செய்வதற்குக் கூடினார்களென்பது உனக்கு எப்படி தெரியும்?

உத்தரம்.—என் மனதிலிருக்கும் எண்ணங்களை எனக்கு சொல்லத் தெரியவில்லை.

கேள்வி.—லாலா! மன்னியும். உனக்குத் தெரிந்த சமாசாரங்களைத்தான் விசாரிக்கிறேன். அவர்கள் சஞ்சரித்தார்களென்றாயே, அது என்ன என்று உரைக்கவும்.

உத்தரம்.—அவர் இங்குமங்கும் போகிறதையும் ஒன்று கூடினதாக நினைத்தேனென்று, முன் சொல்லியிருக்கிறேன்.

கேள்வி.—அப்படி கூடியதற்குக் காரணம் என்ன?

உத்தரம்.—சில பயங்கரமான காரியம் செய்யத்தான்.

கேள்வி.—அப்படி ஜனங்கள் இங்கும், அங்கும் கிராமத்தில் வந்துகொண்டிருந்ததால், பயங்கரமான காரியம் செய்வார்கள் என்று நீ எண்ணினாய்.

உத்தரம்.—சிப்பாய்கள் அடங்கிய வண்டியைக் கண்டு மறையாமல் கூடினதற்குக் காரணம் என்னவோ?

இம்மாதிரி சாக்ஷி, ராவ் சாயபினால் டிசம்பர் மீ] கொடுக்கப்பட்டது. 6வுக்கு முன்னால் எடுத்த எ 7வு டைய ருஜுக்களோடு, ஸாயபு சொன்னதைப் ப ங்களு பொழுது, அவன் சொல்லிய கூட்டம் பொா ார்க்கும் தெரிய வருகிறது. ஜனங்கள் நிஜமாக, மறை யென்று கும் ஓடினார்கள். இங்குமங்

தூலாஸிங்கு, பின் வருமாறு சொல்லு கிறார், "ராணுவப் பட்டாளம் ஓடும் ஜனங்களின்மீது குண்டு போட்டார்கள். யந்தர பீரங்கியால் சுட ப்பட்டு 3 மனிதர்

கள் கீழே விழுந்ததை நானே நேரில் பார்த்தேன். ரயில் வண்டியில் மாலாபர்களையும், கார்ட்டார் ஸிங்கையும் பார்த்தேன்." (ஸ்டேட். 468)

கணபத்மால் சொல்வதாவது, "யந்தர பீரங்கியால் ரொம்ப நேரம் சுட்டார்கள். ஜனங்கள் இங்கு மங்கும் ஓடுவதைக் கண்டேன்..........ஏப்ரல்மீ 17உ, மறுபடியும், புதியதாய் வந்த ஆங்கில சிப்பாய்களும் யந்தரபீரங்கியால் இங்குமங்கும் ஓடும் ஜனங்கள்மீது, சுட்டார்கள். (ஸ்டேட்-458)

ஆகையால், ராணுவச்சட்ட விளம்பரத்திற்கு முன் குண்டுபோட்டது தப்புஎன்று சொல்வதல்லாமல், கண்டபடி சுட்டது கொடிய அக்கிரமமென்று நிச்சயமாகக் கருதுகிறோம். ஜனங்களைப் பயமுறுத்துவது ஒரு பொழுதும் ஆபிஸர்கள் வேலையல்ல. அது நியாயத்தை நிலைநிறுத்தவுமில்லை. ஜனங்கள் தந்தி அறுத்தது, ஸ்டேஷனை எரித்தது, மிகவும் பிசகான காரியம் என்றே சொல்லுகிறோம். இதற்காக, ஜனங்களைப் பயமுறுத்திக் கண்டபடி சுட்டது கொடிய அக்கிரமமென்றே நினைக்கிறோம்.

மற்ற ஊர்களில் நடந்த அக்கிரமங்கள் போல் இங்கும் நடந்தன. சிப்பாய்கள் இவ்வூரில் கொள்ளை யடித்ததற்குக் கணக்கில்லாத ஆதாரங்கள் எங்களிடம் இருக்கின்றன. சொந்தக்காரர்கள் இல்லாதபொழுது, ஆடுகள், பாத்திரங்கள், உணவுப்பொருள்கள் திருடிச் செல்லப்பட்டன. ராணுவச்சட்டகாலத்தில் ஜனங்களுக்கு எவ்வளவு நஷ்டம் வந்திருக்குமென்பது ஊஹிக்கக்கூடமுடியாது.

ஸுச்சா ஸிங் சொல்லுகிறதாவது, "என்னுடைய படுக்கையை, போலீஸ்காரர்கள் பயமுறுத்தி எடுத்துச் சென்றார்கள். இதுவரையிலும் கொடுக்கவில்லை."

ஷாமான், "தன் பயிர்களைப் சிப்பாய்கள் குதிரைகளுக்கு எடுத்துச்சென்றுர்கள்" என்று சொல்லியிருக்கிறுர்.

மோஹன் லால் சொல்லுகிறதாவது, "மிஸ்டர் பாஸ்வொர்த் ஸ்மித் எங்கள் கடைக்கு வந்தபொழுது, ரூ. 45-க்கு உணவுப்பொருள்கள் எடுத்துச் சென்றுர். அதற்குப் பணம் இன்னும் வரவில்லை."

ஹாவ்லிராம் சொல்லுகிறதாவது. "என்னுடைய வீடும், கடையும் 10, 15-நாள் மூடப்பட்டது..........." மண்டிக்கடைகள் சோதிக்கப்பட்டன. ஜனங்களைப் போலீஸ்காரர்கள் பயமுறுத்திஞர்கள். தங்களுக்குத் தோன்றியதெல்லாம் கடையிலிருந்து எடுத்துச் சென்றுர்கள்......................எடுத்துச்சென்ற சாமான்களுக்குப் பணம் இன்னமும் வரவில்லை."

கணபத்மால் சொல்லுகிறதாவது, "ஆபீஸர்கள் தாங்கள் சாப்பிடுவதற்காக, கோழிகள், ஆடுகள், பால், முட்டைகள் எடுத்துச் சென்றுர்கள். ஜனங்களிடமிருந்து, படுக்கைகள் பிடுங்கிக்கொண்டு போஞர்கள். அவைகள் இன்னமும் திருப்பிக்கொடுக்கப்படவில்லை. போலீஸ்காரர்கள் என்னிடமிருந்து, பலாத்காரமாக, என் குழந்தைகளுக்கில்லாமல், எருமைப்பாலை எடுத்துச் சென்றுர்கள். நான் கொடுத்ததைத் திருப்பிக் கொடுக்கவில்லை.................. ராணுவச்சட்ட நாட்களில், ரூ. 35 சிப்பாய்கள் சாப்பாட்டிற்காக நான் கொடுக்கும்படி நேர்ந்தது.

சில கடைக்காரர்கள், தங்களிடமிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சாமான்களுக்குப் பணம் வேண்டுமென்று, போலீஸ் சூப்பிரன்டென்டெண்டுக்கு எழுதினபொழுது, உங்களுக்கு இந்த பணம் ஒருநாளும் கொடுக்கப்படமாட்

டாது என்றும் பணத்திற்காக அடிக்கடி எங்களைத் தொந்தரவு செய்யக்கூடாதென்றும் பதில் வந்தது.

கிராமத்தார்கள் பயிர்களை அறுவடை செய்யக் கூடாதென்றார்கள். இச்சமாசாரத்தை பாஸ் வொர்த் ஸ்மித்தே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஷான்ஸிங்கு சொல்லுகிறார், "சாகுபடி அறுவடை செய்யாததால், எனக்கு ரூ. 2000-நஷ்டம் வந்தது."

ஜீவாயா சொல்லுகிறதாவது, எனக்குச் சொந்தமான தானியங்கள் போலீஸாரால் எடுக்கப்பட்டு இன்னமும் பணம் கொடுபடவில்லை. அதற்கு நான் பணம் கேட்டபொழுது, அவர்கள் என்னைச் சாய்பிடம் கொண்டு போய், தொந்தாவு செய்வதாகச் சொன்னார்கள்!

கணபதுமால் சொல்லுகிறார், "ஊரில் இருக்கும் ஜனங்கள், வெளியே போய் அறுவடை செய்யக்கூடாதென்றார்கள். இதைக் கவனிப்பதற்காக, வயல்களில் காவல்வைத்தார்கள். எங்களுக்கு நான்கில் ஒரு பங்கு தானியம்தான் கிடைத்தது."

இந்த அக்கிரமங்களைத்தவிர, விசாரிப்புகள் மிகவும் கேவலமாக நடைபெற்றதாக ருஜுக்கள் இருக்கின்றன. குற்றம் சாட்டுதல் நடக்கும்பொழுது, டோடர்மால், ஸ்மித் பின்வரும் பிரகாரம் சொன்னதாகச் சொல்லுகிறான், "எனக்கு பெரிய மனிதர்களை அரெஸ்டு செய்ய இஷ்டம். ஆகையால் தாழ்ந்த ஜனங்கள் எனக்கு வேண்டாம்."

டோடர்மால் குற்றம் சாட்டப்பட்டபொழுது என்ன காரணத்தின்மேல் அரஸ்டு செய்தீர்கள் என்று கேட்டதற்குப் பதில் சொல்ல முடியாது என்றார்கள். பிறகு மால் விசாரிக்கப்பட்டு, ராணுவச்சட்ட கமிஷனால் விடுதலை செய்

யப்பட்டார். கான்ஷிராம் சொல்லுகிறார், "எங்கள் சாக்ஷிகளை விசாரிக்க மாட்டேன் என்றார்கள். மாயா ஸிங்கு தன்பிள்ளை புஜ்கார்ஸிங்கு மருந்து வாங்கிவர சென்றபொழுது அரஸ்டு செய்யப்பட்டதாக கூறுகிறார். அவர் மறுதளித்தபொழுது, "பாஸ் வொர்த் ஸ்மித் அவரை மரத்தில்கட்டி 25-அடிகள் அடித்தார்" அவர் 10-நாள் சிறையில் வைக்கப்பட்டு பிறகு, குற்றம் சாட்டப் படாததால், விடுதலை அடைந்தார்." ஹாவலிராம் சொல் கிறார், "ஒருநாள், லாடாஸிங்கு எல்லாமண்டிக்காரர்களை யும் பங்களாவுக்கு முன்வரும்படி சொன்னதாகவும், அப் படி வரத்தவறினால், சொத்துக்கள் ராஜாங்கத்திற்குச் சேர்க்கப்படுமென்றும் சொன்னார். நாங்கள் எல்லோரும் தாகசாந்தி செய்யாமல் 2-மணிநேரம் வெயிலில் நிறுத்தப் பட்டோம். போர்ட்டர் காண்பித்தவர்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கேயும், ஜல பானம் அவர்களுக்குக் கிடையாது. மறுநாள் லாகூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு, குற்றப் பத்திரிகை வாசிக்கப் பட்டார்கள்." (ஸ்டேட்-452-P. 592)

ஸார்தார் ஷன்ஸிங் பின்வருமாறு சொல்லுகிறார். "நான் விலங்கிடப்பட்டு சிறையில் மற்ற குற்றவாளிக ளோடு வைக்கப்பட்டேன். அங்கே 15, 16-நாட்கள் என்னை வைத்திருந்தார்கள். பின்கட்டு முறமையாய் விலங்கிடப்பட்டதால், அன்னம் உட்கொள்ளவும், தலைப் பாகைக் கட்டவும் முடியவில்லை.

என்னுடைய சகோதரன், கான் ஸிங்கு கூட என் னோடு அடைக்கப்பட்டான். ஆலிமுகமது (ஸப் இன்ஸ் பெக்டர்) அவனிடம் இருந்த அரபிக்குதிரையைக் கொடுத் தால் விடுதலை செய்வதாகச் சொன்னார். இப்படி கேட்ட தற்குக் கொடுக்கமாட்டேனென்று சொன்னபொழுது,

ஆலிமுகம்மது தான் புதுகுற்றங்கள் ஏற்படுத்திச் சுட்டுவிடுவதாகச் சொன்னான்............என்சகோதரனை விடுதலை செய்வதற்கு ரூ. 500-கொடுக்கமாட்டேனென்று சொன்னதால், என்னையும் ஜெயிலில் அடைத்தான். என்பெண்சாதி ரூ. 500-கடன்வாங்கி லஞ்சம் கொடுத்தபொழுது, நான் விடுதலை செய்யப்பட்டேன்.........................என்மேல் குற்றம்சாட்ட தயார்செய்த பொய் சாக்ஷிகள் கலைக்கப் பட்டார்கள். பேருக்காக ஒருமனிதனை எனக்கு எதிராக சாட்சி கொடுக்கும்படிசெய்து, சாட்சியின் ஆதாரம் போதாதென்று சொல்லி, நான் விடுவிக்கப்பட்டேன். (ஸ்டேட்-454) குருடனாகிய லாதமஹால், தன்பிள்ளையிருக்கும் இடத்தை சொல்லாததால், அரஸ்டு செய்யப்பட்டான். அவன் பெண்சாதி பிள்ளையைக்காட்டின பிறகு விடுவிக்கப்பட்டான். (ஸ்டேட்-467)

பாஸ்வார்த் ஸ்மித், "ஒன்றுகூடாதபோனால் கிராமத்தார்கள் சொத்துக்கள் எரித்துவிடப்படும்" என்று செய்த விளம்பரத்தால், ஒன்று சேர்க்கப்பட்டார்கள். கணபத்மால் சொல்லுகிறார்.—"பயத்தால் எல்லா ஜனங்களும் ஒன்று கூடினார்கள்.

'லங்கிரா' சாயபு எல்லோர்களுடைய நாமங்களை ஸென்ஸஸ்,ரிபோர்ட்டிலிருந்து படிக்கும்படி பட்வாரியை யிட்டான். வராதபேர்கள் தெரிந்தவுடன், அவர்களுடைய பெண்சாதிகளை அழைத்துவர கட்டளைபிறந்தது. ஸ்திரீகள் வந்தவுடன், தங்கள் புருஷர்கள் வராதபோனால் அவர்களுடைய வீடு எரிக்கப்படுமென்று பயமுறுத்தப் பட்டு அவர்கள் அனுப்பப்பட்டார்கள். வராதவர்களின் பந்துக்களை அரஸ்டு செய்தார்கள்." கணபதிமால் இன்னும் சொல்லுகிறார். "இப்படி அரஸ்டு செய்யப்பட்டவர்கள், 2-வருஷம் கடும் சிறை செய்யப்பட்டு, ஆள் ஒன்றுக்கு ரூ.

200 அபராதம் போடப்பட்டார்கள். ஒரு சாட்சியமும் எடுக்கப்படவில்லை. அவர்கள் மன்னிப்பு கேட்கும்படி சாயபு சொன்னபொழுது அவர்கள் சொன்னதாவது, "நாங்கள் சாதுக்கள், குற்றம் செய்தவர்கள் அல்ல" என்றார்கள். ஸர்தார் ஹர்னம் சிங்கு என்பவர் ரூ. 400-க்கு கிஸ்தியும், சண்டை பத்திரங்கள் ரூ. 800-க்கும் வாங்கியிருக்கிறார். ரூ. 60-வீட்டுவரி கொடுக்கிறார். இப்பேர்க் கொத்தவருடைய சகோதரன் குஷால் ஸிங்கு அரஸ்டு செய்யப்பட்டார். அவரை விடுவிக்கிறதற்காக வக்கீல் மார்ட்டின் ரூ. 1000 பீஸ் பேசப்பட்டார். அப்பொழுது, ஹர்னம் சொல்லுவதாவது, "மார்ட்டின் பேசுவதற்கு உத்தரவு கொடுக்கப்படவில்லை; ஒருவரும் குற்றவாளியின் சாக்ஷிகளைக் கேட்க வில்லை. 5-நிமிஷத்திற்குள் குஷால் ஸிங்கின் கேஸ் முடிவு செய்யப்பட்டது."

இன்னும் சொல்லுவதாவது, எப்பொழுதும், பாஸ்வொர்த் ஸ்மித் குற்றவாளிகளுக்குப் பின்வருமாறு சொல்வது வழக்கம், "மன்னிப்பு கேட்கிறாயா?" இந்தக் கேள்விக்கு குற்றவாளிகள் பின்வருமாறு சொல்வது வழக்கம், "ஐயா! நாங்கள் சாதுக்கள், மன்னியுங்கள்." இதை, குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதாக தாக்கல் செய்து கொள்வார்கள். குற்றவாளியின் சாக்ஷி ஒரு நாளும் கேட்கப்பட்டதேயில்லை. முதல் நாள் 100 ஜனங்கள் சிறை செய்யப்பட்டார்கள்; 2, 3 மணிகளுக்குள் அவர்களுடைய தீர்ப்பு சொன்னார்கள். (ஸ்டேட் 447.)

சூஹர் காணு கிராமத்திலிருந்து ரூ. 1500 அபராதம் வாங்கப்பட்டது. இதற்காக ரூ. 230 மங்கல் ஸிங்கும், அவன் சகோதரனும் கொடுத்தார்கள். லாலாபாகிர் கண்டு, ராணுவ சாப்பாட்டிற்கு ரூ. 50ம், போலீஸுக்கு ரூ. 114ம் லெப்டினண்ட் கவர்னருடைய ஞாபகசின்னத்திற்காக ரூ.

20ம் கொடுத்தான். "இந்தப்பணம் எங்களிடமிருந்து வாங்கப்பட்டது" என்று ஏஜண்டு சொல்லுகிறார்.

ஷெயிக்பூரா.

ஷெயிக்பூரா, லாகூரிலிருந்து 25 மைலுக்கு அப்பாலுள்ள, குஜ்ரன்வாலா ஜில்லாவில் கடைசியான கிராமம். மகாராஜா ரன்ஜிட்ஸிங்கின், ராணிநாக்கின் இருப்பிடமாயிருந்தது. இவ்விடத்தில் 2000 ஜனத்தொகை.

ஷெயிக்பூராவில் ஏப்பிரல் மாதம் 6-ம்தேதி ஹார்ட்டல் நடந்தது. அது இயற்கையாய் உண்டானது. சாயந்திரம் மீட்டிங் நடந்தது. ஒருவரும் கடிந்து பேசவில்லை. இதை ஆபீஸர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ரெய்ஸாயபுராம்ஸட், மீட்டிங்கைக் கலைக்க ஏற்பாடு செய்தார். ஆனால் அது பயன்படவில்லை. அவர்களைக் கண்டபடி வைதார். 13-ம் தேதிவரை, குழப்பமில்லாமல் யிருந்தது. அமிர்ஸ்டார், லாகூர் முதலிய இடங்களில் நடந்த அக்கிரமங்கள் ஷெயிக்பூர் ஜனங்களை ஹார்ட்டல் செய்யும்படி பண்ணினது. அதனால் ஒருவித கெடுதலும் நேரவில்லை. அன்றைக்கு ஒரு ரொட்டிக்காரன்கடை பலாத்காரமாக மூடப்பட்டதென்றும், அவன் அடிக்கப்பட்டானென்றும், பொய் சமாசாரம் வெளிக்கிளம்பிற்று. இந்த ஸ்டேட்மெண்டு, ஸம்மரிக் கோர்ட்டால் தாக்கல் செய்யப்பட்ட போதிலும், பொய்யென்றே சொல்லலாம். அன்று இரவு, ஜனங்களால் (முக்கியமாக ஷெயிக்பூரா ஜனவாசிகளால்) தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டது.

எப்படியிருந்தாலும் ஹார்ட்டலிலிருந்து ஒருவித கஷ்டமும் ஏற்படவில்லை. அப்படியிருந்தும் 19-ம் தேதி அன்று மார்ஷல் லா இனி நடக்குமென்று பிரசுரம் செய்யப்பட்டது. மற்ற இடங்களில் நடந்த செய்கைகள்

போல் ஷெயிக்பூராவிலும் நடந்தன. வக்கீல்களுக்குத் தான் இங்கு முக்கியமாகத் தீங்குவிளைக்கப்பட்டது. இவர்கள் தாழ்மையாக நடத்தப்பட்டார்கள். அவர்கள் கைதிகள் ஆக்கப்பட்டு 40 நாள் சிறையில் இருந்தார்கள். விசாரணைக்குக் கொண்டுவரப்படாமலும், எந்தக் குற்றத்துக்காக அவர்கள் அடைபட்டார்கள் என்று சொல்லாமலும், சிறையிலிருந்து விடுபட்டார்கள். எல்லா இடங்களில் நடந்ததைவிட ஷெயிக்புரத்தில் முக்கியமாக நடந்தது யாதென்றால், 10 வயதுக்கு மேற்பட்ட புருஷர்கள் யாவரும் அதிக நீள அகலமுள்ள நிலத்தைப் பெருக்கும்படி செய்யப்பட்டார்கள். ஏழு நாளைக்குக் காலை முதல் மாலை வரையில் இப்பேர்ப்பட்ட நேர்த்தியான விசாரணைக்கு வரும்படி கட்டளையிட்டார்கள். மற்ற இடங்களில் நடந்ததுபோல, பள்ளிக்கூடத்துப் பையன்களும் வரவேண்டியதாயிருந்தது.

விருத்தாப்பியரும், மரியாதைக்கு உரியவருமான 60 வயதுள்ள லம்பார்தார், போலீஸ் இன்ஸ்பெக்டாராயிருந்து பென்ஷன் வாங்கியவர், சிறையிடப்பட்டார். இதற்குக் காரணம் யாதென்றால் அவர் மகன்கள் அதிகாரிகள் வேண்டும்போது ஷெயிக்புரத்தில் இல்லாதது தான். அவர் சொத்துகள் அவளிடமிருந்து நீக்கப்பட்டு கவர்ன்மெண்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவர் குடியானவர்கள் கதிர்களை அறுக்கக்கூடாது என்று உத்தரவாயிற்று.

சிப்பாய்களும், போலீஸ்காரர்களும் தங்கள் இஷ்டப்படி குடிகள் சொத்துக்களை உபயோகித்தார்கள். எங்கும் நடந்த கஷ்டங்கள்போல் இங்கும் நடைபெற்றன. இங்கு மட்டும் முக்கியமாக பாஸ்வர்த் ஸ்மித், வக்கீல்கள் பிராக்டிஸ் செய்யாவண்ணம் பண்ண ஹைகோர்ட்டுக்கு

முறையிட்டார். எங்களுக்குத் தெரிந்து 70 வாக்கு மூலங்களில் இங்கு 30 மட்டும் எடுத்துச் சொல்லுவோம்.

பி. எ. யும், L. L. B. பரீக்ஷை கொடுத்த சர்தார் பூடாசிங்கு ஜில்லா சட்ட கமிட்டியில் மெம்பர், சண்டைக்கு ஆட்கள் சேர்த்திருக்கிறார். இதன் நிமித்தம் கவர்ன்மெண்டிலிருந்து சர்ட்டிபிகேட்டும் வாங்கியிருக்கிறார். இவர் ஹார்ட்டலில் தான் சேரவில்லை யென்றும் அந்த இரண்டு நாளும் வேறு வேலையாக இருந்ததாகச் சொல்லுகிறார். ஏப்ரல் மாதம் 14-ம் தேதியைப்பற்றி அவர் எழுதுவதாவது "ஒருஜனக்கூட்டமும் இல்லை; ஜனக் குழப்பமும் இல்லை; தவறி நடத்தல் யாதும் காணப்படவில்லை."

இதரவக்கீல்களுடன் இவரும் 19-ம்தேதி சிறையிடப் பட்டார். அவர் சொல்லுவதாவது "25 சிப்பாய்கள் கத்தி, மருந்துகள் வைத்த துப்பாக்கிகளுடன் எங்களைப் பாதுகாத்தார்கள். இவர்களுடன் நாங்கள் ஊர்வலம் சென்றோம். எங்கள் கிராமத்துக் குடி ஜனங்களின் முன் பலதடவைகள் அசுத்தமான இடத்தில் உட்காரும் படி செய்தார்கள். இப்பேற்பட்ட நிலைமைக்கு ஒரு மணி சாவகாசம் எங்களை உட்படுத்தியவுடன் சண்டைக் கவசங்கள் போட்டிருக்கும் வண்டிகள் முன் நாங்கள் வெகுவேகமாகச் செல்லும்படி ஏற்பட்டது. இதர மனிதர்களுடன் நான் என் உடம்பு அசௌகரியத்தினால் ஓடக்கூடாததால் என்னைக் கண்டபடி அவமானப் படுத்தி குச்சியால் அடிக்கவும் செய்தார்கள்.

கைதிகளை லாகூருக்கு நடத்திச்சென்றார்கள். போகும் வழியில் மலமூத்திராதிகளுக்குப் போக உத்தரவு கொடுக்கப்படவில்லை. சாயந்திரம் அதிக நாழிகை பரியந்தம் சாப்பாடுகொடுக்கவில்லை. பின்னும் அவர் சொல்லுவ

தாவது "ரயில்வே ஸ்டேஷனிலிருந்து லாகூர் சென்ட்ரல் ஜெயிலுக்கு கொண்டுபோனார்கள். அங்கே எங்கள் கைகளைக்கட்டி தனி அறைக்கு அனுப்பப்பட்டோம். இப்படி நாங்கள் 40 நாட்கள் பலவிதமானக் கஷ்டங்களுக்கு உட்பட்டோம். இப்பேற்பட்ட அவமானம் போதாதென்று, கைகட்டிய விதமே ஷெயிக்புரத்து, போலீஸ்டேஷன், நாபிப் தாசில்தார் வீடு முதலிய இடங்களுக்குச் செல்லும்படி நேரிட்டது. பிறகு அவ்விடத்தில் விடுதலை செய்தார்கள்.

ஒன்பது வருஷகாலம் முதலாவது கிரேட் வக்கீலாகவும், B. A., L. L. B. பரீக்ஷை கொடுத்திருக்கும் லாலா உஷ்னக்ரே சொல்லுவதைக் கேட்போம். அவர் குடும்பமே தொண்டு தொட்டு 2 கிராமங்களுக்கு அதிபதி. ஏராளமான பூஸ்திதி உள்ளவர்; சண்டைக்குப் பணம் சேர்த்துக்கொடுத்திருக்கிறார். சென்ற ஏப்பிரல் பரியந்தம் தான் எதுவிதமான தேச அபிவிருத்தி விஷயத்தில் பேசவில்லை என்று உறுதியாகச் சொல்லுகிறார். 15வ காலமே சப் டிவிஷனல் ஆபீஸர் அவரைக் கூப்பிட்டார். உத்தியோகஸ்தர்களுடன் தான் கூடச் சேர்ந்து ஜனங்கள் அமைதியாகச் சட்டப்படி நடக்கும்படி செய்வதில் உபகாரம் செய்வதாக ஒப்புக்கொண்டார். அன்று சாயந்திரமே சப் டிவிஷனல் ஆபீசர் சூகர் கானுவுக்குச் சென்றார். இது இவர் லார்ட் ஹண்டர் கமிட்டியின் முன்பாக சொன்னதற்கு மாறாக இருக்கிறது. அக்கமிட்டியின் முன் அவர் சொன்னதாவது ஷெயிக்புரத்தில் ஜனங்களின் அமரிக்கை பார்வைக்குச் சரியாகத் தோன்றினாலும், நிஜமான அமரிக்கை யல்லவென்றார். முந்தி சொல்லிய தந்தி அறுபட்ட சங்கதியிருக்க இவர் ஷெயிக்புரத்துக்கு புறப்பட்டுப் போனார் என்பதை ஞாபகம் வைத்துக்

கொள்ளவேண்டும். ஏப்ரல்மாதம் 18-ம் தேதி சாயந்திர பரியந்தம் தான் உள்ளூர் (Extra Assistant Commissioner) உத்தியோகஸ்தருடன் சேர்ந்து உதவி புரிந்ததாக ஒப்புக்கொள்ளுகிறார். 19-ம் தேதி காலமேயும் இவர் ஸப்டிவிஷனல் ஆபீஸர் முன்பாகச் சென்றார். ஷெயிக்புரத்தில் எல்லாம் சரிவர இருக்கிறது என்று சொன்னார். இப்படியிருக்க, இவர் வீட்டிலேயே சொல்ப நாழிகைக்குப் பிறகு இவர் சிறையிடப்பட்டார். அவர் வீட்டுக் கதவுகளை மூடுகிறதற்கும், அல்லது தன் சொக்காய் முதலியவைகளைப் போட்டுக் கொள்ளவும் அநுமதி கொடுக்கப்படவில்லை. அவர் சொல்லுவதாவது: கோசெயின் மயாராம் ஆபீசிலிருந்து வரக் காத்திருக்கும் போது என்னை அசுத்த இடத்தில் உட்காரும்படி செய்தார்கள். எனக்கு இப்படி உட்கார இஷ்டமில்லை. நான் களைப்பாகவும் இல்லை. என்னை அவமானப்படுத்த அவர்கள் உட்காரும்படி செய்தார்கள்." லாகூர் ரயில்வே சிறையைப் பற்றி அவர் சொல்லுவதாவது : இது மனிதர்கள் வாசத்திற்குச் சுத்தமாக உபயோகப்படாது. இது முன்னால் மூத்திரம் போக்கும் இடம். இதன் துர்க்கந்தம் சொல்லி முடியாது. தங்கள் தலைப்பாகைகளையும், செருப்புகளையும் சிறைச்சாலைக்கு வெளியே வைக்கும்படி கட்டாயப்படுத்தினார்கள். சீக் மதத்தாராகிய குகர்சிங் என்பவர் தலைப்பாகை எடுக்க மறுதளித்தார். அவர் வயதில் முதிர்ந்தோர் ஆதலால் கண்ணாடி இல்லாமல் பார்க்க முடியாதென்றும், கண்ணாடி போட்டுக்கொள்ள வேண்டுமென்றும், அவருடைய வேண்டுகோள்கள் கவனிக்கப்படவில்லை. அவருக்குச்சொல்லாமலே அவர் லம்பார்தார் வேலையிலிருந்து தள்ளப்பட்டார். அவர் பெரிய உத்தியோகஸ்தருக்கு அப்பீல் செய்துகொண்டதும் தள்ளப்பட்டது.

B. A. L. L. B. பரீக்ஷை கொடுத்த கோசெயின் மயாரணம் சொல்வதைக் கேட்போம். "சிறையில் அனுப்பியது விடியற் காலமாம். நாங்கள் சரியாக உடுப்பு உடுக்கவில்லை. சிலர் இராத்திரி உடுப்பில் இருந்தார். வக்கீல் மாலவி அலீம்டின் ஒரு ஷர்ட்டும், துண்டும்தான் மேலே போட்டிருந்தார். எங்கள் துணிகளைக் கொண்டுவரும்படி கேட்டுக்கொண்ட விண்ணப்பம், மறுதளிக்கப் பட்டது." இன்னும் அவர் சொல்வதைக் கேட்போம்.

"வக்கீல் சூடாசிங்கு, மாலவி அலீம்டினும், ஜமெயிட்டு சிங்கும் நானும் ஒரு அறையில் இருந்தோம். அந்த அறையில் பலகைகள் இருந்தபோதிலும், நாங்கள் தரையில் உட்காரவேண்டுமென்று உத்தரவாயிற்று. அன்று காலமே சர்தார் பேதிக்காக மருந்து சாப்பிட்டிருந்தார். மலங் கழிக்க உத்தரவுகேட்டும் பயன் இல்லை. நாங்கள் யாவரும் அவருக்காக வெகு வணக்கத்துடன் கேட்டோம். இதற்கெல்லாம், ஒரு சிப்பாய் "நீ அதைச் சாப்பிடக்கூடாதா என்றான்?" இப்படிப்பட்ட கஷ்டங்கள் தாங்கள் அனுபவித்ததைச் சொல்லிய பிறகு அவர் ஜெயிலில் அனுபவித்த கஷ்டங்களைச் சொல்லி முடியாது. ஜெயிலில் கொடுத்த சாப்பாடு மனிதர்கள் சாப்பிடக்கூடியது அல்ல. ஆடு மாடுகள்தான் அதைச் சாப்பிடக் கூடும். எங்கள் சிறைகளை விட்டு காலமேயும் சாயந்திரமும் அரைமணி நேரம் ஸ்நானம் முதலியவைகள் செய்ய விட்டார்கள். இந்த ஒரு மணி நேரம் கூட சில சமயம் கொடுக்கப்படவில்லை. காவலாட்கள் தங்கள் இஷ்டப்படி செய்தார்கள். ஏப்ரல்மீ 6வ மீட்டிங்குக்கு அவரையும், இதர வக்கீல்களையும் போகக் கூடாதென்று அவ் வுத்தியோகஸ்தர் சொல்ல, அப்படிப் போவதில் யாதொரு குற்றமுமில்லையென்று சொன்னதின் பேரில், தன் சுய நலத்தை நினைத்தே

ஆபீசர் சொல்வதாகச் சொன்னதால் அவர் ஒப்புக்கொண்டார். பிறகு ஆபீசர் மற்ற வக்கீல்களைக் கூப்பிட்டு, கோசெயின் மீட்டிங்குக்குப் போகிறதில்லையென்று ஒப்புக்கொண்டு விட்டதாகச் சொன்னார். பிறகு இச் சமாசாரம் கோசெயின் கேள்விப் பட்டதும் சப் டிவிஷனல் ஆபீசருக்குக் கண்டிதமாக எழுதியதாவது: "என் பேரை வைத்துக்கொண்டு, நீங்கள் மற்றவர்களைக் கெடுப்பதாகத் தெரிகிறது. நான் மீட்டிங்குக்குப் போவது நிச்சயம்."

வக்கீலாக பிராக்டிஸ் செய்துவரும் சர்தார் பிரிடாம் சிங் என்பவர் ராணுவச் சட்டம் ஏப்ரல்மீ 1வ உபயோகப் படுத்தும்போது பார்த்தவர். இவர் சொல்வதைக் கேட்போம். ஆனால் இவர் சிறைப்படவில்லை. சப் டிவிஷனல் ஆபீசர் ராய்சாகிப் ஸ்ரீராம் ஜனங்கள் அறிவிப்புப் பத்திரத்தை (Proclamation) வாசித்தார். வாசித்த பிறகு அவர் ஹார்ட்டலை இரண்டாவது தரம் கொண்டாடினால் ஜனங்களைத் துப்பாக்கியால் சுட அனுமதி பெற்றிருப்பதாகச் சொன்னார். இந்த சமயத்தில் வயது சென்ற கௌரவமான பல் மனிதர்களின் மோவா கட்டையில் தன் கைப் பிரம்பினால் குத்தினார். ஹண்டர் கமிட்டியின் முன்னால் துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் உபயோகித்ததைக்குறித்து சொல்லப் பட்டதை இவர் சொல்லுவதாவது: ஏப்ரல்மீ கடைசியில் ஐரோப்பிய இந்திய சிப்பாய்கள் கூட்டம் கவர்ன்மெண்டாரின் சக்தியைக் காண்பிக்க பெரும் ஆயுதங்களையும், மோட்டார்காரில் வைத்த துப்பாக்கிகளையும் தங்களுக்குள் இழுத்துச் சென்றார்கள். இரும்பு சுக்குகள் சிலதை துப்பாக்கி (Machine Guns) முன் வைத்தார்கள். பிறகு அவைகளை நெருப்பில் காண்பித்து இத் தமாஷா உங்களுக்குக் காட்டுகிறோம். கவர்ன்மெண்டை எதிர்த்து நடப்பவர்கள் இத் துப்பாக்கி

பீரங்கிகளுக்கு இறை யாவார்கள். இப்படி தாங்கள் வகிக்கும் அதிகாரத்தைக் காண்பித்தது லெப்டினென்ட் கவர்னர் நுரை ஜனங்களுக்கு ராஜாங்கத்தாருடன் கூடி ஒத்து நடக்க வேண்டுமென்று அறிவிப்புப் பத்திரம் (Proclamation) வாசித்ததற்கு முன் நடந்தது. இப்படி தங்களுடைய அசாத்திய ஆயுதப் பெருமையைக் காண்பிப்பதும், அதே சமயத்தில் கவர்ன்மெண்டுடன் ஜனங்கள் ஒத்து நடக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்வதும் ஆச்சரியமாக இருக்கிறது.

மேமீ 7உ ஜனங்களிடம் சொல்லியது பயமுறுத்த மட்டு மல்ல. அவர்களை அவமானப் படுத்தவும்தான். அவரே சொல்லுவதாவது: சூரிய உஷ்ணத்தில் வக்கீல்கள் சிறையிடப் படாதார் இன்னும் மற்றெல்லோரையும் வரவழைத்தார். வக்கீல்களை மட்டும் மற்றவரிட மிருந்து தனித்து இரண்டு வரிசையாக நிறுத்தினர். முதல் வரிசையில் ஏப்ரல்மீ 6உ நடந்த மீட்டிங்கில் சேராதவர்களிருந்தார்கள். பிந்திய வரிசையில் மீட்டிங்கில் சேர்ந்தவர்களும் அதில் அதிகமாகக்கலக்காதவர்களும் இருந்தார்கள். பாஸ்வொர்த் ஸ்மித் என்பவர் இந்திய வக்கீல்களைக் குறித்துப் பேச ஆரம்பித்தார். மற்ற சமாசாரங்களுடன் அவர் சொல்லியதாவது: இந்தியாவில் வக்கீல்கள் ஈன ஜனங்கள்; ஜமீன்தார்களை தங்கள் கைக்குள் வைத்துக்கொண்டு, கவர்ன்மெண்டுக்கு எதிர்த்து நடக்கிறார்கள். என்னைத் தனித்து என் தகப்பனார் யாது உத்தியோகத்திலிருந்தார் என்றும், நான் எங்கு படித்தேன் என்றும் கேட்டார். நான் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயரின் மகன் என்றும், லாகூர் மிஷன் காலேஜில் (Foreman Christian College) வாசித்ததாகக் கேள்விப் பட்டவுடன் நான் எப்படி இக் குழப்பங்களுக்கு ஒப்புக் கொண்டேன் என்று ஆச்சரியப்

பட்டார். இதா வக்கீல்களுக்கு முன்பாக என்னை "சிறு பூச்சி" என்றும் சொன்னார்."

இப்படி வக்கீல்களைக் குறித்து நடத்தவேண்டுவதைச் செய்த பிறகு, சர்தார் காகார் சிங் என்றும் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்து பென்ஷன் வாங்கி அனுபவிப்பவரை காலில் மிதியடி முதலியது ஒன்றும் இல்லாமலும், கை கட்டப்பட்டும், வெயிலில் ஊர்வலம் போகும்படி செய்தார். சாகிப் ஜனங்களிடம் காகார் சிங் ராஜதுரோகி என்றும், அவன் பிள்ளைகளில் மூன்றுபேர் தீய நடத்தைக்காக சிறையில் அடைக்கப் பட்டாரென்றும், கவர்ன்மெண்ட் இனி இவர் பென்ஷனை எடுத்துவிட்டு, பர்மாவுக்கு அனுப்பிவிடப் போவதாகவும் சொன்னார்.

பிறகு அவர் ஜனங்களுக்குப் புத்திமதி கூறினார். அவர்கள் யாவரும் பன்றிகளென்றும், இழிவான பூச்சிகளென்றும் சொன்னார்.

தங்களுடைய கடைகளை இராஜாங்கத்துக்கு எதிராக மூடினதால், கருப்பு மனிதரென்றும், இழிவான ஜனங்களென்றும், எல்லாம் ஒரே நிறமென்றும் சொல்லி காரி எச்சிலைத்துப்பினார். பிறகு ஜனங்களுக்கு, இனி நீங்கள் மோசஞ்செய்யும் வக்கீல்களை நம்பக்கூடாது; தாசில்தார் முதலிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களிடம் தான் புத்திகேட்டுக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்.

இங்கு முக்கியமாக வக்கீல்களைத் திட்டியதும், ஜனங்களைத் தங்கள் முக்கியமான ஸ்நேகிதர்களை விட்டுப்பிரிக்கவும், ரொம்ப கண்ணியமாக அதிக வருஷகாலம் கவர்ன்மெண்டாருக்கு கஷ்டப்பட்டு உழைத்து பென்ஷன் வாங்கிவரும் போலீஸ் இன்ஸ்பெக்டரை அவமானப் படுத்தியதும்—அவர் மகன்கள் ஏதோ தீயசெயல்கள்

செய்ததாக மனதில் நினைத்துக் கொண்டதற்காக,—வாயில் வந்தபடி இழிவான வார்த்தைகளால் ஜனங்களை வைததும் தியசெயல் செய்பவரைக் கண்டிக்கவும், சமாதானம் கொண்டுவர அனுப்பப்பட்ட ஒரு ஜில்லாவுக்கு அதிகாரியான ஒரு ஆபீசரால் நடந்தன.

ஒருவித கெடுதலும் செய்யாமலும், நிஷ்கலங்கமுள்ள மனதை உள்ள ஜனங்கள் எப்படி பச்சாதாப மில்லாமல் துன்பப்பட்டார்கள் என்பதற்கு காகர் சிங்கின் உதாரணமே போதும். காகர் சிங்கும் அவன் குடும்பமும் நாசமாய் விட்டது. ராய் சாகிப் ஸ்ரீராம் அதிகநாளாக இக்குடும்பத்தின்மேல் கண் வைத்திருந்ததாக அவன் மகன் சர்தார் அமார்சிங் சொல்லுகிறான். எப்ரல்மாதம் 19-ந் தேதி தகப்பனுர் சிறைபட்டு லாகூர் பெரிய ஜெயிலில் அடைப்பட்டதாகவும் அன்று சாயந்திரமே விடுபட்டதாகவும் கூறுகிறான். அன்று ஷெயிக் புரத்தில் நடந்தது சொல்லத் தக்கதல்ல. எல்லா வீடுகளும் பூட்டப்பட்டன. சகல பெண்டீர்களும் குழந்தைகளும் வெளியில் துரத்தப்பட்டார்கள். வயலில் இருக்கும் தானியங்கள் எடுக்கப்பட்டன. ஒரு காவலாளன் வைக்கப்பட்டதால் கதிர்களை அறுக்க முடியவில்லை. இதனுல் அடைந்த நஷ்டங்கள் கொஞ்சமல்ல. எங்கள் வீட்டில் நெருப்பு வைப்பதாகப் பயமுறுத்தப்பட்டோம். எப்ரல்மீ 20உ சாகூஷியும் அவன் இரண்டு சகோதரர்களும் சிறையிடப்பட்டார்கள். அவன் மைத்துனனும், ஒரு சிநேகிதரும் 2 வேலைக்காரர்களும் சிறைப்பட்டார்கள். சர்தார் அமார்சிங்கின் சகோதரர்கள், வேலையாட்கள் கஷ்டப்பட்டது அவர்கள் செய்த யாது குற்றத்தினுலுமன்று. இவருக்கு வேண்டியவரா யிருந்ததுதான் காரணம். இப்படி அடைபட்ட 5-பேரும் மேமீ 28உ விடுபட்டார்கள்.

அமார்சிங்கே ஷெயிக்புரத்துக்கு மேமீ 24உ கொண்டு வரப்பட்டார் இவர்தானு அப்பெயர் கொண்டவர் என்று ருசுப்படுத்த, ஜனங்களுக்குமுன் விலங்கிட்டு நிற்க வைத்தார்கள். 26உ பென்னி என்பவர் முன் விசாரிக்கப்பட்டு அவரைக்குறித்து யாதொரு ஆதாரமும் இல்லையென்று விடுபட்டார்.

காகர் சிங்குக்கு எதிரடையாக நாங்கள் வாக்கு மூலம் கொடுக்க இஷ்டப்படாததால் தான் இப்படி நடந்தது என்று சாக்ஷிகள் 492, 493, 497, 499, 500, 501-சொல்லுகிருர்கள். சர்தார்சிங் தன் ஸ்திதியைப்பற்றி சொல்லுவதைக் கேட்போம். என் மகன்கள் அதிகாரிகள் சொற்படி நடந்தபோதிலும் என் வீடு, குதிரை, லாயம், இதர மற்ற இடங்களை 8 நாள் பூட்டப்பட்டு, போலீஸ் சேவகர் காத்திருந்தார்கள். நாங்கள் வீடு இல்லாமல் இருக்கவேண்டியிருந்தது. பயிர்களைக் கவனிக்க முடியாததால் ரொம்ப நஷ்டம் விளைந்தது. என்னடியிலிருக்கும் பண்ணையாட்கள்கூட கஷ்டப்பட்டார்கள். யாதொரு தள்ளுபடியில்லாமல் இப்பண்ணையாட்கள் முழுவாய்க்கால் வரி கொடுக்கவேண்டியிருந்தது. நான் மேமீ 17உ சிறைபட்டு, 30உ விடுபட்டேன். கடைசியாக லம்பார்தார் வேலையிலிருந்தும் தள்ளப்பட்டார்.

ஷெயிக்புரத்தில் யாதொரு நஷ்டம் ஏற்படாதபோனுலும், தந்திக்கம்பிகளை ஒடிக்காமலிருந்தும், அபராதம் போடப்பட்டார்கள். வக்கீல் கோகோ செயின் மயாராம் இதைக்குறித்து சொல்லுவதாவது : ஏற்பட்ட நஷ்டம் ரூபா 5-க்குமேல் இருக்காது. அபராதம் போடுவதாக முதலில் யோசித்த ரூபா 9000. பிறகு அது ரூபா 100-க்கு குறைக்கப்பட்டது. இப்பணத்தில் ரூபா 60 நான்கு வக்கீல்களிடமிருந்து வாங்கப்பட்டது. இந்நான்கு

பேரும், ஒரு குற்றமும் செய்யாதவர்; 40 நாள் ஜெயிலி லிருந்தார்கள்.

ஷெயிக்புரத்தில் ஏப்ரலில் நடந்த செயல்களைக் குறித்து நாம் முடிக்குமுன் கர்னல் ஓ'பிரயன், பாஸ்வர்த், ராய் சாகிப் ஸ்ரீராமசட் முதலியவர் செய்கைகளை யோசிப்போம். ஓ'பிரயன் வாரண்டுகள் இல்லாமல் ஜனங்களை அரெஸ்டு செய்வது சரியென்று சொன்னார். இதற்கு ஆதாரம் கூறுவது யாதென்றால் கமிஷனர்களுக்கு இந்திய பாதுகாப்புச் சட்டத்தால் கொடுத்த அதிகாரங்கள் தான். நாம் முன்சொல்லியபடி, டிப்டி கமிஷனர்களெல்லாம் கமிஷனர்களல்ல; அப்படி டிப்டி கமிஷனர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், சட்டத்தில் பிரத்தியேகமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியிருந்தபோதிலும், ஷெயிக்புரா வக்கீல்கள், ஹார்ட்டல் ஏற்படுத்தியதற்காக அரெஸ்டு செய்யப்பட்டார்களென்று ஓ'பிரயன் காரணம் கூறுகிறார். ஓ'பிரயன் இதற்கு முன்னால் ஷெயிக்பூரில் இருந்ததில்லை. அவ்வூர் வக்கீல்களைப் பற்றி முன்பின் தெரியாத பொழுதே, மிஸ்டர் பாஸ்வர்த் ஸிமித், அவர்களைத் துரோகிகளென்று எண்ணியதல்லாமல், ஹைகோர்ட்டுக்கே அவர்கள் நடத்தைப்பற்றி புகார் செய்திருக்கிறார்.

ரெப் சாயபு ஸ்ரீ ராம் ஸட், தனக்கு ஒரு வக்கீல் மேல் அருவருப்பு பின்வரும் காரணங்களால் உண்டாயிற்று என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். (a) "டிரிபியூன்" ("The Tribune") பத்திரிகை வரவழைக்கிறவர் (b) "மற்றொரு வக்கீலோடு தலைப்பாகை வைக்காமல் ஹார்ட்டல் நாளில் காணப்பட்டார்" பொதுக்கூட்ட அக்கிராசனாதிபதியாக, அவருக்கு அநேக மீட்டிங்கு வராத வக்கீல்களிடமிருந்து கடிதங்கள் வந்தன"; மற்றொருவர் (a) "மொஸ்

லம் ஹெரால்டு (The Moslem Herald) வரவழைக்கிருர் (b) மற்ருெரு வக்கீல் வீட்டில் காணப்பட்டார்"—"பொதுக் கூட்ட சங்க அக்கிராசனுதிபதிக்கு வராத அசௌகரியத்தைப்பற்றி வருத்தப்படுகிறதாக கடிதம் வரைந்திருந்தார்."

நாங்கள் ஸம்மரி கோர்ட்டு விசாரிப்புகளைப் பற்றியும் ஜனங்கள் பலவந்தப்பட்டதையும் விவரிக்கவில்லை. இந்த இரண்டு சமாசாரங்களுடைய ஆதாரம் முழுவதும், ஷெயிக்பூரா ஸ்டேட்மெண்டுகளில் நன்கு காணப்படுகிறது.

லையால்பூர் (Lyallpur).

லையால்பூர் ஜில்லாவிற்கு, லையால்பூர் பட்டணம் முக்கியமான இடம்—15,000 - ஜனத்தொகைக்குமேல் அடங்கிய ஒரு புது நகரம்—இவ்வூர், இந்த மாகாணத்திற்கே பெரிய கோதுமைக் களஞ்சியம்—ஏப்பிரல்மாதம் 6-ந்தேதி இங்கு ஹார்ட்டல் நடந்தது; அன்றை நடந்த மீட்டிங்கில், கோரிக்கைகள், பேச்சுக்கள் மிகவும் மிதமாயிருந்தது. இந்த மீட்டிங் ராஜாங்கத்தார் சம்மதத்தின் பேரில் நடந்தது. இச்சமயத்தில் மகாத்மா காந்தி, டாக்டர் சத்தியபால், கிச்சுலு முதலியவர்களுடைய அரெஸ்டு சமாசாரமும், லாகூர், அமிர்தஸரஸ் முதலிய இடங்களில் குண்டுகள் போடப்பட்ட விவரமும், ஜனங்களுக்குத்தெரிந்தது. இந்த சமாசாரங்கள் மற்ருெரு ஹார்ட்டல் நடைபெறச் செய்தன. முக்கிய ஜனப்பிரதிநிதிகள், இதைத் தடுக்க கருத்துடன் முயன்ற பொழுது, ஜனங்களின் கோபத்தை அடக்க முடியவில்லை. ஆனல் முக்கிய தலைவர்கள், ராஜாங்கத்தாரோடு சேர்ந்து, சமாதானம் கொண்டு வந்தார்கள். தங்கக்கோவிலை குண்டுபோட்டதாகக் கேள்வி சமாசாரம் வந்தவுடன், சீக்கர்கள் மனது கலக்கப்பட்டு,

ஹார்ட்டலே அதிகித்தார்கள். ஜனப்பிரதிநிதிகளின் கெட்டிக்காரத்தனத்தினுலும், ஊக்கத்தாலும், ஹார்ட்டல் 15வ கலேக்கப்பட்டது. அப்பொழுது பட்டணத்தில் ஒருவிதமான கலக்கமும் கிடையாது. லேயாய்பூருக்கு சமீபத்தில் சில தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன. இச்சமாசாரத்துக்கும் லேயால்பூரிலிருக்கும் ஜனங்களுக்கும் ஒருவிதமான சம்பந்தமும் இல்லே. ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்த உமி மூட்டைகள் கொளுத்தப்பட்டன. இது பாழ் செய்யும் ஜனங்களின் வேலேயென்று கவர்ன்மெண்டார் நினைத்தார்கள். சாதுவான ஜனங்கள் அரெஸ்டு செய்யப்பட்டு அநேக விதங்களால் தொந்தரவு படுத்தப்பட்டார்கள். இதை ஒரு மாஜிஸ்டிரேட் விசாரித்து உமி மூட்டைகளே நாசம் செய்தது ஜனங்களல்லவென்று சொன்னுர்.

நாங்கள் இந்த தீர்ப்புகளே எங்கள் ஆதாரவுகளோடு சேர்த்திருக்கிறோம். "உமி மூட்டைகள் நெருப்புப்பற்றி எரிந்தது 8-15-யிலிருந்து 8-45-வரையில். 8-40-க்குதான் நெருப்புப்பற்றின சமாசாரம் தெரியும். அன்று இரவு மிகவும் இருட்டாயிருந்தது. காற்று யந்திரசாலேகளிலிருந்து வீசிற்று. காற்றுதான் மிகவும் கொடுமையான காரியத்தைச் செய்தது" என்று மாஜிஸ்டிரேட் சொல்லுகிறுர்.

"யந்திரசாலேக்கு அருகாமையில் இருக்கும் உமி சரக்குகள் நெருப்பு பிடித்தன—முதலில் கூரையில் நெருப்பு பிடித்தது—கூரையிலிருந்து நெருப்பு மூட்டைகளுக்குத் தாவிற்று—மூட்டைகளேப் பார்த்துக்கொண்டிருக்கும் மனிதன் அச்சமயத்தில் அவ்விடத்தில் இல்லே—ஸ்டோர் பார்த்துக்கொள்ளுபவரோ அல்லது மற்ற ஆபீஸரோ நெருப்புப் பிடித்தவுடன் அவ்விடம் வந்தார். அந்தச் சமயத்தில் நான் குதிரைப் பட்டாளத்தோடு அவ்

விடம் போய்ச் சேர்ந்தேன். யந்திர சாலைகளிலிருந்து சில ஜனங்களும், முனிசிபல் மெம்பர்களில் சிலரும், ஸ்டோர் பாதுகாப்பவரும்தான் நான் வந்தபொழுது அங்கு இருந்தார்கள். அங்கு ஜனக் கூட்டம் இருந்ததாக சமாசாரம் என் காதுக்கு எட்டவில்லை. அந்த மூட்டைகளைப் பாதுகாக்கும் சேவகன் சோம்பேரித் தனத்தால் அங்கு இருக்கவில்லையே ஒழிய வேறு ஒரு கெட்ட அபிப்பிராயத்தோடு அல்ல. பாதுகாப்பவனாவது, அல்லது பெட்ரோல் சுத்துபவனாவது அக்கம் பக்கத்தில் சந்தேகப்படும்படியான சந்தர்ப்பங்களைப் பார்க்கவில்லை. பின் வந்த மண் காற்று மேல்கொண்டு விசாரணைசெய்ய முடியாமல் தடுத்தது.

"பெரிய போலீஸ் விசாரிப்பு நடந்தது; ஒருவிதமான வழியும், நெருப்பு பிடித்ததற்குப் புலப்படவில்லை. லையால்பூர் கலக்கங்களில்குற்றம் சாட்டப்பட்ட கைதிகளின் சிநேகிதர்கள், சிலர் குற்றம் சாட்டுவர்களாக இருந்தார்கள். ஆனால் அந்த நெருப்பு சமாசாரத்தில் அவர்களுக்கு ஒன்றும் ஆதாரமில்லை.

"ஒரு துரோகியின் வேலையாய்த்தான் இருக்கும் என்று ஒரு பெரிய சந்தேகம் பின் வரும் காரணங்களால் நினைக்கப்படுகிறது":—

(1) இதேமாதிரி காரியங்கள் சில கலக்கங்களில் நடைபெற்றிருக்கிறது.

(2) டோபாடேக்ஸிங்கு ஊரில் உமி மூட்டையை எரிப்பதற்கு ஒரு யோஜனை நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(3) இதற்கு முன்னாள் மூட்டைகளை வேறு இடத்திற்கு மாற்றிவைத்தார்கள்.

"போலீஸ் விசாரிப்பினுல் நெருப்பு வைத்தவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை.

லையால்பூர் ஜெயில் கைதிகள் தீ பற்றிய விஷயத்தைத் தவிர, வேறு சமாசாரங்கள் சொல்லுகிருர்கள்.

"இந்த நெருப்பிட்ட சமாசாரத்துக்கு எதாவது கிராமத்தார் காரணமாவென்று விசாரித்தபொழுது ஒரு துளி காரணமும் தெரியவில்லை.

"முன் சொல்லிய நாளில், 4-யந்திரங்கள் வேலை செய்துக்கொண்டிருந்தன—ஒன்று இந்த மூட்டைகள் சமீபத்தில் இருந்தது; எப்பிரல்மாதத்தில் புகை நெருப்பால், பலதடவைகளில் யந்திரசாலை தாவாரத்தில் போடப்பட்ட பஞ்சுப் பொதிகள் நெருப்புண்டன—ஆகையால் புகை நெருப்புத்துளியே, உமிமூட்டை நெருப்புக்கு காரணமென்று கூறலாம்.

என்னுல் இந்த நெருப்பு சட்டே விரோதக்கூட்டத்தினுலேயாவது அல்லது கலகத்தாலாவது உண்டானது என்று சொல்ல, சந்தேகம் இருந்தபோதிலும், அவர்கள் தான் என்று சொல்ல முடியவில்லை,

போலீஸ் சட்டம் 15 A (2) C படி நடக்க என்னுல் முடியவில்லை."

இன்னும் அவர் கூறியதாவது, "அன்று லையால் பூரில் கலகங்களும் நடக்கவில்லை" கட்டைகள் மூடப்பட்ட போதிலும், ஒருவித சட்ட விரோதமான கூட்டங்களும், கலக்கமும் அன்று கிடையாது. (ஸ்டேட் 517 A)

இப்படி கலக்கக் குறிகள் இல்லாததால், மிஸ்டர் பாஸ்வொர்த் ஸிமித் ஹண்டர் கமிட்டிக்கு முன்பில் ராணுவச்சட்டம் அவசியமில்லாதபோனுலும், இருந்ததால் சௌகரியமென்று சொன்னுர். அப்படி சொல்லியபொழு

தும், ஜனங்களைக் கஷ்டப்படுத்துவதும், சலாம்போடச் சொல்வதும், அரெஸ்டு செய்வதும், ஜனப்பிரதிநிதிகளின் பலத்தைக் குறைக்கச் சிரமப்பட்டதும் நிற்கவில்லை.

22-ந்தேதிக்கு முன்பு, அரெஸ்டுகள் செய்ய ஆரம்பிக்கவில்லை; லாலா சிண்டுராம் தபார் சொல்லுகிறார்.

"22-ந்தேதி ஜனங்கள் படுக்கைகளிலிருந்து எழுந்திருக்கிறதற்கு முன்னமேயே, பிரிட்டிஷ் போர்வீரர்களால் சூழப்பட்ட யந்திர பீரங்கிகள் பட்டணமுழுவதும் வைக்கப்பட்டன. 12-மனிதர்கள் அரெஸ்டு செய்யப்பட்டதில் நான் ஒருவன்.........................இரண்டு இரண்டு பேர்களாக விலங்கிடப்பட்டு, மேமாதம் 2-ந்தேதி ஜெயிலிலிருந்து கோர்ட்டுக்குக் கொண்டுபோகப்பட்டோம்...... ....நாங்கள் மறுதளித்தோம்........................ நாங்கள் ஜெயிலுக்கும், கோர்ட்டுக்கும் பல தடவைகள் இழுக்கப்பட்டதல்லாமல், கோர்ட்டில் விலங்கில்லாமலிருப்பதற்கு உத்திரவு பிறப்பிக்கவில்லை. என்னைக்குற்றம் சாட்டுகிறவனாகச் செய்ய அநேக பிரயத்தனங்கள் நடந்தன. ஒரு சிநேகிதர் மூலமாய், டிப்டி கமிஷனர் எழுதிய கடிதத்தின் நகல் எனக்குக் கொடுத்து அனுப்பப்பட்டது." இதற்கு லாலாசிண்டு இணங்கவில்லை. உடனே குற்றவாளிகள் எல்லோரும் கைதிகளாகச் செய்யப்பட்டு, லாகூருக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். " 11-மணி சுமாருக்கு, விலங்கு போடப்பட்டவர்களாகவே, ஜெயிலிலிருந்து ஸ்டேஷனுக்கு நடத்திக்கொண்டு போகப்பட்டோம். கால் விலங்கால் புண் உண்டாயிற்று." (ஸ்டேட் 521—பக்கம் 664.)

ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு அக்கிராசனாதிபதியாயும், பஞ்சாப் நேஷனல் பாங்கிக்கு, டைரக்டாராயும், D. M. A. S. பெரிய பள்ளிக்கூடத்திற்கு இளமை அக்

கிராசஞதிபதியும், 22-வருட காலம் வக்கீல் வேலை செய்தவராயும், இருக்கிற லாபோத்ராஜ், முன் அரெஸ்டு பண்ணப் பட்டவர்களில் ஒருவர். குஜ்ரான்வாலாஜில்லா கைதிகள் மாதிரி அல்லாமல், இவ்வூர் கைதிகள் எந்த காரணத்திற்காக அரெஸ்டு செய்யப்பட்டார்களென்று சொல்லப்பட்டார்கள். அவர்கள் இந்திய பினல் கோடு சட்டத்தின் 143-வது செக்ஷன்படி சட்ட விரோதக் கூட்டம் கூடியதால் அரெஸ்டு செய்யப்பட்டார்கள். அவர்கள் ஜாமீனுக்கு மனுகொடுத்த பொழுது, அவர்களின்பேரில் இன்னும் சில குற்றங்கள் இருப்பதாகச் சொல்லி, அவர்கள் மனு தள்ளப்பட்டது.

அவர்கள் விசாரிப்புக்கு வந்த குற்றவாளிகளாகியபடியால், சட்டப்படி தாங்கள் வீட்டு சாப்பாடு சாப்பிட உத்திரவு கொடுக்கும்படி கேட்டுக் கொண்ட பொழுது, ஜெயில்தார்கள் "பட்டினி கிடப்பது அவர்களுக்கு வழக்கமானதால், அவர்கள் ஜெயில் சாப்பாடுதான் சாப்பிட வேண்டுமென்று" சொன்னார்கள். விசாரிப்பு நடந்த பொழுது, காலை 10 மணியிலிருந்து மாலை 7 மணி வரை, அவர்கள் நிற்க வைக்கப் பட்டார்கள். அப்பொழுது அரெஸ்டு செய்யப்பட்டவர்கள், தங்கள் செலவில் சாப்பிடுவதாகச் சொன்னபொழுது, அவர்கள் முதல் நாள் உத்தரவு கொடுக்கப்பட்டு, மறு நாளிலிருந்து அவர்கள் அப்படி வாங்கிச் சாப்பிடுவதற்கு அருகர்களல்ல என்று சொல்லப் பட்டார்கள். அவர்கள் ரிகார்டுகளை பரீக்ஷை செய்து பார்க்க, உத்தரவு, கோர்ட்டார் கேஸை எடுக்கு முன்பாவது அல்லது பின்பாவது, கொடுக்கப் படவில்லை. (ஸ்டேட் 517.)

லாலா அமிர்சண்டு வீட்டுக் காரியமாக லேயால்பூருக்கு ஏப்பிரல் 13-உயில் வந்தார். அவர் கல்கத்தாவிலிருந்து

லாகூருக்கு வந்த எப்பிரல்மாதம் 5-ந்தேதி அரெஸ்டு செய்யப்பட்டார். கோர்ட்டா ரவர்களின் போதிப்பால், அவர் விசாரிப்பு அநேக நாட்கள் தள்ளி, அடிக்கடி போடப்பட்டது. ஜூன்மீ 14வ கடைசி நாளாக வைக்கப்பட்டது. வாரண்டு இல்லாமலேயே, இந்த நாள் தள்ளப்பட்டு ஜூன்மீ 5வ கேஸ் எடுத்துக்கொள்ளப்பட்டது.

தன் சாக்ஷிகளைக் கொண்டுவர உத்தரவு கொடுக்கப்படாமலே, தண்டிக்கப் பட்டதாக அமிர் சண்டு சொல்லுகிறார்: அவர் பேரில் 6வ புதிய குற்றங்கள் சாட்டப்பட்டு 3 மாத சிறைக்கு கட்டளை யிட்டார்கள். ஜூன்மீ 18வயில் சிறைவாசத்தை 2 வருஷ மாக்கினார்கள். மற்ற தண்டனைகளை ஆராய்ந்ததுபோல், லெப்டினெண்ட் கவர்னர் இவருடையதையும் ஆராய்ச்சி செய்து, ஸெப்டம்பர்மீ 18வ விடுதலை செய்தார். மறுபடியும் அரெஸ்டு செய்யப்பட்டு ஜாமீன் கேட்கப்பட்டார்; கேஸை தள்ளுபடி செய்ததற்குப் போலீஸாருக்குத்தான் காரணங்கள் தெரியும். தான் பங்காளத்திலிருந்து வந்ததால், அபாயமான மருந்துகள் கொண்டுவந்திருப்பேன் யென்ற சந்தேகத்தின் பேரில் அரெஸ்டு பண்ணப்பட்டதாகவும், இக்காரணத்தால்தான், போலீஸார்கள் துப்பாக்கிகளோடு, என்னை அரெஸ்டு செய்ய வந்தார்கள்" என்று சொல்லுகிறார்.

வக்கீல் ஸார்தார் ஸான்ட் ஸிங்கு எப்படி வக்கீல்களுடைய சாக்ஷிகள் தடுக்கப்பட்டார்க ளென்றும், தடை செய்யப்பட்டார்க ளென்றும், ராணுவச்சட்ட அதிகாரம் முடிவு பெற்ற போதிலும், அவர்கள் குற்றவாளிகளாகச் செய்யப்பட்டார்களென்றும், காண்பித் திருக்கிறார்.

ராணுவச் சட்டத்திற்கு பின்பு விசாரிப்பு நின்றவுடன், அவர்கள் அப்பீல் செய்ய இடம் இருந்தது. மே

கோர்ட்டாரால் கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பு தப்பு என்று சொல்லப்பட்டு, மறுபடியும் கேஸ்களை விசாரிக்க, கீழ்க் கோர்ட்டாரவர்களுக்கு உத்தரவு பிறந்தது. அப்பொழுது, அரெஸ்டு செய்யப் பட்டவர்கள் ஜூலை 23-உயில் விடுதலை செய்யப்பட்டார்கள்; மறுபடியும் அரெஸ்டு பண்ணப் பட்ட போதிலும், அவர்களை ஜாமீன் வாங்கிக்கொண்டு, வெளியே விட்டார்கள்.

நல்ல நம்பிக்கையில், இவ்வக்கீல்கள் தங்கள் தொழிலை கவனித்தார்கள். உடனே, மாஜிஸ்டிரேட்டால் இவர்கள் விசாரிக்கப்பட வேண்டியவர்களாகையால் வக்கீல் வேலைப் பார்க்க ஆரம்பித்தது தப்பு என்று குற்றம் சாட்டப்பட்டார்கள். இப்படி சொல்லியபடியால் இவர்கள் தங்கள் அலுவலைத் தொடங்கவில்லை. இதுடன் நிற்காமல் இதன் பிறகும் இவருக்கு வாரண்டுகள் பிறந்தன.

இவர்கள் மறுபடியும் அரெஸ்டு செய்யப் பட்டார்கள்; ஸார்தார் ஸாண்ட் சிங்கு பின்வருமாறு சொல்லுகிறார்:—

"அழுக்கடைந்த பாய்களின்பேரில், ஒரு பாழடைந்த அறையில் தூங்கும்படி எங்களுக்கு நேர்ந்தது. ஹானரபில் பண்டிட் மதன் மோஹன் மாளவியா, இம்பீரியல் கௌன்சலில், இப்பவும் பட்டக் கொடுமைகளைக் கண்டித்ததினால்தான், இந்த வக்கீல்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். (ஸ்டேட் 516.)

பாரிஸ்டர் ராம்தாஸ் சோக்ராதால் ஸத்தியாகிரகத்தைப் பற்றி ஒரு பத்திரிகையில் படித்த குற்றத்தால், வாய் பந்தனம் பண்ணப் பட்டார் என்று சொல்லுகிறார். இப்படி பந்தனம் "லயால்பூர் முனிசிபல் முடிவுகளுக்குள்" இருக்க உத்தரவு பிறந்தது. இந்த பந்தனமானது

ராணுவச் சட்டம் பிரயோகிப்பதை நிறுத்தும் வரை நடை பெற்றது. அவர் இன்னும் சொல்லுகிறார், "வாய் பந்த னத்தை விட மிகவும் கொடிய காரியம் யாதென்றால், கச்சேரி வெளஸாரில் இருக்கும் என்னுடைய ஆபீஸில் ராணுவச் சட்ட விளம்பரங்கள் ஒட்டினதுதான்.

என் வீட்டிலிருந்து ஆபீஸ் ½-மைலுக்கு அப்பால் இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில், விளம்பரங்களைக் காப் பாற்றுவது மிகவும் அசாத்தியமான காரியம். இதைக் குறித்து, மிகவும் வணக்கத்தோடு கமாண்டருக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்தேன்; அது அங்கீகரிக்கப்படவில்லை. நான் வணக்கத்துடன் கேட்டுக்கொண்டது என்னவென் றால், என் வீட்டிற்கும் ஆபிசுக்கும் ½-மைல் தூரம் இருக்கிற தென்றும், நான் இல்லாத சமயத்தில் விளம்பரங்களை ஒட்டு வது தனக்கு கஷ்டத்தை விளைவிக்கிறதென்றும், கிழிக்கப் படுமென்பதுதான். மறுவிண்ணப்பம் யாதென்றால், என் கையில் விளம்பரங்களைக் கொடுக்கும்படிக்கும் அப்படிக் கொடுத்தால், ஒரு பலகையில் ஒட்டிவைத்து, பகலில் ஜனங்களுக்குத் தெரியச்செய்து—இரவில் அந்த நோடீஸ் பலகையைப் பத்திரமாகப் பாதுகாப்பதாகவும் சொன் னேன். இந்த விண்ணப்பங்களைக் குறித்து 'கமாண்டர், சரி' என்று சொல்லி தான் டிப்டி கமிஷனரோடு யோசித்து உத்தரம் கொடுப்பதாகச் சொன்னான். மறுதினம் போலீஸ் ஸுப்பிரன்டென்டெண்ட் ஆபீசுக்குப்போய், ஏதாவது ராணுவச்சட்ட விளம்பரங்கள் உண்டா என்று, தினம் மாலை கேட்கும்படி உத்தரவிடப்பட்டேன். பின் செய்த விண்ணப்பத்திற்கு மறுமொழியே கிடையாது.

"இந்த உத்தரவுகள் பிறந்தவுடன் ஏன் என்னை அரஸ்டு செய்தார்களென்று டிப்டி கமிஷனரைக் கேட் டேன். அதற்கு அவர் என்னைப்பற்றி நல்ல அபிப்பிரா

யங்கள் கேள்விப்பட்டதனுல் அரெஸ்டு செய்ததாகச் சொன்னுர். என்மேலிருக்கும் குற்றம் என்னவென்று கேட்டதற்கு அவர் போலீஸ் பேப்பர்களைப் பார்த்துச் சொல்வதாகச் சொன்னுர்; இதை அறிய 2 - தடவைகள் அவரிடம் சென்றேன் ; இரண்டு தடவைகளிலும், தங்களுக்கு ஒழிவு இல்லையென்று கூறினுர். இப்பவும், எந்தக் காரணத்தால் என்னை அரெஸ்டு செய்தார்கள் என்று எனக்குக் காரணம் தெரியவில்லை. (ஸ்டேட்-526)

பொய்சாக்ஷி சொல்ல ஜனங்களை வேண்டிய வரையில் தொந்தரவு செய்தார்கள். ஆபீஸர்கள் சொற்படி யார் ஆடினுர்களோ, அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள் ; மற்றவர்களுக்கு சிறை நிச்சயம். " (ஸ்டேட்-530) ஸ்டேட்மெண்டுகள்518, 522, 525, 531, 535, 536, 537, 545, கவனிக்க.

குஜ்ராட் (Gujrat).

குஜ்ராத் சரித்திரத்தில் பேர்பெற்ற ஊர். இந்த இடத்தில் சீக்கர்கள் யுத்தம் நடந்தது. இவ்விடத்தில் 20,000 ஜனத்தொகையிருக்கிறது. வாஸிராபாத் லயனில், 9 மைல்களுக்கு அப்பாலுள்ள, ஒரு ரயில்வே ஸ்டேஷன்.

ஏப்ரல்மீ 6வ ஹார்டல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்ததை, ஸனுதன தர்ம சபைக்கு அக்கிராசனுதிபதியாகிய, லாலா ராம் சண்டு டான்டன் என்ற வியாபாரி தடுத்தார். 13-ந்தேதியில் குஜ்ராத் பையன்கள் சிலரும், பைஸாகி உற்சவத்திற்காக வாஸீராபாத்துக்குச் சென்ற ஒரு ஜனக்கூட்டமும், இரவு 11-மணிக்கு வந்த ரயிலில் வந்தார்கள். இவர்களெல்லாம் ஒரு கூட்டமாகச் சேர்ந்து, ரௌலட் சட்டத்தைத் தூஷித்துக்கொண்டே, பட்டணத்திற்குள் நுழைந்தார்கள். அவர்கள் காலையில் லாகூரில்

நடந்த அக்கிரமங்களைத் தெரிவித்துக் கடைகளை மூடச் செய்தார்கள். ஹார்ட்டல் நடந்தவுடன், ராஜாங்கத்தார் முனிசிபல் கமிஷனர்களுக்கு தங்கள், தங்கள் வார்டுகளை பந்தோபஸ்து பார்க்கும்படி கட்டளையிட்டார்கள். இந்தக் கட்டளை பிரகாரம், 14உ இரவில் கமிஷனர்கள் வார்டுகளைப் பாதுகாத்தார்கள். அப்பொழுது, அபாயம் ஒன்றும் சம்பவிக்கவில்லை. ஹார்ட்டலில் சேர்ந்த பையன்கள் 15-ம் தேதி அன்று, மிஷன் பாடசாலைக்குச் சென்று தலைமை உபாத்தியாயரிடம் பள்ளிக்கூடத்தை மூடும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அவர் இணங்கவில்லை; ஆனால் அவர் சில பையன்களைப் பிரம்பால் அடித்ததாகத் தெரியவருகிறது. அப்படி பையன்களை அடித்தவுடன், மற்ற மாணாக்கர்கள் சினங்கொண்டு கற்களை எறிந்து, ஜன்னல், கண்ணாடிகளை உடைத்தார்கள். இதேமாதிரி சில பாழ் செய்யும் காரியங்கள், பையன்களால் செய்யப்பட்டன. ஸ்டேஷனை இடித்து, சில ஆதாரவுகளை எரித்து, கண்ணாடிகளை உடைக்கும் தருணத்தில் போலீஸ்காரர்கள் குண்டுகள்போட்டு, கூட்டத்தைக் கலைத்தார்கள். அப்படி குண்டுகள் போட்டதால், ஒருவரும் மாளவில்லை.

முன் சொல்லியதைத் தவிர, வேறு ஒன்றும் நடக்கவில்லை. ஒரு கௌரவமுள்ள பிரபுவாவது, ஹார்ட்டல் நடந்ததில் பொருப்பு எடுத்துக் கொள்ளவில்லை. எப்ரல்மீ 19உ ராணுவச்சட்டம் விளம்பரம் பண்ணப்பட்டது, டிப்டி கமிஷனர் மிஸ்டர் வில்லியம்ஸனுக்கு, ராணுவச் சட்டத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. அச்சமயத்தில், அவ்வூருக்குராணுவசட்டம்தேவையில்லை. ஆகையால் அவர், பம்பாய் ராஜதானியிலிருக்கும் குஜராத்துக்குத்தான் அப்படிப்பட்ட சட்டம் பிறந்திருக்குமென்று எண்ணினர். அப்படி அவர் எண்ணியது தப்பிதம். ஏனென்

ளுல் இவர் ஆளும் குஜ்ராத், ராணுவச் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு, ஜூன் மாதம் முடிய அதற்கு உள்பட்டிருந்தது.

குஜராத்தில் இரண்டுகட்சிகள் இருந்தன. அவைகள் ஒன்றில் அவ்வூர் ஆபீஸர்கள் கூடியிருந்ததாகத் தெரியவருகிறது. மற்ருெரு கட்சியில் கௌரவமாஜிஸ்டிரேட்டாயும், முனிசிபல் கமிஷனராயும் இருந்த லௌத் சாரக்டின் முக்கியமானவராகயிருந்தார். ஆபீஸர்கள் கட்சி இஜ்ஜனக் கட்சியைக் கலைக்க நிச்சயம்செய்தார்கள். மிஸ்டர் பாரிஸ்டர் ஹர்கோபாலும், இன்னும் மற்றவர்களும் அரெஸ்டு பண்ணப்பட்டு, அநேக நாட்கள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டார்கள். இவர்கள் ராணுவச் சட்டக் கோர்ட்டின முன் விசாரிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டார்கள். இந்த ஐரோபபியச் சண்டைக்கு உதவிபுரிந்த, அநேக நல்ல காரியங்களுக்காக ராஜாங்க பத்திரங்கள் கொடுக்கப்பட்ட லாலா ராம்சண்டு அநேக விதங்களால் தொந்திரவு செய்யப்பட்டார். காரணமில்லாமல் கௌரவமான வக்கீல்களின் வீடுகள் சோதிக்கப்பட்டன.

மாஜிஸ்டிரேட், கமிஷனர் வேலைகளிலிருந்து, லௌத சிராகுடின் நீக்கப்பட்டார். டின் வைஸிராயிடமிருந்து ஸனதுகள் வாங்கியிருக்கிறுர். அவர் கெயிஸர் இ—ஹிண்டு (Kaiser-i-Hind) மெடல் வாங்கினவர். அவர் மட்டும் 200-மனிதர்களைச் சண்டைக்குக்கொடுத்து அனுப்பியிருக்கிறுர். பின்வரும் குஜராத் ஸ்டேட்டுமெண்டுகளின் முக்கிய பாகங்களை நன்கு உணர இப்புத்தகம் படிக்கும் கனவான்களைக் கேட்டுக்கொள்ளுகிறேம். மிஸ்டர் ஹர்கோபால் ஆபீஸர்களை அயோக்கியத் தனத்திற்காகச் சிறை செய்யவேண்டுமென்று மனு கொடுத்த பொழுது, அந்த மனு கவர்ன்மெண்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த குஜ்ராத் ஜனங்களும், மற்ற கிராமத்தார்களும் அநேக அக்கிரமங்களால் அவஸ்தைப்படவேண்டியிருந்தனர். ஆனால் அந்த இடத்தில் ஒரு விதமான தேச அபிவிருத்தி சங்கமும் கிடையாது. அதில் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியும் இல்லை. அப்படி இருந்தபோதிலும், ஒரு துருப்பு போலீஸ் கூட்டம் குஜ்ராத்துக்கு அனுப்பப்பட்டது. ரூபா 42,000 அபராதமாக விதிக்கப்பட்டது. அப்பணம் 6-தடவைகளாக வசூலிக்கும்படி உத்தரவு பிறந்தது. ஏற்கனவே, ஒரு தடவை பணம் வாங்கப்பட்டது. அப்பணத்தில் நான்கில் ஒருபங்கு லாலா ராம் சண்டு யிடமே வாங்கப்பட்டது. மற்றொரு பங்கு வக்கீல்களிடமிருந்து வாங்கப்பட்டது. அவ்வரி வாங்குவது மிகவும் அநியாயமென்று நினைக்கிறோம்.

ஜலால்பூர் ஜாட்டான் (Jalalpur Jattan).

ஜலால்பூர் ஜாட்டான் குஜ்ராத்ஜில்லாவில், குஜ்ராத் பட்டணத்திற்கு 8-மைலுக்கு அப்பாலுள்ள, முக்கிய நெசவு தொழிலை உடைய ஜனங்களின் ஊர்.

எப்ரல்மீ 6உ ஒரு ஹார்ட்டலும் இவ்விடத்தில் நடைபெறவில்லை. 15உயில், ஹார்ட்டல்போல ஒரு அமக்களம் இவ்விடம் நடந்தது. ஜனங்களால் ஒரு கெடுதலும் பண்ணப்படவில்லை. இவ்விடத்தில் ஒரு ஊர்கோலம் நடைபெற்றது. 15உ அல்லது 16உ இரவில் யாரோ ஒருவன் ஒரு தந்திக்கம்பியை அறுத்து விட்டான்.

இந்தப் பிசகிற்காக, ராணுவச்சட்டம் விளம்பரம் பண்ணப்பட்டது. கௌரவமான ஜனங்கள் அரெஸ்டு பண்ணப்பட்டார்கள். கோர்ட்டுக்கு முன்னால் கொண்டுவரப்படாமலே, ஒருவன் விடுதலை செய்யப்பட்டான். மற்றவர்கள் ராணுவச்சட்ட கமிஷனுக்கு முன்னால் கொண்டுவரப்

பட்டார்கள். இவர்களில் 10-மனிதர்கள் விடுதலைசெய்யப் பட்டார்கள். மற்ற 6-பேர்களும் அநேகவிதமாக சிறை யுண்டார்கள்.

ராணுவச்சட்ட காலத்தில், குழந்தைகளும் பள்ளிப் பிள்ளைகளும் 3-தடவைகள் டாணுவிற்கு செல்லும்படி கட்டளை பிறந்தது.

காரணமில்லாமலே, ரூபா 12,000 - இந்த ஊரில் அபராதம் போடப்பட்டது; ஆறில் ஒரு பங்கு முன்ன மேயே வசூல் செய்யப்பட்டது.

மலாக்வால் (Malakwal.)

மலாக்வால் ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷன். இவ்வூர் குஜராத்துக்கு 10-மைலுக்கு அப்பால் இருக்கிறது. லாலா மூசா வழியாக இவ்விடத்திற்குப் போகவேண்டும். இவ்வூர் 3000 - ஜனத்தொகை உடையது. எப்பிரல்மாதம் 17-ந்தேதி மலாக்வால் ஜங்கிஷனில் வேலை செய்கிற கூலி ஆட்கள், ஒரு தண்டவாளத்தைப் பிடுங்கி எடுத்தெறிந் தார்கள். நிஜமாக ஒரு ரெயில் தண்டவாளத்தை விட்டு நழுவியது; ஆனால் ஒரு கெடுதலும் சம்பவிக்கவில்லை.

எல்லா ஊர்களில் நடந்த மாதிரி ராணுவச்சட்டம் விளம்பரம் பண்ணப்பட்டது; அக்கிரமங்களும் நடைபெற் றன. நாங்கள் விசாரணை செய்ததின்பேரில், 40-அரெஸ்டு கள் நடந்ததாகக் கண்டு கொண்டோம். அவைகளில் பையன்கள் தவிர, ஏறக்குறைய 20 ரயில்வே குமஸ்தாக் களும் இருந்தார்கள். இவர்களில் 8-மனிதர்கள் குற்ற மற்றவர்களென்றும், 15-மனிதர்களுக்குமேல் விசாரிக்கப் படாமல் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் அவர் கள் அதிககாலம் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டார்கள். கௌரவமுள்ள மனிதர்கள் ஆபீஸர்களுக்கு பங்கா இழுக்

கும்படி கட்டளையிடப்பட்டார்கள். இதைத் தவிர, அவர்கள் சாக்கடைகளைக் கழுவுவதற்கும், இன்னும் மற்ற சுகாதார காரியங்கள் செய்யவும் ஏவப்பட்டார்கள். யூனியன் ஜாக்கை சலாம் செய்ய, மூன்று தடவைகள் பள்ளிப் பிள்ளைகளுக்கு கடும் உத்திரவு பிறந்தது.

பிழையற்றவர்களென்று நியாயாதிபதிகள் கூறிய பொழுதும், ரயில்வே குமஸ்தாக்கள் எல்லோரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். இப்படி நீக்கப்பட்டவர்களில் 30-வருடங்களுக்குமேல் உழைத்தவர்களும் இருந்தார்கள்.

அமிர்தசரஸ், லாகூர், குஜரான்வாலா, லையால்பூர், குஜரத் ஆகிய இந்த ஐந்து ஜில்லாக்களிலும் இராணுவச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட காலத்தில் நடந்த வர்த்தமானங்களைப் பற்றிக் கூடுமான வரையில் சுருக்கமாய் நாங்கள் கூறிவிட்டோம். பஞ்சாப்பில் நடந்த துக்ககரமான சம்பவங்களுக்கு எங்களாலானவரையில், நியாயம் வழங்கவேண்டுமென்று நாங்கள் அவா கொண்டபோதிலும் முடியாமற்போயிற்று. நாங்கள் இப்போது பொது ஜனங்கள்முன் சமர்ப்பிக்கும் ருஜூக்களில் விளங்கும், தண்டனைகளையும், லஞ்சம் வாங்கும் தன்மையையும், ஜன அவமானத்தையும் இதைவிடச் சுருக்கமாய்க்கூற எங்களால் முடியவில்லை. நாங்கள் எங்களாலான வரையில் நியாயத்தை இருபுறங்களிலும் எடுத்துரைத்திருக்கின்றோம். உத்தியோகஸ்தர்கள் திடமென்று வசப்படுத்தப்பட்ட சம்பவங்களைப்பற்றியும் எங்களாலானவரையில் விட்டுக்கொடுத்தே கூறியிருக்கின்றோம். அப்படியிருந்தும் கலகம் நடந்ததாய்க் கூறப்படும் ஒவ்வோரிடங்களிலும் அதிகாரிகள் மிதமிஞ்சிய அதிகாரத்தைச் செலுத்திவிட்டதாகவே நாங்கள் முடிவில் அபிப்பிராயப்படுகிறோம்.

கலகம் எவ்வகையானது? எப்படி யுண்டாயிற்று? இந்தக் கலகங்கள் தனிப் பிரதேசங்களிலிருந்த கட்டடங்களை எரித்தல், குற்றமற்ற ஐரோப்பியர்களைக் கொலைசெய்தல், தந்திக் கம்பிகளை அறுத்தல், ஒன்று, இரண்டு சிறிய பாலங்களை எரித்தல், ஒன்று அல்லது இரண்டு இடங்களில் ரயில் தண்டவாளங்களைப் பிடுங்கல் முதலியவைகளைச் செய்திருக்கின்றன. ஆயுதந்தரித்த ஜனங்கள் நேராகவோ அல்லது இதர மூலியமாகவோ கலகத்தில் சம்பந்தப்படாதிருத்தல் என்பதும், பெரும்பான்மையான விவசாய ஜனங்கள் பலாத்காரப் போராட்டத்தில் சம்பந்தப்படாதிருத்தல் என்பதும், பஞ்சாபின் மொத்த ஜனத்தொகையாகிய இரண்டு கோடியில் $4\frac{1}{2}$-லக்ஷம் ஜனங்களே கலகத்தில் சம்பந்தப்பட்டதாய் உத்தியோக ரீதியில் வெளிப்பட்டிருக்கும் வண்ணமான ஜனத்தொகையும், உலகத்தில் எங்கும் நடைபெற்றதாயில்லையென்பதும் ஒத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. எங்கள் கைகளிலுள்ள ருஜுக்கள் மூலமாய்க்கலகம் மொத்தம் $2\frac{1}{4}$-லக்ஷம் ஜனத்தொகை யடங்கிய அமிர்தசரஸ், காசூர், குஜரான்வாலா, வாஜிராபாத், நைஜாமாபாத், ஹாபிஸபாத், மோமான், தாபான்ஸிங், சுஹர்காணு, கெம்கார்ன், பாட்டி, மாலக்வால் ஆகியவிடங்களில் பலாத்காரப் போராட்டங்களோடு நடைபெற்றதாய்த் தெரிகின்றது. இந்த மொத்த $2\frac{1}{4}$-லக்ஷம் ஜனத்தொகையில், எங்கள் முன்னுள்ள ருஜுக்களாலும், ஹண்டர் கமிட்டி விசாரணையாலும், இதர விசாரணைகளின் வரலாற்றாலும், ஒரு சிறு பகுதி ஜனங்களே நேராய்க் கலகங்களில் சம்பந்தப்பட்டதாகத் தெரிகிறது. ஐரோப்பியர்கள் இறந்ததோ நான்கு.—இதனால் நாங்கள் கலகக் கூட்டத்தினர் செய்த அக்கிரமத்தை அக்கிரமாகக் கூறாமற் போகவில்லை.

அமைதியாய் இருந்த ஜனங்கள் பொதுஜன சொத்தைக் கொளுத்தவும், கொலைகள் செய்யவும், துணிவானேன்? ஸர்-மைகேல் ஓடையார் அவர்கள் பொறுமையில் மிக்கக் கியாதிபெற்ற ஜனங்களது மனதைப் புண்படுத்தியதுதானாகும். பத்திரிகைகளை அடக்கின முறையிலும், படித்த வகுப்பாரைத் தள்ளித் தன் சொந்த வழிகளில் சண்டைக்கு ஆட்களையும், பணத்தையும் சேகரித்த வகையிலும் ஜனங்களது விரோத உணர்ச்சிக்குப் பாத்தியமானார். மிஸ்டர் காந்தி, டாக்டர் கிச்சுலு, டாக்டர் சத்தியபால் முதலியவர்களை அநியாயமாய்த் தேசப் பிரஷ்டம் செய்ததால், இந்த ஜனங்களின் மனக்கொதிப்பு இன்னும் அதிகமாயிற்று. ரௌலட் சட்டத்துக்கு விரோதமாய் ஏப்ரல்மாதம் 6-ந்தேதி நடந்த வைபவங்களைத் தடுக்கத் தன்னாலாகாது போகவே, நியாயமும் ஒழுங்குமான வழிகளைக் கண்டு பிடிக்கத் தெரியாமல் ஜனங்களது உணர்ச்சியை யடக்க ஒரு சிறந்த முயற்சியைக் கைக்கொள்ள எண்ணினார். ஜனங்களது இந்த நியாய உணர்ச்சியை, அநியாயமானதென்று நினைத்து அதை வேரோடு களைய வெண்ணினார். மேல் சொல்லிய தேசப் பிரஷ்டம் செய்தலையும் பைத்தியக்காரத் தனமாய்ச் செய்துவிட்டார். அவர் தனது கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு, துப்பாக்கிகளைத் தம் இஷ்டப்படி உபயோகப்படுத்தாமலிருக்க முன் உத்திரவு செய்திருந்தாலும் நன்றாயிருந்திருக்கும். ஆனால் அதே காலத்தில் அவரால் சாந்தமாயும் மிதமாயும் கூட இருக்கமுடியவில்லை. அமிர்தசரஸ் ஜனங்களைப் புத்திசாலித்தனமில்லாமல் சுட்டது ஜனங்களது மனதை வெகுவாய் முறித்துவிட்டது. இதனால் கூட்டத்தார் மிக்கப் பைத்தியக்காரத்தன கோபத்தைக் கைக்கொண்டனர். அவ்விதம் அவர்கள் கொண்ட கோபத்தையும் மூன்றுமணி நேரத்

தில், கொலை செய்தல், கொளுத்தல், அழித்தல் முதலிய செய்கைகளால் தீர்த்துக்கொண்டனர். எங்களால் கூறப்பட்ட இதரவிடங்களும் இவ்வுணர்ச்சியைப் பெற்று அமிர்தசரஸ் ஜனங்கள் செய்ததுபோலவே செய்துவிட்டனர். காஸூரில் நடந்ததைத் தவிர மற்றவிடங்களில் உயிர்க் கொலைப் பின்னும் நடவாததைப் பற்றி நாங்கள் மிக்க நன்றியுள்ளவர்களாக விருக்கிறோம்.

இது கலகத்தின் நிலைமையா? அல்லது சண்டையின் நிலைமையா? இதை ஸிவில் அதிகாரிகளே, வேண்டுமானால் இராணுவத்தார்கள் உதவியை இடையே பெற்று, அடக்கி விட முடியாததா? நிர்ப்பந்தச் சட்டங்களால் அவசியமாய் அடக்கவேண்டிய நிலைமையா இது? இதைப்பற்றி அவசியமான விடங்களில் தனித்தனியாய் இக்கேள்விகளுக்கு விடைகொடுத் திருக்கின்றோம். ஹண்டர் கமிட்டியார் முன் வெளிப்படுத்தப்பட்ட ருஜுக்களாலும் எங்கள் கைகளிலுள்ள ருஜுக்களாலும் முடிவில் தெரிகின்றது யாதெனில் இராணுவச்சட்டத்தை விதிக்கவேண்டிய ஆவசியகமே யில்லை என்பதாகும். ஹண்டர் கமிட்டியார் முன் இரகசியமாய் ருஜுவுக்கு விடப்பட்டிருக்கும் சாக்ஷியங்களால் இராணுவச் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டதாகவே காரணம் கூறப்பட்டிருக்கும்.

ஹண்டர் கமிட்டியார்முன் கலகம் அல்லது சண்டை என்ற மொழியே நிலைக்காமற்போயிற்று. பஞ்சாபுக்கு உள்ளேயாவது வெளியே யாவது சதியாலோசனை தோன்றி யிருக்கவேண்டுமென்ற எண்ணத்துக்கும் ஆதாரங்களில்லை. ஸர்மைகேலது நம்பிக்கை மிகுந்த லெப்டினண்டுகளுள் ஒருவராகும் கர்னல் ஓப்ரீன் அவர்களே, கலகமென்றதற்கே ஆதாரமில்லையென்றும், குஜரான் வாலா

தலைவர்களைக்கூட கைதுசெய்தது வதந்திப்பேச்சின் தீர்மானத்தாலேற்பட்ட யோசனையாலேயாகுமென்றும் ஒத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. பலாத்காரமான போராட்டத்தோடு தலைவர்கள் நேரிடச் சம்பந்தப்பட்டதாய் ஆதாரமேயில்லையென்றும், அவ்விதமான போராட்டம் ஏதாவது குஜரான்வாலாவில் ஏற்பட்டால் அதற்கு அவர்களை ஜவாப்தாரி என்று சொல்லவும் நினைத்தேன் என்றும் ஒத்துக்கொண்டிருக்கிறார். இதாரசாக்ஷிகள் இதைவிட நல்நிலைமையை படையவில்லை. அவர்கள் செய்கைகளையும் சம்பவங்களையும் தீர்மானிக்கச் சக்தியற்றவர்களாய்த் தங்களைத் தாங்களே காட்டிக்கொடுத்துவிட்டனர்.

சதியாலோசனையைப் பாவச் செய்வதற்கு, ரௌலட் சட்டத்துக்கான கிளர்ச்சி, சாதகமானதாய் ஸர் மைகேல் அபிப்பிராயங் கொண்டனர். அவ்விருப்பமானது அவ்வெண்ணத்துக் காதாரமாயிற்று. தலைவர்கள் பேசும் ஒவ்வொரு பேச்சிலெல்லாம் இராஜத்துரோகம் அடங்கியுள்ளதாயும், ஒவ்வொரு ஹார்தாலிலும் சதியாலோசனையிருப்பதாயும், ஹிந்துமகம்மதிய ஒற்றுமையிலெல்லாம் பிரிட்டிஷ் அரசாக்ஷிக்கு அழிவுள்ள விஷயமுள்ளதாயும் அவர் எண்ணினதுமன்றி பிறர் எண்ணவும் செய்தார். சதியாலோசனைக் கொள்கையென்பது அற்றுப்போனது அச்சரியமில்லை.

இராணுவச்சட்டம் நியாயமற்றதானால் அதை ஏறக்குறைய இரண்டுமாதம்நீடித்து நடத்தியதும் குற்றமாகும். இதில் அநுசரிக்கப்பட்ட முறைகள் நாகரிக இராஜாங்கமென்று கருதப்படும் எதற்கும் அகௌரவத்தை யுண்டு பண்ணத் தகுந்ததாகும். ஜாலன்வாலாபாக்கில் குற்றமற்ற ஜனங்கள் கொல்லப்பட்டதால் அதன் அவபவம் பகிரங்கப் படுத்தப்பட்டது. ஸர் மைகேல் தடையாது அநுமதியின்

மேல் ஜெனரல்டையர் போட்ட பயங்கரமான கூக்குரல் இரண்டு துரதிர்ஷ்ட மாதங்களாய் நடைபெற்றது. எங்களுடைய கணக்குச் சரியானதாய்க்கொண்டால் ஏறக்குறைய 1200-ஜனங்கள் கொல்லப்பட்டன ரென்றும், 3600-ஜனங்கள் காயப்படுத்தப்பட்டனரென்றும், சிலர் சக்தியற்றவர்களாய்த் துன்புறுத்தப்பட்டன ரென்றும் கூறுவோம். ஜனங்கள் செய்த குற்றத்துக்குமேல் அவர்கள் மீது க்ஷாத்திரம் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஜனங்கள்செய்த குற்றத்துக்கும் அவர்கள் மனம் புண்படுத்தப்பட்டதே காரணமாகும். இராணுவச்சட்டம் அமுல்படுத்தப்பட்டகாலத்தில் ஜனங்களுக்குச் செய்யப்பட்ட சித்ரவதையை நாங்கள் போதுமானவளவு கூறிவிட்டோம். எங்களால் வெளிப்படுத்தப்பட்ட பிரகடனங்கள் திரும்பவும் அக்கிரமங்கள் நடைபெறுதிருப்பதற்கு அநுகூலமாயிருக்குமெனமட்டில் எண்ணுகிறோம்.

அத்தியாயம் 6.

முடிவு.

இராணுவச்சட்டம் விதிக்கப்பட்ட ஐந்துஜில்லாக்களைப்பற்றியும் பேசியாய்விட்டது. ஸர்மைகேல் ஓடையரது அரசாட்சியைப்பற்றியும் கூறிவிட்டோம். ரௌலட் சட்டத்தையும், சத்யாக்ரகக் கிளர்ச்சியையும்பற்றிப் பரிசீலனை செய்யவும் முயற்சி யெடுத்துக்கொண்டோம்.

நாங்கள் எங்களுக்குக் கிடைத்த உண்மைச் சம்பவங்களைக் கொண்டே இவ்விஷயங்களைக் கூறியுள்ளோம். லார்டுஹண்டர் கமிட்டிமுன்பும் இராணுவச்சட்ட நியாய சபைமுன்பும் கொண்டுவரப்பட்ட ருஜுக்களுக்கு அநுகூலமாய், பிரத்தியேகமாய் அச்சிட்டுக்கொண்டுவரப்பட்ட இதரவிஷயங்களைக் கொண்டு கூறியதல்ல.

சில இடங்களில் நாங்கள் கடுமையாய்ப் பாஷாப் பிரயோகம் செய்திருக்கிறோம். ஆனால் நாங்கள் உபயோகித்துள்ள பெயருரிச் சொற்கள்யாவும் வெகு ஜாக்கிரதையாகவே உபயோகிக்கப் பட்டவையாகும். அப்படியேதாவதிருந்தால், பஞ்சாப் கவர்ன்மெண்டாருக்கு விரோதமான வழக்கைச் சிறுமைப்படுத்திக் கூறியதாகும். நாங்கள் கவர்ன்மெண்டாரிடமிருந்து தூர்லபமான திருத்தத்தைப் பெற்றுக்கொள்ள ஸ்வதந்தர முள்ளவர்களல்லவென்பதையும் உணர்கிறோம். உலகத்தில் எவ்வளவோ நல்லெண்ணத்தைப் பெற்றிருந்தாலும், ஆபத்துக்காலத்திலும், மனக்கொதிப்புள்ள காலத்திலும் எந்த உத்யோகஸ்தரும் குற்றஞ் செய்யக்கூடும். இராஜாங்கத்தில் முக்கியமான சீர்திருத்தங்கள் செய்யப்படப்போகிற சமயத்திலும், உத்தியோகஸ்தர்களும் ஜனங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று சக்கிரவர்த்தி ஆக்ஞையிட் டிருக்கும் போதும் அவ்வித முன்னேற்றத்துக்குப் பங்கமேற்படுத்தக்கூடிய எதையும் சொல்லக்கூடாதென்பதையும் நாங்கள் உணர்கிறோம்.

வருங்காலம் எவ்வித சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும், குடிகள் கொடியகுற்றஞ்செய்தால், உத்யோகஸ்தர்கள் அவர்களை அலக்ஷியஞ் செய்யாததுபோல் உத்யோகஸ்தர்கள் கொடிய குற்றஞ்செய்தாலும் அவர்களையும் அலக்ஷியமாய்விட முடியாது, என்று நாங்கள் எண்ணுகிறோம். இதற்குமுன் நடந்ததைக்காட்டிலும், இப்போது ஜனங்கள் செய்துள்ளகுற்றங்களையும், உத்யோகஸ்தர்கள் செய்துள்ள குற்றங்களையும் வெளியாக்குவது மிக்க அவசியமென்பது எங்களபிப்பிராயம். ஜனங்களும், உத்தியோகஸ்தர்களும் எவ்வித மனத்தாங்கலும் கொள்ளாது சமரசமாய்ப் போனலொழிய, சீர்திருத்த அம்சங்

களால் இந்தியாவைச் சீக்கிரத்தில் அதன் முழுநோக்கத்தையு மடையும்படி செய்தலென்பது சிரமசாத்தியமான காரியமாகும். ஆகவே நாங்கள் கூறுவது யாதெனில் குற்றஞ் செய்துள்ள உத்யோகஸ்தர்களையும் நியாயவழிக்குக் கொண்டுவரவேண்டு மென்பதேயாகும். இவ்விதம் நாங்கள் சொல்லியது க்ஷாத்திரத்தைக் கொண்டல்ல. ஆனால் தேசத்தில் குற்றமும், அநியாயமும் நடைபெறு திருக்கும்படியான அரசாக்ஷியை நிலை நாட்டுவதற்கேயாகும். அமிர்தசரஸிலும் இதரவிடங்களிலும் கூட்டத்தார்கள் செய்துள்ள அதிக்கிரமச் செயலுக்குத் தண்டனை கொடுக்கவேண்டியது அவசியமென நாங்கள் அபிப்பிராயப் படுவதோடுகூட ஜனங்களை உத்யோகஸ்தர்களது செய்கைகளால் அதிகமாய்த் தண்டித்துவிட்டதாகவும் நாங்கள் அபிப்பிராயங் கொள்கிறோம்.

டில்லிக்கும், பஞ்சாபுக்கும் சென்றுகொண்டிருந்த மிஸ்டர் காந்தி கைதுசெய்யப்படாதும், டாக்டர் கிச்சுலுவும். டாக்டர் ஸத்தியபாலுவும் தேசப்பிரஷ்டம் செய்யப்படாதும்போனால், குற்றமற்ற இங்கிலீஷ்காரர்களது உயிர் காப்பாற்றப்பட்டும், கிறிஸ்தவ மாதா கோயில்கள் உள்பட சகல சொத்துக்களும் காப்பாற்றப்பட்டும் போயிருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். பஞ்சாப் கவர்ன்மெண்டாரது இரண்டு செய்கைகளும் அநாவசியமான செய்கைகளாகும். இவைகள், ஏற்கனவே மனக்கொதிப்பை யடைந்திருந்த ஜனங்களுக்கு 'எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்த்ததுபோலாயிற்று.' பஞ்சாபின் பல ஜில்லாக்களில் நடந்த விஷயங்களை விரிவாய்ப் பரிசீலனை செய்தகாலத்தில் இந்தியா கவர்ன்மெண்டாரைப்பற்றி எவ்விஷயமும் கூறுதிருந்தோம். உத்யோகமுறையில் மத்திய கவர்ன்மெண்டார் எவ்விதப்பங்கும் கிரியாம்சங்களில் எடுத்துக்

கொள்ளாது போனபோதிலும் இவ்விதகாரியங்களில் அலக்ஷியமா யிருந்திருக்கமுடியாது. மாக்ஷிமைதங்கிய வைஸிராய் அவர்கள் ஜனங்கள் வழக்கைப் பரிசீலனைசெய்ய எவ்வித சிரமமும் எடுத்துக் கொள்ளவில்லை. பொதுக்கூட்டததாராலும் தனிமனிதர்களாலும் அனுப்பப்பட்ட கடிதங்களையும் தந்திகளையும் அவர் அலக்ஷியஞ் செய்துவிட்டார். விசாரணைசெய்யாமல் பஞ்சாப் கவர்ன்மெண்டார் செயல்களை அங்கீகரித்துவிட்டார். அவர் மிக்க அவசரத்துடன் உத்தியோகஸ்தர்களைத் தொடாராமொழிச் சட்டத்தால் கவசம்பூட்டி ரக்ஷித்தும் விட்டார். காரியம் நடந்த பிறகுங்கூட அவர் பஞ்சாபுக்குப்போய் நேரிட அக்காரியத்தை விசாரிக்கவில்லை. உத்தியோகத்தரில் யாவரும் ஒத்துக்கொண்டபின்னராவது அதாவது குறைந்தது மே மாதத்திலாவது அவர் இவ்விஷயத்தை அறிந்திருக்க வேண்டும். அப்படிக்கிருந்தும் ஜாலியன்வாலாபாக் படுகொலையைப்பற்றியாவது, அதன்பிறகு நடந்த, இராணுவச் சட்டத்தை யனுசரித்தச் செயல்களைப் பற்றியாவது, பொதுஜனங்களுக்காவது, இம்பீரியல் கவர்ன்மெண்டுக்காவது தெரியப்படுத்தவில்லை. கௌரவமும், கியாதியும் வாய்ந்த சத்தியசந்தரான, மிஸ்டர் ஸி. எப். ஆண்ட்ரூஸ் என்னும் ஆங்கில கிறிஸ்தவர் உண்மையை அறிவதற்காகவே பஞ்சாபுக்குள் சென்றபோது அவரைத் தடுக்கும் ரீதியில் தானும் பங்குகொண்டார். பெருமை தங்கிய பண்டிதர் மதன்மோகன மாளவியா அவர்கள் இம்பீரியல் சட்டச்சபையில் இது விஷயமான உண்மையை வெளிவிட்ட காலத்து இவரைத் தடுத்தும், குற்றஞ்சாட்டியும் கோணல் வழக்குத் தொடுத்த பஞ்சாப் கவர்ன்மெண்ட் சீவ்செக்ரிடரி மிஸ்டர் தாம்ஸனைப்பேச அனுமதி கொடுத்தார். பெருமைதங்கிய மாளவியா சொன்ன விஷயங்

களோ உத்தியோகஸ்தர்களது வாக்குமூலங்களாலேயே விசேஷமாய் ருஜுப்படுத்தப்பட்டன. இன்னும் வைஸிராய் கொடிய குற்றங்களின் அம்சங்களை நன்றாயுணராதும் ஜனங்களது உணர்ச்சியை அறிந்துகொள்ளாமலும் அலக்ஷியமா யிருந்துவிட்டார். ஏனென்றால், இந்தியாமந்திரியினது உத்தரவால் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டதால்தான் இராணுவச்சட்ட பியாயாதிபதிகளால் விதிக்கப்பட்ட மாணதண்டனையை நிறுத்தும்படி உத்தரவு செய்தார். இல்லாதுபோனால் முன்னதாகவே நடத்தி யிருப்பார். பெருமைதங்கிய பண்டிதர் மதனமோகன மாளவியா போன்ற பொருப்புவாய்ந்த மெம்பர், சபையில் இதைப் பற்றிய கேள்விகளைக் கேட்டகாலத்து விடைபகர அசம்மத முள்ளவர்போல் நடந்துகொண்டார். உள் விவகாரங்களைக் கவனிக்க பஞ்சாபைப் பார்வையிடவுமில்லை. செளலட்சட்டக் கிளர்ச்சி சம்பந்தமான அவரது உணர்ச்சியைப்பற்றி நாம் ஒன்றும்கூறாது விடுகின்றோம். ஏப்ரல் மாத நிலைமையை விசாரிக்கவும் மெச்சவும் சக்தியற்ற வைசிராயின் தன்மையை, பொதுஜன சாவதானத்தை யொட்டி அலக்ஷியஞ்செய்யத் தூண்டுகிறது. மாக்ஷிமை தங்கிய நமது சக்ரவர்த்தியால் அவரிடம் ஒப்படைக்கப் பட்ட ஜனங்களது க்ஷேமத்தை வேண்டுமென்று அவர் அலக்ஷியஞ் செய்ததாக நாங்கள் நினைக்கவில்லை. இப்போது அவர் வகித்துவரும் பொருப்புவாய்ந்த பெரிய உத்யோகத்தை வகிக்க அவருக்குச் சக்தியில்லையென்று சொல்லவே வருத்த முறுகின்றோம். ஆகவே ஹிஸ் எக்ஸலன்ஸி லார்டு செம்ஸ்போர்டு அவர்களை இங்கிலாந்துக்குத் திருப்பி யழைத்துக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

நாங்கள் எங்களுடைய இதர தீர்மானங்களைக் கீழே சுருக்கிக் கூறுகின்றோம் :—

(1) படித்த வகுப்பாரிடம் அவநம்பிக்கையும் அரு வெறுப்பும் கொண்டதனுலும்; சண்டைக்குப் பணமும் ஆளும் சேகரிப்பதற்கு பலாத்கார கொடியவழிகளை அநு சரித்ததாலும்; உள்ளூர் வர்த்தமானப் பத்திரிகைகளைத் தணிக்கைசெய்து பொதுஜன அபிப்பிராயத்தை யடக்கிய தாலும்; வெளியிடத்து தேசிய சம்பந்தமான பத்திரிகை களை யுள்ளே வரவொட்டாமல் தடுத்ததாலும் ஸர் மைகே லுடைய அரசாட்சியால் பஞ்சாப் ஜனங்கள் மனக்கொதிப் படைந்தனர்.

(2) ரௌலட் சட்டக் கிளர்ச்சியானது, பொதுஜன அபிப்பிராயங்களை வேறுபடுத்தியும் கவர்ன்மெண்டார் காட்டிய பிரீதியில் நம்பிக்கையற்றுப் போகும்படியும் செய்துவிட்டது. இவ்வித பலன் இதரமாகாணங்களைக் காட்டிலும் பஞ்சாபில் அதிகமானதற்குக் காரணம் யா தெனில், ஸர்மைகேல் ஒ'ட்வயர் அவர்கள் பொதுஜன ஊக்கத்தைக் குறைக்க இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தை யுபயோகப் படுத்தியதேயாகும்.

(3) இதற்கு முன்பாக வெளிப்படுத்தப்பட்ட சத்தி யாக்ரகமும் ஹார்தாலும் தேசமுழுதுமுள்ள ஜனங்களை ஊக்கத்துட னிருக்கும்படி கிளர்ச்சி செய்ததுமன்றி ஜனங் கள் பலாத்காரப் பிரயோகங்களில் தலையிட்டுப் பயங்கர மான கொடிய செய்கைகளைச் செய்யாம லிருப்பதற்கும் உபயோகமாயின.

(4) ரௌலட் சட்டக் கிளர்ச்சியானது பிரிட்டிஷ் விரோத உணர்ச்சியில் அபிப்பிராயங் கொள்ளப்பட வில்லை. சத்யாக்ரகக் கொண்டாட்டமும் எவ்வித விரோத

யுணர்ச்சியும் போராட்டமு மின்றி அபிப்பிராயப்பட்டு நடத்தப்பட்டதாகும்.

(5) பஞ்சாப் கவர்ன்மெண்டாரைக் கவிழ்க்க எவ்வித சதியாலோசனையும் செய்யப்படவில்லை.

(6) மிஸ்டர் காந்தி கைதுசெய்யப்பட்டு வெளியிடங்களுக்குப் போகமுடியாதபடி செய்யப்பட்டதும், டாக்டர் கிச்சுலு டாக்டர் சத்தியபால் இவர்களைக் கைதுசெய்து தேசப்பிரஷ்டம் செய்ததும், நியாயமற்ற காரியமானவையா யிருந்தனவுமின்றி ஜனங்களது விசேஷ மனக்கொதிப்புக்கும் காரணமாயின.

(7) அமிர்தசரஸில் ரெயில்வே பாலத்தண்டை ஜனங்களைச் சுட்டதால் தான், ஏற்கனவே மனக்கொதிப்படைந்த ஜனங்கள், இறந்தவர்களையும், காயப்பட்டவர்களையும் கண்டு கலகம்செய்ய எதுவாயிற்று.

(8) கலகத்துக்கு எதுகாரணமா யிருந்தபோதிலும் ஜனங்கள்செய்த காரியங்கள் மிகவும் அருவெறுக்கத் தகுந்ததும் விசனிக்கத் தகுந்ததுமான காரியங்களேயாகும்.

(9) பகிரங்கமாய் விஷயங்கள் வெளிவந்த வரையில் இராணுவச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டிய நியாயங்க ளுள்ளதாய்த் தெரியவில்லை.

(10) இராணுவச்சட்டம் விதிக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கிலும் அமைதியேற் படுத்தப்பட்ட பின்னரே நடைபெற்றதாகும்.

(11) அப்படியே இராணுவச் சட்டம் ஏற்படுத்த வேண்டியது அவசியமா யிருந்ததெனக் கொண்டாலும், அதிககாலம் நீடித்திருக்கும்படி செய்தது அநாவசியம்.

(12) எல்லா ஐந்து ஜில்லாக்களிலும் இராணுவச் சட்டத்தை அமுல் நடத்திய காலத்தில் கைக்கொள்ளப் பட்டப் பெரும்பான்மையான விதிகள் அநாவசியமான வையாயும், கொடுமையானவையாயும், அடக்குமுறைகளா யும், ஜனங்கள் உணர்ச்சியை மதித்துச் செய்யப்படாத காரியங்களாயும் விளங்குகின்றன.

(13) கலகம் என்று பெயர் சொல்லியழைக்கத் தகுந்த ஜனங்களது போராட்டங்கள், லாகூர் அகால்கிர கம், ராமநகரம், குஜாத், ஜாலால்பூர், ஜாட்டான், லியால் பூர், ஷீகுப்பூர், முதலிய விடங்களில் நடைபெறவேயில்லை.

(14) ஜால்லீன் வாலாபாக் படுகொலையானது, ஆயுத மில்லாத குற்றமற்ற குழந்தைகளுங்கூடிய ஜனங்களை மனுஷத்தன்மையில்லாது நடத்திய செய்கையாய் விளங்கு வதுமன்றி, நவீன பிரிட்டிஷ் அரசாக்ஷியின் சரித்திரத்தில் இணையற்ற கொடுமையையும் தெரிவிக்கிறது.

(15) இராணுவச்சட்ட நியாய சபைகளும், ஸம்மரி கோர்ட்ஸ் என்னும் நியாய சபைகளும் குற்றமற்ற ஜனங் களைத் தொந்தரவுசெய்ய ஏற்பட்ட வழிகளாயிருந்தனவு மன்றி நியாய விரோதமான செயல்களும் பரவுவதற்குக் காரணமாய் விளங்கின. நியாயம் தீர்த்தல் என்ற முறை யில் நூற்றுக்கணக்கான அநேக மனிதர்களுக்கும் ஸ்திரீ களுக்கும் பொருள் நஷ்டமும் ஒழுக்கக்குறைவு மேற் பட்டன.

(16) நாகரீக முதிர்ந்த இராஜாங்கங்களுக்கு, வயிற் றால் நகர்ந்து செல்லல் முதலிய விநோத தண்டனைகள் தகுந்தவையல்ல. இவை, இவைகளைக் கண்டுபிடித்த நபர் களது ஒழுக்கக்குறைவின் அறிகுறிகளாய் விளங்கு கின்றன.

(17) ஏறக்குறைய இரண்டுமாத காலங்களாய், அநேகமாய்க் குற்றமற்ற ஜனங்கள் ஜாமீன் கொடுக்கும்படி விதிக்கப்பட்டதும் தண்டப் போலீஸார்களால் வேலைவாங்கப்பட்டதும், தண்டப்பணமும், சட்ட விரோதமான வரிகளும் கொடுக்கும்படி செய்யப்பட்டதும் அநாவசியமும், அநியாயமுமானவையுமன்றி மிக்க அதிக உபத்திரவத்தையுண்டுபண்ணினவையுமாகும்.

(18) இராணுவச்சட்டம் அமுல் நடத்தப்பட்ட காலத்தில் நடைபெற்ற குற்றமும் 'லஞ்சம் வாங்குதலும் பிரத்தியேகத் தொந்தரவை கொடுக்கக் கூடியவையாக விருந்தன; இவைகள் காருண்ய அரசாட்சித் தன்மையினால் சுலபமாய்ப் போக்கடிக்கக் கூடியவையுமாகும்.

(19) ஜனங்களுக்கேற்பட்ட குற்றங்களுக்குப் பரிகாரந்தேடவும், அரசாக்ஷியைச் சுத்தப்படுத்தவும், பின்னும் நியாயமற்ற விவகாரங்கள் நடைபெறுதிருக்கும்படிச் செய்யவும் வேண்டிய முக்கிய விதிகள் யாவையெனில் :—

(a) ரௌலட் சட்டத்தை ரத்துசெய்தல்.

(b) அரசாங்கத்தில் எவ்விதப் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தையும் ஸர் மைகேல் ஓடையருக்குக் கொடாது விலக்குதல்.

(c) இராஜாங்கத்தில் எவ்விதப் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தினின்றும் ஜெனரல் டயர், கர்னல் ஜான்ஸன், கர்னல் ஒப்ரீன், மிஸ்டர் பாஸ்வர்த் ஸ்மித், ராய் ஸாஹிப் ராம்ஸத், மாலிக் ஸாஹிப்கான் ஆகிய இவர்களை விலக்கல்.

(d) எங்களால் வெளிப்படுத்தப்பட்ட வாக்குமூலங்களில் கண்டுள்ள சிறு உத்தியோகஸ்தர்களது குற்றங்

களைப்பற்றி விசாரணைசெய்து அவைகள் உண்மையெனக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களை உத்தியோகங்களை விட்டு விலக்கல்.

(e) ஹிஸ் எக்ஸலென்ஸி வைஸிராய் அவர்களைத் திரும்பி அழைத்துக் கொள்ளல்.

(f) பிரத்தியேக நியாய சபையார்களாலும், ஸம்மரிக் கோர்ட்டார்களாலும் ஜனங்களிடமிருந்து தண்டவரி வசூலிக்கப்பட்டதைத் திருப்பிக் கொடுத்தும்; கலவரமடைந்த பட்டணங்களிலிருந்து வாங்கப்பட்ட ஜாமீனை மன்னுப்புச் செய்தும்; ஏற்கனவே வசூலிக்கப்பட்டதானல் அவைகளைத் திருப்பிக்கொடுத்தும்; தண்டப் போலீஸைப் போக்கியும் உதவிபுரிதல்.

ஸர்மைகேல் ஒடையர், ஜெனரல் டையர், கர்னல் ஜான்ஸன், கர்னல் ஒப்ரீன், மிஸ்டர் பாஸ்வர்த் ஸ்மித், ராய் ஸஹேப் ஸ்ரீராம் ஸத், மாலிக் ஸாஹேப் கான் ஆகிய இவர்கள் சட்ட விரோதமாய் நடந்ததற்குக் கூற்றஞ் சாட்டப்படவேண்டும். ஆனுல் நாங்கள் இவ்வித வழிகளைக்கூற இஷ்டமுள்ளவர்களாயில்லை. ஏனென்றுல், அப்பொழுதுதான் நியாயவழிகளை கைக்கொண்டு இந்தியா இலாபமடைய ஏதுவாகும். இதில் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களை விலக்கினுல்தான் வருங்கால சுத்தமான இராஜாங்கம் உறுதிப்படும்.

கர்னல் மாக்ரீ, காப்டன் டவெடன் ஆகிய இவர்களும், கர்னல் ஒப்ரீன் முதலியவர்களைப் போல் தங்கள் பொறுப்பை வகிக்கத்தவறிய போதிலும் அவர்களை வேண்டுமென்றே கூறுது விட்டோம். ஏனென்றுல் அவர்கள் உத்தியோக அனுபவ மற்றவர்களோடுகூட அநுபவம்

வாய்ந்த உத்தியோகஸ்தர்கள் செய்த அக்கிரமங்களைப் போல், அவ்வளவு ஏற்பாடான அக்கிரமங்களையும் செய்யாமலுமிருந் திருக்கிறார்கள்.

எம். கே. காந்தி,
ஸி. ஆர். தாஸ்,
அபாஸ். எஸ். டயாப்ஜீ,
எம். ஆர். ஜயகர்.

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS